HOMOEOPATHIC MATERIA MEDICA

(TAMIL)

PART I

BY

Dr. V. R. MURTY

To

" EATTI-MANIKKAM "

MY GUIDE AND INSPIRER

—The Author

முகவுரை

ஜெர்மனி தேசத்தில் பிரபல டாக்டராக இருந்த டாக்டர் சாமுவேல் ஹானிமென் (1755—1843) என்னும் பெரியாரால் ஹோமியோபதி வைத்தியமுறை கண்டுபிடிக்கப்பட்டது. அப்பெரியாரின் ஜீவிய காலத்தில், மற்ற எல்லா அறிவாளிகளையும்போல் அவரும் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். எள்ளளவும் சகிக்க முடியாத அக்கஷ்டங்களை அனுபவித்தும் ஊக்கம் குன்றாது, உலகத்திலேயே மிகவும் சாஸ்திரீயமென்று இன்று போற்றப் படும் வைத்தியமுறைக்கு இவர் அஸ்திவாரம் போட்டார். அவருக்குப்பின் அவர் சிஷ்யர்களில் பிரபலமான சிலர் அமெரிக்காவிற்குச் சென்று குடியேறி இவ்வைத்திய முறையை அமெரிக்கா முழுவதும் பரவச் செய்தனர். இன்று அமெரிக்காவில் ஹோமியோபதி வைத்திய முறைதான் மிகவும் அதிகமாகவும் சிறப்பாகவும் கையாளப்பட்டு வருகிறது. பொதுவாக மேல் நாடுகளிலும், கீழ் நாடுகளிலும் ஹோமியோபதி வைத்தியமுறை நாளுக்குநாள் அதிகமாகவே கையாளப்பட்டு வருகிறது.

நம் இந்தியாவில் முதன் முதலில் சுமார் 60 வருடங்களுக்கு முன் ஹோமியோபதி வைத்திய முறை ஒரு கிருஸ்துவப் பாதிரியாரால் கையாளப்பட்டது. அதன் பின்னர் வங்காளத்திலுள்ள சில பிரபல ஆங்கில வைத்தியர்கள் இம்முறையின் சிலாக்கியத்தை உணர்ந்து இதைக் கையாள ஆரம்பித்ததின் பேரில் இன்று வங்காளத்தில் ஹோமியோபதியின் உயர்வை அறியாதார் யாருமே இல்லை.

இந்திய மாகாணங்களுக்குள் வங்காளமே ஹோமியோபதியை கையாளுவதில் முதன்மை ஸ்தானம் வகித்து வருகின்றது. இவ்வளவு அதிகமாக இவ்வைத்தியமுறையில் வங்காளம் முன்னேறியிருப்பதற்குக் காரணம், இவ்வைத்திய முறையின் தத்துவங்களும் நுணுக்கங்களும் வங்காளி, ஹிந்தி, உருது முதலிய சுதேச பாஷைகளிலேயே மொழி பெயர்க்கப்பட்டிருப்பது தானென்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல் தமிழ் நாட்டில் ஹோமியோபதியைப் பரப்ப வேண்டின் எல்லா ஹோமியோபதி நூல்களும் தமிழில் வெளிவரவேண்டும் என்பது சந்தேகமற்ற விஷயம். ஆயினும் இதுவரையில் யாரும் இம்முயற்சியில் ஈடுபடாமலிருந்ததற்குக் காரணம், இம்மாதிரியான ஒரு முயற்சிக்குப் பூரண பொதுஜன ஆதரவு இருக்குமா என்னும் கேள்வியே. சென்ற சில ஆண்டுகளாக இந்நூலின் பதிப்பாளர்கள் ஹோமியோபதி வைத்தியமுறையைத் தமிழில் தபால் பாடங்களாகப் பல மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். ஒரு பெரிய வைத்திய சாஸ்திரத்தை ஒரு வருஷத்திலோ அல்லது ஒரு சில வருஷங்களிலோ முழுவதும் படித்துக் கற்றுக்கொண்டு விடுவது என்பது இயலாத காரியம். தவிர ஹோமியோபதி வைத்திய சாஸ்திரம் ஒரு சமுத்திரம்போல் என்றும் வற்றாதது, அந்தப் படிப்பிற்கு முடிவும் கிடையாது.

தமிழில் ஹோமியோபதியின் தத்துவங்களை ஒருவாறு படித்தவர்களுக்கு மேற்கொண்டு அறிவு வளர்ச்சிக்கு யாதொரு நூல்களும் இல்லாமலிருப்பது ஒரு பெரிய குறையாகும். தவிர ஹோமியோபதி வைத்திய முறையை சாஸ்திரீயமாய்க் கையாள நல்ல மெட்டீரியா மெடிகா ஞானம்தான் அதிக அவசியம். ஆகவே இக்குறையை ஒருவாறு தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் இப்புத்தகம்

வெளிவருகின்றது. தமிழ் மக்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கக் கிடைக்க ஹோமியோபதித் தொண்டில் மேலும் மேலும் ஈடுபட்டு இன்னும் பல நூல்களையும் வெளியிடும் நோக்கம் எங்களுக்கு உண்டு.

இம் மெட்டீரியா மெடிகாவைத் தொகுப்பதில் பல ஆங்கில நூல்களில் உள்ள சிறந்த விஷயங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன. தவிர கூடுமான வரையில் விஷயங்களை நன்றாய் விளக்கியும், பேசும் தமிழ் நடையில், அதாவது குறிகளும் குணங்களும் சாதாரணமாகத் தமிழ்நாட்டில் வழங்கும் முறையில், எழுதப்பட்டிருக்கின்றன. இப் புத்தகத்தைப் படித்தவுடன் ஒருவர் ஹோமியோபதி டாக்டர் ஆகிவிடலாம் என்ற நோக்கத்துடனோ அல்லது இப்புத்தகத்தின் உதவியால் குடும்ப சிகிச்சைகள் செய்து கொள்ளலாம் என்ற நோக்கத்துடனோ இது எழுதப்பட வில்லை. ஹோமியோபதி டாக்டர்களின் உபயோகத்தை உத்தேசித்தே இது எழுதப்பட்டிருக்கின்றது என்பதை இங்கு குறிப்பிடல் அவசியம்.

இப் புத்தகத்திற்கு விஷயம் சேர்ப்பதிலும், மற்றும் அச்சாகி வினியோகிக்கும் வரையில் நமக்கு வலக்கையாக இருந்து உதவிய டாக்டர் V. S. சுப்பிரமணியன் அவர் களுக்கு அதிகம் கடமைப்பட்டுள்ளோம்.

சென்னை,
1—11—41

ஆசிரியர்.

இரண்டாம் பதிப்பிற்கு முகவுரை

ஒரு ஆசிரியருக்குத் தன்னுடைய புத்தகத்தின் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதிலுள்ள மகிழ்ச்சி, அதை அனுபவித்தவர்களுக்கே தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். தன் மகன் ஒரு உயர்ந்த பதவியை அடைந்தால் அம்மகனுடைய தந்தை அடையக்கூடிய மகிழ்ச்சியைத் தான் இதற்கு ஒருவாறு ஒப்பிடலாம்.

தமிழில் ஒரு பெரிய "ஹோமியோபதி" நூலைத் தொகுத்து வெளியிட்டு அதனுடைய முதற் பதிப்பு அவ்வாசிரியரின் காலத்திலேயே செலவு செய்யப்பட்டு இரண்டாவது பதிப்புத் தேவைப்படுவது உண்மையிலேயே மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் ஆகும். இப்புத்தகம் முதன் முதலில் வெளியிடப் பட்டபோது எனக்கு இம்முயற்சியில் தமிழ் மக்களின் போதுமான ஆதரவு கிடைக்குமா என்பது ஒரு ஐயப்பாடாகவே இருந்தது. ஆகவே இப்புத்தகத்தை வாங்கி ஆதரித்து ஊக்கம் அளித்த அன்பர்கள் அனைவருக்கும் நான்பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்புத்தகம் முதன் முதலில் வெளியான காலத்தில் நம் நாட்டில் தமிழுக்கு அதிகச் செல்வாக்கு இருக்கவில்லை. ஆனல் இன்றோ நிலைமை வேறாக இருக்கிறது. தவிர அரசாங்கத்தின் அன்பிற்கும் தமிழ் பாத்திரமடைந்திருக்கிறது. இந்த நிலைமை இது போன்ற இன்னும் அனேக ஹோமியோபதி நூல்கள் வெளிவருவதற்குப் பெரிதும் உதவிசெய்யும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இப்பதிப்பில் முதல் பதிப்பைவிட அதிகமான மாறுபாடுகள் யாதொன்றும் செய்யப்படவில்லை யெனினும் ஆங்காங்கு இருந்த சில சொற்பிழைகளும் எழுத்துப் பிழைகளில் சிலவும் திருத்தப்பெற்றிருக்கின்றன. எனினும் இன்னும் அனேக இம்மாதிரியான பிழைகள் இருக்கக்கூடும். தவிர முதற் பதிப்பில் எதிர்பாராமல் விடப்பட்டிருந்த ஒரு ஔஷதம் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. (காலீ ஐயோடேட்டம்.)

இப்புத்தகத்தைக் கண்ணுற்ற பெரியார் யாரும் இதில் உள்ள விஷயங்களில் எதும் பிழை இருப்பதாக எனக்கு இதுவரையில் தெரிவிக்கவில்லை. ஆகவே ஒரு ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவாக இது அதிக விஷயப் பிழைகளின்றியே அமைந்து விட்டது என நினைக்கிறேன்.

இந்த மெட்டீரியா மெடிகா இரண்டு பாகங்களைக் கொண்டதாகையால் இதைத் தொகுப்பதில் எனக்கு உதவியாயிருந்த ஆங்கில மூலக்கிரந்தங்களின் பெயர்களை இரண்டாவது பாகத்தின் இறுதியில் கொடுத்திருந்தேன். முதல் பாகத்தை மாத்திரம் பார்வையிட்ட ஒரு வடநாட்டார் தன் தகப்பனால் எழுதப்பட்டிருக்கிற ஒரு ஆங்கில ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவைப்போல் இது இருப்பதாகவும், அதனால் அவருடைய காப்பிரைட் என்னும் பதிப்புரிமை பாதிக்கப்பட்டு விட்டதாகவும் தனக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்றும் 1944-ம் வருடம் எனக்கு அறிவித்தார். விஷயத்தை விளக்கியும், எந்தெந்த மூலக்கிரந்தங்களின் உதவியால் இதற்கு விஷயம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும் அவருக்கு அப்பொழுது எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமாயிற்று.

உண்மையாகவே இப்புத்தகத்திலுள்ள எந்த விஷயமும் என்னுடைய சொந்தக் கற்பனை அல்லவென்பதை விஷயமறிந்தவர் ஒப்புக்கொள்ளுவர். ஒரு ஹோமியோபதி வைத்திய மெட்டீரியா மெடிகாவை யாரும் கற்பனை செய்துவிட முடியாது. இதுவரையில் வெளியான பல புத்தகங்களிலிருந்து விஷயங்களை எடுத்தே இது தொகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சந்தேகமற இருக்கவேண்டும் என்பதற்காக இப்பாகத்தின் இறுதியிலும் எந்தெந்த மூலக்கிரந்தங்களிலிருந்து இதற்கு விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனவென்று தெரிவித்திருக்கிறேன்.

ஆங்கிலத்தில் ஹோமியோபதி மெட்டீரியா மெடிக்காக்கள் பல வகைகளாக எழுதப்பெற்றிருக்கின்றன. சொற்பொழிவுகளாக உள்ளவைகளும் (Lectures) ஹானிமென் அவர்களின் ஸ்கீமா (Schema) என்னும் வகைப்படி அமைந்தவைகளும் இவற்றுள் முக்கியமானவை. இது டாக்டர் ஹானிமென் மெட்டீரியா மெடிகாப்யூராவில் ஏற்பட்ட முறைப்படி குறிகளை அவயவ அவயவமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்ட ஒரு மெட்டீரியா மெடிகாவாக அமைந்தது. கூடுமானவரையில் ஒவ்வொரு அவயவத்தின் கீழும் எல்லா முக்கியமான குறிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஔஷதத்தின் இறுதியிலும், உறவு, முறிவு, அனுசரிப்பவை என்னும் தலைப்புகளில் சில ஔஷதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உறவு: என்பதில் கொடுக்கப்பட்டிருக்கும் ஔஷதங்களுக்கும் முதல் ஔஷதத்திற்கும் சில விஷயங்களில் குறிகள் ஒற்றுமை உடையவையாக இருப்பதைக் குறிக்கும்.

முறிவு: இத்தலைப்பில் காணப்படும் ஔஷதங்கள் முதல் ஔஷதத்தின் வேலையை அத்துடன் தடை செய்யும் என்பதைக் குறிக்கும்.

அனுசரிப்பவை: என்பவை முதல் சொல்லிய ஔஷதம் செய்த வேலையைத் தொடர்ந்து அனுசரித்து வியாதியைப் பூரண சௌக்கியம் செய்வதில் உதவிசெய்யும் என்றுகொள்ளவேண்டும்.

ஒரே ஔஷதம் முறிவின் கீழும், அனுசரிப்பவை என்பதிலும் காணப்படலாம். இங்கு அனுசரிக்கும் ஔஷதம் முன்சொன்ன ஔஷதத்தின் வேலையை முறித்து நிறுத்தி விட்டுபாக்கி செய்யவேண்டிய வேலைகளைத் தானே பூர்த்தி செய்யும் என்று கொள்ளவேண்டும்.

இப்புத்தகத்தில் இன்னும் அனேக பிழைகள் இருத்தல் கூடும். விஷயமறிந்தவர்கள் எடுத்துக்காட்டினல் இனி வரும் பதிப்புகளில் திருத்திக்கொள்ள கடமைப்பட்டவனுவேன்.

இம்முயர்ச்சியில் எனக்கு சகாயம் செய்த அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

கும்பகோணம்,
15—7—48

ஆசிரியர்.

ஹோமியோபதி

ஹோமியோபதி வைத்திய முறையில் அனுபவமில்லாத ஒருவர் ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவை முதன் முதலாகப் படிக்க ஆரம்பித்தால் அவருக்கு யாதொன்றுமே விளங்காது. தவிர ஒரு ஔஷதத்தின் குறிகளைப் படித்தவுடன், அவ்வொரு ஔஷதத்தைக் கொண்டே, மக்களிடையே தோன்றும் எல்லா வியாதிகளையும் நிவர்த்தி செய்து விடலாம் என்று தோன்றுவது அன்னாருக்கு இயல்பு. ஏனெனில் ஒவ்வொரு ஹோமியோபதி ஔஷதத்திற்கும் சரீரத்தின் எல்லா அவயவங்களிலும், ஒவ்வொரு தசைகளிலும், ஒவ்வொரு செல்களிலும் வேலையுண்டு. ஆகவே ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவிற்கும், மற்ற வைத்திய முறைகளிலுள்ள மெட்டீரியா மெடிகாவிற்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு.

இம் மெட்டீரியா மெடிகாவை உபயோகப்படுத்து முன் ஹோமியோபதி வைத்திய முறையின் தத்துவங்களில் சிறிதளவாவது தெரிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம். அதாவது ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவில் ஒவ்வொரு ஔஷதத்தின் கீழும் கொடுக்கப் பட்டிருக்கும் குறிகள் எப்படிக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன வென்று தெரிந்துகொள்ள வேண்டும்.

ஹோமியோபதி வைத்தியமுறை. "Similia Similibus Curantur" (Similar is cured by similar) "உஷ்ணம் உஷ்ணத்தை வெல்லும்" "வைரத்தால் தான் வைரத்தை அறுக்க முடியும்" என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

விளக்குமிடத்து "எந்த ஔஷதம், அடிக்கடியும் அதிகமாகவும் வியாதியற்ற ஒரு மனிதனால் உட்கொள்ளப் பட்டால், ஒருவகையான வியாதிக் குறிகளை உண்டாக்குமோ, அதே ஔஷதம், மிகவும் குறைந்த அளவில் உட்கொள்ளப்பட்டால், அது உண்டாக்கிய குறிகளை யொத்த குறிகளுள்ள ஒரு நிஜமான வியாதியை நிவர்த்திக்கும்" என்பதேயாகும். ஆகவே ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவில் ஒரு ஔஷதத்தின் கீழ் காணப்படும் குறிகள் அவ்வௌஷதத்தை அதிகமாக, அடிக்கடி, வியாதியற்ற பல மனிதர்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு ஏற்பட்ட குறிகளை ஒன்று திரட்டியதேயாகும். ஹோமியோபதி தத்துவத்தின்படி இம்மாதிரியான குறிகள் வியாதியில் தோன்றுமாயின் அவ்வௌஷதம் கொடுக்கப்படவேண்டும் என்பதற்கு இதையே நாம் உபயோகிக்கிறோம்.

குறிகளின் முக்கியம்

ஒரு வியாதியஸ்தரின் மொத்தக் குறிகளுக்கு ஒத்து உள்ள குறிகளையுள்ள ஔஷதமே அவ்வியாதியஸ்தருக்குக் கொடுக்கவேண்டிய ஔஷதம் என்பது தெளிவு. வியாதியஸ்தரின் மொத்தக்குறிகள் என்பதிலிருந்து பொதுவாக எண்ணிக்கையில் மாத்திரம் அதிகக் குறிகள் என்று கொள்ளக்கூடாது. உதாரணமாக 20 குறிகளுள்ள ஒரு வியாதியில் சிற்சில சமயங்களில் முக்கியமான மூன்று அல்லது ஐந்து குறிகளே வியாதியின் மொத்தக் குறிகளாக இருக்க முடியும். ஆகவே அவைகளிலிருந்தே, அவ்வியாதியஸ்தருக்கு உள்ள ஔஷதத்தை நிர்ணயித்து விடலாம்.

இப்படிப் பார்க்குமிடத்து, ஒரு வியாதியில் ஏற்பட்டிருக்கும் பல குறிகளின் தாரதரங்களை ஆராய்தல் அவசியமாகின்றது. மனக்குறிகளே முதல் ஸ்தானத்தை

வகிக்கின்றன. அதன் பின்னர் வியாதியஸ்தரின் பொதுக் குறிகளும், இவைகளின் பிறகே அவயவங்களின் குறிகளும், உணர்ச்சியும் வருகின்றன. கீழ்க் கண்டபடி ஒருவாறு குறிகளின் முக்கியத்தை கவனிக்கலாம்:—

1. மிகவும் அபூர்வமாக உள்ள குறிகள்

2. வியாதியஸ்தரின் பொது (சரீரம் பூராவும் உள்ள) குறிகள்.

3. மனக்குறிகள்.

4. வியாதி எவைகளினல் உண்டாக்கப்படுகிறது.

5. எப்பொழுது எவைகளினல் வியாதியஸ்தரின் உபாதிகள் அதிகம் அல்லது சமனம்.

6. உணர்ச்சிகள்.

7. வியாதி தங்கும் இடம்.

ஒரு குறிப்பிட்ட வியாதியில் எதை சொஸ்தம்செய்ய வேண்டும் என்பது ஹோமியோபதி வைத்திய சாஸ்திரத்தில் ஒரு முக்கியமான விஷயம் ஆகும். இந்தக் கேள்வி, ஒரு வியாதியஸ்தரின் குறிகளை நன்ருகத் தெரிந்து கொண்ட பிறகு எழுகிறது. சரீரத் தசைகளில் ஏற்படும் மாறுதல்கள், வியாதியின் விளைவுகளே தவிர, அவைகளே வியாதிகள் அல்ல. ஆகவே வியாதிகளின் விளைவுகளுக்கு ஹோமியோபதி வைத்திய முறையில் வைத்தியம் செய்ய முயலுவது இல்லை. வியாதியின் மூல காரணத்திற்கே வைத்தியம் செய்யும் பொழுது, வியாதியின் விளைவுகளும் படிப்படியாக சௌக்கியமாவது நிச்சயம் அல்லவா? தவிர வியாதியின் விளைவுகளுக்கு வைத்தியம் செய்வது இயலாத காரியம்.

ஆகவே ஒரு வியாதியின் குறிகளை ஆராய்ந்து ஒரு ஔஷதத்தை நிர்ணயம் செய்யும்பொழுது, அவ்வியாதியின் விளைவுகளினால் ஏற்பட்ட குறிகள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. உதாரணமாக க்ஷயரோகத்தில் சுவாசகோசங்களில் ஏற்பட்டிருக்கும் குழிகளும், கை கால்களில் ஏற்படும் வீக்கமும், கோளங்கள் பெருத்தலும் வியாதியின் விளைவுகளாகக் கருதப்படும். இவைகள் வியாதி எவ்வளவு தூரம் முற்றியிருக்கிறது என்பதற்கு அறிகுறிகளே ஒழிய அவ் வியாதிக்கு ஏற்பட்ட ஔஷதத்தைத் தேர்ந்தெடுப்பதில் அதிக உதவி செய்யமாட்டா. வியாதியின் ஆரம்பம் முதல் படிப்படியாகத் தோன்றிய குறிகளே அவ்வியாதிக்கு ஏற்பட்ட ஔஷதத்தைத் தேர்ந்தெடுப்பதில் உதவி செய்யுமே ஒழிய, தற்காலத்தில் அதிக உபத்திரவமாக இருக்கும் பல குறிகள் ஔஷதத்தைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் உபயோகமற்றவையாகும்.

ஒரு வியாதியஸ்தருக்கு ஏற்பட்ட ஔஷதத்தைக் கண்டுபிடிப்பதில் நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியவை.

(1) அவ்வியாதியஸ்தருக்கு பொதுவாக ஏற்பட்டிருக்கும் குறிகளைத் தேடவேண்டும். அவ்வியாதியின் குறிகள் (அதாவது சரீரத்தசை மாறுதல்கள்) உபயோகமில்லை.

(2) மனக்குறிகள், முதலாவது " இஷ்டம் ", அதன் பிறகு " அறிவு " இவை இரண்டும் முக்கியமானவை. " இஷ்டம் " என்பதில் விருப்பு, வெறுப்பு, பயம், சந்தோஷம், துக்கம் முதலியவைகளும், " அறிவு " என்பதில் பலவித தோற்றங்களும், பிதற்றல்கள், முதலியவைகளும் வரும். மூன்றாவதாக நாம் கவனிக்கவேண்டியது

"ஞாபகம்" இவை மூன்றும் தான் மிகவும் முக்கியமானவை.

(3) சாதாரண அல்லது பொதுக் குறிகள் என்பவை இருவகைப்படும். முதலாவது ஒரு வியாதிக்குப் பொதுவாக உள்ள குறிகள். இரண்டாவது பல ஔஷதங்களுக்குப் பொதுவாக உள்ள குறிகள். உதாரணம். வயிற்றுப்போக்கு, சுரம், தாகம் முதலிய குறிகள் ஔஷதத்தைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் உபயோகமற்றவையாகும். ஏனெனில் பல ஔஷதங்களுக்கு இக் குறிகள் இருக்கின்றன. ஆகையால் அபூர்வமாகவும், அதிசயமாகவும், வழக்கத்திற்கு விரோதமாகவும் உள்ள குறிகளே நமக்குப் பிரயோசனமுள்ளவை. உதாரணமாக சுரத்தில் நாக்கு உலர்ந்துபோவதும், தாகவறட்சை இருப்பதும் இயற்கையே. ஆனால் சுரத்தில் நாக்கில் அதிக ஈரப்பசை யிருந்தாலும், தாகவறட்சை இல்லாமலிருந்தாலும் ஔஷதம் கண்டுபிடிக்கும் விஷயத்தில் நமக்கு உபயோகமாக இருக்கும்.

(4) நமக்கு உபயோகப்படக் கூடிய பொதுக்குறிகள் என்பவை: மனக்குறிகளும், வியாதியஸ்தருக்குப் பிடிப்பவையும், வெறுப்புத் தரக்கூடியவைகளும், வியாதியஸ்தரின் அவஸ்தை எதனுல் அதிகமாகின்றது, அல்லது சமனப்படுகின்றது. (உஷ்ணத்தினுல், குளிரினுல், சில்லென்றிருக்கும் காற்றில் உலாவுவதினுல், காலே, மாலே முதலியவை.)

(5) சிற்றின்ப இச்சைகளில் உள்ள மாறுதல்கள் சரீர சம்பந்தமான பொதுக்குறியாகக் கருதப்படலாம். அதன் பிறகு வருபவை, வயிற்றுக் குறிகள், ஆகாரத்தில் விருப்பு,

வெறுப்பு, உஷ்ணம் அல்லது குளிர்ச்சியான பதார்த்தங்களை உண்ணவோ குடிக்கவோ பிரியப்படுதல்.

முக்கியமாக, அபூர்வமாகவும், அதிசயமாகவும், எதிர் பாராததாகவும், சாதாரணமாக இருக்க முடியாததாகவும் உள்ள குறிகளை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்துத் தெரிந்துகொள்ளவும். அதன் பிறகு இவைகளை ஒருங்கு சேர்த்து, மெட்டீரியா மெடிகாவில் இம்மாதிரியான குறி கள் உள்ள ஔஷதத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஒரு ஔஷதத்திற்கு இருக்கவேண்டிய ஒரு குறி ஏதோ ஒரு வியாதியில் இல்லாவிட்டால் அந்த ஔஷதம் அவ்வியா திக்கு ஏற்றதல்ல என்று பொதுவாகச் சொல்லுவதற்கில்லை. மற்ற எல்லா விஷயங்களிலும் ஒத்திருக்குமாயின் அது கொடுக்கப்படுவதற்கு யாதொரு தடையும் கிடையாது. உதாரணமாக ஒருவருக்கு ஸல்பர் குறிகள் பல இருந்தும், அவர் இரவுகளில் கால்களைத் தரையில் நீட்டிக்கொள்ள வில்லை என்றால் அதனால் அக்கேசுக்கு ஸல்பர் ஔஷதம் சரி இல்லை என்று சொல்வதற்கில்லை.

ஒரு வியாதியஸ்தருடைய குறிகள் இரண்டு அல்லது மூன்று ஔஷதங்களைக் குறிக்குமாயின், ஒவ்வொரு சமயத் தில் ஒரு ஔஷதம் தான் கொடுக்கப்பட வேண்டும். இம் மாதிரியாக முதலில் கொடுக்கப்படுவது அவ்வியாதியஸ் தரின் எல்லா முக்கிய குறிகளையும் கண்டிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஔஷத வீரியங்கள்

ஒரு குறிப்பிட்ட வியாதியஸ்தருக்குக் கொடுக்க வேண்டிய வீரியம் இன்னது தான் என்று நிர்ணயிக்க யாதொரு அடையாளங்களும் இல்லை. நாம் கொடுக்கும்

ஔஷதம் சரியாக இருப்பின் அது எந்த வீரியத்திலும் வேலை செய்யும். அவ்வப்போது தோன்றி மறையும் கடுமையான உபத்திரவமுள்ள (Acute) வியாதிகளில் குறைந்த வீரியங்களாகிய 3, 6, 30 முதலியவைகளை அடிக்கடி அதாவது நாள் ஒன்றுக்கு 4 முதல் 6 வேளைகள் வரை கொடுக்கலாம். வியாதிகளின் கடுமைக்குத் தகுந்தவாறு இரண்டு மணிக்கு ஒரு முறையோ, காலரா முதலிய அவசர கேசுகளில் கால்மணி, அரைமணிக்கு ஒரு முறையோ, ஒவ்வொரு வேளை ஔஷதங்கள் கொடுக்கப்பட்டு வியாதி படியப்படிய வேளைகளையும் குறைத்துக்கொண்டே வரலாம். நீடித்த வியாதிகளில் உயர்ந்த வீரியங்களாகிய 200, 1000 முதலியவைகளை வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது பக்ஷத்திற்கு ஒரு முறையோ உபயோகிக்கலாம்.

ஹோமியோபதி ஔஷதங்களை உபயோகித்தல்

ஒரு சமயத்தில் ஒரே ஔஷதம் தான் கொடுக்கப்பட வேண்டும். ஒரு வேளை ஔஷதம் கொடுத்தபின் நாம் கொடுத்த ஔஷதம் சரியானதாக இருப்பின், நாம் எதிர்பார்ப்பது, வியாதியின் குறிகள் சற்று அதிகமாவது போல் இருத்தல். இதற்கு (Aggravation) "உபாதி அதிகம்" என்று பெயர். இப்படிச் சற்று அதிகமானல் (அதாவது வியாதியஸ்தருக்கு அதிகத் தொந்திரவு கொடுக்காமல் அதிகமாவது போலிருந்தால்) நாம் கொடுத்த ஔஷதத்திற்கும் வியாதிக்கும் சம்பந்தமுண்டு என்று கொள்ளலாம். இப்படி "உபாதி அதிகம்" தோன்றினல் அதன்மேல் யாதொரு ஔஷதமும் கொடுக்கவேண்டியதில்லை. நாம் பொறுத்துப் பார்க்கவேண்டியதுதான். அப்படிப் பொறுக்கும்போது சௌகரியம் ஆகக்கூடிய கேசுகளில் வியாதி தானகவே படிய ஆரம்பிக்கும்.

வியாதி சொஸ்தமாகிறதென்பதற்கு அறிகுறிகள்.

ஒரு வியாதியஸ்தருக்கு ஔஷதம் கொடுக்கப்பட்ட பின்னர், குறிகள் கீழ்க்கண்டவாறு தோன்றுமாயின் அது வியாதி சொஸ்தம் ஆகிறது என்பதற்கு அடையாளமாகும்.

1. குறிகள் உள்ளிருந்து வெளியே.

2. மேலிருந்து கீழே.

3. அவைகள் முதன் முதலில் எந்தக் கிரமத்தில் தோன்றியதோ அதற்கு எதிரிடையாக.

4. மனக் குறிகள் மாறி சரீரக் குறிகள் தோன்றுதல்.

5. தலைக் குறிகள் மாறி, கை கால்களில் குறிகள் தோன்றுதல்.

6. முக்கியமான அவயவங்களிலிருந்து, முக்கியமல்லாத அவயவங்களுக்கு.

7. சில வருஷங்களுக்கு முன்பு இருந்த குறிகள் தோன்றுமாயின் அது நாம் கொடுத்த ஔஷதம் வியாதியின் வேரைக் களைக்கிறது என்றும் கூடிய விரைவில் வியாதி பூரண சௌக்கியமாகும் என்றும் நம்பலாம்.

ஒரு வியாதியஸ்தருக்கு உள்ள குறிகளை நன்கு பரிசிலனை செய்து, அவருக்குக் கொடுக்கவேண்டிய ஔஷதத்தையும் நிர்ணயம் செய்து, அந்த ஔஷதம் கொடுக்கப்பட்ட பின்னர், அவ்வியாதியஸ்தரிடையே ஏற்படும் மாறுதல்கள் மிகவும் கவனமாகக் கவனிக்கப்படுதல் அவசியம். அப்படி கவனிக்கப்படுங்கால்:

1. வியாதியின் குறிகளெல்லாம் நீண்ட காலத்திற்கு அதிகமாகி (Aggravation) அதன்பின்னர் சமனப்படுதல்; அல்லது,

2. திடீரென்று சிறிது நேரத்திற்கே குறிகள் அதிகமாகி, உடனே படிப்படியாக வியாதி படிய ஆரம்பித்தல்; அல்லது,

3. குறிகளில் யாதொரு அதிகமுமில்லாமல், வியாதி படிய ஆரம்பித்தல்.

4. ஔஷதம் கொடுக்கப்பட்ட பின்னர், புதுக் குறிகள் தோன்ற ஆரம்பித்தல். (இம்மாதிரியான புதுக் குறிகள் அதிகமாக இருப்பின் உடனே அவ்வௌஷதத்தை மாற்றலாம். அல்லது ஒன்றிரண்டு வாரங்கள் பொருத்து அவைகள் மறைகின்றனவாவென்று பார்க்கலாம்.)

5. ஔஷதம் கொடுக்கப்பட்ட பின்னர், பழைய காலத்திலிருந்த குறிகளெல்லாம் திரும்பி வருதல். (இது அதிக நாள் இருக்குமாயின், அதே ஔஷதத்தை இன்னும் உயர்ந்த வீரியத்தில் கொடுக்கவும்.)

6. ஔஷதம் கொடுக்கப்பட்ட உடனே குறிகள் அதிகமாகி, அவைகள் நீடித்து இருப்பதுடன், வியாதியஸ்தரும் பலவீனம் ஆகிக்கொண்டே வந்தால் (உடனே அந்த ஔஷதத்தை மாற்றவேண்டும்—அது கெடுதலாகவே வேலை செய்கிறது. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் 30-க்கு மேல் போகாத வீரியத்தையே உபயோகிக்கவும்.)

7. ஒவ்வொரு ஔஷதத்திற்குப் பிறகும், மிகவும் குறைந்த காலத்திற்கு சௌகரியம் போலிருத்தல். (இது அபாயகரமான கேஸ்—சாவு ஏற்படுவது நிச்சயம்.)

8. முதன் முதலில் சமனப்படுவதும், அதன் பிறகு வியாதி அதிகமாவதும். (இது தற்கால சாந்தியாகவே வேலை செய்கிறது. வேறு ஔஷதம் தேடவும்.)

மேற்சொன்னவைகளில் 1, 2, 3, 5 இவைகள் வியாதி சொஸ்தம் ஆகும் என்பதற்கு அறிகுறிகளாகும். 4, 8 இவைகள் சந்தேகாஸ்பத மானவைகள். ஆகவே வேறு ஔஷதங்களைக் கொடுத்துப் பார்க்கலாம். மற்றவை சொஸ்தம் செய்யக்கூடாதவை.

சரீரத்தின் அவயவங்களில் வியாதியினால் அதிகமான சேதங்களும் மாறுதல்களும் ஏற்பட்ட பின்னர் ஹோமியோபதி ஔஷதங்கள் பிரயோசனப்பட மாட்டா. ஒரு அவயவமோ அல்லது அதன் ஒரு பாகமோ முழுவதும் அழிந்து விட்ட பிறகு ஹோமியோபதி ஔஷதங்களின் உதவியால் அதை மறுபடியும் வளரச் செய்வது என்பது முடியாத காரியம்.

அட்டவணை

முதல் பாகம்

ஔஷதங்கள்		பக்கம்
அக்டியா ரஸிமோஸா	....	1
அக்டியா ஸ்பைகாடா	....	9
அக்னஸ் காஸ்டஸ்	....	10
அகேரிகஸ்	....	17
அகோனைட்	....	25
அடோனிஸ் வர்ஞலிஸ்	....	39
அப்ரோடேனம்	....	39
அபிஸ் கனடென்ஸிஸ்	....	48
அபிஸ் நைக்ரா	....	48
அபிஸ் மெல்லிபிகா	....	50
அபிஸிந்தியம்	....	58
அபோஸினம் கஞபினம்	....	62
அம்ப்ரா க்ரீஸியா	....	64
அமில் நைட்ரேட்	....	70
அமோனியம் கார்ப்	...	71
அமோனியம் ம்யூரியாடிகம்	....	79
அமோனியாகம்	....	84
அயிலாந்தஸ்	....	85
அர்ஜண்டம் நைட்ரிகம்	....	88
அர்ஜண்டம் மெடாலிகம்	....	95
அரலியா ரஸிமோஸா	....	100
அரேனியா டயாடிமா	....	101
அல்லியம் ஸீபா	....	101
அலெட்ரிஸ் பாரிஞோஸா	....	104

அலுமென்	....	104
அலூமினு	....	105
அவினு ஸடீவா	....	113
அனகார்டியம் ஓரியண்டேல்	....	114
அஸ்க்ளிபியாஸ் ட்யூபரோஸா	....	116
அஸ்குலஸ் ஹிப்போகாஸ்டானம்	....	117
அஸடிக் ஆஸிட்	....	121
அஸபோடிடா	....	125
ஆக்ஸாலிக் ஆஸிட்	....	128
ஆண்டிமோனியம் ஆர்ஸனிகம்	....	133
,, க்ரூடம்	....	134
,, டார்டாரிகம்	....	139
ஆர்னிகா மொண்டானு	....	150
ஆர்ஸனிகம் ஆல்பம்	....	155
ஆர்ஸனிக் ஐயோடைட்	....	164
ஆரம் ட்ரிபில்லம்	....	165
ஆரம் ம்யூரியாடிகம்	....	167
ஆரம் மெட்டாலிகம்	....	171
ஆரம் ம்யூரியாடிகம் நேட்ரம்	....	180
ஆலோ ஸ்கோட்ரினு	....	181
இக்னேஷியா	....	184
இபிகாக்உனு	....	190
எக்கினீஷியா	....	195
எதுஸா ஸைனுபியம்	....	195
எக்விஸிடம்	....	198
எரிகரான்	....	198
ஐயோடியம்	....	198
ஐரிஸ் வர்ஸிகொலர்	....	207
ஓநோஸ்மோடியம்	....	209
ஓபியம்	....	209

ஒலியாண்டர்	....	214
ஒஸிமம் ஸாங்டம்	....	216
க்வாய்கம்	....	216
க்ளமேடிஸ் எரெக்டா	....	220
க்ளோனோயின்	....	223
க்ரிடேஜஸ்	....	228
க்ரிண்டிலியா ரோபஸ்டா	....	229
க்ரீஸோட்	....	229
க்ரோகஸ் ஸடீவா	....	234
க்ரோடன் டிக்லியம்	....	235
க்ரோடேலஸ் ஹாரிடஸ்	....	236
கந்தாரிஸ்	....	237
கம்போகியா	....	242
கல்கேரியா அஸிடிகா	....	243
,, ஆர்ஸனிக்	....	243
,, ஐயோடைடு	....	245
,, கார்பானிகா	....	246
,, ப்ளோரிகா	....	256
,, பாஸ்பாரிகா	....	259
,, ஸல்ப்யூரிகா	....	263
,, ஹைபோஸபாஸ்	....	266
கன்வலேரியா	....	266
கன்னபிஸ் இண்டிகா	....	267
,, ஸடீவா	....	270
காக்டஸ் க்ராண்டிப்ளோரஸ்	....	275
காக்குலஸ்	....	279
காட்மியம் ஸல்ப்	....	284
காப்ஸிகம்	....	285
காபியா க்ரூடா	....	291
காம்போரா	....	293

கார்டூஸ் மரியேனஸ்	....	297
கார்பன் ஸல்ப்	....	300
கார்பாலிக் ஆஸிட்	....	306
கார்போ அனிமாலிஸ்	....	308
கார்போ வெஜிடாபிலிஸ்	....	312
கால்மியா	....	317
காலண்டுலா	....	319
காலாடியம்	....	319
காலின்ஸோனியா	....	321
காலி ஆர்ஸனிகம்	....	321
,, க்ளோரிகம்	....	322
,, கார்பானிகம்	....	322
,, நைட்ரிகம்	....	328
,, ப்ரோமேடம்	....	328
,, பாஸ்பாரிகம்	....	330
,, பைக்ரோமிகம்	....	333
,, மூரியாடிகம்	....	337
,, ஸல்ப்யூரிகம்	....	340
,, ஐயோடேட்டம்	....	341
காலோட்ரோபிஸ்	....	345
காலோபில்லம்	....	345
காலோஸிந்திஸ்	....	346
காஸ்டிகம்	....	349
காஸிபியம்	....	353
கிராபைடிஸ்	....	354
குப்ரம் ஆர்ஸனிடம்	....	358
,, மெடாலிகம்	....	359
குர்ச்சி	....	362
கொரால்லியம் ருப்ரம்	....	363
கோக்கஸ் காக்டி	....	364

கோனபவா	....	365
கோல்சிகம்	....	366
கோனியம்	....	369
சாமோமில்லா	....	373
சிமாபிலா	....	377
சின்னியம் ஆர்ஸனிகம்	....	379
சின்னினம் ஸல்ப்யூரிகம்	....	380
செலிடோனியம்	....	382
செனபோடியம்	....	385
சைனு	....	386
டபாகம்	....	392
டயஸ்கோரியா	....	395
டல்கமாரா	....	397
டாரண்டுலா குபன்ஸிஸ்	....	401
டாரண்டுலா ஹிஸ்பானியா	....	403
டியூபர்குலீனம்	....	404
டிரில்லியம்	....	408
டிரோஸிரா	....	409
டிஜிடாலிஸ்	....	411
டுக்ரியம்	....	415
டெல்லூரியம்	....	416
தராக்ஸகம்	....	417
தலப்ஸீ புர்ஸா பெஸ்டோரிஸ்	....	418
தாலியம்	....	419
தூஜா	....	419
தெரிடியன்	....	424
தெரிபிந்த்	....	425

ஹோமியோபதி
மெட்டீரியா மெடிகா

அக்டியா ரஸிமோஸா (Actaea Racemosa)
(அல்லது சிமிஸிப்யூகா)

இவ்வௌஷதம் மோட்டார் நரம்பு சம்பந்தமான உபாதிகளிலும் மூளை முதுகு பற்றிய வியாதிகளிலும் உபயோகமுள்ளது. தசைகளில் வலி, வெடிப்பது போன்ற தலைவலி, உச்சந்தலை பறந்துவிடும் போலிருத்தல், வலிகள் சூரியன் உதயமாகும்போது ஆரம்பித்து அஸ்தமித்தவுடன் நின்றுவிடுதல், பின் தலையிலிருந்து வலி வலது கண்ணில் தங்குதல், இடது கண் பக்கமாகவோ அல்லது கண் விழிகளிலோ வலியுடன் கூடிய தலைவலி, இரவில் அதிகம். மனக்கலக்கம், வருத்தம், தூக்கமின்மை. தனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் என்று நினைத்தல், தன்னைச் சுற்றிலும் ஏதோ கருப்புத் திரை யிடுவது போன்ற உணர்ச்சி, தசை சம்பந்தமான வாதரோகம், தலை திரும்ப முடியாமலும் பின்புறமாகச் சாய்ந்தும் உள்ள விரைப்பான கழுத்து, இடது பக்கத்தில் அதிகம். சங்காதோஷ சம்பந்தமான வாதரோக சரீரங்கள். தசைகளில் வலி, குதிப்பு, மறமறப்பு, வாத சம்பந்தமான வலியுடன் கூடிய மாதவிடாய். கருப்ப ஸ்திரீகளின் மயர்க்கை. பிரசவத்திற்குச் சில நாட்களுக்கு முன்னால் இவ்வௌஷதம் கொடுக்கப்படின் சுகப் பிரசவமாக ஏற்படும். கருப்பை வலிகள் மேல் நோக்கியும் குறுக்கு நெடுக்காகவும் பறத்தல். குண்டி எலும்புகளின் வழியாக தொடையிலும் முதுகிலும் போகும் வலி. இவ்வலி

குறைப் பிரசவ மேற்படும் சமயங்களில் காணப்படும். பிரச வத்திற்குப் பின் சுரம் ஏற்பட்டுப் பைத்தியம் பிடித்தல். இடதுகையில் மரத்த உணர்ச்சியுடன் இருதய வலி. துடிக் கும், நடுங்கும், நாடி.

மனம்: சங்காதோஷம் அல்லது சங்காதோஷமும் வாதரோகமும் உள்ள சரீரம். எலிகளைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி. மனோ நிலைமையும் சரீர நிலைமையும் மாறி மாறி வருதல். கேட்டதற்குப் பதிலே சொல்லமாட் டார். அல்லது வாயாடியாக இருத்தல். மனோ வியாதி, வருத்தம், நரம்பு ஸ்தானங்களில் அதி உணர்ச்சியினுல் அழுகை வரும்போலிருத்தல். சங்காதோஷம் அல்லது முகத்தசைகள் ஆடுதல், மன வெழுச்சியினுல் அதிகமாகு தல். முனகல், அமைதியின்மை, சந்தேகப் பிராணி, அடிக் கடி பேசுவதும் விஷயங்களை மாற்றிக்கொண்டே யிருப் பதும். ஒரு இடத்தில் உட்கார இயலாமை. அப்படி உட் கார்ந்தால் மூர்க்க குணம் ஏற்படுதல்.

தலை: உச்சந் தலையில் மந்த உணர்ச்சி. கீழே குனி யும்போதும் காலையில் தூங்கி எழுந்திருக்கும்போதும் தலைச் சுற்றல். தலையணையிலிருந்து தலையைத் தூக்கினுல் குமட் டல். பின்தலையிலிருந்து உச்சந்தலைவரை வலி. உச்சந் தலை வெடித்துவிடும் போலிருத்தல். மந்தமாயிருக்கும் நெற்றித் தலைவலி. அமுக்கினுலும், திறந்த வெளியிலும், குளிர்ந்த ஒற்றிடங்களினுலும், மாதவிடாய்ப் போக்கினு லும் அதிகமாகும். தலை பெரியதாக இருப்பது போன்ற உணர்ச்சி, துடித்தல். ஒவ்வொரு தடவை இருதயம் துடிக்கும்போதும் கழுத்திலிருந்து உச்சந்தலையில் ஆணி அடிப்பது போன்ற உணர்ச்சி. மூளையில் அலை அடிப்பது போன்று இருத்தல். கண் விழிகளிலும் தலையிலும் வலி,

அசைவினால் அதிகமாதல். நரம்பு சம்பந்தமான தலைவலி. தலையை முன் புறமாக வளைக்க முடியாமை.

கண்கள்: கண்களுக்கு முன்னால் கருப்புப் புள்ளிகள். கண்களின் கருமணி அகன்றுவிடுதல், இரட்டைப் பார்வை. கண் விழிகளில் வலி, காலை மாலைகளிலும் தலையை அசைத்தாலும் அதிகமாகுதல்.

வயிறு: குமட்டல், வாயாலெடுப்பு.

அடிவயிறு: அடிக்கடி வயிற்று வலி, உடம்பை இரட்டையாக மடித்தல். மலம் கழிந்தபின் வலி அதிகமாகுதல். பொருமியும் நிறைந்தும் இருத்தல். குடலில் கட புடா சப்தமும் வதைக்கும் வலியும். கால்களுக்குக் கீழும் அடி வயிற்றிலும் வலி.

மலம்: மலபந்தமும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல். துர்நாற்றமுள்ள கருப்பு மலம் அடிக்கடி வருதல். குழந்தைகளின் காலை வயிற்றுப் போக்கு. கால்களிலிருந்து குடல்வரை வலி. அதனால் வயிற்றுப் போக்கும், சிறிது மூத்திரம் தடைபடுதலும்.

மூத்திரம்: அதிகம், வெளுப்பு நிறம், தண்ணீர் போன்று இருத்தல். இரத்தம் கலந்திருத்தல், அடிக்கடி வருதல், கொஞ்சமாக இருத்தல். சூடான உணர்ச்சி. மூத்திரக் காய்களில் வலி.

பெண் குறி: கருப்பைப் பக்கங்களில் வலி. ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குத் தாவுதல். முதுகு வலி இடுப்பின் வழியாகவும் தொடை வழியாகவும் கீழே செல்லல். அடி வயிற்றின் கீழ்ப் பாகத்தில் கடுமையான

வலி, அசைவினுல் அதிகமாதல். கருப்பைப் பாகங்களில் கீழே இழுக்கும் வலி. கால்கள் கனமா யிருப்பது போன்ற உணர்ச்சி. கருப்பை இறக்கம். கருப்பையின் மேற் பாகங் களில் அதிக பலவீனம், அமுக்கம். மாதவிடாய் சீக்கிர மாக ஏற்பட்டால் ஏராளமாகவும் கறுப்பாகவும் கட்டி கட்டி யாகவும் இருத்தல். அல்லது தாமதமாக ஏற்படின் மாத விடாய் கொஞ்சமாகவும் உறைந்துபோயும் இருத்தல். மாத விடாயின்போது அடி வயிற்றின் குறுக்கே வலி, அதனுல் வியாதியஸ்தர் உடம்பை இரண்டாக மடித்துக்கொள்வார். பிரசவ வேதனையை யொத்த வலி. மாதவிடாய்களின் இடைக்காலத்தில் சிறிய போக்கு. வாத சம்பந்தமான வலியுடன் கூடிய மாதவிடாய். மாதவிடாயின் போது காக்கை வலிப்பு அல்லது சங்காதோஷம். வெள்ளைப்பாடு, பட்ட இடங்களில் தோலுரிதல். கருப்பையில் கனமிருப் பது போன்ற உணர்ச்சி.

கருப்பம்: பிரசவ வேதனை போன்ற வலியுடன் மயக்கம் வரும் வலிப்புகள். பிரசவ வேதனையின் போது அடிவயிற்றின் குறுக்கே அதிக வலி. பிரசவமான பிறகு தொடையிடுக்கில் அதிகமான வலி. பிரசவமான பிறகு வரும் நீர்ப்போக்கு, குளிரினுலோ, மனவெழுச்சியினுலோ தடைப்படுதல். தண்ணீர் போலவும் கட்டியாகவும் எரிச்ச லுடனுமிருத்தல். கருப்பை அடிக்கடி இடம் மாறிக் கொண்டே யிருத்தல். அடிவயிற்றின் கீழ்ப்பாகத்தில் வெட்டும் வலி.

மார்பு: வறண்ட இருமலுடன் தொண்டைக் குழியில் கூச்சம். பேசினுல் அதிகமாகுதல். மார்பெலும்பு களில் வலி, மார்பு நரம்புகளிடையில் வலி, வறண்ட,

அலைக்கழிக்கும் இருமல், இரவில் அதிகமாகும். கோழையிருக்காது. பிடிப்பு வலிகள்.

இருதயம் : வலி இருதய பாகத்திலிருந்து மார்பு முழுவதும் இடது கையிலும் பரவுதல். அசைந்தால் அதிகமாகும் இருதயத் துடிப்பு. பிரக்ஞையின்மை, கஷ்ட சுவாசம், கைகளில் சில்லிப்பான வியர்வை. இடது கை மறத்து இருத்தல். இருதயத் துடிப்பு திடீரென்று நின்று விடுதல். மூச்சுத் திணறல் ஏற்படும் நிலைமை. துடிப்புடன் பிடிப்பு வலி. மார்பு முழுவதும் பரவும் இருதயவலி, மயக்கம், முகம் சிவத்தல். இடதுகை உடம்புடன் இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சி.

கழுத்து, முதுகு : தலையை அசைத்தால் கழுத்துத் தசைகள் சொருகுதல், வலித்தல். குளிரினால் விரைப்பான கழுத்து. கழுத்துப்பாக முள்ளெலும்பிலும் மேல் பாக முள்ளெலும்பிலும் அதி உணர்ச்சி. கழுத்தும் தலையும் உள்ளிழுக்கப்படுதல், கீழ் முதுகில் கடுமையான வலி. அடிக்கடி ஏற்படும் பிரசவ வேதனையினால் முள்ளெலும்புகளில் அருவருப்பான உணர்ச்சி. கழுத்திலும் முதுகிலும் வாத வலிகள்.

கை கால்கள் : தசைகளில் வலி, அசைவினால் அதிகமாதல். இடது கை உடம்புடன் கட்டப்பட்டது போலவும் பட்சவாயுவினால் பீடிக்கப்பட்டும் இருத்தல். கைகளில் சில்லிப்பு, வியர்வை. எழுதும்போது கைகளில் நடுக்கம். மூட்டுகள் வீங்கியும் சூடாகவும் வலியுடனும் இருத்தல். பிடிப்பு வலிகள். வாதம் தசைகளின் பருத்த பாகங்களில் பீடித்தல்.

நரம்புகளும் கேபிகளும்: கால்களில் நடுக்கம். தாறுமாறாகக் கால்கள் அசைதல், இடது காலில் அதிகம். கால்கள் ஸ்திரமாக இல்லாமை, காக்கைவலிப்பு, சங்கா தோஷம், கருப்பை சம்பந்தமான வியாதிகளுடன் வலிப்பு, அமைதியற்று இருத்தல், தூக்கம் தடைப்படல், அடிக்கடியோ அல்லது இடைவிடாமலோ இருக்கும் தசை இழுப்பு, எப்பொழுதும் சில்லிப்பு, ஈர நப்புள்ள காலங்களில் அதிகமாகுதல், சரீர முழுவதுமே நடுக்கம்.

உணர்ச்சி: சினைப்பை, கருப்பை உபாதிகளில் குத்தும், வெட்டும், மின்சார அதிர்ச்சி போலவும் வலிகள். கைகளில் வலியும் மறத்த உணர்ச்சியும்.

போது: மாதவிடாய் நிற்கும் காலம், விசாரத்தினாலும் அளவுக்கு மீறிய வேலை செய்வதினாலும் உண்டாகும் நரம்புத் தளர்ச்சி. வாத சரீரமுள்ளவர்கள். குழந்தைகளுக்குப் பல் முளைக்குங்காலம்.

அக்டியா ரஸிமோஸாவிற்கும் "காலோபில்லத்திற்கு" முள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

அக்டியா ரஸிமோஸாவில் இழுத்தல் தொடர்ந்து இருக்கும். பிரசவவேதனை ஆரம்பிக்கும் போது உண்டாகும் வலி இடைவிடாமலிருத்தல். காலோபில்லத்தில் இழுத்தல் விட்டு விட்டு வரும். பிரசவவேதனை ஆரம்பித்து சில நேரங்கழித்து ஜனனேந்திரியத்திற்கு மேற்புறமிருக்கும் இடத்திற்கு மேலாக இழுத்தல், பலவீனம் முதலியவை தோன்றும்.

முள்ளெலும்பு உபாதியில் ஔஷதங்களை ஒப்பிடுதல்

ஸிங்கம் : வேதனையுள்ள முள்ளந்தண்டு. கடைசி முள்ளெலும்பில் வலி, உட்காரும் போது அதிகமாதல். பசியுள்ளபோது கால்களில் பலவீனம்.

காக்குலஸ் : பலவீனமுள்ள முள்ளந்தண்டு. கடைசி முள்ளெலும்பில் வலி. நடக்கவும் முடியாத பலவீனம், அடிவயிற்றில் ஒன்றுமே இல்லாதது போன்ற உணர்ச்சி.

நேட்ரம் மூர் : முள்ளந்தண்டில் வேதனை, முதுகைக் கீழே வைத்துப் படுத்தால் சௌகரியம்.

க்வாய்கம் : க்ஷயரோக உபாதியஸ்தர்களுக்கு முள்ளந் தண்டில் பிடிப்பு வலி.

மார்பில் பிடிப்பு வலிகளுக்கு

ரானுகுலஸ் பல்ப், பாஸ்பரஸ், காலீ கார்பானிகம், நேட்ரம் முரியாடிகம், ஸ்டிக்டா, ஸேனேகா, மைர்டஸ் கம்யூனிஸ், ஸல்பர். தெரிடியன் முதலியவைகளை ஒப்பிடவும்.

சினைப்பை, கருப்பை வலிகளில் ஒப்பிடுதல்

வலப்பாக சினைப்பை : அபிஸ் மெல்லிபிகா, பெல்லடோன்னு, பாரிடா கார்ப், ஐயோடம், பல்லாடியம்.

அபிஸ் மெல்லிபிகா : வலது சினைப்பையில் வலியும் அவ்வலி இடது மார்பு வரையிலுமோ அல்லது கீழ்ப்பாகத்தில் துடை வரையிலுமோ பரவுதல்.

அலூமினு: வலி மார்புவரை பாய்வது போலிருத்தல்.

அர்ஜண்டம் மேட்டாலிகம்: இடது சினைப்பையி லும் இடுப்பிலும் வலி.

அக்டியா ரஸிமோஸா: எல்லாப் பக்கங்களிலும் வலி, பக்கங்களிலும், சப்பை, முழங்கால் முதலியவைகளுக்குத் தாவுதல். முதுகில் வலி, மாதவிடாயின்போது அதிக வலி யிருப்பதால் வியாதியஸ்தர் உடம்பை இரண்டாக மடிப்பார்.

காக்குலஸ்: மாதவிடாய் வரும்போன்ற வலி.

காலோஸிந்த்: இசிக்கும் வலிகள், அதனுல் உடம்பை இரண்டாக மடித்தல். உஷ்ணத்தினுல் சௌகரியம்.

ஜெல்ஸிமியம் அல்லது கார்போ விஜிடாபிலிஸ்: மாதவிடாய் சமயத்தில் வலி முதுகுக்குச் செல்லுதல்.

ஹெலோனியாஸ்: கருப்பை மிருதுவாகவும் இரண மாகவும் இருக்கும். வியாதியஸ்தருக்குத் தன் கருப்பை யைப் பற்றிய நினைவுகளே இருக்கும். இரத்தப் பெருக்கு. இடம் பெயருதல். கருப்பையின் அகன்ற பாகம் முன்பக்க மாகச் சாய்ந்து விடுதல்.

இக்னேஷியா: பெருமூச்சு விடுதல், கருப்பை வலி, பிரசவவேதனையை ஒத்த வலி. கருப்பாகவும் கட்டி தட்டி யும் உள்ள மாதவிடாய்.

லில்லியம் டிக்ரினம்: இடது ஸ்தனக்காம்பில் வலி. மார்பு வழியாக முதுகிற்கும் அல்லது அடிவயிறு வழியாக இடுப்பு, கால் முதலியவைகளுக்கும் பரவுதல். மேற் சொன்ன வலியுடன் இருதய உபாதிகளும் இருத்தல்.

இருதயம் கசக்கிப் பிழியப்படுவது போன்ற உணர்ச்சி. படபடப்பு, அடிக்கடி மூத்திரம் வெளிப்படுதல்.

லாச்சஸிஸ் : கருப்பையிலிருந்து மார்புக்கு வலி. வலி இரத்த ஓட்டத்தினல் சௌகரியப்படுதல். தூங்கினாலும் இடது பக்கத்திலிருந்து வலப் பக்கத்திற்கு மாறினாலும் அதிக அசௌகரியம். இதற்கு நேரிடை லைகோபோடியம்.

நைட்ரிக் ஆஸிட் : யோனியிலிருந்து பிடிப்பு வலி மேல்நோக்கிப் போகுதல்.

பல்ஸடில்லா : இடது கருப்பையில் மாதவிடாய்க்குப் பிறகு வலி.

முறிவு : அகோனைட், பாப்டீஷியா, ஜெல்ஸிமியம், பல்ஸடில்லா, காலோபில்லம்.

விசேஷங்கள் : சதா சில்லிப்பு, குளிர்ந்த ஈரநப்புள்ள காற்றினல் அதிக அசௌகரியம்.

அக்டியா ஸ்பைகாடா — (Actaea Spicata)

கடுர் மயக்கம், முகத்தில் வாத சம்பந்தமான வலி, சிறு எலும்பு மூட்டுகளில் சிறிது உக்கிரமான வாதம், இத்துடன் வயிற்றில் புளிப்பும், புளித்த வாயாலெடுப்பும், இக்குறிகள் இரவில் அதிகமாகுதல். இச்சிறு மூட்டுகளில் இருக்கும் வாதம் தொட்டாலும் அதிக வலியைத் தரும். உடம்பில் சிறிது களைப்பேற்படினும் மூட்டுகள் வீங்குதல்.

அக்னஸ் காஸ்டஸ் — (Agnus Castus)

ஆண்தன்மை குன்றுதல், மூத்திரமேகம், மேக வெட்டை, வெள்ளை, வயது ஆகிவிட்டதால் ஆண்தன்மையை இழந்து விட்டபோதிலும் யுவர்கள் போல் மனதில் காமத்தை எண்ணிக் கொண்டே யிருக்கும் கிழவர்களுக்கு இது சிலாக்கியமானது. இளமையில் கெட்ட பழக்கத்தைக் கைக் கொண்டவர்களுக்கும் முட்டிமைதுனத்தால் அகாலத்தில் கிழடு தட்டுவதற்கும் இது உபயோகப்படலாம்.

மனம்: மெய்மறதி. சாவு நெருங்குவது போன்ற பயம், தூக்குப் போட்டுக் கொள்ளும் நினைப்பு, துக்கம், கோபம், கவலை, பயம், ஞாபகம் இழத்தல்.

தலை: கழுத்தில் எங்கே தலை முன்பக்கமாக விழுந்து விடுமோவென்று தோன்றும்படியான கனமும் அமுக்கமும். நெற்றியிலும் பொட்டுகளிலும் அமுக்கத்துடன் கிழிக்கும் வலிகள், இவ்வலிகள் அசைந்தால் அதிகமாகும். பொட்டுகளைச் சுற்றி தலைவலி. தலையில் மந்தகுணமும் அதற்குப் பிறகு நீடித்திருக்கும் தலைவலியும், நடுக்கமும், வாயாலெடுப்பும்.

கண்கள்: கண்களின் கருமணிகள் அகன்று விடுதல், வெளிச்சத்தில் அதியுணர்ச்சி, மாலையில் படிக்கும்போது எரிச்சலும் அரிப்பும்.

காதுகள்: கர்ஜிப்பது போலவும் கணீர் கணீரென்றும் சப்தம். காது கேளாமை.

மூக்கு: ஏதோ வாசனை அடிப்பது போன்ற பிரமை.

முகம்: கன்னங்களைக் கரைக்கும்படியான அரிப்பு இடது கன்னத்தில் அக்கி, மூக்கிலிருந்து மேற்பாகங்களுக்குப் பரவுதல், கீழ்த்தாடையின் வலப் பாகத்துக் குழியில் பிளப்பது போன்றும் கிழிப்பது போன்றும் வலி.

பற்கள்: வலியுள்ளதாகவும் கதகதப்பான ஆகாரம் அல்லது பானங்களினால் வலி அதிகமாகவும் இருத்தல். இடப்பக்க உளிப்பற்களில் கிழிக்கும், துடிக்கும் வலி.

நாக்கு: வெண்மையான மாசு படிந்திருத்தல், செப்பு போன்ற உலோகங்களின் ருசி, கசப்பு.

தொண்டை: தொண்டையில் அரிப்பு.

விருப்பு, வெறுப்பு: தாகமும் பசியும் இல்லாமை.

குமட்டலும் வாயாலெடுப்பும்: நிற்கும் பொழுது வயிற்றின் அடியிலிருந்து குமட்டல் வருதல், சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்ளுவதாலேற்படும் குமட்டல், தடை செய்யப்பட்ட மாதவிடாயினால் குமட்டல்.

அடிவயிறு: தூக்கத்தில் கடபுடா சப்தம், அமுக்கினால் உணர்ச்சிகாணல், அபான வாயு வெளிவர முடியாமல் சிறைப்பட்டது போல் உள்ளேயே இருத்தல், உப்பிசம் அதிகமாகிக்கொண்டே இருக்கும். குடல்கள் கீழே விழுந்து விடும் போன்ற உணர்ச்சியும் அதனால் வயிற்றைக் கைகளால் தாங்கிப் பிடித்தலும்.

மலம்: அபான வாயு, மூத்திரம்போன்று வாசனையுள்ள மலம், சிறுவர்களின் வயிற்றுப்போக்கு, பெரியவர்களுடைய நாட்பட்ட வயிற்றுப்போக்கு, நின்று கொண்டிருந்தால் வயிற்றுக்கடுப்பு ஆரம்பித்துவிடுமோவென்றதோற்றம்,

கடினமான மலம், மலபந்தம், இளகின மலம் கூட சிரமத்துடன் வெளியேறுதல். மலம் போவதற்கு முக்கினுல் இந்திரியம் வெளியாதல், வெளிவந்த மலம் மறுபடியும் உட்சென்று விடுதல், அரிக்கும் வெடிப்புகள், அபானத்தில் வெடிப்பு.

மூத்திரம் : மூத்திரப்பை, அடிவயிற்றின் அடிப்பாகம் அல்லது மூத்திரக் காய் முதலியவற்றில் வலியுடன் அபரிமிதமான மூத்திரப்போக்கு, மூத்திரக் குழாயில் எரிச்சல், அமுக்குதல் இவைகளுடன் சிவந்த அமுக்கடைந்த மூத்திரம்.

ஆண் : சிற்றின்ப ஆசை குறைதல், இல்லவே இல்லையென்றும் சொல்லலாம். ஆண்குறி சிறிதாகவும் மிகவும் சுருங்கியும் இருக்கிறபடியால் காம விகாரமுள்ள நினைப்புகளினுலும் விரைப்பாகாமலிருத்தல், பீஜங்கள் சில்லிப்பாகவும் வீங்கியும் கடினமாகவும் வலியுடனும் இருக்கும். அதிக சிற்றின்ப நுகர்ச்சியினுல் அகாலத்தில் கிழத்தன்மை, நபும்சகத்துவமும் அதனுடன் மூத்திர மேகமும், மூத்திரக் குழாயிலிருந்து மஞ்சள் நிறமுள்ள பதார்த்தம் வெளியேறுதல், சிற்றின்ப இச்சையோ அல்லது ஆண்குறியின் விரைப்போ இல்லாமலும் மூத்திர மேகம். விரைப்பு கொஞ்சமாக இருந்தலும் சிற்றின்பத்தில் பிரியமின்மையும். சரீரத்தில் தளர்ச்சி யேற்பட்ட பிறகும் சிற்றின்பங்களைப் பற்றிப் பேசுதல் தளராத கிழவர்களுக்கு இது நல்ல ஔஷதம் ஆகும்.

பெண் : அடிவயிற்றில் இழுக்கும் வலியுடன் தடைப்பட்ட மாதவிடாய், இரகசியமான கெட்ட பழக்கங்களுக்குட்பட்ட ஸ்திரீகளுக்கு புணர்ச்சியின் போது அதிக

உற்சாகமின்மை, ஜனனேந்திரியங்களில் தளர்ச்சியுடன் வெள்ளைப்பாடு கருப்பையிலிருந்து இரத்தப்பெருக்கு, யோனி தளர்ந்திருத்தல். முட்டையின் வெள்ளைக்கரு போன்று வெள்ளை இருத்தல். வெள்ளைப்பாடு துணிகளில் மஞ்சள் கறையை ஏற்படுத்துதல். சிற்றின்பத்தில் வெறுப்பு. மலடு.

கருப்பம்: ஸ்தனங்களில் பால் குறைதல் அல்லது இல்லாமலேயே இருத்தல். இக்குறி ரகஸ்ய துர்ப்பழக்கமுள்ள ஸ்திரீகளிடத்தில் பிள்ளை பெற்ற பிறகு ஏற்படும். மலட்டுக்குணம்.

சுவாசம்: அமுக்கமும், மாலையில் மாடிப்படியேறினால் சுவாசம் விட சிரமமும்.

இருமல்: மாலையிலும் தூங்கப் போகுமுன்பும் இருமல், இரத்தம் வெளியேறுதல், மூக்கிலிருந்து இரத்தம் வருதல் (காலையில்), உள்மூச்சு வாங்கும் போது இருமல், இரவுகளில் வியர்வையுடன் குறைக்கும் இருமல். சுவாசாசயம் காய்ந்திருத்தல்.

கை, கால்கள்: வலது அக்குளிலும் கைகளின் மேற்பாகங்களிலும் கடினமாக அமுக்குர்வலி, தொட்டால் அதிக அசௌகரியம், அசைந்தாலும் அசௌகரியம் அதிகமாகும். விரல்மூட்டுகளில் வீக்கம், மூட்டுகளில் அழர்ச்சியினால் சிறு சிறு கழலைக்கட்டிகள் உண்டாகுதல், முழங்கால்களில் சில்லிப்பு, வலக்கால் கனத்தல், மாலைநேரங்களில் கால்கள் எங்கணுமே சில்லிப்பும் களைப்பும் இருத்தல்.

சுரம்: சில்லிப்பும் நடுக்குதலும். உஷ்ணமும் சில்லிப்பும் மாறிமாறி வருதல். இரவில் பீஜங்கள் சில்லிப்பாக

இருக்கும். திறந்த வெளியில் நடக்கும்போது கைகளில் சுலபமாக வியர்த்தல்.

சருமம்: அரிப்பு, சருமம் மஞ்சளாயிருத்தல்.

போது: அமித சிற்றின்ப நுகர்ச்சியினுலேற்பட்ட தளர்ச்சியை உடையவர்களுக்கும், பாலியத்தில் செய்த கெட்ட பழக்கங்களினுல் ஏற்பட்ட நபும்சகத்துவம், மூத்திர மேகம் முதலியவைகளுக்கும்.

அசௌகரியம்: சரீரப் பிரயாசை, அசைவு முதலிய வைகளினுல்.

உறவு: அக்னஸ் காஸ்டஸ், காலாடியம், ஆர்ஸனிகம் ஆல்பம், பிரயோனியா, இக்னேஷியா, லைகோபோடியம், பல்ஸடில்லா, ஸெலினியம் முதலியவைகளுக்குப் பிறகு இது நன்ருய் வேலை செய்யும்.

முறிவு: நேட்ரம் மூர், காம்போரா.

அனுசரிப்பவை: காலாடியம்.

நபும்சகத்துவத்தில் ஔஷதங்களை ஒப்பிடுதல்

அலுமினு; ஸெலினியம்: மலப் பிரவர்த்தி ஆகும் போது இந்திரியம் தானுகவே வெளியேறுதல்.

அகோரிகஸ்: பிறரைத் தழுவப் பிரியம். ஆண் குறி சிறுத்து இருத்தல். ஜனனேந்திரியக் கருவிகள் சில்லிட்டும் சுருங்கியும் இருத்தல். சிற்றின்ப நுகர்ச்சிக்குப் பிறகு பலவீனம், முள்ளந் தண்டிலும் துடைகளிலும் பலவீனம். ஜனனேந்திரியங்களில் காமத்தைக் கிளப்பும் அரிப்பு, பீஜங்கள் பின்னுக்கு இழுத்தல்.

காலாடியம்: சுவப்னஸ்கலிதம், ஒரே இரவில் பல தடவை இந்திரியம் ஸ்கலிதமாதல். கண்ட சுவப்னங்கள் ஞாபகத்துக்கு வராமை. சிற்றின்பத்தில் அதிக அவா, ஆனால் சக்தி யில்லை. மனது குன்றி இருத்தல். பீஜம் வீங்குதல்.

கல்கேரியா கார்ப்: இந்திரியஸ்கலிதம் ஏற்பட்ட பிறகு வியர்த்தல். நபும்சகத்துவம். வாலிபத்தில் இருப்பது போல் சிற்றின்பத்தில் அதிக அவா, ஆனால் சக்தி இல்லை. ஆண் குறி மெதுவாக விரைத்தல். வெகு சீக்கிரத்தில் இந்திரியம் வெளி வருதல். பிறகு முழங் கால்களில் பலவீனம், கோபம், திருப்தியின்மை.

அக்னஸ் காஸ்டஸ்: முட்டி மைதுனத்தால் மூளை, முள்ளந் தண்டு, ஜனனேந்திரியங்கள் முதலியவற்றில் தளர்ச்சியும் பலவீனமும்.

பாரிடா கார்ப்: அகால நபும்சகத்துவம். சிற்றின்பத்தில் ஆசை குறைதல்.

சைனு: ஸெலினியம்: அமித சிற்றின்ப நுகர்ச்சியினுல்.

கோபால்ட்: இந்திரியம் வெளியான பிறகு முதுகு வலி, உட்காரும்போது அதிகமாகுதல்.

டயஸ்கோரியா: சத்தில்லாத இந்திரியஸ்கலிதம். ஜனனேந்திரியத்தில் தளர்ச்சி. ஒரே இரவில் இரண்டு மூன்று தடவை சுவப்ன ஸ்கலிதம். அதன் பிறகு முழங் கால்களில் வலி.

ஜெல்ஸிமியம்: பீஜங்களில் வியர்வை. இரவில் அடிக்கடி தானுகவே இந்திரியம் ஸ்கலிதமாதல். தளர்ந்திருக்கும் ஜனனேந்திரியங்கள்.

கிராபைடிஸ்: சிற்றின்பத்தில் வெறுப்புடன் கூடிய நபும்சகத்துவம். சிற்றின்பத்துக்குப் பின் இந்திரியம் வெளியாகாமை. பீஜங்களில் ஈர நப்புள்ள சிரங்குகள். இடது பீஜத்தில் நீர் வீக்கம். தண்ணீர் நிரம்பிய பை போன்று வலி யில்லாமல் இருக்கும் மேல்த் தோல்.

லைகோபோடியம்: முழு நபும்சகத்துவம். வயதாகி உடம்பில் சக்தி யில்லாத போதும் சிற்றின்பத்தில் அவா. புதிதாகக் கலியாணம் செய்துகொண்ட கிழவர்களுக்கு இவ்வௌஷதம் இன்றி யமையாதது. தழுவிக்கொண்டிருக்கும் போதே தூங்கிவிடுதல். காமத்தைப்பற்றிய நினைவுகளினுல் ஆண் குறி விரைக்காமை.

பாஸ்பரஸ்: அதிக முட்டி மைதுனத்தினுலும் காமக் கிளர்ச்சியினுலும் நபும்சகத்துவம் அல்லது அதிக உப்பு உட்கொண்டதினுல் ஏற்படும் நபும்சகத்துவம்.

பிக்ரிக் ஆஸிட்: கால்களில் பாரிசவாயு ஏற்படும் நிலைமை அல்லது கொப்புளங்கள், பிளவைகள் ஏற்படும் தன்மை.

ஸெலினியம்: அதிகமான ஆசை. ஆனுல் ஆண் குறி விரைக்காமை. இந்திரியம் தண்ணீர் போன்றும் வழக்கத்துக்கு விரோதமான வாசனையோடு மிருத்தல். நடக்கும் போதோ அல்லது மலப்ரவர்த்தி ஆகும்போதோ இந்திரியம் வெளியாகுதல்.

ஸ்டாபிஸாக்ரியா: இரகசிய கெட்ட வழக்கங்களினல் நபும்சகத்துவம், சரீர இளைப்பு, கண்களைச் சுற்றிலும் கறுப்பு வளையங்கள். வெளுத்த முகம், கோப குணம்.

ஸைலீஷியா: புணர்ச்சிக்குப் பிறகு வலது கையில் பாரிசவாயு அல்லது தலைவலி. ஒரு வாரம் அல்லது பத்து தினங்களுக்கு ஜனனேந்திரியங்களில் பலவீனம்.

ஸேபியா: புணர்ச்சிக்குப் பின் முழங்கால்களில் பலவீனம். தண்ணீர் போன்ற இந்திரியம். புணர்ச்சியில் பிரியம் இல்லாமை. மஞ்சள் அல்லது பால் போன்ற மூத்திரமேகம்.

அகேரிகஸ்—(Agaricus)

பனியினல் எற்படும் உபாதிகள் போன்று முகத்திலும் மூக்கிலும் காதுகளிலும் சருமத்திலும் சிவப்பு நிறம், அரிப்பு. இவை உஷ்ணத்தினல் அதிகமாகும். கண் இமைகள், முகத்தசைகள் ஆகியவை முறுக்கிக் கொள்ளல். குளிர்ச்சியான ஊசிகளால் குத்துவது போன்று நரம்பு சம்பந்தமான தலைவலி, அல்லது கண்களுக்கு அதிக வேலை கொடுத்ததினல் தலையில் ஏற்படும் நெருக்கம். அளவு மிஞ்சிய நீடித்த கண் உழைப்பினல் பார்வை மங்குதல், முக நரம்புகளில் வலி, இருதயத்திலிருந்து இரத்தப் போக்கோ அல்லது கெட்டியான கோழை வெளிவருதலோ. மேற் கூறியவற்றுடன் வரண்டும் இசிப்பும் உள்ள இருமல் அடிக் கடி வருதல். கடுமையான இசிப்புடன் கூடிய இருமலுக்குப் பின் சளி, கோழை இல்லாத தும்மல். மாலை அல்லது இரவுகளில் வியர்த்தல். இரவிலோ அல்லது தூங்க ஆரம் பித்தவுடனே இருமல் வருதல். வெளிவரும் சளி அல்லது

கோழை கொஞ்சமாகவும் கடினமாகவும் கட்டியாகவும் இருக்கும். துரிதமாகச் செல்லும் நாடி, வெளிவரும் பதார்த்தம் சீழ் போன்றிருத்தல். காலையிலும் முதுகுப் புறமாகப் படுத்தாலும் அதிக அசௌகரியம். டீ, காபி, சுருட்டுக் குடித்தல் முதலியவைகளிலேற்படும் படபடப்பு. அமித சிற்றின்ப நுகர்ச்சியினால் முள்ளந்தண்டு பலமிழந்து வலித்தல், பிடிப்புப் போன்றும், எரிச்சலும் அதிக உணர்ச்சியும் கொள்ளல். க்ஷயரோக சரீரம். ட்யூபர்குலின் ஔஷதம் போன்றே வேலை செய்ய வல்லது.

மனம்: சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான வார்த்தைகள் ஞாபகம் வாராமை. தவறான வார்த்தைகள் சொல்லுவார். எழுதும்போதும் தப்பாக எழுதுதல். விஷயங்களைக் கிரகிக்க இயலாமை. அடிக்கடி மாறிக்கொண்டும், கோபமும் மனச் சோர்வுமுள்ள குணம். இரவில் உற்சாகம் எல்லையற்றிருத்தல், தானாகவே பாட்டுகள் இட்டுக் கட்டுவர். ஓயாமல் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தாலும் கேட்ட கேள்விகளுக்கு மௌனம் சாதித்தல். சுயேச்சைக் குணம், மமதை, பிடிவாதம், அலட்சிய புத்தி, காலையில் உற்சாகமற்றிருத்தல், மாலையில் சௌகரியம். அதிக நேரம் படிப்பதினாலும் அதிக மன உழைப்பினாலும் ஏற்படும் உபாதிகள். ஓயாத அலட்டலுடன் கூடிய மயக்கம், படுக்கையைவிட்டு எழுந்திருக்க முயற்சித்தல். சரீரத்தைக் களைக்கச் செய்யும் மயக்கம்.

தலை: விவாதம் செய்யும்போது உண்டாகும் மனக் கிளர்ச்சியினால் கிறுகிறுப்பேற்படல். திறந்த வெளியில் நடக்கும்போது கிறுகிறுப்பு, கள் குடித்தவன்போல் தள்ளாடுதல். குளிர் காற்றில் உணர்ச்சி அதிகம். அதிக சூரிய வெளிச்சத்தினால் க்ஷணநேரம் உண்டாகும் கிறுகிறுப்பு.

சங்காதோஷம் கலந்த காக்கை வலிப்பு, வாயில் நுரை தள்ளல். வலிப்பினால் சரீர முழுவதுமோ அல்லது முள்ளந்தண்டோ பின்புறமாக வில்போன்று வளைதல். முகத் தசைகள் இழுத்துக்கொள்ளல், ஒரு சமயத்தில் ஒரு பக்கத் தசைகளும் மறு சமயத்தில் வேறொரு பக்கத் தசைகளும் முறுக்கிக் கொள்ளல். காலையில் நெற்றியில் மந்தமான தலைவலி மூக்கின் அடிப்பாகம் வரை பரவுதல்; அதனால் மூக்கிலிருந்து இரத்தமோ கெட்டியான சளியோ கொட்டுதல். வியாதியஸ்தர் தலையை அங்குமிங்கும் அசைத்துக்கொண்டும் கண்களை மூடிக்கொண்டும் இருப்பார். வலப்பக்கத்தில் ஆணியால் அழுத்துவது போன்ற உணர்ச்சி மெதுவாக அசைந்து கொடுத்தால் சௌகரியம். கூர்மையான பனிக்கட்டி, குளிர்ச்சியான ஊசி முதலியவை தலையில் பாய்வது போன்ற வலி. முள்ளந்தண்டுக் குறிகளுடன் தலைவலி, நடுங்குதல், சுண்டுதல், தலை தானாகவே அசைந்து கொண்டிருத்தல். முகத் தசைகளில் குதிப்பு.

கண்கள்: காலியாக இருக்கும் இடங்களில் சாமான்கள் இருப்பது போன்ற தோற்றம். புத்தகத்தை ஒரே தூரத்தில் நிலையாக வைத்துப் படிக்க முடியாமை. ஒரு சமயம் புத்தகத்தைக் கண்களின் சமீபத்தில் வைத்தும் வேறொரு சமயம் எட்டவைத்துக் கொண்டும்தான் படிக்க முடியும். கண்களுக்கு முன்பாகப் பூச்சி பறப்பது அல்லது கரும்புள்ளிகள் தோன்றுதல். மங்கலான பார்வை. சிரமப்பட்டுப் படித்தல். கண்களுக்கு முன்பாக சிலந்தி வலை இருப்பது போன்ற உணர்ச்சி. கண்களின் மணிகள் அகன்றோ அல்லது குறுகியோ இருத்தல். கண்விழிகளில் சுண்டுதலும் முறுக்குதலும். உற்றுப் பார்க்க இயலாமை, அப்படி உற்றுப் பார்த்தால் விழிகள் நிலையாக இல்லாமல் அங்குமிங்கும் புரண்டு கொண்டே இருத்தல். தூக்கத்தினால்

சௌகரியம். கண்ணிமைகள் சிறிது திறப்பதும் உடனே மூடிக்கொள்வதுமாக இருத்தல்.

காதுகள் : சிவந்தும் பனியினால் வெடித்ததும்போல இருத்தல். எரிச்சலும் அரிப்பும் அபரிமிதம். செவிடு, அல்லது சிறிய சப்தத்தையும் கிரகிக்கும் சக்தி. காலையில் சௌகரியம், மாலையில் அசௌகரியம்.

மூக்கு : பனியினால் ஏற்படுவது போன்ற சிவப்பு நிறம். அடிக்கடி தும்முதலும் வாசனைகளை முகர்ந்து அறிந்து கொள்ளக்கூடிய உணர்ச்சியும். க்ஷயரோக சரீரங் களில் வரண்டும் பொறுக்குத் தட்டியும் உள்ள நீடித்த ஜல தோஷம். காலையில் மூக்குச் சிந்தினால் இரத்தம் கொட்டு தல். துர்நாற்றமுள்ள பதார்த்தங்கள் வெளியேறுதல். மூக்குலிருந்து நீர் சொட்டுதல்.

முகம் : வெளுத்தும் நீலம்பூத்தும் முறுக்கலுடனும் இருத்தல்.

பற்கள் : மிகவும் நீளமாக இருப்பது போன்ற உணர்ச்சி. குளிர் காற்றில் அதிக அசௌகரியம்.

வாய் : நாக்கு உலர்ந்திருத்தல்.

விருப்பு, வெறுப்பு : அதிகப் பசி இருந்தாலும் காலை யில் பசியின்மை. எரிச்சலுடன் கூடிய தாகம்.

சாப்பிடுதல், குடித்தல் : சாப்பிட்டு ஒரு மணி நேரத் திற்குப் பிறகு சௌகரியம், ஆனால் தூக்கம் வருதல். மாமிசம் சாப்பிட்டவுடன் நெஞ்செறிவு.

குமட்டலும் வாயாலெடுப்பும்: வெற்று ஏப்பம். அழுகின முட்டை அல்லது ஆப்பிள் பழங்களின் வாசனை. குமட்டல் அல்லது வாயாலெடுப்பு.

அடிவயிறு: சூடான அபான வாயு. துர்நாற்ற முள்ளதா யிருத்தல். கடபுடா சப்தம். தொப்பூழில் பிடிப்புப் போன்ற வலிகள்.

மலம்: மிருதுவான மலம், அதிக சிரமத்துடன் வெளியாகுதல். புல் பச்சை நிறமும் பித்த சம்பந்தமும், மெல்லியதாயும் மஞ்சளாயும் குழகுழப்பும் அதிக வாயுவுட னும் கூடிய மலம். இரத்தம் போகும் வயிற்றுக் கடுப்பு. அநேகமாக காலையிலும் சாப்பிட்ட பிறகும் ஏற்படும் வயிற் றுப் போக்கு, கடபுடா சப்தமும் வாயுவும் இருத்தல். மலம் கழித்த பிறகு அபானத்தில் எரிச்சல், வெடித்து விடும் போன்ற உணர்ச்சி.

மூத்திரம்: சுத்தமாகவும் பிற்பகலில் பால் போன்றும் ஏராளமான மூத்திரம் வெளியாகுதல். மூத்திரப்போக்கு குறையும்போது தலைவலி. மூத்திரம் சில்லிப்பாக இருக் கும் உணர்ச்சி. மூத்திரப்பை பலவீனம், அதனால் மலம் கழிக்கும்போது சொட்டு சொட்டாக மூத்திரம் வடிதல். அடிக்கடி மூத்திரம் பிரிதல்.

ஆண்: ஆண்குறி சுருங்கியும் சில்லென்றும் இருத்தல் சிற்றின்ப நுகர்ச்சிக்குப் பிறகு அதிகத் தளர்ச்சி. தொடை களில் வலியும் பலஹீனமும். இரவுகளில் அபரிமிதமான வியர்வையும், சருமம் எரிதலும், அரித்தல். மார்பெலும்பு களில் விண்ணென்றும் அமுக்குவது போன்றும் உணர்ச்சி. பலஹீனமான முள்ளந்தண்டு, இந்திரிய ஸ்கலிதம். பிற ரைத் தழுவப் பிரியம்.

பேண் : மாதவிடாய் நின்றபிறகு கருப்பை நழுவுதல், உபாதி இடம் மாறும் தன்மை. ஸ்தனங்களில் பால் சுரப்பு நின்றுபோய் மூளை உபாதிகள் ஆரம்பித்தல். மெலிந்த தேகமும் பயந்த சுபாவமுள்ள ஸ்திரீகளுக்கு கருப்பை நழுவுதல். முள்ளந்தண்டில் அருவருத்த உணர்ச்சி, பயந்த சுபாவமுள்ள சிறு பெண்களுக்கு சிற்றின்ப நுகர்ச்சியினால் சங்கா தோஷமுள்ள மயக்கம், முதுகிலும் அடிவயிற்றிலும் அமுக்கும் வலியுடன் அபரிமிதமான மாதவிடாய். மாதவிடாய்க் காலத்தில் தலைவலி, பல்வலி, பயங்கரமான வலியுடனும் ஜனனேந்திரியத்தில் அரிப்புடனுமிருக்கும் மாதவிடாய்.

கருப்பம் : ஒவ்வொரு தடவை கருப்பமான பிறகும் கால்களில் பாரிச வாயு போன்ற பலஹீனம், ஸ்தனக் காம்பு களில் சிவப்பு, அரிப்பு, எரிச்சல்.

இருமல் : திடீரென்று வலிப்புடன் அடிக்கடி வரும் இருமல், பிற்பகலில் அதிகமாதல், மாலை வேளைகளில் வியர்வை, வலிப்பு, குறைக்கும் சப்தமுள்ள இருமல். இருமினபிறகு விடாமல் தும்மிக்கொண்டே இருத்தல், சீழையொத்த சளி, கோழை, சிறு சிறு கட்டிகளாக வெளி வருதல். முதுகுப் புறமாகப் படுக்கும் போதும், காலை நேரங்களிலும் உபாதிகள் அதிக அசௌகரியம். தொண்டையில் அடிக்கடி அருவருப்பும், அதனால் இருமல் வருதலும். கடுமையாகவும் திடீரென்றும் ஏற்படும் இருமல். கஷ்ட சுவாசம், ஆழ்ந்த பெருமூச்சு, பொதுவாக இருமல் வரண்டதாக இருக்குமாயினும் சில சமயங்களில் தளர்ந்தும் இருக்கக் கூடும். இரத்தப் பெருக்கை ஏற்படுத்தும் கடுமையான இருமல், வேலையினாலும், சாப்பிடுவதினாலும் தூங்கினபிறகும் அதிகமாதல், சளி கோழை இல்லா

மலேயோ அல்லது கெட்டியான சளி, கோழையுடனே விட்டு விட்டு வரும் இருமல். இருமல் பகலில் அதிகம். இருமு வதைக் கனைத்து அடக்கமுடியும். பிற்பகலில் அதிக அசௌகரியம், சுவாசாசயங்களிலிருந்து இரத்தம் கொட்டுதல்.

சுவாச கோசங்கள் : வலது சுவாசகோசத்தில் குதிக் கும் பிடிப்பு வலிகள், அமுக்க உணர்ச்சி, வியர்வை. கடுமை யாக ஒரே தடவை இருமல். பிறகு தும்மலும் துரிதமாகச் செல்லும் நாடியும்.

இருதயம் : இருதயத்தில் எரிச்சல், தெரிப்பு வலி, இவை இடது தோள் பட்டைக்குத் தாவுதல், மூச்சு இழுக் கும்போது, இருமல், தும்மல் முதலியவைகளினாலும் அதிக மாதல். இருதயத்தில் அமுக்க உணர்ச்சி, சிவந்த முகம், சுரம் முதலியவைகளுடன் காலையிலோ அல்லது மாலையிலோ இருதயம் துடித்தல், திடீரென்று ஏற்படும் சப்தங்களினால் அதிர்ச்சி, இழுப்பு, திடுக்கிடுதல். இடது பக்கமாகவும் முதுகுப் புறமாகவும் படுத்தால் எப்பமும் இருமலும் வருதல்.

கழுத்தும் முதுகும் : விரைப்பான கழுத்து, கழுத்தி லும் தோள்பட்டைகளின் நடுவிலும் முள்ளந்தண்டு முழுவ திலும் வலி. முள்ளந் தண்டினுள்ளே எறும்பு ஊருவது அல் லது குளிர்ந்த காற்று ஓடுவதுபோன்ற உணர்ச்சி. முள்ளந் தண்டில் சிறிதளவு தொட்டாலும் வலி, காலையில் அதிகம். ஆசனவெலும்புகளிலும் முதுகெலும்புப் பாகங்களிலும் வலி. திறந்த வெளியில் நடக்கும்போது பிடிப்பு வலிகள். முள்ளந் தண்டில் கடுமையான எரிச்சலும் வலியும்.

கை, கால்கள் : பனியினால் உறைந்தது போன்று கைகளில் அரிப்பும் எரிச்சலும் அவ்விடங்கள் சூடாகவும்

வீங்கியுமிருத்தல், கைகள் நடுங்குதல், கைகளும் விரல்களும் விகாரமாக அசைந்து கொண்டிருத்தல். கையில் வைத்திருக்கும் சாமான்கள் தானகவே கீழே விழுதல். வாத ரோகத்தினுல் விரல்கள் விரைப்பாகவும் நடுங்கிக் கொண்டும் குதித்துக் கொண்டும் இருத்தல். கைகால்களிலும் இடுப்பிலும் முக்கியமாக இடப்பாகத்தில் கடும் வலி. களைப்பாறும் போது எலும்புகள் உடைந்து போகுமென்று தோன்றுதல். கால்களின் பேரெலும்பு உடைந்து விடுமென்று நினைத்தல். தசைகள் குதித்தல், இவ்விதமான குறிகள் தூங்குவதனுல் சௌகரியமாகுதல். கைகால்கள் சில்லிட்டும் நீலம்பூரித்தும் போகுதல். நெருப்பருகே உட்கார்ந்தால்தான் கை கால்கள் சில்லிடாமல் இருக்கும். கைகால்களில் பக்ஷவாயு.

சருமம்: மனே உழைப்பினுல் தேகத்தில் அரிப்பு, சரீர உழைப்பினுல் அரிப்பு சௌகரியமடைதல். சிவந்த சருமம், மஞ்சட்காமாலை, நெற்றியில் பருக்கள், சருமத்தினூடே பனிக்கட்டியாலாகிய ஊசிகள் குத்துவதுபோன்ற உணர்ச்சி.

போது: குறைந்த இரத்த ஓட்டமுள்ள கிழவர்கள். அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்தல். சருமமும் தசைகளும் தளர்ச்சி யடைதல், நாட்கழித்து நடக்கவும் பேசவும் செய்யும்குழந்தைகள். அறிவுகொஞ்சங்கொஞ்சமாகவிருத்தி அடைதல், ஞாபகமில்லாமை, குளிர் காற்று சகிக்காமை.

முறிவு: கம்போரா, காப்பியா க்ருடா, பல்ஸடில்லா, சாராயம்.

அனுசரிக்கும் ஔஷதங்கள்: பேல்லடோன்னு: பல்ஸடில்லா, ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன், ஸைலீஷியா, மேர்கூறியஸ், கல்கேரியா கார்ப்.

அகோனைட் (Aconite)

இரத்தக் கொதிப்பும் நல்ல ஜீவ பலமும் உள்ளவர்களுக்கு வியாதிகள் திடீரென்றும் கடுமையாகவும் ஆரம்பமாகும் நிலைமையில் அமைதியின்மை, துள்ளும் நாடி, கவலை, சாவுபயம், கடுமையான வியாதி வரப் போவது போன்ற உணர்ச்சி, காரணம் இல்லாத பயம், தான் இறக்கும் நேரத்தைக் குறிப்பிடல். இவ்வௌஷதம் விடாச்சுரங்களையோ (டைபாய்டு) அல்லது முறைச் சுரங்களையோ அடக்க சக்தியற்றதாகும். கடுமையான வியாதிகள் கண்ட முதல் நாளிலும், நீடித்த வியாதிகளில் திடீரென்று அதிக சுரம் காணுவதற்கும் இது கொடுக்கப்படலாம். தவிர வியாதி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஸ்திரமாக நிற்காமல் பொதுவாக சரீரமெங்கணுமே பரவி நிற்கும் சமயங்களிலும் கொடுக்கப் படலாம். வியர்வை கண்டவுடன் இவ்வௌஷதம் நிறுத்தப்பட வேண்டும். இவ்வௌஷதத்தின் வியாதிகள் எப்படித் தோன்றி மறையுமென்பதைக் கீழ்க்கண்ட உதாரணத்தைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். ஒருவன் நன்றாக வெய்யில் அடிக்கும் போது ஊருக்குப் புறப்படுகிறான். திடீரென்று மழை கொட்டுகிறது. மறு நிமிஷமே மழை நின்று போய் எப்பொழுதும் போல் வெய்யில் காய்கிறது. இரவு 9 மணிக்குப் படுக்கைக்குச் செல்லும் போது கூட குழந்தைக்கு ஒன்றும் இருப்பதில்லை. சுமார் 10-30 மணிக்கு கஷ்ட சுவாசம், பொழியும் வியர்வை, தொண்டைக் கர கரப்பு, முதலியவைகளுடன் குழந்தை விழித்துக் கொள்ளலாம். வாத ரோகம் ஆரம்பமான முதல்தினத்தில் மாத்திரம் இது கொடுபடலாம்.

அகோனைட் வியாதிகள் அவயவங்களின் வேலைகளைப் பாதிக்குமே யொழிய அவயவங்களைப் பாதிப்ப தில்லை.

வியாதிகளினால் சரீரத்தில் மாறுதல்கள் ஏற்பட்ட பின்னர் இது உபயோகம் இல்லை. தலை, சுவாசாசயங்கள், இருதயம், மூட்டுகள் முதலியவை இவ் வெளஷதத்தில் பாதிக்கப் படுகின்றன. மூக்கிலிருந்து நீர் வடிதலும் உடம்பில் சூடு, சில்லிப்பு மாறி மாறி வருவதற்கு இது உபயோகிக்கப்படலாம். இருதயத்தில் கடுமையான அழுர்ச்சி, பிடிப்பு வலிகள், கடுமையான நாடித்துடிப்பு, அதிக மனோ விசாரம் எறும்புகள் ஊருவது போன்ற உணர்ச்சி, மயிர்க் கூச்சிடுதல் கால்கள் தூங்குவது போன்ற உணர்ச்சி, இவைகளுடன் வியாதியஸ்தர் தலையை தூக்கிக்கொண்டு மல்லார்ந்து படுத்திருப்பார்.

அகோனைட், பிரயோனியா, பெல்லடொன்னா

அகோனைட்டில்: நிறைந்த துள்ளிக் குதிக்கும் நாடி, உலர்ந்த சருமம், சாவு பயம், அமைதி யின்மை.

பிரயோனியா: மிருதுவான சருமம், மிருதுவாகவும் அமுங்கியும் செல்லும் நாடி. வியாதியஸ்தர் வலியுள்ள பாகத்தைக் கீழே வைத்துப் படுப்பார். அகோனைட் வியாதிகள் வரண்ட சில்லிப்பான காற்றினால் அதிகமாகும். பிரயோனியா வியாதிகள் அதிக வெய்யில், உஷ்ணம் சரீரத்தில் படுதல் இவைகளினால் அதிகமாகும். பெல்லடோன்னாவில் சிவந்த முகம், சூடான தலை, தலைக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் இரு இரத்தக் குழாய்களிலும் துடித்தல், துள்ளுதல், கடுமையான மயக்கம் தூங்குபோது ஆரம்பித்தல். வலிகள் திடீரென்று வருவதும் போவதுமாக இருத்தல். மூடின இடங்களில் வியர்வை.

அகோனைட்: வியாதியஸ்தர் பயத்தைப் பற்றியே பேசுவார். தான் இறக்கப்போகும் நேரத்தைக் குறிப்பிடு

வார். பெல்லடோன்னு வியாதியஸ்தர் மயக்கத்துடன் மனதில் கற்பனை செய்து பேசுவார்.

அகோனைட், ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன், ஆர்ஸனிகம் இம் மூன்றும் அமைதியின்மை ஔஷதங்கள். வியாதியின் ஆரம்பத்தில் அகோனைட், பிறகு ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன், கடைசியில் ஆர்ஸனிகம், ரஸ்டாக்ஸில் மஞ்சள் நிற வயிற்றுப்போக்கு, நாக்கு நுனியில் முக்கோணமான சிவப்பு நிறம், மயக்கம், அமைதியின்மை, தாகம் முதலியவை. ஆர்ஸனிகத்தில் அடிக்கடி வரும் தீராத்தாகம், அதிக அமைதியின்மை, அடிக்கடி படுக்கையை மாற்றுவதில் பிரியம் அல்லது மாறிமாறிப் படுத்தல், கைகளில் உதறுதல், சாவு பயம், மயக்கம், பகல் அல்லது இரவு ஒரு மணிக்கு உபாதி அதிகமாகுதல்.

மனம் : மயிர்க் கூச்செடுத்தல், வெட்டுவது கொட்டுவது போன்ற வலி, அலறல் கிறுகிறுப்பு அல்லது மெய் மறதி. அடிக்கடி மாறும் குணம், ஒரு சமயம் சந்தோஷம், மறு நிமிஷம் வருத்தம். பேய், பிசாசு, சாவு இவைகளைப் பற்றியும் தனக்குப் பைத்தியம் பிடித்து விடுமென்றும் வருங் காலத்தைப் பற்றியும் பயம், தான் இறக்கும் நேரத்தையும் நாளையும் குறிப்பிடுவார். ஜனக் கூட்டத்திலும், கூட்டமுள்ள தெருக்களைக் குறுக்கே தாண்டும்போதும், இருட்டில் போகவும் பயம். கருப்பம் சிதை வேறுபடுமென்று தோன்றும் நிலைமையில் இவ் ஔஷதம் கொடுக்கப்படலாம். வருத்தத்தினுலும் கோபத்தினுலும் ஏற்படும் உபாதிகளுக்கும் உபயோகமாகும். அதி உணர்ச்சி, வெளிச்சம், சப்தம் ஆகியவை பிடிக்காமை. காதுகளில் வண்டுகள் ரீங்காரம் செய்வதுபோன்ற சப்தம். போர்வையை நீக்குவதோ அல்லது பிறர் தன்னைத் தொடுவதோ பிடிக்காமை. பயம்,

கவலை, மனவெழுச்சி முதலியவைகளுடன் மயக்கம், விசாரம் அமைதியின்மை, பரிதாபமாகப் புலப்பல், அல்ப விஷயங் களுக்கும் பிறரைக் கோபித்தல், பொறுமையின்மை.

தலை: குமட்டலுடன் தன் சரீரமும் தன்னைச் சுற்றி இருப்பவைகளும் சுற்றுவது போன்ற மயக்கம். வரண்ட சில்லிப்பான காற்றடித்த பிறகு அதிக இரத்தம் தலையில் கூடுவதினால் மயக்க மேற்படல். சாய்வாக உட்கார்ந்து விட்டு பிறகு எழுந்தால் மூர்ச்சையுண்டாகும். வெளுத்த முகம், தலையில் இரத்தம் அதிகமாகக் கூடுதல், வெய்யிலில் படுப்பதினால் சூரிய இடி, சுரம், விசாரம், பயம், சிவந்த சூடான முகம். தலைக்குச் செல்லும் இரு இரத்தக் குழாய் களும் துடித்தல். பலமாகவும் நிறைந்தும் உள்ள நாடி. எரிச்சல், கண்களுக்கு மேற்புறமாகத் தலைவலி. நெற்றி கனமாகவும் கண்கள் வழியாக மூளைவெளியில் பிதுங்கி விடும் போல் நிறைந்திருத்தல். பயம், சுரம், விசாரம் முதலியவை களுடன் கிழிப்பது போன்ற தலைவலி, சூரியவெளிச்சம், அசைவு, திரவ ஆகாரங்களை உட்கொள்ளல், பேசுதல் முதலியவைகளினால் வியாதி அதிகமாகும். அபரிமிதமான மூத்திரப் பெருக்குடன் தலைவலி.

கண்கள்: கண்கள் குத்திடுதலும் கண் விழிகள் சுருங்குதலும். வெளிச்சத்தைப் பார்க்க வெறுப்பு, வெளிச் சத்தில் கண்கள் கூசுதல். முதலில் கருமணிகள் சுருங்கியும் பிறகு விரிந்தும் போகும். கண்கள் சிவத்தல், அழற்சி யடைதல், கண்களில் இருக்கும் இரத்தக் குழாய்களும் சிவத்தல், எரிச்சல், அழுக்குதல், சுடுதல் போன்ற வலிகள். கண்களிலிருந்து ஒன்றும் வெளி வருவதில்லை. குளிர்ந்த வரண்ட காற்றினால் ஏற்படும் கண் அழற்சி. இதை ஆங்கிலத்தில் கஞ்ஜங்டிவிடிஸ் (Conjunctivitis) என்பார்கள்.

சாதாரணமாகக் கண்களிலிருந்து ஒன்றும் வெளி வருவதில்லையாயினும் சில சமயங்களில் தண்ணீர்போன்ற கண்ணீர் வெளிவருவதும் உண்டு. திடீரென்று அழற்சி தோன்றும். கடுமையான வலி, அதிக இரத்தம் கூடுதல். அழுக்கப்பட்ட வெட்டை நோயினால் ஏற்படும் கண்ணழற்சி, ஏராளமாகத் தண்ணீர் போன்ற வெட்டை வடிதல், அன்னிய வஸ்துக்கள் கண்களில் இருப்பதால் ஏற்படும் அழற்சி, கண் மூடிகள் கடினமாகவும் சிவந்தும் வீங்கியும் சூடாகவும் வரண்டும் எரிச்சலுடனும் இருத்தல். இவ் வரண்ட சூடு குளிர்ந்த தண்ணீரால் சமனப்படல். வெகு சீக்கிரத்தில் கண் இமைகள் வீங்குதல். பலாத்காரமாக அவைகளைத் திறந்தால் த ண் ணீ ர் மளமளவென்று கொட்டுதல். திடீரென்று அழற்சியும், வெட்டுவது, துடிப்பது போன்ற வலிகளும் வருதல். காற்றில் உபாதி அதிகமாகுதல்.

காதுகள் : சப்தத்தினால் உபாதி அ தி க மா த ல். சங்கீதம் என்றாலே சகிக்க முடியாது. கிழிப்பது, கொட்டுவது, எரிச்சல், வெட்டுதல் போன்ற வலிகள்.

மூக்கு : நீர் வடிதல், பலமாகச் சிந்துதல், சுரம், தாகம், அமைதியின்மை, வரண்ட சில்லிப்பு காற்றினால் ஏற்பட்டவை. இரவில் தலைவலியுடன் நீர் வடிதல், காதுகளில் கர்ஜிக்கும் சப்தம், சுரம், தூக்கமின்மை, இரத்தம் கொட்டுதல். விசாரமும் பயமும். வெளிக்காற்றினால் அமுக்கப்பட்ட நீர் வடிதலுக்கு. திறந்த வெளியில் உபாதி குறைதல். பேசினால் அசௌகரியம் அதிகமாகும். மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல்.

முகம் : சிவந்தும், சூடாகவும், இரத்தம் சுரந்தும் வீங்கியும் இருக்கும். ஒரு கன்னம் சிவந்தும் மற்றொரு

கன்னம் வெளுத்தும் இருத்தல். சிவப்பாய் இருக்கும் முகம் எழுந்தவுடன் சவத்தின் வெளுப்பை அடைதல், நரம்பு சம்பந்தமான இடப்பக்கத்துத் தலைவலி, அல்லது முகவலி. நரம்புகளின் பேரில் பனிக்கட்டித் தண்ணீரை ஊற்றுவது போன்ற சில்லிப்பு உணர்ச்சி, முகத்தில் வலியுடன் கீழ்த்தாடையில் வீக்கமும் பிடிப்பு வலிகளும், வாய் ஒரு பக்கமாகக் கோணுதல், முகம் பெரிதாய்க் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி.

பற்கள்: குளிரினாலும் வரண்ட சில்லிப்புக் காற்றினாலும் ஏற்படும் பல் வலி. அமைதியின்மை, பற்களில் சில்லிப்புக் காற்றுப்பட்டால் வலி அதிகமாகும்.

நாக்கு: தண்ணீரைத் தவிர வேறெந்த பதார்த்தமும் வாய்க்குக் கசப்பாக இருத்தல், நாக்கு வீங்கியும் மறத்தும் இருப்பது போன்ற உணர்ச்சி, பேசுவதற்கு சிரமப்படுதல்.

தொண்டை: அழற்சி. சிவப்பாகவும் உலர்ந்தும் கட்டிப்போயும் இருத்தல். காதுக் குழாய்களின் பக்கமாகத் தொண்டையில் எரிச்சலும் குத்துதலும் இருப்பதினால் அடிக்கடி விழுங்க நேரிடுதல், மேல் வாய் மிருதுவாகவும் வீங்கியுமிருக்கும். தவிர நாக்கும் வீங்கி யிருக்கும்.

வாய்: கசப்பு ருசி, காய்ந்திருத்தல்.

விருப்பு, வெறுப்பு: பசியும் தாகமும் அளவுக்கு மீறி இருத்தல். எரிச்சல், குளிர்ந்த தண்ணீர்குடிக்க பிரியம், தணியாத தாகம், திராக்ஷா ரஸம் குடிக்க பிரியம், தண்ணீரைத்தவிர மற்றவை கசப்பு ருசியாயிருத்தல்.

வயிறு: தொட்டால் உபாதி அதிகமாகும். சுமை இருப்பதுபோன்ற உணர்ச்சி, குடல் அழர்ச்சி, கோடையில் வரும் வயிற்றுக் கோளாறுகள், வயிற்றிலிருந்து அன்னக் குழாய்வரை எரிச்சலும் கிழித்தல் வலியும். இத்துடன் விசாரம், அமைதியின்மை, ஜலதோஷசுரம் முதலிய வைகளும் சம்பந்தப்படலாம். திடீரென்று வரும் கடுமை யான கல்லீரல் அழர்ச்சி.

அடி வயிறு: வயிற்று வலி. உடம்பை இரண்டாக வளைத்தல், எரிச்சல், வெட்டுதல், வலது பக்கமாகப் படுத் தாலும் அல்லது அமுக்கினாலும் உபாதி அதிகமாதல், அடி வயிற்றில் அதி உணர்ச்சியும் தொட்டால் சூடாகவும் இருத் தல், விக்கம், வாயாலெடுப்பு, மூத்திரம் விடமுடியாமை. அதி உணர்ச்சி, அழர்ச்சி முதலியவைகளுடனே அல்லது பிசுபிசுவென்று ஒட்டிக்கொள்ளும் வியர்வையுடனே குடல் இறக்கம்.

மலம்: அளவில் குறைந்தும் தளர்ந்தும் கடுப்பு வலியுடனும் மலம் அடிக்கடி வரும். மலம் சிறிதாகவும் பழுப்பு நிறமாகவும் வலியுள்ளதாகவும் கடைசியில் இரத்தம் தோய்ந்தும் இருத்தல். பசளைக் கீரையை நறுக்கினது போன்ற மலம். வயிற்று வலியுடன் குழந்தைகளுக்கு ஏற்படும் பித்த வயிற்றுப் போக்கு. ஈரம் படுவதினால் வயிற்றுப்போக்கு ஆரம்பித்தல், குழகுழப்பான இரத்தம் தோய்ந்த மலம், குடல்களில் கடுமையான வலி, வயிற்றுப் போக்கின் இடை நேரத்தில் கடுப்பு, கோடைகாலத்திலேற் படும் வயிற்றுக் கடுப்பு அல்லது வயிற்றுப் போக்கு. உஷ்ணமான பகல்கள், குளிர்ச்சியான இரவுகள், இவை களினால் அழர்ச்சி யேற்பட்டு வயிற்றுப்போக்கு ஆரம்ப மாகுதல். கோபம் அல்லது பயம் முதலியவைகளினால்

அடிக்கடி வெளிக்குப்போக தூண்டுதல். மலச்சிக்கல், களி மண் போன்ற மலமோ அல்லது குழகுழப்பான மலமோ அல்லது இவ்விரண்டும் மாறிமாறியோ வருதல், அழர்ச்சியுடன் இரத்தம் பெருகும் மூலங்கள், அபானத்தில் கொட்டுவது போன்ற உணர்ச்சி.

மூத்திரம்: குறைந்த அளவிலும் நெருப்பு போன்று சூட்டுடனும் கறுத்த சிவப்பு நிறமாகவும் அழுக்குப் பிடித்தும் இரத்தம் கலந்தும் எரிச்சலுடனும் கூடிய மூத்திரம். மூத்திரம் அதிக வலியுடனும் சிரமத்துடனும் சொட்டு சொட்டாகப் பிரிதல். அடிக்கடி வலியும் மூத்திரம் விடப் பிரியமும். மூத்திர அடக்கம் அல்லது தேக்கத்தினால் மூத்திரப் பையில் இறுக்கம். மூத்திரக் காய்களில் தைக்கும் வலி, யோனித் துவாரத்தில் எரிச்சல், இரத்தம் கலந்த மூத்திரம்.

ஆண்குறி: பீஜக் கொட்டைகள் கடினமாகவும் வீங்கியுமிருத்தல். குழந்தைகள் அடிக்கடி தம்முடைய கைகளை ஜனனேந்திரியங்களுக்கு கொண்டுபோகும். திடீரென்று வரும் சந்தோஷத்தினால் பீஜங்களில் அழர்ச்சி, மூத்திரப்பை அழர்ச்சி. இவ்வழர்ச்சி அமுக்கப்பட்ட வெட்டை நோயால் ஏற்பட்டதாய் இருப்பின் இவ்வௌஷதம் உபயோகமில்லை.

பெண்குறி: கருப்பை அழர்ச்சி. அடிக்கடி மூத்திரம் போக வலியுடன் கூடிய தூண்டுதல். தாப சுரம், மாதவிடாய் திடீரென்று அமுக்கப்பட்டாலோ அல்லது நின்று விட்டாலோ இது உபயோகமாகும். பயந்த கோளாறுகளினால் மாதவிடாய் அமுக்கப்படுதல், தாமதமாக வருதல்,

குறைவாக இருத்தல், வேலைசெய்யாமலும் இரத்தக் கொதிப்புமுள்ள ஸ்திரீகளுக்கு நீடித்த மாதவிடாய். தலைக்கும் மார்புக்கும் இரத்தம் பாய்தல். மூக்கிலிருந்து இரத்தப்பெருக்குடன் ஏராளமான மாதவிடாய். கருப்பையிலிருந்து இரத்தம் கொட்டிதல், அதிக மனக் கிளர்ச்சி, மயக்கம், உட்கார இயலாமை, சாவு பயம், நீடித்த மஞ்சள் நிறமுள்ள வெள்ளைப்பாடு.

கருப்பம் : கருப்பமா யிருக்கும்போதும் பிரசவ வேதனை அல்லது பயந்த கோளாறினால் குறைப் பிரசவம் ஆகியவற்றில் அமைதி யின்மை, சாவு பயம், தான் இறக்கும் நேரத்தைக் குறிப்பிடல், விரைவான சுவாசம். இரத்தக் கொதிப்புள்ள ஸ்திரீகளின் ஜனனேந்திரியங்களில் அழற்சி. சாவு பயத்துடன் பிரகாசமான இரத்தப்பெருக்கு. வலிகள் அதிகமாகவும் நீடித்தும் இருத்தல். பிரசவ சுரத்தில் இரத்தம் கெடாமலிருக்கும் சமயத்தில் கொடுக்கப் படலாம். பிரசவத்திற்குப் பிறகு யோனியிலிருந்து வெளியாகும் நீர் குறைவாயிருத்தல். மார்பு காலியாகவும் தளர்ந்தும் இருத்தல். சூடான உலர்ந்த சருமம், துரிதமாகச் செல்லும் நாடி, கண்கள் பயங்கரமாகவும் பளபளப்பாகவும் குத்திட்டும் இருத்தல். உலர்ந்த நாக்கு. அடிவயிறு காற்றினால் பருத்தல், அதியுணர்ச்சியுடன் இருத்தல். பிரசவத்திற்குப் பிறகு வெளியாகும் நீர் அமுக்கப்பட்டால் அகோனைட் கொடுக்கக்கூடாது. பிறந்த குழந்தைகளின் இரத்தத்தில் பிராணவாயு குறைவாக இருப்பதினால் சுவாசம் தடைப்படல். மூளையில் இரத்தம் ஏறும் குறிகள், நாடி துடிக்காமை, மூச்சின்மை, காமாலை, கண்ணழர்ச்சி, மூத்திரம் தடைப்படுதல். குழந்தையின் தாய்க்கு மூத்திரம் தடைப்பட்டால் காஸ்டிகம் கொடுக்கவேண்டும்.

தொண்டைக்குழி: கம்மல், தவளைகத்துவதுபோன்ற சப்தம். உள் மூச்சு வாங்கும்போது நரம்புகள் இழுத்தல். அழர்ச்சியுடன் சுரமும் மூச்சுத் திணறும்படியான நரம்பு இழுப்பும். தூங்கும்போது தொண்டை காய்ந்துபோய் வியாதியஸ்தர் மூச்சுத் திணரலுடன் எழுந்துவிடுவார். தொண்டையை சிரமப்படுத்திப் பேசுவதினால் ஏற்படும் உபாதிகள். குளிரில் அடிபட்ட காரணத்தினால் அன்று இரவு 10 அல்லது 11 மணிக்கு தொண்டையில் அழர்ச்சி காணுதல்.

சுவாசம்: சூடான சுவாசக் காற்று. சுவாசாசயத்தில் உஷ்ண உணர்ச்சி. சுவாசாசயத்திலும் மூளையிலும் அதிக இரத்தம் சேருவதால் ஆஸ்துமா, சிவந்த முகம், குத்திட்ட கண்கள். மனச் சஞ்சலத்திற்குப் பின் சேர்ந்தாற்போல் பேச முடியாமை. திறந்த வாயுடன், உரத்த, பலமான சப்த முள்ள சுவாசம். கடுமையான சருமச் சிரங்குகள் அமுக்கப் பட்டதினால் வரும் ஆஸ்துமாவும் மார்பைச் சுற்றி கயிறு சுற்றியிருப்பது போன்ற உணர்ச்சியும். மார்பின் தசைகள் விரைப்பாக இருத்தல். எப்பொழுதாவது வாயாலெடுப்பு. குறைவாகவும் கறுப்பாகவும் உள்ள மூத்திரம். வலிப்பு களுக்கு பிறகு கோழை மஞ்சள் நிறமாகவோ அல்லது இரத் தம் கலந்தோ வெளி வருதல். வேதனை, நேராகஉட்கார்ந்து கொண்டால், மூச்சுவிட சிரமம். நூல்போன்ற மெல்லிய நாடி. வாயாலெடுப்பு. வியர்வை. விலா வெலும்பு களின் கீழ் வீக்கம். வேகமாக அசையும்போதோ அல்லது கீழே இறங்கும்போதோ மார்பில் அமுக்க உணர்ச்சி. இருதய வியாதி. சுவாசாசயம், ப்ளூரா, காற்றுச் செல்லும் வழிகளிலுள்ள மியூகஸ் மெம்ரேன்கள் ஆகியவை மிக வேக மாக அழர்ச்சியுறல்.

இருமல்: வரண்ட, வலியுள்ள, சிறிய, அடிக்கடி வரும், தொண்டையில் கூச்சத்துடன் கூடிய இருமல். நரம்புப் பிடிப்பு. கொல்கொல்லென்று இருமுதல். மூச்சுத் திணரல். வரண்டும் கடினமாகவும் இருத்தல். வாயா லெடுப்பும் குமட்டலும். அதிக சுரம், இரத்தம் உமிழ்தல் நிமோனியாவில் துருப்பிடித்த இரும்பின் நிறத்தை யொத்த இரத்தம். கோழை யில்லாமை அல்லது இரத்தம் தோய்ந்த கோழை. சலதோஷத்தினுலும் குளிர்ந்த தண்ணீரைக் குடிப்பதினுலும் பக்கவாட்டமாகப் படுப்பதினுலும் மாலை யிலும் இரவிலும், முக்கியமாக நள்ளிரவிலும், அதிகமாகும் இருமல். முதுகைக் கீழேவைத்துப் படுத்தால் வரண்ட இருமல் சற்று சமனப்படுதல்.

சுவாசாசயங்கள்: இரத்தம் உமிழ்தல். சிறு இரு மல். கூவுதல், கனைத்தல் முதலியவைகளாலும் இரத்தம் வருதல். வாய் நிறைய இரத்தம் அல்லது பூந்தசைகளில் பிரகாசமான சிவப்பு இரத்தம் தோய்ந்திருத்தல். அமைதி யின்மை, சாவு பயம், தான் இறக்கும் நேரத்தைக் குறிப்பிடு தல். சுவாசாசயம் திக் திக்கென்று அடித்துக்கொள்ளல். பிடிப்பு வலிகள். குளிர்காலத்திலேற்படும் சுவாசாசய உபாதிகள். பிடிப்பு வலிகளினுல் வலது பக்கமாகப் படுக்க முடியாது. முதுகைக் கீழே வைத்துத்தான் படுக்க முடி யும். அடிக்கடி வரும் சிறு இருமல். மார்பில் எரி தல், கிழித்தல் போன்ற வலி. மார்பெலும்புக் கூட்டிற்குக் கீழாக அல்லது இடது சுவாசாசயத்தின் மேல்பாகத்தில் அமுக்கம், பாரம், எரிச்சல்.

இருதயம்: அமுக்கம், இருதயத்தைப்பற்றி விசாரப் படுதல், இருதயம் திக் திக்கென்று அடித்தல், கஷ்ட சுவா சம், முகத்தில் பறக்கும் சூடு, மார்பில் கொதிக்கும் தண்ணீர்

கொட்டுவது போன்ற உணர்ச்சி. நிமிர்ந்து உட்கார்ந்தால், நாடி மிகவும் கடினமாகவும் நிறைந்தும் சுரங்களில் பலமாகவும் இருத்தல். அடிக்கடி வரும் சிறு சிறு காச இழுப்பு. காசம் வரும் சமயத்தில் அமைதியின்மை, விசாரம், நரம்பு விரைப்பு முதலியவைகளும் மிகவும் மெதுவாகச் செல்லும் நாடியும் இருத்தல். இருதயத்தின் வேலை ஒழுங்கு படுத்தப் படின் நாடியும் பலமாகுதல். மயக்கம், மயிர்க்கூச்சம், பிடிப்பு வலி, கடுமையான நாடித்துடிப்பு, விசாரம் முதலியவைகளுடன் கூடிய அழர்ச்சிகளுக்கு இவ் வௌஷதம் இன்றியமையாதது. இருதய உபாதியில் வியாதியஸ்தர் தலையைத் தூக்கிக்கொண்டு முதுகைக் கீழே வைத்துப் படுப்பதினுல் சற்று சௌகரியம் ஏற்படும்.

கழுத்து, முதுகு: பிடரிக் கழுத்தில் கிழிக்கும் வலியுடன் விரைப்பான கழுத்து, முதுகு அசைவினுல் இவை அதிகமாகுதல். கழுத்து வலி வலது தோள்பட்டை வரையில் செல்லுதல், தோள்பட்டைகளின் இடையில் அடிப்பட்டதுபோன்ற வலி, தோள்பட்டைகளில் இழுத்தல், கிழித்தல். முதுகில் ஏதோ ஊறுவது போன்ற உணர்ச்சி அல்லது அடிப்பட்டது போன்ற வலி. முதுகு வலியால் ஆழ்ந்து சுவாசிக்க முடியாமை.

கை, கால்கள்: தோள் பட்டைகளிலும், இடது இடுப்பு மூட்டுகளிலும் கிழிக்கும் வலி. கைகளிலும் விரல்களிலும் ஊறும் உணர்ச்சி. இடதுகாலும் இடதுகையும் மறத்துப்போதல். கைகள் கீழே தொங்கியும் பக்ஷவாதங் கொண்டும் இருத்தல். பக்ஷவாயு உள்ள மணிக்கட்டுகள். உஷ்ணமான கைகள், சில்லிப்பான கால்கள். இடுப்பு நரம்புகளில் குளிர்ந்த தண்ணீர் இருப்பதுபோன்ற உணர்ச்சியும்

அத்துடன் நரம்பு வலியும். கால்களிலும் முழங்கால்களிலும் கணுக்கால்களிலும் கட்டைவிரல்களிலும் சுடுதல், கிழித்தல்போன்ற வலி. நடக்கும்போது கட்டைவிரல்களில் குறளி வாங்குதல். கைகளிலும் கால்களிலும் மறத்த உணர்ச்சி. பனிக்கட்டி இருப்பதுபோன்று சில்லிப்பு. எலும்பு மூட்டுகளில் வாதசம்பந்தமான அழர்ச்சி, மாலையிலும் இரவிலும் அதிகமாகுதல். வீங்கின இடங்கள் பளபளப்பாகவும் சிவப்பாகவும் இருத்தல். சிறிதளவு மேலே பட்டாலும் அதி உணர்ச்சி.

தூக்கம்: தூங்கும்போது மூச்சுத் திணரும் உணர்ச்சி. தொண்டைக் குழி காய்ந்து போய் வியாதியஸ்தர் விழித்துக் கொள்வார். நடு இரவிற்குப் பிறகு தூக்கம் இல்லாமை. விசாரமும் ஞாபகப்படுத்த முடியாத கனவுகளும். திடீரென்று விழித்துக்கொள்ளல்.

சுரம்: உக்கிரமான சில்லிப்பு, போர்வையை நீக்கிஞலோ அல்லது சரீரத்தைத் தொட்டாலோ இச்சில்லிப்பு அதிகமாகும். அஸ்திச்சூடு, விசாரம், சிவந்த கன்னங்கள், உடம்பு சில்லென்றும் நெற்றியும் காதுகளும் சூடாகவும் இருத்தல். வெளிச்சத்தில் கண்களுக்கு அதி உணர்ச்சி, கால்களிலிருந்து சில்லிப்பு மார்புக்கு ஏறுதல். தாகத்துடன் வரண்ட சூடு, சிறிய சுவாசம், சீக்கிரமாகவும் நிறைந்தும் கடினமாகவும் செல்லும் நாடி. அமைதியின்மை (குளிரிலும் குளிர்காற்றிலும் அடி பட்டதிஞல் திடீரென்று வரும் சுரங்களைத் தவிர வேறு எவ்வித சுரத்திற்கும் இவ்வௌஷதம் ஏற்றதல்ல).

உணர்ச்சி: எரிச்சல், மறத்தல், சில்லிப்பு.

சருமம் : சிவப்பு, பளபளப்பு, சூடான வீக்கம், கடுமையான வலி, அங்குமிங்கும் வேடிக்கையாகக் குத்துவது போன்ற வலி, சின்னம்மையின் கொப்புளங்கள்.

போது : இரத்தக் கொதிப்பும் அதிக ஜீவ பலமும் உள்ள சரீரங்களுக்கு. விரைப்பான தசைநார்கள். உபாதி புயல் காற்றுபோல் வருதலும் போகுதலும். குழந்தைகளின் தாபசுரங்கள். இவ்வௌஷதத்தின் உபாதிகள் முக்கியமாகத் தலை, மார்பு, எலும்பு மூட்டுகள் முதலிய இடங்களில் காணப்படலாம்.

அசௌகரியம் : மாலையில், இரவில், இடது பக்கமாகப் படுப்பதினால், தூங்கி எழுந்தவுடன், மூடின அறையில், புகையிலைச் சுருட்டுக் குடிப்பதினால்.

சௌகரியம் : திறந்த வெளி, உட்கார்ந்திருந்தால்.

ஔஷத உறவு: பேல்லடோன்னா, சாமோமில்லா, காபியா, நக்ஸ் வாமிகா, பெட்ரோலியம், ஸேபியா, ஸல்ப்ர், வெராட்ரம் ஆல்பம் முதலியவை அகோனைட்டிற்கு முறிவாகும்.

அகோனைட்டிற்குப் பிறகு நன்கு வேலை செய்யும் ஔஷதங்கள் : ஆர்னிகா, ஆர்ஸனிகம், பேல்லடோன்னா, பிரயோனியா, மெ ற் கூ றி ய ஸ், ஸேபியா, ஸல்பர், ஸ்பாஞ்சியா.

அகோனைட் : துர்வினியோகப் படுத்தப்பட்ட பிறகு ஸல்பர், காபியா, நக்ஸ் வாமிகா, முதலியவை கொடுக்கப் படலாம்.

அடோனிஸ் வர்னலிஸ் (Adonis Vernalis)

இவ் ஒளஷதம் தாய்த் திராவகமாகவே உபயோகப் படும். இருதயத்தின் தசைக் கதவுகளில் ஏற்படும் வியாதி களுக்கும் இருதயத்தின் நீர் அதைப்புக்கும் மிக்க பிரயோ சனப்படும். மூத்திரக்காய் உபாதி. இவ் ஒளஷதம் இருதயத்தைப் பலமுள்ளதாகவும் ஒழுங்காகவும் செய்து மூத்திர அளவையும் அதிகமாக்குகிறது. டிஜிடாலிஸ், அவீஸைடீவா, ஸ்பாஞ்சியா, ஸ்ட்ரோபாந்தஸ், முதலிய வைகளை ஒப்பிடவும்.

அப்ரோடேனம் (Abrotanum)

இவ்வொளஷதம் விரை பெருத்தலுக்கும் கட்டிகளுக்கும் குழந்தைகளின் தொப்பூழிலிருந்து இரத்தம் கசிவதற்கும் முள்ளெலும்புப் பாகங்களில் ஏற்படும் அழர்ச்சிகளுக்கும் உபயோகமுள்ளது. குழந்தைகளின் சரீர இளைப்பு. இவ் விளைப்பிற்கு நேட்ரம் மூர், ஐயோடியம், ஸோரினம், ஸானிகுலா முதலிய ஒளஷதங்களும் இருக்கின்றன. இவ் ஒளஷதத்தின் இளைப்பு முதன் முதலில் கால்களில் தோன்றி, அகோரமான பசி, அடிவயிற்றில் வீக்கம் முதலிய குறிகளுடன் மேல் பாகங்களுக்குச் செல்லும். நேட்ரம் மூரின் இளைப்பு கழுத்தில் ஆரம்பிக்கும். ஸோரினம், லைகோபோடியம் ஆகியவற்றில் சரீரத்தின் மேற்பாகத்தில் இளைப்பு காணும். தீராப்பசி, அசைவினால் அனுகூலம். பொதுவான இளைப்பு இவைகளிருப்பின் ஐயோடியம். வியாதி இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே யிருத்தல், அதாவது காதுப் பாகங்களில் இருக்கும் கோளங்களில் ஏற்படும் அழர்ச்சி திடீரென்று விரை அல்லது ஸ்தனங்களைப் பிடித்தல். முழங்கால்களிலிருக்கும் வாதரோகம் இருதயத் திற்குத் தாவுதல், மேற்கண்டவைகளுடன் மிகவும்

மந்தமான நாடியும் இருக்குமானால் கால்மியா. குளிர் காற்றிலும் குளிர்ந்த ஈர நப்புள்ள காலங்களிலும் அதியுணர்ச்சி. ப்ளூரஸி வியாதியில் பிரயோனியாவினால் பயனேற்படா விடில் இது உபயோகப்படலாம். வயிற்றுப் போக்கும் மலபந்தமும் மாறிமாறி வருதல். வயிற்றுப் போக்கு இருக்கும் சமயங்களில் வியாதியஸ்தரின் மற்றக் குறிகளில் சற்று அனுகூலம்.

மனம்: கவலை, சோர்வு, வெடுவெடுப்பானகுணம், முரண்டு பிடிக்கும் சுபாவம்—குழந்தைகளில்.

தலை: குழந்தைகள்—தலையை நிமிர்த்தி வைத்துக் கொள்ள இயலாமை.

மூக்கு: மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல்.

கண்கள்: கண்களைச் சுற்றி நீல நிறமுள்ள வளையங்கள்.

முகம்: சுருக்கம் விழுதல். இளைப்பு, முகம் சில்லென்றிருத்தல்.

விருப்பு, வெறுப்பு: அகோரமான பசி, எவ்வளவு ஆகாரம் உட்கொள்ளினும் இளைத்தல்.

வயிறு: புளிப்புத்தட்டுதல், வயிறு சில்லிப்பான தண்ணீரில் தொங்குவது போன்ற உணர்ச்சி. கடிப்பது போலவும் வெட்டுவது போலவும் எரிச்சலுடனும் இருக்கும் வலி, இரவுகளில் அதிக அசௌகரியம்.

அடி வயிறு: அடி வயிற்றின் பல பாகங்களிலும் கடினமாக உருண்டைகள் தோன்றுதல். வீக்கம். மூல

வியாதியினு லேற்பட்ட வயிற்று வலி, பலவீனம், குடல் அமுங்குவது போன்ற உணர்ச்சி. குழந்தையின் தொப்பூழிலிருந்து இரத்தமும் நீரும் கசிதல்.

மலம் : உட்கொண்ட ஆகாரம் சீரணிக்கப் படாமலேயே கழிக்கப்படல். இளைப்பு. வயிற்றுப் போக்கு திடீரென்று நிறுத்தப்பட்டதால் சம்பவிக்கும் வாதரோகம். வயிற்றுப்போக்கும் மல பந்தமும் மாறி மாறி வருதல். மலம் வருவது போலிருத்தலும் மலத்திற்கு உட்காரும் போது இரத்தம் வெளியாவதும்.

மூத்திரம் : சொற்பம். மூத்திரப்பை நிறைந்திருக்கும் உணர்ச்சி.

ஆண்குறி : குழந்தைகளின் விரை பெருத்தல்.

கருப்பம் : இரத்தம், நீர்க் கசிவு, முதலியவை குழந்தையின் தொப்பூழிலிருந்து கசிதல்.

சுவாசாசயங்கள் : தடைப்பட்ட சுவாசம், குளிர் காற்றில் அதியுணர்ச்சி, உபாதியுள்ள பக்கத்தில் அமுக்குவது போன்ற உணர்ச்சியும் அதனுல் சுவாசம் தடைப்படுதலும். ப்ளூரஸீ.

இருதயம் : மார்பின் குறுக்கே வலி. இருதய பாகத்தில் அதிக வாத ரோகம். மற்றப் பாகங்களிலிருக்கும் வாத ரோகம் இருதயத்தைப் பீடித்தல். பலவீனமான சிறிய நாடி.

முதுகு : சப்பை யெலும்புகளிலும் முதுகிலும் வலி. வயிற்றுவலி. விரைகள் அல்லது சினைப்பையிலும் வலி. மூல வியாதியினுல் உண்டாகும் வயிற்று வலி.

கை, கால்கள்: தோள் பட்டையிலிருந்து முழங்கை வரை வலி. வலது கை விரல்களிலும் பிறகு இடது கை விரல்களிலும் வலி. மறத்த உணர்ச்சி, சில்லிப்பு. விரலெலும்புகளின் மூட்டுகளிலும் நுனிகளிலும் குத்து வலி. அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கி யிருத்தல். கால்கள் இளைத்தல். முழங் கால்கள் இழுத்துக் கொள்ளல். கால்களில் சில்லிப்புத் தட்டுதல், அதனால் கால்களை அசைக்க முடியாமலிருத்தல். வாதரோகம். முதுகும், கை கால்களும் முடங்கிப்போதல். காலையிலும் தூங்கி யெழுந்தவுடனும் அதிக அசௌகரியம்.

நரம்புகள்: பலவீனம். வேலைசெய்யும்போது நடுங்குதல். வலி, வாதரோகம், மறத்த உணர்ச்சி. ஒரு பக்கமான பக்ஷவாயு, முள்ளந்தண்டு பாதிக்கப் படுதல்.

தூக்கம்: அமைதியின்மை.

உணர்ச்சி: வலி, சில்லிப்பு, குத்துதல் கொட்டுதல், அரித்தல், இழுத்தல், கிழித்தல், அமுக்குதல், வெட்டுதல், எரிச்சல், காய்ந்திருத்தல், பச்சைப்புண்ணிருப்பது போன்ற வலி.

தசைகள்: வயிற்று வலி பலாத்காரமாக அமுக்கப் பட்டதால் மணிக்கட்டுகளிலும் முழங்கால்களிலும் வாதரோகம். மூட்டுகள் குத்து வலியுடன் விரைப்பாக இருத்தல். தூங்கியெழுந்தவுடன் உபாதி அதிகமாயிருத்தல். கை கால்கள் இழுத்துக் கொள்ளல். வீக்கமேற்படுவதற்கு முன் ஏற்படும் வாத ரோக அழர்ச்சிகள். கால்களில் இளைப்பு, முக்கியமாகக் குழந்தைகளுக்கு.

சுரம்: வாதரோகத்தில் அதிக சுரம். இன்புளுயன்ஸா சுரத்திற்குப் பிறகு முறைச்சுரமோ அல்லது விடாச் சுரமோ ஏற்படுதல்.

உறவு: ப்ளூரஸியில் அகோனேட், பிரயோனியா முதலியவை கொடுக்கப்பட்ட பின்னர். சரும உபாதிகளில் ஹீபார் ஸல்பர் கொடுக்கப்பட்ட பிறகு. வாத ரோகமும் இருதய உபாதிகளும் மாறி மாறி வருதல். லேடம், கால்மியா. ஆரம். கால்களில் இளைப்பு தோன்றுதல், அப்ரோடேனம், ஆரம். கைகளில் இளைப்பு ஆரம்பித்தல் நேட்ரம் முர், லைகோபோடியம், ஸோரினம். குளிரினால் வெகுசீக்கிரத்தில் அசௌகரியம் ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன்.

சரீர இளைப்பில் ஒப்பிடுதல்

அப்ரோடேனம்: பலவீனமான குழந்தை. தளர்ச்சி. முகம் சுருங்கியும் வெளுத்தும் இருத்தல். கண்களைச் சுற்றிலும் நீல நிற முள்ள வளையங்கள். அகோரமான. பசி. பருத்துப்போன அடி வயிறு. இளைப்பு முதன் முதலில் கால்களில் ஆரம்பித்து மேல்நோக்கிச் செல்லும். முகத்தில் கடைசியில் தான் இளைப்பு ஏற்படும்.

ஆண்டிமோனியம் க்ருடம்: பிடிவாதமும் கோபமு முள்ள தன்மை, தன்னைப் பிறர் தொடுவதற்கோ அல்லது உற்றுப் பார்ப்பதற்கோ அல்லது தன்னைப்பற்றி பிறர் பேசுவதற்கோ பிடிக்காமை. சிறிதளவு கவனித்தாலும் கோபம் வருதல். பால்போன்ற வெண்மையான நாக்கு. வயிற்றுப்போக்கு. குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்தாலும் நல்ல வெய்யில் உடம்பில் படினும் அசௌகரியங்கள் அதிகமாதல்.

அர்ஜண்டம் நைட்ரிகம்: குழகுழப்பான பச்சை நிறமுள்ள மலம். வயிற்று உப்பிசம். இரவுகளில் அதிகமாதல். நரம்புத் தளர்ச்சியினல் ஏற்படும் அமைதியின்மை. சர்க்கரை தின்ன பிரியம். கஞ்சா போதை அதிகமாய்ப் போன நிலைமை.

ஆர்ஸனிகம்: மலத்துடன் ஜீரணமாகாத உணவு வெளியாதல். ஆகாரம் சாப்பிட்டவுடனும் பானங்கள் உட்கொண்ட உடனேயும் வயிற்றுப்போக்கு. நள்ளிரவில் அதிகப்படுதல், அதிவேகமாகப் பரவும் இளைப்பு. பலவீனம். அமைதியின்மை, அலுப்பு, குப்புறப்படுத்தல், தாகம், வயிற்றில் சங்கடம்.

பாரிடா கார்ப்: தடைப்பட்ட வளர்ச்சி. சிறு வயதிலேயே கிழடு தட்டுதல், மனதிலும் உருவத்திலும் குறுகியிருத்தல். கோளங்களில் வீக்கம். கழுத்துப்பாக கோளங்களில் முக்கியமாக வீக்கம். சோம்பல் குணம். வயிறு பானைபோன்றிருத்தல். எச்சமயத்திலும் சாப்பிட்டுக் கொண்டே யிருக்கப் பிரியம். தித்திப்புள்ள பதார்த்தங்களோ அல்லது பழங்களோ பிடிக்காமை. தலை உடலுக்குத் தகுந்ததாக இராமல் மிகவும் பெரியதாக இருத்தல். பாதங்களில் துர்நாற்றம் அடிக்கும் வியர்வை. ஈரலிப்பினல் உபாதிகள். சுபாவமாகவே இருக்கும் வயிற்று வலி. பசி இருந்தாலும் ஆகாரத்தை உட்கொள்ள மறுத்தல்.

கல்கேரியா: புளிப்பு, வெண்மை அல்லது சில சமயங்களில் பச்சை நிறமுள்ள தண்ணீர் போன்ற மலம். பால் ஒத்துக்கொள்வதில்லை. தாறுமாருன வளர்ச்சி. எலும்பு நன்கு வளர்வதில்லை. தலை, முகம், உச்சந்தலை இவைகளில் வியர்வை. கால்களில்சில்லிப்பும், கசகசத்தலும்.

அடிவயிறு பிதுங்கினாற் போன்று பருத்துவிடுதல். அகோரமான பசி, உச்சந்தலைச் சூடு. குழந்தைகளின் உச்சிக்குழி திறந்திருத்தல், முட்டை சாப்பிடுவதில் அதிக அவா.

கல்கேரியா பாஸ்பாரிகம்: குழந்தை மெலிந்தும் இளைத்துமிருத்தல். அடிவயிற்றில் தளர்ச்சி. பெரிய தலை, உச்சிக்குழி திறந்திருத்தல், முகம் வெளுத்திருத்தல் அல்லது மஞ்சளாயிருத்தல். காதுகளும் மூக்கும் சில்லிடுதல். தாமதமாகப் பற்கள் முளைத்தல். தாமதமாக நடக்கவருதல். பலவீனமான முள்ளந்தண்டு, சரீரத்தைத் தாங்க சக்தியற்றதாக இருத்தல். கழுத்து மெலிந்தும் பலவீனமாகவுமிருத்தல். அதனால் தலையைத் தாங்க முடியாமை. பாலை வாயாலெடுத்தல். ஆகாரத்திற்குப் பிறகு வயிற்றுவலி. பச்சை நிறமுள்ள குழகுழப்பான மலம், அபான வாயுவுடன் வெளியாதல். அடிவயிறு சுருங்கிவிடுதல்.

கல்கேரியா ஐயோடேட்டா: கோளங்கள் பருத்துவிடுதல், உள்நாக்கு வளர்ச்சி, கண்டமாலை அதாவது கழுத்து கோளங்களில் வீக்கம்.

சைனா: தூக்க மயக்கம், தளர்ச்சி. முகம் வெளுத்து சில்லிடுதல். கண்கள் குழி விழுந்தும் அதிக நீர் அவைகளிலிருந்து வடிவதால் கண்களைச் சுற்றிலும் கறுப்பு வளையங்களும் இருத்தல். அஜீரணம், பசி. ஆகாரம் ஜீரணமாகாமல் மலமாகக் கழிக்கப்படல். இரவில் வியர்வை கொட்டுதல்.

ஐயோடியம்: அகோரப் பசி. எவ்வளவு ஆகாரம் உட்கொள்ளினும் இளைத்துக்கொண்டே இருத்தல். முகம்

சுருங்கியும் மஞ்சளாயுமிருத்தல். ஆகாரம் உட்கொள்ளும் போது சிறிது அனுகூலம்.

மேக்னீஷியா கார்ப்: சிறுத்த உடலும் நோயுமுள்ள குழந்தைகள். பால் ஒத்துக்கொள்ளாமை. அடிக்கடி வயிற்றுவலி. அசைவினால் சற்று அனுகூலம். மலம் புளிப்பாயிருத்தல். உடம்பில் புளிப்பு மணம். நசுக்கப் பட்ட கீரை போன்று பச்சையான மலம். அடிவயிறு வீங்குதல். கால்களை உயரத் தூக்கி வைத்துக்கொண்டு தூங்குதல். இவ்வௌஷதத்தில் குணம் காணாவிடில் ரூமக்ஸை உபயோகிக்கலாம்.

நேட்ரம் முர்: கழுத்தில் இளைப்பு ஆரம்பித்தல். பசி, தாகம், பலபந்தம், கடினமான மலம், அபானத்தி லிருந்து இரத்தப் பெருக்கு. அதிக உப்பிட்ட பதார்த்தங் களில் பிரியம்.

பாஸ்பரஸ்: மார்பில் நெருக்கம்; துர்பலமான இருதயம். கஷ்ட சுவாசம். அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படும் நிலைமை. மலம் அபரிமிதமாக இருத்தல், அதனால் சோர்வு. சோர்வையுண்டாக்கும் வியர்வை. நரம்புத் தளர்ச்சி, உச்சந்தலையில் சூடு, க்ஷயரோகம் ஏற்படுவதற்கு முன்னர் இருக்கும் சரீர நிலைமைகள்.

பாஸ்பாரிக் ஆஸிட்: வலியில்லாத வயிற்றுப் போக்கு. வெறுப்பு குணம்.

ரூமக்ஸ் க்ரிஸ்பஸ்: மேக்னீஷியா கார்ப் கொடுக்கப் பட்டு பலனில்லாமல் போன பிறகு அதேமாதிரியான புளிப்பு மலம், சரீரத்திலும் புளித்த வாசனை. தூங்கும்போது

முகத்தசைகள் முறுக்கிக் கொள்ளல். இரவு முழுவதும் கதறுதல், அங்குமிங்கும் புரளுதல்.

ஸரஸபரில்லா: கழுத்தில் இளைப்பு, சருமம் மடிப்பு மடிப்பாக இருத்தல். கிழடுதட்டிய முகம், பெருவயிறு. சேறுபோன்ற மலம். காய்ந்த தொளதொளத்த சருமம், வமிச பரம்பரையாக இருந்து வரும் கிரந்திப் புண்களினால் எற்படும் இளைப்பு. காய்ந்தும் செப்பு நிறமாகவும் இருக்கும் வெடிப்புகள், கரப்பான், சொறி முதலியவை. மூத்திரம் விடும்போது கதறுதல், மூத்திரம் வெண்மணல்.

ஸேபியா: குழந்தை கிழ மனிதன் போல் கூனிக் குறுகி யிருத்தல். முகம், கைகள், விரல்கள், ஆகியவை சுருங்கியிருத்தல். மலபந்தம். மலம் கருப்பு பந்துகள் போலவும் ஆட்டுப் புழுக்கை போலவும் இருத்தல். அகோர மான தீராப்பசி.

ஸல்பர்: வயதானவர்போல் தோன்றும் குழந்தை, சூடான தலை, சில்லிப்பான கால்கள், கடினமான வீக்கமுள்ள வயிறு. அழுக்கடைந்தும் சுருங்கியுமுள்ள சருமம். சரு மம் மடிப்பு மடிப்பாக இருத்தல். விரல்கள் ஊசி போன்று இளைத்தல். மலம் நாற்றமெடுத்தல். அபானத்தில் தோலுரிதல்.. காலை 11 மணிக்குப் பசி. சருமத்தில் சொறி சிரங்குகள்.

ஸோரினம்: இது சல்பரை ஒத்தது. சல்பரினால் குணம் காணவிடில் உபயோகம். குளித்தாலும் நீங்காத சரும நாற்றம். அகோர பசி. எண்ணை வடியும் சருமம், துர்நாற்றமுள்ள வயிற்றுப்போக்கும் வியர்வையும்.

தூஜா: களகளத்த சப்தத்துடன பீச்சங்குழாயி லிருந்து பீச்சுவதுபோன்று வெளியாகும் தண்ணீர்போன்ற மலம். காலை ஆகாரத்திற்குப் பிறகு அதிக அசௌகரியம். மலத்துடன் அபான வாயு பரிதல், சட்டிபோன்ற வயிறு, தூங்கி யெழுந்தவுடன் அலறுதல். அம்மை குத்துவதால் ஏற்படும் உபாதிகளுக்கு.

வீரியம்: 3 முதல் 30 வரை உபயோகிக்கலாம்.

அபிஸ் கனடென்ஸிஸ் (Abies Canadensis)

கோபமுள்ள வெடு வெடுப்பான குணம், பற்களைக் கடித்துக்கொண்டே யிருத்தல். பசி, மேல் வயிற்றில் தளர்ந்துபோன உணர்ச்சி. மாமிசம் தின்னப் பிரியம். ஊறுகாய்கள், கடினமான சாமான்கள் முதலியவைகளைத் தின்னவும் பிரியம். அடி வயிற்றில் குடையும் சப்தம் கருப் பையின் அகன்ற பாகத்தில் இரணவலி. அமுக்கினால் சமனப் படுதல். கருப்பை இடம் பெயருதல். அதிகத் தளர்ச்சி. கைகளும் சருமமும் சில்லிடுதல், கசகச வென்றிருத்தல், குளிர்ந்த நடுக்கம், அசீரண சம்பந்தப்பட்ட சுரம்.

அபிஸ் நைக்ரா (Abies Nigra)

மன உற்சாகமற்ற தன்மை, மலச்சிக்கல் இருத்தல், ஈறுகளைக் கடித்தால் வயிற்றில் சீரணமாகாத கடினமான வேகவைத்த முட்டை இருப்பதுபோன்ற உணர்ச்சி. அசீர ணத்தினாலேற்படும் கோளாறுகள். புகையிலை அல்லது

தேயிலைப் பானம் இவைகளினால் ஏற்படும் அசீரண உபாதிகளுக்கு. சரீரம் தளர்ச்சியுற்றிருக்கும்போது அடி வயிற்றின் இடது பக்கத்தில் அல்லது வயிற்றின் மேல்பாகத்தில் ஏதோ உருண்டையா யிருப்பதுபோன்றோ அல்லது நன்கு வெந்துபோன முட்டை இருப்பதுபோன்றோ உணர்ச்சி. காலையில் பசி மறைதல், நடுப்பகலிலும் இரவிலும் பசி திரும்பி வருதல், வயிறு நிறைய உண்ட பிறகு வயிற்றில் வலி.

முட்டைக் குறியை ஒப்பிடுதல்

கல்கேரியா : உப்பிட்ட பதார்த்தங்களும் முட்டையும் தின்னப் பிரியம்.

பேர்ரம் : முட்டை சாப்பிட்ட பிறகு வாயாலெடுத்தல்.

ஆர்னிகா : ஏப்பம் கசப்பாகவும் அழுகின முட்டை போன்றும் இருத்தல்.

சைனா : முட்டை, மீன் சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு ஏற்படுதல்.

ஆண்டிமோனியம் டார்டாரிகம் : இரவில் அழுகின முட்டை போன்று வெற்று ஏப்பம்.

சாமோமில்லா, அகேரிகஸ், ஆர்னிகா, போடோபில்லம், ஸோரினம், ஸேபியா, ஆண்டிமோனியம் டார்டாரிகம் அழுகின முட்டை அல்லது ஆப்பிள் பழம்போன்று ஏப்பம் விடுதல்.

அபிஸ் மெல்லிபிகா (Apis Mellifica)

பிரக்ஞையின்மை. தன்னை அறியாமலேயே வீல் என்று அலறுதல். தலையை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் உருட்டிக்கொண்டே இருத்தல். மூளைச் சுரம், டைபாய்டு என்னும் விஷ சுரங்களில் வியாதியஸ்தர் சுய ஞாபகமில்லாமலேயே வீல் என்று அலறுவார். உடம்பில் வீக்கம், வலிகள் எரிச்சலுடனும் கொட்டுவது போன்றிருக்கும். குளிர்ந்த ஒற்றிடங்களினால் சௌகரியம். கண்களின் கீழ் இமைகள் வீங்கும். முகத்தில் அக்கி, டான்ஸில்கள் வீங்கியும் இரணமாகவும் இருக்கும். டிப்தரியா என்று அழைக்கப்படும் தொண்டையில் சதை வளரும் வியாதியில் அடி நாக்கு தண்ணீர்ப்பை போன்று பருத்து தொண்டையை மூடிவிடுவது போன்றிருத்தல். விழுங்கினால் கொட்டும் வலிகள். சில சமயங்களில் கொஞ்சங்கூட வலியில்லாமல் தொண்டையில் வீக்கமேற்படும். இது மிகவும் அபாயகரமானதாகும். அடிவயிற்றில் அடிபட்டது போன்று வலித்தல். சினைப்பை வலி வலப்பக்கத்தில் ஆரம்பமாகி, கீழாகத் தொடையை நோக்கிப் பரவும். வலப்பக்க சினைப் பையில் உண்டாகும் புற்றுகள். வயிற்றுப் போக்கு அல்லது வயிற்றுக் கடுப்பு ஏற்படும்போது ஆசனவாய் மூடாமல் திறந்தே யிருத்தல். அநேக நாட்களுக்கு மலம் வராமை. குடல்களின் பாரிசவாயு, கொட்டும் வலியுடன் கூடிய மார்பின் நீர் அதைப்பு, படுத்தால் அதிக அசௌகரியப் படும். துரிதமாகவும் பலமாகவும் முழுதாகவும் செல்லும் நாடி. அதிக வருத்தம், அழுதல், மனக் கலக்கம், கைகளும் கால்களும் வீங்குதல், நீர் அதைப்பு, இரவு மூன்று மணிக்கு மார்பு, அல்லது முழங்கால், அடி வயிறு முதலியவற்றில் சில்லிப்புடன் சுரம் வருதல். சுரத்தின் போது தாகம் இல்லாமை, உஷ்ணமான ஒற்றிடங்களினால்

சில்லிப்பு அதிகமாகுதல், சருமத்தில் சில இடங்கள் சூடாகவும் சில இடங்கள் சில்லிப்பாகவும் இருக்கும். சருமம் சில சமயம் வரண்டும் சில சமயம் வியர்வையுடனும் இருக்கும். உஷ்ணத்தைப் பொறுக்க முடியாமை, உடம்பு முழுவதும் வீங்குதல், இவ் வௌஷதத்தின் விசேஷ அம்சம் யாதெனில் வலிகள் கொட்டுவது போலிருத்தல்.

மனம் : பிரக்ஞை இழத்தல். தலையை அங்குமிங்கும் உருட்டுதல், மயக்கமாகப் படுத்திருக்கும்போது உடம்பில் ஒரு பக்கம் முறுக்கிக்கொண்டு மற்றொரு பாகம் அசைவே இல்லாமலும் இருக்கும். தலை பின்புறமாக இழுக்கப்படுதல் அல்லது தலையணைக்குள் தலையைப் புகுத்தல். தலையில் வியர்வை, சிவந்த கண்கள், பாதி மூடினபடி இருத்தல், முகம் சிவந்திருத்தல், பற்களை நறநறவென்று அரைத்தல், நீலமாகவும் சில்லிப்பாகவும் உள்ள கைகள், போர்வையைத் தூக்கியெறிதல், மூத்திரம் குறைதல், பால் போன்றிருத்தல், உஷ்ணத்தினால் அதிக அசௌகரியம், மயக்கத்தின் போது அடிக்கடி வீல் என்று அலறுதல், கைகளை தலைக்குக் கொண்டு போகுதல், ஞாபகம் குறைதல், கவனக் குறைவு, அலட்சிய புத்தி, மயக்கத்தில் பிதற்றல் அதிகமாகப் பேசும் குணம், திடீரென்று வீல் என்று அலறுதல், அதிக வருத்தம், அழாமல் இருக்க முடியாத தன்மை, சந்தோஷமாயிருப்பது போன்ற தோற்றம், கோபம், நரம்பு பலவீனம், சந்தேகப் படுதல், ஸ்திரீகளில் பொறுமைக் குணம், மூளைத் தொந்திரவுகளில் உஷ்ணமான தண்ணீரில் ஸ்னானம் செய்தால் வலிப்புகள் ஏற்படுதல், குளிர்ந்த ஒற்றிடங்களினால் சிறிது சௌகரியம்.

தலை : உடம்பில் சிலிர்ப்புடன் கண்களுக்கு மேலாகவும் நெற்றி, பொட்டு, பின்தலை முதலியவைகளிலும் விண்விண்

ணென்று இருக்கும் தலைவலி, இத்துடன் கிறுகிறுப்பு, குமட்டல், வாயாலெடுப்பு ஆகியவை இருப்பதால் வியாதியஸ்தர் தலையையும் கண்களையும் கீழாகவே வைத்திருப்பார். எரிச்சல், துடித்தல், அசைந்தாலும் குனிந்தாலும் அதிகமாகும். கைகளினுல் அமுக்கப்படும்போது சௌகரியம். கழுத்தின் பின் பக்கத்திலிருந்து இடக்காது வழியாக தலையின் இடது பக்கம்வரை கடுமையாக இழுத்தல். நரம்பு சம்பந்தமான வலி, இடது பொட்டுகளில் கொட்டும் வலி, தலையில் உக்கிரமான நீர் அதைப்பு, பின் தலையில் வலியும் அடிக்கடி வீல் என்று அலறுதலும், தலையில் வியர்வை, தலையைத் தலையணையில் புகுத்தல், உச்சந் தலையில் குழி விழுதல்.

கண்கள்: புரளுதல், ஒன்றரைக் கண் பார்வை. பாயும் வலி, நெருப்பைப் பார்த்தால் அதிகமாகும். எரிச்சலுடன் கொட்டும் வலி, தண்ணீரினுல் கழுவினுலும் குளிர்ச்சியான ஒற்றிடங்களினுலும் சமனப்படும். கண்களிலிருக்கும் மியூகஸ் மெம்பிரேன்கள் உட்செல்லுதல் கருப்பு இரத்தக்குழாய்கள் நிறம்பியிருத்தல் கண்களின் மியூகஸ் மெம்ரேன்கள் அழர்ச்சியுற்று வீங்குதல், இரத்தக் குழாய்கள் பெருத்தல், கண்களின் கரு விழிகள் கெட்டியாகவும், கருப்பாகவும் புகைபோன்று வெளுத்தோ அல்லது சிற்சில இடங்களில் மாத்திரம் புகைபோன்ற வெண்மையான பொட்டுகளுடனே இருக்கும் வாத சம்பந்தமான கண் வியாதி, கரு விழிகளில் இரணம். சூடுள்ள, பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் தன்மையுள்ள, ஏராளமான கண்ணீர், வெளிச்சத்தில் கூசுதல், கண் இமைகள் கறுத்து சிவப்பாகவும் வீங்கியும் மாமிசத் துண்டு போலவும் இருத்தல், கண்களின் கீழிமைகளில் நீர் சுரந்திருத்தல், விரைப்பாக இருத்தல்.

காதுகள் : நடுக்காதில் அழர்ச்சி, காதுகள் சிவப்பாகவும் வீங்கியும் இருக்கும்.

மூக்கு : வீக்கம், சிவப்பு, நீர் சுரப்பு, மூக்கில் கொப்புளங்கள், குளிர்ச்சியினல் சௌ க ரி ய ம், கெட்டியான வெண்மை நிற முள்ள பதார்த்தம் வெளியாகுதல்.

முகம் : வெளுப்பு, குழி விழுந்திருத்தல், கரும் சிவப்பு, வீக்கம், சிவப்பாகவும் சூடாகவும் இருத்தல், நீர் வீக்கம். மெழுகு போன்றும் வெளுத்தும் இருத்தல். வலப்பக்கத்திலிருந்து இடப் பக்கத்திற்குச் செல்லும் அக்கி, தாடை எலும்பில் கொட்டும் வலி, நீலம் பூரித்த உதடுகள், நீர்ச் சுரப்பு, கீழ் உதடு வெடித்தல்.

பற்கள் : பல் ஈறுகளில் வலி, இடது தாடை யெலும் பின் மேற் பாகத்தில் குதிக்கும் வலி.

நாக்கு : நுனியில் சிவப்பு, வீக்கம் பார்வைக்குக் காய்ந்தது போலிருத்தல், பளபளப்பு, வெடிப்பு, இரணம், அல்லது சிறு கொப்புளங்கள், வெண்மையான மாசு படிதல்.

வாய் : வரட்சி, துர்நாற்றமுள்ள சுவாசம்.

தொண்டை : டான்ஸில்கள் வீங்கியும் அதி சிவப்பாகவும் விழுங்கும்போது கொட்டும் வலியுடனும் இருக்கும். தொண்டையில் சதை வளரும் நோய் (ரோஹிணி), தண்ணீர்ப்பை போன்று உள் நாக்கு தொங்குதல், டான்ஸில்களிலும் மேல் வாயிலும் ஆழமான வேக்காடு, தொண்டைக் குழியில் நீர்ச் சுரப்பு, குளிர்ந்த பானங்களைச் சாப்பிட்டால் தொண்டை சௌகரியமாகுதல். தொண்டையில் பிசுக்கென்று இருக்கும் கோழை, தொண்டையின் உட்புறமும்

வெளிப்புறமும் வீங்குதல், தொண்டைக் கரகரப்பு, சுவாசம் விடவும் விழுங்குவதற்கு சிரமம், கெட்டியான ஆகாரங்களை உண்ண இயலாமை. அதிக வீக்கத்துடனும் அழர்ச்சியுடனு மிருக்கும் தொண்டைச் சதை வளர்ச்சி, தொண்டையின் பின் பக்கத்தில் சிறு கொப்புளங்கள், குளிர்ச்சியினுல் சிறிது சௌகரியம்.

வயிறு: பசியின்மை, தீராத தாகம், அடிக்கடியும் ஆனுல் கொஞ்சங் கொஞ்சமாகவும் குளிர்ந்த தண்ணீர் குடித்தல், மார்பின் நீர் அதைப்பு, வயிற்றுப்போக்கு, தொண்டைச் சதை வளருதல், முதலிய சில வியாதிகளில் தாகம். ஆனுல் மூளைவியாதிகள், கருப்பம் முதலியவைகளில் தாகமின்மை. சுரம் வேகமாக அடிக்கும்போது தாகமின்மை, வரண்ட வாய், குழந்தை பகலில் தாய்ப்பால் குடித்தல், இரவில் மறுத்தல், குமட்டல், வாயாலெடுப்பு, பித்தமோ அல்லது இரத்தமோ, கோழையோ வாயாலெடுக்கப் படுதல். வயிற்றின் குழியில் வலி, எரிச்சல், புளித்தல், வலி அமுக்கினுல் அதிகமாகும்.

அடிவயிறு: விலா வெலும்புகளுக்குக் கீழே வலியும் இறுக்கமும். வலி மேல்நோக்கிச் செல்லுதல், அடிவயிறு பருத்தல், குடையும் சப்தம், தும்மும்போதோ அல்லது அமுக்கினுலோ வலி, இறுக்கம், இருமுவதற்குப் பயம், (அடிவயிறு வெடித்து விடுமோ வென்று:) அடிபட்ட உணர்ச்சி. வயிற்றுக் கடுப்பு, அடிவயிற்றின் நீர்ச்சுரப்பு, குடலில் எரிச்சலும் கொட்டுதலும், குடலைச்சுற்றி இருக்கும் பூந்தசைகளின் அழற்சி. மூத்திரம் கறுப்பாகவும் குறைந்தும் இருத்தல். அடிவயிற்றில் இருக்கும் அவயவங்களின் அழற்சி, வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கத்திற்குச் செல்லுதல்.

மலம்: மலப்பையில் துடிப்பு, அபானம் நிறைந்திருப்பதுபோன்ற உணர்ச்சி. கடுப்பு, தண்ணீர் போலவும் மஞ்சளாகவும் கசக்குவதுபோன்றும் இருக்கும் வயிற்றுப் போக்கு. துர்நாற்றம், அபானம் திறந்திருத்தல், அநேக நாட்கள் மலம்போகாமை, மலத்துடன் இரத்தமோ கோழையோ அல்லது சீரணமாகாத ஆகாரமோ வெளியாகும். எரியும் வலியுடன் குடலிலிருந்து இரத்தப் பெருக்கெடுத்தல், அபானத்தில் தோலுரிதல், அடிக்கடி கடுத்தல், மலப்பை வெளிவருதல்.

மூத்திரம்: குறைவு, சிவப்பு, இரத்தம் கலந்திருத்தல். வெகுநேரங்கழித்து குழந்தை மூத்திரம் பெய்தல், வீல் என்று அலறுதல், கையைத் தலைக்குக் கொண்டு செல்லும். தூக்கத்தில் கதறல், போர்வையைத் தூர எறிதல், மூத்திரப் பையின் கழுத்தில் அருவருப்பு, மூத்திரம் அடக்கப்படுதல், மூத்திரம்விட சிரமம்.

ஆண்: பீஜங்களின் நீர்ச்சுரப்பு, தொட்டால் வலித்தல், பீஜத்தின் விரையில் வீக்கம், அரிப்பு, சிவத்தல்.

பெண்: புணர்ச்சியில் பிரியம் அதிகமாதல். சினைப்பையில் கடுமையான வெட்டும் வலி, தொடை வரையிலும் பரவுதல். வலப்பக்கத்தில் அதிகம், அல்லது மேல்நோக்கி மார்புக்குச் செல்லுதல். சிறாப்பையில் புற்று, சினைப்பையின் (வலது) அல்லது கருப்பையின் நீர்ச்சுரப்பு, சினைப்பையிலும் கருப்பையிலும் (வலது) எரிச்சல் அல்லது கொட்டுதல், அழற்சியுள்ள சினைப்பையுடன் மாதவிடாய் தடைப்படுதல். மாதவிடாயின்போதும் ஏற்படுவதற்கு முன்பும் வலிகள், குளிர்ச்சியினால் சௌகர்யம். யோனி உதடுகளின் நீர்ச்சுரப்பு, பச்சை நிறமும் காரமும் கொண்ட ஏராளமாய் இருக்கும் வெள்ளைப்பாடு, வலது சினைப்பை பெருத்தல்.

கருப்பம்: மூன்றும் மாதத்தில் கருச்சிதைவு ஏற்படுதல், ஸ்தனங்களின் வெளிப்பாகத்தில் உண்டாகும் புற்றுகளுக்கும் உட்புற்றுகளுக்கும், கொட்டும் வலியும், எரிச்சலும் இருப்பின் கொடுக்கப்படலாம். பிறந்த குழந்தைகளின் தொப்பூழில் இரணம்.

இருமல்: கடுமையான இருமல், படுத்திருந்தாலும் தூங்கினாலும் அதிகமாகுதல், கோழை அடிக்கடி வருவதில்லை. தித்திப்பாகவோ அல்லது ருசியில்லாமலோ இருக்கும்.

சுவாசாசயங்கள்: மார்பின் நீர்ச்சுரப்பு, கொட்டும் வலி, கீழே படுத்தால் அதிகமாகுதல் ப்ளூராஸி வியாதிக்குப்பிறகு இடப்பக்கத்தில் பிடிப்பு வலிகள். மார்பின் முன் பக்கம் முழுவதுமே எரிச்சல், கொட்டும் வலி, அடிபட்ட உணர்ச்சி.

இருதயம்: பலவீனம், நாடி அடிப்பது தெரியாமலிருத்தல், ஆழ்ந்து மூச்சு விடுதல், கடினமாகவும், சீக்கிரமாகவும் சிறிதாகவும் செல்லும் நாடி.

கழுத்தும், முதுகும்: விறைப்பான பின் கழுத்து. வலப்பக்கத்து கழுத்தில் வாதம். முள்ளந்தண்டின் கடைசி எலும்பில் எரிச்சல், அழுத்தும் உணர்ச்சி, உட்காரும் போதும் மாலையிலும் அதிகம்.

கை, கால்கள்: கைகளிலிருக்கும் சாமான்கள் தன்னை அறியாமலேயே கீழே விழுந்துவிடும். தோள்பட்டையில் பலமில்லாமை, வலது தோளிலும் இடது தோளிலும் வாதம். கைகளில் நீர்ச்சுரப்பு, எரிச்சல், கொட்டுதல், துடித்தல் முதலியவைகளுடன் கூடிய நகச்சுற்றி. இடது

முழங்கால் வலி, கால்களும் பாதங்களும் மெழுகுபோலவும் வெளுத்தும் வீங்கியும் நீர்ச்சுரப்புடனும் இருத்தல். கைகளும் கால்களும் நடுங்குதல், கால்கள் மறத்தும் சில்லிப்பாகவும் இருத்தல், பாதங்களும் உள்ளங்கால்களும் விரைப்பாகவும் வீங்கியும் இருத்தல்.

தூக்கம்: தூங்குவதற்குப் பிரியம், ஆனால் நரம்பு சம்பந்தமான அமைதியின்மையினால் தூங்க முடியாமை, விடாமல் ஆழ்ந்து தூங்குதல், தூங்கும்பொழுது அலறுதல். பறப்பது போலவும் பிரயாணம் செய்வதுபோலவும் ஜனங்கள் கும்பலாகக் கூடியிருப்பது போன்றும் கனவுகள் காணுதல்.

சுரம்: மாலை மூன்று மணிக்கு மார்பில் சில்லிப்பு. அதிகக் களைப்பு, சில்லிப்பு முதுகிற்கு ஓடுதல், அசைந்தாலும் சூட்டினாலும் அதிகமாகும். குளிர்ச்சியாய் இருப்பது போன்ற உணர்ச்சி, சருமம் முழுவதும் சூடான எரிச்சல், அல்லது சில்லிப்பும் சூடும் கலந்து வருதல். சூடாக இருக்கும்போது கடுமையான தலைவலி, தூக்கத்துடன் மயக்கம், மார்பில் கனம், வியர்வை இல்லாமை. விடாமல் அடிக்கும் அதிக சூடில்லாத சுரம், தாகமின்மை, பகல் மூன்று மணிக்கு அதிகமாகுதல்.

சருமம்: சில சமயங்களில் நெருப்புப் பற்றி எரிவது போன்ற எரிச்சலும் சில சமயங்களில் ஊசிகளைக் கொண்டு குத்துவது போன்று மிருத்தல். அக்கி, கொட்டுதலும், எரிச்சலும், வீக்கமும். முதலில் வலப்பாகம், பிறகு இடப் பிறகு இடப்பாகம், சருமம் வெளுத்தும் மெழுகு போன்றும் இருத்தல். கருத்த நீல நிறமாகவோ அல்லது கருப்பாகவோ உள்ள சருமம். தாகம் இல்லாமலிருக்கும் சரும நீர்ச்சுரப்பு, எரிசல், கொட்டும் வலி, இவைகளுடன்

இருக்கும் இராஜபிளவை. சருமம் சிவப்பாகவும் சூடாகவும் இருத்தல்.

எச்சரிக்கை: அடிக்கடி கருச்சிதைவு ஏற்படும் ஸ்திரீகள் கருப்பமாயிருக்கும்போது இவ்வௌஷதத்தைக் குறைந்த வீரியங்களில் சாப்பிடக்கூடாது.

விசேஷங்கள்: பகல் மூன்று மணிக்கு அதிக அசௌகரியம் (சுரம்) சரீரப் பிரயாசை, சூடு, காலை வேளை (வயிற்றுப் போக்கு, வலி, தூக்கமின்மை) இரவு (தலை வலி) குளிர்ந்த தண்ணீரில் ஸ்னானம் செய்தால், அமுக்கினால் சௌகரியம்.

தொண்டைச் சதை வளரும் வியாதியில் நீர்ச்சுரப்பு, உள்நாக்கு தண்ணீர்ப்பை போன்று தொங்குதல் முதலியவை களுடன் திடீரென்று வியாதியஸ்தரை மரணவஸ்தைக்கு உட்படுத்தும் சமயங்களில் இவ்வௌஷதம் உபயோகமாகும்.

அபிஸிந்தியம் (Absinthium)

காக்கை வலிப்பு: இசிப்பும் வலிப்பும் முகத்தில் ஆரம்பமாகி கூக்குரலுடன் மற்ற பாகங்களுக்குப் பரவுதல். தசைகள் நடுங்குதல், அதிகமான அமைதியின்மை, வாயில் நுரை, வாய்ப் பூட்டுதல், சில சமயம் பற்களுக்கிடையே நாக்கு அகப்பட்டுக் கடி படுதல், கை கால்களை தூக்கித் தூக்கிப் போடுதல், உடம்பு பின்புறமாக வளைதல், வலிப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக ஓயாமல் வந்துகொண்டேயிருத்தல். குடலில் ஏற்படும் உபாதிகளால் குழந்தைகளுக்கும் வயதான வர்களுக்கும் சம்பவிக்கும் இசிப்புகள். மயக்கமாயிருக்கும் சமயத்திலும் வியாதியஸ்தர் பலவிதமான கனவுகள் கண்டு கொண்டு நடப்பார். டைபாய்டு என்னும் விஷ சுரத்தில்

மூளையின் அடிப்பாகத்தில் ஏற்படும் நெருக்கத்தினுல் சம்ப விக்கும் தூக்கமின்மைக்கு. பயந்த கோளாறுகளினுல் ஏற் படும் வலிப்புகளுக்கு ஆர்டிமிஷியா வல்க்.

மனம்: வைத்தியம், முட்டாள் போன்றிருத்தல், ஞாபக மறதி, தன்னைத் தந்திரமாகப் பிறர் கொலை செய்து விடுவார்களோ என்ற பயம், தான் தூக்கத்தில் கண்ட கனவு களை மறந்துவிடுதல் - அனகார்டியம், ஹயாஸ்யாமஸ், ஸ்ட்ரமோனியம். இசிப்புகளுடன் பிரக்கினையின்மை.

தலை: எழுந்திருந்தால் கிறுகிறுப்பு, பின் பக்கமாக விழுதல். பெரு மூளையின் பின் பாகத்தில் நெருக்கம். வேதனையுடனேயே பலவித கனவுகள் கண்டுகொண்டு நடப்பார்.

முகம்: குரங்குபோல் முகத்தைக் கோணலாக வைத் துக்கொண்டு அழகு வழித்தல், வாயில் நுரையுடன் கூடிய காக்கை வலிப்பு.

இருதயம்: பின்புறமாக நடுக்கமேற்படுதல், இருதயத் துடிப்பு தோள்ப்பட்டையில் நன்கு கேட்கும்.

போதுக் குறிகள்: சில்லிப்புள்ள கால்கள், வலிப்பு ஒன்றன்பின் ஒன்ருக ஓயாமல் வேகமாக வருதல், பிறகு கூக்குரலுடன் பிரக்கினையற்றுக் கீழேவிழுதல். கைகால்கள் இழுத்தல், வாயில் நுரை. பற்களைக் கடித்தலும் அதற்குப் பிறகு அரை மயக்கம் வருதல். உள்ளிருக்கும் அவயவங் களில் பாரிசவாயு. சிறுவர்கள்.

நரம்புகள்: வலிப்பு, வலிப்பு வருமுன் நடுக்கம். வலிப்பின்போது கூக்குரல், கீழே விழுதல், பிரக்கினை

தவறுதல், பற்களைக் கடித்தல், அடிக்கடி வரும் வலிப்புகள். வலிப்பிற்குப் பிறகு பலவீனம். கண் கூசுதல், அரை மயக்கம், பொதுவான பாரிசவாயு.

குறிப்பு: வலிப்பு ஆரம்பிக்கும்போது இவ்வௌஷதத்தின் தாய்த் திராவகத்தை நாக்கில் ஒரு சொட்டு சொட்டினால் வலிப்புகளின் வேகம் சிறிது குறையும்.

காக்கை வலிப்பில் ஒப்பிடுதல்

ஆர்டமிஷியா வல்க்: மாத விடாய்க் கோளாறுகளினாலும் பக்குவ காலத்தில் ஸ்திரீகளுக்கு மாதவிடாய் வெளியாகாததினாலும் உண்டாகும் காக்கை வலிப்பு. ஒரே நாளில் ஒன்றன் பின்னொன்றாகப் பல தடவை வலிப்பு வருவதும் வலிப்புகளுக்கிடையே பிரக்ஞையற்று இருப்பதும், வலிப்புகளுக்குப் பிறகு ஆழ்ந்த தூக்கமும்.

அர்ஜண்டம் மேட்: மயக்க வெறி, தாவுதலும் தரையை அறைதலும்.

புபோ: வயிற்றின் குழி நரம்புகளிலிருந்து குளிர்ந்த காற்று தலைக்குச் செல்லும் உணர்ச்சி, வலிப்பு வருமுன் கதறுதல், வெடு வெடுப்பும் கோபமுள்ள குணம். முட்டி மைதுனம், அதிகச் சிற்றின்ப நுகர்ச்சி முதலியவைகளால் ஏற்படும் வலிப்புகள். தலை பின் புறமாக இழுக்கப் படுதல்.

கல்கேரியா: நீர் வீக்கம், நீர்க்கோர்வை முதலியவை ஏற்படும் தன்மை. கண்டமாலை, கொழுத்தும் கொளகொள வென்றும் இருத்தல், குழந்தைகளின் உச்சிக்குழி மூடப் படாமலே இருத்தல். முட்டி மைதுனத்தால் மனோ உற்சாகம் குன்றியிருப்பதற்கு. வயிற்றுக் குழியில் ஏற்படும் குளிர்ந்த

காற்றின் உணர்ச்சி சரீரத்தின் மேற்பாகத்துக்கோ அல்லது கீழே கருப்பைக்கோ செல்லுதல். கைகளில் எலி ஓடுவது போன்ற உணர்ச்சி.

காஸ்டிகம் : சிறு காக்கை வலிப்புகள், வலிப்புகள் சீக்கிரத்திலேயே நின்று விடுதல். நடக்கும்போது விழுதலும் மறுகணமே எழுந்திருந்து நடப்பதும். அமாவாசை நாட்களில் வலிப்பு மும்முரமாயிருத்தல். மாதவிடாய் அல்லது பக்குவ காலசம்பந்தமுள்ள வலிப்பு.

அக்டியா ரஸிமோஸா : வலியுடன் குறைந்த அளவுள்ள மாதவிடாய்.

குப்ரம் : மூளையில் வலிப்பு ஆரம்பமாதல், அடிவயிற்றின் மேல் பாகத்தில் குளிர்ந்த காற்றின் உணர்ச்சி, மயக்கம் வருமுன்னர் விரல்களும் கால் கட்டை விரல்களும் மடங்குதல், வீல் என்று கத்துதல், முகமும் உடம்பும் நீலம் பறித்துப்போதல், கண் விழிகள் புரண்டுகொண்டேயிருத்தல், சில்லிப்பான வியர்வை. இரவில் வலிப்பு வருதல்.

அர்ஜண்டம் நைட்ரிகம் : வலிப்பு வருவதற்கு நான்கைந்து தினங்களுக்கு முன்னர் கண்ணின் கருமணி பெரிதாகுதல், அமைதியின்மை, நடுக்கம், இவைகளுக்கு முன்பும் பிறகும், கோளாறுன மாதவிடாய்.

சிகுடா விரோஸா : உக்கிரமான வலிப்புகள். நரம்பு இழுப்பு, திருகுதல். உரத்த சப்தத்தினாலும் உடலைப் பிறர் தொடுவதினாலும் உபாதி அதிகமாகுதல், மயக்க மேற்படல். தடைப்பட்ட சுவாசம். வாய் பூட்டிவிடுதல் சிவந்த முகம், வாயில் நுரை, கண்கள் குத்திட்டுப் போதல், வலிப்புகளுக்கு முன்பும் பிறகும் நடுக்கம்.

காகுலஸ்: கை, கால்கள் சில்லிடுதல், மறத்திருத்தல்.

ஹயஸ்யாமஸ்: முறுக்குதல், வலிப்புக்கு முன்ன தாகப் பசியெடுத்தல், வாயில் நுரைதள்ளல், நாக்கு கடிபடுதல். பயந்த கோளாறுகளினுலேற்படும் வலிப்புகள்.

நைட்ரிக் ஆஸிட்: இரவில் படுக்கைக்குப் போகு முன்னர் வலிப்பேற்படுதல். வண்டிகளில் நீண்ட தூரம் பிரயாணம் செய்தால் வியாதி மும்முரமாகுதல்.

நக்ஸ்வாமிகா: அஜீரணம். வயிற்றின் குழியில் குளிர்ந்த காற்றின் உணர்ச்சி. முகத்தில் ஏதோ ஊறுவது போன்றிருத்தல்.

ப்ளம்பம்: கனமான அல்லது பக்ஷவாயு உள்ள கால்கள். பிரக்ஞை சிறிது சிறிதாகத் தெளிதல். மலபந்தம், வயிற்று வலி, அடி வயிறு சுருங்கி விடுதல்.

ஸைலீஷியா - (ஸிலிகா): இரவுகளில் வலிப்பு. கண்டமாலை. குழந்தைகளின் கணைச் சூடு. வயிற்றின் குழியில் குளிர்ந்த தண்ணீரின் உணர்ச்சி. வலிப்பு வருமுன் சில்லிடுதல். வலிப்பு நின்ற பிறகு சூடான வியர்வை.

அபோஸினம் கனபினம்
(Apocynum Canabinum)

மனத் தடுமாற்றம், தலைக்கனம், சோம்பல், சோர்வு, அமைதியற்ற தூக்கம், மலச்சிக்கல் ஆனல் மலம் கடினமாக இராமை. திமிரான மூத்திரக்காய், மூத்திரம் கொஞ்சமாகவும் இச்சை யில்லாமலும் போகுதல், கெட்டியான மஞ்சள் போன்ற சளி. கோழை மூக்கிலிருந்தும் தொண்

டையிலிருந்தும் வெளியாகுதல், மார்பிலும் வயிற்றின் குழியிலும் அமுக்கம், அதனல் பேச முடியாமை. ஆழ்ந்து சுவாசித்தல், மார்பில் நீர் சுரப்பு, துடிப்பு, இருதயத்தில் பிடிப்பு வலி, நாடி ஒழுங்கீனமாகவும் விட்டு விட்டும், மந்தமாகவும் செல்லுதல். நிமிஷத்திற்கு 45 தடவைகள் அடிக்குமென கணக்கிடப்பட்டிருக்கிறது. மலம் வேகமாகவும் தண்ணீர் போன்றும் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாகவும் ஜீரணமாகாமலும் தானகவும் வெளியாகும்.

சோர்வு, வருத்தம், எப்பொழுதும் அழுதுகொண்டே இருத்தல், அழுவதைத் தவிர தாளென்றும் செய்ய முடியாது போல எண்ணுதல். வயிற்றுப் போக்கின்போது அபானம் வெளித்துருத்தி யிருத்தல். குறைவான மூத்திரம், நீர்ச் சுரப்பு இருக்கும்போது தாகம், ஆனல் தண்ணீர் ஒத்துக்கொள்ளாமை. இருதயக் கோளாறினல் ஏற்படும் நீர்ச் சுரப்பிற்கும் நீடித்த நாட்பட்ட வயிற்றுப் போக்குக்கும் உபயோகமுள்ளது. நீர்ச்சுரப்பும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல், மார்பில் துடிப்புடன் நீர்ச் சுரப்பு. அதிகச் சிக்கல்கள் இல்லாத நீர்ச் சுரப்பு. கல்லீரல் சம்பந்தமான நீர்ச் சுரப்பு. எல்லா விதமான நீர்ச் சுரப்புகளிலும் தற்கால சாந்தியை யாகிலும் அளிக்கும் குணம் உள்ளது. மூத்திரம், வியர்வை ஆகியவை அளவில் குறைதல். கை கால்களில் பக்ஷவாயுவுடன் மூத்திரம் தடைபடல். குறைவான மூத்திரம், இரவில் படுக்கை நனைந்து விடுதல். ஜனேந்திரியங்களின் நீர்ச் சுரப்பு. மாதவிடாய் இல்லாமலேயே இருத்தல், அல்லது ஏராளமாகவும் நீடித்தும் சில சமயங்களில் கட்டி தட்டியுமுள்ள மாதவிடாய். உடம்பிலிருந்து எக்காரணத்திலாயினும் அதிக இரத்தம் வெளியான பிறகு ஏற்படும் நீர்ச்சுரப்பு.

அம்ப்ரா க்ரிஸியா (Ambra Grisea)

கிழ வயது ஆஸ்துமா (காசம்) ஜலதோஷம்; பித்தம், நரம்பு இவை சம்பந்தமான உபாதியுள்ள குழந்தைகளுக்கு. ஒல்லியா யிருப்பவர்கள், வயதானதினாலும் மித மீறி வேலை செய்வதினாலும் ஏற்படும் சரீரத் தளர்ச்சி. கைகளும் கால்களும் தூங்குதல். இவ்வௌஷதம் மூளையிலும் முள்ளந் தண்டிலும் வேலை செய்யும். முகத் தசைகள் முறுக்குதல். தூக்கமின்மை, மெலிந்தும் ஒல்லியாகவும் சோகை பிடித்தும் நரம்புத் தளர்ச்சியும் உள்ள மனிதர்கள். பிறர் எதிரில் வந்தால் மலம் கழிக்கமாட்டார்கள். புது மனிதர்கள் எதிரில் காலையில் இருமலுடன் அடிக்கடி ஏப்பம் விடுவார். இத்துடன் மார்பில் ஏதோ உருண்டை இருப்பது போன்ற உணர்ச்சி. கஷ்ட சுவாசம், இருதயத்தில் படபடப்பு, இருதயத்தை உருண்டையாகப் பிடித்து விடுவது போன்ற உணர்ச்சி. கருப்பையின் சக்தி குறைதல். மாதவிடாய ஏறக்குறைய ஒழுங்காகவும் தவணைக்கு ஒன்றிரண்டு நாள் முன்னதாகவும் ஆனால் ஏராளமாகவும், மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் கால்களில் அசுத்த இரத்தக் குழாய்கள் பெருத்தல் முதலியவைகளுடன் இருக்கும்.

மனம்: ஞாபக சக்தி அழிந்துவிடுதல். அடிக்கடி பேசும் விஷயத்தை மாற்றிக்கொண்டே இருத்தல். பிறரைக் கேள்வி கேட்பார். ஆனால் அக்கேள்விக்கு விடையை எதிர் பாராமலே வேறொரு கேள்வி கேட்பார். படிப்பதைச் சீக்கிரமாக மனதில் பதிந்துகொள்ளும் சக்தி இல்லை. இரண்டு மூன்று தடவை படித்தால்தான் படிக்கும் விஷயம் மனதில் படும். எப்பொழுதும் கனவிலிருப்பது போன்றிருத்தல். விருத்தாப்பிய காலம். கிழவன் போன்று கோபமும் உற்சாகம் குன்றியும் இருத்தல். தூக்கமின்மை, ஓயாமல்

பேசும் குணம். காலையில் யோசனை செய்யவும் புது விஷயங்களைக் கிரகிக்கவும் கஷ்டப்படுதல். தனியாக இருக்கப் பிரியம். பிறருடன் பேசுவதும் பிறர் தன் முன்னால் இருப்பதும் வியாதியஸ்தர் நிலைமையை மோசமாக்கும். பிறரெதிரில் மலப் பிரவர்த்தி செய்யமாட்டார். மனச் சோர்வு, ஏக்கம், வருத்தம் வெகு நாட்களுக்கு முன் நடந்து போன விரும்பத் தகாத விஷயங்களைப் பற்றி இரவில் நினைத்தல், அதனால் தூக்கம் வராமை. தனக்குப் புத்தி மாறுட்டம் வந்து விடுமோ வென்று பயப்படுதல்.

தலை: கிழவர்களின் கிறுகிறுப்பு, தெருவில் போக முடியாது, காலையில் அதிகம். உச்சந்தலையில் கனம். தூங்கின பிறகு அதிகம். சங்கீதம் கேட்டால் தலையில் இரத்தம் வேகமாக ஓடுதல். தனக்குப் பைத்தியம் பிடித்து விடுமோ என்ற பயமும் முன் தலையில் அழுத்தும் உணர்ச்சியும், தலையின் வலப்பாகத்தில் ஏதாயினும் ஒரு சிறு இடத்தில் வலி. இரண்டு பொட்டுகளிலிருந்து தலைவலி ஆரம்பித்து அங்குமிங்கும் இழுப்பது போன்றும் கிழிப்பது போன்றும் வலித்தல். வேலை செய்தால் அதிகமாயும் படுத்திருக்கும் போது சமனப்பட்டும் உள்ள தலைவலி. மூக்கு சிந்தினால் தலைவலி. தலைமயிர் உதிரல்.

கண்கள்: பார்வை மங்கல், ஏதோ மூடுபனியின் வழியாகப் பார்ப்பது போன்றிருத்தல். கண்களில் ஏதோ தூசி இருப்பது போன்று அழுக்க உணர்ச்சியும், உறுத்துத லும். கண்ணீர் வடிதல். கண்களில் முக்கியமாக இடது கண்ணில் அமுக்கம், திறப்பதற்கு கஷ்டப்படுதல், வலி, இறுக மூடியிருப்பது போன்றிருத்தல். அனேகமாக காலை வேளைகளில் இக்குறிகள் இருக்கலாம். வலது கண்ணிலும் இமைகளிலும் எரிச்சல், கண்ணில் கிறுக்கட்டிகள் தோன்றுதல்.

காதுகள் : பிற்பகலில் காதுகளில் ஊதும், குடையும் உணர்ச்சி, கடியாரத்திற்குச் சாவி கொடுக்கும்போது ஏற்படும் சப்தம் போன்று காதில் ஒலி. ஊறுதல், அரிப்பு, சிலிர்ப்பு. அடிவயிற்றில் சில்லிப்புடன் காது கேட்பது குறைதல். வலக்காதிலும் வலது ஆரிகிளிலும் (இருதயத்தின் மேல்பாகம்) கடுமையான கிழிக்கும் வலி.

மூக்கு : காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல். காய்ந்துபோன இரத்தம் மூக்கில் ஏராளமாக இருத்தல். மூக்கு அடைந்துபோயும், காய்ந்தும் வலியுடனும் இருக்கும். நாட்பட்ட, மூக்கின் மியூகஸ் மெம்பிரேனை அரித்துக்கொண்டு போகும், வரண்ட நீர் வடிதல் உபாதிகளுக்கு.

முகம் : அனல் வீசுதல், காமாலை. காலையில் உதடுகள் காய்ந்தும் மறத்தும் இருத்தல்.

பற்கள் : இழுக்கும் வலி, உஷ்ணத்தினால் அசௌகரியமும் குளிர்ச்சியினால் சௌகரியமும். ஈறுகள் வீங்குதலும் இரத்தம் வடிதலும்.

நாக்கு : பால் குடித்த பிறகு புளித்த ருசி. காலையில் கசப்பு ருசி. நாக்கின் அடியில் புற்று அல்லது கட்டிகள்.

வாய் : காலையில் கெட்ட வாசனை. இரணம் போலவோ அல்லது வெடித்தோ இருத்தல்.

தொண்டை : மேல்வாயில் கிழிக்கும் வலி, இடக்காது வரை பரவுதல். காலையில் தாகமில்லாமல் வரட்சி. காலையில் விரைப்பாகவும் காற்றடித்த பிறகு வலியுடனும் இருக்கும்.

விருப்பு, வெறுப்பு: தாகமின்மை

குமட்டல், வாயாலெடுப்பு: புளித்த ஏப்பம், அல்லது கசப்பு ஏப்பம், அல்லது வெற்று ஏப்பம். திறந்த வெளியில் நடந்தாலும் பால்குடித்தாலும் நெஞ்சில் எரிச்சல். காலை ஆகாரம் உண்ட பிறகு குமட்டல். மாலையில் எரிச்சல், கசப்பு இவைகளுடன் ஏப்பம்.

சாப்பிடுதல், குடித்தல்: சூடான பானம், சூடான பால் முதலியவைகளால் அசௌகரியம். சாப்பிட்ட பிறகு சௌகரியம். சாப்பிட்டவுடன் இருமலும் தொண்டையில் அடைத்தலும்.

வயிறு: அமுக்கமும் எரிச்சலும், ஏப்பம் விடுவதினால் சௌகரியம். வயிற்றில் ஒன்றுமே இல்லாதது போன்ற உணர்ச்சி, மலம் போன பிறகு பலவீனம். அமுக்கலும் விரைப்புமோ அல்லது பிடிப்பு வலிகளும் விரைப்புமோ இருத்தல்.

அடிவயிற்றின் இருபக்கங்கள்: கல்லீரலில் அமுக்கம். காலையிலும் சாப்பிட்ட பிறகும் அதிக அசௌகரியம். மண்ணீரலில் கிழிக்கும் வலி.

அடிவயிறு: தொங்கியிருத்தல். சாப்பிட்ட பிறகும் தண்ணீர் குடித்த பிறகும் அபானவாயு பரிதல். அடிவயிற்றில் சில்லிப்பான உணர்ச்சி. நடு இரவில் கடபுடா சப்தமும் வெட்டும் வலியும்.

மலம்: ஒருநாள் மலச்சிக்க லேற்பட்டால் மறுநாள் லேசான பழுப்பு நிறமுள்ள மலம் ஏராளமாக வெளியேறுதல். மலம் பெரிதாக இருப்பினும் மிருதுவாக

இருக்கும். கிழவர்களிடையே இருக்கும் பிடிவாத குண முள்ள மலச்சிக்கல். அடிக்கடி வெளிக்குப் போகத் தூண்டு தலும் ஆனால் ஒன்றும் போகாமல் இருப்பதும், ஆனால் பிறரெதிரில் வெளிக்குப் போகமாட்டார். மலத்துடன் அதிகமான இரத்தம் பெறுகுதல். அபானத்தில் அரிப்பு, பிடிப்பு வலிகள்.

மூத்திரம்: இரவில் அடிக்கடி பிரிதல். இரத்த மயமான மூத்திரம். சிவப்பு அல்லது பழுப்பு நிறமுள்ள மண்டி படிதல், மூத்திரம் புளிப்புவாசனையடித்தல். குடித்த தண்ணீரைவிட மூன்று மடங்கு அதிகமாகக் காலையில் மூத் திரம் வருவதும் பிறகு மூத்திரக்காயில் மந்தமான வலியும். மூத்திரம் விடும்பொழுது அரிப்பு, எரிச்சல்.

ஆண்: காம விகாரமுள்ள உணர்ச்சி, இரவில் இந்திரியம் ஸ்கலிதமாகுதல். ஜனனேந்திரியங்களில் அரிப்பைத்தரும் சிறு சிரங்குகள்.

பெண்: சினைப்பையை அமுக்கினால் பிடிப்புவலி. மாதவிடாய்களின் இடைக்காலங்களில் நடந்தாலும் கடினமாக மலம் கழித்தாலும் இரத்தம் வெளியாகுதல். மாதவிடாய் சீக்கிரமாகவும் தவணைக்குச் சுமார் ஒரு வாரத் துக்கு முன்னதாக வருவதுடன் அபரிமிதமாகவும் இருத்தல். இத்துடன் அரிப்பு. யோனி உதடுகளில் வீக்கம் முதலியவைகளும் இருக்கும். மாதவிடாயின் போது அசுத்த இரத்தக் குழாய்கள் பெருத்து விடுவதால் இடதுகால் நீலம் பூரித்துப் போகுதல். கெட்டியான மியூகஸ் சதையை வெளிப்படுத்தும் வெள்ளைப் பாடு நாளுக்குநாள் அதிகமாகுதல். கருப்பைத் தொந்திரவு கள் படுத்திருக்கும்போது அதிகமாகும்.

சுவாசம்: மார்பில் இறுக்கி யிருக்கும் உணர்ச்சி. அதனல் ஆழ்ந்து சுவாசிக்க முடியாமை. கஷ்ட சுவாசம், ஆஸ்துமா (காசம்) சரீரப் பிரயாசையினல் அதிகமாதல். புணர்ச்சி, சங்கீதம் கேட்பது முதலியவைகளினலும் அதிகமாகும். சுவாசம்விடும்போது ஊதுவது போன்ற சப்தம்.

இருமல்: மாலையில் தொண்டைக் கூச்சமேற்படும் போது இருமல் ஓயாமல் வந்து கொண்டே யிருத்தல். காலையில் தவிர மற்ற சமயங்களில் கோழைவராமை. கோழை ஏராளமாகவும் மங்கின வெள்ளை நிறமாகவும் சில சமயம் மஞ்சளாகவும் உப்பு அல்லது கசப்பு ருசியுடனு மிருக்கும். தொண்டையில் இருக்கும் கோழையை துப்ப ஆரம்பிக்கும்போது அடைத்துக் கொள்வதும் வாயாலெடுப்பும், இருமுதலும். நரம்பு சம்பந்தமான இருமல் காலையில் அதிகமாகுதல். கனத்த சாமான்களைத் தூக்கினல் இருமல், காகரப்பு, ஏப்பம்.

சுவாசாசயம்: அமுக்கம், அரிப்பு, மார்பில் எரிச்சல்.

இருதயமும் நாடியும்: ஏக்கம், அனல் வீசுதலுடன் கஷ்ட சுவாசம். நாடித் துடிப்பு, கஷ்ட சுவாசம் முதலியவை திறந்த வெளியில் நடக்கும்போது அதிகமாகுதல். சங்கீதத்தினலும் மனே உழைப்பினலும் சரீர உழைப்பினலும் அதிகமாகும், கைகால்களிலும் துடிப்பு. மார்பில் அமுக்கத்துடன் கடுமையான துடிப்பு. மார்பில் ஏதோ உருண்டையிருப்பதுபோன்று அல்லது ஏதோ அடைத்து வைத்திருப்பது போன்றும் உணர்ச்சி.

கழுத்தும் முதுகும்: பிடரிக் கழுத்திலும் தோள் பட்டையிலும் கிழிக்கும் இழுக்கும் அமுக்கும் வலி.

கை, கால்கள் : கிழிக்கும் வலிகள், வாத சம்பந்தமான வலிகள். மறத்த உணர்ச்சி. அழுக்கினுல் கால்கள் தூங்குதல். கால்மேல் காலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாலும் கால்கள் தூங்குதல். இரவில் முறுக்குதலும் சில்லிப்பும். கைகால்களில் சில்லிப்பு, விரைப்பு, நடுக்கம். இடதுகை மறத்தல். சிரமபரிகாரம் செய்து கொள்ளும் போது கைகள் தூங்குதல். உள்ளங்கைகளில் அரிப்பு. விரல்களின் நுனியில் சுருக்கம். தொடைகளினிடையே, இரணவலி, முறமுறப்பு, கால்கள் கனத்தல், பாரிசவாயு சம்பந்தமான பலவீனம். வலது தொடை குறுகுவதுபோன்ற உணர்ச்சி. தசைகளில் முறுக்குதலும் கெண்டை வாங்கலும்.

சருமம் : சருமம் முழுவதும் அரிப்பு. எரிச்சல், மறத்தல், குறைந்த இரத்த ஓட்டம்.

விசேஷம் : காலையில், சூடான பானம், சூடான அறை, சங்கீதம், கீழே படுத்தால், உரக்கப் படித்தால் அல்லது பேசினுல், புது மனிதர்கள், நடத்தல் முதலியவைகளால் உபாதி அதிகம். சாப்பிட்ட பிறகு, குளிர்ந்த காற்று, குளிர்ந்த ஆகாரம், பானம், படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது, மெதுவாக நடந்தால், சௌகரியம்.

முறிவு : நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, ஸ்டபிஸாக்ரியா, ஸாம்புகஸ் நைக்ரா.

அமில் நைட்ரேட் (Amyl Nitrate)

தலையில் சூடு, துடித்தல். தொண்டையும் இருதயமும் இறுக்கி இருக்கும் உணர்ச்சியுடன் உடைக்கும் தலைவலி. கண்கள் பிதுங்கி இருத்தல். முகம் சிவந்திருத்தல்.

தொண்டை அடைத்தல். காசம். இருதயத் துடிப்பு பலமாகவும் இருத்தல், கைகள் நடுங்குதல், சங்காதோஷம், காக்கை வலிப்பு இவை சம்பந்தமான வலிப்புகள், மார்பில் வலி, சூரிய இடியில் முகத்திற்கும் தசைகளுக்கும் இரத்தம் பரவுதல், கண்கள் குத்திடல், முகம் சிவத்தல், நாடித் துடிப்பு, கஷ்ட சுவாசம், தொண்டை அடைத்துக்கொள்ளல். இருதயம் இறுக்கமாக இருப்பதால் தலைக்கு இரத்தமேறுதல். இருதயத்தில் வலியும் இறுகியிருக்கும் உணர்ச்சியும், ஏப்பம் விடுவதால் சௌகரியம். மாதவிடாய் நின்றுபோகும் காலத்தில் தலையில் இரத்தம் அதிகமாக ஏறுதல்.

அமோனியம் கார்ப் (Ammonium Carb)

இவ்வௌஷதம் ஸோராவினால் வியாதியுற்ற நிலைமையை நீக்குவதில் நிகரற்றது. ஆழ்ந்தும் வேலை செய்ய வல்லது. சரீரத்திலிருந்து வெளியாகும் எப்பதார்த்தமும் காரமாக இருக்கும். வெளியாகும் இரத்தம் கறுப்பாக இருக்கும். எழுந்திருந்தவுடன் திடீரென்று சரீரத்தில் பிடிப்பு. விரல்கள் மடங்கிக் கொள்ளுதல். கண்டமாலையுள்ள குழந்தைகள், சோம்பல் குணமுள்ள பருத்த சரீரமுள்ள ஸ்திரீகளுக்கு குளிர்காலத்தில் தவறாமல் ஜலதோஷம் வருதல். பகல் முழுவதும் பலவீனம். கரிப் புகையினால் விஷம் சரீரத்தில் பரவி விடுவதற்கு. முகத்தைக் கழுவும் போதும் கைகளைக் கழுவும்போதும் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல். மாதவிடாயின் போது விஷபேதி (காலரா) போன்ற வயிற்றுப் போக்கு.

மூளைச் சுரத்தின் ஆரம்பத்தில் ஆபத்தான குறிகள் தோன்றுவதற்கு முன் வியாதியஸ்தர், சரீரச் சில்லிப்பு, நீல உதடுகள், பலவீனமான நாடி, மந்தபுத்தி ஆகியவை இருக்கும் சமயத்தில் இவ்வௌஷதம் கொடுக்கப்படின் உபாதி

அறவே ஒழியக்கூடும். மாதவிடாய் சீக்கிரமாகவும் ஏராளமாகவும், பட்ட இடங்களில் புண்ணை ஏற்படுத்தக் கூடியதாயும் இருத்தல், இரவில் அதிகமாதல். இருமல் வரண்டும் கூச்சத்துடனும் இருத்தல். வயதானவர்களின் நீடித்த பிராங்கைல் குழாய் அழற்சி, காலை மூன்று மணியிலிருந்து நான்கு மணிவரை அதிகமாகும். நாடித்துடிப்பு அசைந்தாலும் ஸ்னனம் செய்தாலும் அதிகமாகுதல். இருதய வலி, இருதயம் நின்று விடும்போன்ற நிலைமை, தூங்கின பிறகு அதிகமாதல். சீதோஷ்ண மாறுபாடுகளினாலும் ஸ்னனம் செய்தாலும் படுத்த உடனேயும் பல்வலி வருதல். பற்கள் ஆடுதல், விழுதல். புண்ணை யுண்டாக்கும் உமிழ்நீர். வாய், மூக்கு, குடல் இவைகளிலிருந்து இரத்தப்பெருக்கு. மிருதுவான கொள கொளத்த தசைகள், இளைப்பு, ஈறுகளில் இரணம். கோளங்கள் பெருத்தல்.

மனம்: ஏக்கம், பிறரைக் கண்டால் வெறுப்பு, கோப குணம், அழுதல், அசைந்தால் களைப்பு. மயக்கத்தைத்தரும் வலிப்புகள், சங்காதோஷம், மூடின அறையில் அதிகமாகுதல். மறதி, பேசும்போதும் எழுதும்போதும் தவறுதல். வேலை செய்ய வெறுப்பு. குளிர்ந்த உணர்ச்சியுடன் வருத்தம், மனச் சோர்வு. அசைய முடியாது. அசைந்தாலும் உபாதி அதிகம்.

தலை: காலையில் எழுந்திருந்தவுடன் கிறு கிறுப்பு, நாள் பூராவும் இருத்தல், மாலையிலும் இரவிலும் தலையை அசைத்தாலும் அதிகமாகுதல். மூளை வளர்ந்திருப்பது போன்ற உணர்ச்சி. காலையில் குமட்டலுடன் தலைவலி. தலைவலி பிற்பகலிலும், நடப்பது, ஸ்னனம், குளிர்ந்த காலம் முதலியவைகளினாலும் அதிகமாதல். உச்சந்தலை வெடிப்பது போன்றிருத்தல், கண்களுக்கு முன்னால் பளிச்சு

பனிச்சென்று மின்னும் குறியுடன் கூடிய நெற்றியில்வலி, சாப்பிட்ட பிறகு, திறந்த வெளியில், அமுக்குதல் கத கதப்பான அறையில் அதிகமாகும். குளிர்காலத்தில் தலை யில் கனம். நெற்றியில் துடிப்பு.

கண்கள்: பார்க்கும் வஸ்துக்கள் இரட்டையாகத் தோன்றுதல். தலைவலியுடன் கண்களுக்கு முன்னால் பூச்சி பறத்தல். தையல் வேலை செய்த பிறகு கண்களுக்கு முன் னால் பெரிய கரும்புள்ளிகள் மிதத்தல். அதிக வேலையினால் கண் பார்வை மங்குதல்.

காதுகள்: சிரமப்பட்டு காது கேட்டல். காதில் அரிப்பு, சீழ் வெளிவருதல். காதுகளில் குடைதல். வலக் காதில் வீக்கம்.

மூக்கு: மூக்கிலிருந்து இரத்த மயமான பதார்த்தம் வெளிவருதல். காலையில் முகத்தை அல்லது கைகளைக் கழு வினாலும், குளித்தாலும் சாப்பிட்டபிறகும் இரத்தம் கொட்டுதல். இரவில் மூக்கினால் மூச்சு விடமுடியாமை.

முகம்: வெளுத்தும் அதைப்புடனும் இருத்தல். கன்னங்கள், கோளங்கள் முதலியவைகளில் கடினமான வீக்கம். நெற்றி, முகவாய்க்கட்டை, கன்னங்கள் ஆகியவை களில் கொப்புளங்கள் உண்டாகுதல். வாயைச் சுற்றிலும் சிறுசிறு கொப்புளங்கள் ஏராளமாக இருத்தல். கீழ் உதடு நடுவில் வெடித்தும் அதனால் எரிச்சலும் இரத்தமும் வெளி யாகுதல். மேலுதட்டில் வெடித்திருப்பது போன்ற வலி, நீல நிறமான உதடுகள்.

பற்கள்: பற்கள் நீளமாக இருப்பது போன்ற உணர்ச்சி. சீதோஷ்ண மாறுபாடுகளினாலும், ஸ்னானம்

செய்த பிறகும், படுத்த உடனேயும் ஆரம்பிக்கும் பல்வலி. பற்கள் தளர்ந்தும் விழுந்து கொண்டும் இருத்தல். ஈறுகள் அதிக வலியுடனும் இரத்தம் வடிந்து கொண்டும் இருத்தல். கடைவாயில் பிடிப்பு வலி.

வாய்: வீங்கியிருப்பது போன்ற உணர்ச்சி. வாயின் சந்துகளையும் உதடுகளையும் இரணமாக்கும் தன்மையுள்ள உமிழ்நீர்.

தொண்டை: டான்ஸில்களும் தொண்டை அழற்சியுடன் இருத்தல். ஏதோ தொண்டையில் சிக்கியிருப்பது போன்ற உணர்ச்சி. அதனால் விழுங்குவதற்குச் சிரமம்.

நாக்கு: தித்திப்பாகவும், இரத்தம் கலந்தது போன்றும், அதிக நாற்றத்துடனும், கசப்பாகவும், புளிப்பாகவும், இவ்விதமான பல ருசிகள் இருத்தல். பேசுவதற்கு சிரமம்.

விருப்பு, வெறுப்பு: அடிக்கடி தாகம், பசியின்மை. குளிர்ந்த ஆகாரம், தித்திப்புள்ள பண்டங்கள், ரொட்டி இவை தின்ன பிரியம். அதிகப் பசி, கொஞ்சமாக உணவு உட்கொள்ளல்.

சாப்பிடுதல், குடித்தல்: அடிக்கடி தண்ணீர் குடிக்காமல் சாப்பிட முடியாமை. சாப்பிடும்போதும் சாப்பிட்ட பிறகும் உபாதி அதிகமாகுதல். குமட்டல், சாப்பிட்ட பிறகு நெற்றி வயிறு இவைகளில் கனம். சாப்பிட்ட பிறகு வெற்று ஏப்பம்.

குமட்டல், வாயாலெடுப்பு: காலையில் விக்குதல், புளித்த ஏப்பம். மார்பில் எரிச்சல். குமட்டலும், உண்ட உணவை வாயாலெடுத்தலும், பிறகு வாயில் புளிப்பு ருசி.

வயிறு : நிறைந்தது போன்றும் நடுங்கிக் கொண்டும் இருப்பது போன்ற உணர்ச்சி. காலியாயிருக்கும் உணர்ச்சி. உணவு உட்கொண்ட பிறகு கனம், வலி. வெற்று ஏப்பங்கள்.

அடிவயிறு : இடப்பக்கத்தில் தொப்பூழிற்கு மேலாக கனம். இடது பக்கமாகப் படுக்க முடியாது. இடது தொடை இடுக்கில் வீக்கம், பிடிப்பு வலி. தூங்கியெழுந்தவுடன் வலியும் வீக்கமும் போய்விடுதல்.

மலம் : வலியுடன் பட்ட இடங்களில் இரணத்தை ஏற்படுத்தும் தன்மையுமுள்ள வயிற்றுப் போக்கு. அபானத்தில் பிடிப்பு வலி. அதிக வலியுள்ள மூலங்கள், மல்லார்ந்து படுப்பதால் வலி சமனப்படுதல், மலம் கழித்தபிறகு மூலங்களில் திருகு வலி, வெகு நேரம் நீடித்தல். மற்ற சமயங்களில் மூலம் வெளித்துருத்துதல். மலம் கழிக்கும் போதும் கழித்த பிறகும் இரத்தம் வெளிவருதல்.

மூத்திரம் : இரவில் அதிகம். தூங்கும்போது தானகவே மூத்திரம் வெளியாகுதல். மந்த குணம். நீல உதடு, பழுப்பு நாக்கு.

ஆண் : விரைகளில் பலமான வலி. விரைகள் தளர்ந்து தொங்குதல். காலையில் விரைப்பு. ஆனல் புணர்ச்சியில் பிரியமின்மை அல்லது புணர்ச்சியில் பிரியமும் விரைப்பாகாமலும் இருத்தல். ஒவ்வொரு இரவிலும் இந்திரியஸ்கலிதம்.

பெண் : மாதவிடாய் சீக்கிரமாகவும் ஏராளமாகவும் இருத்தல். அல்லது தாமதமாகவும் குறைவாகவும் இருத்தல். மாதவிடாய் கறுப்பு இரத்தமாகவும் பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் தன்மையுள்ளதாகவும் இருத்தல். தொடைகள் அழற்சி அடைதல். இரவிலும் உட்காரும்

போதும் அதிகமாகுதல். மாதவிடாயினுல் அதிக பலவீனமும் களைப்பும், காலரா போன்ற மலம் போகுதலும், ஏராளமாகவும் பட்ட இடங்களில் புண் உண்டாகும் தன்மையுமுள்ள வெள்ளைப்பாடு.

சுவாச அவயவங்கள்: கதகதப்பான அறையிலும், மாடிப்படி ஏறுவதினுலும் விடியற்காலை 3-4 மணியிலும் அதிகமாகும் ஆஸ்துமா. அதிக சிரமத்துடன் இருமுதல், முகம் உப்புதல், மந்தமான நாடி, பிரக்ஞையின்மை, குழந்தைகளிலும் கிழவர்களிலும் கோழை வெளியாக சிரமப்படுதல். இரத்தம் கலந்த கபம். முகம் வெளுத்தும் சில்லிப்பாகவும் இருத்தல். வயதானவர்களின் நீடித்த பிராங்கைல் குழாய் அழற்சி. இருமல் வரண்டும் காலை 3-4 மணிக்கு ஆஸ்துமாபோன்றும் காலையில் மார்பு சுருங்குவதுடனும் இருக்கும். மாடிப் படிகளில் ஏறுவதால் சுவாசம் விடுவதற்குத் தடை. மார்பில் பிடிப்பு வலிகள், இடது பக்கமாகப் படுக்க முடியாது.

இருதயம்: துடிப்பு, அசைந்தால், ஸ்னானம் செய்தால் அதிகமாகுதல்; இருதய உபாதி, இருதயம் நின்று விடும் போன்று தோன்றும் நிலைமை, தூங்கின பிறகு அதிகமாகுதல். மயக்கம், இருதயம் நிற்கும்படியான நிலைமை, கரிப்புகையினுல் ஏற்பட்ட உபாதிகள் இவைகளுக்கு இவ்வௌஷதத்தை 3 வீரியத்தில் 15 நிமிஷங்களுக் கொருமுறை கொடுத்து வியாதியஸ்தர் இருக்கும் அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைக்கவேண்டும். இருதயத் துடிப்பு, கஷ்ட சுவாசம், முதலியவை வந்துவிடுமோ என்ற பயத்தினுல் வியாதிஸ்தர் நடக்கமாட்டார். இருதயத் துடிப்பு நன்ருகக் கேட்டல், இறந்து போவது போன்று அதிக கவலை, குளிர்ந்த வியர்வை, தாஞகவே

கண்ணீர் வடிதல், உறக்கம், பேசமுடியாமை, கஷ்ட சுவாசம், கைகள் நடுங்குதல், பலவீனமான நாடி.

கழுத்து, முதுகு: கீழ் முதுகில் கடுமையான அமுக்கும் இழுக்கும் வலி. அதிகமான சில்லிப்பு, நடக்கும் போது நீங்குதல். அரிப்பு, திண நீர்க் கோளங்களில் வீக்கம்.

கை, கால்கள்: அக்குளில் இருக்கும் கோளங்கள் வலியுடனும் வீங்கியும் இருத்தல். தோள் பட்டைகளில் கிழிப்பது போன்றும் காயமிருப்பது போன்றும் வலி. வலக்கை பலமற்றும் பின்புறமாக இழுக்கப்பட்டும் இருக்கும். கைகளில் வீக்கம். அசைந்தால் முழங்கை எலும்பு உடைவதும் கைகளில் சதை வெடித்தலும். உள்ளங்கைகளில் தோல் உரிதல். விரல் நுனிகளில் அழர்ச்சி. நகச்சுற்றி. பலவீனமான கால்கள், நடக்கும் போது மூட்டுகளில் வலி. முழங்கால்களில் குடைதல், இழுத்தல். உட்கார்ந்தாலும், நின்றாலும், படுக்கையில் படுத்தாலும் கால்களில் குரக்களி காணுதல். காலையில் குதி காலில் வலி, எலும்புகளில் இரணம் இருப்பது போன்று தோன்றுதல். படுக்கப் போகும் போது கால்களில் சில்லிப்பு. கால்களில் நடுக்கம். கால் கட்டைவிரல் சிவந்தும் வீங்கியும் வலியுடனும் இருக்கும். முக்கியமாக மாலையிலும் படுத்துக் கொண்டிருக்கும் போதும் இக்குறி தோன்றலாம்.

நரம்புகளும் கேபிகளும்: பலவீனம், கீழே படுக்க நேரிடுதல், சரீரம் முழுவதும் இரணவலி குடல், ஈறு, மூக்கு இவைகளிலிருந்து இரத்தம் வெளியாகுதல். தசைகள் மிருதுவாகவும் கொளகொளப்பாகவும் இளைத்தும் இருத்தல்.

தூக்கம் : தொண்டையில் சதை வளரும் வியாதி, இருதய உபாதி ஆகியவற்றில் குழந்தைகள் தூங்க ஆரம்பித்தவுடன் உபாதி அதிகமாகுதல். நடுத் தூக்கத்தில் திடீரென்று எழுந்து கொண்டு பிறகு அதிக பயத்துடன் இருத்தல். கெட்ட கனவுகள், வியர்வையினுல் விழித்துக் கொள்ளுதல். கவலை, பயம், பிசாசு, இறப்பது பற்றி, இறந்த மனிதர்கள் முதலியவைகளைப் பற்றிய கனவு. தூக்கத்தில் பேசுதல். அமைதியற்ற தூக்கம், அங்குமிங்கும் புரளுதல்.

சுரம் : மாலையில் சில்லிப்பும் உஷ்ணமும் மாறி மாறி வந்து கொண்டே இருத்தல், நள்ளிரவு வரை நீடித்தல். திறந்த வெளியில் சில்லிப்பு, கதகதப்பான அறையில் சௌகரியம். மாலையில் முகத்தில் உஷ்ணமும், கால்களில் சில்லிப்பும். காலையில் மூட்டுகளில் வியர்வை, உடம்பின் கீழ்ப்பாகங்களில் வியர்த்தல். விடாமல் வியர்த்தல்.

உணர்ச்சி : தசைகள் குட்டையாக இருப்பது போன்ற விரைப்பு. மூட்டுகளில் சுளுக்கு ஏற்பட்டிருப்பது போன்ற வலி.

சருமம் : வெளிவரும் பதார்த்தங்கள் அதிக நாற்றம், கறுப்பு இரத்தம். சொரிந்த பிறகு அரிப்பு, எரிச்சல், சிறு கொப்புளங்கள் தோன்றுதல். சொரிந்தால் அரிப்பு சமனப்படுதல். ஸ்னனம் செய்த பிறகு முகத்தில் சிறு சிறு புள்ளிகள். கருத்த சிவப்பும் நாற்றமும் வலியுமுள்ள தொண்டை. ஒட்டும் குணமுள்ள உமிழ் நீர். வெளித்தொண்டை வீங்குதல். அமிதமான வாயாலெடுப்புடன் மலம் தானுகவே கழிதல்.

விசேஷம்: ஈர நப்பு, புயலடிக்கும் பருவங்களில் வெடு வெடுப்பான குணம். ஸ்னானம் செய்ய வெறுப்பு. ஈரத்தினால் உபாதி அதிகம்.

முறிவு: ஆர்னிகா, காம்போரா, ஹீபார் ஸல்பர், ரஸ்டாக்ஸ், விளக்கெண்ணெ, யானிவிதை எண்ணெ.

அமோனியம் ம்யூரியாடிகம்
(Ammonium Muriaticum)

கொழுத்த உடல், மெலிந்த கால்கள். இருமல் பகலில் வரண்டும் மாலையிலும் இரவிலும் தளர்ந்தும், வலது பக்கமாகப் படுப்பது, மல்லார்ந்து படுப்பது, குளிர்ந்த பதார்த்தங்களைச் சாப்பிடுவது குடிப்பது முதலியவைகளால் அதிகமாகியும் இருத்தல். மார்பில் பிடிப்பு வலிகள். தொண்டையில் அரிப்பு, எரிச்சல் முதலியவைகளுடன் இரத்தம் கக்குதல். கடினமான துண்டு துண்டாக வெளியாகும் மலம், மாதவிடாய்க் காலத்தில் வாயாலெடுப்பு, வயிற்றுப் போக்கு. தோள் பட்டை எலும்பில் சில்லிப்பான உணர்ச்சி. மாதவிடாய் சீக்கிரமாகவும் ஏராளமாகவும் இரவில் அமிதமான பெருக்குடனும் இருத்தல். முட்டையின் வெளுப்பை யொத்த வெள்ளைப்பாடு. குளிர்ந்த காற்றடிக்கும்போது காதில் எரிச்சல். மாதவிடாய் தடைப்படுத்தப்பட்ட பிறகு வலக்காதில் சீழ் வடிதலும் காது கேளாமையும். தசைகள் சுருங்குதல். அதிக நாற்றமுள்ள கால் வியர்வை.

மனம்: கதறுதல், பேசாமல் இருத்தல். பயமும் மனக் கவலையும். மனதிற்குள்ளேயே வருத்தப் படுதல். கோப குணம்.

தலை: கீழே விழுந்து விடுவதுபோல் தோன்றும் கிறு கிறுப்பு, நெற்றியிலும் மூக்குத் தண்டின் அடியிலும் கனம், அழுக்கம். பிடரிக் கழுத்தில் சுண்டி இழுக்கும் வலி. முகத்திலும் வலது பொட்டிலும் கிழித்தல். குனியும் போது, தலை, இடது பொட்டு, உச்சந்தலை முதலியவை களில் பிடிப்பு வலி. உச்சந்தலை உடைந்துவிடும்போல் இருத்தல். பிடரிக் கழுத்தின் வலப்பக்கத்தில் அரிப்புடன் கூடிய சிறு கொப்புளங்கள்.

கண்கள்: கண்களுக்கு முன்பாக முடுபனி இருப்பது போன்ற தோற்றம், மஞ்சளான புள்ளிகள் தோன்றுதல், பிரகாசமான வெளிச்சத்தில் இவை அதிகமாகுதல், அறை யில் சமனப்படுதல். கண்களில் சதை வளருதல். கண் களில் எரிச்சல், இரவில் கண்ணீர் வடிதல், கண்களுக்கு முன்பாகப் பூச்சி பறத்தல், காலையில் கண்கள் ஒட்டிக் கொண்டிருத்தல்.

காதுகள்: வலக்காதில் கொட்டுதல், குடைதல், எரிச் சல், குளிர்ந்த காற்றில் பிடிப்பு வலிகள். காது கேளாமை, வலக்காதிலிருந்து சீழ் வடிதல், சொரிந்தால் அரிப்பு சமனப் படாமை.

மூக்கு: நீர்வடிதல், வாசனையறியும் குணத்தை இழத் தல். அரிப்புடன் இடது மூக்கிலிருந்து இரத்தம் வடிதல். இரத்த மயமான பொறுக்குகளுடன் இடது மூக்கிலிருந்து இரத்தம் வெளியாகுதல். மூக்கை அடைக்கும் நீர்வடிதல், தொண்டைக் குழியில் எரிச்சல். மூக்கிலிருந்து வடியும் நீர் உதடுகளைத் புண் ஆக்குதல். அடிக்கடி தும்முதல்.

முகம்: எரிச்சலுடன் வெளுத்திருத்தல், திறந்த வெளியில் சமனம்: முகவெலும்புகளில் கிழிக்கும் வலி.

கன்னம், தாடை இவைகளிலிருக்கும் கோளங்களில் வீக்கம் மேலுதட்டில் கொப்புளங்கள், பருக்கள். உதடுகள் நெருப்பு போன்று எரிதல். காய்ந்தும் வெடித்தும் உள்ள உதடுகள், அதனால் அடிக்கடி நாக்கினால் உதடுகளை நக்கிக்கொள்ளுதல்.

வாய்: கீழ்த்தாடையின் இடது பக்க ஈறுகள் வீங்குதல், அவ்விடத்திலிருந்து பிடிப்பு வலிகள் இடது பொட்டு வரை செல்லுதல். சொத்தை விழுந்த பற்களில் வலி, அமுக்கினால் சமனப்படுதல். நாக்கின் நுனியில் எரிச்சல் வலியுடன்கூட கொப்புளங்கள். தொண்டையில் பிடிப்பு வலி, டான்ஸில்களில் வீக்கம், ஜலதோஷம் பிடித்த பிறகு விழுங்கமுடியாமை. விழுங்கும்போது அமுக்கும் வலியுடன் தொண்டையில் வீக்கம். இரணமுள்ள தொண்டை, பிசின் போன்ற கோழை மிகவும் கெட்டியாக இருப்பதால் வெளிப் படுத்த முடியாமை, எரிச்சல்.

சாப்பிடுதல், குடித்தல்: பசியின்மை, சாப்பிட்ட பிறகு முகத்தில் அனல் வீசுவதுபோன்றிருத்தல், மார்பில் துடிப்பு.

குமட்டல், வாயாலெடுப்பு: மார்பில் பிடிப்பு வலியுடன் விக்கல் எடுத்தல். வெற்று ஏப்பம், சாப்பிட்ட உணவையொத்த அல்லது கசப்பான ஏப்பம். வாயிலிருந்து நீர்வடிதலுடன் கூடிய குமட்டல்.

வயிறு: காலி, பசியுள்ள வயிறு, வயிற்றில் உருள்வது போன்று இருத்தல், காலையாகாரத்திற்குப் பிறகு அதிக அசௌகரியம். வயிற்றில் புழு இருப்பதுபோன்று பிடுங்குதல். வயிற்றில் எரிச்சல், பிடிப்பு வலி, இவை பிறகு கைகளின் மேல்பாகத்திற்கும் வலது அக்குளிற்கும் செல்லுதல்.

அடிவயிறு: வயிற்றுவலி, தொப்பூழைச் சுற்றிலும் கசக்கும் வலி, அடிவயிறு துருத்தி யிருத்தல்.

மலம்: நடக்கும்போது அபானத்திற்கும் ஜனனேந்திரியத்திற்கும் நடுவே இருக்கும் இடத்தில், கிழிக்கும் பிடிப்பு வலிகள். வயிற்றுப்போக்குடன் அபானத்திற்கருகே கொப்புளங்கள். மலம் போகும்போதும் அதற்குப் பிறகு வெகுநேரம் வரையிலும் மலப்பையில் எரிச்சல். காலையில் பச்சையான குழகுழப்பான வயிற்றுப்போக்கு. சாப்பிட்ட பிறகு அபான வாயுவுடன் வயிற்றுப்போக்கு. மாதவிடாயின்போது காலரா போன்ற வயிற்றுப்போக்கு மலச்சிக்கலில் கடினமான சிறு சிறு உருண்டைகளாயிருக்கும் மலம், அதனால் மலங்கழிக்க சிரமப்படுதல். எரிச்சலும் இரணமும் உள்ள மூலங்கள்

மூத்திரம்: அடிக்கடி மூத்திரம் வருதல், இரவில் ஏராளம். களிமண்போன்ற வண்டு மூத்திரத்தினடியில் தங்குதல்.

ஆண்: இடதுபக்க இந்திரிய நரம்புகளில் வலி. விரைத்தல் வலியுடனிருத்தல்.

பெண்: வெகு சீக்கிரமாகவும் ஏராளமாகவும் ஏற்படும் மாதவிடாய், இரவில் அதிகம். முட்டையின் வெள்ளைக்கருவையொத்த வெள்ளைப்பாடு, தொப்பூழில் கசக்கும் உணர்ச்சியுடன் இருத்தல்.

சுவாசாசயங்கள்: கொரகொரப்பு, எரிச்சல். சிறு சிறு உருண்டைகளாக இருமும்போது கோழை வெளிவருதல். சிறு மூச்சு. திறந்த வெளியில் நடக்கும்போது மார்பில் வலியுடன் அழுக்கம். இருமல் பகலில் வரண்டும் இரவில் தளர்ந்தும் இருக்கும். பக்கங்களை மாற்றிப் படுத்

தாலோ வலது பக்கமாகப் படுத்தாலோ இருமல் அதிகமா குதல். குளிர்ச்சியான பதார்த்தங்களை உட்கொண்டாலும் அதிகமாகுதல். மார்பில் சிறுசிறு இடங்களில் எரிச்சல் தோன்றுதல்.

இருதயம்: கிழித்தல், இடது முன் கைக்குச்செல்லு தல். அனல் வீசுதல். பிறகு வியர்வை காணுதல்.

கழுத்து, முதுகு: விரைப்பான கழுத்து. முதுகில் வலி, சில்லிப்பு, தோள்பட்டைகளின் நடுவே சுளுக்கியிருப் பதுபோன்ற வலி.

கை, கால்கள்: மாலையிலும் படுத்திருக்கும்போதும் கால்களில் சில்லிப்பு. அக்குளிலிருக்கும் கோளங்களில் வீக்கம். அரைக்கிடுக்கில் சுளுக்கு. தோள்பட்டை மூட்டு களில் வாதம், சந்துவாதம், உட்கார்ந்தால் அதிகமாகுதல்.

தூக்கம்: கால்கள் சில்லிப்பாக இருப்பதால் நள்ளிரவு வரை தூங்காமலிருத்தல். கவலை, பயங்கர கனவுகள். தண்ணீர் விழுவதுபோன்ற கனவு. தொண்டையில் கிசு கிசுப்புடன் தும்மிக்கொண்டு இரவு 2 மணிக்கு விழித்துக் கொள்வார். இருமல்.

சருமம்: சரீரத்தில் பல பாகங்களிலும் அரிப்பு (மாலையில்). கரப்பான் சிரங்கு, சின்னம்மை.

சுரம்: அடிக்கடி அனல் வீசுவதும், பிறகு வியர்த் தலும். ஒவ்வொரு தடவை விழித்துக்கொள்ளும்போதும் தாகமில்லாமல் சில்லிப்பு ஏற்படுதல். அதிகாலையில் படுக் கையில் படுத்திருக்கும்போதும் நள்ளிரவிற்குப் பிறகும் ஏராளமான வியர்வை. உஷ்ணமும் சில்லிப்பும் மாறி மாறி

வருதல். தலை, உள்ளங்கை, உள்ளங்கால் முதலியவைகளில் வியர்வை.

போது: கொழுத்த மந்த சுபாவமுள்ள மனிதர்கள். பருத்த சரீரம், இளைத்த கால்கள்.

விசேஷங்கள்: இருதயம், தலை உபாதிகள், காலையில் அதிக அசௌகரியம். அடிவயிற்று உபாதிகள், பிற்பகலில் அதிக அசௌகரியம். கைகால்கள், சருமம், சுரம் முதலியவை மாலையில் அதிகம். திறந்த வெளியில் முகம் எரிதல். ஸ்னானம் செய்த பிறகு கண்ணெரிச்சல், குளிர்ந்த காற்றில் காதுகளில் எரிச்சல். சுரத்தின் உஷ்ணம் கதகதப்பான அறையில் அதிகமாகுதல். மார்பின் கனம் திறந்த வெளியில் நடந்தால் சௌகரியம்.

முறிவு: நக்ஸ்வாமிகா, காபியா.

அமோனியாகம் (Ammoniacum)

பிராங்கைல் குழாய்களில் நீடித்த அழற்சியும் அதனுல் கபமும். கயிறுபோன்ற கபம், வியாதியஸ்தர் மார்பைப் பிடித்துக்கொள்வார். தாராளமாகக் கபம் வரும். பிராங்கைல் அழற்சி, மார்பிலும் மற்ற பாகங்களிலும் பிடிப்பு வலி நெற்றியில் வலி, மங்கல் பார்வை, கண்களில் அருவுதல், உள்மூச்சு வாங்கும்போது மார்பில் அமுக்கம், சரீர முழுவதும் துடித்தல். மல்லார்ந்து படுத்தாலும் இடது பக்கமாகப் படுத்தாலும் துடிப்பு அதிகமாதல். வயதானவர்களின் பிராங்கைல் அழற்சியினுல் குளிர்காலத்தில் மஞ்சள் நிறமுள்ள கயிறுபோன்ற கபம் ஏராளமாக வெளிவருதல். சில சமயங்களில் ஏதாயினும் ஒன்று கிழிந்துபோய்விடுமென்ற உணர்ச்சி இருத்தல். (வெள்ளைக் கபம், கஷ்ட

சுவாசம். கீழே படுக்கமுடியாமை, பலவீனம், சில்லிப்பு, நீல முகம், வியர்வை, அடிக்கடி விசிறிக்கொள்ளப் பிரியம் ஆகியவை இருப்பின் ஆண்டிமோனியம் டார்ட்டாரிகம்.)

அயிலாந்தஸ் (Ailanthus)

குமட்டலும் வாயாலெடுப்பும். தசைகளில் அதிகத் தளர்ச்சி, புகையிலை விஷத்தினால் ஏற்படும் உபாதியை யொத்த வியாதி. பொதுவான மயக்கம், சரீரத்தளர்ச்சி, முதலியவைகளுடன் இருக்கும் ராடீக்கண் என்று சொல்லப் படும் அம்மை சுரத்திற்கு.

மனம்: ஞாபகம் இழத்தல், நடந்த காரியங்களை மறந்துவிடுதல். படிப்படியாக வரும் மயக்கம். அடிக்கடி பிதற்றலுடன் கூடிய மயக்கம், தூக்கமின்மை, அமைதி யின்மை. சுவப்பனத்தில் இருப்பது போன்றிருத்தல். மயக் கம். விருப்பு வெறுப்பற்று அலக்ஷியமாயிருக்கும் குணம். அரை மயக்கம், பிறர் பேசுவதை அறிந்துகொள்ள முடியாமை.

தலை: கிறுகிறுப்பு, சூடான முகம், உட்காரமுடி யாமை. மயக்கம். அமைதியின்மை, கவலை. பிறகு பிதற்றலும் மயக்கமும் உணர்ச்சியற்று இருத்தலும். தலை வழியாக ஏதோ மின்சார சக்தி போவது போன்ற உணர்ச்சி (இடது பக்கம்) அல்லது கை கால்களுக்குச் செல்லுதல். பொட்டுகள், பிடரித்தலை, நெற்றி முதலியவற்றில் கடுமை யான தலைவலி, சூடான சிவந்த முகம்.

கண்கள்: நீர் ததும்புதல், அதிக இரத்தம் கூடுதல், தூக்கத்திலிருந்து எழுப்பினால் திகைப்பார். இரவில் மூடின கண்களுக்கு முன்பாக மின்னல் போன்ற வெளிச்சம் தோன்

றித் தோன்றி மறைதல். வெளிச்சத்தில் கண்கள் கூசுதல், இரத்தமும் வெளியாதல். எரிச்சல், வலி. கண்களைச் சுற்றிலும் கறுப்பு, நீல நிறமுள்ள வளையங்கள்.

காதுகள்: விழுங்கும்போது வலி.

மூக்கு: வாசனையறியும் சக்தியை இழத்தல். அதிகமான, தண்ணீர்போன்ற பதார்த்தம் வெளியாகுதல், அல்லது இரத்தம் போன்ற பதார்த்தம் வெளியாகுதல். மூக்கடைப்பு.

வாய்: பற்களில் அழுக்கு படிந்திருத்தல். நாக்கு வரண்டும் உலர்ந்தும் வெடித்தும் இருத்தல். அல்லது நாக்கு ஈரமாகவும் வெண்மையான மாசு படிந்தும் இருத்தல். காரமான புளிப்பு ருசி. நாற்றம்.

தொண்டை: சிவப்பு அல்லது பழுப்பு நிறம், வீக்கம், நீர்க்கட்டியிருத்தல். டான்சில்களில் கடுரமானவை போன்று இரணங்கள் நிறைந்திருத்தல். தொண்டையிலிருந்தும் யாதொன்றும் வெளிவருவதில்லை. வெளிக்கழுத்து மிருதுவாகவும் அதிக வலியுடனும், வீங்கியும் இருத்தல். தொண்டையிலும் டான்சில்களிலும் அழற்சி, இரணமாயிருத்தல். கெட்டுப்போன கறுப்பு நிறமுள்ள இரத்தமோ அல்லது மெல்லிய நாற்றமுள்ள நீரோ கசிதல்.

வயிறு: காலியாக இருப்பதுபோன்ற உணர்ச்சி. தாகம், சாப்பிட்ட பிறகு வாயாலெடுத்தல்.

மலம்: மெல்லியதாய் தண்ணீர்போன்று, அதிக நாற்றத்துடன் மூத்திரம் போகும்போது தானகவே வெளியாகும் மலம். கயிறுபோன்ற புழுக்கள்.

சுவாசம்: அவசரம், ஒழுங்கீனம், கனம்.

இருமல் : படுக்கப்போகும்போதும் அல்லது படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதும் கடுமையாக இடைவிடாமலும் வரண்டும் குரைக்கும் சப்தமுமுள்ள இருமல். வெளிவரும் கோழை, சளி, இரத்தம் கலந்தும், கசப்பாகவும் மஞ்சளாகவும் இருத்தல். சுவாசாசயங்களில் இரணவலி, வலது பக்கத்தில் எரிச்சல்.

கழுத்து, முதுகு : கழுத்தின் பின்புறத்திலும் தலையிலும் வலி, கழுத்து மிருதுவாகவும் வீங்கியும் இருத்தல், தோள்ப்பட்டைகளின் நடுவே வலி.

கை, கால்கள் : சரீரம் முழுவதும் கட்டைவிரல்களிலும் விரல் நகங்களிலும் பெரிய கொப்புளங்கள் அல்லது வேர்க்குரு போன்று வெடித்தல், இடதுகால் மறத்துப்போய் மயிர்க்கூச்சலெடுத்தல், காலின்மேலே எலி ஓடுவது போன்ற உணர்ச்சி. கை, கால்கள், உள்ளங்கை உள்ளங்கால்கள் இவைகளில் எரிச்சல்.

நரம்புகள் : மூளையிலிருந்து கை கால்களுக்கு மின்சார விசைபோன்ற உணர்ச்சி ஓடுதல். தளர்ச்சி, களைப்பு.

சுரம் : காலை எட்டு மணிக்குச் சில்லிப்பு, சூடு, வியர்வை இம்மூன்றும் கலந்திருத்தல். சில்லிப்பு ஏற்படும் போது வாயாலெடுப்பு, இடுப்பில் குத்து வலி, பசி, காலியாயிருக்கும் உணர்ச்சி, பின்கழுத்தில் வலி, மயக்கம், வாய் அகலத் திறந்துவிடுதல், தொண்டை வீக்கம், மூக்கில் அழுக்கு நிறைந்திருத்தல். உடம்பில் சிறு சிறு வெடிப்புகள் நீல நிறமுள்ள புள்ளிகள்.

சருமம் : சிவப்புப்புள்ளிகள், அடையடையாக வேர்க்குருக் கட்டிகளைபொத்த வெடிப்புகள், மங்கலான நிறம்,

முக்கியமாக முகத்திலும் நெற்றியிலும், அழுகின மாமிச வாசனை. அழுக்கினவுடன் சிவப்பு நிறமும், வெடிப்புகளும் மறைதல்.

போது: புஷ்பங்களின் வாசனையினால் ஆஸ்துமா வருதல். மந்தமான டைபாய்டு சுரம். பித்த சரீரமுள்ள, பருமனான மனிதர்கள்.

உறவு: ஆலோ ஸ்கோட்ரின, ரஸ்டாக்ஸ், நக்ஸ் வாமிகா இம்மூன்றும் இவ்வௌஷதத்திற்கு முறிவுகளாம்.

அர்ஜண்டம் நைட்ரிகம்
(Argentum Nitricum)

நடுக்கல், முறுக்குதல், வலிப்பு, அமைதியின்மை, கொட்டும் வலிகள், சரீரம் உருக்குலைந்தும் உலர்ந்துமுள்ள மனிதர்கள், எப்பொழுதும் அவசரம். குழந்தை அதிக வயதாகிவிட்டதுபோன்று தோன்றுதல். தித்திப்பில் பிரியம். அடிவயிற்றில் வாயு. கைகால்களைத் தன் விருப்பப் படி அசைக்கமுடியாமை. நடக்கும்போது நேராகப் பார்த்துக்கொண்டு நடக்காவிட்டால் நடுக்கல், சீழுள்ள கண்ணோய் பிறந்த சிசுக்களின் கண்ணோய், நசுக்கின பசலைக்கீரை போன்ற மலம், தொண்டை அழற்சி. தொண்டையில் சிலாம்பு இருப்பதுபோன்ற உணர்ச்சி. தொண்டையில் கோழைக் கட்டும் வியாதி. பலவீனமான முள்ளந்தண்டுடன் இடுப்பிற்குக் கீழிருக்கும் பாரிச வாயு. சமயங்களுக்குத் தக்கதான வார்த்தை ஞாபகத்திற்கு வாராமை, ஞாபகசக்தியை இழத்தல். ஒவ்வொருநாள் கழிவதும் யுகம்போன்று தோன்றுதல்; ஏதோ கெடுதல் வரப்போகிறதென்று பயப்படுதல், தெருவில் நடந்துபோகும்போது கோடியிலிருக்கும்

வீடு தன்மீது இடிந்துவிழுமென்று பயப்படுதல், தட்டுத்தடுமாறி நடத்தல், பக்கங்களில் விழுதல். துடிக்கும், வெடிக்கும் தலைவலி, சில்லிப்பு, அழுக்குவது, இறுகக் கட்டுவது இவைகளினல் சமனப்படும். தலை பெரிதாயிருப்பது போன்ற உணர்ச்சி. கண் இமைகளில் நுண்ணிய கொப்புளங்கள், உள் நாக்கில் கறுத்த சிவப்பு நிறம், அடிக்கடி கனைத்தல், விழுங்குதல், விழுங்கும்போது சிரமம். சீரணமாகாத ஆகாரம் வாயில் நிறைந்த எப்பம். வாயாலெடுக்கப்பட்ட பதார்த்தம் படுக்கைத் துணியில் கறுப்புக் கறையை உண்டாக்கும். இச்சையில்லாமலும் இடைவிடாமலும் மூத்திரம் வெளியாகுதல், வயிற்றுப்போக்கு, சப்தத்துடன் வெளியாகும் பச்சை நிறமுள்ள மலம், வீட்டிலிருந்து வெளியே புறப்படும்போது வருதல். சர்க்கரைத் தின்ன அதிக அவா. மேக வெட்டை வெளியாவதைத் தடைப்படுத்தியதால் எற்பட்ட விரை அழற்சி. யோனித் துவாரத்திலும் கருப்பையிலும் இரணங்கள், கருப்பை நழுவுதல், வெள்ளைப்பாடு, வெளியாகும் பதார்த்தம், ஏராளமாகவும் மஞ்சள் நிறமாகவும் காரமாகவும் இருத்தல். வலது பக்கமாகப் படுத்தால் துடிப்பு. சரீர முழுவதுமே துடித்தல். வலிப்பிலும், காக்கை வலிப்பிலும் வலிப்புவந்த சில நாட்களுக்கெல்லாம் ஒரு கண் மற்றொன்றைவிட பெரியதாகிவிடுதல். மூட்டுகளிலும் சுருக்கங்களிலும் மாமிசம் அதிகமாயிருத்தல். இரவில் நடுக்கலுடன் கூடிய காக்கை வலிப்பு.

மனம்: ஞாபக சக்தியை இழத்தல், பகுத்தறியும் உணர்ச்சி குறைதல். மூடத்தனமான காரியங்களைச் செய்தல். சமயங்களுக்குத்தக்க வார்த்தை ஞாபகத்துக்கு வராமை. ஏதோ தனக்கு கெடுதல் வரப்போகிறதென்று பயப்படுதல். காலம் மெதுவாகச் செல்லுதல். அடிக்கடி நடையை வேகப்படுத்தி நடத்தல். தெருக்கோடியி

விருக்கும் கட்டிடங்கள் தன்மீது விழுந்துவிடுமென்ற பயம். தன்னுடைய வியாதி தீர்க்கமுடியாதென்ற பயம். சீக்கிரத்தில் கோபம் வருதல், கோபமாயிருக்கும்போது இருமலும், மார்பு, தலை இவைகளில் பிடிப்பு வலிகளும் ஏற்படும். அறைச் சன்னல் வழியாக வெளியே குதிக்க வேண்டுமென்ற மனத்தூண்டுதல். தனக்குமேல் ஏதோ ஒருமேகம் தொங்கிக் கொண்டிருக்கிறது என்ற நினைப்பு. வெளியூருக்கோ, கோயிலுக்கோ, கூட்டங்களுக்கோ போகத் தயாரா யிருக்கும்போது வயிற்றுப்போக்கு ஏற்படுதல். எடுத்துக் கொண்ட வேலையை முடிக்க முடியுமோ முடியாதோ வென்ற பயத்தினால் வேலையை எடுத்துக் கொள்ளாமை. யாராவது தன்னுடன் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தல்.

தலை: இருட்டில் நடக்கும்போது தடுமாறுதல். நடுக்கத்துடனும் காதுகளில் பஸ் என்ற ஒலியுடனும் கூடிய கிறு கிறுப்பு. கண்களை இருக மூடிக்கொண்டு நடந்தால் கிறு கிறுப்பு. காக்கை வலிப்பில் வீல் என்ற கதறல், கீழே விழுதல், தசைகள் முறுக்குதல், தொண்டை அசைதல், ஆழ்ந்த மயக்கம், வாயில் நுரை தள்ளுதல், நாக்கைக் கடித்தல், பிறகு மூன்று மணி நேரத்திற்கு ஆழ்ந்த தூக்கம். துடிப்பு, எரிச்சல், இவைகளுடன் தலை வலி, சில்லிப்பு, இறுகக் கட்டுதல் முதலியவைகளால் சமனப்படும். தலை பெரிதாயிருக்கும் உணர்ச்சி. மனதினால் வேலை செய்தால் தலை வலி. தலையின் இடது பாதியில் வலி, பெரிதா யிருக்கும் உணர்ச்சி.

கண்கள்: பிறந்த சிசுக்களின் கண்ணோய், சீழ், பூந்தசை, முதலியவை வெளியாகுதலுடன் கூடிய கடுமையான கண்ணோய்க்கு. கண் விழிகள் இரணமாயும், நிலையற்றும்

இருத்தல். கண்களுக்கு முன்பாக பாம்புகள் போன்ற உருவங்கள் அசைந்துகொண்டு இருத்தல். இமைகளில் நுண்ணிய கொப்புளங்கள். குளிர்ந்த காற்று, குளிர்ந்த ஒற்றிடங்களினுல் சமனப்படுதல். வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை. காக்கை வலிப்பு ஏற்பட்ட சில நாட்களுக்கெல்லாம் ஒரு கண் மாத்திரம் பெரியதாகிவிடுதல். கண்ணழற்சியில் கண் வீங்குதல் மங்கலான பார்வை.

காதுகள்: காதுகளில் பஸ்ஸ் என்ற ஒலி.

முகம்: வியாதியுற்றும் குழிந்தும் வெளுத்த மஞ்சள் நிறமும் கறுத்தும் அகாலத்திலேயே கிழத்தன்மை அடைந்தும் இருத்தல். கன்னங்களில் வட்டமாகச் சிவந்திருத்தல். பேசும்போது உதடுகளில் நடுக்கம். முகத்தில் நரம்பு சம்பந்தமான வலிப்புகள். பற்களில் வலி, வாயில் புளித்த ருசி.

தொண்டை: தொண்டையில் ஏதோ சிறு சிலாம்பு இருப்பது போன்ற உணர்ச்சி. தொண்டையிலிருந்து கயிறு போன்ற கோழை இருமும்போது வெளியாகும், குளிர்ந்த பானங்களால் சௌகரியம். விழுங்குவதற்கு சிரமம். சருமத்தின் மேல் சதை வளருதல். அடிநாக்கு கறுத்த சிவப்பு நிறமாயிருத்தல்.

நாக்கு: நுனி நாக்கு சிவந்தும் வலியுடனும் இருக்கும். நாக்கிலுண்டாகும் சிரங்குகள் விரைப்பாகவும் கண்ணுக்கு நன்ருய் புலப்படும் வண்ணமும் இருக்கும்.

விருப்பு, வெறுப்பு: சர்க்கரை தின்ன அதிக அவா. தவிர பனிக்கட்டி, ஐஸ்க்ரீம், குளிர்ந்த பதார்த்தங்கள் முதலியவைகள் தின்னவும் பிரியம்.

வயிறு: ஜீரணமாகாத ஆகாரம் ஏப்பம் வரும்போது வாய் நிறைய வருதல். வாயாலெடுக்கப்பட்ட பதார்த்தம் படுக்கைத் துணியை கறுப்பாகச் செய்யும். குமட்டல். வாயாலெடுக்கப்பட்ட பதார்த்தத்தில் இரத்தம் தோய்ந்து இருத்தல். ஆகாரம், பானம் முதலியவைகளினால் சமனப் படல். வயிற்றில் புண்கள். வலி மார்புக்கும், தோள் பட்டைகளுக்கும், அடி வயிற்றுக்கும் செல்லுதல். அதிக மான தாகம். ஐஸ்க்ரீம் சாப்பிட்டபிறகு வயிற்று வலி. வலி எல்லாப் பக்கங்களுக்கும் பரவுதல், சாப்பிட்டவுடன் அதிகமாகுதல். வயிற்றில் வாயு. சாப்பிட்டவுடன் வயிறு அதிகமாக வெளித்துருத்துதல். குளிர்ந்த பானங்கள் சமனப்படுத்தும். அமுக்கும் தலைவலியுடனும் வயிற்றில் அமுக்கத்துடனும் நள்ளிரவில் விழித்துக் கொள்ளுதல். வயிற்று வலி. ஏப்பம் விடுவதனால் சௌகரியம்.

அடிவயிறு: அதிகமான வெளித்துருத்தல், கடபுடா சப்தம், பொருமல், ஆடை அணிய சகிக்காமை.

மலம்: வயிற்றுப் போக்கு, சப்தத்துடன் நசுக்கின பசலைக்கீரை போன்ற மலம். வீட்டிலிருந்து வெளியில் புறப்படும் சமயத்திலோ அல்லது தண்ணீர் குடித்தவுட னேயோ அவசரமாக மலம் வருதல். ஏராளமாக எரிச்ச லுடன் இருத்தல். வயிற்றுக்கடுப்பில் மலம் இரத்தம் கலந் தும் குழகுழப்பாயும் எரிச்சலுடனும் வெளியாகும். தாய்ப் பால் குடிக்கும் குழந்தை அல்லது கொடுக்கும் தாயாருக்கு சர்க்கரை தின்ன அவா, அதனால் குழந்தைக்கு வயிற்றுப் போக்கு காணுதல். மலம் வெளியில் வந்த பிறகு பச்சை நிறத்தை அடைதல்.

மூத்திரம்: இடைவிடாமலும் இச்சையில்லாமலும் வெளியாகும். சுரத்துடன் இரத்தமயமான மூத்திரம் பிரியும்போது எரிச்சல், கடைசி இரண்டொரு சொட்டுகள் விடும்போது சிரமம், மூத்திரக் கருவிகளில் சிலாய்பு இருப்பது போன்ற வலி. இரவில் மூத்திரம் அதிகமாகுதல். இரவில் படுக்கை நனைதல்.

ஆண்: மேகவெட்டை வெளியாவதைத் தடைப்படுத்தியதால் ஏற்பட்ட விரை அழற்சி. வலியுடன் ஆண் குறி விரைத்தல், ஏராளமான போக்குடன் எரிச்சலும் குத்தலும் உள்ள வெட்டை.

பெண்: கருப்பையிலும் யோனித் துவாரத்திலும் இரணங்கள். ஏராளமாகவும் மஞ்சள் நிறமும் பட்ட இடங்களைப் புண்ணாக்கும் வெள்ளைப்பாடு. மாதவிடாயில் அதிக சிரமம். புணர்ச்சி செய்யும்போது வலி, பிறகு யோனித் துவாரத்திலிருந்து இரத்தப்பெருக்கு.

கருப்பம்: அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுதல். கருப்பமாயிருக்கும்போது அடி வயிற்றில் வாயு, வெடித்துவிடும் போலிருத்தல், பால் குடிக்கும் குழந்தைகளின் சரீர இளைப்பு.

சுவாசாசயம்: சங்கீதம் பாடுபவர்களுக்கு இருக்கும் நீடித்த தொண்டைப் புண். நடுப் பகலிலும் மாலையிலும் அயர்ச்சியைத் தரும் இருமல். வெளிவரும் கோழையில் சிறிது இரத்தம் கலந்திருத்தல். பூந்தசைகளில் அழற்சி. ஜனக்கூட்டம் உள்ள இடங்களில் மூச்சுவிட சிரமம். மாடிப்படி ஏறும்போது ஆஸ்துமா. மார்பில் எரிச்சல், கனம்.

இருதயம்: இருதய நோய். வலி, மூச்சடைத்து விடுமோ வென்ற பயம், மார்பைச் சுற்றி இருகக் கட்டியிருக்கும் உணர்ச்சி. மாடிக்குச் செல்லும்போது அதிகமான வலி. அதனால் மார்பை இரு கைகளாலும் அமுக்கிக் கொள்ளுதல். வலது பக்கமாகப் படுக்கும்போது துடிப்பு அதிகமாகுதல். சரீர முழுவதுமே துடித்தல். எரிச்சல், மூச்சுத் திணறுதல்.

கழுத்து: கழுத்துக் கோளங்கள் கடினமாகுதல்.

நரம்பு: காக்கை வலிப்பு: பயத்தினால் ஏற்பட்டவை, மாதவிடாயின்போது வருதல், இரவில் வருதல். வலிப்பு வருவதற்கு பல மணி நேரம் அல்லது பல நாட்களுக்கு முன்னமேயே கண் விழிகள் அகன்று விடுதல். வலிப்பு வந்துபோனபிறகு அமைதியின்மை, கை கால்கள் நடுங்குதல்.

சருமம்: படுக்கையிலேயே படுத்திருப்பதினால் சரீரத்தில் ஏற்படும் அக்கியை ஒத்த புண்கள். பூந்தசைகளில் குழிப் பூண்கள். சருமம் மடிப்பு மடிப்பாகச் சுருங்குதல். குழந்தை ஒட்டி உலர்ந்து போன கிழவன் போன்று தோன்றுதல்.

தூக்கம்: வலப்பக்கமாகப் படுக்க முடியாது. அப்படிப் படுத்தால் துடிப்பு அதிகமாகுதல். இறந்த சிநேகிதர்களையும், பிசாசுகளையும் பற்றிய கனவு. கனவில் பாம்புகள் தோன்றுதல்.

சுரம்: சில்லிப்பு, தாகமின்மை, காலையிலும் இரவிலும் வியர்வை.

உணர்ச்சி: அவயவங்கள் பெரிதாகும் உணர்ச்சி. பல இடங்களிலும் சிலாம்பு இருப்பது போன்ற தோற்றம். மறத்தல், நடுக்கம், பலவீனம், வலி.

கேபிகள்: இளைப்பு கால்களில் ஆரம்பித்தல். கால்களில் நீர்வீக்கம்.

விசேஷம்: சர்க்கரை, மூடின அறைகள், ஜனக் கூட்டம், பிரகாசமான வெளிச்சம் இவைகளினால் உபாதி அதிகம். குளிர்ந்த காற்று, குளிர்ந்த தண்ணீரில் ஸ்னானம், இறுகக் கட்டுதல் முதலியவைகளால் சமனம்.

முறிவு: நேட்ரம் மூர், உள் உபயோகமாயினும் வெளி உபயோகமாயினும். ஆர்ஸனிகம், நைட்ரிக் ஆஸிட், பல்ஸடில்லா.

நன்கு அனுசரிப்பவை: கல்கேரியா, காலீ கார்ப், லைகோபாடியம், மேர்கூறியஸ், பல்ஸடில்லா, ஸைலீஷியா முதலியவை.

அர்ஜண்டம் மெடாலிகம் (Argentum Metallicum)

தொண்டை வியாதிகள், இந்திரிய சம்பந்தமான வியாதிகள், சுவாசம் செல்லும் வழிகள், சிரண சம்பந்தமான உபாதிகள் ஆகியவைகளில் இவ்வௌஷதம் வெகுவாக உபயோகப்படுகிறது. அர்ஜண்டம் நைட்ரிகத்தைப் போன்ற அதிகமான வலிகள் இவ்வௌஷதத்தில் இல்லை. ஆயினும் பலவீனம், இளைப்பு, வெளுத்த சரீரம் முதலியவை இருக்கின்றன. உயரமான, மெலிந்த, கோப குணமுள்ள மனிதர்கள். தலையில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி, கால்களில் நடுக்கம். கண்களிலிருந்து கெட்டியான பழுப்புள்ள

பிசுக்கென்றிருக்கும் புளிச்சை வெளிவருதல். பாதரசம், முட்டி மைதினம் இவைகளால் சம்பவிக்கும் உபாதிகள். ஆண்குறி விரைக்காமலேயே இரவுகளில் இந்திரிய ஸ்கலிதம். விரைகளில் நசுக்குவது போன்ற வலி. கருப்பை இடம் பெயருதல். முதுகிலும் இடது சினைப் பையிலும் வலி, முன்னும் பின்னும் போய்க்கொண்டு இருத்தல். நாற்ற முள்ள பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் வெள்ளைப் பாடு, திறந்தவெளியில் அதிகமாகுதல். கருப்பையின் கழுத்துப் பாகத்தில் குழிப்புண்கள். நாட்பட்ட தொண்டை அழர்ச்சி. க்ஷய சம்பந்தமுள்ள தொண்டை. பிரசங்கி களின் தொண்டைக் கரகரப்பு, சிரித்தால் இருமல் அதிக மாகுதல், தொண்டை புண்ணையும் வலியுடனும் வெளி வரும் கோழை பாகு போன்று பிசுக்கென்று இருப்பதும், மார்பில் பலவீனம், உரக்கப்படித்தால் தொண்டை கமரு தல், இருமுதல். கலங்கலாக இருக்கும் மூத்திரம் ஏராளமாக வெளியாகுதல். மூத்திரத்தில் தித்திப்பில்லாத நீரிழிவு வியாதி. முழங்கால்களிலும் அக்குள்களிலும் வீக்கம். கால்களில் நீர் அதைப்பு. ஸ்திரீகளுக்கு மாதவிடாய் சுயமாக நிற்கும் காலங்களில் ஏற்படும் இரத்தப்பெருக்கு.

மனம்: சரீரத் தளர்ச்சி, ஞாபக சக்தியும் பகுத்தறி யும் குணமும் அழிதல், கெட்ட விஷயங்களைப் பற்றியும் விரைவாக பேசுதல்.

தலை: ஓடும் தண்ணீரைப் பார்க்கும்போது மயக்கம் வருவது போன்று இருத்தல், தலையில் இரத்தப் பெருக்கு, அதனால் கன்னங்கள் சிவத்தல், நெற்றியில் வலி, பொட்டு களில் அமுக்கும் வலி, உஷ்ணம் அமுக்குவது, இறுகத் துணி கொண்டு கட்டுவது முதலியவைகளால் சௌகரியம், தலைச் சுற்றல்.

மூக்கு: எலும்புகள் கட்டையாகுதல், காலையில் அடிக்கடி தும்மலுடன் கடுமையான ஏராளமான நீர் ஒழுகுதல், மூக்கில் ஊரும் உணர்ச்சி, பிறகு இரத்தம் வருதல்.

கண்கள்: இமைகளின் ஓரங்களில் கடினமான கிறுக்கட்டிகள். கண்களிலிருந்து பழுப்பு நிறமுள்ள கெட்டியான பிசுக்கென்று இருக்கும் புளிச்சை.

வாய்: காய்ந்திருத்தல்; நாற்றமுள்ள சுவாசம்.

தொண்டை: தொண்டை இரணம். நாட்பட்ட இரணம். தொண்டையில் சதைவளரும் வியாதி. இருமும் போதும் வெளி மூச்சு விடும் போதும் தொண்டையில் வலி, புண் இருப்பது போன்றிருத்தல், ஆனால் விழுங்கும் போது ஒன்றும் இருப்பதில்லை. தொண்டையில் பழுப்பு நிறமுள்ள பாகு போன்ற கோழை, இருமினால் சுலபமாக வெளிவருதல்.

வயிறு: சாப்பிட்ட பிறகும் பசி, அதிகமான பசி. வாயு வலி. கவலை, வயிற்றின் குழியில் அமுக்கும் உணர்ச்சி, மார்பு வரையில் எரிச்சல், சுரத்திலும் தாகமின்மை.

அடி வயிறு: துருத்திபிருத்தல், குடைதல், பசி, வலித்தல்.

மலம்: அடிக்கடியும் கொஞ்சமாகவும் வரண்டும் வெளியாகும்.

மூத்திரம்: நீரழிவு வியாதி, தித்திப்புள்ள கலங்கிய மூத்திரம், இரவில் ஏராளமாக உற்பத்தியாகுதல்.

ஆண்: நாட்பட்ட மூத்திர மேகம், வெளியாகும் பதார்த்தம் கெட்டியாகவும் மஞ்சளாகவும் அல்லது பசுமை கலந்த மஞ்சள் நிறமாகவும் பிறகு மெல்லியதாயும் வெள்ளை நிறமாகவும் இருத்தல். அனேகமாக வலி இருப்பதில்லை. நபும்ஸகத்துவம். விரைகளில் நெசுக்கும் வலி, முக்கியமாக வலது விரையில் நடக்கும் போதும் இடுப்பில் கட்டியிருக்கும் ஆடை படுவதாலும் உபாதி அதிகமாகும். ஏராளமான மேகவெட்டை வெளியேறுதல். பீஜமும் கால்களும் நீர் அதைப்பினால் வீங்குதல்.

பெண்: இடது சினைப்பைப் புற்றுகள், வலி முதுகிலிருந்து இடது தொடை வரையிலும் பரவுதல். கருப்பை நழுவுதல், சாதாரணப் புற்று, கடினமான புற்று. மஞ்சள் நிறம், காரம், நாற்றம், இரத்தம் கலந்திருத்தல், அழுகின நாற்றம், இவைகளுடன் கூடிய வெள்ளைப்பாடு கசிதல். கருப்பையில் குழிப் புண்கள். கருப்பையின் கழுத்தில் குழிப்புண் உண்டாகுதல். இடது சினைப்பை வளர்வது போன்ற உணர்ச்சி.

குரல்வளை: இருமும்போது குரல்வளையின் மேற்பாகத்தில் வலி. விழுங்கும் போது வலி தெரிவதில்லை. பேசினாலும் பாடினாலும் வலி அதிகமாகுதல். க்ஷய சம்பந்தமுள்ள வியாதிகள். சிரிப்பதினால் கோழையுண்டாகி இருமல் ஏற்படுதல்.

மார்பு: மார்பில் அதிக பலவீனம், இடது பக்கத்தில் அதிகம், தொண்டையில் குறுகுறுப்பு உணர்ச்சியுடன் சிறிய இருமல், கோழை சுலபமாக வெளிவருதல், கடைசி விலா வெலும்புப் பக்கத்தில் கொப்புளம்.

இருதயம், நாடி: விட்டு விட்டு நாடி அடித்தல். வேலை செய்தாலும் மல்லார்ந்து படுத்தாலும் துடிப்பு அதிகமாகுதல், முறுக்கும், நடுக்கும் உணர்ச்சி.

கை, கால்கள்: மறத்தல், விரைப்பு, மூட்டுகளில் இரண வலி, இழுத்தல், நடக்கும்போது இடுப்பில் பிடிப்பு வலி, காலையில் விரைப்பாக இருத்தல், நடக்கும்போது முழங்கால்கள் முட்டி தட்டுதல், கால்களில் நீர்ச் சுரப்பு, வீக்கம், நடுக்கம், பாரிச வாயு, வலது முழங்காலிலும் தொடையிலும் வாதம்.

நரம்புகள், கேபிகள்: காக்கை வலிப்பிற்குப் பிறகு மயக்கத்துடன் கூடிய வெறி. அங்கு மிங்கும் குதித்தல், சமீபத்தில் இருப்பவர்களை அடித்தல். நடுக்கம், கிறுகிறுப்பு, தூங்கும்போது வலிப்பு ஆரம்பமாகுதல், அதனால் தூக்கம் கெடுதல், காலையில் பலவீனம், நரம்புகளில் விவரிக்க முடியாத வலி, காதுக் கோளங்களிலும் தொண்டைக் கோளங்களிலும் இழுக்கும் வலி, எலும்புகள் மிருதுவாகவும் வலியுடனும் இருத்தல், அகாலக் கிழத்தனம்.

தூக்கம்: தூங்கின பிறகு உபாதிகள் அதிகப்படும் தூங்கின பிறகும் களைத்திருக்கும் போதும் மின்சார விசை அடிப்பது போன்ற உணர்ச்சி.

சுரம்: விடாச் சுரம், அல்லது முறைச் சுரம், காலை 11 மணியிலிருந்து பகல் 1 மணி வரை. சில இடங்களில் சில்லிப்பு உணர்ச்சி, முதுகிலிருந்து சில்லிப்புத் தோன்றுதல், போர்த்திக்கொள்ளாமல் இருக்க முடியாது. அடி வயிற்றிலும் மார்பிலும் நள்ளிரவில் வியர்வை. காலை 11 மணிக்கு வரும் முறைச் சுரம். சுரத்துடன் தாகமின்மை, தலையில் தவிர மற்ற இடங்களில் சூடு.

முறிவு: மேர்கூறியஸ், பல்ஸடில்லா.

விசேஷம்: தூங்கினவுடன், நடுப்பகல், களைப்பாறுதல், இவைகளினுல் உபாதி அதிகம். நடந்தால் சௌகரியம். (முதுகு, கை கால்கள்.)

அரலியா ரஸிமோஸா
(Aralia Racemosa)

கோடையில் வரும் ஆஸ்துமா. மூச்சுவிட சிரமம். இருமல், படுத்தால் அதிகமாகும். முதன் முதலில் கபம் கொஞ்சமாகவும் பிறகு அதிகமாகவும் சூடாகவும் உப்புக் கரித்துக்கொண்டும் இருக்கும். இருமினுல் தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளல், பிறகு இருமலினுல் தூங்க முடியாமை, தூங்கிய பிறகு இருமல் அதிகமாகுதல், தொண்டையில் இஸ்ஸ் என்ற சப்தம், மூச்சு நின்றுவிடும் போலிருத்தல், மூச்சுவிட முடியாமை, எழுந்து உட்கார வேண்டி வருதல், அசையவோ நடக்கவோ முடியாமை, மார்பின் நடுவில் எரிச்சல், இரண வலி, முன்புறமாக குனியும்போது ஆஸ்துமா குறைந்தும் மூச்சு வாங்கும்போது அதிகமாயும் இருத்தல், மார்பு விரிந்து கொடுப்பதற்காக தோள்பட்டை உயருதல்.

சுவாசாசய அவயவங்கள்: இஸ் என்ற சப்தம், உள் மூச்சு வாங்கும்போது அதிகம். உட்காரவேண்டி வருதல். முதன் முதலாகத் தூங்கும்போதே இருமல் எழுப்பிவிடுதல், ஆஸ்துமா. மார்பு கட்டப்பட்டது போன்றிருத்தல், நடு மார்பில் இரண வலி, சுவாசாசயத்திலிருந்து இரத்தப் பெருக்கு.

அரேனியா டயாடிமா
(Aranea Diadema)

தலை வலி, ஈரநப்புள்ள பருவம், சதுப்பு நிலத்தில் வசித்தல் முதலியவைகளினால் அதிகமாகுதல். தலை வலிக்குப் பிறகு வாயுபெடுப்பு. சுருட்டுக் குடித்தால் தலை வலி அதிகமாகும். திறந்த வெளியில் தலை வலி அறவே ஒழிதல். கை கால்கள் எப்பொழுதுமே சில்லென்றிருத்தல். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் தப்பாமல் சுரம் வருதல். இரவில் கீழே படுத்தவுடன் பற்களில் திடீரென்று வரும் கடுமையான வலி, மழைக்காலம், ஈரம், ஸ்னானம் செய்வது, சதுப்புள்ள நிலங்களில் வசித்தல் முதலியவைகளால் அதிகம். ஆஸ்துமாவில் கீழே படுக்க முடியாமை, சுருட்டுக் குடித்தால் சௌகரியம்.

சில்லிப்பு பிரதானமாக இருத்தல், சுரமின்மை. சதுப்பு நிலங்களில் வசிப்பதால் உண்டாகும் சுரம், கல்லீரல் பருத்தல், இரத்தப் பெருக்கு, முன் கைகள், மேற்கைகள், காலின் பேரெலும்பு இவைகளிலுள்ள எலும்புகளில் வலி, கைகள் மிகவும் வீங்கியிருப்பது போன்ற உணர்ச்சி. அடி வயிற்றில் வலியுடன் மலம் மெல்லிய தண்ணீர் போன்று வெளியாகுதல்.

அல்லியம் ஸீபா (Allium Cepa)

சலதோஷம், மூக்கிலிருந்து பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் நீரும், கண்களிலிருந்து காரமற்ற நீரும் வெளியாகும். இவ்விஷயத்தில் யூபரேஷியா என்னும் ஔஷதம் இதற்கு நேர் எதிரிடைக் குறிகளைக் கொண்டிருக்கிறது. அதாவது மூக்கிலிருந்து காரமற்ற நீரும் கண்களிலிருந்து பட்ட இடங்களில் புண்ணை யேற்படுத்தும் நீரும் வெளியாகும்.

மனம்: கவலை.

தலை: காலையிலும் வீட்டிலிருக்கும்போதும் ஜல தோஷத்துடன் பின் தலையிலும் நெற்றியிலும் தலைவலி. திறந்த வெளியில் சௌகரியம். பொட்டுகளில் உடைக்கும், கிழிக்கும், துடிக்கும் தலைவலி, நெற்றிவரை பரவுதல். வெளிச்சத்தைப் பார்க்க சகிக்காமை.

கண்கள்: வெளியாகும் நீர் காரமற்றதாகவும், பட்ட இடங்களைப் புண்ணாக்காமலும் இருக்கும். இடது கண்ணில் அதிகம். கண் விழிகளில் சிவப்பு, வெளிச்சத்தில் கண்கள் கூசுதல், அரித்தல், எரிதல்.

மூக்கு: வேக்காடு. ஏராளமான நீர் முதலில் இடது மூக்கிலிருந்தும் பிறகு வலது மூக்கிலிருந்தும் வெளியாகுதல். காரமான நீர் வெளியாவதுடன் தும்மல் ஏற்படுதல். துடைத்தால் அதிகமாகுதல். வீட்டிற்குள் நுழையும்போது நீர்வடிய ஆரம்பித்தல். ஏராளமான ஜல தோஷம், தலைவலி, நீருள்ள மூக்கு, இருமல், சூடு, தாகம், கைகளில் நடுக்கம், இரவிலும் வீட்டிலும் அதிகம், திறந்த வெளியில் சௌகரியம்.

காதுகள்: நீர் சீழ் முதலியவை வெளியாகுதல். கிண் கிண்ணென்ற சப்தம், நெற்றியிலிருந்து பிடிப்பு வலிகள்.

தொண்டை: காதுகளில் இருக்கும் குழாய்வரை பரவும் வலி. தொண்டை சுருங்குதல், மாலையில் சூட்டுடன் தாகம், இருமலினால் தொண்டையில் வெடிப்பு, பேசும்போது வலி.

சுவாசாசய அவயவங்கள்: ஜலதோஷத்தினுல் தொண்டைக் கம்மல், குறுகுறுப்பான உணர்ச்சி குளிர்ந்த காற்றைச் சுவாசித்தால் குரைக்கும் சப்தமுள்ள இருமல், கம்மலுடன் கூடிய இருமலினுல் குரல்வளையில் வெடிப்பு ஏற்படுதல், அதனுல் வியாதியஸ்தர் இருமலை அடக்க முயற்சிப்பார் அல்லது குரல்வளையைப் பிடித்துக்கொள்வார்.

கை, கால்கள்: கைகள் தளர்ந்தும் வலியுடனும் இருத்தல். இடது நடுவிரலிலும் கட்டை விரலின் மிருதுவான பாகங்களிலும் வலி.

போது: ஜலதோஷம், நீர்க்கோர்வை. எப்பொழுதாவது உடம்பில் சூடும் தாகமும் ஏற்படுதல், பலவீனம், களைப்பு, படுக்கவேண்டி யிருத்தல். நீர்க்கோர்வையில் சில்லிப்பும் சூடும் மாறி மாறி வருதல், வலி. இருமல் சில சமயங்களில் குளிர்ந்த காற்றினுல் செளகரியமடைந்தாலும் அனேகமாக அதிகமாகத்தான் செய்யும். மாலையில் அதிகம். நரம்பு சம்பந்தமான வலி, மாலையில் கடுமை.

விசேஷம்: மாலை நேரத்தில், வீட்டிலிருப்பதால் உபாதிகள் அதிகம், இருமலைத் தவிர்த்து மற்றவை திறந்த வெளியில் செளகரியம்.

நீர்க்கோர்வையில் ஒப்பிடுதல்

அகோனைட்: ஆரம்ப நீர்க்கோர்வை. ஆர்ஸனிகம் ஆல்பம். ஏராளமான, எரிச்சலுடன் உள்ள தண்ணீர் போன்ற மேலுதட்டில் புண்ணை யேற்படுத்தும் நீர்க்கோர்வை. ஆர்ஸனிக் ஐயோடைட். ஆர்ஸனிகம் ஆல்பத்தின் குறிகளுடன் தொண்டையில் எரிச்சலும் இருத்தல். ஜெல்ஸிமியம்: தலையிலும் கைகால்களிலும் வலி, கண் இமைகள் தொங்குதல் தசைகள் சக்தியிழத்தல்.

நேட்ரம் கார்ப்: தும்மல், குளிர்ந்தகாற்றில் காலை 5 மணிக்கு, அதிகமாகும். நக்ஸ்வாமிகா: அசீரணத்தினல் ஏற்பட்டவை. இரவில் மூக்கு அடைத்துப் போயும் பகலில் நீர் வடிந்து கொண்டும் இருக்கும்.

அலெட்ரிஸ் பாரினேஸா
(Aletris Farinosa)

ஸ்திரீகளின் ஜனனேந்திரியங்களிலும் கருப்பையின் சக்திக் குறைவுக்கும் பெண்களின் இரத்த சோகைக்கும், கருப்பை இடம் பெயர்வதற்கும், வெள்ளைப்பாடு, அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுதல், கருப்பையின் சக்திக்குறைவால் உண்டாகும் மலட்டுத்தன்மைக்கும் இவ்வௌஷதம் உபயோகப்படும். அதிதிரிதமாகவும் ஏராளமாகவும் பிரசவ வேதனையை ஒத்த வலியுடன் கூடிய மாதவிடாய். நீண்ட காலமாக உடம்பு அசௌகரியமாயிருந்ததினலும் சத்துள்ள ஆகாரங்களை உட்கொள்ளாததினலும் ஸ்திரீகளுக்கு ஏற்படும் பலவீனம்.

அலுமன் (Alumen)

டைபாய்டு போன்ற சுரங்களில் கட்டி தட்டிய கறுப்பு இரத்தம், ஏராளமாக வெளியாகுதல். முள்ளெலும்பு குறுகுதல், மூத்திரக் குழாய், யோனித்துவாரம், டான்ஸில் இவைகளில் உண்டாகும் குழிப்புண்களின் ஓரங்கள் கடினமாகுதல். நாக்கு குடல்கள் முதலியவற்றில் ஏற்படும் புற்றுகள், உச்சந்தலையில் அழுத்தும் உணர்ச்சியும் எரிச்சலும். விளக்கு வெளிச்சத்தில் இரட்டையாகத் தெரியும் பார்வை. மூக்கில் புற்று, முக்கியமாக இடப் பக்கம், பேச முடியாமை. கடினமான பந்துகள் போன்ற மல உருண்டைகள் ஒன்ருேடொன்று இறுகக் கட்டி

யிருப்பது போன்றிருத்தல், உப்பிசம், மலப்பையில் பாரிச வாயு, மஞ்சளான போக்குள்ள மேகவெட்டை. ஏராளமான மஞ்சளான வெள்ளைப்பாடு. யோனித் துவாரத்தில் சிறு சிறு கொப்புளங்கள். வலப்பக்கத்தில் படுத்தால் துடிப்பு. கிழவர்களுக்கு காலையில் இருமல், ஏராளமாகக் கயிறு போன்று இரத்தம் கலந்த கோழை வெளியாகுதல். மார்பில் பலவீனம்.

முதுகுக்குக் கீழே குளிர்ந்த தண்ணீர் ஊற்றும் உணர்ச்சி. கெட்ட கனவுகள் காணுதல், தூக்கத்தில் மன வெழுர்ச்சி, கைகால்களில் பலவீனம். ஒருவியாதியஸ்தருக்கு அலூமினுவின் மனக் குறிகளும் அலுமனின் சரீரக் குறிகளும் இருக்குமாயின் அலுமனையே உபயோகிக்கவும்.

அலூமினு (Alumina)

மெலிந்தும் ஒல்லியாயும் மலச் சிக்கலுடனும் இருக்கும் குழந்தைகள், அரிப்புள்ள சிரங்குகளுடன் கோபக் குணம். பகுத்தறியும் தன்மையை இழந்துவிடுவோமென்ற பயம். வருங்காலத்தைப் பற்றிய கவலை. குழந்தைகள் தட்டா மாலை சுற்றுவது போல் சுற்றினல் கிறு கிறுப்பு, காலை ஆகாரத்திற்கு முன்பு குமட்டல். வரண்டும் வலியுடனும் நுண்ணிய கொப்புளங்களுடனும் தடித்துப் போகும் கண்ணிமைகள். காதிலிருந்து ஏராளமாகச் சீழ் வடிதல். மூக்கில் வெடிப்பு. முகத்தில் சிலந்தி வலை இருப்பது போன்ற உணர்ச்சி. டான்ஸில்கள், தொண்டை, காற்றுக் குழல் முதலியவை சிவப்பாயிருத்தல். விழுங்கும்போது ஒட்டுதல். பாடகர்களுடைய தொண்டைக் கம்மல், பகலிலும், கண்களைத் திறந்துகொண்டும் தான் நடக்க முடியும். காலையில் தூங்கி எழுந்தவுடனே இருமல், பிறகு வாயா

லெடுப்பில் முடிதல். கீழ்ப்பாக முள்ளெலும்பில் வலி, பழுக்கக் காய்ந்த இரும்பை நுழைப்பது போன்று இருத்தல். பக்ஷவாயு. பேசும் பொழுது தவறாகப் பேசுதல், தப்பான வார்த்தைகளைச் சொல்லுதல். பொழுது மெதுவாகப் போவது போன்று நினைத்தல். சீக்கிரத்தில் சலதோஷம் பிடித்தல். குதிகால்கள் வரை வழியும் ஏராளமான வெள்ளைப்பாடு. அனேக நாட்களுக்கு ஒரு முறை தான் வெளிக்குப் போக இச்சை உண்டாகுதல். மலச் சிக்கல், மலம் கடினமாக உருண்டைகளாக ஒன்றோடொன்று கயிறு போன்ற கோழையால் இணைக்கப்பட்டிருத்தல். மண், சாம்பல், சாக்கட்டி முதலிய சீரணமாகாத பண்டங்களைத் தின்னுதல். கால்கள் கனத்தல். தள்ளாடும் நடை.

மனம்: பேசும் போது தப்பாகப் பேசுதல், தவறான வார்த்தைகளை உபயோகித்தல். தான் பேசும்போது வேறு யாரோ பேசுவது போன்றும் தான் பார்க்கும் போது வேறு யாரோ பார்ப்பது போன்றும் உணர்ச்சி. தன்னைப் பற்றிக் கூட குழப்பம், தான் வேறு யாரோ என்று நினைத்துக் கொள்ளுதல் எப்பொழுதும் அவசரப்படுதல். பொழுது மெதுவாகச் செல்லுவது போல் தோன்றுதல். ஏக்கம். தன் விருப்பத்திற்கு விரோதமாகவே கதறுதல், முனகுதல், உறுமுதல். வருங்காலத்தைப் பற்றி, சாவைப் பற்றி, பகுத்தறிவை இழந்து விடுவோமோ வென்று பயப்படுதல். வீட்டை விட்டு வெளியேறப் பிரியம். தூங்கி யெழுந்தவுடன் மனக் குறிகள் அதிகமாகுதல்.

தலை: கிறு கிறுப்பு: தன்னைச் சுற்றியிருக்கும் சாமான்கள் வட்டமாகச் சுற்றுவது போன்றிருத்தல். காலையில் தூங்கி எழுந்தவுடன், காலை ஆகாரம் உட்கொள்ளு முன், கண்களை மூடியவுடன், கிறு கிறுப்பு அதிகமாகுதல்.

முன் பக்கமாக விழுந்து விடுவோமென்ற பயத்துடன் அதிக மான மந்த உணர்ச்சி. பக்ஷ வாயு ஏற்படும் நிலைமை. கண்களைத் திறந்துகொண்டிருக்கும் பொழுதும் பகல் நேரத்திலும்தான் நடக்க முடியும். துடிக்கும் நெற்றி வலி, மலச்சிக்கலுள்ள தலைவலி, அமைதியாகப் படுத்தால் சௌகரியம். தலையில் முண்டாசு இறுகக் கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி. தலைமயிர் உதிர்ந்துகொண்டிருத்தல், மண்டைத் தோல் மறத்து இருத்தல்.

கண்கள்: வரட்சி. கிறு கிறுப்புடன் கண்களுக்கு முன்பாக வெண்மையான நட்சத்திரங்கள் தோன்றுதல். கண்களில் அழர்ச்சி, சூடான காரமுள்ள கண்ணீர். கண் இமைகள் தடித்தல், வரட்சி, எரிச்சல், வலி. கண்ணிமைகளில் இருக்கும் மயிர்கள் உதிரல். பார்க்கும் சாமான்கள் மஞ்சளாகவோ அல்லது மூடு பனியால் மூடப்பட்டது போன்றோ தோன்றுதல். திறந்த வெளியில் கண்களில் சில்லிப்பு உணர்ச்சி. கண் இமைகளை திறக்க சிரமம், மங்கின பார்வை.

காதுகள்: குடைதல், மணியடிப்பது போன்ற ஓசை. ஏராளமான சீழ் காதுகளிலிருந்து வெளியாகுதல். மாலையில் ஒரு காது மட்டும் சிவப்பாகவும் சூடாகவும் இருத்தல். காதுகளைச் சுற்றி துணி இருக்கும் உணர்ச்சி, விழுங்கினால் அதிகமாகுதல், விழுங்கும்போதோ அல்லது அரைக்கும் போதோ காதுகளில் படக்கென்று ஒடியும் சப்தம், இரவில் பிடிப்பு வலி.

மூக்கு: சிவப்பு நிறம், நுனியில் வெடிப்பு. தும்மலுடன் ஏராளமான நீர் மூக்கின் ஒரு துவாரத்திலிருந்து வெளியாவதும் மற்றொரு துவாரம் அடைத்திருத்தலும். சொரியுடன் கூடிய நாட்பட்ட சலதோஷம். இரணமா

யிருத்தல், கெட்டியான மஞ்சள் நிறமுள்ள சளி வெளி யாகுதல். மூக்கில் வீக்கம், சிவப்பு, மாலையில் வலி அதிக மாகுதல்.

முகம்: வெளுத்தோ அல்லது சிவந்தோ இருக்கும். முகம் நீண்டிருப்பது போன்ற உணர்ச்சி. அரிப்பு உணர்ச்சி. முகத்தில் சிலந்தி வலை இருக்கும் உணர்ச்சி. இரத்தம் கொதித்தல், இடது முகவாய்க் கட்டை தானுகவே அடிக் கடி முறுக்கிக் கொள்ளுதல். மேல் உதட்டில் சிறு சிறு கொப்புளங்கள்.

பற்கள்: பல் வலி, மெல்லுவதாலும் திறந்த வெளி யிலும் மாலையிலும் அதிகமாகுதல். பற்கள் நீளமாக இருக் கும் உணர்ச்சி. பற்களில் மாசு படிதல். ஈறுகளிலிருந்து இரத்தப் பெருக்கு, குழிப்புண்கள், வீக்கம்.

நாக்கு: தித்திப்பு ருசி, அல்லது ருசி துளிக்கூட இல்லாமை. வாயில் குழிப் புண்கள், ஏராளமான உமிழ் நீர் உற்பத்தி, வாய் வறண்டிருத்தல்.

தொண்டை: வலி, வரட்சி, கம்மல் முதலியவை களுடன் பச்சைப் புண்ணுயிருத்தல், வரட்சியுடனும் வலி யுடனும் தொண்டையில் உருண்டையான வஸ்து இருக்கும் உணர்ச்சி. மாலையில் தொண்டையில் ஏராளமான கெட்டி யான பிசுக்கென்றிருக்கும் கோழை. அடிக்கடி கோழையை உமிழ நேரிடுதல். உட்கொள்ளும் ஆகாரம் உள்ளே போக முடியாது போன்று தொண்டையில் இறுக்கும் உணர்ச்சி.

விருப்பு, வெறுப்பு: காய் கறிகள், பழங்கள் முதலிய வைகளை சாப்பிடப் பிரியம், ஆனுல் உருளைக்கிழங்கு ஒத்துக் கொள்ளாமை. மாமிசம் உண்ண வெறுப்பு. தாகம்.

சாக்கட்டி, வெளுப்பான கந்தைத் துணி, கரி, அரிசி, சுவற்றில் இருக்கும் காரை முதலியவைகளைத் தின்னப் பிரியம்.

சாப்பிடுதல், குடித்தல்: புகையிலைப்புகை, உருளைக்கிழங்கு முதலியவைகளால் உபாதி அதிகம். உப்பு, சாராயம், மிளகாய், மிளகு, புளித்த காடி முதலியவைகளினுல் இருமல் உண்டாகும். தொண்டைச் சளி தித்திப்பாக இருக்கும்.

குமட்டல், வாயாலெடுப்பு: மாலையில், கசப்பான புளிப்பான ஏப்பம், நெஞ்சில் எரிச்சல், பித்த வாயாலெடுப்பு. வரண்ட இருமல் வந்த பிறகு வாயாலெடுப்பு.

வயிறு: குழிப் புண்கள். வயிற்றிலிருந்து வலி மேற்புறமாக மார்புக்கும் தொண்டைக்கும் செல்லுதல்.

அடி வயிறு: வர்ணவேலை செய்பவர்களுக்கு உண்டாகும் வலி. உப்பிசம் அல்லது காலையில் வலி. வலி குனிந்து உட்கார்ந்தால் அதிகம். பிற்பகலில் நடக்கும்போது அடிவயிறு ஒரு மூட்டை போன்று கீழே தொங்குதல்.

மலம்: மலச்சிக்கல், வேலை செய்யச் சக்தியற்ற மலப்பை. மிருதுவாயிருக்கும் மலத்தையும் கழிக்க சிரமப்படுதல். மலம் போக விருப்பு இல்லை, போக சக்தி இல்லாமை, மலம் நிறைய இருந்தால்தான் போக முடியும். மலம் கடினமாகவும் வரண்டும் முடிச்சுகளுடனும் ஆட்டுப் புழுக்கை போன்றும் இருத்தல், அபானத்தில் வெட்டும் வலி. இரத்தம் வருதல். மூத்திரம் விடும்பொழுது வயிற்றுப் போக்கு. மூலங்கள். அபானத்திலும் மலப்பையிலும் இரண வலி.

மூத்திரம்: மலம் போக பிரயாசைப்படும் போது மூத்திரம் முழுவதும் வெளியாகுதல் அல்லது பிரயாசை இல்லாமல் மூத்திரம் விட முடியாமை. பக்ஷவாயு பீடிக்கும் நிலைமை. மூத்திரம் சொட்டுச் சொட்டாக பிரிதல். நரம்பு வியாதிகளில் ஏராளமான மங்கிய நிறமுள்ள மூத்திரம்.

ஆண்: புணர்ச்சியில் மிதமீறிய விருப்பு அல்லது விருப்பற்றிருத்தல். மலம் கழிக்கும்போது கஞ்சிபோன்ற பதார்த்தம் ஆண்குறியிலிருந்து ஒழுகுதல். இடது விரை கடினமாகவும் வலியுடனும் இருத்தல்.

பெண்: மாதவிடாய் கொஞ்சமாகவும் மங்கின சிவப்பு நிறமாகவும் இருத்தல். வெகு சீக்கிரத்தில் மாதவிடாய். அதற்கு முன் தலை வலி, வெள்ளைப்பாடு ஏராளமாகவும் காரமாகவும் மஞ்சள் நிறமாகவும் பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் குணமும் உள்ளதாக இருத்தல். யோனித்துவாரத்தின் இடப்பக்கத்தில் பிடிப்பு வலி, மார்பு வரை பரவுதல்.

தொண்டைக்குழி: கொஞ்சங்கூட பேச முடியாத நிலைமை. குரைக்கும் இருமல் அல்லது இருமினாலும் தொண்டைக் குழியிலிருக்கும் கோழை வெளிவராமை.

இருமல்: அடிக்கடி தும்மலுடனும் வாயாலெடுப்புடனும் கூடிய வரண்ட இருமல். தொண்டையில் ஏதோ சதை தொங்கும் உணர்ச்சியினால் மூச்சுத் தடைப்படுதல். உள்நாக்கு நீண்டுபோய் அதனால் மூச்சுவிடத் தடைப்படுதல். சிறிய இருமலினாலும் உச்சந்தலையிலும் பொட்டுகளிலும் வலி, சில சமயங்களில் கஷ்ட சுவாசம். காலையில் இருமல், வெண்மையான கோழை சிறிது வெளியாகுதல்.

இருமும்போது மூத்திரம் தானுகவே வெளியேறுதல். வரண்ட இருமலுக்குப் பிறகு வாயாலெடுப்பு.

சுவாசாசயங்கள்: மார்பில் வலி, இரவில் அதிகம். மார்பில் இறுக்க உணர்ச்சி, சரீரத்தை வளைத்தாலோ அல்லது குனிந்தாலோ அதிகம். நடக்கும்போதும் உடம்பை நிமிர்ந்து வைத்துக்கொள்ளும்போதும் சமனம். பேசினுல் மார்பு வலி அதிகமாகுதல். வண்டியில் சவாரி செய்தால் மார்பில் வலி உண்டாகுதல்.

கழுத்து, முதுகு: கழுத்தின் வலப் பாகத்தில் குத்து வலி. முதுகின் கீழ்ப் பாகத்தில் அடிபட்டது போன்ற வலி. கீழ் முதுகெலும்பில் பழுக்கக் காச்சின இரும்பை நுழைப்பது போன்ற முதுகு வலி. நடுமுதுகில் கடுமையான பிடிப்பு வலி. முள்ளந்தண்டு உபாதிகள்.

கை, கால்கள்: கண்களைத் திறந்துகொண்டும் பகலிலும் தான் நடக்க முடியும். பாரிச வாயு, கைகளில் கனத்தல், உணர்ச்சியற்றுத் தூங்குவது போன்றிருத்தல். நகச் சுற்றி, கால்களில் நடுக்கம். கனம், தள்ளாடுதல், கீழே உட்கார்ந்து விடுதல், அடியெடுத்து வைக்கும்போது குதிக்காலில் மறமறப்பு. உள்ளங்கால்கள் மிருதுவாகவும் வீங்கியும் இருத்தல். கட்டை விரல்களில் அரிப்பும் சிவத்தலும், தொடைகளில் அரிப்பு, எரிச்சல், சொரிவதனுல் சௌகரியம். கால்களில் அதிகமான தளர்ச்சி.

நரம்புகள்: பேசமுடியாத அளவுக்கு பலவீனம். சோர்வும் மயக்கமும், அதனுல் உட்காரவும் படுக்கவும் நேரிடுதல். கை கால்கள் தாமாகவே அசைதல், இஷ்டப்படி அசைக்க முடியாமை. முள்ளந்தண்டு உபாதிகளால் ஏற்பட்ட பாரிச வாயு.

தூக்கம்: தூக்கமின்மை, அமைதியற்ற தூக்கம். திருடர்களைப் பற்றியும் பிசாசுகளைப் பற்றியும் கனவுகள். காலையில் தூக்கமின்மை.

பொது: சோர்வும் மயக்கமும் அதனால் படுக்க வேண்டி வருதலும். சரீரத்தின் உள் அவயவங்களில் இறுகும் உணர்ச்சி. முகத்தில் ஏதோ பிசின் காய்ந்துவிட்டது போல பிடித்து இழுக்கும் உணர்ச்சி. கிழவர்களின் சரீர இளைப்பு. குழந்தைகளுக்கு ஏற்படும் மலச் சிக்கல். பால் குடிக்கும் சிசுக்களின் மலச்சிக்கல். பெண்கள் பக்குவமடையும் காலத்தில், மண், சாம்பல் போன்ற வஸ்துக்களைத் தின்னுதல்.

சருமம்: சுருக்கம், வரட்சி. தடித்தல், ஊரும் உணர்ச்சிகள்.

விசேஷங்கள்: திறந்த வெளியில், மிதமான தேகப் பயிற்சி, இரவு, உஷ்ணம், திறந்த வெளியில் நடத்தல், சாப்பிடும்பொழுது, சூடானபானங்கள், முதலியவைகளில் சௌகர்யம். இருமல் வலப்பக்கமாகப் படுத்தால் அசௌகரியம். குளிர்காற்று, வீட்டிற்குள், உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, குளிர்காலம், உருளைக்கிழங்கு தின்னுதல், அமாவாசை, பௌர்ணமி இவைகளில் அதிகம்.

முறிவு: பிரயோனியா, சாமோமில்லா, இபிகாக் உனு, பல்ஸடில்லா, காம்போரா, முதலியவை.

ஆட்டுப்புழுக்கை போன்ற மலம்: அலூமினு, அலுமன், செலிடோனியம், மெக்னீஷியாமூர், மெர்கூரியஸ், நேட்ரம்மூர், நைட்ரிக் ஆஸிட், ஓபியம், ப்ளம்பம், ஸல்பர்,

பாரிடாகார்ப், காஸ்டிகம், கிராபைடிஸ், காலீகார்ப், லாச்ச ஸிஸ், நக்ஸ்வாமிகா, ஸேபியா, ஸ்பைஜீலியா, வெராட்ரம். கறுப்பு உருண்டைகளாயிருக்கும் மலம்: அலுமன், ஓபியம், ப்ளம்பம், ப்ளாடினம், பைரோஜம், வெராட்ரம். முடிச்சுகளுள்ள மலம்: அலுமன், அலூமினா, கார்ப்பன் ஸல்ப், செலிடோனியம், க்ராபைடிஸ், லைகோபோடியம், மெக்னீஷியா மூர், ப்ளம்பம், ஸைலீஷியா.

கடினமான மலம்: அலுமன். அலூமினா, அமோனியம் கார்ப், அமோனியம் மூர், பிரயோனியா, கல்கேரியா, கார்பன் ஸல்ப், கார்டுஸ் மாரியேனஸ், காலின்ஸோனியா, கிராபைடிஸ், காலீ ப்ரோமேடம், லாக் டிப்ளோரேடம், லாச்சஸிஸ், மெக்னீஷியா மூர், மெஸரியம், நேட்ரம் மூர், நைட்ரிக் ஆஸிட், நக்ஸ்வாமிகா, ஓபியம், பாஸ்பரஸ், ப்ளம்பம், ஸெலனியம், ஸேபியா, ஸைலீஷியா, ஸல்பர், வெராட்ரம், ஸிங்கம்.

அவீனா ஸடைவா
(Avena Sativa)

உபாத்தியாயர்கள், குமாஸ்த்தாக்கள், ஒரே தொழிலை கடைப்பிடிப்பவர்கள் ஆகியவர்களுக்கு உண்டாகும் மனக் கவலை, அல்லது நரம்புச் சோர்வு. பலவீனமான இரத்த ஓட்டம், களைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூளைச்சோர்வு. பிடரித் தலையில் தலைவலி. தூக்கமின்மை, அமித சம்போகம், முட்டி மைதுனம், நபும்லகத்துவம். சிணைப்பை வியாதியால் நரம்புக்கோளாறுகள். புகையிலை, மார்பியா இன்ஜக்ஷன் செய்வது முதலியவற்றில் இருக்கும் ஆசையை இது போக்கடிக்க வல்லது. தாய்த் திராவகத்தில் உபயோகிக்கவும்.

அனகார்டியம் ஓரியண்டேல்
(Anacardium Orientale)

ஞாபக சக்தியை இழத்தல். சாபமிடவும் ஆணையிடவும் பிரியம். குரூர மனது. யோசனை செய்தால் நரம்பு சம்பந்தமான தலைவலி. பசியிருக்கும்போது வயிற்றிலும் தலையிலும் வலி, சாப்பிட்டால் சமனமாகும். (நக்ஸ்வாமிகாவில் சாப்பிட்ட 2 அல்லது 3 மணி நேரத்திற்கு வலி, ஆகாரம் ஜீரணமானபின் வலி சமனமாகும்.) தனக்கு இரு விதமான மனது இருக்கிறதென்றும் ஒன்று அவனை வெளியில் போகச் சொல்லிக்கொண்டும் மற்றொன்று தடுத்துக்கொண்டும் இருப்பது போன்ற உணர்ச்சி. அல்லது சரீரத்தின் ஒரு பாகத்தில் சுற்றிலும் நாடா போட்டிருப்பது போன்று தோன்றுதல். மலப்பையில் மூளை இருப்பது போலிருத்தல். மாடிப்படி ஏறும்போது மயக்கம்.

மனது: ஞாபக சக்தி அழிதல். பிறரைச் சாபமிடவும் சத்தியம் செய்யவும் பிரியம். சரீரத்தைச் சுற்றிலும் நாடா இருப்பது போன்ற உணர்ச்சி அல்லது துவாரங்கள் எல்லாவற்றிலும் மூளை இருக்கும் உணர்ச்சி. நடந்த சமாசாரங்களை ஞாபகத்தில் கொண்டு வருவதற்கு மிகவும் சிரமப்படுதல். பகுத்தறிவுக்கும் தன் எண்ணத்திற்கும் நேர் விரோதம். தன்னை யாரோ துரத்துகிறார்கள் என்று நினைத்தல். தனக்கு மோக்ஷம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலை. தான் இரண்டு மனிதர்களாக இருக்கிறோமென்று நினைத்தல், தன்னுடைய ஒரு தோளில் ஒரு ராக்ஷதன் உட்கார்ந்திருப்பது போலவும் மற்றொரு தோளில் ஏதோ ஒரு தேவதை உட்கார்ந்திருப்பது போலவும் எண்ணுதல். தனக்கு இரண்டு மனது இருக்கின்றனவென்றும் ஒன்று அவனைக் காரியங்களைச் செய்யத் தூண்டிக்

கொண்டும் மற்றொன்று அப்படிச் செய்யவொட்டாமல் தடுத்துக் கொண்டிருக்கிறதென்று நினைத்தல். தூரத்திலிருக்கும் தன் பந்துக்களுடைய குரலை கேட்டதாக அனுமானம் செய்தல். மிகவும் சந்தேகமுள்ள மனிதர்.

தலை: எல்லாவிதமான உணர்ச்சிகளும் பலவீனமாயிருத்தல். கொஞ்சம் எதையாயினும் கவனித்தால் தலைவலி. உச்சந்தலையின் இடப்பக்கத்திலும், முன் தலை, பொட்டுகள் முதலியவற்றிலும் முளையை வைத்து அழுத்துவது போன்ற மந்தமானவலி. நரம்பு சம்பந்தமான தலைவலி. தலைவலி சாப்பிடுவதால் சமனம்.

கண்கள்: பார்வை தெளிவற்றிருத்தல். கண்களில் முளை இருக்கும் உணர்ச்சி.

காது: இடது காதின் துவாரத்தில் வலிப்புப் போன்று சுருங்கிக் கொள்ளுதல்.

மூக்கு: எங்கே போனாலும் ஒரே நாற்றமாக மூக்குக்கு உணர்ச்சி.

வயிறு: பலவீனமான சீரணம். காலையில் குமட்டல். பசியாய் இருக்கும்போது வயிற்றிலும் தலையிலும் வலி, சாப்பிட்டால் வலி சமனம். மறுபடியும் பசி ஆரம்பித்தால் வலியும் ஆரம்பம்.

அடிவயிறு: தொப்புளைச் சுற்றிலும் வலி. குடலில் முளையைத் திணிப்பது போன்ற உணர்ச்சி.

மலம்: மலச்சிக்கல். மலம் போகத் தூண்டுதல் இல்லை. அல்லது அடிக்கடி தூண்டுதலும் ஒன்றும் வெளியாகாமல் இருப்பதும். நக்ஸ்வாமிகாவிலும் இம்மாதிரியே அடிக்கடி

தூண்டுதலும், ஆனால் கொஞ்சங் கொஞ்சமாக மலம் வெளியே போவதும் இருக்கும். அபான அரிப்பு. மலப் பையில் முளை உணர்ச்சி, தளர்ச்சியாக இருக்கும் மலமும் சிரமத்துடன் வெளியேறுதல். மூலங்களுக்கு இது ஓர் நல்ல ஔஷதம். மலப்பையின் பாரிச வாயு.

மார்பு: முளையை வைத்து அழுத்துவது போன்று மந்தவலி.

இருதயம்: கிழவர்களுக்கு இருக்கும் துடிப்பு, குறைவான ஞாபகம், மார்பில் பிடிப்பு வலிகள்.

கை, கால்கள்: முழங்காலில் விரைப்பு. களைத் திருத்தல்.

சருமம்: எரியும், கொட்டும், அரிக்கும் சிரங்குகள். உள்ளங்கைகளில் தோல் உரிதல்.

அஸ்க்ளிபியாஸ் ட்யூபரோஸா
(Asclepias Tuberosa)

மார்பின் பிடிப்பு வலியை பிரயோனியா கொடுக்கப் பட்டு பயனேற்படாவிடின் இது சமனப்படுத்தும். நெற்றி யிலும் உச்சந்தலையிலும் வலி, அசைந்தால் அதிகமாகியும் படுத்திருந்தால் சமனப்பட்டும் இருத்தல். மூச்சு விடும் போது வலி, முக்கியமாக இடது சுவாசகோசத்தின் அடியில் தொண்டையில் இறுக்கத்துடன் வரண்ட இருமல். இருமல் வரண்டும் கடினமாகவும் இருப்பதால் நெற்றியிலும் அடிவயிற்றிலும் வலியேற்படுதல். இருமும் போது கோழை வருவதில்லை. கழுத்தின் இடப்பக்கத்தில் விரைப்புடன் இடது முலைக்காம்பின் வழியாகக் கீழே

இறங்கும் குத்துவலி. முன்புறமாகக் குனிந்தால் வலி சமனம். மார்பின் மத்தியபாகம் அமுக்கினால் மிருதுவாக இருத்தல்.

அஸ்குலஸ் ஹிப்போகாஸ்டானம்
(Aesculus Hippocastanum)

நீடித்த தொண்டை இரணம், காய்ந்தும் எரிச்சலுடனும் இருத்தல். விழுங்குவதற்கு சிரமம். ஆகாரம் சாப்பிட்டபிறகு எதுக்களித்தல். கல்லீரல் பக்கத்தில் நிறைந்த உணர்ச்சி. அடி முதுகிலும் அல்லது ஆசன எலும்புகளிலும் சப்பை யெலும்புகளிலும் வலி. நடந்தாலும் குனிந்தாலும் உட்கார்ந்துவிட்டு எழுந்திருந்தாலும் வலி அதிகமாகும். பழுப்பு நிறமுள்ள, வெளித் துருத்தின மூலம் அல்லது உள்மூலம். ஆசன வாயில் குச்சிகள் இருப்பது போன்ற உணர்ச்சி. அடிக்கடி வெளிக்கு வருவது போலிருத்தல். அசுத்த இரத்தக் குழாய்களில் நிறைந்த உணர்ச்சி. கல்லீரல் இரத்தக் குழாய்களில் நிறைந்த உணர்ச்சி. கல்லீரல் இரத்தக் குழாய்களில் இரத்தம் தேங்குதல். வியாதியஸ்தர் குளிர்ந்த தண்ணீரிலும் சௌகரியமாய் இருப்பாராயினும் வியாதியுற்ற பக்கங்களில் சூடான ஒற்றிடங்கள் சௌகரியமாகவே இருக்கும்.

மனம் : உற்சாகம் குன்றியிருத்தல். ஒரே விஷயத்தில் கவனம் செலுத்த இயலாமை. மனத் தடுமாற்றம். கோபம் வரும் குணம்.

தலை : நெற்றியில் மந்தமான வலி. அதன் பிறகு அடி வயிற்றின் வலப் பக்கத்தில் பிடிப்பு வலி, இடது பக்கத்திற்குச் செல்லுதல். பின் தலை நசுங்கிவிடும் போன்ற மந்தவலி.

கண்கள் : கண்களிலிருக்கும் இரத்தக் குழாய்கள் பெருத்தும் கண்கள் கனமாகவும் மந்தமாகவும் கண் விழிகள் இரணமாயும் சூடாகவும் வலியுடனு மிருக்கும். கண் விழிகள் அகன்றுவிடுதல், பிறகு மெதுவாகச் சுருங்கும். கண் குழியில் ஆழமான பாகத்தில், இடது கண்ணின் மேலாக வலி, வேகமாகப் பாயும் வலிகள். கண்ணீர் வடிதல். சிவப்பு, கண் விழிகளில் எரிச்சல்.

காதுகள் : எரிச்சல் அழுக்குதல், வலக் காதில் கிண் கிண் என்று ஒலித்தல்.

தொண்டை : கயிறு போன்ற சற்று தித்திப்புள்ள கோழை இருமும்போது வெளியாகும். தொண்டையில் குத்தும் உணர்ச்சி. ஏதோ சிக்கியிருப்பது போன்றிருத்தல். வரட்சி, எரிச்சல், தொண்டை சுருங்குதல், அழற்சி. உள் நாக்கு கருப்பாகவும் வீங்கியும் இருத்தல், இடப்பாகத்தில் அதிகம். அடிக்கடி விழுங்க நேரிடுதலும் மந்தமான வலியும், நெருப்புப்போன்ற எரிச்சலும். அடிக்கடி வரும் நரம்பு சம்பந்தமான வலி. நீடித்த தொண்டை இரணம்.

வயிறு : வயிற்றில் கல் இருப்பதுபோன்ற தோற்றம். ஏப்பம் புளிப்பாகவோ கசப்பாகவோ இருக்கும். எரிச்சலும் இரணமும். வாயாலெடுப்பு, குமட்டல். காலையில் வயிற்றில் ஒன்றுமே இல்லாதது போன்ற உணர்ச்சி. இருதயத்தில் எரிச்சல். சாப்பிட்ட பிறகு ஏதுக்களித்தல்.

அடி வயிற்றின் இரு பக்கங்கள் : வயிற்றிலிருந்து கல்லீரலின் வலப்பாகத்தின் கீழ்வரையில் வலி. வலப்பக்கம் மிருதுவாயிருத்தல். தலை வலிக்குப் பிறகு பிடிப்பு வலி. வலப்பக்கத்தில் ஊசி குத்துவது போன்றும் மூச்சு வாங்கும் போது முதுகில் வலியும், கல்லீரலில் நெருக்கமும் அதிக வலியுள்ள மூலங்களும். துடிப்பு.

அடி வயிறு: நிறைந்தும் தடித்துக் கொண்டும் வலியுடனும் இருத்தல். எரிச்சல், இரணம். தொப்பூழில் வலி. கடபுடா சப்தம். தொப்பூழ் பக்கங்களில் வெட்டும் வலி. குடல்களில் பொருமல், தெரிக்கும் வலிகள்.

மலம்: துர்நாற்றம் உள்ள அபான வாயு பரிதல். வரட்சி, சூடு, மலப்பைச் சுருக்கம். மலப்பையில் ஏராளமான குச்சிகள் இருப்பது போன்ற உணர்ச்சி. இரத்தம் கசியாத பழுப்பு நிறமுள்ள மூலங்கள். வலி, எரிச்சல், நடக்க முடியாமை அல்லது முதுகில் பாயும் வலி. மலம் கழிந்த பிறகு மலப்பை வெளிவருதல். மந்தமான தலைவலி. மலம் பெரியதாகவும் வரட்சியாகவும் கடினமாகவும் முடிச்சுகளுடனும் கறுப்பாகவும் சேறு போலவும் அல்லது சற்றுப் பழுப்பு நிறமாகவும் சிரமத்துடனும் வெளிவரும் மலத்தின் முற்பாகம் கடினமாகவும் கருப்பாகவும் பிற்பாகம் சாதாரணமாகவும் அல்லது பால் போன்று வெண்மையாகவும் இருத்தல். பழுப்பு நிறமுள்ள வெளித்துருத்தின மூலங்கள், எரிச்சல், அரிப்பு, மலப்பையில் குச்சிகள் இருக்கும் உணர்ச்சி.

பெண்குறி: அரக்கு மஞ்சள் நிறமும், கெட்டியாகவும் ஒட்டும் தன்மையும் உள்ள வெள்ளைப்பாடு. மாதவிடாய்க்குப் பிறகும் நடந்தாலும் அதிகம். பெண்குறியின் உதடுகளைத் தின்றுவிடுதல். நடக்கும்போது இடுப்பில் அமுக்கும் வலி. ஆசன வெலும்புகளிலும் முழங்கால்களிலும் வலி. கருப்பையில் இரணமும் அடி வயிற்றின் அடியில் துடிப்பும். முதுகு வலியுடன் வெள்ளைப்பாடு.

கருப்பம்: நடக்கும்போது ஆசன வெலும்புகளும் இடுப்பெலும்புகளும் சேருமிடத்தில் நழுவுதல் ஏற்படுதல்.

உடனே உட்காரவேண்டி வருதல். படுத்தால் சிறிது சௌகரியம். மூலங்கள்.

கழுத்தும், முதுகும்: பலமற்றிருத்தலும் களைப்பும். தோள்ப்பட்டையில் வலி. மார்பிலும் வலது தோள்ப்பட்டையிலும் வலி. மூச்சு வாங்கும்போது அதிக அசௌகரியம். ஆசன எலும்புகளில் மந்தமான வலி. முன் பக்கமாக நடந்தாலும் அசௌகரியம்.

இருதயம்: பாயும் வலிகள். நிறைந்த உணர்ச்சி. திடிப்பு வலி. எரிச்சல். சரீரமுழுவதும் துடிப்பு. கை கால்களிலும் துடிப்பு. தூங்கும்போது இருதயம் துடிப்பது நன்கு தெரியும்.

கை, கால்கள்: இடது கையும் காலும் கனமாகவும் வீங்கியும் இருத்தல். கால்களிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் பெருத்து விடுதல். தொடையின் அசுத்த இரத்தக் குழாய்களும் பெருத்தல். வலது கை பட்சவாயுவினால் பீடிக்கப்படுவதால் அக்கையைத் தூக்க முடியாமை. மூட்டுகள் விரைப்பாகவும் வாதமுள்ளதாகவும் உஷ்ணத்தினால் சௌகரியம் அடைந்தும் இருத்தல். கால்கள் கனமாகவும் நிறைந்த உணர்ச்சியுடனும் இருத்தல், ஆனால் வீக்கமில்லாமை. கைகளைக் கழுவினபிறகு குத்தல். முதுகும் கால்களும் பலவீனமாயிருத்தல். நடக்க முடியாமை. பின் கழுத்தில் முடக்கம். வேலை செய்தபிறகு கால்களின் உபத்திரவம் சௌகரியம்.

கேபிகள்: இருதயம், தலை, சருமம் ஆகியவற்றில் அளவுக்கு மீறிய இரத்தம் இருப்பது போன்ற நிறைந்த உணர்ச்சி. காலையிலும் அசைவதினாலும் தூங்கி யெழுந்த

உடனும் திசைகளில் இரண வலி. காய்ந்த பூந்தசை மெம் பிரேன்கள் வீங்குதல்.

நரம்புகள்: நரம்பு சம்பந்தமான ஓடும் வலிகள். கூர்மையாகவும் சுடுவது போலவும் கிழிப்பது போலவும் இருத்தல்.

ஒப்பிடுக: ஆலோ ஸகோட்ரினு, காலின் ஸோனியா, மர்கூறியஸ், நக்ஸ்வாமிகா, போடோபில்லம், ஸல்பர்.

செளகரியம்: சாதாரணமாகக் குளிர்ச்சியினுல் செளகரியம். கொட்டும் வலிகள் உஷ்ணத்தினுல் அசெள கரியம்.

அசெளகரியம்: சூடான தண்ணீரில் ஸ்னனம் செய்தால்.

அஸடிக் ஆஸிட் (Acetic Acid)

உடம்பில் நீர் கட்டியிருக்கும் நிலைமையில் அதிக தாகம். சுரத்தில் தாகமில்லாமை. குழந்தைகளை உருக்குலைக்கும் வியாதிகளும் இளைப்பும். மிகவும் சோர்வடைதல். காயங்கள் ஏற்பட்டபிறகும் ஆயுத சிகிச்சைகளினுல் ஏற்படும் சரீர அதிர்ச்சிகளுக்கும் மயக்க மருந்துகள் கொடுக்கப்பட்ட பின்னரும் கொடுக்கப்படலாம். மிகுந்த களைப்புடன் கூடிய ரத்த சோகை. மிருதுவாகவும் வெளுத்தும் உள்ளிருக்கும் நரம்புகள் வெளித்தெரியும் சருமம். உடம்பு மெலிதல். சரீரம் முழுவதுமே பொதுவான தளர்ச்சி. சளி, உமிழ் நீர், மூத்திரம், மாதவிடாய், வியர்வை முதலியவை அபரிமிதமாக உற்பத்தியாகுதல். குழந்தைகளுக்கு முலைப்பால் கொடுக்கும் ஸ்திரீகளுக்கு ஏற்படும் இரத்த சோகை.

வயிற்றில் சங்கடம், அதிக தாகம், நீர் வீக்கம், வெளுத்த சரீரம், உடம்பு மெலிதல் இவைகளுடன் இருக்கும். சர்க்கரையுள்ள அல்லது சர்க்கரையில்லாத நீரழிவு.

மனம்: மயக்கமும் சித்தப் பிரமையும் மாறி மாறி வருதல். மூளைக் கலக்கம். பிடிவாதமான மலச்சிக்கல், அடிவயிறு வீங்குதல் இவைகளுடன் கடுமையான சித்தப் பிரமை. மந்த குணம், வருத்தம், கவலை. குழந்தைகளின் தேக அசௌகரியத்திற்காக வருந்துதல். தன்னுடைய குழந்தைகளை அடையாளம் கண்டுகொள்ள இயலாமை. சீக்கிரத்தில் கோபம்.

தலை: புகையிலை, அபின், கஞ்சா, காபி, சாராயம் இவைகளினால் உண்டாகும் தலை வலி.

மூக்கு: இரத்தம் பெருகுதல், அடிக்கடி மூக்கி லிருந்து நீர் வடிதல்.

முகம்: கவலை. கடுமையான தோற்றம் வெளுத் திருத்தல், மெழுகு தடவினது போன்றிருத்தல். ஒட்டிப் போகுதல், சுரத்தில் இடது கன்னம் சிவப்பாகுதல், கீழ்த் தாடையிலிருக்கும் கோளங்களில் வீக்கம்.

தொண்டை: விழுங்குவதற்குச் சிரமம், மெதுவாக ஆகாரம் உட்கொள்ளல். அழற்சி, வேக்காடு முதலியவை களுடன் வலிக்கும் தொண்டை.

வாய்: கெட்ட சுவாசம், நாக்குக் கோளங்கள் வீங்கி யிருத்தல்.

வயிறு: சுரத்தின்போது தாகமின்மை. நீரழிவினும் உடம்பில் நீர் சுரந்திருக்கும்போதும் அதிக தாகம்.

வயிற்றில் சங்கடத்துடன் தாகம். ஒவ்வொரு தடவை ஆகாரம் உட்கொண்டபிறகும் வாயாலெடுப்பும் அதிக தாகமும். விக்கல், வயிற்றிலும் மார்பிலும் கடுமையான எரிச்சல், வலி. இத்துடன் நெற்றியில் வியர்த்தல். எரிச்சல், மல்லார்ந்து படுத்தால் உபாதி அதிகப்படல்.

அடி வயிறு: வலி, கடபுடா சப்தம், வயிற்றுப் போக்கு. அடி வயிற்றில் நீர்ச்சுரப்பு.

மலம்: தண்ணீராகவும் சிரணமாகாமலும் இருக்கும் வயிற்றுப்போக்கு. காச ரோகம். மலபந்தமும் அடிவயிற்றில் காற்றுப் புகுந்திருப்பதால் வீங்கியிருத்தலும். மயக்கம். மூலங்களிலிருந்து இரத்தம் வெளியாகுதல். குடல்களிலிருந்துஇரத்தப்பெருக்கு. மாதவிடாய் தடைப்பட்டு விட்டபிறகு.

மூத்திரம்: அதிக தாகம், பலவீனம், சதை குறைதல் முதலியவைகளுடன் கூடிய நீரழிவு.

கருப்பம்: புளித்த ஏப்பமும் வாயாலெடுப்பும். அசிரணத்தினால் உமிழ் நீர் அதிகமாக ஊறுதல். பிரசவ வேதனை, இரத்தப்பெருக்கு இவைகளுக்குப் பிறகு வெளி உபயோகம். சில்லிப்பு, வெளுத்திருத்தல், கஷ்ட சுவாசம்: ஸ்தனங்கள் பாலுடன் வீங்கியிருத்தல். ஸ்தனங்களில் சீழ்ப் பிடிக்குமோ வென்று நினைக்கும்படியான நிலைமை. ஸ்தனங்களில் பால் நீலமாகவும் தண்ணீராகவும், புளிப்பாகவும் குறைந்த சத்துள்ளதாயும் இருத்தல்.

தொண்டைக் குழி: அழற்சியுடன் இருமல். முகம் சிவந்திருத்தல். தொண்டை கம்முதல்.

சுவாசம் : தொண்டையில் தயிர் கடைவது போலவும் கரகரப்புமுள்ள சப்தம். அவசரமாகவும் சிரமத்துடனும் சுவாசம் விடுதல்.

இருமல் : வயிற்றுப்போக்கு, சுவாசாசயங்களி லிருந்து இரத்தம் வெளியாகுதல், முதலிய குறிகளுடன் வரண்டும் இடைவிடாமலும் இருமும் நீடித்த இருமல். சுவாசம் விடும்போது பூனை கத்துவது போன்ற சப்தம்.

முதுகு : முதுகு வலியைச் சமனப்படுத்துவதற்காக வியாதியஸ்தர் அடிவயிற்றைக் கீழே வைத்துப் படுப்பார்.

சுரம் : சருமச் சில்லிப்பு. வியர்வையுடன் உஷ்ணம் தோன்றி மறைதல். அபரிமிதமான வியர்வை. இரவுகளில் வியர்த்தல். இருமல், கஷ்ட சுவாசம். வயிற்றுப்போக்கு. தொண்டைக் குழியின் மேல்பாகம் அழற்சி கொண்டு வீங்குதல். சரீரம் மெலிதல். மேற்கண்டவைகளுடன் விடாச் சுரம் அல்லது முறைச் சுரம்.

சருமம் : வெளுத்தல். நீர்க்கோர்வை யிருப்பின் சருமம் மெழுகு போன்றிருத்தல்.

உணர்ச்சி : எரிச்சல், சரீரம் முழுவதும் உணர்ச்சி குறைவாயிருத்தல்.

குறிப்பு : இவ்வௌஷதம் வண்டு, பூச்சி முதலியவை களின் கடிக்கு மாற்றாகும்.

நீரழிவு எனப்படும் மதுமேக வியாதியில் ஒப்பிடுதல்

அர்ஜண்டம் நைட்ரிகம் : மூத்திரம் மாசடைந்தும் இனிப்பாகவும் இரவுகளில் அபரிமிதமாகவும் இருத்தல்.

கால்களிலும் அண்டகோசத்திலும் நீர் வீக்கம். வயிற்றின் குழியில் அமுக்க உணர்ச்சி, சிரம சுவாசம்.

லைகோபோடியம், ஹெலோனியாஸ்: தித்திப்புள்ள நீரழிவு. பாஸ்பரஸ் பலமற்ற முள்ளந்தண்டு, அல்லது காசத்துடன் கூடிய நீரழிவு. அர்ஜண்டம் மெடாலிகம், காஸ்டிகம், யூபடோரியம் பர்போலியேட்டம், ஹெலோனியாஸ் தித்திப்பற்ற நீரழிவு, வெராட்ரம் ஆல்பம்—அடிக்கடி பசியேற்படுத்தும் குணமுள்ள நீரழிவு. ஜெல்ஸிமியம், அர்ஜண்டம் நைட்ரிகம்—ஏராளமான மூத்திரம், அடிக்கடி மூத்திரம் கழிக்க ஆவல். அர்ஜண்டம் மெடாலிகம்: தித்திப்பு இவைகளுடனிருக்கும் மூத்திரம் இரவுகளில் அபரிமிதமாகுதல்.

அஸபோடிடா (Asafoetida)

வயிற்று உப்பிசம், ஏப்பம். சங்கா தோஷத்தில் வயிறு, தொண்டை, மார்பு முதலிய இடங்களில் பந்து உண்டாகும் உணர்ச்சி. வாயு வயிற்றிலிருந்து மேற்புறமாக ஏறுதல், ஆனால் கீழே இறங்குவதில்லை. மார்பில் இறுகின உணர்ச்சியுடன் கூடிய சங்காதோஷ சம்பந்தமுள்ள ஆஸ்துமா. அசுத்த இரத்தக் குழாய்களில் அதிக இரத்தத்திரட்சி.

மனம்: கவலை, கோபம் வரும் குணம், வருத்தம், பயம். சங்காதோஷ சம்பந்தமாக அடிக்கடி மயக்கம் வருதல்.

தலை: தலையினுள்ளிருந்து வெளிப்பக்கமாகச்செல்லும் பிடிப்பு வலியுடன் கூடிய தலைவலி, மாலையில், நெற்றியிலும் பொட்டுகளிலும் வலி, வீட்டிலிருக்கும்போதும் கண்ணைப் பாறும் போதும் உட்கார்ந்திருக்கும் சமயத்திலும் அதிகம்.

திறந்த வெளியில் நடப்பதினால் சௌகரியம். தலையில் சில்லிப்பான வியர்வையும் முண்டுகளும். மண்டையோட்டில் மறமறப்பு.

கண்கள்: வரட்சி, எரிச்சல், கண்ணில்வலி, அமுக்கினால் சமனம்.

காதுகள்: நாற்றமுள்ள பதார்த்தம் வடிதல், காது கேளாமை. உள்ளிருந்து வெளிப்புரம் செல்லும் வலி.

மூக்கு: மூக்கின் எலும்புகள் உருக்குலைதல்.

தொண்டை: சங்காதோஷத்தில் வயிற்றில் ஒரு பந்து உண்டாகி தொண்டைக்கு வரும் உணர்ச்சி.

வயிறு: ஏப்பம், வயிற்றில் வாயு, உப்பிசம். சாப்பிட்டவுடன் வயிற்றிலிருந்து பந்துபோன்ற உருண்டையான வஸ்து தொண்டைக்கு ஏறி தொண்டையை அடைத்து விடும் உணர்ச்சி.

மலம்: வயிற்றுப்போக்கு, வலியுடன் நாற்றமுள்ள மலம், மலம் கழித்த பிறகு வலி சமனம்.

பெண்: கருப்பையில் புற்று அல்லது குழிப்புண், அதிக வலி. யோனி உதடுகளில் வீக்கம். பச்சை நிறமும் மெல்லியதாகவும் நாற்றமும்கொண்ட ஏராளமான வெள்ளைப்பாடு. கருப்பை கீழே விழுந்துவிடும் உணர்ச்சி, வண்டி சவாரி செய்தால் அதிகமாகுதல். மாதவிடாய் மிகவும் துரிதமாகவும் மிகவும் கொஞ்சமாகவும் சிலநாள் வரைதான் இருக்கும். மாதவிடாய் தடைப்பட்டதால் ஏற்படும் சங்காதோஷ ஈாக்கை வலிப்பு.

இருமல், சுவாசாசயம்: அழுக்குவதும் எரிச்சலு முள்ள பிடிப்பு வலி மார்பினுள்ளிருந்து வெளிப்பக்கம் செல்லுதல். மார்பில் இறுக்க உணர்ச்சியினால் மார்பைப் பெரிதாகாமல் தடுத்தல், வரண்ட இருமல்.

இருதயம்: இருதயம் நிறைந்தும் பெரிதாகவும் இருக்கும் உணர்ச்சி. துடிப்பு.

கை, கால்கள்: கை கால்களில் பிடிப்பு வலி, குதித்தல். வாதம்.

கேபிகள்: கோளங்கள் கடினமாகவும் வீங்கியும் துடிப்புடனும் இருத்தல். சரீரம் ஊதுதல்.

சருமம்: உபரமான ஓரங்களுடன் கூடிய எரியும் குழிப்புண்கள், நீல நிறம், அதிசீக்கிரமாக இரத்தம் வருதல் தொடுவதற்கு மிகவும் வலி. ஏராளமான மெல்லிய நாற்றமுள்ள சீழ். எலும்பு வலி, எலும்புகளில் குழிப்புண்.

சங்கா தோஷத்தில் வயிற்றில் பந்து உண்டாவதை ஒப்பிடுதல்.

கோனியம்: வயிற்றில் பிடிப்பு, சுருங்கிக்கொள்ளுதல்.

இக்கினேஷியா: உபாதியின் முக்கிய ஸ்தானம் தொண்டையில், வயிறு துருத்துதல், பந்து தொண்டைக்கு ஏறுதல். விழுங்கினால் சமனம்.

நக்ஸ்வாமிகா: உப்பிசத்துடன் வயிறு துருத்துதல்.

வேலரியேனா: ஏதோ சூடான வஸ்து வயிற்றின் மேலாக ஏறுதல்.

ஆக்ஸாலிக் ஆஸிட் (Oxalic Acid)

சரீரம் முழுவதிலும் இருக்கும் சுண்ணும்புச் சத்தைப் போக்கும் சக்தி இவ்வௌஷதத்திற்கு உண்டு. தசைகளில் பலவீனமும் பிடிப்பு வலியும், இரத்த வேகம் குறைதல், இரத்தத்தில் கரியமிலவாயு கலப்பதனல் சருமத்தின் நிறம் விகாரமடைதல். மயக்கம். இடது பக்க வாதரோகம். வயிற்றிலும் குடலிலும் அழற்சி, களைப்பு. அசைவதிலும் அவைகளைப்பற்றி நினைப்பதிலும் அதிகமாகும் வலிகள். இருதயம், முள்ளந்தண்டு, குடல், மூத்திரம் வரும் வழிகள் முதலியவைகளில் இவ்வௌஷதம் நன்கு வேலை செய்யும்.

மனம்: ஒரு விஷயத்திலும் கவனம் செலுத்த இயலாமை. ஒருவருடனும் பேசாமல் மந்தமாக இருத்தல்.

தலை: கிறுகிறுப்பு, பலவீனமும் தாகமும், கவலையும். தலைவலியும், வியர்த்தலும். சன்னல் வழியாக வெளியே பார்க்கும்போதும் உட்கார்ந்துவிட்டு பிறகு எழுந்திருக்கும் போதும் கிறுகிறுப்பு. படுக்கும்போது தண்ணீரில் நீந்துவது போன்ற உணர்ச்சி. தலையில் காலியாயிருப்பது போன்றும் மூளையிலிருக்கும் இரத்தம் யாவும் வெளியே போய்விட்டது போன்றும் தோன்றுதல். உச்சந்தலையிலும் நெற்றியிலும் கனம், மந்தவலி. காதுகளின் பின்னல் திருகு ஆணி இருப்பது போன்று தோன்றுதல், உச்சந்தலைக்கும் பின் தலைக்கும் நடுவில் உட்புறமாகச் செல்லும் வலி. சிறிய இடங்களில் தலைவலி தூங்கின பிறகும் கீழே படுத்தாலும் சாராயம் அருந்திலும் எழுந்திருந்தாலும் அதிகமாகுதல், மலங்கழித்தால் சமனம். மண்டையோட்டில் சில இடங்களில் வலி.

கண்கள்: படிக்கும்பொழுது அச்செழுத்துக்கள் ஒன்றின்மேலொன்று இருப்பது போன்று தோன்றுதல். மயக்கம், வியர்த்தல் முதலியவைகளுடன் பார்வை மறைதல்.

மூக்கு: தும்மல், நீருள்ள ஜலதோஷம். வலது மூக்கு சிவந்தும் பளபளப்பாகவும் இருத்தல். கண்பார்வை மறைவுடன் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு.

முகம்: வெளுப்பு, நீலம் பூரித்தல், சூடாக இருத்தல் அல்லது குளிர்ந்த வியர்வை. முதலில் இடத்தாடையிலும் பிறகு வலத்தாடையிலும் பிடிப்புடன் கூடிய இழுக்கும் வலி.

பற்கள்: சொத்தையான கடைவாய்ப் பற்களில் வலி. ஈறுகளிலிருந்து இரத்தம் வெளியாகுதல், வலி, ஈறுகளில் குழிப்புண்கள்.

நாக்கு: வீக்கம், சிவப்பு, எரிச்சல், காய்ந்திருத்தல். கெட்டியான வெளுப்பு மாசு. குமட்டல், தாகம், ருசியின்மை, புளிப்பு ருசி.

வாய்: தண்ணீர் போன்ற உமிழ்நீர்.

தொண்டை: (காலையில்) வரட்சி. விழுங்க சிரமம். புளிப்பு ருசியுள்ள ஏப்பம். கெட்டியான கோழை வெளிவருதல். நாட்பட்ட தொண்டை இரணம்.

வயிறு: கிறுகிறுப்பு, பசியின்மை, குமட்டல், வலி, முதலியவைகளுடன் தாகம். சர்க்கரை தின்னுவதால் வயிற்றுவலி அதிகமாகுதல். சாப்பிட்ட பிறகு ஏப்பம், குமட்டல், தொப்பூழில் வலி, கடபுடாவென்று இரைச்சல், வெளிக்குவருதல், பலவீனம், காலி உணர்ச்சி, சாப்பிட

வேண்டுமென்று தோன்றுதல். சாப்பிடுவதினால் வலி குறைதல். நெஞ்செரிவு. வயிற்றிலும் தொண்டையிலும் எரிச்சலுடன் வலி. சாப்பிட்டவுடன் வாயு உப்பிசம்.

அடிவயிறு: தொப்பூழைச் சுற்றிலும் அடிபட்டது போன்ற வலி, இரவிலும் அசைவதினாலும் சர்க்கரை தின்னுவதாலும் அதிகமாகுதல். பிடிப்பு வலிகள். அபான வாயு சிரமத்துடன் வெளியாகுதல். அதைப்பற்றி நினைப்பதினால் அதிகமாகும் வலிகள். இளைப்பாறும்போது சமனம். சர்க்கரை தின்பதினால் ஏற்படும் வயிற்றுவலி, அடிவயிற்றில் சில இடங்களில் வலி.

மலம்: அடிக்கடி இச்சை யில்லாமலேயே வெளியாகும் மலம், சிற்சில சமயங்களில் இரத்தம் கலந்திருத்தல். காப்பி குடித்தவுடன் ஏற்படும் வயிற்றுப் போக்கு, அடிக்கடி வருதல். கீழே படுத்தவுடன் வயிற்றுப் போக்கு திரும்பி வருதல். மலம் கழிப்பதற்கு முன் ஏற்படும் தலை வலி. மலம் போகும்போது வலியினால் ஏற்படுவதுபோன்ற மயக்கம், வாயாலெடுப்பு. மலம் போனபிறகு குமட்டல், தொண்டை வரட்சி. மலச்சிக்கலுடன் தாகம்.

மூத்திரம்: மூத்திரக் காய்களின் பிரதேசத்தில் வலி. அடிக்கடி ஏராளமான மூத்திரம், மூத்திரப்பையில் எரிச்சல். மூத்திரம் விடுவதை நினைத்தால் மூத்திரம் விடவேண்டி வருதல்.

ஆண்: புணர்ச்சியில் எல்லைக்கடந்த இச்சை. கீழே படுத்தவுடன் யாதொரு காரணமும் இல்லாமல் ஆண்குறி விரைத்தல். பிறகு விரைகளில் வலி. விரைகள் அடிபட்டது போன்றிருத்தல்.

தொண்டைக்குழி: கொரகொரப்பு. பேசும்போது கோழை தொண்டையில் அடைக்கும் உணர்ச்சி.

சுவாசம்: கஷ்ட சுவாசம், தொண்டையில் இறுக்கும் வலி. விஸ் என்ற சப்தம் வலப்பாகத்தில் அதிகம். இருதய உபாதிகள்.

இருமல்: திறந்த வெளியில் நடக்கும்போது தொண்டையில் குறுகுறுப்பு ஏற்படுவதினால் உண்டாகும் இருமல். தொண்டைக்குழி வீங்கியிருப்பதுபோன்று தோன்றுதல். இருதய சம்பந்தமான இருமல், அசைந்தால் அதிகமாகுதல். கடுமையான தேகப் பயிற்சி செய்தவுடன் வரண்ட இருமல். கெட்டியான மஞ்சள் நிறம் கலந்த வெண்மையான கோழை வெளிவருதல், அக்கோழையின் நடுவே வட்டமான கறுப்பு நிறம்.

சுவாசாசயங்கள்: இடது சுவாசகோசத்தில் குத்தும் வலி திடீர் என்று தோன்றுதல். அதனால் மூச்சுவிட சிரமம் ஏற்படுதல். வலியுள்ள மார்பு. இடது சுவாசகோசத்தின் அடியில் இரத்தத்திரட்சி, அழற்சி, வலி. இடது சுவாச கோசத்தில் வாதசம்பந்தமான வலி, படுத்தால் சௌகரிய மடைதல். மந்தமான, கனமான இரணமிருப்பதுபோன்ற மார்பு வலி.

இருதயம்: வலி, இ ர ண ம், பின்பக்கத்திலிருந்து முன்பக்கம் வரும் பிடிப்பு வலிகள், அல்லது மேலிருந்து கீழ்வரும் வலிகள். வாத சரீரமுள்ளவர்களுடைய அதிக நாடித் துடிப்பு, அதைப்பற்றி நினைத்தால் அதிகமாகுதல். இருதயத்திலும் இடது சுவாசாசயத்திலும் கடுமையான திடீரென்று தோன்றும் வலிகள், மேல்வயிறுவரை சென்று சுவாசம் விடமுடியாமல் செய்யும். இருதய வியாதிகள்

நினைத்த உடனேயே திரும்பி வரும். இருதய எரிச்சல். ஒழுங்கினமான, விட்டு விட்டு அடிக்கும் நாடி, பிசு பிசுத்த வியர்வை. பொதுவாக இருதயமும் நாடியும் பலவீன மாகவே இருக்கும்.

கழுத்தும், முதுகும்: தோள் பட்டையின் கீழும், தோள்பட்டைகளின் இடையிலும் வலி, அரையிடுக்கு, கீழ் முதுகுவரை பரவுதல். முள்ளந்தண்டிலிருக்கும் வலி கீழே கால்களுக்குப் பாய்தல். சில சமயம் துடித்தல், அசைந்தால் அதிகமாகுதல். மார்பிலிருந்து தோள்பட்டைக்குச் செல்லும் வலி. முதுகில் வலி, மறமறப்பு, பலவீனம், மலங்கழித்த பிறகு சௌகரியம். பலவீனமான இடுப்பு, அரைப்பூட்டு, கால்கள் முதலியவைகளுடன் கூடிய முள்ளந்தண்டு உபாதிகள். கால்கள் சில்லிட்டும் நீல நிறமாயும் மறத்தும் இருத்தல். முள்ளெலும்பு அழர்ச்சியினால் ஏற்படும் பாரிச வாயு, கை கால்களில் விரைப்பு. தோள்பட்டைகளிலிருந்து விரல்கள் வரை மறத்தல்.

கை கால்கள்: கைகளில் பிணம் போன்ற சில்லிப்பு. விரல் எலும்புகள் சேருமிடங்களில் அழர்ச்சி, வலி. வலது மணிக்கட்டில் சுளுக்கு. கைகளில் சாமான்களை வைத்திருக்கவோ அல்லது விரல்களை அசைக்கவோ முடியாமை, விரல்கள் முறுக்கிக் கொள்ளுதல். கால்கள் விரைப்பாகவும் மறத்தும் பலவீனமாகவும் சில்லிட்டும் சக்தியற்றும் இருத்தல். முழங்கால்கள் களைத்துப் போனதுபோல் தோன்றுதல். கால்களின் பாரிச வாயு. தசைகளில் முறுக்குதல். கை கால்களில் சில்லிப்பு.

தூக்கம்: கொட்டாவி விடுதல். பகலில் தூக்கக் கலக்கம். வயிற்று வலியினால் விழித்துக்கொண்டிருக்க

நேரிடுதல். இரவில் நாடித்துடிப்பு, வியர்வை முதலியவை களுடன் விழித்துக்கொள்ளுதல். பயப்படுத்தும் கனவுகள்.

சுரம்: சிவந்த முகம், தும்மல் முதலியவைகளுடன் சில்லிப்பு. முள்ளந்தண்டிற்கு மேலாக சில்லிப்பு. அனல் வீசும் சுரமும் உடனே சில்லிப்பும். வியர்வை பிசுபிசுப்பாகவும் பலவீனம், மயக்கம் முதலியவைகளைத் தரத்தக்கதாகவும் இருத்தல். முகம், கை கால்களில் சில்லிப்பான வியர்வை.

உணர்ச்சி: வெட்டும், பாயும், பிடிக்கும், கிழிக்கும் வலிகள். எரிச்சல், சிறிய சிறிய இடங்களில் வலி, சிறிது நேரம் இருந்து மறைதல். வியாதியஸ்தர் உபாதிகளைப் பற்றி நினைத்தவுடனேயே உபாதிகள் திரும்பி வருதல்.

விசேஷம்: சர்க்கரை, காபி, சாராயம், பிரயாசை, அசைவு, இடது பக்கம், காலை மூன்று மணி, இவைகளினால் அதிகம். உபாதியைப்பற்றி நினைத்தால் அது திரும்பி வருதல்.

ஆண்டிமோனியம் ஆர்ஸனிகம்
(Antimonium Arsenicum)

தலையில் அதிக இரத்த திரட்சி. நெற்றி, பொட்டுகள் முதலியவற்றில் வலி. முகம் ஊதுதல். களகள வென்று சப்தம் போடும் மார்புச் சளி. இவ்வௌஷதம் ஆண்டிமோனியம் டார்ட்டாரிகம், ஆர்ஸனிகம் இவ்விரண்டின் குறிகளும் ஒரு வியாதியஸ்தரிடம் கலந்திருக்குமாயின் கொடுக்கப்படலாம். மட்டு சுரம், கள களக்கும் மார்பு, மெதுவான அல்லது ஒடுங்கும் நாடி, ஏராளமான வியர்வை, அமைதியின்மை, கஷ்ட சுவாசம்.

ஆண்டிமோனியம் க்ரூடம்
(Antimonium Crudum)

உடம்பில் கொழுப்புச் சத்து அதிகமாகுதல். வாயா லெடுப்புடன் கூடிய வலிப்புகள். பிறர் தன்னைப் பார்க்கவோ அல்லது தொடவோ குழந்தைகளுக்குச் சகிக்க முடியாமை. கோபகுணம். மூக்கும் வாயோரங்களும் வெடித்திருத்தல், இரண வலி. மிகவும் வெண்மையான பால் போன்ற மாசு படிந்த நாக்கு. இரவில் ஸ்நானம் செய்ததினாலோ அல்லது அதிகச்சூடு ஏறியதினாலோ பேசமுடியாதிருத்தல். கை நகங்கள் வெடிப்பு. உள்ளங்காலில் கட்டை விரலின் சமீ பத்தில் பெரிய முட்கள் போன்ற சதை வளருதல். நடக் கும்போது பாதங்கள் மிருதுவாகவும் வலியுடனும் இருத்தல். கிழவர்களுக்கு மலச்சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருவதற்கு. ஸ்நானம் செய்வதினாலும் புளித்த காடியைக் குடித்ததினாலும் ஏற்பட்ட வயிற்றுப் போக்கு. வயிற்றுப் போக்கும் வாதரோகமும் மாறி மாறி வருதல்.

மனம்: பிரக்ஞையற்றிருத்தல். வலியில்லாத படுக் கைப் புண்கள் உண்டாகுதல். குமட்டல், சூடான சிவந்த முகம், ஒழுங்கீனமான நாடி, சுரம் போன்ற சூடு, குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்தால் அழுதல், முதலியவைகளு டன் மயக்கமுள்ள குழந்தைகள். டைபாய்டு சுரத்தில் வியாதியஸ்தருக்கு தன் உயிரின் மேல் வெறுப்பு வருதல். விவரிக்க முடியாத வருத்தம். சந்திர வெளிச்சத்தில் குதூகலமான உணர்ச்சி. அதிகக் காம இச்சை. கோபமும் வெடு வெடுப்புமுள்ள குழந்தைகள். பிறர் தன்னை உற்றுப் பார்க்கவோ அல்லது தொடவோ சகிக்காமை. ஒருவருட னும் பேசாமை.

தலை: கிறு கிறுப்பு, குமட்டல், மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல். தலைக்கு இரத்தம் விரைவாகச் செல்லுதல். மந்தமான தலைவலியும் கிறு கிறுப்பும், மாடிப்படி ஏறுவதினால் அதிகமாகுதல். நெற்றி வியர்வையுடன் வலித்தல். ஆற்று நீரில் குளிப்பதால் சீரணக்கோளாறு,, திராக்ஷை ரசம் குடித்தல், சில்லிப்பு வந்துபோன பிறகு, சலதோஷம், முதலிய காரணங்களால் ஏற்படும் தலை வலி. மூக்கிலிருந்து வடியும் நீர் குறைந்தவுடன் தலை வலி ஆரம்பமாகுதல்.

கண்கள்: எரியும் அடுப்பைப் பார்த்தால் இருமல் அதிகமாகுதல். கண்கள் சிவந்தும் அழர்ச்சியுடனுமிருத்தல். இடது கண் சிவப்பாகவும் வெளிச்சத்தைப் பார்க்க வெறுப்பாகவும் இருத்தல். கண் இமைகள் சிவந்தும், அழர்ச்சியடைந்தும் இருத்தல்.

காது: குடைதல். வலக்காது கேளாமை. வலி. சீழ் வடிதல்.

மூக்கு: இரவிலும் அதிக உஷ்ணமான அறையிலும் மூக்கடைப்பு. இரத்தப் பெருக்கு. மூக்கில் இரணம், வெடிப்பு, பொருக்குத் தட்டுதல். தலை வலி ஆரம்பமாகும் போது மூக்கிலிருந்து வடியும் நீர் நின்று விடுதல்.

முகம்: அதிகச் சிவப்பு. பருக்கள், கொப்புளங்கள் தோன்றுதல். கன்னங்களில் சீழ்க்கொள்ளும் ஆறாத புண்கள். காய்ந்த உதடுகள். வாயின் ஓரங்களில் வெடிப்பு.

பற்கள்: பல்வலி, சாப்பிட்ட பிறகும் தண்ணீரிலும் அதிகமாகுதல்.

நாக்கு: அடையாகவும் பால் போன்று வெளுப்பாக வும் உள்ள மாசு படிந்த நாக்கு. மஞ்சள் நிறமுள்ள உமிழ் நீர், உப்புக்கரித்தல். கசப்பு ருசி.

தொண்டை: கெட்டியான மஞ்சள் நிறமுள்ள கோழை.

வயிறு: ஊறுகாய்கள் தின்னப் பிரியம். சாப்பாட்டை வெறுத்தல். வரண்ட உதடுகளுடன் அதிக தாகம், இரவில் அதிகம். அல்லது தாகமின்மை. வாதரோகமும் குமட்ட லும் மாறி மாறி வருதல். கடுமையான வாயாலெடுப்பு, குழந்தை சாப்பிட்டவுடனே பால் குடித்தவுடனே வாயா லெடுத்தல்.

அடி வயிறு: பித்தப்பை அழர்ச்சி யடைந்தும் கடின மாகவும் இருத்தல். பித்தக் கற்களினுல் ஏற்படும் வலி. அடி வயிறு திருத்துதல், எரிச்சல். அபான வாயு உள்ளடக்கப்படுதல். குடைதல், இடது தொடைக் கிடுக்கில் உள்ள கோளங்கள் கடினமாகவும் வலியுடனும் இருத்தல்.

மலம்: காரமான தண்ணீர் போன்ற மலம், அதில் சீரணமாகாமல் ஆகாரம் கட்டி கட்டிகளாகக் காணப்படுதல். வாதரோகமும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல். குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம், மிதமிஞ்சிய உணவு, இவை களினுல் ஏற்படும் வயிற்றுப் போக்கு. கிழவர்களுக்கு மலச்சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல். கிழவர்களின் வயிற்றுப் போக்கு கடினமாக அதிக சிரமத் துடன் வெளியேறும் மலம். மலம் மிகவும் பெரியதாக இருத்தல், மலச்சிக்கலில் அபான வாயு வெளிவர முடியா மல் உள்ளேயே அமுக்கப்படுதல். கெட்டியான மலத்துடன் இரத்தம். வாதரோகமுள்ள வயதான சரீரங்களுக்கு ஏற் படும் எரியும், குத்தும் மூலங்கள்.

மூத்திரம்: அபரிமிதமாகவும் அடிக்கடியும் பிரிதல்.

பெண்: வாதரோகமுள்ள ஸ்திரீகளுக்கு கருப்பையி லிருந்து ஏதோ வெளியே வருவதுபோன்ற உணர்ச்சி. மாத விடாய்க்கு முன்பாக பொட்டுகளில் குடைதலுடன் பல்வலி. மெல்லியதாய்த் தண்ணீர் போன்று, காரமுள்ள வெள்ளைப் பாடு, தொடைகளை இரணமாக்குதல். குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்தால் ஏற்படும் மாதவிடாய் உபாதிகள்.

தொண்டைக் குழி: குரல் பலவீனப்படுதல் அல்லது அடியோடு போய்விடுதல், இரவில் ஸ்நானம் செய்ததினால், அல்லது வெய்யலில் அதிக நேரம் நின்றதினால். இளைப் பாறினால் சௌகரியம்.

சுவாசம்: கஷ்ட சுவாசம்.

இருமல்: இருமல் சரீரத்தையே குலுக்குதல். இரு மும்போது தானாகவே மூத்திரம் வெளியாகுதல். காலையில் இருமல், அடி வயிற்றிலிருந்து ஆரம்பிப்பது போன்று தோன்றுதல். கக்குவாய் இருமல், சின்னம்மைக்குப் பிறகு வரும் கக்குவாய் இருமல், வெய்யலில் நின்று ஏற்படும் இருமல். குளிர்ந்த இடத்திலிருந்து உஷ்ணமான இடத் திற்குச் சென்றால் இருமல், நெருப்பைப் பார்த்தால் அதிக மாகுதல்.

சுவாசகோசங்கள்: மார்பில் சூட்டுடன் வலி, அமுக் கம். மார்பில் அரிப்பு.

இருதயம்: கடுமையான துடிப்பு. ஒழுங்கின மான நாடி.

கழுத்து, முதுகு: கழுத்துக் கோளங்களில் வீக்கம். காலையிலும் கீழே படுத்த பிறகும் பின் கழுத்து தோள் பட்டை இவைகளிலும் இழுத்தல், குனிவது, தலையை இடது பக்கமாகத் திருப்புவது முதலியவைகளால் அதிகமாகும். உட்கார்ந்துவிட்டு பிறகு எழுந்திருக்கும்போது அடிமுது கில் வலி, நடந்தால் சமனம்.

கை, கால்கள்: முழங்கை மூட்டுகளில் அசைக்கும் போது முறிதல். விரல் நகங்கள் வளர்வதில்லை. நகத்தி னடியில் இருக்கும் தோல் வலியுள்ளதாக இருத்தல். நகங் களில் வெடிப்பு. உட்காரும்போது கால்கள் மறத்துப் போதல். உள்ளங்கால்களிலும் கட்டை விரல்களிலும் முட் கள் உண்டாகுதல். நடக்கும்போது வலித்தல். உள்ளங் கால் தடித்தல்.

நரம்புகள்: சப்தம் கேட்டவுடன் விழித்துக்கொள் ளுதல்.

தூக்கம்: தூக்கத்திலிருந்து பயங்கொண்டதுபோல் அடிக்கடி விழித்துக்கொள்ளுதல். சண்டை போடுவது போன்ற கனவுகள். நடுப்பகலில் தூக்கக் கலக்கம்.

சுரம்: கதகதப்பான அறையிலும் சில்லிப்பு. பக லிலும், மத்தியான வேளையிலும் அதிகத் தாகத்துடன், முது கில் சில்லிப்பு. கால்களில் பனிக்கட்டி போன்ற சில்லிப்பும் மற்ற இடங்களில் வியர்வையும் தாகத்துடன் கூடிய உஷ் ணம். காலையில் தூங்கி எழுந்தவுடன் வியர்வை. வெண்மை மாசுள்ள நாக்கு. ஏராளமான வியர்வை. ஒவ்வொரு நாளும் ஒரே சமயத்தில் வியர்த்தல். வியர்வைக்குப் பிறகு உஷ்ணம், தாகம்.

சருமம்: கொப்புளங்கள், கட்டிகள்.

விசேஷம்: உஷ்ணமான பருவத்தில், நெருப்பு, சூரிய உஷ்ணம், சூடு, குளிர்ந்த தண்ணீரில், அல்லது வெந்நீரில் ஸ்நானம், இரவு, முதலியவைகளில் உபாதி அதிகமாகுதல்.

முறிவு: கல்கேரியா, ஹீபார் சல்பர், மெர்கூரியஸ், பல்ஸடில்லா.

ஆண்டிமோனியம் டார்டாரிகம்
(Antimonium Tartaricum)

இவ்வௌஷதம் கள களத்த இருமலுள்ள குழந்தைகளுக்கு ஒரு வரப்பிரசாதமென்றே சொல்லலாம். மார்பிலும் தொண்டையிலும் கள களத்த கபம். வெளுத்த முகம். சரீரத்தின் மேற்பாகத்தில் குளிர்ந்த வியர்வை. அசையவோ அல்லது பேசுவதற்கோ விருப்பம் இல்லாமை. இபிகாக்உனவில் குழந்தை கோழையை வெளிப்படுத்த முடியும். இவ்வௌஷதத்தில் கபத்தை வெளியேற்றப் போதுமான சக்தி இல்லை. தொண்டையில் கரகரவென்ற இழுப்புடன் கூடிய நிமோனியா சுரத்தின் கடைசி நிலைமையில், குறைவான சுரம், பலவீனமான நாடி முதலியவைகளுடன், மார்பில் களகளத்த சப்தம் இருக்குமாயின் அதை நீக்குவதற்கு இவ்வௌஷதம் உபயோகமுள்ளது. குளிர் காலத்தில் கஷ்ட சுவாசத்துடன் கூடிய இருமல். கிழவர்களுக்கு ஏற்படும் களகளத்த சப்தம், அதனால் இரவில் மூச்சு அடைத்துவிடுமோ என்ற பயத்தினால் கீழே படுக்காமலிருத்தல். குமட்டல், வாயாலெடுப்பு, மந்தகுணம், அல்லது மயக்கம் முதலியவைகளுடன் கூடிய சிசுக்களின் விஷபேதி. மலம் ஏராளமாகவும் மெல்லியதாயும் குழகுழப்பாயும் அதிக நாற்றத்துடனும், புல்போன்று பச்சை நிற

மாயும் இருத்தல். மலம் போவதற்கு முன் கடுமையான வெட்டும் வலி, பிறகு வாயாலெடுப்பு, குளிர்ந்த வியர்வை. அம்மை குத்தியதால் ஏற்படும் தொந்திரவுகளுக்கு தூஜா கொடுத்தபிறகு இதைக் கொடுப்பது வழக்கம்.

மனம்: பிறர் தன்னைத் தொடுவதை விரும்பாமை, மற்றும் தன்னுடன் பேசவோ அல்லது பார்க்கவோ வெறுப்பு. பிறர் தன்னைப் பார்த்தால் சிணுங்குதல், கதறுதல். சந்தோஷமாக இல்லாமை. பயமுள்ள, சந்தேகமுள்ள, அமைதியற்றதன்மை. தான் தனியாக இருக்கும் போது பயம். மாலை நேரங்களில் சந்தோஷமாக இருத்தல்.

தலை: கண்களை மூடினாலும், நடக்கும்போதும், தலையைத் தூக்கும்போதும் கண்களுக்கு முன்பாக வெண்மையான பூச்சிகள் பறக்கும் உணர்ச்சியுடன் கிறு கிறுப்பு. அதனால் கீழே படுக்க நேரிடுதல். அழுத்தும் வலி (நெற்றி) துடித்தல் (வலப்பக்கம்) நெற்றியிலும் பொட்டுகளிலும் (இடது கண் சமீபமாக) பிடிப்பு வலிகள். இருமும்போது தலை நடுங்குதல். நெற்றியைச் சுற்றிலும் கயிறுகொண்டு கட்டியிருக்கும் உணர்ச்சி. வலது பொட்டில் இழுக்கும் வலி, தாடைவரை பரவுதல்.

கண்கள்: மேகவெட்டை, வாதம், கண்ணோய் இவைகள் சம்பந்தமாகக் கண் விழிகளில் அடிபட்டது போன்ற வலி. மங்கலான பார்வை. கண்களைச் சுற்றிலும் கருப்பு வளையங்கள். கண் விழிகளில் களைத்திருக்கும் உணர்ச்சி. பார்வை மறைதல்.

காதுகள்: குடைதல், படபடப்பு (இடது).

மூக்கு: தும்மல், ஏராளமான நீர் வடிதலும், சில்லிப்பும், வாசனை அறியும் சக்தி அறவே ஒழிதல். ஏராள

மான நீர்வடிந்த பிறகு மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு. மூக்கில் பொறுக்குகள் நிறைதல். மூக்கடைப்பும் நீர் வடிதலும் மாறி மாறி வருதல்.

முகம்: வெளுத்தும், குழிந்தும், ஊதியும், நீலமாயுமுள்ள முகம், கிழிக்கும் வலி. சூடாக எரிச்சல். முகத்தில் குளிர்ந்த வியர்வை. குமட்டலும், தலை, நெற்றி ஆகியவற்றில் சூடான வியர்வையும், உதடுகள் காய்ந்தும், சொற சொறப்பாகவும் வெளுத்தும் சுருங்கியும் இருத்தல். உதடுகளின் மூலைகளில் வெடிப்பு.

பற்கள்: வாத சம்பந்தமான விட்டு விட்டு வரும் பல் வலி (காலைகளில்) பற்களில் சளிபோன்ற பதார்த்தம் சேருதல். ஈறுகளிலிருந்து இரத்தப்பெருக்கு.

நாக்கு: கோடிழுத்தாற்போன்று நீளமான சிவப்பு, நாக்கினடியில் அதிக சிவப்பு நிறமும் வரட்சியும். நாக்கு முழுவதுமே கெட்டியான பிசின்போன்ற வெண்மையான மாசு மூடிக்கொண்டிருத்தல். நாக்கை அசைக்க மிகவும் சிரமமாயிருத்தல். புளித்த, கசப்பான ருசி.

வாய்: புண், விழுங்கமுடியாமை, வாயிலும் நாக்கிலும் அம்மைபோன்ற சிறு சிறு கொப்புளங்கள் தோன்றுதல்.

தொண்டை: தொண்டையில் கோழையுடன் சிறு சிறு சுவாசம். விழுங்குவதில் சிரமம் அல்லது விழுங்க முடியாமை.

வயிறு: குளிர்ந்த தண்ணீரை வேண்டுகிற தாகம். கொஞ்சமாகவும் அடிக்கடியும் குடித்தல். பால் ஒத்துக்

கொள்ளாமல் குமட்டல், வாயாலெடுப்பு முதலியவை ஏற் படுதல், தாகமின்மை. அடிவயிற்றில் இறுக்கும் அமுக்கும் உணர்ச்சி, சாப்பிட்டால் சிறிதுநேரம் சமனப்படுதல். சாப்பிட்டால் இருமலும் வாயாலெடுப்பும் வருதல். விக்கல், ஒன்றுமில்லாத வெற்று ஏப்பம். குமட்டல், வயிற்றில் கனம், நெற்றித் தலைவலி. வாயாலெடுப்பும் வயிற்றுப் போக்கும். வலது பக்கத்தைத் தவிர்த்து எப்படிப் படுத் துக்கொண்டாலும் வாயாலெடுப்பு, தலைவலி, கைகளில் நடுக்கம். மிகுந்த பிரயாசையுடன் வாயாலெடுப்பு, கடுமை யாகவும் வெகுநேரம் வரையிலும் நீடித்து வியாதியஸ்தரை மயக்கமுறச் செய்தல். வாயாலெடுப்பு, பச்சைக்கோழை, கெட்டியான கர்பிபோன்ற கோழை, பிறகு பிசின்போன்ற ஆகாரம், பிறகு பித்தத்துடன் கலந்த நீர் ஆகியவைகளுடன் இருத்தல். வாயாலெடுப்பிற்குப் பிறகு மந்த குணம், மயக் கம், குளிர்ந்த தண்ணீரில் ஸ்னானம் செய்யவும் குடிக்கவும் பிரியம். வயிற்றுப்போக்கு. வயிற்றில் அதிக கனமிருப்பது போன்ற உணர்ச்சி.

அடிவயிறு: நிறைய கற்கள் இருக்கும் உணர்ச்சி. கனமும் வலியும். வெட்டும் வலி. தொப்பூழைச் சுற்றி லும் வலி, உப்பிசம். வலது அரைப்பூட்டில் எரிச்சலுடன் இரணவலி. அங்குமிங்கும் குடைதல்.

மலம்: மஞ்சள் கலந்த பழுப்பு நிறம், மெல்லிய பித்த சம்பந்தமான சீதகம், நாற்றமடிக்கும் நீர், அபானத் தில் எரிச்சல், பிடிப்பு வலிகள். குடல்கள் நிறைந்தும் அமுக்கிக்கொண்டும் இருந்தபோதிலும் மலம் வெளியா காமை.

மூத்திரம்: கறுப்பாகவும் பழுப்பு நிறமாகவும், கலங் கியும், காரமான வாசனையும் உள்ள மூத்திரம். மூத்திரத்

தில் மண்போன்ற வஸ்து படிதல். கொஞ்சமாகவும் இரத்தம் கலந்தும் வெளியாகும் மூத்திரம். மூத்திரம் விடும்போது எரிச்சல்.

பெண் : அதிசீக்கிரமாக வரும் மாதவிடாய், பலவீனம், இரண்டு நாட்களுக்குமாத்திரம் இருத்தல். மாதவிடாய்க்கு முன்பாக அரைப்பூட்டில் வலியும் குளிர்ச்சியாக ஊறும் உணர்ச்சியும். நீர்போன்ற இரத்தம் வெளியாகும். வெள்ளைப்பாடு, உட்கார்ந்தால் அதிகமாகுதல், தாரை தாரையாகக் கொட்டுதல். ஜனனேந்திரியத்தில் கொப்புளங்கள்.

சுருப்பம் : பிறந்த குழந்தை வெளுத்தும், மூச்சில்லாமலும் இருத்தல் அல்லது மூச்சுவிட சிரமம். வயிற்று உபாதிகள். வாயாலெடுப்பு, உமிழ்நீர் அதிகமாக ஊறுதல்.

தொண்டைக்குழி : கொறகொறப்பு. இருமும்போதோ மூச்சு விடும்போதோ கோழை களகளவென்று சப்தமிடுதல். இக் களகளத்த சப்தம் பிறருக்கும் கேட்கும்.

சுவாசம் : விரைவாகவும் சிறியதாயும் கனமாயும் இருத்தல், கதகதப்பான அறையில் அதிகமாகுதல். கஷ்ட சுவாசம், உட்கார்ந்தால் சமனமாகுதல், தாகமின்மை, காலை மூன்று மணிக்கு மூச்சுத் திணறுதல், எழுந்து உட்கார நேரிடுதல், இருமலும் கோழை வெளியாவதும். மூச்சுவிட சிரமம். களகளப்புடன் கூடிய சுவாசம். காலை மூன்று மணிக்கு அதிகமாகும் ஆஸ்துமா, கீழே படுத்தால் அதிகம், உட்கார்ந்தால் சௌகரியம்.

இருமல் : இருமலும், மூச்சுத் திணறலும். கோபமாயிருக்கும்போதும் (குழந்தைகள்) சாப்பிட்ட பிறகும்

இருமல். குழந்தை சாப்பிட்ட பிறகு வாயாலெடுத்தல். உட்கார்ந்தால் சமனமாகும். ஈரமுள்ள களகளத்த இருமல், கோழை வெளிப்படுவதில்லை. இருமல் அடிக்கடி வருவது நின்று இரத்தத்தில் கரியமிலவாயு கலக்கும் குறிகள் தோன்றுதல். சுவாசகோசங்களிலிருந்து இரத்தப்பெருக்கு ஏற்பட்ட பிறகு இரத்தம் கலந்த குழகுழப்பான சீழ்போன்ற பதார்த்தம் வெளியாகுதல். இருமலுக்கு முன் மூச்சுத்திணரல். வெளியாகும் பதார்த்தம், கெட்டியான வெண்மையான கோழை.

சுவாசாசயம் : கபம் நிறைந்திருந்தும் அதை வெளியேற்ற சக்தியின்மை. அதிகமான களகளப்பு. சுவாசாசயங்களின் நீர்வீக்கம், இருதயத்திலிருந்து சூடான உணர்ச்சி, கைகள் நழுவுதல், பொதுவான பலவீனம்.

இருதயம் : துடிப்பு, இருதயத்தைப்பற்றி கவலைப்படுதல். கோழையும் பித்தமும் வாயாலெடுக்கப்படுதல், கடினமான, வேகமான நாடி.

கழுத்து, முதுகு : கழுத்தில் இழுப்பு.

கை, கால்கள் : கைகளில் நடுக்கம். கைகளும் கால்களும் சில்லிப்பாகவும் ஈரமாயும் இருத்தல். விரல் நுனிகள் உணர்ச்சியற்றும் கடினமாகவும் காய்ந்தும் இருத்தல். இடுப்பிலும் தொடைகளிலும் வாதவலி. உட்கார்ந்தால் கால்களில் குரக்களி ஏற்படுதல். எல்லா மூட்டுகளிலும் நீர்வீக்கம், குளிர்ச்சியான ஈர நப்புள்ள காலங்களில் அதிகமாகுதல்.

நரம்புகள், கேபிகள் : கை கால்களில் நடுக்கம், உடம்பு முழுவதிலுமே நடுக்கம். அமைதியின்மை, பலவீனம், மயக்கம். கொப்பளிக்கும் சிரங்குகள்.

சுரம் : சில்லிப்பு, சரீரம் குளிர்ந்த தண்ணீரை ஊற்றியதுபோன்று சில்லிப்பாயிருத்தல். சில்லிப்பும் சூடும் மாறி மாறி வருதல். கடுமையான, சிறிது நேரமே இருக்கும் சூடு, அசைவினால் அதிகமாகுதல். நெற்றியில் வியர்வையுடன் வெகுநேரம் நீடிக்கும் சூடு. சரீரம் முழுவதும் இரவிலும் வியர்வை. சூடாயிருக்கும்போதும் வியர்க்கும்போதும் வெளுத்த முகத்துடன் அதிக தூக்கக் கலக்கம்.

சருமம் : ஜனனேந்திரியத்திலும் தொடைகளிலும் கொப்பளிக்கும் சிரங்குகள், பிறகு அவ்விடங்கள் நீலமான சிவப்பு நிறமடைதல். அம்மை தோன்றுவது அமுக்கப்பட்டு அதனால் வலிப்புகள் வருதல்.

தூக்கம் : அதிகமான தூக்கக் கலக்கம்.

முறிவு : அஸபோடிடா, சைனா, காக்குலஸ், இபிகாக்உனா, லாச்சஸிஸ், ஓபியம், பல்ஸடில்லா, ஸேபியா.

அனுசரிப்பவை : பல்ஸடில்லா, ஸைலீஷியா.

உறவு : சுவாசகோசக் கோளாறின் ஆரம்பத்தில் களகளப்புடன் கோழையை வெளியேற்றும் சக்தியிருக்கும்போது இபிகாக்உனா தேவையாகும். மூன்று அல்லது நான்குநாட்களுக்குப்பிறகு கோழையை வெளியேற்றும் சக்தி குறைந்த பின் ஆண்டிமோனியம் டார்டாரிகம் கொடுபடவேண்டும். உறுதியான சரீரங்களுக்கு களகளத்த சப்தமும், ஆனால் படுக்கமுடியாமல் இருப்பதற்கு காலீ ஸல்ப்யூரிகம் கொடுபடவேண்டும். களகளப்பு, அமைதியின்மை, மிருதுவான நாடி முதலியவைகளுக்கு நக்ஸ் மாஸ்சேடா. மஞ்சள் நிறமுள்ள ஏராளமான கயிறுபோன்ற கோழை வெளியேறுவதற்கு அமோனியாகம்.

கபவாத சுரத்தில் ஒப்பிடுதல்

ஸல்பர்: சுவாசாசயத்திலிருந்து கபம் கசிய ஆரம்பிக்கும் சமயத்தில், அதாவது சுவாசாசயத்திலிருந்து வரும் சப்தம் தசைகள் உடைவது போன்றிருத்தல். பிறகு 7 அல்லது 8-வது நாளில் சுரம் பழைய நிலைமையை அடையாமல் அதிகப்படுதல்.

ஐயோடியம்: ஆரம்பத்தில் உபாதி ஒரு இடத்தில் ஸ்திரமாய் ஏற்பட்ட பிறகு, இதற்கு ஈடு இல்லை. இவ்விடத்தில் பாஸ்பரசை விடச் சிறந்தது. மார்பில் வலி, துரிதமான சுவாசம் வீங்கின கோளங்கள், அதிகச் சுரம், மலச்சிக்கல் பிடிப்பு வலி இல்லாமை.

ப்ரோமைன்: சுவாசாசயத்தின் கீழ்ப்பாகங்கள் மாறுபடும் நிலைமை.

பேர்ரம்பாஸ்: அகோனைட்டிலுள்ளது போன்ற பயமோ, மனக்கிளர்ச்சியோ அல்லது பேல்லடோன்னவில் இருப்பதுபோன்ற தலைக் குறிகளோ மயக்கமோ இருப்பதில்லை. துரிதமான நாடி ஆனால் கைக்கு அடங்கி இருக்கும். பலவீனமான இரத்த சோகையுள்ள குழந்தைகள். பொதுவாக இரத்தம் கலந்த கபம். தாகம் அவ்வளவாக இருப்பதில்லை. ஊதிய முகம். பேர்ரம்பாஸ் 6x ஒரு பங்கும் காலீமூர் 3x இரண்டு பங்கும் சேர்த்து நன்கு கலந்து கொடுத்தால் கபவாத சுரத்தின் முதலாவது இரண்டாவது கட்டங்களில் நன்கு குணம் தரும். சில சமயங்களில் காலீமூர் சுரத்தை அதிகப்படுத்தும், அப்போது பிரயோனியா நன்கு அனுசரித்து வேலைசெய்யும்.

பாஸ்பரஸ்: சலதோஷத்துடன் கூடிய கபவாதசுரம். மார்பில் மிருதுவான "விஸ்" என்ற சப்தம். பித்தவாதத்

துடன் சம்பந்தப்பட்ட கபவாதம். இருமுதல், முனகி இருமல் வருவதை அடக்குதல். இருமுவதினால் மார்பு பாதிக்கப்படுதல். துருப்பிடித்தது போன்ற கபம். மிகவும் அதிகமான சுரம், சிவந்த கன்னங்கள்.

ஆர்ஸனிகம் : அதிகமான கவலை. அமைதியின்மை, அதிக தாகமிருப்பினும் கொஞ்சங் கொஞ்சமாகவே தண்ணீர் குடித்தல். மார்பில் எரிச்சலும் உஷ்ணமும். வெளுத்த முகம், குளிர்ந்த கால்கள், களைப்பு, இரவு 1 மணியிலிருந்து 3 மணி வரை உபாதி அதிகம்.

பெல்லடோன்னு : மூளையில் அதிக இரத்தத்திறட்சி, மயக்கம், தூக்கக்கலக்கம் ஆனால் தூங்கமுடியாமை, தூக்கத்தில் எழுந்துவிடுதல்.

பிரயோனியா : அசையாமல் படுத்திருப்பது. சிறிதளவு அசைந்தாலும் உபாதிகள் அதிகமாகுதல். அதிகமான தாகம், நிறையத் தண்ணீர் குடித்தல், அல்லது வாயில் வரட்சியுடன் தாகமின்மை. வலியுள்ள பாகத்தைக் கீழே அமுக்கி வைத்துப் படுத்திருப்பார். மலச்சிக்கல்.

கார்போ வெஜிடாபிலிஸ் : மார்பில் கள களத்தல். கபத்தை வெளியேற்ற முடியாத அளவு பலவீனம், வெகு நேரம் தொடர்ந்து இருமல் அல்லது இருமல் இருப்பதில்லை. மாலைகளில் உபாதிகள் அதிகமாகி நடு இரவுவரை நீடித்தல். பழுப்பு நிறமுள்ள கபம். உதடுகளும் முகமும் நீலம் பூரித்துக் குழிவிழுதல். காலில் முழங்கால் வரை சில்லிப்பு, சில்லிட்ட மூக்கு, சிறிய பலவீனமான நாடி. மயக்கம், பிராணவாயுவைக் கிரகிக்க சக்தியின்மை, ஜீவபலம் அழிதல்.

செலிடோனியம்: வலப்பாகத்தில் அதிகம். பித்தக் குறிகள் அல்லது மலம் கடினமான உருண்டைகளாக இருத்தல். முகம், மூத்திரம், மலம் யாவும் மஞ்சளாக இருத்தல். வலது தோள்பட்டைக்குக் கீழாக வலி, மாலை 4 மணியிலிருந்து 8 மணி வரை அதிகமாகுதல்.

டிஜிடாலிஸ்: மந்தமான மெதுவான நாடி. ஏதோ சில உபாதிகளின் காரணமாக சுவாசாசயத்தின் வழியாக ஓடும் இரத்தத்திற்குத் தடை ஏற்படின் இம்மாதிரி ஏற்படும்.

ஹயாஸ்யாமஸ்: ரஸ்டாக்ஸி கோடண்ட்ரன் கொடுபட்டு அதனால் மயக்கம் தெளியாவிடில். வியாதியஸ்தர் மெதுவாக முணமுணத்தல், அறையில், இல்லாத மனிதர்களைப் பார்ப்பது போன்ற பிரமை, தன்னறியாமல் மலஜலம் கழிதல், எதிரில் எதையோ பிடிக்கப்போவதுபோல் கைகளை நீட்டுதல்.

காலீ கார்ப்: சிசுக்களுடைய அல்லது கிழவர்களுடைய கபவாத சுரம். மூச்சுவிட அதிக சிரமம், அதனால் தண்ணீர் குடிக்கவோ தூங்கவோ சிரமம். 'விஸ்' என்ற சப்தம், இருமல், காலையில் மேலிமைகள் சிறிய பைபோன்று சுரந்திருத்தல். விடியற்காலை மூன்று மணிக்கு உபாதி அதிகமாகுதல். சிறிய ஒழுங்கீனமான பலமற்ற நாடி. வெளுத்த முகம், சருமமும் மலமும் வரண்டிருத்தல். வலது சுவாசாசயத்தின் அடியிலிருந்து மேற்புறம் செல்லும் பிடிப்பு வலிகள்.

லாச்சஸிஸ்: அதிகமான கஷ்டசுவாசம், காலையிலும் பிற்பகலிலும் அதிகம், தவிர தூங்கின பிறகும் இடது பக்கத்திலும் அதிகம். கெட்ட நாற்றமுள்ள மலம். ரஸ்டாக்ஸி கோடண்ட்ரன், ஹயாஸ்யாமஸ் ஆகியவை கொடு

பட்டுப் பயனேற்படாவிட்டால். மயக்கமும் பலவீனமும் அதிகமாகிக்கொண்டே யிருத்தல், நாக்கை வெளியே நீட்ட முடியாது, கீழ்வாய்ப் பற்களில் ஒட்டிக்கொள்ளும். தொண்டையிலோ அல்லது மார்பிலோ அதி உணர்ச்சி, மந்தமான, பலவீனமான, விட்டு விட்டு அடிக்கும் நாடி.

லைகோபோடியம்: கன்னங்களில் வட்டமாக சிவந்து இருத்தல், வியர்வை ஏற்படுவதினுல் அனுகூலமின்மை. மூக்கின் சதை விசிறிபோன்று வளைதல். தூங்கி யெழுந்தவுடன், போர்வையை உதறித் தள்ளுதல். மாலை 4 மணிக்குப் பிறகும் 8 மணி வரையிலும் உபாதி அதிகம். கவனிக்காமல் விடப்பட்ட கபவாத சுரம். வயிற்று உப்பிசம் அல்லது பித்த சம்பந்தமான உபாதிகளுடன் கலந்தல். வியாதியின் முடிவில் கொடுக்கப்பட வேண்டிய ஔஷதம்.

நைட்ரிக் ஆஸிட்: வெகு நாட்களாக நீடித்திருக்கும் வியாதியஸ்தர்கள், பலவீனமுள்ளவர்கள், வலி திடீரென்று சமனமாகுதல், ஆனல் நாடியோ வர வரச் சிறியதாகவும் துரிதமாகவும் செல்லுதல். தொண்டை ஒட்டிக்கொள்ளுதல், இரத்தம் கலந்த கபம், அதி காலையில் அதிகம். வயிற்றுப் போக்கு.

ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன்: அமைதியின்மை, அசையாமல் படுத்தால் உபாதி அதிகரிப்பதால் அங்குமிங்கும் புரண்டுகொண்டே இருத்தல், சிவந்த நாக்கு, நுனியில் காய்ந்திருத்தல், கடும் தாகம்.

ஸாங்வினேரியா: கடுமையான கஷ்ட சுவாசம், துருப்போன்ற கபம், சிவந்த கன்னங்கள், மாலை 4 மணியிலிருந்து 8 மணிவரை உபாதிகள் மும்முரம்.

ஸெனிகா: வலப்பக்கத்தில் கடுமையான பிடிப்பு வலிகள். பலம் ஒய்ந்து போகுதல். சிறிய, புலப்படாத நாடி. அபூர்வமாக இருமுதல், அதிகக் கள களப்பு, மார்பில் வலி, அமுக்கப்பட்டு சுவாசித்தல்.

ஆர்னிகா மொண்டானு
(Arnica Montana)

அடி பட்டதினுல் ஏற்பட்ட உபாதிகளுக்கு. எலும்பில் வலியுடன் கூடிய சுரம், சரீரம் முழுவதும் இசிவு, படுக்கை மிகவும் கடினமாகத் தோன்றுதல், மித மிஞ்சிய பிரயாசையினுல் ஏற்படும் இருதயத் தொந்திரவு. மயக்கமாயிருக்கும்போது கூட ஒழுங்காகப் பேசுவது ஆனுல் உடனே தூங்க ஆரம்பித்து விடுதல். சரீரத்தில் நீலமான பொட்டுகள். குளிர்ச்சி, ஸ்நானம் செய்வது முதலியவைகளால் சௌகரியம். சூடான தலை, சில்லிட்ட சரீரம், உடம்பு முழுவதும் இசிவுடனும் வலியுடனும் இருத்தல். காலிலும் முழங்காலிலும் வாதம் மாலையில் அதிகம், பிறர் அப்பாகங்களை தொட்டுவிடுவார்களோ வென்று பயப்படுதல். பிரசவமானபிறகு ஜனனேந்திரியங்களில் ஏற்பட்ட இசிவு இரணம் முதலியவைகளைச் சமனப்படுத்த இதை உள்ளுக்குக் கொடுப்பது வழக்கம். பிரசவ வேதனைக்குப் பிறகு மூத்திரம் அடிக்கடி சொட்டு சொட்டாக வடிதல். சக்குவாய் இருமல். இருமல் வருவதற்கு முன் குழந்தை கதறுதல், கோழையில் இரத்தம் கலந்திருத்தல், கயிறு போன்றிருத்தல். இரவில் இருதயக் கோளாறுடன் அந்த க்ஷணமே சாவு நேர்ந்துவிடும் போன்ற நடுக்கம். பிரயாசை, அடிபடுதல், பிரசவ வேதனையினுல் உண்டான சிரமம் முதலியவற்ருல் ஏற்படும் மூத்திர அமுக்கம். நாற்றமுள்ள மலம், அபானவாயு.

குறிப்பு: சரீரத்தில் சிராய்த்தோ அல்லது காயம் பட்டோ இருக்கும் இடங்களில் ஆர்னிகா திராவகத்தைத் தடவக்கூடாது. அப்படித் தடவினுல் அக்கி உண்டாகும்.

மனம்: பிரக்கினையற்ற மயக்கம், மூளை அதிர்ச்சி, பார்வை இழத்தல், காது கேளாமை. பிரக்கினை யற்றிருக்கும்போதும் கேள்வி கேட்டால் சரியான பதில் கொடுப்பார். பாதி பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே தூங்கி விடுதல். இரவில் உற்சாகமற்றிருத்தல், பகலில் கருப்பைக் குறிகள், எங்கும் இசிவு, படுக்கை கடினமாக இருத்தல். பிறர் தன்னைத் தொடுவார்களோ என்ற பயம்.

தலை: கண்களுக்கு மேலாக நெற்றியில் அமுக்கும் வலி, பொட்டுகளில் பிடிப்பு வலிகள், அசைந்தாலும் படித்தாலும் அதிகமாகுதல். நள்ளிரவில் பொட்டுகளில் ஆணியை அடிப்பது போன்ற வலி, மூர்ச்சை யடைதல். தலை சூடாகவும் சரீரம் சில்லிப்பாகவும் இருத்தல். சூரிய இடி, பிரக்கினை இழத்தல். மல மூத்திரங்கள் தாமாகவே வெளியேறுதல். தலையில் அடிபட்டதினுல் ஏற்பட்ட மூளைவியாதி மற்றும் பல தொந்திரவுகள். பச்சையான வாயாலெடுப்பு. எழுந்திருந்தவுடன் கிறுகிறுப்பு.

கண்கள்: கண்களுக்கு முன்பாகப் பூச்சி பறத்தல். அடிபட்ட பிறகு பார்க்கும் வஸ்துக்கள் இரண்டாகத் தெரிதல். இரத்தம் செறிந்த கண்கள்.

காதுகள்: அடிபட்டதினுல் காது கேளாமை 'பஸ்' என்ற சப்தம், குடைதல், செவிடு.

மூக்கு: அடிபட்டதினுலும் அல்லது முகத்தைக் கழுவினுலும் இரத்தம் கொட்டுதல். இக்குறி டைபாய்டு சுரத்திலும் கக்குவாய் இருமலிலும் காணப்படலாம்.

முகம்: ஒரு கன்னம் சிவந்தும் எரிந்துகொண்டும் இருக்கும். குழி விழுதல், உதடுகள் வீங்குதல்.

வாய்: கெட்ட வாசனை, நாக்கில் வெண்மையான மாசு, கட்டி கட்டியாக இரத்தம் கொட்டுதல்.

வயிறு: புளிப்பான ஆகாரங்களில் பிரியம், தாகம். மாமிசம், பால், சுருட்டுக் குடிப்பது முதலியவைகளில் வெறுப்பு. காயங்கள் ஏற்பட்டதினுல் இரத்தம் கக்குதல், சரீரம் முழுவதும் இசிவு வலி. ஏப்பம் கசப்பாகவும் அழுகின முட்டையின் வாசனையை யொத்தும் இருக்கும்.

அடி வயிறு: உபாங்க வியாதி. கடினமான வீக்கம் (வலது) மார்பு எலும்புக் கூட்டுக்குச் சற்று கீழாக பிடிப்பு வலி, எழுந்து நிற்கும்போது சுவாசம் தடைப்படுதல்.

மலம்: குழ குழப்பான, இரத்தம் கலந்த சீதந் துடன் கூடிய வயிற்றுக் கடுப்பு. மலமும் அபான வாயுவும் அழுகின முட்டையின் நாற்றத்தை ஒத்திருத்தல். தூங்கும் போதும் மயக்கமாய் இருக்கும் போதும் தாஞகவே மலம் வெளியாகுதல். பழுப்பு நுரை போன்ற வயிற்றுப் போக்கு.

மூத்திரம்: அடிக்கடி தூண்டுதல், சொட்டுச் சொட்டாக மூத்திரம் வருதல். இரத்த மயமான மூ த் தி ர ம். அடிபட்டதினுல் மூத்திரப் பையில் ஏற்படும் கோளாறுகள். அதிகப் பிரயாசை, காயங்கள், மூளை அதிர்ச்சி, பிரசவ வேதனைக்குப் பிறகு, ஆகிய காரணங்களினுல் மூத்திரம் தடைப் படுதல். தாஞகவே மூத்திரம் வெளியாகுதல், மூத்திரம் விட உட்கார்ந்தவுடனேயே மூத்திரம் வராமல் வெகு நேரம் கழித்து வருதல்.

ஆண் : ஆண்குறியும் விரைகளும் வீங்கி யிருத்தல். காயம்பட்டதினுல் பீஜம் வீங்குதல்.

பேண் : அதி சீக்கிரமாக ஏற்படும் மாதவிடாய். யோனி உதடுகள் வீங்குதல். பிரசவ வேதனைக்குப் பிறகு மூத்திரம் சொட்டுச் சொட்டாக வருதல்.

கருப்பம் : பிரசவமான பிறகு ஜனனேந்திரியங்களில் ஏற்பட்ட இரணப்பட்ட நிலைமைக்கு இவ்வௌஷதம் கொடுப்பது வழக்கம்.* கீழே விழுதல், அதிர்ச்சி, அதிக தூரம் நடத்தல் முதலியவைகளினுல் கருச் சிதைவு ஏற்பட்டுவிடுவதுபோல் தோன்றுதல்.

இருமல் : கக்குவாய் இருமலில் இருமல் வருவதற்கு முன்பாகக் குழந்தை கதறுதல். இருமும்போது மார்பில் இசிவு. கபம் இரத்தம் தோய்ந்திருத்தல். கக்குவாய் இருமலினுல் இரத்தப் பெருக்கு, தளர்ந்துபோன கோழையை வெளியேற்ற முடியாமை, அதனுல் உள்ளே விழுங்க நேரிடுதல். கத்துவதினுல் குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல்.

இருதயம் : நசுங்குவதுபோன்ற வலி. மார்பின் நடுப் பாகத்திற்குக் கீழாக அமுக்க உணர்ச்சி. இரவில் இருதயத் தொந்திரவுகளுடன் அந்த நிமிஷமே மரணம் சம்பவிக்கு மென்ற பயம். வேகமாக ஓடினதால் ஏற்பட்ட உபாதிகள். கைகளால் இருதயத்தை நன்கு பிடித்துக்கொண்டிருப்பது போல் தோன்றுதல். கைகளைத் தொங்க விடுவதாலும் அல்லது அதிக வேலையினுலும் கைகள் வீங்குதல். இருதய உபாதிகள்.

கை, கால்கள் : நின்றுகொண்டிருக்கும்போது முழங் கால் மூட்டுகள் திடீரென்று வளைதல். வாத ரோகம்.

அசையும்போது மூட்டுகளில் பட்சவாயு சம்பந்தமான வலி. கால்களிலும் முழங்கால்களிலும் வாத சம்பந்தமுள்ள வலி, மாலையில் அதிகமாகும், தவிர அப்பாகங்களைத் தன்னுடன் நடந்து வருபவர்கள் தொட்டுவிடுவார்களோ வென்று பயப் படுதல். அடிபட்டதுபோல் வலி. களைத்திருக்கும் கால்கள்.

நரம்புகள்: களைத்த உணர்ச்சி. பலம் அதிவேகமாகக் குறைதல்.

சுரம்: தலை அல்லது முகம் சூடாகவும் சரீரம் சில்லிப்பாகவும் இருத்தல். சில்லிப்புடன் சூடும், ஒரு கன்னத்தில் சிவப்பும். இடுப்பு, முதுகு, கைகள் முதலியவைகள் சோர்ந்திருத்தல். விட்டு விட்டு அடிக்கும் சுரங்கள், டைபாய்டு என்னும் விஷ சுரம், அடிபட்டதினுல் ஏற்படும் சுரங்கள். சுரமில்லாமலும் சில்லிப்பு வருமுன்பும் தாகம். மாலையில் வயிற்றின் குழியில் சில்லிப்பு. புளிப்புள்ள வியர்வை.

சருமம்: சருமத்தின் கீழே பழுப்பு அல்லது நீல நிறமுள்ள புள்ளிகள், கொஞ்சம் பழுத்த கட்டிகள், கொப்புளங்கள். சதை அழுகுவதை இவ்வௌஷதம் தடுக்கும்.

விசேஷம்: தொடுவதினுலும், மாலை, இரவு ஆகிய நேரங்களிலும் உபாதிகள் அதிகமாகும். குளிர்ந்த பருவங்களில் சமனம்.

அனுசரிப்பவை: அகோனைட், ஆர்ஸனிகம், பிரயோனியா, இபிகாக்உனு, ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன், ஸல்ப்யூரிக் ஆஸிட்.

ஒப்பிடுதல்: ஆர்னிகா, பாப்டீஷியா இவ்விரு ஔஷதங்களிலும், சரீர முழுவதும் இசித்தல். படுக்கை கடினமாக இருத்தல், அங்குமிங்கும் புரளுதல், அதிக சிவப்பான

முகம், எழுப்பக்கூடிய மயக்கம், ஆனால் எழுப்பியவுடனேயே தூங்கிவிடுதல், நாக்கில் கறுத்த சிவப்பான கோடுகள், ஆகிய குறிகள் இருக்கின்றன. ஆனால் பாப்டீஷியாவில் வியாதியஸ்தர் அங்குமிங்கும் புரண்டுகொண்டு தன்னுடலின் பாகங்களை ஒன்றுசேர்க்க முயலுவார். தவிர படுக்கையில் தன்னுடன் வேறொருவர் படுத்திருக்கும் நினைப்பு, வெளிவரும் மலம், மூத்திரம், மூச்சுக்காற்று முதலியவை நாற்றமாய் இருக்கும். ஆர்னிகாவில் மலம் முதலானவை தாமாகவே வெளியேற்றப்படுகின்றன. சருமத்தின் அடியில் நீலமான புள்ளிகள் இருக்கின்றன.

வீக்கத்தில் ஒப்பிடுதல்: ஆர்னிகா: மிருதுவான பாகங்களில் வீக்கங்கள். ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன்: மூட்டுகளிலுள்ள பந்தனிகளில் ஏற்பட்ட வீக்கங்கள். காலண்டூலா: கிழிந்த காயங்களுக்கு. ஸ்டாபிஸாக்ரியா: மிருதுவான காயங்கள், சஸ்திர சிகிச்சையில் ஏற்பட்டவை. லேடம்: கூரான ஆயுதங்களால் ஏற்பட்டவை. ஸ்ட்ரோண்டியா கார்ப்: ஆபரேஷன் செய்தான பிறகு ஏற்படும் களைப்பு.

ஆர்ஸனிகம் ஆல்பம்
(Arsenicum Album)

கவலை, அமைதியின்மை, கோபம் வரும் குணம், மனதிலும் சரீரத்திலும் களைத்திருத்தல். இளைப்பு, சரீரத்தில் நீர் அதைப்பு. சாவு பயம், மயக்கம், அதிக தாகத்துடன் கூடிய எரியும் வலி, உஷ்ணத்தினாலும் உஷ்ணமான ஒற்றிடங்களினாலும் சமனமாகுதல். தலைவலி மாத்திரம் குளிர்ச்சியான ஒற்றிடங்களினால்தான் சமனமாகும். நள்ளிரவு அல்லது நடுப்பகலில் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரை உபாதிகள் அதிகமாகுதல். காரமான பட்ட இடங்

களைப் புண்ணுக்கும் எரிச்சலுடன் கூடிய நீர்கள் வெளியேறுதல், அனேகமாக மிகவும் நாற்றமுடன் இருத்தல். மிகவும் கொஞ்சமாக ஆனால் அடிக்கடி தண்ணீர் குடித்தல். அதிகமான தாகம். குழந்தைகளின் வாயில் வெண்மையான குழிப்புண்கள். டைபாய்டு சுரத்தில் அதிகச்சோர்வு, கையைத் தூக்கினால் நடுக்கம், உடம்பு மாத்திரம் அசையாமலிருத்தல். சத்தில்லாத உணவைச் சாப்பிடுபவர்களுக்கு ஏற்படும் மலேரியாச் சுரம். விட்டுவிட்டு வரும் உபாதிகளுக்கு இது மிகவும் சிறந்த ஔஷதமாகும். குறைவான உஷ்ணமுள்ள விட்டுவிட்டுவரும் சுரம், நடுப்பகல் அல்லது நள்ளிரவுகளில் அதிகமாகுதல், உஷ்ணம் வெகுநேரம் நீடித்து இருத்தல். சடுமையான வியாதிகளில் நாடி பலவீனமாகவும் கைகளுக்குத் தென்படாமலும் இருக்கும்.

மார்பில் கடுமையான வலி. மூக்கிலிருந்து மெல்லிய, தண்ணீர் போன்ற பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் நீர் வடிதல். கிழவர்களின் கபவாத சுரத்தில் அழுகிப்போன மெல்லிய தசைகள் வெளிவருதல். சாவுக்குரிய நிலைமையை ஏற்படுத்தும் எவ்வித வியாதிகளுக்கும் உபயோகமுள்ளது.

மனம்: குழப்பம், அமைதியின்மை, தூங்கமுடியாமை, அனேகவிதமான யோசனைகளில் மூழ்கியிருத்தல், அவைகளைப்பற்றி நினையாமல் இருக்க முடியாமை. படுக்கைத் துணிகளைப் பிடித்து இழுத்தல். தூங்கும்போது மயக்கம். உன்மத்தம். சாவு பயம். மாலையிலும் இரவிலும் பயம். நள்ளிரவிற்குப் பிறகு அமைதியின்மை, படுக்கையை விட்டு எழுந்திருந்து தனிமையாக அறையில் ஒளிந்து கொள்ளுதல். இருதயத்தில் இறக்கும் உணர்ச்சி, கஷ்ட

சுவாசம் முதலியவைகளுடன் அதிக விசாரம், பயம், கவலை, அமைதியின்மை, நடுக்கம், களைப்பு, குளிர்ந்த வியர்வை. தான் இறக்கத்தான் வேண்டுமென்று நினைத்தல், அதனால் வைத்தியர்களால் தனக்கு ஆகவேண்டிய தொன்று மில்லையென்று கூறுதல். எரிச்சல் குளிர்ந்த தண்ணீரினால் சமனம், இரவு ஒரு மணிக்கு அதிகமாகுதல். அங்குமிங் கும் ஒரு படுக்கையைவிட்டு மற்றொரு படுக்கைக்கும் இப் படியே சரீரம் களைத்துப்போகும் வரையிலும் அசைந்து கொண்டேயிருந்து களைத்த பிறகும் கை கால்களை மட்டும் அசைத்துக்கொண்டே யிருத்தல். எப்பொழுதும் சில்லிப் பாகவும், வருத்தமாகவும், கண்ணீர் விட்டுக்கொண்டும் கவலையுடனும் இருத்தல். சரீரத்தில் பிண நாற்றம். தன் சிநேகிதர்களுக்குத் தான் ஏதோ தீங்கு செய்துவிட்டோ மென்று நினைத்துக்கொண்டு அவர்களைச் சந்திக்க விரும் பாமை. சமுத்திரக்கரையில் வசிப்பதினால் ஏற்படும் உபா திகள். பலமாக முனகுதல்.

தலை: கிறுகிறுப்பு, தலையில் கனம், நெற்றித் தலை வலி, காதுகளில் எரிச்சல், திறந்தவெளியிலும் குளிர்ச்சி யான ஒற்றிடங்களிலும் சௌகரியம், ஆனால் அறையில் நுழைந்தவுடன் திரும்பி வருதல். 3, 4, 7, 12, அல்லது 15 நாட்களுக்கொருமுறை தவறாமல் வரும் தலைவலி. அமுக்கும் தலைவலி, உச்சந்தலையிலும், தலையிலும், எரிச்சல், அது வெந்நீர் ஸ்நானம், அமுக்குவது முதலியவைகளால் சமனம். இவ்வலிகள் வாதசம்பந்த முள்ளவைகளாக யிருப் பின் உஷ்ணத்தினால் சமனம். தலைவலியும் அதிக மூத்திரப் போக்கும் மாறி மாறி வருதல். தலைவலியும் வாத ரோக மும் மாறிமாறி வருதல். பிடரியில் கடுமையான வலி, மயக்கமுறச்செய்தல். அதி உணர்ச்சியுள்ள மண்டையோடு. தலைமயிரைத் தொடுவதற்குச் சகியாமை. வலிகள் இடப்

பக்கத்திலும் இடது பக்கத்தில் படுப்பதாலும் அதிகரித்தல். சீழுடன் கூடிய நாட்பட்ட சிரங்குகள். மயிர் உதிரல்.

கண்கள் : கண்களிலிருக்கும் இரத்தக் குழல்கள் மாமிசத் துண்டுபோல் சிவந்தும் எரிந்துகொண்டும், வரண்டும், வெளிச்சத்தில் கண்கள் கூசுதலும், பார்க்கும் வஸ்துக்கள் யாவும் பச்சையாக இருத்தலும் ஏதோ ஒரு திரை வழியாகப் பார்ப்பதுபோன்ற உணர்ச்சியும் இருத்தல். கண்ணிமைகள் வலியுடனும் எரிச்சலுடனும் இருத்தல். காரமுள்ள கண்ணீர், புளிச்சை முதலியவைகளுடன் சிறுவர்களுக்கு ஏற்படும் சுறப்போடு கூடிய கண்ணோய்.

காதுகள் : அதிநுட்பமாக சப்தம் கிரகித்தல். அல்லது காது கேளாமை. மனிதர்கள் பேசுவது மாத்திரம் காது கேளாமை. காதிலிருந்து வெளியாகும் பதார்த்தம் கெட்டதாகவும் ஏராளமாகவும் பட்ட இடங்களைப் புண்ணாக்கிக்கொண்டும் இருத்தல். வலியுடன் காதில் பலத்த இரைச்சல்.

மூக்கு : அதியுணர்ச்சி, ஆகாரத்தைப் பார்க்கவோ அல்லது அதன் வாசனையையோ சகிக்க முடியாமை. தும்மல், நீர்வடிதல், தண்ணீர் போன்ற காரமுள்ள பதார்த்தம் வடிதல், திறந்த வெளியில் சமனம். மூக்கில் வீக்கம். மூக்கிலிருந்து மார்புவரை சலதோஷம் கட்டியிருத்தல். கோபமேற்பட்ட பிறகும், வாயாலெடுத்தவுடனும் மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு. முடிச்சுகளுடன் கூடிய வீக்கம் எரிச்சல், திறந்த வெளியில் சமனம். தும்முவதினல் யாதொரு சௌகரியமும் ஏற்படாமை. இரவு ஒரு மணிக்குப் பிறகு மூன்று மணிவரை அதிகமாயிருக்கும் ஆஸ்துமா.

முகம்: பிண வெளுப்பு, வீக்கம், குழிந்திருத்தல். குளிர்ச்சியான வியர்வையுடன் முகத்தில் நீர்ச் சுரப்பு. முகத்திலும் உதடுகளிலும் எரிச்சலுள்ள புற்றுகள். சூடான ஊசிகளை சரீரத்தில் குத்துவது போன்ற எரிச்சலும், கடுக்கும் வலியும். வலியுள்ள உதடுகள்.

பற்கள்: பல் வலி, அடுப்பின் உஷ்ணத்தில் சமனம். ஈறுகள் வீக்கம், இரத்தப் பெருக்கு.

நாக்கு: நாக்கின் அடியில் எரிச்சல், வீக்கம். நாக்கு நுனி காய்ந்தும் சிவந்தும் இரணமாயும் இருத்தல். நீலம் அல்லது சிவப்பு நிறமுள்ள வாயின் குழிப்புண்கள். கொஞ்சமாகவும் ஆனால் அடிக்கடியும் தண்ணீர் குடித்தல். கொப்புளங்கள்.

வாய்: காய்ந்தும் கடுமையான தாகத்துடனும் இருத்தல். தண்ணீர் வயிற்றில் தங்க முடியாமை. ஆகையால் உஷ்ணமான பானங்களையே விரும்புதல். (முற்றிப்போன கேசுகளில் தாகம் இருக்காது.) வாய் முழுவதும் எரிச்சல், வலி முதலியவைகளுடன் கூடிய சிரங்குகள்.

தொண்டை: காற்றுக் குழாய், தொண்டைக் குழி முதலியவற்றில் எரிச்சல். தொண்டையில் சதை வளரும் நோய்.

வயிறு: தணிக்க முடியாத தாகம், கொஞ்சங் கொஞ்சமாகத் தண்ணீர் குடித்தல், புளிப்பான பதார்த்தங்களில் பிரியம், ஆகாரம் வெண்ணை முதலியவைகளில் வெறுப்பு. வயிற்றில் ஏராளமான உஷ்ணம், எரிச்சல், இரத்த வாயாலெடுப்பு. வயிற்றுக் குழியில் உள்ள வலியால் சுவாசத் தடை. அடிக்கடி விக்குதல், குமட்டல், சாப்பிட்டவுடனேயும் குடித்த உடனேயும் வாயாலெடுப்பு.

அடி வயிறு: கல்லீரலும் மண்ணீரலும் பருத்தல். ஏக்கத்துடன் தரையில் படுத்து உருளுதல், தொப்பூழைச் சுற்றி வலி, முதுகுப்புறமாக படுத்தால் வலி அதிகமாகுதல். அடி வயிறு துருத்தி யிருத்தல். கடுமையான எரிச்சல், அரைப் பூட்டில் இருக்கும் கோளங்களில் வீக்கம்.

மலம்: நள்ளிரவிற்குப் பிறகு அதிகமாகும் வயிற்றுப் போக்கு. கழுநீர் போன்ற போக்கு அல்லது குடலில் இருந்து கரு இரத்தம் வெளியாகுதல். மலம் கொஞ்சமாகவும் பச்சை அல்லது கறுப்பு நிறமாகவும் கடுப்புடனும் அதிக நாற்றமுள்ளதாகவும் இருத்தல். சரீரம் பனிக்கட்டி போல் குளிர்ந்தும் வயிற்றில் எரிச்சலும் ஏராளமான தாகமும் இருத்தல். அபானத்தில் எரிச்சலும் தோலுரிதலும், உஷ்ணமான ஒற்றிடத்தால் சமனம். மாதவிடாயின்போது மலப்பையில் தைக்கும் வலிகள் இருத்தல்.

மூத்திரம்: கொஞ்சமாகவும் சிரமத்துடனும் எரிச்சலுடனும் மூத்திரம் வெளியாகுதல். அடிக்கடி மூத்திரம் போகத் தூண்டுதல். கை கால்களில் நீர்ச் சுரப்பு, வீக்கம். வயிற்றில் சங்கடம், தாகம், மூத்திரத்தில் முட்டை வெளுப்புப் போன்ற பதார்த்தம் வெளியாகுதல். காலரா, ஊது காமாலை, முதலிய வியாதிகளில் மூத்திரம் கொஞ்சமா யிருத்தல்.

ஆண்: பீஜங்கள் பெருத்தல். ஆண்குறியின் நுனி பாகம் நீலச் சிவப்பாகவும் வீங்கியும் வெடித்தும் இருத்தல்.

பெண்: ஏராளமான, மஞ்சள் நிறமுள்ள, கெட்டியான, காரமான வாசனையுள்ள, பட்ட இடங்களைப் புண்ணாக்கும் வெள்ளைப்பாடு. யோனி உதடுகளில் வீக்கம். வலது சினைப்பையில் எரிச்சலுடன் கூடிய தைக்கும் வலிகள். சினைப்பையிலிருந்து தொடை வரை வலியும் அதனால்

தொடைகள் மறத்தும் இருத்தல், அசைந்தால் வலி அதிகமாகுதல். வலது சினைப்பையின் எரிச்சல் நள்ளிரவில் அதிகமாகும். இரத்த சோகையுள்ள ஸ்திரீகளுக்கு அதி விரைவாகவும், ஏராளமாகவும், வரும் மாதவிடாய்.

சுவாசாசய உறுப்புகள்: பொய்ச் சதை வளருதல். இரவுகளில் மூச்சு அடைத்துவிடும் போன்றிருத்தல். இரவு 11 அல்லது 1 மணிக்கு அதிகமாகும் ஆஸ்துமா. மார்பை முன்னால் வளைத்துக்கொண்டு படுக்கையிலிருந்து குதித்துவிடுவார், உட்காரவேண்டி வருதல். மார்புக்கு மேலாக புகைவரும் உணர்ச்சி. மார்பிலும் வயிற்றிலும் இறுக்கம். கீழே படுத்தாலும் வேகமாக நடந்தாலும் மூச்சுத் திணறுதல். இரத்தமயமான கபத்துடன் கூடிய இருமல். மாடிப்படி ஏறும்பொழுது மார்பில் இறுக்கம்.

இருதயம்: பலவீனம், நடுக்கம், துடிப்பு, முதுகுப்புறமாகப் படுக்க முடியாமை, இரவு மூன்று மணிக்கு அதிகமாகுதல். இருதய வியாதிகள், இருதயத்தைச் சுற்றிலும் திடீரென்று இறுக்கும் உணர்ச்சி. வலி மார்பு பூராவும் இடது கைக்கும் பரவுதல். காலையில் வேகமாகச் செல்லும் நாடி.

கழுத்து, முதுகு: பின் கழுத்தும் முள்ளந்தண்டும் விரைப்பாக இருத்தல், கீழ் முதுகில் அடிபட்டது போன்ற வலி. இடுப்பிலிருந்து கழுத்துவரை இழுக்கும் வலி.

கை கால்கள்: நடுக்கம். முன் கை கறுப்பாகவும் கன்றியும் இருக்கும். விரல்களில் எரியும் குழிப்புண்கள். முழங்கால் மூட்டுகளில் வலி. முழங்கால்களில் கரப்பான், தேமல், படர் தாமரை. உள்ளங்கால்களிலும் காற்கட்டை

விரல்களிலும் குழிப்புண்கள். இரவில் சற்று வலி சமனப் படுவதற்காக கால்களை அசைத்துக்கொண்டே யிருத்தல்.

நரம்பு: நரம்பு சம்பந்தமான தலை வலி, மயக்கம், சரீர பலம் திடீரென்று குறைதல். அமைதியின்மை. கோப குணம்.

தூக்கம்: அமைதியின்மை. தூக்கம் இல்லாததினுல் தூக்கிட்டுச் சாகலாமென்று நினைக்கும் மனே நிலைமை. தூக்கத்திலிருந்து திடீரென்று எழுந்திருத்தல். இரவு 3 மணிக்குப் பிறகு தூங்கமுடியும். நெருப்பு, கறுப்பு, இருட்டு முதலியவைகளைப் பற்றிய கனவு.

சுரம்: நடுக்கல் வரும்போது சூடான தண்ணீர் குடித்தல். வெகு நேரம் நீடிக்கும் உஷ்ணம், உஷ்ணமா யிருக்கும்போது குளிர்ந்த தண்ணீர் குடித்தல், கொஞ்ச மாகவும் அடிக்கடியும் குடித்தல். வியர்வை ஆரம்பிக்கும் போது தணிக்க முடியாத தாகம், தண்ணீர் ஏராளமாகக் குடித்தல். நாட்பட்ட வியாதிகளில் எப்பொழுதும் குளிர் இருக்கும். திறந்த வெளியில் நடக்கும்போது குளிர் ஏற்படுதல். விட்டு விட்டு வரும் முறைச் சுரம்.

சருமம்: வரண்டும் தோல் உரிந்துகொண்டும் சுருங் கியும் இருக்கும். எரியும் வலிகளுடன் கூடிய இராஜ பிளவை, புற்று வியாதிகள். உயர்வான ஓரங்களை உடைய எரிச்சலுள்ள குழிப்புண்கள். வெளிவரும் பதார்த்தங்கள் கறுப்பாகவும் கட்டிதட்டியும் இருக்கும். அல்லது காரமாக வும் அழுகிய சதை போன்ற நாற்றத்துடனும் இருக்கலாம். தலையில் கொள்ளு போன்ற பொறுக்குகள் பொறுக்குத் தட்டியும் நாற்றமுள்ள சீழ் ஒழுகுவதுடனும் கூடிய சொரி சிரங்குகள்.

உறவு: கார்போ வெஜிடாபிலிஸ், சைனு, போரம், க்ராபைடிஸ், ஐயோடியம், இபிகாக்உனு, மேர்கூரியஸ் கரோஸிவஸ், நக்ஸ்வாமிகா, வெராட்ரம் முதலியவைகளை இவ்வௌஷதம் முறிக்கும்.

முறைச் சுரங்களில் சைனுவிற்குப் பிறகு ஆர்ஸனிகம் நன்கு வேலை செய்யும். ஒழுங்கற்ற சில்லிப்பு, கடுமையான உஷ்ணமும் தாகமும், சூடான பானங்களினுல் சௌகரியம், குமட்டல், வாயாலெடுப்பு, காதுகளில் 'பஸ்' என்ற சப்தம்.

டைபாய்டு எனப்படும் விஷ சுரத்தில் சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகுதான் இவ்வௌஷதத்திற்கு உபயோகம் வரும். மிகுந்த களைப்பு, சரீரம் அசையாமல் கை கால்களை மாத்திரம் அசைத்தல், மயக்கம், உடம்பில் குளிர்ந்த வியர்வை, பற்களிலும் நாக்கிலும் வாயிலும் மாசு படிதல், சிவந்த நாக்கு அதனடியில் வெண்மையான குழிப் புண்கள், ஏதாவது ஆகாரம் அல்லது தண்ணீர் உட்கொண்டபின் வயிற்றுப் போக்கு, சில சமயங்களில் தானுகவே மல ஜலம் வெளியாகுதல், முனகலுடன் கூடிய மயக்கம், நள்ளிரவிற்குப் பிறகு உபாதி அதிகமாகுதல், மூத்திர அடக்கம், சில சமயங்களில் கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் கசிதல்.

அரிக்கும் சொறி

ஆண்டிமோனியம் க்ருடம்: சிரணக் கோளாறுகளினுல் ஏற்பட்டவை. அபிஸ் மேல்லிபிகா: உஷ்ணத்தினுல் அதிகம். ஆர்ஸனிகம்: குளிர்ச்சியினுல் அதிகம். இரத்த சோகை. லேடம் பாலஸ்த்ரீ: கத கதப்பு ஏற்பட்டால் அதிகம். டல்கமாரா: குளிர்ந்த பருவங்களில் அதிகம்.

ருமக்ஸ் க்ரிஸ்ட்ஸ்: குளிர்கால ஆரம்பம், குளிர்ந்த காற்று, காலை ஐந்து மணி இவைகளில் அதிகம்.

விசேஷங்கள்: இரவு ஒரு மணியிலிருந்து மூன்று மணிவரை உபாதிகள் அதிகம். நரம்பு சம்பந்தமான தலை வலியைத் தவிர மற்ற உபாதிகள்யாவும் சூட்டினால் சமனம்.

ஆர்ஸனிக் ஐயோடைட்
(Arsenic Iodide)

சுவாசாசயத்தில் குழிகளுடன் கூடிய க்ஷயரோகம். முறைச்சுரம். ஏராளமான சளை வெளியேற்றத்துடன் கூடிய நாட்பட்ட கபவாத சுரம். கஷ்ட சுவாசம். இரவு களில் வியர்வை, சுவாசாசயத்தில் சீழ்க்கட்டிகளுள்ள கப வாத சுரம். அழர்ச்சி, இரத்தப்பெருக்கு முதலியவை களுடன் சுவாசாசயத்தில் இருக்கும் கெபிகள் நார்போன்று உருமாறுதல், தளர்ச்சி, இரவுகளில் வியர்வை, பிணம் போன்ற முகம், களைப்பு, வேகமான நாடி, விட்டு விட்டு அடிக்கும் சுரம், இளைப்பு. காலையில் வயிற்றுப்போக்கு, அசைந்தால் அதிகமாகுதல், முதலியவைகளுடன் குழிவிழ ஆரம்பித்தல்.

ஆர்ஸனிகம் ஆல்பத்தின் தொண்டைக் குறிகளுடன் மூக்கிலிருந்து புண்ணை உண்டாக்கும் தன்மையுள்ள கடுமை யான நீர்வடிதலுக்கும் இவ்வௌஷதம் உபயோகப்படும். பகலில் 5 முதல் 8 தடவைகள் வரை பேதியாகுதல், இர வில் ஒன்றும் இருப்பதில்லை. இரவு 11 மணியிலிருந்து 2 மணி வரை இருக்கும் ஆஸ்துமா.

ஆரம் ட்ரிபில்லம் (Arum Triphyllum)

மூக்கிலிருந்து காரமான நீர் ஏராளமாக வடிதல், மூக்கு அடைப்பு. இரணவலி. மூக்கிலிருந்தும் உதடுகளிலிருந்தும் இரத்தம் வரும்வரை நோண்டுதல், மூக்கு, வாய் ஓரங்கள், மேலுதடு முதலியவை வெடித்தும் இரத்தப் பெருக்குடனும் வலியுடனும் இருத்தல். காரமான ஏராளமான உமிழ்நீர், வாய் பச்சைப் புண்ணாயிருத்தல், நாக்கில் வீக்கம். டைபாய்டு என்னும் விஷசுரத்தில் குறைந்த மூத்திரம், மேற்கண்டபடி மூக்கையும் உதட்டையும் நோண்டும் குறிகள் இருப்பின் இவ்வௌஷதம் கொடுக்கப்படலாம். தொண்டையில் சதை வளரும் வியாதி. பொதுக்கூட்டங்களில் பிரசங்கம் செய்வோரின் தொண்டையில் புண்கள், வலி.

மனம்: மெதுவாய் முனகும் மயக்கம், மூக்கை நோண்டுதல், உதடுகளைப் பிடித்திழுத்தல். டைபாய்டு சுரத்தில் கூக்குரல் இட்டுக்கொண்டு, மூக்கு, தொண்டை, வாய்க் குறிகளிருத்தல்.

தலை: தலையிலோ பொட்டுகளிலோ மந்தமான அமுக்கும் தலைவலி. சூடு, கதகதப்பான அறை, முதலியவைகளினால் அதிகமாகுதல். பொட்டுகள், கண்கள், பிடரித்தலை முதலியவற்றில் பிடிப்பு வலிகள்.

கண்கள்: மேல் இமைகள் கனமாகவும் நடுங்கிக் கொண்டும் இருத்தல். வெளிச்சத்தில் கூச்சம். ஓரங்களில் வீக்கம்.

மூக்கு: மூக்கடைப்பு, இடப்பக்கத்தில் அதிகம், வாயால் மூச்சுவிடவேண்டி வருதல். ஏராளமான நீர்வடி

தல், பிற்பகலில் இடது பக்கத்திலிருந்து ஏராளமாக நீர் கொட்டுதல். தண்ணீர் குடிக்கும்போது மூக்கில் ஏறிவிடும். காரமாகவும் புண்ணை உண்டாக்கும் தன்மையும் உள்ள நீர்வடிதல். அடிக்கடி மூக்கை நோண்டுதல்.

முகம் : ஊதியிருத்தல். உதடுகள் வெடித்தும் கெட்டியாகவும் வீங்கியும் எரிச்சலுடனும் இரத்தம் வடிந்து கொண்டும் இருத்தல். தாடைக் கோளங்களில் வீக்கம், இடப்பாகத்தில் அதிகம். இரத்தம் வரும் வரை உதடுகளைப் பிடித்து இழுத்தல்.

நாக்கு : வீங்கியும், வெடித்தும் இருக்கும்.

வாய் : வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் வெளியாகும் பதார்த்தங்கள் காரமாகவும் புண்ணை உண்டாக்கும் தன்மையுள்ளதாகவும் இருத்தல். வாயின் உட்புறம் முழுவதும் இரணமாகவும் வலியுடனும் இரத்தம் வடிந்துகொண்டும் குழிப்புண்ணுடனும் இருத்தல். வாயிலிருந்து அழுகின நாற்றம்.

தொண்டை : பச்சைப்புண், விழுங்கமுடியாமை, கொறகொறப்பு. பாடும்போதோ அல்லது பேசும்போதோ குரல் மாறுதல்.

அடிவயிறு : குடைதல்.

மலம் : தண்ணீர் போன்றும் கறுத்த பழுப்பு நிறமாகவும் அபானத்தில் எரிச்சலுடனும் மலம் வெளியாகுதல். அபான வெடிப்புகள்.

மூத்திரம் : மூத்திர அடக்கம். சில சமயங்களில் அபரிமிதமாக வெளியேறுதல்.

குரல்வளை : அதிகமாகத் தொண்டையை உபயோகப்படுத்திப் பேசுவதினாலும் பாடுவதினாலும் ஏற்படும் கொறகொறப்பு. பாடகர்களின் அல்லது பிரசங்கிகளின் வலியுள்ள தொண்டை. தொண்டையில் அதிகக் கோழை, ஆனால் கோழையை வெளியேற்ற சிரமம். தொண்டையில் நாற்றமுள்ள குழிப்புண்கள்.

சுவாசம் : நாட்பட்ட நீர்வடிதல், துரித நாடி முதலியவைகள் உள்ள ஆஸ்துமா.

சருமம் : அரிப்பு, ராமக்கண் அம்மை, இடப்பாகத்தில் அதிகம்.

விசேஷம் : வடமேற்குக் காற்றினாலும் கீழே படுத்தாலும் அதிகம்.

முறிவு : மோர்.

அனுசரிப்பவை : காஸ்டிகம், ஹீபார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட் முதலியவை.

ஆரம் ம்யூரியாடிகம்
(Aurum Muriaticum)

கை கால்களில் இழுக்கும் கிழிக்கும் வலி. சோம்பல். வேலைசெய்ய மனமின்மை. வாழ்வில் வெறுப்பு. தூக்குப் போட்டுக்கொள்ளும் மனோ நிலை, தூக்கம், அழுதல். கெட்டகாலம் நேரிடப்போவதென்று பயப்படுதல். பலவீனமான ஞாபகசக்தி. பல இடங்களில் எரியும் வலிகள்.

மனம் : கை கால்களில் இழுக்கும் கிழிக்கும் வலி. மனக் கிளர்ச்சி, அல்லது தளர்ச்சி. வேலை செய்ய வெறுப்பு,

தன் உயிரில் வெறுப்பு, தூக்கிட்டுச் சாகலாமென்ற எண்ணம்.

தலை: அசையும்போது கண்களுக்கு முன்பாக சுற்றுதலும் கண்களின் மேலாகக் கிழிக்கும் வலியும் ஆகியவைகளுடன் கூடிய கிறுகிறுப்பு. குனிந்தால் அதிகமாயும், திறந்தவெளி, இரவில் படுப்பது முதலியவைகளால் சமனப்பட்டும் இருத்தல். காலையில் எழுந்திருக்கும்போதும் மாலையிலும் இடது பொட்டில் துடிக்கும் வலி. குளிர்ந்த தண்ணீர் ஒற்றிடத்தினுல் சௌகரியம்.

கண்கள்: இடது கண்ணில் கிழிக்கும் வலி, திறந்த வெளியில் சென்றால், எரிச்சல், அரிப்பு. கைகளால் கண்ணை மூடிக்கொள்வதினுல் சௌகரியம். கண்ணிமைகள் காலையில் சிவந்தும் வீங்கியும் ஒட்டிக்கொண்டும் இருத்தல்.

காதுகள்: கணகணவென்று சப்தம், செவிடு, காதுகளின் உட்புறம் அகன்றும் காலியாகவும் இருக்கும் உணர்ச்சி.

மூக்கு: வீக்கத்துடன் சிவப்பு நிறம் (இடது). இடப்பாக மூக்கின் ஆழத்தில் குழிப்புண், வரண்ட மஞ்சளான பொறுக்கு. சுவாசம்விட முடியுமென்றாலும் ஏதோ அடைத்திருப்பது போன்ற உணர்ச்சி. தும்மல், மூக்கெலும்புகளில் கிழிக்கும் வலி. நாற்றமுள்ள தண்ணீர் போன்ற காரமான நீர். திறந்த வெளியில் சௌகரியம்.

முகம்: சிவப்பு, உதடுகளில் பருக்கள்.

வாய்: ஈறுகள் சிவந்தும் வீங்கியும் இருத்தல். இரவில் அதிகம். எரிச்சல், அரிப்பு, முதலியவைகளுடன் கூடிய வாய்ப் புண்கள். நாக்கில் புற்று.

தொண்டை: அடிக்கடி விழுங்குதல். தொண்டையில் ஏதோ முளை சிக்கிய உணர்ச்சி நாடைக் கோளங்களில் வீக்கம்.

வயிறு: பசி கெட்டுவிடுதல். தாகம், காற்றமுள்ள ஏப்பம், காலையில் குமட்டல், சாப்பிட்ட பிறகும் காலை ஆகாரத்திற்குப் பின்பும் அதிகமாகுதல். மந்தமான சீரணம். பச்சையாக வாயாலெடுத்தல்.

அடிவயிறு: குடைதல், துருத்துதல், உப்பிசம், வலி. சிறு குடலில் வலி, மல விசர்ஜனம் செய்யும்போது அதிகம். கல்லீரல் பெரிதாகவும் கடினமாகவும் இருத்தல்.

மலம்: இரத்தம் கொட்டும் மூலங்கள். தண்ணீர் போன்ற வயிற்றுப்போக்கு, இரவில் அதிகம், வெண்மை நிறம். அபானத்தில் எரிச்சல்.

மூத்திரம்: அடிக்கடி மூத்திரம் விடுதல். எரிச்சல்.

ஆண்: விரைகளில் வீக்கம். இடது விரையில் எப்பொழுதாயினும் வலி மேல்நோக்கிச் செல்லுதல்.

பெண்: யோனி உதடுகளில் வீக்கம், சிவப்பு, அரிப்பு, எரிச்சல். காரமாகவும் மெல்லிய மஞ்சளாகவும் உள்ள வெள்ளைப்பாடு. அதி விரைவாகவும் ஏராளமாகவும் காரமாகவும் உள்ள மாதவிடாய். யோனியில் அரிப்புடன் எரிச்சல். கருப்பை பெரிதாகவும் கடினமாயும் இருத்தல்.

சுவாசாசய அவயவங்கள்: தொண்டையில் குறுகுறுப்பு. பலமான, ஆனால் சிறிய, வரண்ட அடிக்கடி வரும் இருமல். இரவுகளில் அதிகம். இருமலுக்குப் பிறகு

தொண்டையில் சூடு. வெளிவரும் கோழையில் இரத்தம் கலந்திருத்தல் அல்லது கெட்டியான மஞ்சள் நிறமாயிருத்தல். இரவில் மூச்சடைத்தல், மார்பில் கனம். நிற்கும் போது ஆழ்ந்து சுவாசித்தல்.

மார்பு: வலது மார்பில் கிழிக்கும் வலி, உள் மூச்சு விடும்போது அதிகமாகுதல்.

இருதயம்: நடு மார்புவரை தைக்கும் வலிகள் பரவுதல், அசைந்தாலும் ஆழ்ந்து சுவாசித்தாலும் அதிகமாகுதல். குடைதல்.

கழுத்து, முதுகு: விரைப்பான கழுத்து, எரிச்சல், முதுகில் இழுக்கும் வலி. அரையிடுக்கில் அடிபட்டது போன்ற உணர்ச்சி, குனிந்தால் அதிகமாகுதல்.

கை கால்கள்: அடிபட்ட உணர்ச்சி. இடது தோள் பட்டையில் கிழிக்கும் வலி. கைகளில் மின்சார விசை தாக்குவதுபோன்ற உணர்ச்சி. கைகளை மடக்க முடியாமை. விரல் மூட்டுகள் விரைப்பாக இருத்தல். சாப்பிட்ட பிறகு நடு விரலில் கிழிக்கும் வலி. தொடைகளில் விண்ணென்று வலி, முழங்கால்கள் தள்ளாடுதல், கால் பெருவிரலில் வலி. நடக்கும்போது கட்டை விரல்களில் வெட்டும் வலி. கால்களில் நீர் அதைப்புள்ள வீக்கம்.

சருமம்: கால் பெருவிரல்களில் சிவப்பு. மணிக்கட்டுகளில் வீக்கம். தொப்பூழிற்குக் கீழாக சிவந்த பருக்கள். குண்டியிலும் தொடைகளிலும் கொப்புளங்கள். காதுகளுக்குப் பின்பக்கத்தில் பொறுக்கு. நெற்றியில் அரிப்பு.

தூக்கம் : ஆழ்ந்த தூக்கம், திடுக்கிட்டு எழுந்திருத்தல், பயங்கரமான கனவுகளுடன் அமைதியின்மை.

சுரம் : உச்சந் தலையில் குளிர்ச்சியான உணர்ச்சி. நெற்றியில் எரிச்சல். முழங்கால்களில் சூடு. கால்களில் எரிச்சல் வியர்வை அதிகரிப்பு.

ஆரம் மெட்டாலிகம்
(Arum Metallicum)

தூக்கிட்டுத் கொள்ளும்படியான மனோ நிலை. பாதரச சம்பந்தமான ஒளஷதங்களை அபரிமிதமாக உபயோகித்து உடம்பு கெட்டவர்களுக்குக் கிரந்திப் புண். எலும்பு வலி, அழுகிய சிறு எலும்புகளில் வலி, அதாவது மூக்கு, வாயின் மேற்புறம், மார்பு முதலியவற்றிலுள்ள சிறு எலும்புகள். கண்களின் கறுப்பு விழிகளில் காட்டப்பட்ட கிரந்தி குழிப் புண்கள். அரைப் பார்வை, பார்க்கும் வஸ்துக்களில் கீழ்ப்பாகம் மாத்திரம் தெரிதல். கருப்பை நழுவுதல், கடினமாக இருத்தல். கடுமையான நாடித் துடிப்பு, வேலை செய்தால் அதிகமாகுதல். இருதயம் துடிக்காமல் சிறிது நேரம் இருந்துவிட்டுப் பிறகு திடீரென்று ஒருதரம் கடினமாக அடித்தல். விரைகளில் காட்டப்பட்ட அழற்சி. ஸ்திரீகளில் அதிகக் கிளர்ச்சி, மனக் குழப்பம், அசுத்த இரத்தக் குழாய்கள் புடைத்திருத்தல், தலையில் அதிக இரத்தம் கூடுதல் அல்லது புணர்ச்சியில் அளவற்ற பிரியம், நாடித் துடிப்பு, அனல் வீச்சு, திறந்த வெளியில் குளிர்ந்த காற்றில் நிற்கப் பிரியம், உடுத்தியிருக்கும் ஆடைகளை அவிழ்த்து எறிய வேண்டுதல். பருவ காலப் பெண்கள், பருவம் அடையாத சிறுவர்கள், வயதானவர்களுக்கு இருக்கும் பலவீனமான பார்வை, ஸ்தூல சரீரம். இருதய வியாதி.

பாதரச சம்பந்தமான ஔஷதங்களை உபயோகப்படுத்திய தால் ஏற்பட்ட கிரந்தி நோய். குளிர்ந்த இரவுகளில் எல்லா உபாதிகளும் அதிகம், குளிர்ந்த காற்றினாலும் ஸ்நானம் செய்வதாலும் சௌகரியம்.

மனம்: ஞாபகக் குறைவு. தன்னுடைய காரியங் களைச் செய்வதில் அசிரத்தையாய் இருக்கிறோமென்று நினைத்தல். தன் நண்பர்களை அலட்சியம் செய்து விட்டோம் என்று எண்ணுதல். எப்பொழுதும் கடவுளை நினைத்து துதித்துக்கொண்டே யிருத்தல். தன்னுடைய வாழ்நாட் களைப் பாபம் செய்து கழித்துவிட்டோ மென்றும் தான் மோக்ஷத்திற்குத் தகுந்தவனல்ல வென்றும் நினைத்தல். பரபரப்பும் தூக்கிட்டுக்கொள்ளும் மனோ நிலைமையும். உயிரோடிருப்பதில் ஆசை குறைதல். மனப் பைத்தியம், புத் திக் தடுமாற்றம். பிரமை, நாய்களைப் பார்ப்பதுபோன்று, சுவற்றில் கை மாத்திரம் இருப்பதுபோன்று பயம், வாயிற் படியில் ஏதாவது சப்தம் கேட்டால் அதனால் கவலைப்படுதல். வருத்தம், அழுதல், நம்பிக்கை இழத்தல், எந்தக் காரிய மும் தவறாக இருக்கிறதென்றும், ஒரு காரியமும் ஜெயமா காதென்றும் நினைத்தல். தான் இந்த உலகத்திலிருக்க தகுதியற்றவரென்று நினைத்தல். தன்னைத் தானே நிந்தித் துக் கொள்ளுதல், பழித்தல். அதிக வலியினால் சன்னல் வழியாக வெளியே குதித்துவிடுதல், மாலை நேரங்களில் உயிருடனிருப்பது கசந்து போகுதல், இறக்கவேண்டும் என்று பிரியப்படுதல். ஒரு சமயம் சந்தோஷமாகவும் மறு சமயம் கோபமாகவும் மாறிக்கொண்டே யிருக்கும் குணம். அதிகக் கோபம் வரும் குணம், ஒன்றுமில்லாத விஷயங்களி லும் கவலைப்படுதல், மனக் கிளர்ச்சி. பிறர் தன்னை எதிர்த் துப் பேசுவதை சகிக்கமாட்டார். சண்டைபோடும் குணம். வருத்தம், கலியாண விஷயங்களில் ஏமாற்றம், பயம், பிறர்

தன்னை எதிர்த்துப் பேசியதால் ஏற்பட்ட கோபம், முதலிய வைகளினால் ஏற்படும் உபாதிகள்.

தலை: குனியும்பொழுது கிறு கிறுப்பு, ஒரு சுற்றுச் சுற்றுவது போன்றிருத்தல், எழுந்திருந்தவுடன் மறைந்து விடுதல். திறந்த வெளியில் நடக்கும்பொழுது கள் குடித்த வன் போன்றிருத்தல். இடது பக்கமாக விழுந்துவிடுவோ மென்று நினைத்தல், கீழே படுக்க நேரிடுதல், சிறிது அசை யினும் கிறுகிறுப்பு. நெற்றியிலும் பொட்டுகளிலும் ஆழ்ந்த கிழிப்பதுபோன்ற தலைவலி, மன வேலையினால் அதிகமாகு தல், திறந்த வெளியிலும் துணிகொண்டு இறுகக் கட்டுவ தாலும் சௌகரியம், ஆனால் துணி கட்டுவதினால் உடம் பில் சூடு ஏற்படும். தலையில் இரத்தம் வேகமாக அதிகரித் தல். ஊதிய முகம், கண்களுக்கு முன்பாக பளிச்சென்று ஒளி வீசுதல், மன வேலையினால் அதிகமாகுதல். அடி பட்டது போன்ற வலி, காலையிலும் மன வேலையினாலும் அதிகம். தலையில் குடைதல். பைத்தியமடையச்செய்யும் கடுமையான தலைவலி, தன்மேல் காற்று அடிக்கும் உணர்ச்சி. இருதயத் தொந்திரவுடன் தலைவலி, குமட்டல், பித்த வாயாலெடுப்பும் ஏற்படும். மண்டையோடுகளில் வலியும் அடிபட்டது போன்ற இசிவும் படுத்தால் அதிகமாகவும் ஆகுதல். தலையிலும் மூக்கிலும் உள்ள எலும்புகள் அழுகுதல்.

கண்கள்: அரைப் பார்வை. இரட்டைப் பார்வை. பார்க்கும் வஸ்துக்களின் கீழ்ப்பாகம் மாத்திரமே தெரிதல். மேல்பாகம் கறுப்பாகவும் அவ்விடங்களில் பளபளப்பான நட்சத்திரங்கள் இருப்பது போன்றும் தோன்றுதல். கண் களில் விரைப்பு. கண்களின் பாப்பாக்கள் சுருங்கியோ அல்லது ஒழுங்கீனமாக அகன்றோ இருக்கும். கரு விழி யில் புள்ளிகள் விழுதல். குத்திட்ட பயங்கரமான பார்வை.

கண் விழிகள் வெளுத்திருத்தல், வெளிச்சத்தில் கூச்சம். கண்களைத் திறந்தால் புண்ணை உண்டாக்கும் தன்மையுள்ள ஏராளமான கண்ணீர் வடிதல். கண்களைச் சுற்றிலும் இசிப்புள்ள வலி.

காதுகள்: குடைதல், காதுகளிலும் மூக்கிலும் வரட்சி, காது கேளாமை. நாற்றமுள்ள சீழ் வெளியாகுதல். கோளங்கள் வீங்கியும் தொட்டால் வலியுள்ளதாகவும் இருத்தல்.

மூக்கு: மூக்கைச் சிந்தும்போது அழுகிய வாசனை. வாசனை அறியும் சக்தியை இழத்தல். மூக்கு வழியாக மூச்சுவிட முடியாமை. மூக்கில் பொறுக்குகள். மூக்கிலிருந்து வடியும் நீர் நாற்றமாகவும் முட்டையின் வெளுப்புப் போன்றும் இருத்தல். அடிக்கடி தும்முதல், மூக்கின் சிறு எலும்புகள் அழுகுதல். மூக்கின் வலப்பக்கத்தெலும்பு தொட்டால் வலியுண்டாக்குதல். மூக்கு கூர்மை யிழந்து சப்பையாகுதல். நுனி மூக்கு சிவப்பாகவும் முடிச்சுகளுடனும் இருத்தல், வீக்கம்.

முகம்: நிறைந்த நாடியுடன் கூடிய தாடைக்கோளங்களின் வீக்கம். முக எலும்புகளில் அழற்சி, கன்ன எலும்புகள் அழுகுதல். முகம் இரத்தம் செறிந்து இருத்தல். முகத்தின் இடப்பாகத்தில் கிழிக்கும் வலியும் வீக்கமும், பற்கள் அதிக நீளமாக யிருப்பதுபோல் தோன்றுதல்.

வாய்: ஏராளமான உமிழ் நீர். வாயிலிருந்து துர்நாற்றம். உமிழ் நீர் தித்திப்பாய் யிருத்தல்.

தொண்டை: விழுங்கும்போது தைக்கும் வலி.

வயிறு: பசி அதிகரிப்பு, காபி, பால், சாராயம் முதலியவைகளில் விருப்பம். மாமிசம் தின்ன அருவருப்பு. சாராயம் குடித்து கெட்டப் பழக்கம் செய்தவர்களுக்கு அப்பழக்கத்தை நீக்க இவ்வௌஷதம் கொடுப்பது வழக்கம். மன வேலை செய்வதினால் குமட்டல் ஏற்படுதல்.

மேல் வயிறு: இடது மார்பெலும்புகளின் கீழாக வாயு ஏராளமாகக் கூடி வலியை உண்டாக்குதல். மேல் வயிற்றின் வலப் பாகத்தில் நெருப்புப் போன்ற எரிச்சல். வெட்டும் வலி. பித்தப்பை கடினமாக இருத்தல். இருதயக் கோளாறுடன் சம்பந்தப்பட்ட பித்தப்பை உபாதி.

அடி வயிறு: வலி. அடிக்கடி அபான வாயு பறிதல், மிகுந்த ஏக்கம், தூக்கிட்டுக்கொள்ளும்படியான மனோ நிலை முதலியவற்றுடன் அடி வயிறு அடிக்கடி சுருங்குதல். பனிக்கட்டி போன்று சில்லிப்பான கை கால்களுடன் அடி வயிற்றில் கனம். அடி வயிற்றின் அவயவக் கோளாறுகளினால் அடி வயிறும் பொதுவாக சரீரம் முழுவதுமே நீர் வீக்கம் கொள்ளுதல்.

மலம்: நாற்றமுள்ள அபான வாயு. மலம் சாம்பல் அல்லது பழுப்பு நிறமாகவும் நாற்றத்துடனும் அதிக வலியுடனும் வெளியாகுதல். இரவில் வரும் வயிற்றுப் போக்கு, மலப்பையில் எரிச்சல். கடினமான முடிச்சுகளுடன் கூடிய அல்லது மிகப் பெரியதாக மலம் வெளியேறுதல். மலச் சிக்கல், மாதவிடாய்க் காலத்தில் அதிகம். மலச் சிக்கலுடன் கூடிய மூலங்கள். வெளி மூலங்களிலிருந்து இரத்தப் பெருக்கு. அபானத்தில் பாலுண்ணிகள் போன்ற சதை வளருதல்.

மூத்திரம் : அடிக்கடி தூண்டுதல். மூத்திரம் குறை வாகவும் மஞ்சள்காமாலை வியாதியில் பச்சை கலந்த பழுப்பு நிறமாகவும் நீர் வீக்கத்தில் பிரகாசமான பொன் போன்ற நிறமாகவும் இருத்தல். மோர் போன்று குழகுழப்பாக இருத்தல். மூத்திர அடக்கத்துடன் கூடிய மூத்திரப் பையின் பாரிச வாயு.

ஆண் : தளர்ந்துபோன ஆண் குறியிலிருந்து கஞ்சி போன்ற பதார்த்தம் வெளியாகுதல். தூக்குப்போட்டுக் கொள்ளும் எண்ணத்துடன் விசனத்தில் ஆழ்ந்துபோன தன்மை, விரைகள் (வலது) வீங்கியும் கடினமாகவும் இருத் தல். நாட்பட்ட விரை வீக்கம், பீஜங்களில் அரிப்பு, குழிப் புண்கள். புட்டிமைதுனம் செய்பவர்களின் விரை பல வீனம்.

பெண் குறி : கனமான வஸ்துக்களைத் தூக்கியதாலும் இன்னும் மற்ற காரணங்களாலும் ஏற்படும் கருப்பை நழுவு தல். கருப்பை கடினமாக இருத்தல். பாரமான சுமை யைத் தூக்கின் அடி வயிற்றில் கனம், மாதவிடாயினால் அதிகம். உடர்பை சிரமப்படுத்தியதாலும் உயர இருக்கும் வஸ்துக்களை எடுப்பதற்கோ அல்லது சுவற்றில் உயர ஆணி அடிப்பதற்காகவோ கைகளைத் தூக்கிக்கொண்டு சிரமப் பட்டதாலோ ஏற்படும் உபாதிகள். சரியான சத்துள்ள ஆகாரம் உண்ணாததினால் ஏற்படும் மலட்டுத் தன்மை. மாதவிடாய் தாமதித்தும் கொஞ்சமாகவும் வலியுடனும், இருத்தல். மாதவிடாய்க்கு முன்னதாக அக்குள் கோளங் களில் வீக்கம் காணுதல். மலப்பை நழுவுதல். யோனியி லிருந்து விடாமல் ஒழுகிக்கொண்டே இருக்கும் வெண்மை யான வெள்ளைப்பாடு.

கருப்பம் : பால் அடக்கம். ஸ்தனங்களில் கட்டிகள். அடிக்கடி ஏற்பட்ட கருச்சிதைவுகளால் கருப்பையில் குழிப் புண்கள் உண்டாகுதல்.

சுவாசம் : கஷ்ட சுவாசம், உள் மூச்சு வாங்கும்போது மார்பில் தைக்கும் வலி. இருதயத்தில் அதிக இரத்தம் கூடுவதினால் ஆஸ்துமா தோன்றுதல், இரவிலும் திறந்த வெளியில் நடக்கும்போதும் அதிகமான அமுக்க உணர்ச்சி, அடிக்கடி மார்பு சுருங்குவதுடன் கூடிய மூச்சடைக்கும் வலிப்புகள். முகம் நீலமாகவும் சிவப்பாகவும், துடிப்புடனும் இருத்தல். பிரக்ஞையிழந்து கீழே விழுதல். காலையிலும் இரவிலும் அதிகமாகும் ஆஸ்துமா.

சுவாசாசயங்கள் : மார்பில் குத்தும் வலி. கஷ்ட சுவாசம், இருதயத்தில் சூடு முதலியவைகளுடன் மந்தமான தைக்கும் வலி.

இருதயம் : இருதயத்தைப்பற்றி அடிக்கடி கவலைப் படுதல், நடுக்கத்துடன் பயப்படுதல். அடிக்கடி இடம் மாறிக் கொண்டேயிருத்தல். வேதனையுள்ள துடிப்பு. மனக் கிளர்ச்சியுடன் அடிக்கடி அனல் வீசுவதுபோன்ற, உஷ்ணம். நடக்கும்போதோ அல்லது மாடிப்படி ஏறும்போதோ கஷ்ட சுவாசம். இருதய அமுக்கம் அசைந்தாலும் நடந்தாலும் சவாரி செய்தாலும் அதிகமாகுதல். இருதயத் துடிப்பினால் நிற்கவேண்டிவருதல். இருதயம் அளவுமீறி பெரிதாகுதல், கால்களில் நீர் வீக்கம். சவாரி செய்வது, நடப்பது, முதுகுப்புறமாகப் படுப்பது முதலியவைகளால் துடிப்பு அதிகமாகுதல். இருதய வலி இடது கைக்கும் விரல்களுக்கும் பறவுதல். மூட்டுக்கு மூட்டு தாவிக்கொண்டேயிருக்கும்

வலிகள், கடைசியாக இருதயத்தில் ஸ்திரமாக வந்தடை தல். விரைப்பாக உட்காரவேண்டி வருதல். இருதயம் நின்றுவிட்டது போன்ற உணர்ச்சி, பிறகு கடுமையாக ஒரு தரம் அடித்தல். இருதயத்தில் வந்தடைந்த வாதரோகம், நம்பிக்கை இழத்தல்.

கழுத்து, முதுகு: கழுத்துக் கோளங்களில் வீக்கம், முள்ளந்தண்டு உபாதி. முதுகின் அடிப்பாகத்தில் களைப் பினால் ஏற்பட்டது போன்ற வலி. இடுப்புப் பாகத்தில் இருக்கும் தசைகள் விரைப்பாக இருத்தல்.

கை, கால்கள்: இடது தோள்பட்டையில் குடைதல். அக்குள் கோளங்களில் வீக்கம். கைகள் கனமாகவும் தூக்க முடியாமலும் இருத்தல். வலது முழங்கை எலும்பில் வலி. விரலெலும்பு மூட்டுகளில் குடைதல். முழங்கால்கள் தள் ளாடுதல். கால்களுக்கு இரத்தம் வேகமாய் ஓடும் உணர்ச்சி. அதனால் கால்களில் பட்ச வாயு. காலையில் கைகால்கள் வீங்கியிருத்தல். நடந்தால் சௌகரியம். உள்ளங்கால் அரிப்பு. மூட்டுக்கு மூட்டு தாவிக்கொண்டேயிருக்கும் வலி கடைசியில் இருதயத்தில் தங்குதல். முன் கை எலும்பு களும் தொடை எலும்புகளும் வீங்குதல்.

நரம்புகள்: ஒரே களைப்பு (காலையில்) குடையும் வலி களினால் வியாதியஸ்தர் கதறுவார், படுக்கையைவிட்டு எழுந் திருந்து நடப்பார். சரீரத்தினுள்ளே ஒன்றும் இல்லாதது போன்ற உணர்ச்சி, சரீரம் முழுவதிலும் களைப்பு. அதிக மான நரம்பு பலவீனம். அசுத்த இரத்தக் குழாய்களின் பெருக்கம்.

தூக்கம்: தூங்கும்போது உறந்து விக்கிவிக்கி அழுதல். பயங்கரமான கனவுகள், பலமான கூக்குரல். இரவு முழுவதும் விழித்திருத்தல், வலியின்மை, நள்ளிரவிற்குப் பிறகு தூக்கமின்மை.

உணர்ச்சி: வலியினால் அதிகக் கவலை, உயிரோடிருக்கப் பிரியம் இல்லாமை. எலும்புகளில் குடையும் வலி. வலியைப் பற்றி நினைத்தால் வலிகள் அதிகமாகுதல்.

கேபிகள்: கடுமையான மனவெழுச்சி, உச்சந்தலையில் சூடு, கைகளில் எரிச்சல், கால்களில் சூடு. மனக்கிளர்ச்சியுடன் சரீரத்தில் சூடு ஜ்வாலையாக வீசுதல். வாத ரோகமும் மூட்டுகளில் வீக்கமும். புற்று வியாதி, குழிப் புண்கள், சிறுவெலும்புகள் அழுகுதல், எலும்புகளில் குடைதல். இருதய உபாதிகளிலும் கல்லீரல் உபாதிகளிலும் ஏற்படும் நீர் வீக்கம், கால்களில் வீக்கம், அமுக்கினால் குழிவிழுதல்.

விசேஷம்: குளிர்ச்சி ஒத்துக்கொள்ளாமை. போர்வையை எடுத்தெறிய முடியாமை. ஆனால் திறந்த வெளியில் செல்லப் பிரியம். தலைவலி, சூடேறுவதால் சௌகரியம். கண்களில் வலி, குளிர்ந்த தண்ணீரினால் சமனம். ஆஸ்துமா, சூடான காற்றினால் அதிகமாகுதல். குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்வதினால் பல குறிகள் மறைந்துவிடுதல். ஆனால் குளிர்ந்த இரவுகளில் அசௌகரியம்.

முறிவு: பெல்லடோன்னா, சைனா, காக்குலஸ், காபியா, குப்ரம், மெர்கூரியஸ், பல்ஸடில்லா, ஸ்பைஜீலியா.

ஆரம் ம்யூரியாடிகம் நேட்ரம்
(Arum Mur. Natrum)

ஆழ்ந்து வேலைசெய்யும் ஔஷதங்களாகிய ஆரம் ம்யூரியாடிகம், நேட்ரம்மூர் ஆகிய இவ்விரண்டையும் கலந்து இவ்வௌஷதம் தயாரிக்கப்பட்டுள்ளது. வயிறு, குடல்கள், மூத்திரக்காய்கள் ஆகியவற்றில் அதிக நீரை உற்பத்தி செய்கிறது. மேற் கூறிய அவயவங்களில், அசைவில்லா விட்டால், எரிச்சல். இரத்த ஓட்டம் அதிகரித்தல். பலவீனம். பிடிவாதமான நீடித்த மஞ்சட் காமாலை. கடினமான மலம் ஒரு சமயம் வெண்மையாகவும் மற்றொரு சமயம் கருப்பாகவும் இருத்தல். சங்கா தோஷத்துடன் வலிப்பு. அடிவயிற்றிலிருந்து குளிர்ந்த உணர்ச்சி. வெகுநேரம் மயக்கம் தெளியாமை. கருப்பை அழர்ச்சி, கருப்பை பருத்து அதனுல் குடல்கள், மூத்திரக்காய் முதலியவைகளின் வேலை தடைப்படுதல். யோனியின் தசைகளில் அடிக்கடி இழுப்புடன் கூடிய பிடிவாதமான வெள்ளைப் பாடு. நாட்பட்ட கருப்பை அழர்ச்சி, நழுவுதல். யோனிப் பக்கமாக உள்ள கருப்பையின் பாகம் கடினமாக இருத்தல். நாட்பட்ட கருப்பை அழர்ச்சியும் கடினமும். சினைப்பைகளின் நீர் அதைப்பு. யோனியும் கருப்பையின் கழுத்துப் பாகமும் குழிப்புண்ணுடன் இருத்தல். விரை வீக்கம், இரவில் அதிகமாகுதல்.

இருதயம் : நிற்கும்போது கடுங் துடிப்புடன் அமுக்கம். வேகமான துடிப்பு. குனியும்போது ஒழுங்கற்றிருத்தல். கஷ்ட சுவாசம்.

ஆலோ ஸெகோட்ரினு
(Aloe Socotrina)

கண்களின் மேற்புறத்தில் அழுத்த உணர்ச்சி, கண்களைக் குறுக்கிக்கொள்ளுதல், பிறரைப் பார்க்க வேண்டுமாயின் கண்களை இடுக்கிக்கொள்ளுதல். அதிக சப்தத்துடன் இரத்தமயமான வயிற்றுக்கடுப்பு. மலப்பை ஸ்திரமாக நிற்காமல் நழுவுவதுபோன்றிருத்தல். மலம் பாதி தண்ணீராகவும் பாதி கெட்டியாகவும் அல்லது தண்ணீர் போன்றும் இருத்தல். மலம் தன்னறியாமலேயே வெளியாகுதல். அதிகாலையில் 5 மணிக்கு வயிற்றுப்போக்கு, படுக்கையை விட்டு வேகமாக ஓட நேரிடுதல். அடிவயிறு துருத்தியும் அதிகக் குடைதல் சப்தத்துடனும் இருத்தல்.

மனம்: இடம் விட்டு அசைவதற்கு மனமின்மை. உயிருடனிருப்பது பெருஞ் சுமையாகத் தோன்றுதல். தான் இன்னும் ஒரு வாரத்திற்குள் இறந்துபோவோமென்று நினைத்தல். பிறரை வெறுத்தல், கவலை, கோபகுணம்.

தலை: கிறுகிறுப்பு, மாடிப்படி ஏறும்போதும் தலையைத் திடீர் என்று திருப்பும்போதும் தலைச்சுற்றல், மூக்கிலிருந்து நீர் வடிய ஆரம்பித்தவுடன் சற்று சௌகரியம். சூடான தலை. நெற்றியில் வலி, கண்களில் கனம், குமட்டல், கண்களைக் குறுக்கிக்கொள்ளுதல். பொட்டுகளில் தைக்கும் வலி, அடியெடுத்து வைக்கும்போது அதிகமாகுதல். சரிவர மலம் போகாவிட்டால் ஏற்படும் தலைவலி. சூடான தலை, சில்லிப்புள்ள கால்கள். தலைவலி குளிர்ந்த ஒற்றிடங்களினுல் சமனப்படுதல்.

கண்கள்: கண்களுக்கு முன்பாக பளபளப்பான பூச்சி பறத்தல். கண்கள் பிரகாசமாகவும் சிவப்பாகவும்

நிலையற்றும் இருத்தல். கண்களில் அமுக்க உணர்ச்சியும் அதனுல் அவைகளை இடுக்கிக்கொள்ளுதலும்.

சாப்பிடுதல், குடித்தல் : வயிற்றுப்போக்கு ஏற்படும் போதும் காலையில் மலம் கழித்த பிறகும் பசி. புளிப்பான உணவு ஒத்துக்கொள்ளாமை. சாராயம் குடிப்பதினுல் வயிற்றுப்போக்கு. சாப்பிட்டவுடனே குடித்தவுடனே வலி. குமட்டல், வாயாலெடுப்பு. ஏப்பம், இரத்த வாயாலெடுப்பு.

வயிறு : வலி, நிறைந்த உணர்ச்சி.

அடிவயிறு : கல்லீரலின் பக்கத்தில் எரிச்சல், சூடு, அமுக்கம், விண்ணென்றிருத்தல், வேதனை. மந்தமான வலி, நிற்கும்போது அதிகம், முன்னுல் குனியும்போது சௌகரியம். கல்லீரலிலிருந்து மார்புக்குச்செல்லும் தைக்கும் வலி, சுவாசத்தடை. அடிவயிறு தூறுத்துதல். தொப்பூழில் துடிப்பு. களகளவென்ற சப்தத்துடன் அதிகமான அபான வாயு. அபான வாயு அங்குமிங்கும் அசைவதினுல் அடிவயிறு வெடித்துவிடும்போல் தோன்றுதல். சாப்பிட்ட பிறகும் மாதவிடாயின்போதும் அதிகமாகுதல். அடிவயிற்றின் சப்தம் பக்கத்திலிருப்பவர்களுக்குக் கேட்கும். தொப்பூழைச்சுற்றி முறுக்குதல், வெளிக்குப்போகத் தூண்டுதல், ஆனுல் அபான வாயுமாத்திரம் வெளியாகுதல்.

மலம் : ஏமாற்றும் வயிற்றுப்போக்கு. போக்கு வரும் போன்றிருத்தல், ஆனுல் அபான வாயு மாத்திரம் வெளியாகுதல், அதனுல் சற்று சௌகரியம். அபான வாயு பறியும் போது தன்னறியாமல் மலமும் கழிதல். அபானத்தில் அரிப்பு, எரிச்சல், தூக்கம் வராமை. குளிர்ந்த ஒற்றிடங்களினுல் சமனம். மலம் பாதி தண்ணீராகவும் பாதி கெட்டி

யாகவும் இருத்தல். மலமும் மூத்திரமும் ஒரே சமயத்தில் வெளியாகுதல். மெல்லிய, நாற்றமுள்ள, பட்ட இடங்களில் புண்ணை உண்டாக்கும் குணமுள்ள எரிச்சலுடன் கூடிய மலம். குடல்களிலிருந்து இரத்தம் வெளியாகுதல். இரத்தத்துடன் கூடிய வயிற்றுக் கடுப்பு, மஞ்சளாகவும் குழகுழப்பாகவும் இருத்தல். வயிற்றுப்போக்கினல் அதிக பலவீனம்.

மூத்திரம்: மூத்திரம் ஏராளமாகவோ, குறைவாகவோ அல்லது இரத்தமாகவோ இருத்தல். அடிக்கடி தூண்டுதல், இரவிலும் பிற்பகலிலும் அதிகமாகுதல். உடனே மூத்திரம் விடவேண்டும் இல்லாவிடில் தானகவே மூத்திரம் வெளியாகும். மூத்திரம் வெளியாகும்பொழுது எரிச்சல்.

ஆண்: விரைகளில் சில்லிப்பு. ஆண் குறி சிறிதாக இருத்தல். பீஜங்கள் தளர்ந்திருத்தல். புணர்ச்சியில் ஆசை அதிகரிப்பு. ஆண் குறியின் நுனித் தோலில் அரிப்பு.

பெண்: கருப்பை நழுவுதல். கருப்பையில் கனம், நிறைந்த உணர்ச்சி. அதிசீக்கிரமாகவும் ஏராளமாகவும் வெளியாகும் மாதவிடாய்.

கருப்பம்: அடிவயிற்றின் கனத்தினல் நொண்டிபோல் நடத்தல்.

கை, கால்கள்: களைப்பு. முன் கைகளில் அடிபட்ட வலி. சூடான கைகள், சில்லிப்பான கால்கள் அல்லது சூடான கால்கள், சில்லிப்பான கைகள், இவை மாறி மாறி வருதல்.

நரம்புகள், கேபிகள்: தசைகளினுல் பாரிச வாயு போன்ற இழுப்பு. தலை, மார்பு முதலியவற்றில் அதிக இரத்தத்திறட்சி. அசுத்த இரத்தக் குழாய்கள் பருத்தல்.

சருமம்: சுரமில்லாமல் சருமம் சூடாயிருத்தல். கால்களில் அரிப்பு. அடி வயிற்றில் பருக்கள்.

உறவு: கிட்டத் தட்ட சில குறிகளில் ஸல்பரைப் போன்றும் மற்றும் சில குறிகளில் காலீ பைக்ரோமியம் போன்றும் இருக்கின்றன.

முறிவு: ஸல்பர்.

இக்னேஷியா (Ignatia)

நடுக்கம்; பலவிதத் தசைகளும் முறுக்கிக் கொள்ளுதல். தலையின் இரு பக்கங்களிலும் ஆணிகொண்டு அடிப்பது போன்ற தலை வலி, வலியுள்ள இடத்தைக் கீழே வைத்துப் படுத்தால் சௌகரியம். சுரத்தில் சில்லிப்பு ஏற்படும் கட்டத்தைத் தவிர்த்து மற்றெந்த நிலைமையிலும் தாகமின்மை. சில்லிப்பு ஏற்படும்போது முகம் சிவத்தல் சில்லிப்பு வெளிச் சூட்டினுல் சௌகரியமடைதல். உஷ்ணமாயிருக்கும்போது சரீரத்தைப் போர்த்தியிருக்க முடியாமை. நேர் விரோதமான பல குறிகளுள்ள ஔஷதம். புண்ணுயிருக்கும் தொண்டை, கெட்டியான ஆகாரம் உட்கொள்ளுவதனுல் சௌகரியமாயிருத்தல். காதுகளில் குடைதல், சங்கீதம் கேட்பதனுல் சௌகரியம். இருமல், எவ்வளவு தரம் இருமினுலும் இருமல் நிற்காமை. பெருமூச்சு, அடிவயிற்றிலிருந்து தொண்டைக்கு பந்து போன்ற வஸ்து செல்லும் உணர்ச்சி இவைகளுடன் கூடிய சங்கா தோஷம். வருத்தமாயிருக்கும்போது பெருமூச்சு விடுதல், தனியாக இருக்கப் பிரியப்படுதல்.

மனம்: ஞாபகக் குறைவு. பிறரைக் கேள்விகள் கேட்டுவிட்டு அக்கேள்விகளுக்குப் பதில் எதிர்பாராமலேயே சென்றுவிடுவார். தனியாக இருக்கப் பிரியம். அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் குணம், ஒரு சமயம் கேலிசெய்து கொண்டும் சிரித்துக் கொண்டும் இருப்பார், திடீரென்று வருத்தமும் கண்ணீர் விட்டு அழுவதும், அதிகமான வருத்தம். மனம் விட்டுப் பேசாமை. தான் பிரியம் வைத்திருக்கும் மனிதர்கள் இறந்துவிட்டதால் அதிக சோகத்தை அடைதல். குழந்தைகளை கண்டிப்பதினால் ஏற்படும் வலிப்புகள். சோகத்தினால் ஏற்பட்ட உபாதிகள். தனக்குள்ளேயே வருத்தத்தை அடக்கிக் கொள்ளுதல். கெட்ட சமாசாரம் வந்தவுடன் மனமுடைந்து போகுதல். பொறுமை, நிறைவேறாத காதல். அதி உணர்ச்சி, பொறுமையின்மை, சண்டை போடும் குணம், கோபம், வெகு சுலபமாகப் பயப்படுதல், பிறர் எதிர்த்துப் பேசினால் சகிக்க இயலாமை.

தலை: நெற்றியிலோ அல்லது உச்சியிலோ அழுக்கும் தலை வலி. வெளிக்குப்போக முக்கும்போது பிடரியில் வலி. பசித் தலை வலி. தலையின் ஒரு பாகத்தில் ஆணியினால் அடிப்பது போன்ற வலி, அந்தப் பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால் சௌகரியம், உஷ்ணத்தினாலும் சாப்பிடும் போதும் மெதுவான அழுக்கலினாலும் ஏராளமான மூத்திரம் வெளியாவதினாலும் சௌகரியம். சாப்பிட்ட பிறகும், காலையிலும், கண்களை அசைப்பதினாலும் உற்றுப் பார்ப்பதினாலும், சப்தம், பேசுவது, கேட்பது, குளிர் காற்று, திடீரென்று தலையைத் திருப்புவது, காபி, புகையிலை அல்லது சாராயம் முதலியவைகளினாலும் அதிகமாகுதல். தலைவலி நின்றவுடன் ஏராளமான மூத்திரம் வெளியாகுதல். முன்பக்கமாகக் குனிந்தால் தலை வலி சௌகரியம் இரண்டிரண்டு நாட்கள் முறைவைத்து வரும் தலை வலி.

கண்கள்: சூரிய வெளிச்சம், அல்லது பிரகாச வெளிச்சம் முதலியவை சகிக்க முடியாமை. வெளிச்சத்தில் கண் கூச்சம். பகலில் காரமான கண்ணீர் வடிதல். கண் நரம்புகளின் வலி.

காதுகள்: குடைதல், கண கண வென்ற சப்தம், சங்கிதத்திஞல் சௌகரியம், பலமான காற்று அடிப்பது போன்ற சப்தம்.

முகம்: வலிப்புப் போன்று தசைகளில் முறுக்குதல். பேசும்போது அடிக்கடி தாடைகள் மூடிக்கொள்ளுதல். முகம் சிவப்பாகவும் வெளுத்தும் மாறி மாறி வருதல். ஒரு பக்கத்துக் கன்னமும் காதும் சிவப்பாகவும் சூடாகவும் இருத்தல்.

தொண்டை: மேல் வாயில் தைக்கும் வலி, காது வரை பரவுதல். விழுங்கும் சமயத்தில் தைக்கும் வலி. சிறிய குழிப்புண்களுடன் கடினமாகவும் அழர்ச்சியுடனும் உள்ள டான்ஸில்கள். விழுங்காம லிருக்கும்போது தொண்டையில் ஏதோ உருண்டையோ அல்லது மீன் எலும்போ சிக்கிய உணர்ச்சி. இவ்வுணர்ச்சி பானங்கள் அருந்தும் போதும் இருக்கலாம். கெட்டியான உணவு உட்கொள்ளுவதால் சௌகரியம். சும்மா விழுங்கும்போது வலி, உஷ்ணமான ஈரநப்புள்ள பருவங்களில் தொண்டை அழர்ச்சி. வரண்ட, கற கறப்பான இருமல், குழந்தை குரல்வளையைப் பிடித்துக் கொள்ளும்.

வாய்: மெல்லும்போதோ அல்லது பேசும்போதோ நாக்கைக் கடித்துக் கொள்ளுதல். புளிப்பு ருசி. உணவு உட்கொள்ளாத போது பல் வலி, உட்கொள்ளும் போது வலி குறைவு.

வயிறு: குமட்டலும் பசியும் சேர்ந்து வருதல். புகையிலைப் புகை, பால், சூடான ஆகாரம், போதைதரும் சாராயம் முதலியவை பிடிக்காமை. பலவீனம், ஒன்றுமே இல்லாத உணர்ச்சி, காலியாயிருப்பதுபோல் தோன்றுதல். வலி உப்பிசம். இரவில் வயிறு சுருங்குதல், சாப்பிடும் போது சௌகரியம், சாப்பிட்டவுடன் அசௌகரியம். மாலையில் பசி, அதனுல் தூக்கம் தடைப்படுதல்.

குமட்டல், வாயாலெடுப்பு: சாப்பிட்ட உடனும் தண்ணீர் குடித்த உடனும் விக்கல். வாயாலெடுப்பு இல்லாமல் குமட்டல், சீரணமாகாத கடினமான ஆகாரம் உட்கொள்வதால் சௌகரியம். கருப்ப காலங்களில் குமட்டல், வாயாலெடுப்பு, சாப்பிட்டால் சௌகரியம்.

மலம்: மனவெழுச்சி, பயம் முதலியவைகளினுல் ஏற்படும் வலியில்லாத வயிற்றுப்போக்கு. உள் மூலத்தின் வலிபோன்ற மலப்பையில் இறக்கும் வலி, இவ்வலி மலங் கழித்து ஒன்றிரண்டு மணி நேரத்திற்குப் பிறகு வருதல். மலச்சிக்கல் இல்லாமலிருக்கும் போது அபான வெடிப்புகள், உட்கார்ந்திருக்கும்போது வலி ஆரம்பமாகுதல். அபானத்திலிருந்து மலப்பையின் மேல்புறமாகத் தைக்கும் வலிகள். மலப்பை, யோனி முதலியவை நழுவுதல். முயற்சியில்லாமலேயே வெளியாகும் நாற்றமுள்ள அபான வாயு. மிருதுவான மலம் கழிக்கும்போது வலி. அபானத்தில் அரிப்பும் ஊரும் உணர்ச்சியும் உள்ளிருந்து வெளிப்பக்கமாகக் கூர்மையான ஆயுதம் இருக்கும் உணர்ச்சியும்.

மூத்திரம்: அடிக்கடி தூண்டுதல், ஏராளமான வெளுப்பான மூத்திரம் வெளியாகுதல், எரிச்சல், குத்துதல்.

பேண் : அதி சீக்கிரமாகவும் ஏராளமாகவும் வரும் மாதவிடாய். மாதவிடாயில் இரத்தம் கறுப்பாகவும் கட்டி கட்டியும் இருக்கும். கடுமையான பிரசவ வேதனையை ஒத்த வலிகள், அவைகளுக்குப் பிறகு அமிதமான உடுத்தி யிருக்கும் ஆடையைத் தின்னும் சக்திவாய்ந்த வெள்ளைப் பாடு. மாதவிடாய்க் காலத்தில் இவ்வெள்ளைப்பாடு மிகவும் அதிகமாகும். அமுக்கப்பட்ட மாதவிடாய். மாத விடாய்க்கு முன்பாகப் பெருமூச்சு வாங்குதல். பிரசவ வேதனையின்போது சுரமில்லாமல் வலிப்புகள். யோனி விரைப்பாக இருத்தல்.

தொண்டைக்குழி : வலி, கொரகொரப்பு, இறுக்கு தல். தொண்டை அடிக்கடி சுருங்குதல்.

சுவாசம் : ஆழ்ந்து பெருமூச்சு விடுவதில் பிரியம். அடிக்கடி பெருமூச்சு விடுதல். மார்பின்மேல் ஏதோ கன மான வஸ்து இருப்பது போன்ற உணர்ச்சி, அதனுல் உள் மூச்சு வாங்கத் தடை ஏற்படுதல்.

இருமல் : வரண்ட அடிக்கடி வரும் இருமல். தொண்டையில் தூசி இருப்பது போன்ற உணர்ச்சி. எத் தனை நேரம் இருமினுலும் இருமல் நிற்காமல் தொண்டை யில் அருவருப்பு இருந்துகொண்டே இருக்கும். இதனுல் வலிப்பும், ஆடைகளை நனைக்கும் வியர்வையும். சூடான பானங்கள் குடிப்பதினுல் இருமல் அதிகமாகுதல். கருப்பைச் சினைப்பை, கோளாறுகளால் ஏற்படும் இருமல். க்ஷய ரோகத்தைக் உண்டாக்கும் நீடித்த பிராங்கைல் குழாய்களின் அழர்ச்சி, இருமல் வரண்டும் நடு மார்பில் அரிப்பும், நன்ருகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே சரீர இளைப்பும், கோளங்கள் பருத்தலும்.

இருதயம்: இரவிலும் காலையிலும் துடித்தல். மாறிக்கொண்டே இருக்கும் நாடி.

கை கால்கள்: பின் கழுத்தில் விரைப்பு. முதுகு பின்புறமாக அடிக்கடி வளைதல். இடுப்புச் சந்துவாதம், இரவிலும் குளிர்ந்த காலங்களிலும் அதிகமாகும். தரையில் நடப்பதினல் சௌகரியம்.

நரம்புகள்: கை கால்களில் நடுக்கம். குழந்தை அவசரமாகத் தண்ணீர் குடித்தலும் உடனே வலிப்புகள் வருதலும். பயம், வருத்தம் முதலியவைகளால் ஏற்படும் வலிப்புகள். குழந்தையைத் தண்டித்த பிறகு அது தூங்க ஆரம்பித்தவுடன் வலிப்புகள் உண்டாகுதல். பல் முளைக்குங் காலத்தில் வாயில் நுரை தள்ளுவதுடன் கூடிய வலிப்புகள். சங்காதோஷத்தினல் உண்டாகிய பாரிசவாயு. ஏராளமான மூத்திரப்பெருக்குடன் கூடிய சங்காதோஷம்.

தூக்கம்: அடிக்கடி அபரிமிதமாகக் கொட்டாவி விடுதல், அதனல் தாடைகளில் வலி. தூங்கினவுடன் கால்களில் குதித்தல். கால்களைத் தூக்கித் தூக்கிப் போடுவதும் பற்களை அறைப்பதும்.

சுரம்: சில்லிப்பே பிரதானமாக இருக்கும். சில்லிப்பின்போது தாகம், வெளி உஷ்ணத்தினல் சில்லிப்பு சமனம். சில்லிப்பின்போது சிவந்த முகம். உடம்பில் சூடு இருக்கும்போது தாகமின்மை, அப்பொழுது உஷ்ணமான ஒற்றிடங்களோ அல்லது இடங்களோ ஒத்துக்கொள்ளாமை. கொஞ்சமான வியர்வை அல்லது முகத்தில் மாத்திரம் வியர்வை.

சருமம்: அரிப்பு, சொரிந்தால் சமனம், ஆனல் மற்றொரு இடத்தில் அரிப்பு உண்டாகுதல்.

உணர்ச்சி: அதி உணர்ச்சி. உடம்பில் சிறிய சிறிய இடங்களில் வலி, கொஞ்சமாகத் தொடுவதால் அசௌகரியம். ஆனல் நன்கு அமுக்கினல் சௌகரியம்.

விசேஷம்: மீ, காபி, புகையிலை, பிராந்தி முதலியவைகளினலும் காலையிலும் மாலையிலும் அதிகம். முதுகுப் புறமாகப் படுத்தால் சற்று சௌகரியம்.

இபிகாக்உனு (Ipecacuanha)

அடிக்கடியும் இடைவிடாமலும் வரும் குமட்டல். குமட்டலுடன் கூடிய சரீரத்தின் எந்தப் பாகத்திலிருந்தும் வரும் இரத்தப்பெருக்கு. மூக்கிலிருந்தும், இருதயத்திலிருந்தும் பெண்குறியிலிருந்தும் பிரகாசமான சிவப்பு இரத்தப்பெருக்கு. சக்குவாய் இருமலில் குழந்தை மூச்சிழந்து உடல் வெளுத்தும் நீலம் பூரித்தும் விரைத்தும் வாய் அடைத்தும், வாயாலெடுப்பு, மூக்கு, வாய் முதலியவைகளிலிருந்து இரத்தப்பெருக்கு ஆகிய இக்குறிகளுடன் இருத்தல். பகல் 11 மணிக்கு விடாக் குமட்டலுடனும் வாயாலெடுப்புடனும் சில்லிப்பு. வியாதியின் எந்த நிலைமையிலும் குமட்டல். கை கால்களிலும் முதுகிலும் தோள்பட்டைகளின் நடுவிலும் வலி, இவை மாலை 4 மணிக்கு வருதல். சில்லிப்பு உஷ்ணத்தினல் அசௌகரியம், தண்ணீர் குடிப்பதினலும் திறந்த வெளியிலும் சௌகரியம். நெற்றியில் வியர்வை. ஒரு கை சில்லிப்பாகவும் மற்ருெரு கை சூடாகவும் இருத்தல். பித்த வாயாலெடுப்புடன் கூடிய மூளை வியாதிகள். கழுத்திலும் பின் தலையிலும் வலி.

மனம்: கோபகுணம், பொறுமையின்மை, சப்தம் சகிக்கமுடியாமை.

தலை: பின் தலையிலும் பின் கழுத்திலும் வலி, குமட்டல்.

மூக்கு: வாசனை அறியும் சக்தியை இழத்தல், குமட்டல், மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு. இடைவிடாமல் தும்முதல்.

முகம்: வெளுப்பு, சிவப்பு அல்லது உப்பி யிருத்தல். குழி விழுந்திருத்தல்.

வாய்: ஏராளமான உமிழ் நீர் உற்பத்தி, அதனல் அடிக்கடி விழுங்க நேரிடுதல். சுத்தமாய் யிருக்கும் நாக்கு, அல்லது மஞ்சள் மாசு படிந்திருத்தல்.

குமட்டல், வாயாலெடுப்பு: எல்லா உபாதிகளிலும் இடைவிடாத குமட்டல். குமட்டல் குளிர்ந்த தண்ணீர், புகையிலைப் புகை முதலியவைகளால் அதிகமாகுதல். தாகம், வியர்வை, வயிற்றுப் போக்கு, வலி, அடி வயிறு துருத்துதல் முதலியவைகளுடன் குமட்டல். வாயாலெடுத்த பிறகு தூக்கக்கலக்கம்.

வயிறு: குத்து வலி, இடப் பக்கத்திலிருந்து வலப் பக்கம் செல்லுதல். குமட்டலுடன், வெற்று ஏப்பங்கள். வயிறு தளர்ந்து கீழே தொங்கும் உணர்ச்சி.

மலம்: மஞ்சள் நிறம், வலி யில்லாமல் வெளியாகுதல். புல் பச்சை நிறம், அல்லது அதிகக் கடுப்புடன் சிவப்பான பூந்தசைகளுடன் வெளியாகுதல். கீழ்க் குடலில் அழர்ச்சி, இடைவிடா கடுப்பு முதலியவைகளுடன் கூடிய வயிற்றுக் கடுப்பு. குமட்டல் வாயாலெடுப்பு முதலியவைகளுடன் கூடிய காலரா.

மூத்திரம்: அடி வயிறு, மூத்திரக் குழாய் முதலிய வற்றில் வெட்டும் வலியுடன் இரத்த மயமான மூத்திரம். அளவில் குறைவு.

பெண்: கருப்பை நழுவுதல். மாதவிடாயின்போது பிரகாசமான, ஆனல் கட்டி தட்டிய, இரத்தப் பெருக்கு. 15 நாட்களுக் கொருதரம் மாதவிடாய், ஏராளமாகவும் குமட்டலுடனும் இருத்தல். தொப்பூழிலிருந்து கருப்பை வரையிலும் வலி. பிரசவித்த பிறகு குமட்டல், மயக்கம், வலி, அடி வயிற்றில் பலவீனம் முதலியவைகளுடன் இரத்தப் பெருக்கு.

கருப்பம்: மெதுவான இரத்தப் பெருக்கு. கருப்பையிலிருந்து கசிதல், இரத்தம் நல்ல சிவப்பாகவும் ஏராளமாகவும் கட்டி தட்டியும் குமட்டலுடனும் இருத்தல். கருத்தரித்திருக்கும் பொழுது வலிப்புகள்.

சுவாசாசயம்: சுவாசம் விடும்பொழுது பிராங்கைல் குழாய்களில் குடைதல். மார்பில் கனம், கவலை, கஷ்ட சுவாசம். ஈரக் கசிவுள்ள ஆஸ்துமா, ஒரு விதமான 'விஸ்' என்ற சப்தம். தொண்டையிலும் மார்பிலும் இறுக்கம். திறந்த வெளியில் மூச்சுவிடத் திணறுதல். முகம் வெளுத்தல். வரண்ட கரடு முரடான குரைக்கும் சப்தம் உள்ள இருமல். அடிக்கடியும் குமட்டலுடனும் இரத்தப்பெருக்குடனும் இருமல். இரவில் தொண்டை அழர்ச்சி, இருமலினல் முகம் சிவத்தல். பிறகு மூச்சடைத்தல். கக்குவாய் இருமலில், வாயிலிருந்தோ மூக்கிலிருந்தோ இரத்தப் பெருக்கு. இருமுதல், மூச்சுத்திணறுதல், முகம் சிவப்பாகவோ நீலமாகவோ மாறுதல், விரைப்பாக ஆகிவிடுதல். நெற்றியில் வியர்வையுடன் மாலையில் மூச்சடைக்கும் இருமல். சுவாசாசயங்களிலிருந்து குடைதலுடனும் நுரைத்த

கோழையுடனும் இரத்தப்பெருக்கு. சில்லிப்பு ஏற்பட்ட பிறகு தொண்டைக் கொறகொறப்பு. இடைவிடா இருமலுக்குப்பிறகு வாயாலெடுப்பு.

கழுத்து, முதுகு: தோள்பட்டைகளின் நடுவில் கெண்டை யேறுதல். துடைகளிலும் கெண்டை யேறுதல். வலது மூத்திரக் காயிலிருந்து குத்துவலி ஆரம்பித்து கீழே துடை வரையிலும் பிறகு முழங்கால் வரையிலும் செல்லுதல்.

பொது: சரீரம் விரைப்பாக இருத்தல், கைகள் இடைவிடாமல் துடித்தல். அமுக்கப்பட்ட சொறி சிரங்குகளினாலும், சீரணமாகாத பதார்த்தங்களை உட்கொண்டதினாலும் சக்குவாய்: இருமலில் வலிப்புகள். எலும்பு வலி.

சுரம்: ஒவ்வொருநாள் விட்டு காலை 11 மணிக்கு வரும் சில்லிப்பு, இதில் தாகமில்லாமலும் இருக்கலாம். பகல் 4 மணிக்கும் வரலாம். சரீரத்தின் மேல் பாகத்தில் சில்லென்றிருத்தல். சில்லிப்பின்போது வாயாலெடுப்பு. உள் சில்லிப்பும் வெளியில் சூடும். முதுகு வலி, சிறிது நேரம் இருக்கும் சில்லிப்பு, நீடித்திருக்கும் சுரம். சுரத்தின்போது தாகம், தலை வலி, குமட்டல், இருமல். ஒரு கை சூடாகவும் மற்றொன்று சில்லிப்பாகவும் இருத்தல். குமட்டலுடன் கூடிய முறைச் சுரம். கொயினா கொடுத்துப் பாழ்படுத்தப்பட்ட வியாதியஸ்தர்களுக்குச் சிறந்தது.

கை, கால்கள்: ஒரு கை சில்லிப்பு, மற்றொன்று சூடு. மூட்டுகள் மறந்து இருக்கும் உணர்ச்சி.

சருமம்: அமுக்கப்பட்ட அல்லது ஒழுங்கீனமாக வெளிவரும் சொறி சிரங்குகள், மார்பில் அதிகக் கனம், குமட்டல், கூச்சத்துடன் கூடிய இருமல்.

விசேஷம்: குளிர் காற்றில் சௌகரியம். கீழே படுத்தால் அசௌகரியம்.

முறிவு: ஆர்னிகா, ஆர்ஸனிகம், சைனு, நக்ஸ் வாமிகா.

முறைச் சுரத்தில் ஒப்பிடுதல்

இபிகாக்உனு: சுரத்தின் போதும் சில்லிப்பின் போதும் வாயாலெடுப்பு. நக்ஸ்வாமிகா: வயிற்று உபாதிகள். சுரத்தின் போதும் சில்லிப்பு, சுரத்தின் போது போர்வையை நீக்க முடியாமை. நேட்ரம் மூர்: காலை 11 மணிக்குச் சுரம் இருக்கும். அதிக சரீர உஷ்ணம், தாகம், தலை வலி. சுரமிருக்கும் வரையில் தலை வலியும் இருக்கும். போடோபில்லம்: காலை 9 மணிக்குச் சுரம், சுரத்தின் ஆரம்பத்திலிருந்தே பிதற்றுதல், பித்தக் கோளாறு, மஞ்சட் காமாலை, கால்களில் வலி. காஸ்டிகம்: சில்லிப்பு தோள் பட்டையிலிருந்து ஆரம்பித்தல், சில்லிப்பின் போதோ அதற்கு முன்போ தாகம், தண்ணீர் குடித்தவுடன் உடம்பு குலுக்குதல். அபிஸ் மெல்லிபிகா: மாலை மூன்று மணிக்கு சில்லிப்புடன் சுரம், மார்பிலிருந்து முதுகுக்கு செல்லுதல். சுரமிருக்கும்போது தாகமில்லாமை. இக்னேஷியா: காலையில் அதிகம், ஆயினும் நேர் விரோதமான குறிகள், சில்லிப்பின்போது தாகம், சுரத்தின் போது தாகமின்மை. சில்லிப்பின்போது முகம் சிவத்தல். அடிக்கடி பெருமூச் செறிதல். சில்லிப்பு வெளிச் சூட்டினுல் சமனம். ஆண்டிமோனியம் டார்ட்டாரிகம்: சுரத்தின் போதும் வியர்க்கும் போதும் தூக்கக் கலக்கம். கார்போ வெஜிடாபிலிஸ்: தாகத்துடன் சில்லிப்பு, சரீரமெங்கும் சில்லிப்பு, முக்கியமாக முழங்காலுக்குக் கீழாக. கொயினுவினுல் பாழ் செய்யப்பட்ட வியாதிகள்.

எக்கினீஷியா (Echinacea)

இரத்தத்தில் விஷம் கலத்தல். பிரசவத்தில் இரத்தத்தில் விஷம் கலத்தல். ராஜபிளவையிலிருந்து அதிக நாற்றமுள்ள சீழ், இரத்தம், நீர் முதலியவை வெளியாகுதல். குமட்டலுடன் சில்லிப்பு. முதுகில் சூடான அல்லது சில்லிப்பான அல்லது இரண்டும் சேர்ந்து மாறி மாறி அனல் போன்று வீசுதல். பாம்பு கடி. களைத்த உணர்ச்சி. மூத்திரக் கோளாறுகளில் இரத்தத்தில் விஷங்கலத்தல்.

பாம்புகடிக்கு கீழ்க்கண்டவைகளை பரீக்ஷை செய்து பார்க்கலாம்.

1. நல்ல பழுத்த வாழைப்பழத்தில் மண் புழுவை ஒரு அங்குலம் நறுக்கிவைத்து ஒரு மணிக்கொரு தடவை உட்கொள்ளவேண்டும்.

2. மீனின் பித்தப்பை ரசத்தை உள்ளுக்கும் வெளிக்கும்.

3. வாழைமரத்தின் அடிப்பாகத்தில் இருக்கும் தண்ணீரை 3 மணிக்கு ஒரு தடவை கொடுக்கலாம். (கோஸால்)

எதூஸா ஸைனபியம்
(Aethusa Cynapium)

புத்தி மாறுட்டம். அறையில் எலி ஓடுவதைப் பார்ப்பதுபோன்ற உணர்ச்சி. சிசுக்களுக்குப் பால் ஒத்துக்கொள்ளாது. தவிர பாலினுல் ஆகிய எந்தப் பதார்த்தமும் ஒத்துக்கொள்ளாது. பால் குடித்த மறுகணமே பெரிய தயிர்க் கட்டிகளாக வாயாலெடுக்கப்படும், பிறகு பலவீனமும் மயக்க உணர்ச்சியும் ஏற்படும். வாயாலெடுக்கப்படும் தயிர்க்

கட்டிகள் அநேகமாக மிகவும் பெரியதாக இருப்பதால் குழந்தைக்கு மூச்சுத் திணரலும் உண்டாகலாம். விஷ பேதி. இறுக மூடிய கைக் கட்டைவிரல்கள், கீழாகத் திரும்பிய கண்கள் முதலிய குறிகளுள்ள காக்கை வலிப்பு. மலம் லேசான மஞ்சள், பச்சை நிறமாகவும் சில சமயங் களில் புளித்த தயிர் கட்டிகள் போலவுமிருக்கும். தாக மில்லாமை.

மனம்: மயக்கமாகப் படுத்திருத்தல், அகன்ற கரு மணிகள், குத்திட்ட கண்கள், மனக் குழப்பம், அதிகக் கவலை, வலி.

குமட்டல், வாயாலேடுப்பு: திடீரென்று கடுமையான வாயாலெடுப்பு, வாயாலெடுக்கப்படும் பதார்த்தம் வெண்மை யான நுரையாகவோ, மஞ்சள் தண்ணீராகவோ அல்லது உறைந்த பாலாகவோ இருக்கும். புளிப்புக் கட்டிகள் மிகவும் பெரியதாக இருப்பதால் குழந்தையை மூச்சுத் திணரச் செய்யும்.

வயிறு: கடுமையான சுருக்கத்தால் வாயாலெடுப்பு தடைப்படுதல். வயிற்றின் அடியில் கிழிக்கும் வலி, இவ் வலி தொண்டைவரை பரவுதல். மூளை உபாதி, மனக் கிளர்ச்சி முதலியவைகளால் .பெரியவர்களுக்கு ஏற்படும் சீரணமாகாமை, இத்துடன் சூடான தலை, வாயாலெடுப்பு, வியர்வை, நீண்ட தூக்கம் முதலிய குறிகள் தோன்றுதல்.

மலம்: பிரகாசமான, மஞ்சளான, பிறகு பச்சை யாக மாறும் தன்மையுள்ள, குழகுழப்பான வயிற்றுப் போக்கு. ஆகாரம் சீரணமாகாமலேயே மலமாகக் கழிக் கப்படுதல். மெல்லிய, பச்சை நிறமுள்ள, அல்லது இரத் தம் கலந்த, பித்தக்கலப்புள்ள சீதகம், அதிக வலி, கடுப்பு முதலியவைகளுடன் வெளியாகுதல்.

நரம்புகள்: சிவந்த முகம், கீழ்நோக்கிய கண்கள், அகன்ற, குத்திட்ட அசையாத கண்கள், வாயில் நுரை, கிட்டிய பற்கள், இறுகிய மூடிய கைக் கட்டைவிரல்கள், கடினமான, சிறிய, அதிகமான நாடி முதலிய குறிகளுள்ள காக்கை வலிப்பு. வலிப்புகள், பலவீனம், களைப்பு, தூக்கக் கலக்கம். பலவீனத்தினால் குழந்தை நிற்கவோ அல்லது தலையை நிமிர்த்தவோ முடியாமை.

தூக்கம்: வாயாலெடுத்த பிறகு தூக்கம். தூக்கத்தில் கண்கள் உருளுதல்.

கேபிகள்: சருமம் முழுவதும் கருப்பு அல்லது நீலப் புள்ளிகள்.

போது: குழந்தைகள், பல் முளைக்குங்காலம். சரியானபடி ஆகாரம் கொடுக்கப்படாத குழந்தைகள்.

ஒப்பிடுதல்

ஆண்டிமோனியம் க்ருடம்: பால்போன்ற நாக்கு, பிறர் தன்னைத் தொடவோ பார்க்கவோ சகிக்காமை, சூரிய உஷ்ணம், குளிர்ந்த தண்ணீரில் ஸ்னானம் முதலியவைகளால் அசௌகரியம்.

மேக்னீஷியா மூர்: வலி, பால் சீரணிக்கப்படாமல் மலத்துடன் வெளியாகுதல்.

நேட்ரம் கார்ப்: பால் குடித்தவுடன் தண்ணீர் போன்ற வயிற்றுப் போக்கு.

எதுஸா: புளித்த கட்டிகள் வாயாலெடுக்கப்படுதல், குத்திட்ட கண்கள்.

எக்விஸிடம் (Equisetum)

மூத்திர அவயவங்கள். மூத்திரப்பையில் வலி, சில சமயங்களில் மிருதுவாக இருத்தல். மூத்திரப்பை கீழே தொங்கிவிட்ட உணர்ச்சி, மூத்திரம் விடுவதினால் சௌகரியமில்லாமை. மூத்திரத்தில் இரத்தமும் வெள்ளையும் கலந்திருத்தல். இரவில் அடிக்கடி மூத்திரம் வருதல், கொஞ்சமாகப் போகுதல், போன உடனே வலி அதிகரித்தல். மூத்திர நிறம் அதிகரித்தல். மூத்திரம் விடும்போது எரிச்சல். மூத்திரம் ஒழுகிக்கொண்டேயிருத்தல். வலது பக்கத்திலும் அசைவதினாலும் அமுக்குவதாலும் அசௌகரியம். பிற்பகலில் படுத்தால் சௌகரியம்.

எரிகரான் (Erigeron)

சிவந்த முகம், மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. மூத்திரப்பையிலிருந்து ஏராளமான பிரகாசமான அடிக்கடி வரும் இரத்தம். நாட்பட்ட மேகவெட்டை, மூத்திரம் சொட்டு சொட்டாக வெளியாகுதல். அதிகக் காரமாகவும் எரிச்சலுடனும் வெளியாகுதல். பிரசவத்திற்கு ஏற்படும் வலிபோல, வலியுள்ள மூத்திரப்போக்குடன் இரத்தம் வெளியாகுதல், அசைந்தால் அதிகம். மலத்தில் இரத்தம் பிடிட்டிருத்தல்.

ஐயோடியம் (Iodium)

கோளங்களின் உபாதிகள். கை கால்களில் நடுக்கம். அதிக இளைப்பு. ஆனால் எப்பொழுதும் பசித்துக்கொண்டே இருத்தல். சாப்பிட்ட பிறகு சௌகரியம். வாயில் ஏராளமான உமிழ்நீர் உற்பத்தி. அடிக்கடி அசைந்துகொண்டிருக்கப் பிரியம். இரவும் பகலும் ஓயாமல் நடந்துகொண்டே

இருத்தல். நிமோனியா எனப்படும் கபவாத சுரத்தில் மார்பில் வலி, எரிச்சல் முதலியவைகளுடன் இருக்கும் முதல் கட்டத்திலும் அழர்ச்சி மும்முரமாய் இருக்கும் சமயத்திலும் இவ்வௌஷதம் கொடுக்கப்படலாம். டாக்டர் காப்கா என்பவர் இவ்வௌஷதம் நிமோனியா சுரத்தில் மூதலாவது இரண்டாவது கட்டங்களில் பாஸ்பரஸை விடச் சிறந்தது என்கிறார். மார்பில் கன கனப்பு ஏற்பட்டவுடன் ஆண்டிமோனியம் டார்டாரிகம் கொடுக்கப்படவேண்டும். வலிகள் இரவில் அதிகமாகும். சரீரம் இளைத்துக்கொண்டிருக்கையில் கோளங்கள் பருத்து வரும். சூடான இரத்தம்.

மனம்: அமைதியின்மை, இரவு பகல் ஓயாமல் அசைந்துகொண்டும் நடந்துகொண்டும் இருத்தல். கொலை செய்யவும் துணியும் மனக்கோளாறு. அதிகமான சோகம், உற்சாகம் குறைதல். வாதரோகத்தில் யார் அருகில் வந்தாலும் பயப்படுதல், உடம்பை ஒடுக்கிக்கொள்ளுதல்.

தலை: தலைவலி, இடதுபக்கத்தில் தலையை இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சியுடன் கூடிய தலைவலி, கதகதப்பான காற்று, வண்டியில், எழுந்து நிற்பது, வேகமாக நடப்பது முதலியவைகளால் அதிகமாகும். ஒவ்வொரு தடவை அசையும்போதும் பொட்டுகளில் துடிப்பு. மற்றக் குறிகள் அசைவதினால் சௌகரியமாயிருக்குமென்றாலும் தலைக்குறிகள் மாத்திரம் அதிகமாகும். தலையில் இடைவிடாமல் இரத்தம் கூடுதல். அதனால் தலைவலியும் இறுகக்கட்டியிருக்கும் உணர்ச்சியும்.

கண்கள்: கண்களுக்கு முன்பாகத் திரை இருப்பது போல தோன்றுதல். கண்களின் வெளுப்பு விழி அழுக்கடைந்து மஞ்சட்காமாலை போன்று மஞ்சள் நிறமாயிருத்

தல். கண்விழிகள் பிதுங்கியிருத்தல். கண்ணிமைகளில் நீர் அதைப்பு.

காதுகள்: டான்ஸில்கள் அழற்சியுடன் குடைதல். காது கேளாமை.

மூக்கு: வாசனை அறியும் சக்தியை இழத்தல். நீர் வடிதல், திறந்த வெளிகளில் ஏராளமாகுதல். குழிப்புண்களிலிருந்து நாற்றமுள்ள பதார்த்தங்கள் வெளியேறுதல். மூக்கில் வீக்கம். ஏராளமான மூக்கைப் புண்ணுக்கும் சூடான நீர் வடிதல். கஷ்ட சுவாசம்.

முகம்: மஞ்சளாயிருத்தல், நீர் அதைப்பு. தாடைக் கோளங்கள் வீங்குதல்.

வாய்: குழிப்புண்கள், சாம்பல் நிறமாயிருத்தல். ஏராளமான உமிழ்நீர் உற்பத்தி. அதிக நாற்றம்.

தொண்டை: குழிப்புண்கள், இறுக்கியிருத்தல். டான்ஸில்களும் உள்நாக்கும் வீங்கி நீண்டிருத்தல்.

வயிறு: அதிகமான பசி, சிறிது நேரத்திற்கொருமுறை சாப்பிடுதல், சாப்பிட்டவுடன் சௌகரியம். நன்றாய்ச் சாப்பிட்டு வரும்போதும் இளைப்பு ஏற்படுதல். பட்டினி கிடந்தால் மார்பில் வலி தோன்றுதல். காலையிலிருந்து மாலை வரை வெற்று ஏப்பங்கள் வந்துகொண்டேயிருத்தல். எரிச்சலுடன் கூடிய புளித்த ஏப்பம். வயிற்றில் துடிப்பு, நடுக்கம், எரிச்சல், மிருதுத் தன்மை.

அடிவயிறு: பருத்துப்போன கல்லீரல் மண்ணீரல் முதலியவைகளுடன் ஏராளமான உமிழ்நீர் உற்பத்தி அல்லது முறைச்சுரம். அடிவயிறு துருத்தியும் வீங்கியும்

இருத்தல். வயிற்றுப்போக்கு, தாகம், உலர்ந்த சருமம். சாப்பிட்டவுடன் வலிகள் திரும்பிவிடுதல். மூச்சு அடைத்துப் போய்விடுமோவென்ற பயத்தினால் கீழே படுக்க முடியாமை.

மலம் : வயிற்றுப்போக்கு, தண்ணீராகவும், நுரைத்தும், வெண்மையாகவும் இருத்தல். காலையில் ஏற்படும் வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல். கடினமான முடிச்சுகளுள்ள, கறுப்பு நிறமும், வெண்மை நிறமும் உள்ள மலச்சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல்.

மூத்திரம் : வயதானவர்களுக்கு காணப்படும் மூத்திர ஒழுகல். அதாவது மூத்திரப்பையில் மூத்திரம் தங்க முடியாமல் சதா சொட்டு சொட்டாக வெளியேறிக் கொண்டே இருத்தல். அடிக்கடியும் ஏராளமாகவும் இச்சையில்லாமலும் வெளியாகுதல். கலக்கமடைந்தும் பச்சை மஞ்சள் நிறமும் உள்ள மூத்திரம். விசிஷ்ட குருத்துவம் (Specific Gravity) 1025 லிருந்து 1038 வரை இருக்கும். மேற்சொன்ன இடைவிடாப் பசி, துரிதமான இளைப்பு முதலியவைகளுடன் கூடிய தித்திப்புள்ள நீரழிவு.

ஆண் : விரைகள் கெட்டியாகவும் வீங்கியும் இருத்தல் பீஜம் வீங்குதல்.

பெண் : கருப்பையும், சினைப்பைகளும் கெட்டியாகவும் வீங்கியும் இருத்தல். ஒழுங்கற்ற மாதவிடாய். காரமுள்ள வெள்ளைப்பாடு, தொடைகளை இரணமாக்குதல். மாதவிடாயின்போது அதிகமாகுதல். வலது சினைப்பையிலிருந்து கீழே கருப்பையில் ஆப்பு வைத்து அழுத்துவது போன்ற வலி.

கருப்பம்: பிரசவித்து அறையிலிருக்கும் ஸ்திரீகளுக்கு இவ்வௌஷதத்தைக் குறைந்த வீரியங்களில் கொடுக்கக்கூடாது. ஸ்தனங்கள் இளைத்து சிறுத்துவிடுதல்.

தொண்டைக்குழி: அடிக்கடி காறிக்கொண்டு இருந்தல், விழுங்குதல். கொற கொறப்பு, பிடிப்பும் விரைப்பும் இருத்தல்.

இருமல்: தொண்டை அழர்ச்சியினால் ஏற்பட்ட இருமலுடன் கஷ்ட சுவாசம், சளி கீழே இறங்குதல். காலையில் மார்பில் பிடிப்புடனும் எரிச்சலுடனும் கூடிய வரண்ட இருமல். ஏராளமான கோழையும் சளியும் வெளியாகுதல். கோழை இரத்தம் கலந்தும் உப்புக்கரித்துக் கொண்டும் அல்லது புளிப்பாகவும் இருக்கும். குழந்தை கையினால் தொண்டையை பிடித்துக் கொண்டு பெரிய கட்டி போன்ற கோழையை உமிழ்தல்.

சுவாச கோசங்கள்: இவ்வௌஷதம் சுவாசகோசத்தின் நுனியை மாத்திரம் பீடிக்கும். பாஸ்பரஸ் என்னும் ஔஷதமோ சுவாசகோசங்களின் பக்கங்களைத் தாக்கும். கடுமையான பிடிப்புவலி. உயரமான இடங்களுக்குச் செல்லும்போது மூச்சுத் திணரல். எரிச்சல். சுவாசகோசத்தின் வலப் பாகத்தின் மேற்பகுதியில் அழர்ச்சி. மார்பில் இறுக்கம். டாக்டர் காப்கா என்பவர் நிமோனியா சுரத்தில் அவயவங்கள் அழர்ச்சி அடையும் சமயத்தில் கொடுத்து நல்ல பலனைக் கண்டிருக்கிறார்.

இருதயம்: அளவுக்கு மீறி பெருத்தல். அசைந்தால் நாடித்துடிப்பு அதிகரித்தல்.

கழுத்து, முதுகு: கடினமான முண்டுகள் தோன்றுதல். கழுத்துக் கோளங்கள் பருத்தும் கடினமாகவும் இருத்தல்.

கை, கால்கள்: காலை வேளைகளில் கைகளில் அதிக பலவீனம், பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டது போல் அவ்வளவு பலவீனம். கை கால்கள் சில்லிப்பாய் யிருத்தல். கால்களில் நீர் கட்டியது போன்ற வீக்கம். தசைகள் முறுக்கிக்கொள்ளும். மூட்டுகளில் நாட்பட்ட வாதம், இரவுகளில் வலி, வீக்கமின்மை, குளிர்ச்சியினால் சமனம்.

நரம்புகளும், கேபிகளும்: முறுக்குதல், நடுக்குதல், அதிக பலவீனம், பேசினால்கூட வியர்வை ஏற்படுதல். ஸ்தனங்களில் இருக்கும் கோளங்களைத் தவிர மற்ற கோளங்கள் யாவும் வீங்கியும் கடினமாகவும் இருத்தல். சரீரம் வாடுதல், இளைத்தல்.

போது: கறுத்த மயிர், கறுப்பு, மஞ்சள் அல்லது பழுப்பு நிறங்கொண்ட சருமம். பருத்த கோளங்கள். விரை, ஸ்தனங்கள் முதலியவைகளின் பலக் குறைவு. நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும் சரீரம் இளைத்தல்.

விசேஷம்: அறையின் உஷ்ணம், சரீரத்தைப் போர்த்துதல், பிரயாசை, இரவு, இளைப்பாறுதல் முதலியவைகளால் அசௌகரியம். குளிர் காற்று, ஸ்நானம், சாப்பிடுவது அசைந்துகொண்டிருப்பது முதலியவைகளால் சௌகரியம்.

குழந்தைகளின் வயிற்றுக் கட்டிகளில் ஒப்பிடுதல்

அலூமினு: பிடிவாதமும் கோபமும் கொண்ட குணம். சரும வியாதிகளும் கரப்பான் சிரங்கும். கண்களில் நீர் வடிதலும் காலையில் ஒட்டிக்கொள்ளுதலும். ஈறுகளில் இரத்தம் கசிதல். பசியின்மை. மண்ணையும் சுவர்களிலிருந்து காரைக்கட்டி, சுண்ணும்பு முதலியவைகளையும் உட்கொள்ளுதல். வயிற்று உப்பிசம். வலி. மலச்சிக்கல், மலம் கடினமாகவும் முடிச்சுகள் கொண்டும் இருத்தல்.

அர்ஜண்டம் நைட்ரிகம்: குழந்தைப் பருவத்தில் இருந்தே பித்தக் கோளாறுகள். கிழ மனிதர் போன்று ஒட்டியும் காய்ந்துமுள்ள சரீரம். சர்க்கரை, தித்திப்பான தின்பண்டங்களில் பிரியம். நறுக்கிய பசலைக்கிரை போன்ற மலம், மிகவும் வேகமாகவும் சப்தமுள்ள அபான வாயுவுடனும் வெளியேறுதல். மலம் சற்று நேரத்தில் பச்சை நிறம் ஆகுதல்.

ஆரம் ம்யூரியாடிகம் நேட்ரம்: நாட்பட்ட காமாலை. பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல், மலம் களிமண் போன்று இருத்தல், அல்லது வெண்மையாக இருக்கும். சரீரம் முழுவதும் அரிப்பு. அடி வயிற்றில் நீர் வீக்கம். எலும்புகள் அளவுக்கு மீறி வளருதல். சில்லிப்பு முதுகிலிருந்து உண்டாகுதல்.

கல்கேரியா ஆர்ஸனிகா: மலேரியா எனப்படும் சுரத்திலிருந்து ஏற்பட்ட கட்டிகள், மந்தமான நீடித்து அடிக்கும் சுரம். வரண்ட, நோயுள்ள சருமம். பசியில்லாமை. தாகம், சில்லிப்பு முதுகு வழியாகச் செல்லுதல்.

கார்டுவஸ் மரியேனஸ்: கல்லீரலில் வலி. இடப் பக்கத்தில் அதிக உணர்ச்சி. (தாய் திராவகத்தை உபயோகிக்கவும்.)

சேலிடோனியம்: கல்லீரல் பருத்தல், அமுக்கினல் வலி உண்டாகுதல், கசப்பான ருசி. கண்கள், முகம், சருமம், நாக்கு இவை யாவும் மஞ்சள் நிறமாயிருத்தல். மலம் பழுப்பாகவோ அல்லது பொன் போன்று மஞ்சளாகவோ அல்லது ஆட்டுப் புழுக்கைப் போன்றோ இருத்தல். மூத்திரம் மஞ்சள் நிறத்தை அடைதல். துணிகளைத் துவைத்த பிறகும் மஞ்சள் நிறம் விலகாமை. வலது சுவாசாசயத்தில் உபாதி ஏற்படுதல். உணவில் வெறுப்பு, குமட்டலும் வாயாலெடுப்பும். சூடான தண்ணீரைத் தவிர மற்றெந்த உணவும் வயிற்றில் தங்காமை. மாலை 4 மணியிலிருந்து 8 மணி வரை உபாதிகள் அதிகமாகும்.

ஹீபார்சல்பர்: அதிகமான அளவு மீறிய உணர்ச்சி. கல்லீரல் அழர்ச்சி.

ஐயோடியம்: வீக்கமும் பருத்தலும். அமுக்கினல் வலி. சில சமயங்களில் மஞ்சட் காமாலை. கல்லீரலும் மண்ணீரலும் பருத்திருத்தல். அபாரமான பசி ஆனலும் சரீரம் இளைத்தல். சிலர் இவ்வௌஷதத்தை குழந்தைக் கட்டிகளில் மிகவும் சிறந்ததென்று சொல்லுகிறார்கள்.

லைகோபோடியம்: குழந்தையின் சரீரத்தில் சுருக்கங்கள். கல்லீரல் பக்கத்தில் வலி, கனம் முதலிய உணர்ச்சிகளுடன் நீடித்த வீக்கம். அடி வயிற்றில் நீர் வீக்கம், தொருத்தி யிருத்தல். பசி, ஆனல் சிறிது ஆகாரம் உட்கொண்ட வுடனேயே அடங்கி விடுதல். மூத்திரத்தில் செங்கல் தூள் போன்ற மாசு படிதல். நாட்பட்ட அசீர

ணக் கோளாறுகள், பிடிவாதமான மலபந்தம். மாலை 4 மணியிலிருந்து 8 மணி வரை உபாதிகள் அதிகரிப்பு.

மேக்னீஷியா ம்யூரியாடிகா: கல்லீரல் பருத்தும் அதிக இரத்தத்திறட்சி கொண்டும் இருத்தல். அடி வயிறு வெளித் தருத்தி யிருத்தல். வலப் பக்கம் படுத்தால் உபாதிகளின் அதிகரிப்பு. மலம் கடினமாகவும் சிரமத்துட னும் மெதுவாகவும் குறைந்த அளவாகவும் முடிப்புகளுட னும் ஆட்டுப் புழுக்கை போன்றும் அபானத்தின் நுனியி லேயே ஒடிந்துகொண்டும் வெளிவருதல். பால் ஒத்துக் கொள்ளாமை, முகம் மஞ்சளா யிருத்தல்.

நேட்ரம் மூர்: பொதுவான சோகை. இளைப்பு, கழுத்திலும் தொண்டையிலும் ஆரம்பித்தல். அபரிமித மான பசி. உப்பிட்ட பண்டங்களைத் தின்ன அவா. தாகம், வரண்ட நாக்கு, வாயில் குழிப்புண்கள். மலச்சிக்கல், கடினமான மலம். அபானத்தில் வெடிப்பு, தோலுரிதல். கால்களில் சில்லிப்புடன் காலை 11 மணிக்குச் சுரம் வருதல். சுரத்தின்போது தாகமும் தலை வலியும். தலை வலியுடன் ஏராளமான வியர்வை.

நேட்ரம் ஸல்ப்: கல்லீரலில் வலி, தொட்டால் வலி, நடக்கும்போது வலி காணுதல். நாட்பட்ட வயிற்றுப் போக்கு, காலையில் மும்முரம். பொறுமல், அடி வயிற்றில் குடைதல். குளிர்ந்த பருவங்களில் அதிகரிப்பு.

நக்ஸ் வாமிகா: அடிவயிற்றின் சுவர்களில் அடி பட்டது போன்ற வலி, கல்லீரலில் வலியும் பிடிப்புகளும்.

பாஸ்பரஸ்: கல்லீரல் கடினமாகவும் சிறுத்தும் இருத்தல். பசி, அடிக்கடி சாப்பிட்டாலும் இளைப்பு நிற்

காமை. குளிர்ச்சியான ஆகாரங்களில் பிரியம், அக் குளிர்ந்த அகாரம் வயிற்றில் சென்று சூடேறின உடனே வாயாலெடுக்கப்படுதல். (சுமார் ஐந்து நிமிடங்களுக்குள்.)

ஐரிஸ் வர்ஸிகொலர்
(Iris Versicolor)

புளிப்பான கயிறுபோன்ற கோழை வாயாலெடுக்கப் படுதல், வாயாலெடுப்பின்போது வாயிலிருந்து வயிறுவரை எரிச்சல் உண்டாகும். கல்லீரல் அல்லது அசிரண சம்பந்தமான தலைவலி, கண் பார்வை மங்குதல். புளிப்பான பச்சை நிறமுள்ள மலம். மலங்கழித்த பின் அபானத்தில் எரிச்சல். இவ்வௌஷதம் முக்கியமாக கல்லீரல், மூத்திர அவயவங்கள், சருமம் முதலியவைகளில் உபயோகிக்கப் படும்.

தலை: நெற்றியின் வலப் பக்கத்தில் துடிப்பு. குமட்டல், மாலையிலும், இளைப்பாறும் போதும், வேகமாக அசையும்போதும், குளிர்காற்றினுலும், இருமுவதினுலும் தலைவலி அதிகமாகும். பொதுவாக அசைந்தால் அனுகூலம். மந்தமான தலைவலி. பார்வை மங்கலுடன் 8 நாட்களுக்கு அல்லது சில நாட்களுக்கு ஒரு முறை வருதல். வலி கண்களின் மேற்புறத்தில் ஆரம்பமாகும். உச்சந்தலை பறந்து விடுமோவென்று நினைத்தல். தலைவலி நின்றபிறகு பார்வை ஒழுங்குக்கு வருதல்.

முகம்: நரம்பு சம்பந்தமான வலி, காலை ஆகாரம் உட்கொண்டவுடன் பிளக்கும் தலைவலியுடன் ஆரம்பித்தல்.

காது: கிண் கிண்ணென்று ஒலித்தல்.

வாய்: வாயும் நாக்கும் வெந்து போனது போன்ற உணர்ச்சி. ஏராளமான உமிழ்நீர்.

வயிறு: புளிப்புள்ள வெற்று எப்பம். வயாலெடுக்கப் படும் பதார்த்தம் புளிப்பாகவும் தொண்டையில் புண்ணை ஏற்படுத்திக் கொண்டும், தலைவலியுடனும் இருத்தல். வயிறு, நாக்கு, தொண்டை ஆகியவைகளில் உள்ள எரிச்சல் குளிர்ந்த தண்ணீரினுல் தணியாமை. சில நிமிடங்களுக்கு ஒரு முறை வலி. ஸ்திரீகள் கருப்பமா யிருக்கும்போது வயிற்றில் வலியுடன் வாயிலிருந்து கம்பிகள் போன்ற ஏராள மான உமிழ்நீர் உற்பத்தியாகுதல்.

அடிவயிறு: வெட்டும் வலி. சரீரத்தை இண்டாக மடித்தால் வலி தணிதல்.

மலம்: தண்ணீர் போன்ற மெல்லியதாகவும், பச்சை நிறமும் சீரணமாகாத உணவும் கலந்த மலம். மலம் கழித்த பிறகு அபானத்திலும் மலப்பையிலும், எரிச்சல். அடிக்கடி வரும் மந்தத் தலைவலி. அசீரணக் கோளாறுகள் முதலியவைகளுடன் கூடிய மலபந்தம். வாயாலெடுப்புடன் ஏராளமான வயிற்றுப்போக்கு. பகல் 2 மணியிலிருந்து 3 மணி வரை அதிகரித்தல்.

மூத்திரம்: குறைவாயும் சிவப்பாயும் இருத்தல். மூத்திரம் கழித்த பிறகு மூத்திர அவயவங்களில் எரிச்சல்.

சுவாசாசயம்: வரண்ட இருமல், தொண்டையில் குறு குறுப்பும் எரிச்சலும். இடது பக்கத்தில் வெட்டும் வலி.

சருமம்: தலை, முகம் இவைகளிலும் வாயைச் சுற்றி லும் கொப்புளங்கள். இரவில் அதிக அரிப்பு.

கை, கால்கள் : வாத சம்பந்தமான வலி, முக்கியமாக வலக்கையைத் தூக்கும்போது வலி, அசைத்தால் அதிகமாகுதல். இடப்பக்க சந்து வாதம், எரிச்சல், அசைந்தால் அதிகமாகுதல். மூட்டுகளில் வலி அடிக்கடி மாறிக்கொண்டே இருத்தல்.

விசேஷம் : மாலையிலும் இரவிலும் உபாதி அதிகம். இவை விடாமல் அசைந்துகொண்டிருந்தால் சௌகரியம்.

முறிவு : நக்ஸ்வாமிகா.

ஓனோஸ்மோடியம் (Onosmodium)

காலையில் எழுந்திருந்தவுடன் பிடறித் தலைவலி, அவ்வலி நெற்றிக்கும் பின் கழுத்துக்கும் பரவுதல். இடது பக்கத்திலும் கைகளைத் தலைக்குமேல் தூக்கும்போதும் வலி அதிகரிக்கும். காதுகளில் கிண்கிண்ணென்ற ஒலியுடன் கிறுகிறுப்பு, இடப்பக்கமாகப் படுக்கவோ அல்லது கைகளை தலைக்கு மேல் தூக்கவோ இயலாமை. நன்கு அச்சிட்டிருக்கும் புத்தகங்களைப் படிக்கும்போது கண்கள் விரைப்பாக இருக்கும் உணர்ச்சி. கண் விழிகளில் பாரமான மந்த வலி. கண்களை அதிக சிரமப்படுத்தியதாலும் புணர்ச்சி அவயவங்களின் பலவீனத்தினாலும் ஏற்படும் முறைத் தலைவலி. புணர்ச்சியினால் களைப்பு. ஸ்திரீகளில் புணர்ச்சியில் அவா குறைதல். அசைந்தால் உபாதிகள் அதிகரித்தல்.

ஓபியம் (Opium)

பிரக்ஞையின்மை, மயக்கம், குறட்டை விடுவது போன்ற சுவாசம், மந்தமாகச் செல்லும் நாடி, கண் விழிகளின் பாப்பா சுருங்குதல், பயத்தினால் ஏற்பட்ட உபாதிகள். மறமறப்பு, மந்த குணம், உணர்ச்சியின் மாறுபட்டம்,

பக்ஷவாயு பிடிக்கும்போன்று தோன்றும் நிலைமை. குடல்களிலும் சுவாசாசயங்களிலும் பாரிசவாயு, அடிக்கடி முறுக்குதல் அல்லது வலிப்புடன் கூடிய இருதயத் துடிப்பு. மூளையின் முன் பக்கத்திலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படுதல். கீழ்த்தாடை தொங்கிவிடுதல், குறட்டையுள்ள சுவாசம், அடி வயிற்றில் வாயுவினால் ஏற்பட்ட வீக்கம், பாதிக் கண் மேல்புறமாகச் சொருகியிருத்தல், மல மூத்திர பந்தனம். பிடிவாத குணமுள்ள மல பந்தத்தில் 30, 200 வீரியங்களில் கொடுக்கவும். குறிகளுக்கு ஏற்ற மருந்துகள் கொடுப்பினும் வேலை செய்யாமை. நீண்டு ஆழமாக சுவாசித்தல், ஒழுங்கற்ற மெதுவாகச் செல்லும் நாடி. இளைப்பு, கவலையுடன் கூடிய சுவாசத்துடன் துணி மூட்டைபோல் உட்கார்ந்து விடுவார். பயத்தினாலேற்பட்ட வியாதிகள்.

மனம்: பிரக்ஞையின்மை, இளைப்பு, நடுக்கம் முனகுதல் உஷ்ணத்தினால் அதிகமாகுதல், கண்கள் கண்ணாடி போல் பளபளப்பாக இருத்தல், பாதிக் கண்கள் மூடியபடி இருத்தல், வெளுத்தமுகம், ஆழ்ந்தமயக்கம். பலவிதமான அனுமானங்கள், பூதம் பிசாசு, நெருப்பு, கறுமையான உருவங்கள் இவைகளைப் பார்ப்பதாகச் சொல்லுவார். மயக்கத்தில் பிதற்றுதல், கண்கள் அகலத் திறந்திருத்தல், முகம் சிவந்தும் ஊதியும் இருத்தல். சாவு கிட்டிவிட்டதென்ற பயம். அதிகமான சந்தோஷம், பயம், கோபம், அவமானம் முதலியவைகளினாலேற்பட்ட உபாதிகள். ஒளி, ஒலி, வாசனை முதலியவைகளில் ஒன்று அதிக உணர்ச்சி அல்லது உணர்ச்சி சிறிதளவு கூட இல்லாமை. தான் தன் வீட்டில் இல்லை, வேறு எவ்விடமோ இருக்கிறேனென்ற நினைப்பு.

தலை: எழுந்தவுடன் மயக்கம். தலை பின்னால் இழுக்கப்பட்டு இருக்கும் மூளைச்சுரம். தம்முடைய தலை

இலேசாக இருக்கிறதென்று உணரும் கிழவர்கள். போர்வையை உதைத்துத்தள்ளி, குளிர்ச்சியான அறையை நாடிச்செல்லுவார். சருமமும் முகமும் சிவப்பாகவும் கண்ணின் கரு மணிகள் குறுகியும் இருத்தல், சூடான தண்ணீரில் ஸ்னானம் செய்தாலும் சூடான ஒற்றிடங்களினாலும் அதிகமாகுதல். தலையில் இரத்தம் விரைவாகக் கூடுதல்.

கண்கள்: கருமணிகள் சுருங்குதல். கண்கள் பாதி திறந்தும் மேற் புறத்தில் சொருகிக் கொண்டும் இருத்தல்.

முகம்: ஊதியிருத்தல், கறுத்த சிவப்பு நிறமாகவும், சூடாகவும் இருத்தல். சில சமயங்களில் வெளுத்தும் மண் போன்றும் இருக்கும். குழிவிழுந்த முகம், கண்களில் இரத்தத்திரட்சி. பிடரித் தலையில் வலி. வாயில் நுரை, குழந்தை வதங்கிப்போன கிழவனை ஒத்திருக்கும். கீழ்த் தாடை தொங்குதல்.

வயிறு: ஆகாரத்தை வாயாலெடுத்தல், வாயாலெடுக்கப்பட்ட பதார்த்தம் மலம் போன்று நாறுதல். கட்குடியர்களின் வாயாலெடுப்பு. உட்கொண்ட ஆகாரம் புளித்துப்போய் வாயாலெடுக்கப்படுதல். மலத்தை யொத்த வாயாலெடுப்பு. சாப்பிட்டவுடன் அழுக்கமும் கனமும் இருக்கும் அல்லது ஒன்றுமே சாப்பிடாதது போன்ற உணர்ச்சி. கடுமையான தாகம். முகத்தசைகள் தளர்ந்து தொங்குதல், அத்தசைகளில் கெண்டைப் பிடிப்பு.

அடிவயிறு: மண்ணீரல் பெருக்கம், வீக்கம். வெளித் துருத்தல். இறுக்கிப்பிசையும் வலிகள், கெண்டையேறுதல்.

மலம்: சாந்த குணமும் ஸ்தூல சரீரமுமுள்ள குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் ஏற்படும் மலபந்தம்.

மலம் கடினமான கறுப்பு நிறமுள்ள பந்து போன்று இருக்கும் குடல்கள் ஒழுங்காக வேலை செய்யாததால் மலபந்தம். சிறு குடலில் இறுக அமுக்கும் உணர்ச்சி. குடல்களின் பட்ச வாயுவினால் மலம் கட்டப்படுதல். மலம் தண்ணீராகவும் கறுப்பாகவும் நாற்றமாகவும் நுரையுடனும் எரிச்சலுடனும், முயற்சியில்லாமலும் போகும். பயந்துகொண்ட பிறகு தானாகவே மலம் கழிதல். மயக்கத்துடன் கூடிய விஷ பேதி. வலிப்புகளிருக்கும்போது குறட்டை விடுதல்.

மூத்திரம்: தானாகவே வெளியாகுதல். மூத்திரம் விடுவதற்கு முக்கமுடியாமை, மூத்திர அடக்கம், மூத்திரப்பை நிறைந்து விடுதல், கொஞ்சமாகவும் அதிக சிவப்பாகவும் வெகு சிரமத்துடனும் மூத்திரம் வெளிப் படுதல்.

சுவாசாசயம்: வரண்ட இருமல். அடிக்கடி நீண்ட பெருமூச்சு விடுதல். குறட்டையை ஒத்த கள களத்த சுவாசம். மூச்சுத்திணறுதல். ஆழ்ந்து குறட்டை விடுதல்.

நரம்புகளும், கேசிகளும்: அசைவு, பயம், புது மனிதர்கள் நெருங்கி வந்ததால் ஏற்பட்ட கோபம், அழுகை முதலியவைகளினால் ஏற்பட்ட நரம்புப் பிடிப்பு. கை கால்கள் முறுக்கிக்கொள்ளுதல். வலிப்புகளில் முதன் முதலில் பலத்த வீறிடும் அலறல், பிறகு வாயில் நுரை, கை கால்களில் நடுக்கம், மூச்சுத் திணறல், அரைக்கண்கள் மாத்திரம் மூடி யிருத்தல், கருமணிகள் அகன்றுவிடுதல், வெளிச்சத்தில் உணர்ச்சியின்மை. வலிப்பிற்குப் பிறகு ஆழ்ந்து தூக்கம், மூகம், சூடாகவும் கருஞ் சிகப்பாகவும் இருத்தல், வலிப்புகளுக் கிடைநேரத்தில் மயக்கம். வலிப் புகள் உஷ்ணமான அறைகளில் அதிகமாகியும் குளிர்ந்த காற்றில் சமனமாயும் இருக்கும். பயத்தினாலேற்படும்

காக்கை வலிப்பு, 15 நிமிடங்களுக் கொருமுறை மூர்ச்சை யடைதல், கண்களை மூடுதல், தலை தொங்குதல், பெருமூச்சு விடுதல். மறத்தலும், உணர்ச்சியின்மையும். சுருங்கிப் போன அல்லது காய்ந்துபோன குழந்தைகள். நீர் அதைப் புடன் கூடிய வீக்கம். குளிர்ந்த கைகால்கள். மூளைச் சுரங்கள்.

தூக்கம்: மயக்கமுள்ள ஆழ்ந்த தூக்கம், சிவப்பான முகம். மயக்கம் அல்லது மந்த குணம், குறட்டையுள்ள சுவாசம், சூடான வியர்வை, தூங்கும்போது பாதிக் கண்கள் திறந்திருத்தல், தூங்கினவுடன் மூச்சு நின்றுவிடுதல், குறட்டைவிடுதல், சிறிய சப்தத்தையும் நன்கு கிரகிக்கக் கூடிய காதுகளின் அதிக உணர்ச்சி, அதனுல் தூக்கமின்மை. படுக்கை மிகவும் சூடாகத் தோன்றுதல், தூங்கும் பொழுது படுக்கைத் துணிகளைப் பொறுக்கிக் கொண்டிருத்தல். தூக்கம் வருவது போல் இருந்தாலும் தூக்கம் வராமை.

சுரம்: 105, 106 டிகிரி சுரத்தில் வியர்வை ஏராள மாகப் பொழிந்து கொண்டிருக்கும் பொழுது சரீரம் முழுவதும் சூடாக நெருப்புபோன்று எரிதல். நெற்றியில் குளிர்ந்த வியர்வை. குளிர்ச்சியான கால்கள், ஊதிய முகம். தாகம் அவ்வளவாக இருப்பதில்லை. மயக்கம், குறட்டை, கை, கால்கள் துடித்தல், முறுக்குதல், தாகம், தூக்கக் கலக்கம் முதலியவைகளுடன் கூடிய சுரம்.

விசேஷம்: உஷ்ணம், பிராந்தி, சாராயம், வியர்க்கும் சமயம், தூங்கும்போது, தூங்கின பிறகு இவைகளால் உபாதிகள் அசௌகரியம். குளிர்ச்சி, அடிக்கடி நடப்பது, வாயாலெடுப்பு முதலியவைகளினுல் சமனம்.

ஒலியாண்டர் (Oleander)

இவ்வௌஷதம் சருமத்திலும் மூளை முள்ளந்தண்டு ஆகியவைகளிலும் உபயோகமுள்ளது. பக்ஷவாயு, மந்தமான ஒழுங்கற்ற நாடி, கைகள் முடக்குவாதம் போன்று முடக்கிக் கொள்ளுதல். அபான வாயு விடும்போது மலம் தானகவே வெளியாகுதல். விரைப்பாயிருக்கும் உணர்ச்சி. வலிப்புகள். தலைத் தோலில் கொப்புளங்கள். கை கால்கள் விரைப்பாகவும் பாரிசவாயுவினுல் பீடிக்கப்பட்டும் இருத்தல். நிற்கும்போது முழங்கால்கள் நடுங்கும். எழுதும் போது கைகள் நடுங்குதல்.

மனம் : குறைவான ஞாபக சக்தி. கவனக்குறைவு. படிக்கும்போது குழப்பம். விஷயங்களை சீக்கிரம் கிரகிக்க இயலாமை. சிரமப்பட்டு கிரகித்தல். பிறர் தன்னை எதிர்த்துப் பேசுவதை விரும்பமாட்டார்.

தலை : பாரிசவாயு வருமுன்னர் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதும், கீழேபார்க்கும்போதும் கிறுகிறுப்பு உண்டாகுதல். மயக்கம். தலையில் பேன் இருப்பதுபோல் கடிக்கும் உணர்ச்சியும் அரிப்பும்; இவை சொரிந்தால் சமனமடைதல். பிறகு எரிச்சலும் எரிச்சலுக்குப்பின் மறுபடி அரிப்பும் தோன்றுதல். ஆடையைக் கழற்றும்போதும் அரிப்பு அதிகமாகுதல். நெற்றியிலும் காதுகளின் பின்புறங்களிலும் எரிச்சல், கடித்தல் முதலிய உணர்ச்சிகளுடன் தோலுரியும் கசகசப்பான சொறி சிரங்குகள். பக்கவாட்டாகப் பார்ப்பதினுல் சமனமாகும் தலைவலி.

கண்கள் : தலையின் பக்கமாகக் கண்கள் உள்ளுக்கு இழுக்கப்பட்டிருக்கும் உணர்ச்சி.

வயிறு: பசி. சாப்பிட்ட பிறகும் வயிற்றில் காலியான உணர்ச்சி.

மல, மூத்திரங்கள்: இரண்டு தினங்களுக்கு முன் உட்கொள்ளப்பட்ட ஆகாரம் சீரணிக்கப்படாமல் மலமாகக் கழிக்கப்படுதல். முதலில் தண்ணீர்போன்ற வயிற்றுப் போக்கு, பிறகு கெட்டியான மலம். கருப்ப ஸ்திரீகளுக்கு வயிற்றில்கடபுடா சப்தம் ஏற்படுதல். அழுகின முட்டை போன்று நாற்றமுள்ள அபான வாயு பறிதல். மலம் லேசான மஞ்சள் நிறமாகவும் சீரணமாகாத பதார்த்தங்கள் கொண்டதாகவும்இருத்தல். அபானவாயு பறியும்போது மலம் தானாகவே வெளியாகுதல். குடலில் குழிப்புண்களோடு கூடிய வயிற்றுப்போக்கு. மலம் கழிக்குமுன்பும் பிறகும் எரிச்சல்.

இருதயம்: மார்பில் காலியாயிருக்கும் உணர்ச்சியுடன் படபடப்பு.

நரம்புகள்: வர்ணவேலை செய்பவர்களின் பாரிசவாயு. விரைப்பாகவும் சில்லிப்பாகவும் உள்ள கைகால்கள். நடுக்கம். தசைகள் பலவீனமாகவும் குறுகியும் இருத்தல். முக்கியமாக சரீரத்தின் மேற்பாகத்திலும் இடது பக்கத்திலும் இக்குறி அதிகமாயிருக்கும்.

கை, கால்கள்: கால்களில் பலவீனம். குளிர்ச்சியான மரமரத்த பாதங்கள். கைகளிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்குதல்.

சருமம்: ஆடையை நீக்கும்போது கடுமையான அரிப்பு. கழுத்திலும் அரை இடுக்கிலும் அரிப்பு. காதுகளுக்குப் பின்புறத்திலும் தலைத்தோலிலும் சொறி சிரங்குகள்.

விசேஷம்: ஆடை அகற்றும்போதும், இளைப்பாறும் போதும் ஆடைகள் உடம்பில் படும்போதும் உபாதிகள் அதிகமாகும்.

ஓஸிமம் ஸாங்டம் (Ocimum Sanctum)

இவ்வௌஷதம் பித்தத்தையும் பசியையும் அதிகரித்து வாயு, வயிற்றுப் போக்கு, இருமல், காசம் முதலியவை களைக் கட்டுப்படுத்துகிறது. முன்பக்கமாக உடம்பை மடிப் பதினாலும் தலையைக் கைகளால் தாங்கிக்கொள்வதாலும் சமனமாகும் காசம். மூத்திரப் பையின் வலியில், இரத் தப் பெருக்கு, மூத்திரத்தில் சிவப்பான மாசு கரைந்திருத் தல் முதலியவைகளுக்கு இது இன்றியமையாததாகும். முகம் ஊதியும் சிவந்தும், உதடுகள் காய்ந்தும், சிவப்பாக வும், நாக்கின் நடுவில் சிவப்பும் காணப்படும். இருமலும், சலதோஷமும், கை கால்களில் வலியுடன் கூடிய தலைவலி. பகல் 3 மணிக்கு தும்மல், வலி முதலியவைகளுடன் சுரம். மழைக்காலங்களில் ஏற்படும் டைபாய்டு சுரம். வீக்கம். பிரசவமான பிறகு ஏராளமான நாற்றமுள்ள நீர் வெளிப் படுதல். ஏராளமான வெள்ளைப்பாடு. இரத்தப் பெருக்கும் வெள்ளைப்பாடும் மாறி மாறி வருதல்.

க்வாய்கம் (Guaiacum)

கை கால்கள் முடங்குதல், விரைப்பு. வமிச பரம்பரை யாக வரும் மெதுவாக உருக்குலைக்கும் வியாதிகள், உதாரண மாக க்ஷயரோகம், கில்வாயு, வாதம் முதலியவை. இவ் வௌஷதம் க்ஷயரோகத்தில் காஸ்டிகம், ஸல்பர், பேர்குலீனம் முதலியவைகளுடன் சம்பந்தமுள்ளது.

சாதாரணமாக அபிஸ் மெல்லிபிகா, பாரிடாகாரிப், பிர யோனியா முதலிய ஔஷதங்களின் சரக்கை இவ்வௌஷதம் கொண்டிருக்கிறது. சோம்பலும் பலவீனமும் (முக்கியமாகத் தொடைகளில்) சரீரத்தை சிறிதளவு அசைக்கவும் பயம், கொட்டாவி விட்டுக்கொண்டு சோம்பல் முறித்தல், எந்த வஸ்துவும் லேசாக இருப்பது போன்ற உணர்ச்சி. டான்ஸிலிடிஸ் என்னும் தொண்டைச் சதை நோய்.

மனம்: ஞாபக மறதி (முக்கியமாக சாமான்களுடையவும் மனிதர்களுடையவும் பெயர்களை மறந்து விடுதல்.) கவனக் குறைவு, உற்சாகம் குறைதல், வருத்தமும் பிடிவாதமும் கோப குணமும்.

தலை: எழுந்திருக்கும்போது கிறு கிறுப்பு. வாத சம்பந்தமான தலை வலி. நெற்றி முழுவதும் புடைக்கும் தலை வலி, அசைந்தால் அதிகமாகுதல். தலையின் இடப் பாகத்தில் வாத சம்பந்தமான வலி, கழுத்திற்கோ முகத்திற்கோ பரவுதல். பொட்டுகளில் புடைக்கும் தலை வலி, வெளிப்புறமாக அழுக்குவதினாலும் நடப்பதினாலும் சௌகரியப்படுதல். (இவ்விஷயத்தில் மாத்திரம் தான் நடப்பதினால் சௌகரியம்.) சாதாரணமாக வலிகள் கடைசியில் பிடிப்பு வலிகளாக மாறும்.

கண்கள்: கண்கள் வெளியே பிதுங்கியிருக்கும் உணர்ச்சி. வீக்கம், கண்ணின் கருமணிகள் அகன்று இருத்தல்.

காதுகள்: இடது காதில் கிழிக்கும் வலி. வலிகள் விட்டு விட்டு வருதல்.

மூக்கு: எலும்புகளில் வலி. மூக்கில் வீக்கம் ஏராளமான நீர் வடிதலுடன் கூடிய சலதோஷம்.

முகம் : சிவந்தும் வீங்கியும் கிழடு தட்டியும் இருக்கும். வலது தாடை யெலும்பிலும் கன்ன வெலும்புகளிலும் பிடிப்பு வலி, மாலை 6 மணியிலிருந்து விடியற்காலை 4 மணி வரை அதிகமாயிருத்தல்.

வயிறு : பிற்பகலில் அகோரமான பசி, மாலையிலும் அவ்விதமே. அதிக தாகம். பால், ஆகாரம் முதலியவைகளில் வெறுப்பு.

அடிவயிறு : பொருமி யிருத்தல். வலி, வயிற்றிலும் அடி வயிற்றிலும் எரிச்சல்.

மலம் : காலையில் வயிற்றுப்போக்கு, மலம் தண்ணீர் போன்றிருத்தல். மலச் சிக்கலில் கடினமாகவும் நொறுங்கிக்கொண்டும் அதிக நாற்றமுமுள்ள மலம்.

மூத்திரம் : நாற்றமுள்ள ஏராளமான மூத்திரம். மூத்திரம் விடும்போது வெட்டும் வலி. அடிக்கடி மூத்திரம் விடத் தூண்டுதல்.

பெண் : கடுமையான அல்லது நாட்பட்ட சினைப்பை அழற்சி, விசேஷமாக வாத நோயுள்ள ஸ்திரீகள். மாதவிடாய் வெளிப்படாமை. கெட்ட சதை வளர்ச்சியுடன் அதிக வலியுள்ள மாதவிடாய்.

இருமல் : வரண்ட, இறுகிய இருமல், இவைகளுடன் தாப சுரம், சூடான முகம். ஒட்டும் குணமுள்ள சீழ் அல்லது இரத்தம் முதலியவைகளுடன் கூடிய இருமல். வாத சம்பந்தமான வரண்ட இருமல். மூச்சுத் திணறும் உணர்ச்சி. க்ஷயரோக வியாதியஸ்தர்களில் வாத நோயுள்ளவர்களுக்கு ஏற்படும் மார்பு வலி. இவ்வலி திறந்த காற்றில் போய் வருவதினால் அதிகமாகுதல். மார்பின் தசைகளில்

வாதம், சுவாசிப்பதினுலும் அசைவினுலும் அதிக மாகுதல்.

இருதயம்: துடிப்பு. திடீரென்று இருதயத்தில் ஏதோ அடைக்கப்பட்டது போன்ற உணர்ச்சி, மூச்சுத் தடை, தூங்கும்பொழுதும் வரும்.

கழுத்தும் முதுகும்: தலையிலிருந்து கழுத்துக்குச் செல்லும் வலி, அசைவதினுலும் உஷ்ணத்தினுலும் அதிக மாகுதல். கழுத்திலிருந்து ஒரு பக்கத்து முதுகுவரை அதிகமான விரைப்பு. அசைவதினுல் அதிகமாகுதல்.

கை, கால்கள்: வலது தோளிலும் வலக்கட்டை விரலிலும் பிடிப்புவலி. இடது கையில் வாத சம்பந்தமான வலிகள். காலின் பேரெலும்பு வளையக்கூடியதாய் ஆகிவிடு தல். இடது காலில் கெண்டை வாங்குதல். முழங்கால் களிலுள்ள நரம்பு சூட்டையாகிவிடுதல். வலது கால் வீங் கியும் குறுகியும் இருத்தல். எல்லா வலிகளும், நடப்பது, உஷ்ணம் முதலியவைகளால் அதிகமாகும் (தலைவலி நீங்க லாக). கைகளின் நாட்பட்ட வாதம்.

சுரம்: சில்லிப்பிற்குப் பிறகு மாலையில் சுரம் வருதல். தாப சுரம், சூடான கைகள். இரவில் நாற்றமுள்ள வியர்வை. வீங்கிய கன்னங்கள், ஏராளமான வியர்வை. வலியுள்ள கை கால்களில் சூடான உணர்ச்சி. வாத சுரம்.

நரம்புகளும் கேபிகளும்: கை கால்கள் முடக்கம், விரைப்பு, இளைப்பு. வெளியாகும் பதார்த்தங்கள் நாற்ற முள்ளவை. மூட்டுகளில் வீக்கம், வலி. சூட்டைத் தாங்க முடியாது. வேலை செய்தபிறகு தொடைகளிலும் கை கால் களிலும் அதிகமான ஓய்ச்சல்.

விசேஷம்: அசைவு, சூடு, அமுக்குவது, தொடுவது, மாலை 6 மணியிலிருந்து விடியற்காலை 4 மணி முதலியவை அசௌகரியம்.

முறிவு: நக்ஸ்வாமிகா.

க்ளமேடிஸ் எரெக்டா
(Clematis Erecta)

இவ்வௌஷதம் கோளங்கள், ஜனனேந்திரியங்கள், விரை, மூத்திர அவயவங்கள், சருமம் முதலியவைகளில் வேலை செய்கிறது. தசைகளில் துடிப்பும் முறுக்கிக் கொள்வதும். பொதுவான இளைப்பு. தசைகள் தளர்ச்சியடைதல். அதிகமான தூக்கக்கலக்கம், மூத்திரம் அடிக்கடி வருதல், அதாவது மூத்திரம்விட உட்கார்ந்தவுடன் சிறிது வெளிப்பட்டு உடனே நின்று மறுபடியும், வெளிப்பட்டு இப்படியாகவே வெளியாகும். உட்கார்ந்தவுடனே மூத்திரம் வெளிவருவதில்லை. சற்று நேரங்கழித்து கடுமையான எரிச்சலுடன் சில சொட்டுகள் வெளியாகி பிறகு வலியில்லாமலேயே தாரையாக வெளிவரும். மூத்திரத்தில் சீழ் இருக்காது. அதற்குப் பதிலாக நுண்ணிய பூந்தசைகள் இருக்கும்.

இவ்வௌஷதம் பல்ஸடில்லா வர்க்கத்தைச் சேர்ந்ததாயிருப்பதினால் அனேக விதங்களில் ஒற்றுமைகள் இருக்கின்றன. உதாரணமாக பல்வலி இரவில் படுத்துக் கொள்ளும்போது அதிகமாகியும் குளிர்ச்சியினால் சமனமாகியும் இருக்கும் குறி இவ்விரண்டிலும் காணப்படும். பற்கள் மிகவும் நீளமாக இருக்கும் உணர்ச்சி. விரைகளில் அழர்ச்சி (பல்ஸடில்லாவை உபயோகித்த பிறகு இதைக் கொடுக்கவேண்டும்) பல்ஸடில்லாவில் வீக்கம் கருஞ் சிவப்

பாக இருக்கும். இவ்வெளஷதத்தில் விரை பந்துபோன்று கடினமாக இருக்கும்.

மனம்: தனியே இருக்க பயம். சொந்த ஊருக்குப் போகவேண்டுமென்ற ஆசை, அதே நினைவாக இருத்தலும் அதனால் உபாதிகளும். வருத்தம். குறைவான ஞாபகசக்தி.

தலை: பொட்டுகளில் குடையும் வலிகள்.

பற்கள்: குளிர்ந்த தண்ணீர், குளிர்ந்த காற்று முதலியவைகளால் சமனப்படும் பல்வலி. இரவிலும் படுக்கும்போதும் புகையிலை உபயோகிப்பதினாலும் அதிகமாகும். பற்கள் மிகவும் நீண்டிருப்பது போலிருத்தல்.

நரம்புகளும் கேபிகளும்: பல இடங்களிலும் நரம்பு சம்பந்தமான வலிகள். சருமமும் தசைகளும் தளர்ச்சியடைதல். கோளங்களில் சூடும் வலியுமுள்ள வீக்கம்.

அடிவயிறு: அடிவயிற்றுக்கும் தொடைகளுக்கும் இடைப் பாகத்திலுள்ள கோளங்களில் வீக்கமும் கடினமாவதும். குதிக்கும் வலி, அசைவினால் அதிகமாகுதல்.

மூத்திரம்: மூத்திரம் கழித்த பிறகு சிறிது நேரத்திற்கு மூத்திரத் துவாரத்தில் பிடிப்புவலிகள். அடிக்கடியும் ஆனால் குறைவாகவும் மூத்திரம் வெளியாகுதல். ஆரம்பத்தில் எரிச்சல், சொட்டுசொட்டாக வெளிவருதல், பிறகு எரிச்சலில்லாமல் தாரையாக வெளியாகுதல். மூத்திரம் வெளிவருமுன்பும் பிறகு வெளிவரும் சமயத்திலும் எரிச்சல். கெட்டியான சீழ் வெளிப்படுதல்.

ஆண்: சுருக்கம். புணர்ச்சியில் குறைந்த ஆசை. வலது இந்திரிய நரம்புகளில் வலி. விரை இழுத்தல்.

காயம்பட்ட உணர்ச்சியுடன் விரைகள் கடினமாகுதல். பீஜத்தின் வலப்பாகம் வீங்கிக்கொள்ளுதல். விரைகள் தளர்ந்தும் தொங்கிக்கொண்டும் இருத்தல். பகலில் தாளுகவே ஆண்குறி விரைத்தல். பலவந்தமாக உள்ளுக்கு அமுக்கப்பட்ட வெட்டை நோயினுல் ஏற்படும் விரை அழர்ச்சி.

கை, கால்கள்: பலவீனம், கனம், களைப்பு, காயமிருக்கும் உணர்ச்சி. அமுக்கப்பட்ட வெட்டை நோயால் ஏற்பட்ட வாதரோகம். விரல் மூட்டுகளில் வீக்கம்.

சருமம்: சொறிசிரங்குகள் சுக்கிலபட்சத்தில் (வளர்பிறை) அழர்ச்சியுடனிருப்பது போலவும் கிருஷ்ண பட்சத்தில் (தேய் பிறை) காய்ந்திருப்பது போலவும் தோன்றுதல். பிடறிக்கழுத்து, கைகள், முதலிய இடங்களில் அகோரமான அரிப்புடன் ஈரம் கசிந்துகொண்டிருக்கும் கரப்பான் முதலிய படைச் சிரங்குகள். இவை படுக்கையில் சூடு, குளிர்ந்த தண்ணீர் ஸ்நானம் முதலியவைகளால் அதிகமாகுதல். தவிர அமாவாசை நாட்களிலும் அதிகமாகும்.

சுரம்: இரவில் ஏராளமான வியர்வை. ஆயினும் போர்வையை எடுக்க முடியாது.

விசேஷம்: திறந்த வெளியில் சௌகரியம். குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம், படுக்கைச்சூடு, அமாவாசை நாட்கள் நடப்பது முதலியவைகளால் உபாதிகள் அதிகம்.

உறவு: கரப்பான் சிரங்கில் க்ரோடன் டிக்லியம், ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன், அனகார்டியம் முதலியவைகளை ஒப்பிடவும்.

முறிவு: பிரயோனியா, காம்போரா.

க்ளோனுயின் (Glonoine)

தலை மிகவும் பெரியதாய் இருக்கும் உணர்ச்சி. தலையில் துடிப்பு. மனக்கலக்கம், தலை கனமாக இருந்தாலும் தலையணையில் சாய்த்து வைக்க முடியாது, தலையின் மேல் யாதொருவிதமான உஷ்ணத்தையும் பொறுக்க இயலாது. மூளை அலை மாதிரி நகருவது போன்ற உணர்ச்சியுடன் துடிக்கும் புடைக்கும் தலை வலி. சூரிய இடி. சூரிய உஷ்ணம், அசைவு, குனிவது, பின்புறமாக வளைவது, கீழே படுப்பது, ஈர நப்புள்ள பருவம் முதலியவைகளால் அதிகமாகும் தலை வலி. ஸ்திரீகளுக்கு மாதவிடாய் நிரந்தரமாக நிற்கும் காலத்தில் தலைக்கு இரத்தம் அதிகமாகச் செல்லும் உணர்ச்சி. தலையை அசைத்தால் தலை துண்டு துண்டாக உடைந்து போய்விடும் போன்றஉணர்ச்சி. தலையில் குல்லாயோ, தொப்பியோ, அல்லது முண்டாசோ வைக்க முடியாது. சரீரமெங்கும் துடிப்பு.

மனம்: திடீரென்று உண்டாகும் பிரக்ஞை யின்மை. உணர்ச்சியின்மை. தலையிலும் இருதயத்திலும் மாறி மாறி அதிக இரத்தத் திரட்சி ஏற்படுதல். வாயாடித்தனம், துரிதமான தெளிவற்ற யோசனைகள் செய்தல். தான் எவ்விடத்தில் இருக்கிறேமென்பது தெரியாது. அழுவார், தோள்களை குலுக்கிக்கொள்வார். தலை வலி இருப்பின் சன்னல் வழியாக வெளியே குதிக்க முயற்சிப்பார்.

தலை: பெரியதாக இருக்கும் உணர்ச்சி. மனவெழுச்சி. கிறு கிறுப்பு, மயக்கம், குனிந்தால் கண்களுக்கு முன்பாக கருப்புப் புள்ளிகள் தோன்றுதல். மேலும் அசைந்தாலும் திறந்த வெளியில் நடந்தாலும் இவ்வித கரும்புள்ளிகள் தோன்றும். பின்புறமாக இழுக்கப்பட்ட கழுத்து, சிவப்பான, சூடான தலை, முகம் பளபளப்பான அல்லது

இரத்தத் திறட்சியுடன் கூடிய கண்கள், ஆகிய இக்குறிகள் உள்ள மூளைச் சுரங்கள். கால்கள் சில்லிட்டும், சில்லிப்பான வியர்வை ஏற்படுதலும். சூடான அறைகளில் வலிப்பு அதிகமாகுதல். சூரிய இடியில் கிறு கிறுப்பு, கடும் வலி, மந்த நாடி, கஷ்ட சுவாசம், குமட்டல், மயக்கம், தலையில் தெறிப்பு, சிவந்த முகம், குத்திட்ட கண்கள், நிறைந்த நாடி, மாசு படிந்த நாக்கு விண்ணென்று தெறிக்கும் வலி, கண்களுக்கு மேற்புறத்திலும் மூக்கு, காதுகள் முதலியவைகளிலும் இருக்கும். தொண்டை அடைத்து இருத்தல். கீழிருந்து மேற்செல்லும் தலை வலி. மண்டையோட்டை அடிக்கடி தூக்குவது போலவும், அல்லது அகலமாக ஆக்குவது போன்றும் அல்லது குறுக்குவது போன்ற உணர்ச்சிகள். தலையை ஆட்டுவதற்கு மிகவும் சிரமம். பிடரித் தலை, உச்சந் தலை, பொட்டுகள், நெற்றி ஆகியவைகளில் தெரிப்பு. வலியுள்ள தலையில் இந்தத் தெரிப்பும் சேர்ந்துவிட்டால் சம்மட்டி கொண்டு அடிப்பது போல் தோன்றும். நெற்றியிலும் பொட்டுகளிலும் இருக்கும் தெரிப்பு வலி கை கால்களுக்கும் பரவுதல். மூளை பெரியதாக இருக்கும் உணர்ச்சி, வெடித்துவிடும் போன்று தோன்றுதல், மார்பிலிருந்தோ வயிற்றிலிருந்தோ இரத்தத்தை மேற்புறமாகப் பாய்ச்சுவது போன்ற தோற்றம். இதனால் சிற்சில சமயங்களில் மயக்கமேற்படும். கைகளால் தலையைத் தாங்கிக் கொள்ளுதல். தலைகீழாகத் தொங்கவிட்டிருப்பது போன்ற உணர்ச்சி. அரைப் பார்வை. அதிக மூத்திரம் பிரிதல், கை கால்களில் குளிர்ந்த வியர்வை முதலியவைகளுடன் கூடிய தலை வலி. சிவந்த முகம், வேகமாகச் செல்லும் நாடி, முகத்தில் வியர்வை, மயக்கம் ஆகியவற்றுடன் உள்ள தலை வலி, திறந்தவெளி, தூங்கினபிறகு வாயாலெடுப்பு முதலியவைகளினால் சமனப்படுதல். தலை வலி அசைவினாலும் ஆட்டத்தினாலும் முன் பக்கமாகக் குனிவதாலும்

அதிகமாகுதல். தலையில் தொப்பி முதலியவைகளை வைக்க முடியாமை. இவ்வௌஷதத்தில் தலை வலி மாத்திரம் குளிர்ச்சியான தண்ணீரினுல் சமனமாகும். உபாதிகள் காலை 6 மணியிலிருந்து உச்சிப்பொழுது வரை அதிகமாகும்.

கண்கள் : கண்களின் கருமணிகள் அகன்ருே அல்லது குறுகியோ இருத்தல். வலிப்புகளிலும் சூரிய இடியிலும் கண்கள் மேல் நோக்கித் திரும்பியும், மேலாகவும் வெளிப்புறமாகவும் உருட்டிக்கொண்டும் இருக்கும். கண்கள் குத்திட்டும், வெளியில் பிதுங்கியும் சிவப்பாகவும் இருக்கும். கண்ணிமைகள் காய்ந்தும் கண்விழிகள் ஒட்டிக்கொண்டும் இருக்கும்.

காதுகள் : கிண் கிண்ணென்ற ஒலிப்பு. காது கேளாமை.

முகம் : இரத்தம் சுரந்திருத்தல். தலைவலியினுல் சூடாயிருத்தல். முகம் மாறி மாறி இரத்தம் சுரந்தும் வெளுத்தும் இருத்தல். முகத்தில் வியர்வை. நரம்புவலி, தெறிப்புவலி தலைவழியாகப் பரவுதல்.

பற்கள் : தெறிப்புவலி. சொத்தை விழுதல். பற்கள் நீண்டிருக்கும் உணர்ச்சி. நாக்கு காய்ந்தும் கசப்பு ருசியுடனும் இருக்கும். வாய் உலர்ந்திருந்தாலும் அதிக தாகம் இருக்காது. வாயில் நுரை. தொண்டை காய்ந்தும் குறுகியும் இருத்தல்.

மூத்திரம் : சிவப்புக் கலந்த மஞ்சள் நிறம். ஏராளமான மூத்திரம் அடிக்கடி பிரிதல். பிரியும்போது எரிச்சல். அடியில் சிவப்பான மாசு படிதல்.

15

பேண் : மாதவிடாய்க்குப் பதிலாக தெறிக்கும் தலை வலி, இரத்தத் திறட்சி, வெளுத்த முகம், குளிர்ச்சியான காற்றில் நடந்தால், சமனம். வயிற்றுப்போக்கு, மயக்கம் மாதவிடாய் நிரந்தரமாக நிற்கும் பருவத்தில் மாதவிடாய் திடீரென்று அமுக்கப்படுவதால் ஏற்படும் உஷ்ண உணர்ச்சி, தலையில் கனம், குமட்டல், உணர்ச்சிக் குறைவு, கிறுகிறுப்பு கால்வீக்கம். பிரசவத்தில் ஏற்படும் வலிப்புகளில் முகம் சிவந்தும், நாடி நிறைந்தும் கடினமாகவும், மூர்ச்சை, வாயில் நுரை முதலியவைகளும் இருக்கும்.

இருதயம் : அடிக்கடி ஆழ்ந்து சுவாசித்தல். சுவாசம் கனமாகவும் மிக்க சிரமத்துடனும் இருத்தல். குறட்டையுட னும் பாரமான உணர்ச்சியுடனும் கூடிய சுவாசம். துரிதமான நாடி. இருதயத்திற்கு இரத்தம் வேகமாகச் சென்று அத னால் இடது மார்பில் உஷ்ணமும் கொதிக்கும் உணர்ச்சியும் ஏற்படுதல். இருதயம் இறுக்கப்பட்டது போன்ற உணர்ச்சி. கடுமையான வலிகள், துடிப்பு. சரீரம் முழுவதுமே துடிப்பு, இத்துடிப்பு சூடான அறையில் அதிகமாகும். முகத்தில் உஷ்ணத்துடனும் விரல்களின் நுனியில் நாடித்துடிப்புடனும் கூடிய இருதயத் துடிப்பு. இடதுபக்கமாகப் படுக்கும் போது இருதயத்தில் "பர்ர்" என்ற ஓசை. விட்டுவிட்டு அடிக்கும் நாடி, தலையை உயரமாக வைத்துக்கொள்ளுதல். வலதுபக்கமாகப் படுத்தால் சமனம். நாடி ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருக்கும். தலைவலியின்போதும் நடக் கும்போதும் நாடி ஏறும். சூரிய ஒடியில் இறங்கிவிடும்.

கழுத்து, முதுகு : பின் கழுத்து விரைப்பாகவும் தலை வலியுடன் வீங்கியும் இருக்கும். முதுகினடியில் சூடான உணர்ச்சி. கழுத்தில் கெண்டையேறுதல்.

கை, கால்கள் : கைகளில் இரத்த ஓட்டம் தடைப் பட்டது போன்ற கனமான உணர்ச்சி. மறமறப்பு, இடது கையில் முக்கியமாக. இடது கைவிரல்களில் வாத வலி. விரல்களிலேயே நாடி பார்க்க முடியும். முழங்கால் பல வீனம், இடது துடையில் மறந்த உணர்ச்சி. இடது முழங் காலில் குத்தும் வலி, அசைவதினாலும் கால்களை நன்றாக நீட்டுவதினாலும் சௌகரியம். குளிர்ந்த கால்கள், துடிப்பு.

நரம்புகளும், கேபிகளும் : களைப்பு. கைகால்களில் அமைதியின்மை, எழுந்திருந்து நடக்க வேண்டிவருதல். இரத்தத்திறட்சி, காக்கைவலிப்பு, மூளையில் இரத்தத்திறட்சி குறைவான அல்லது அமுக்கப்பட்ட மாதவிடாய், இறுக மூடிய கைகள், சிவந்த முகம், கண்கள் மேல்புறமாக சுற்றப் படுதல், பிறகு மயக்கம், முகம் சிவப்பாகவும் வெளுப்பா கவும் அடிக்கடி மாறிக்கொண்டே இருத்தல். அசுத்த இரத்தக்குழாய்கள் பருத்தல்.

தூக்கம் : அமைதியற்ற அல்லது மயக்கமுள்ள தூக்கம். கொஞ்சமாகத் தூங்குவதால் உபாதிகள் அதிக மாகும். அதிகநேரம் தூங்கினால் சமனமாகும்.

விசேஷம் : சூரியன், நெருப்பு, அதிர்ச்சி, குனிதல், தலைமயிரைக் கத்திரித்துக்கொள்வது, கீழே படுப்பது, காலை 6 மணியிலிருந்து உச்சிப்பொழுதுவரை, முதலியவைகளால் உபாதிகள் அதிகமாகும்.

ஒப்பிடுதல் : குறட்டை, சுவாசம், மயக்கம், சூடான தலை, குளிர்ச்சியான கால்கள், குளிர்ந்த வியர்வை, பளபளப் பான சருமம் முதலியவை க்ளோனையினின் விசேஷ குறிகள். ஓபியம் இதை ஒத்திருக்கிறதென்றாலும் ஓபியத் தில் குளிர்ந்த வியர்வை இல்லை, ஆனால் உஷ்ணமான

வியர்வை, கீழ்த்தாடை தொங்குதல் முதலியவை இருக்கின்றன. பெல்லடோன்னாத் தலைக்குறிகள் இவ் வௌஷதத்தில் இருக்கிறதென்றாலும் பெல்லடோன்னாவை விட அதிகமான இருதயத் தொந்திரவுகள் இவ்வௌஷதத்தில் இருக்கின்றன. க்ளோனாயின் தலைவலி தலையை மூடுவதினாலும் பின்புறமாக வளைப்பதினாலும் அதிகமாகும். பெல்லடோன்னாத் தலைவலியோ மேற்கண்டபடி செய்தால் சமனமாகும்.

க்ரிடேஜஸ் (Crataegus)

இவ்வௌஷதம் தாய்த் திராவகமாகவே உபயோகிக்கப்படுகிறது. இது ஒரு பெரிய இருதய ஔஷதமாகும். இருதய உபாதிகள். இருதயத்தசைக் கதவுகளில் முறுமுறுத்த சப்தம். இருதயத்தில் கொழுப்பு. ஒழுங்கற்ற நாடி. இவ்வௌஷதத்தை அதிகமாகக்கொடுத்தால் பேதி மருந்து போன்றே வேலைசெய்யும். இருதயத்திலும் இடது கழுத்துப்பட்டை எலும்பிலும் வலி. வயிற்றுப்போக்கு, மஞ்சள் நிறமான மலம் பீச்சாங்குழாயிலிருந்து பீச்சுவது போல் வேகமாக வெளியாகுதல், சாப்பிட்டவுடனும் குடித்தவுடனும் அதிகமாகுதல். மலம் போவதற்கு முன் வலியும் களகவென்ற ஒலியும். சிவப்பான சொறி சிரங்குகள், தண்ணீர் அல்லது காற்றுப் பட்டால் எரிதல். கஷ்ட சுவாசம், வேலைசெய்தால் இன்னும் அதிகமாகுதல், மெள்ளச் செல்லும் நாடி. அறையில் இருக்கும் காற்று போதாது என்று நினைத்துக்கொண்டு சன்னலோரமாக காற்றுக்காக நிற்பார். உபாதிகள் சூடான அறைகளில் அதிகமாகியும், சுத்தக் காற்று, இளைப்பாறுதல், முதலியவைகளால் சமனமாகியும் இருக்கும்.

க்ரிண்டிலியா ரோபஸ்டா
(Grindelia Robusta)

தூங்க ஆரம்பித்தவுடன் சுவாசம் நின்றுவிடுதல், அதனுல் சுவாசத் தடுமாற்றத்துடன் விழித்துக்கொள்ளுதல். திடுக்கென்று விழித்துக்கொண்டு மூச்சுத் திணறுவார்.

காசவியாதி: கீழே படுக்கமுடியாது, ஏராளமான பிசுக்கென்றிருக்கும் கப வெளியேற்றத்தினுல் சற்று சமனமாகும். கண் விழிகளில் வலி.

இவ்வௌஷதத்தையும் தாய்த் திராவகமாகவே உபயோகிக்க வேண்டும்.

க்ரீஸோட் (Kreosote)

நாடித்துடிப்பு, சிறு காயங்களிலிருந்து இரத்தம் பெருகுதல், எரிச்சலும் பட்ட இடங்களில் புண்ணையுண்டாக்கும் குணமுமுள்ள பதார்த்தங்கள் வெளியேற்றம். சிறு காயங்களிலிருந்தும் அதிக இரத்தம் வெளியேறுதல். பற்கள் வரிசையாக இல்லாமலும் சொத்தை விழுந்தும் இருக்கும். சொத்தைப் பற்களில் வலி. கீழே படுத்திருக்கும்போது மாதவிடாய் வெளியாகுதல். கால்களில் மிகுந்த பலவீனத்துடன் துணியை மஞ்சள் நிறமாக்கும் குணமுள்ள மஞ்சளான வெள்ளைப்பாடு. மாதவிடாய் அதி சீக்கிரமாகவும் ஏராளமாகவும் அதிக நாட்கள் நீடித்தும் இருத்தல். மாதவிடாய்க்குப் பிறகு, புண் ஏற்படுத்தும் வெள்ளை ஆரம்பமாகுதல். கருப்பமாயிருக்கும் போது வாயாலெடுப்பு. மூத்திரம் விடும்போது எரிச்சல். ஸ்திரீகளின் ஜனனேந்திரியங்களில் எரிச்சல், அரிப்பு, பிடுங்குதல். யோனியில் கிரந்திப் புண்கள். வயிற்றில்வலி, தாகம்

முதலியவைகளுடன் கூடிய குழந்தைகளின் வாயாலெடுப்பு. குறைவான வளர்ச்சியும் சோஞ்சலாகவும் இருக்கும் குழந்தைகளுக்கு பால் தொந்திரவுகளால் ஏராளமான வாயாலெடுப்பு. நாற்றமுள்ள மலம் முதலியவைகளுள்ள விஷபேதி. சூடான கரித்துண்டுபோன்ற மார்பில் கடுமையானஎரிச்சலுள்ள கபவாத சுரம் அல்லது க்ஷயம். சுவாச கோசங்கள் அழுகுதல், இரத்தக் கலப்புள்ள கபம். க்ஷய ரோகத்தில் சுவாசகோசங்களில் குழிகள் உண்டாவதற்கு முன் இது உபயோகமாகும். உயரமான மெலிந்த சரீரம், கிழடு தட்டியுள்ள முகம், சுருங்கிய சருமம் முதலியவைகளுள்ள சிறுவர்கள்.

மனம்: சங்கீதம் கேட்பதால் அழுகையும் நெஞ்சிடிப்பும் வருதல்.

தலை: மாதவிடாய் நாட்களில் பிடரித்தலையில் வலி. நெற்றியைக் கீழாக அமுக்குவது போன்ற உணர்ச்சி. தூக்கமின்மையுடன் நெற்றியில் இழுக்கும், குதிக்கும், வெட்டும் வலிகள்.

காதுகள்: காதுகேளாமை. மாதவிடாய்க்கு முன்பும் பிறகும் குடைதல்.

மூக்கு: காரமான சளி, நீர். மூக்கிலிருந்து மெல்லிய பிரகாசமான சிவப்பு இரத்தம். கிழவர்களுடைய நாட்பட்ட மண்டைச்சளி.

முகம்: வியாதியுற்றும் கஷ்டத்தை அனுபவிக்கும் தோற்றம். குழந்தைகள் கிழவர்களைப் போன்று தோன்றுதல். கீழ் உதட்டில் பயறுபோன்ற சினைப்பு. முகத்தில் எரிச்சல், அசைவதினாலும் பேசுவதாலும் அதிகமாகி;

வியாதி இல்லாத பக்கத்தில் படுப்பதினால் சமனமாகியும் இருக்கும்.

வாய்: அழுகிய பற்களிலிருந்து துர்நாற்றம் வீசுதல். ஈறுகளிலிருந்து மிகச் சுலபமாக இரத்தம் வெளியாகுதல்.

பற்கள்: பல்வலி பொட்டுகளுக்கும் காதுகளுக்கும் பரவுதல். பற்கள் வெகு சீக்கிரமாகசொத்தையாகுதல். ஊத்தை படிந்த பற்கள். கறுப்பாகவும் உடையும் தன்மையுமுள்ள பற்கள். இது முக்கியமாகக் குழந்தைகளுக்கு.

வயிறு: தண்ணீர் கசப்பு ருசியாக இருத்தல். குளிர்ந்த ஆகாரம் உட்கொள்ளுவதால் அதிகரித்து, சூடான ஆகாரம் உட்கொள்ளுவதால் சமனப்படும். கருப்பமாயிருக்கும்போது குமட்டல், மிகவும் புளித்த காரமான வாயாலெடுப்பு. சாப்பிட்ட இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கெல்லாம் உட்கொள்ளப்பட்ட ஆகாரம் சீரணமாகாமலேயே வாயாலெடுக்கப்படும். க்ஷயரோகத்தில் வாயாலெடுப்பு. வயிற்றைத் தவிர மற்ற அவயவங்களில் ஏற்பட்ட உபாதிகளினால் ஏற்படும் வாயாலெடுப்பு. சில சமயங்களில் ஒரு வாரத்திற்கு முன் உட்கொள்ளப்பட்ட ஆகாரமும் சீரணமாகாமல் வாயாலெடுக்கப்படும். சாப்பிட்ட பிறகு எரிச்சல், உடனே வாயாலெடுப்பு.

மலம்: கோடைக்காலத்தில் சிசுக்களுக்கு உண்டாகும் வயிற்றுப்போக்கு. பல்முளைக்குங் காலத்தே தோன்றும் வயிற்றுப்போக்கும் சொத்தைப் பற்களுடன் விஷேபேதி. டைபாய்டு சுரத்திற்கு பிறகு குடல்களிலிருந்து இரத்தப் பெருக்கு. மலம் தண்ணீர் போன்றும் அழுகியும், சீரணமாகாமலும் அதிக நாற்றத்துடனும் இருத்தல். குமட்டல், வாயாலெடுப்பு முதலியவைகளுடன் வயிற்றுக் கடுப்பு. மலம் மிக்க சிரமத்துடனும் எரிச்சலுடனும் கழிக்கப் படுதல்.

மூத்திரம்: வெளுத்த அல்லது இரத்தம் போன்ற ஏராளமான மூத்திரம். தித்திப்புள்ள மதுமேகம். மூத்திரம் விட எண்ணியவுடன் அதைக் கழிப்பதற்கு மிக வேகமாக ஓட வேண்டி வருதல், அவ்வளவு அதிகமான தூண்டுதல். படுத்திருந்தால் தான் மூத்திரம் கழிக்க முடியும். ஏராளமான மூத்திரம். இரவில் படுக்கை நனைந்து விடுதல். அப்பொழுது விழித்துக் கொண்டாலும் அடக்கிக்கொள்ள முடியாது. தான் மூத்திரம் கழிப்பதாகக் கனவு காணுதல்.

பேண்: யோனித்துவார தனியில் எரிச்சலுடன் அரிப்பு. யோனியின் கழுத்தில் குழிப்புண்கள். யோனியில் சதை வளருதல். சீக்கிரமாக வந்துகொண்டும் ஏராளமாயும் அதிக நாட்கள் நீடித்திருக்கும் மாதவிடாய். யோனி உதடுகளுக்கும் தொடைக்கும் இடையேயுள்ள பாகத்தில் வலி. காரமும் எரிச்சலுமுள்ள போக்கு. போக்கு விட்டுவிட்டு வெளியாகுதல். யோனியிலும் யோனி உதடுகளிலும் எரிச்சல், வீக்கம். மாதவிடாயின்போது காதுகேளாமை, காதுகளில் குடைதல். பிரசவத்திற்குப் பிறகு வரும் நீர் விட்டு விட்டு வெளியேறுதல். மாதவிடாய்களின் இடைக் காலத்தில் கால்களில் பலவீனத்துடன் பட்ட இடங்களில் புண்ணையுண்டாக்கும் மஞ்சள் நிறம் உள்ள வெள்ளைப்பாடு. புணர்ச்சியில் மிகவும் கஷ்டப்படுதல். மறுநாள் இரத்தப் பெருக் கேற்படுதல், புணர்ச்சிக்குப் பிறகு எரிச்சல். கருப்ப காலத்தில் வாயாலெடுப்பு. ஸ்தனங்களிலும் கருப்பையிலும் எரிச்சலுள்ள புற்றுகள். மாதவிடாய்க்குப் பிறகு அதிகமாகும் கருப்பை வலியும் உபாதிகளும்.

சுவாசாசயங்கள்: குறுகிய சுவாசம், தொண்டையில் சதை வளரும் நோய், (Diphtheria) வாயிலிருந்து துர்

நாற்ற மடித்தல், உணவை வாயாலெடுத்தல், கோளங்கள் பருத்தல். தொண்டையில் ஏதோ ஊரும் உணர்ச்சியுடன் மாலையில் வரண்ட 'விஸ்ஸ்' என்ற சப்தத்துடன் கூடிய இருமல். காலையில் வரண்ட இடைவிடாமல் வரும் இருமல், மூத்திரம் வெளியாகுதல். வெளிவரும் கோழை முதலியவை ஏராளமாகவும் நாற்றமாகவும் கெட்டியாகவும் வெண்மை அல்லது மஞ்சள் நிறமாயும் இரத்தம் கலந்தும் தித்திப்பாகவும் இருக்கும். இருதயத்திற்குச் சற்று மேலாக இடது மார்பில் பிடிப்பு வலிகள். நடு மார்பில் கனத்த உணர்ச்சி. குளிர் காலத்தில் கிழவர்களுக்கு ஏற்படும் நாற்றமுள்ள இருமல். தொண்டைக் குழியில் வலி, கொர கொரப்பு.

மார்பு: பழுக்கக் காய்ந்த இரும்பு போன்று மார்பில் எரிச்சல். பிடிப்பு வலிகள் அமுக்குவதினால் சௌகரியமடையும். சுவாசகோசங்கள் அழுகுதல்.

கை, கால்கள்: இடது கைக் கட்டை விரலில் சுளுக்கேற்பட்டதுபோல் வலியும் விரைப்பும்.

தூக்கம்: இரவில் அங்கு மிங்கும் புரண்டுகொண்டேயிருத்தல். தூக்கத்தில் திடுக்கென்று எழுந்திருத்தல். முனகுதல்.

விசேஷம்: குளிர்ந்த காற்று, திறந்தவெளி, இளைப்பாறுதல், கீழே படுப்பது, மாதவிடாய்க்குப் பின், இவைகளால் உபாதிகள் அதிகரிக்கும். சூடு, அசைவு, சூடான ஆகாரம் முதலியவைகளினால் உபாதிகள் சமனம்.

உறவு: இதற்குப் பிறகு ஸல்பர் உபயோகிக்கப்படலாம்.

முறிவு: நக்ஸ்வாமிகா.

க்ரோகஸ் ஸடிவா (Crocus Sativa)

சரீரத்தின் பல பாகங்களிலிருந்தும் ஏற்படும் இரத்தப் பெருக்குகளுக்கு இதுவுமோர் நல்ல ஔஷதமாகும். வெளியாகும் இரத்தம் கறுப்பாகவும் கட்டிதட்டியும் வெளியாகும் இடத்திலிருந்து நீளமான கறுப்புக் கயிறுகள் போன்று தொங்கிக்கொண்டும் இருக்கும். இம்மாதிரி இரத்தம் சரீரத்தின் எந்தப் பாகத்திலிருந்து வந்தாலும் சரி, க்ரோகஸ் கொடுக்கப்படலாம்.

சங்காதோஷத்தில் அடிக்கடி மனக் குறிகள் மாறிக் கொண்டே இருக்கும் வியாதியஸ்தர்களுக்கு இது கொடுக்கப்படவேண்டும். அதாவது வியாதியஸ்தர் ஒரு சமயம் சந்தோஷமாகவும் மறு சமயம் வருத்தமாகவும் இப்படியே மாறிய மனக் குறிகளுடன் இருப்பார். சந்தோஷமாயிருக்கும் சமயத்தில் ஆடியும் பாடியும் குதித்துக் கொண்டும் சிரித்துக்கொண்டும் எல்லோரையும் முத்தமிட்டுக் கொண்டும் இருப்பார். வருத்தமாயிருக்கும் சமயத்தில் அதிக கோபமும் தன் சிநேகிதர்களைத் திட்டும் குணமும் ஏற்படும். இவ்விஷயத்தில் அகோனைட், இக்னேஷியா, நக்ஸ் மாஸ்சாட்டா முதலியவைகளுடன் இவ்வௌஷதம் ஒத்திருக்கிறதாயினும் ஒரு விசேஷமான குறி க்ரோகஸில் மாத்திரம் இடைவிடாமல் தென்படும். அதாவது வயிறு, அடி வயிறு, கருப்பை, அல்லது மார்பு முதலிய இடங்களில் ஏதோ குதிப்பது போன்ற உணர்ச்சி இருக்கும்.

நாட்பட்ட உபாதிகளுக்கு க்ரோகஸ் ஒரு நல்ல ஔஷதம். ஒரு சில தசைகளில் மாத்திரம் முறுக்குதல், முக்கியமாகக் கண் இமைகளில், இம்மாதிரி முறுக்குதல்கள் சங்காதோஷத்தில் வெகு சகஜமே. இதற்குப் பல ஔஷதங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த ஒரு குறியை மாத்

திரம் வைத்துக்கொண்டு க்ரோகஸ் கொடுப்பது புத்தியின மாகும்.

க்ரோட்டன் டிக்லியம்
(Croton Tiglium)

அடிவயிறு நிறைந்தும் வெளித்திருத்தியும் இத்துடன் தொப்பூழைச் சுற்றி வலியும். இடது பக்கத்தில் குடைத லும் களகளவென்ற ஒலியும். தொப்பூழைச் சுற்றிலுமிருக் கும் பிடிப்பு வலி சூடான பால் உட்கொள்ளுவதால் சமனம் ஆகும். வலது கண்ணின் குழியில் விண் விண்ணென்று தெரிக்கும் வலி. மஞ்சள், லேசான பழுப்பு, கரும் பச்சை அல்லது பசுமை கலந்த மஞ்சள் நிறமுள்ள மலம், தண்ணீர் போன்றும் வெள்ளைச் சீதகக் கட்டிகளுடனும் வலியில்லா மல் வெளியாகும். பீச்சாங்குழாயிலிருந்து பீச்சப்படுவது போன்று வேகமாக மலம் வெளிவரும். இது சாப்பிட்ட பிறகும் பானங்கள் அருந்திய பின்பும் கோடைக் காலங்களி லும் அதிகமாகும். தொப்பூழில் அமுக்கினுல் வலியும், இவ்வலி அபானத்திற்குச் செல்லுவதால் அபானம் வெளி வருதலும். அபானத்தில் எரிச்சல்.

சுவாசாசயம்: மார்பின் இரு பக்கங்களிலும் நிறைந்த உணர்ச்சி. தன் சுவாசாசயங்களை அகலமாகச் செய்ய முடி யாதென்று நினைத்தல். இடது மார்பு வழியாக முதுகுக்கு அல்லது தோள் பட்டைக்குச் செல்லும் இழுக்கும் வலி.

கருப்பம்: ஸ்தனக் காம்புகளில் வலி, குழந்தை தாய்ப் பால் உட்கொள்ளும்போது ஸ்தனக் காம்புகளி லிருந்து தோள்பட்டை வரை வதைக்கும் வலி.

சருமம்: பீஜங்களுக்கு நேராக இருக்கும் இடது தொடைப்பாகத்தில் கசகசப்பும் சிவப்பு நிறமும் ஏற்பட்டு மிக்க வலியுள்ளதாயும் தொட்டாலும் நடந்தாலும் வலி அதிகமாகிக் கொண்டும் இருக்கும். ஜனனேந்திரியங்கள், பீஜம் முதலியவைகளில் கரப்பான் புண், அதிக எரிச்சல். (நெருப்பு போன்று எரிச்சல் - ரஸ்டாக்ஸி கோடண்ட்ரன்; அரிப்பு, எரிச்சல், இவை இரத்த வெளியேற்றத்தினால் சௌகரியம் - பெட்ரோலியம்.) சிவந்த சருமத்துடன் அரிப்பும் வலியுள்ள எரிச்சலும். கொப்புளங்களிலும் பருக்களிலும் ஏதோ ஊருவது பொன்ற உணர்ச்சி. அரிப்புள்ள கரப்பான் புண்கள். சருமம் மடிப்பு விழுந்திருக்கும் தோற்றம்.

விசேஷம்: சாப்பிடும்போது, கோடைக் காலத்தில், அசைவினால், பழம் உட்கொண்டால், சிறிதளவு ஆகாரம் அல்லது பானங்கள் உட்கொண்டாலும், உபாதிகள் அதிகமாகும்.

க்ரோடேலஸ் ஹாரிடஸ்
(Crotalus Horridus)

நெற்றியின் மத்திய பாகத்தில் கடுமையான வலி, கண்களின் கருமணிகள் அகன்றுவிடுதல், ஏராளமான மாதவிடாய். சருமத்தில் பழுப்பு அல்லது மங்கின நீல நிறமுள்ள புள்ளிகள். இரத்தம் வியர்வைபோல் கசிந்துகொண்டிருத்தல். வியர்வையும் இரத்தமாகவே இருத்தல். சரீரத்தின் எந்தப் பாகத்திலிருந்தாவது கடுமையாக ஏற்படும் இரத்தப்பெருக்குக்கு (மூக்கு, வயிறு, மலப்பை, காதுகள், ஈறுகள் அல்லது சருமம்). டைபாய்டு சுரத்தில் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல். சரீரம் முழுவதும், கண்கள் நாக்கு முதலியவைகளும் மஞ்சளாயிருத்தல். நாட்பட்ட

பிடிவாத குணமுள்ள மஞ்சட்காமாலை. சிறிதளவு பிரயாசையினாலும் அதிகக் களைப்பேற்படுதல். சரீரம் முழுவதும் நடுக்கத்துடன் கூடிய பலவீனம். கைகால்களில் வீக்கம். கிழவர்களுக்கு அமுக்கும் உணர்ச்சியுடன் மார்பில் நீர்வீக்கம். அழர்ச்சியுள்ள நாக்கு. திறந்த கண்களுடன் மயக்கம், முனகுதல், வருத்தம், பிரசவ சுரம், கருப்பான, நாற்றமுள்ள கட்டி தட்டாத இரத்தக் கசிவு.

கந்தாரிஸ் (Cantharis)

மூத்திரப்பை அழர்ச்சி, மூத்திரக் குண்டிக்காய் அழர்ச்சி, நெருப்புச்சுட்ட புண்களுக்குப், வெந்நீர், கஞ்சி முதலியவை பட்டு வெந்துபோன புண்களுக்கும் இவ் வெளஷதத் திராவகத்தில் 10 சொட்டுகளை ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து மேலே தடவலாம். கொப்புளங்கள், எரிச்சலுள்ள வலி, முதலியவைகளுடன் கூடிய அக்கி. மூத்திரம் விடும் போது எரிச்சல், சொட்டு சொட்டாக வெளியேறுதல். அடிக்கடி மூத்திரம்விடத் தூண்டுதலுடன் கூடிய மூத்திரக் காய் வலி. நிமோனியா சுரத்தில் மேற்கண்ட மூத்திரக் குறிகளுடன் இருதயம் அல்லது வாயிலிருந்து சிவப்பான தண்ணீர்போன்ற இரத்தம் பலவீனத்தினால் வெளியாகுதல். சரீரத்தில் ஏற்படும் அழர்ச்சிகள் திடீரென்று அழுகும் நிலைமையை அடைதல். பைத்தியம் பிடித்தவர்களுக்குப் புணர்ச்சியில் அதிகமான ஆசை இருக்குமாயின் இவ்வெளஷதம் கொடுக்கப்படலாம். இளைப்பு. அபிஸ் மெல்லிபிகாவில் கொட்டும் வலிகளும் வீக்கமும் இருக்கிறது. இவ் வெளஷதத்தில் எரிச்சலும் சிவப்பு நிறமும் இருக்கிறது. வீக்கம் இல்லை. இவ்வெளஷதத்தில் அழர்ச்சியை உண்டாக்கும் வஸ்துக்கள் பெரும்பாலும் இருக்கின்றன, ஆகவே, கீழ்க் குடல்கள், மூத்திர அவயவங்கள் முதலியவைகளில்

அழற்சியை ஏற்படுத்தி, புணர்ச்சி ஆசையைக் கிளப்பி விடுகிறது. ஆர்ஸனிகத்தில் சுவாசகோசங்களில் எரிச்சல், கறுப்பான கபம், அமைதியின்மை, கவலை ஆகியவற்றுடன் உள்ள டைபாய்டு குறிகள் இருக்கின்றன. இவ்வௌஷதத்தில் சுவாசகோசங்கள் வெகு சீக்கிரத்தில் அழற்சியுற்று அழுகும் நிலைமையும் உடனே நேருகிறது. அதனால் சுவாசகோசத்தில் நெருப்புப் போன்ற எரிச்சலுடன் வியாதியஸ்தர் பிணநாற்றமுள்ள, மெல்லிய இரத்தம் தோய்ந்த கபத்தை உமிழ்வார். காபி குடிப்பதினால் அசௌகரியம்.

மனம்: திடீரென்று பிரக்ஞை இழத்தல், சிவந்த முகம். மனக் கலக்கம், எண்ணத்தை ஒரே இடத்தில் நிலை நிறுத்த இயலாமை. உக்கிரமான மயக்கம், கடுஞ்சினம் ஏற்படுதல், காம விகாரம், காமாந்தகாரமான பாட்டுகளைப் பாடுதல். கோபம் மும்முரமாயிருத்தல், அழுதல், குரைத்தல், அடித்தல். இக்குறிகள் பிரகாசமான வஸ்துக்களைப் பார்க்கும்போதும், நெஞ்சைத் தொடும்போதும் தண்ணீர் குடிக்க எத்தனிக்கும் போதும் திரும்பி வருதல். பிற்பகலில் இறுமாப்பான குணமும் அதற்கு நேரிடையாக பணிவான குணமும் மாறி வருதல். தண்ணீரைக் கண்டால் பயம், மற்றும் திரவ பதார்த்தங்களைக் கண்டாலும் பயம், பள பள வென்று பிரகாசிக்கும் வஸ்துக்களைக் கண்டாலும் பயம். கடுமையான புணர்ச்சி இச்சையுடன் கூடிய பைத்தியக் கோளாறுகள்.

தலை: பின் கழுத்திலிருந்து நெற்றிவரை தலைவலி. தலையை சீவிக்கொள்ளும்போது மயிர் உதிர்தல், மூளையினுள்ளே எரிச்சல், நடந்தாலும் கீழே படுத்தாலும் சமனமாகும்.

கண்கள் : பார்க்கும் வஸ்துக்களெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுதல். கண்களும் அவ்விதமே எரிச்சல். திறந்த வெளியில் கண்ணீர்பொழிதல், கண்களை மூடிக் கொள்ள வேண்டி வருதல், கண்ணிமைகளைத் திறந்தவுடன் ஓரங்களில் புண்ணிருப்பது போன்ற வலி. இமைகள் பச்சை மாமிசம் போலிருத்தல்.

மூக்கு : தும்மல்கள். வீக்கம், சிவந்த நிறம், எரிச்சல். மூக்கினடிப் பாகத்திலிருந்து கயிறு போன்ற சளியை வெளியே இழுத்தல்.

முகம் : வலி இருக்கும் போதும் வலி நீங்கிய பிறகும் மாலை வேளைகளிலும் முகம் சவத்தை யொத்த வெளுத்த நிறமடைதல். அதிக வீக்கமும் தடிப்பும். குனியும்போது முகத்தில் இரத்தம் சுரத்தல். அக்கி, தொட்டால் எரிச்சல். தாடை அசைக்க முடியாமலிருத்தல்.

வாய் : வரண்டிருத்தல், ஆனால் தாகமின்மை. பூந்தசைகளில் அழர்ச்சி, எரிச்சல், தண்ணீரை உபயோகித்தால் அதிகமாகும். ஏராளமான உமிழ் நீர்.

பற்கள் : தாடைத் தசைகள் சுருங்குதல். அதனால் தாடையை அசைக்க முடியாமை, பற்களை அரைத்தல்.

தொண்டை : எரிச்சல். சுருங்குதல். தொண்டையின் உட்புறத்தில் வெண்மையான குழிப்புண்கள். திரவ பதார்த்தங்களை உட்கொள்ள மிகவும் சிரமப்படுதல்.

வயிறு : தொண்டையில் எரிச்சல், வலியுடன் அதிக தாகம். ஆகாரங்களோ அல்லது மற்ற திரவ ரூபமான பதார்த்தங்களோ உட்கொண்டால் வெறுப்புடன் கூடிய தாகம். எரிச்சலுள்ள வயிறு.

அடி வயிறு: எரிச்சல், துருத்தி யிருத்தல். வலி. மலம் கழிக்கும்போது வெட்டுவது போன்ற வலி.

மலம்: மூத்திரம் விடும்போது மலம் கழிக்கப் பிரியம். இரத்தம், சீதகம் ஆகியவை வெளியாகும் வயிற்றுப் போக்கு. மூத்திரம் விட அதிக சிரமத்துடன் கூடிய வயிற்றுக் கடுப்பு. மலத்துடன் குடல்களிலிருந்து பெய்த்தது போன்று இரத்தம் கலந்த வெண்மைச் சீதகம் வெளியாகுதல். மலம் கழிந்த பிறகு எரிச்சலுள்ள கடுப்பும் உடம்பு குலுங்குதலும்.

மூத்திரம்: மூத்திர அடக்கத்தில் எரியும் வலி ஏற்படுதல். மூத்திரம் எரிச்சலுடன் இரத்தம் கலந்தும் சொட்டு சொட்டாகவும் வெளியேறும். மூத்திரக் குழாயில் எரியும், வெட்டும், இறுக்கும் வலிகள். அசைவினால் அதிகமாகி பின்புறமாக படுப்பதால் சமனமாகும். மூத்திரம் விடுவதற்கு முன்பும் பின்பும் அச்சமயத்திலும், மூத்திரக் குண்டிக்காய், மூத்திரக் குழாய், மூத்திரப்பை முதலியவைகளில் வலி, இவ்வலி அடி வயிற்றுக்கும் அக்குளுக்கும் செல்லுதல். கடுப்பு. (அபிஸ் மெல்லிபிகாவில் அதிக வீக்கமும் இவ்வௌஷதத்தில் அதிக எரிச்சலும் இருக்கும்.) அடிக்கடி தூண்டுதல். மூத்திரத்தில் இரத்தமும் வெள்ளைப் பதார்த்தமும் கலந்திருத்தல். கிழவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் மூத்திரம் விட அதிக சிரமம் இருத்தல்.

ஆண்: ஆண் குறி இடைவிடாமலும் வேகமாகவும் விரைத்திருத்தல். (இது முள்ளந்தண்டு உபாதியினாலோ அல்லது வேறு ஏதாவது வியாதியினாலாவது ஏற்பட்டதாயிருப்பின் பிக்ரிக் ஆஸிட் கொடுக்கப்படலாம்.) இரத்தக்

கலப்புள்ள இந்திரியம். விரைகள் மேற்புறம் இழுக்கப்பட்டிருத்தல். மேலே சொல்லப்பட்ட காமக் குறியுடன் கூடிய பைத்தியர். ஆண்குறியில் வலி, விறைப்பு, முதலியவைகளுடன் கூடிய மேகவெட்டை.

பெண்: எரிச்சலுடன் சினைப்பைகளிலும் கருப்பையிலும் அழற்சி ஏற்படுதல். அதிகமான காம இச்சையுடன் ஜனனேந்திரியங்களில் அரிப்பு. கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. பெண்களில் அதிக காம இச்சை. மாதவிடாய் வெகு சீக்கிரமாகவும் மிகவும் அதிகமாகவும் கறுத்த இரத்தமாகவும் இருத்தல்.

கருப்பம்: பிரசவத்திற்குப் பிறகு நஞ்சு வெளியாகமலிருத்தல். இத்துடன் மூத்திரம் விடும்போது வலியும் அனேகமாக இருக்கலாம். பிரசவ வலிப்புகள். குறைப் பிரசவம்.

சுவாசாசயம்: மார்பில் எரிச்சலும் பிடிப்பு வலியும். சுவாசாசயங்கள் அழுகுதல். நாற்றமுள்ள கபம். சுவாச கோசத்திலிருந்து வெளியாகும் பதார்த்தம் தண்ணீர் போன்று மெல்லியதாயும் இரத்தம் தோய்ந்து மிருக்கும். எரிச்சலுடன் பிசுக்கென்றிருக்கும் கோழை. ப்ளூரஸீ வியாதியில் கஷ்ட சுவாசம், வறண்ட குறைக்கும் இருமல், துடிப்பு, குறைவான மூத்திரம், ஏராளமான வியர்வை. குரல் வளையில் பலவீனத்துடன் கம்மிய குரல். மார்பில் எரிச்சல்.

இருதயம்: மயக்கம் வரும் தன்மை. இருதயத்தை சுற்றியிருக்கும் பூர்தசைப் பையில் அழற்சி. வேகமான, சிறிய, விட்டு விட்டு அடிக்கும் நாடி.

சுரம்: விட்டுவிட்டு வரும் சுரம், ஒவ்வொரு தடவை சுரம் வரும்போதும் இவ்வௌஷதத்தின் முக்கிய குறி, அதாவது மூத்திரம் விட சிரமம் இருத்தல். கைகளிலும் கால்களிலும் சில்லிப்பு. சில்லிப்பே பிரதானமா யிருத்தல். சில்லிப்பிற்குப் பிறகு தாகம். சில்லிப்பு முதுகிற்கு ஓடுதல். தாகத்துடன் சூடு, அசைந்தால் வியர்த்தல்.

கேபிகள்: ப்ளூரஸியில் அகோனேட், பிரயோனியா கொடுக்கப்பட்ட பிறகு உள் அவயவங்களில் குழிப்புண் களும் அவை தின்னப்படுதலும்; வியாதியஸ்தர் மயக்க மாகப் படுத்திருப்பார், சில சமயம் மாத்திரம் கைகளில் முறுக்குதல் காணும்.

சருமம்: சீழ்க்கொப்புளங்களும் நீர்க்கொப்புளங்களும் உண்டாகுதல், அவைகளில் அரிப்பு, எரிச்சல். கொப்பு ளங்களுள்ள அக்கி.

முறிவு: அகோனேட், காம்போரா, பல்ஸடில்லா.

விசேஷம்: சூடு, சரீரத்தைத் தேய்ப்பது, சௌகரி யம். தொடுவது, குளிர்ந்த தண்ணீர் குடிப்பது, அசௌ கரியம்.

கம்போகியா (Gambogia)

அடி வயிறு: சாப்பிட்டவுடன் வலி. கிள்ளுவது போன்ற வலி. குடைதல், கடகட வென்று அடி வயிற்றில் ஓடுதல், தொப்பூழில் வலி.

மலம்: மாலையிலும் இரவிலும் அபானவாயு பரிதல். வயிற்றுப் போக்கு. மலம் தண்ணீராகவும் குழகுழப்பாக

வும் வலியுடனும் சீரணமாகாத ஆகாரங் கொண்டதாகவும் வெளியாகும். அபானம் வெளித் தள்ளுதலும் குளிர்ந்த வியர்வையும். ஏராளமாக, தண்ணீர் போன்ற, மஞ்சள், பச்சை அல்லது மோர் போன்ற மலம். கரும் பச்சை நிற முள்ள சீதகம். தொப்பூழைச் சுற்றிலும் கடுமையான பிடிப்பு வலி, பிறகு இரத்தமுள்ள வயிற்றுக் கடுப்பு. மலம் போவதற்கு முன் வலி, பிறகு இரத்தமுள்ள வயிற்றுக் கடுப்பு. மலம் போவதற்கு முன் வலி, பிறகு சௌகரியம் அடைதல். வேகமாக மலம் வெளியாகுதல், பிறகு அபானத்தில் எரிச்சல், மலப்பை வெளிவருதல்.

கல்கேரியா அஸடிகா
(Calcarea Acetica)

இவ்வௌஷதம் கல்கேரியா கார்ப், அஸடிக் ஆஸிட் ஆகிய இரண்டு ஔஷதங்களையும் கலந்து செய்யப்பட்டதாகும். அமித இரத்த சோகையும் இளைப்பும், பலவீனமான நாடி, இரவில் வியர்த்தல். யோனியிலிருந்து பூந்தசைகள் கொண்ட பதார்த்தம் வெளியேறுதல். ப்ராங்கைல் குழாய்களை யொத்த பெரிய துண்டுகள் கபத்துடன் வெளியாகுதல். மலப்பையில் அரிப்பு. வலது பொட்டில் இழுக்கும் வலி. ஒவ்வொரு நாட் காலையிலும் வியர்த்தல்.

கல்கேரியா ஆர்ஸனிக்
(Calcarea Arsenic)

இது ஆழ்ந்து வேலை செய்யக் கூடியதோர் ஔஷதமாகும். காலரா என்னும் விஷபேதியில் சரீரத்தில் நீர் குறைவதனல் இரத்த ஓட்டம் தடைப்படுவதற்கும், இரத்தம் கட்டி தட்டுவதால் இருதயத்தில் வலி ஏற்படுவதற்கும் உபயோகமாகும். குழந்தைகளில், ஈரல், குலைக்

கட்டிகளில் இவ்வௌஷதம் உபயோகப்படுவதற்கு குழந்தையின் உடம்பு கல்கேரியாவின் உடம்பையும் குறிகள் ஆர்ஸனிகத்தின் குறிகளையும் ஒத்ததா யிருக்கவேண்டும். விளங்கச் சொல்லுமிடத்து குழந்தையின் உடம்பு அதைத்தும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரும் மந்தமான அதிக நாழிகை நிற்கும் சுரர், தாகம், ஆனல் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் குடித்தல், சுரம் நள்ளிரவு அல்லது நடுப்பகலில் அதிகமாகுதல், முதலிய குறிகள் இருந்தால் தான் இவ்வௌஷதம் கொடுக்கலாம். தலைக்கோ இருதயத்துக்கோ அபரிமிதமாக இரத்தம் பாய்வதுடன் கூடிய காக்கை வலிப்புகள், குளிர்காற்று வீசும் உணர்ச்சி இருதயத்திலிருந்து ஆரம்பித்தல். மனமும் சரீரமும் பலவீனமடைதல். உள்ளூர நடுக்கலுடன் கூடிய பலவீனம். சரீரம் காற்றுப்போல் லேசாக இருக்கும் உணர்ச்சி. மூத்திரக்காய்ப் பக்கங்களில் அழுக்கினல் வலியேற்படுவதுடன் கூடிய மூத்திரக்காய் அழர்ச்சி. எப்பொழுதும் சில்லிப்பாக இருக்கும் உணர்ச்சி.

மனம்: கோபம், மாலையில் கவலை, ஏக்கம். வருங்காலத்தைப்பற்றி பயம். பிறர் தனக்குத் துணையாக இருக்க விரும்புதல். இறந்த மனிதர்களைப் பார்ப்பது போன்ற பிரமை. கண்களை மூடியவுடன் நெருப்புப் பிடித்தெரியும் காட்சிகள் தோன்றுதல். தனக்கு மோக்ஷம் கிடைக்காதென்று பிரலாபித்தல். பைத்தியம், தீர்மான மின்மை, வாழ்க்கையில் வெறுப்பு. ஞாபக மறதி, பிடிவாத குணம்.

தலை: தலையில் அதிவேகமாக இரத்தம் பாய்தலும் கிறுகிறுப்பும், வலிப்புகளும். வலியுள்ள இடத்தைக் கீழே வைத்துப் படுத்தால் வலி சமனமாகுதல். படுத்துக்கொண்டிருக்கும் பக்கத்திலிருந்து தலைவலி ஆரம்பமாகி மறுபக்கத்திற்குச் செல்லுதல்.

வயிறு: சாப்பிட விருப்பம் இல்லை, ஆனால் கடுந் தாகம். குளிர்ந்த ஆகாரங்களோ அல்லது பாலோ ஒத்துக் கொள்ளாமை. குளிர்ந்த தண்ணீர் உட்கொண்ட பிறகு வயிற்றில் வலி காணுதல், வயிற்றில் குழிப்புண்கள்.

மூத்திரம்: வெண்மையான வஸ்துக்கள் கலந்திருத்தல். மூத்திரக்காய்ப் பக்கங்களில் அமுக்கினால் வலி. மூத்திரக்காய் அழற்சி, சுரம், இரத்தமயமான மூத்திரம், கொஞ்சமாக வெளியாகுதல். அதிக தாகம், வாயாலெடுப்பு, கறுத்த, நீர்போன்ற மலம்.

பெண்: மஞ்சள் நிறமும் காரமும் உள்ள வெள்ளைப்பாடு. எரிச்சலும் நாற்றமுமுள்ள இரத்தமயமான பெருக்குகளுடன் கூடிய கருப்பைப் புற்றுகள். அடிக்கடி மாதவிடாய்.

இருதயம்: இரவில் படுக்கையில் மூச்சுத்திணறுதலும் துடிப்பும், இருதய உபாதிகளும். இறுகப் பிடிக்கும் உணர்ச்சி.

சுரம்: நாட்பட்ட மலேரியா சுரம்.

தூக்கம்: பயங்கரமான கனவுகள். பின்னிரவில் தூக்கமின்மை.

கல்கேரியா ஐயோடைடு
(Calcarea Iodide)

அதைப்பான சரீரமுள்ளவர்களில் கீழ்த்தாடைக் கோளங்களோ அல்லது உமிழ்நீர்க் கோளங்களோ அழற்சியடைதல். கருப்பையிலும் ஸ்தனங்களிலும் கட்டிகள் தோன்றுதல், கோளங்கள் கடுமையான துள்ளும் வலியுடன்

இருத்தல். டான்ஸில்கள் பருத்தல். உள்நாக்கு வளர்ச்சி. இரவுகளில், அடிக்கடி இருமல், பச்சையான சீழுள்ள கோழை, முதலியவைகளுடன் கூடிய க்ஷயரோகம். நிண நீர்க்கோளங்கள் பெருத்தலுடன் கூடிய கபவாத சுரம், ஈழை நோய். நிற்கவோ அல்லது நடக்கவோ முயற்சிக்காத குழந்தை. சருமம் கறுத்தும், வரண்டும் களைத்து மிருத்தல். க்ஷயரோகம் வருவதற்குச் சில காலம் முன்னதாக இருக்கும் சரீர நிலைமை. க்ஷய ரோகிகளின் குடல் அழற்சி, காலராவினால் ஏற்பட்ட குடலழற்சி. அடி வயிறு வெளித்துருத்துதல், பிடிவாதமான நாட்பட்ட இருமல், மார்பில் கபத்தை வெளியேற்ற முடியாததுபோல் கடைதல். மலம் பச்சையாகவும், சேறு போன்றும், தண்ணீராகவும் அனேக வர்ணங்கொண்டும் வாயுவுடனும் வெளியாகுதல். இரவில் வியர்வை. (இம்மாதிரியான கேசுகளில் இவ்வௌஷதத்தை குறைவான வீரியத்தில் நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் கொடுத்து, கீழ்க்குடல்களை உப்புத் தண்ணீரினால் எனிமா (Enema) கொடுத்துச் சுத்தம் செய்யவும். இளைத்திருக்கும் கைகளிலும் உடம்பிலும் யாளிவிதை எண்ணெயைத் தேய்க்கவும்) கொஞ்சங் கொஞ்சமாகப் பெரிதாகும் குழிப்புண்கள், சுருட்டிய பச்சை நரம்புகள்.

கல்கேரியா கார்பானிகா
(Calcarea Carbonica)

அதிகப் பருமனாகவும், தொள தொளத்தும் அதைத்தும் உள்ள சரீரங்கள். அனேகமாக நிண நீர்க்கோளங்களே அதிகமாகப் பாதிக்கப்படும். பருவம் மாறும் சமயங்களில் சலதோஷம் பிடிக்கும் தன்மை. கைகளும் கால்களும் சதா சில்லென்றும் வியர்த்துக்கொண்டும் இருத்தல். எப்பொழுதும் களைப்பு. வெள்ளைப்பாடு, இருமல் முதலிய

கோளாறுகள். உட்கொள்ளும் உணவின் சத்து உடம்பில் சேராததினால் ஏற்படும் உபாதிகள். எலும்பு வளர்ச்சிக்கு வேண்டிய அளவு உப்பு இல்லாமை. சுரம் மாலை ஆறு மணிக்குக் கடுமையாக இருத்தல். இவ்வௌஷதத்தை நைட்ரிக் ஆஸிட், ஸல்பர் முதலியவைகளுக்கு முன்பு கொடுக்கக்கூடாதென்போர் சிலர். நாட்பட்ட வியாதிகளைக் குணப்படுத்த ஸல்பர், கல்கேரியா, லைகோபோடியம் ஆகியவைகளை இதே வரிசையில் கொடுக்கவேண்டும். ஸல்பர் கொடுத்த பிறகு கை கால்களும் சரீரமும் சில்லிடுமானால் கல்கேரியா கொடுபட வேண்டும். கல்கேரியா கொடுத்ததினால் சூடு ஏற்படுமாயின் லைகோபோடியம் கொடுக்க வேண்டும். எலும்புகள் வளர்வதில்லை. கனமான, பலவீனமான நடை. இரவில் வியர்த்தல். அடிவயிறு துருத்தியிருத்தல். அரை யிடுக்கு, கழுத்து ஆகியவைகளிலுள்ள கோளங்களின் வீக்கம். மார்பில் அதிக வலி. உச்சிக்குழி திறந்திருத்தல். பற்கள் முளைப்பதில்லை. கண்களில் பூ விழுதல், முட்டை, மண், சாக்கட்டி, களிமண் முதலியவைகளைத் தின்னப் பிரியம். அதி சீக்கிரமாக ஏற்படும் மாதவிடாய், உதிரப் போக்கு ஏராளமாகவும் அதிக நாட்கள் நீடித்தும் இருத்தல். மூன்று வாரங்களுக்கோர் முறை மாதவிடாய் ஆகுதல். தலைக்கு இரத்தம் பாய்தல், தலையைத் திருப்பினால் வரும் கிறு கிறுப்பு. கீழ்த் தாடைக் கோளங்கள் வீங்கியும் கோழிமுட்டை போன்று கடினமாயும் இருக்கும். மேல் மூச்சு வாங்குதல், மாடிக்குப் போக முடியாது (கீழே இறங்கமுடியாமை-போரக்ஸ்) காக்கை வலிப்பு. குழந்தை பார்வைக்கு வயதானது போன்றும் வளராமலும் இருத்தல். கல்கேரியா குழந்தைகள் கொழு கொழுப்பாகவும், உட்கார்த்திவைத்த இடத்திலேயே அசையாமல் உட்கார்ந்து கொண்டுமிருக்கும். விரல்களை ஒன்றோடொன்று குத்திக்கொண்டும் விளையாடிக்

கொண்டும் இருத்தல். மந்தம், அலக்ஷியம். குழந்தைகளின் கண்களில் பூ விழுதல் அல்லது விரை பெருத்தல் முதலியவைகளுக்கு அக் குழந்தைகள் கல்கேரியா சரீரத்தைக் கொண்டிருந்தால் இவ்வௌஷதம் கொடுபடலாம். குளிர்ந்த தண்ணீரிலும், மழைக் காலங்களிலும் உபாதிகள் அதிகரிப்பு.

மனம்: கொழுத்த, தொளதொளத்த சரீரம். மந்த குணம். உட்காரும்போதும் நிற்கும்போதும் உடம்பைச் சிறிதும் வளைக்காமல் விறைப்பாக வைத்துக் கொள்ளுதல். சோம்பலுக்கு நேரெதிராக எப்பொழுதும் வேலை செய்துகொண்டே இருத்தல். பைத்தியம். தன் பின்னால் யாரோ ஒருவர் நடந்து வருகிறதாக பிரமை. தனக்கு ஏதோ ஒரு துரதிர்ஷ்டம் நேரப்போகிறதென்று பயப்படுதல். தன்னுடைய பகுத்தறிவை இழப்போமென்று பயப்படுதல். சன்னல் வழியாகக் கீழே குதிக்கப்போவது போலவும் பறக்கப்போவது போலவும் நினைத்தல். நெருப்பு எலிகள், கொலைகள் இவைகளைப் பற்றி மயக்கத்துடன் கூடிய பேச்சு. தன்னைச் சுற்றிலும் நாய்கள் இருப்பதாகவும் தான் அவைகளுடன் சண்டையிட முயற்சிப்பதாகவும் சொல்லுதல். கவலையும் இருதயத் துடிப்பும். வாழ்க்கையில் வெறுப்பு. விம்மி விம்மி அழுதல். அதிகமான யோசனை, சிறிய விஷயங்களைப் பற்றிப் பேசுதல். ஞாபக மறதி.

தலை: திறந்த வெளியில் நடக்கும்போதும் சட்டென்று தலையைத் திருப்பும் போதும் மாடிக்குச் செல்லும் போதும் கிறு கிறுப்பு. உஷ்ணத்துடன் தலையில் வேகமான இரத்தம் பாய்தல், அதனால் முகம் சிவந்தும் சுரந்தும் இருத்தல், காக்கை வலிப்பு. கண்களுக்கு மேலாக நெற்றியில் அதிக வலி. உச்சந் தலையில் வெடித்து விடும்போல்

தோன்றும் வலி; தலை வலி, அசைவு, நடத்தல், மாடிப்படி யேறுதல் முதலியவைகளினால் அதிகமாயும், இறுகக் கட்டு வது, இருட்டு அறை, கண்களை மூடுதல், சூடான ஒற்றி டங்கள் முதலியவைகளினால் சமனப்பட்டும் இருக்கும். உச்சந்தலை பனிக்கட்டி போன்று சில்லிப்பாகவும் ஆனால் எரிச்சலுடனிருந்தலும். ஒரு பக்கத் தலை வலி. பெரிய தலை; உச்சிக் குழி திறந்திருத்தல். நெற்றியில் குளிர்ந்த வியர்வை. குளிர்ச்சியான இடத்தில் படுத்தாலும் தலையணை வியர்வையினால் நனைதல். கெட்டியான பொருக்குகள், அவற்றைப் பிடித்திழுத்தால் இரத்தம் வருதல், சில சமயங் களில் மஞ்சளான சீழ் வெளிவருதல்.

கண்கள்: மங்கலான பார்வை. பூ விழுதல். நட்சத் திரங்கள் உதிர்வதையும் தூமகேதுக்கள் ஆகாயத்தை நோக்கிச் செல்வதையும் பார்த்தல். கண் விழிகளில் மேற் தோலில் மங்கல். குழிப்புண்கள். கண்களில் அழர்ச்சி, ஒவ்வொரு தடவை சலதோஷம் ஏற்படும்போதும் கண் களில் இரத்தச் சுரப்பு. இமைகளில் வீக்கமும் ஒன்றோ டொன்று ஒட்டுவதும். எரிச்சல். வஸ்துக்களின் ஒரு பக்கத்தை மாத்திரம் பார்த்தல். (ஸல்பருக்குப் பின் உப யோகிக்கவும்.)

காதுகள்: காது கேளாமை. தண்ணீரில் வேலை செய்ததினால் ஏற்பட்ட செவிட்டுக்குணம். வாயை மெல் லும்போது கடக்கு கடக்கென்று தாடையில் ஓசை. காது களில் சிறு கட்டிகள். உமிழ் நீர்க் கோளங்களில் வீக்கம். ஏராளமாகக் காதுகளிலிருந்து நாற்றமுள்ள சீழ் வடிதல்.

மூக்கு: வலியுடனும் புண்ணாகவும் இருத்தல். சிறு கட்டிகள். தலை வலியுடன் நீர் போன்ற சலதோஷம். கெட்டியான நாற்றமுள்ள சளி. கொழுத்திருக்கும் குழந்தை

களுக்கு மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல். பருவங்கள் மாறும் சமயங்களிலெல்லாம் சலதோஷம் பிடித்தல்.

முகம்: வெளுத்தல், அதைப்பு, கண்களைச் சுற்றிலும் நீல வளையங்கள், சுருக்கம், பல் முளைப்பது தாமதப்படுதல். காலையில் மேலுதடு வீங்கி யிருத்தல். கீழ்த்தாடைக் கோளங்களில் வலியுள்ள வீக்கம்.

பற்கள்: குளிர்ந்த தண்ணீரினால் பல்வலி, மாதவிடாயின் போதும் பிறகும் கருப்ப காலத்திலும் பொறுக்க முடியாத வலி; கத கதப்பான அல்லது குளிர்ந்த தண்ணீரினால் அதிகமாகுதல். கீழ்வாய் ஈறுகளில் ஆறாத சீழுள்ள குழிப் புண்கள்.

நாக்கு: நுனி நாக்கில் எரிச்சல், கதகதப்பான ஆகாரங்கள், பானங்கள் முதலியவைகளால் அதிகமாகுதல். காலையில் வறண்டிருத்தல். தெளிவற்றபேச்சு. புளித்தருசி.

தொண்டை: காட்பட்ட தொண்டை இரணம். வலியினால் குரல்வளை பாதிக்கப்படுதல். மாதவிடாய் ஆகும் போது தொண்டை வலி. தொண்டை வலி காதுக்குப் பரவுதல். மேல் வாயில் வீக்கத்துடன் விழுங்கும்போது தொண்டையில் சுருங்குவது போன்ற உணர்ச்சி. உள் நாக்கும் டான்ஸில்களும் வீங்குதல். கீழ்த்தாடைக் கோளங்கள் வலியுடன் வீங்கியும் கடினமாகவும் இருக்கும்.

வயிறு: முட்டைகள், சாராயம், சாக்கட்டி, கரி, உப்பிட்ட அல்லது தித்திப்பான பண்டங்கள் முதலியவைகளில் அதிகப் பிரியம். அதிக தாகம். மாமிசம், புகையிலைச் சுருட்டுக் குடித்தல் முதலியவைகளில் வெறுப்பு. பால் உடம்புக்கு ஒத்துக் கொள்வதில்லை. உட்கொண்டால்

குமட்டல் ஏற்படுதல். உப்பிசம். ஏப்பம் விடுதல். சாப்பிட்ட பிறகு வயிற்றில் உப்பிசம், பலவீனமான ஜீரணம். இருதய எரிச்சல். புளித்த தயிர்க் கட்டிகள் வாயாலெடுக்கப்படுதல். வயிற்றில் புளிப்பு. வயிற்றில் புழு உற்பத்தியாகும் தன்மையை இவ்வௌஷதம் கண்டிக்கும். அடிவயிறு பானைபோன்றிருத்தல். மேல் வயிற்றில் வெட்டும் வலி. காலையில் அதிகமான பசி. புளித்த வாயாலெடுப்பு.

அடி வயிறு: கடினமாகவும் துருத்தியும் இருத்தல். பித்தக் கற்கள் வெளியாகும்போது ஏற்படும் வலியை இவ்வௌஷதம் நீக்கும். குழந்தைகளின் மணிக்குடல் கோளங்கள் கடினமாகவும் வீங்கியும் இருத்தல். தடைப்பட்ட உப்பிசம். அடி வயிற்றின் வலப்பாகத்தில் உப்பிசமும் களகளவென்ற சப்தமும். ஆடைகளை இறுகக் கட்டமுடியாது. பித்தக் கற்களினால் ஏற்படும் வலி.

மலம்: அடிக்கடி கடினமாகவும் பிசுக்கென்றும், அல்லது தண்ணீர் போன்ற மெல்லிய மலம் அழுகிய முட்டைபோன்ற நாற்றத்துடன் வெளியாகுதல். நிறம் மஞ்சளாகவோ, பழுப்பாகவோ, களிமண் போன்றோ அல்லது வெளுப்பாகவோ இருக்கும். பிற்பகலில் உபாதிகள் அதிகமாகும். மலப்பையில் புழுக்கள் ஊருவது போன்றிருத்தல். நாக்குப் பூச்சிகள். குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்றுப் போக்கு, புளித்த வயிறு, மலப்பை வெளிவருதல் முதலியவை ஏற்படும் தன்மை. மலம் வெளியாகும்போது அபானத்தில் எரிச்சல்.

மூத்திரம்: அடிக்கடி விடுதல், இரவில் கூட. மூத்திரம் நாற்றமாகவும், கறுப்பு நிறத்துடனும், வெண்மை வஸ்து படிந்தும் இருத்தல். ஆண்குறியின் நுனியில் மூத்திரம் விடும்போதும் பிறகும் எரிச்சல்.

ஆண் : இரு பாலரிடையிலும் புணர்ச்சியில் அதி கரித்த ஆசை அல்லது மிகவும் குறைந்து விடுதல். ஆண் குறி மிகவும் தாமதமாக விரைத்தல். இந்திரியம் வெகு சீக்கிரத்தில் வெளிப்பட்டு பிறகு திருப்தியின்மை கோபம், முழங்கால்களில் பலவீனம் முதலியவை ஏற்படுதல். நபும் சகத்துவம். வெகு சீக்கிரத்தில் அடிக்கடி இந்திரியம் வெளியாகுதல்.

பெண் : மாதவிடாய் அதி சீக்கிரமாகவும் ஏராள மாகவும் அதிக நாட்கள் நீடித்தும் இருத்தல். மூன்று வாரங்களுக்கோர் முறை மாத விடாய் ஏற்படுதல். மாத விடாய்க் காலங்களினிடையே இரத்தம் கொட்டுதல், நடந் தாலும் அதிக பாரத்தைச் சுமந்தாலும் அதிக மாகுதல். அதிக பிரயாசையினுல் கருப்பை இடம் பெயருதல். எரிச் சல், அரிப்பு முதலியவைகளுடன் ஏராளமான காரமுள்ள, பால் போன்ற வெள்ளைப்பாடு, குபுகுபு வென்று வருதல். சிசுக்களுக்கும் பருவமடையாத சிறு பெண்களுக்கும் ஏற் படும் வெள்ளைப்பாடு.

தொண்டைக் குழி : க்ஷய ரோக சம்பந்தமான தொண்டை உபாதிகள். காலையில் கொரகொரப்பு, வலி யில்லாமல் இருத்தல். மாலையில் படுத்தவுடன் ‘விஸ்’ என்று நெஞ்சில் கடைதல்.

சுவாசம் : கஷ்ட சுவாசம், எதிர் காற்றில் நடக்கும் போதும் மாடிப்படிகளில் ஏறும்போதும் அதிகமாகுதல். உள்மூச்சு இழுக்கும்போது வெட்டும் வலி.

இருமல் : இடைவிடாமல் மூச்சுத் திணரலை உண் டாக்கும் இருமல். இரவில் கடுமையான வரண்ட இருமல், மூச்சு இழுக்கும்போது அதிகரிக்கும். முதலில் வறட்சி

யாகவும் பிறகு வெண்மையான உப்புக் கரிக்கும் கோழை முதலியவை ஏராளமாக வெளியாகுதல். கோழை முதலியவை தித்திப்பாகவும் இருந்தல். மஞ்சள் அல்லது இரத்தம் தோய்ந்த நாற்றமுள்ள கோழை. சோழை இரவில் வரண்டும் காலையில் கொளகொளத்தும் இருக்கும். வெகு சுலபமாக வியர்த்தல். அதிகமான பசி, இளைப்பு, தாமதப் படும் மாதவிடாய், மேல் மூச்சு வாங்குதல்.

சுவாசாசயங்கள்: வலது சுவாசகோசத்தின் நடுவிலும் மேற்பாகத்திலும் உபாதிகள். மார்பில் இரணவலி, மாடிப் படி ஏறும்போதும் மூச்சு இழுக்கும்போதும் அதிகரிப்பு.

இருதயம்: துடிப்பு, சாப்பிடுதல், அசைதல் முதலியவைகளால் அதிகரிப்பு.

கழுத்தும் முதுகும்: கழுத்திலும் முதுகிலும் உள்ள முள்ளெலும்புகளில் வீக்கமும் அவை வளைந்து விடுவதும். முள்ளெலும்பு வளைந்து விடுதல். தோள்பட்டைகளில் இழுக்கும் வலி. கழுத்துக் கோளங்களில் கடினமான வீக்கம், பின் கழுத்தில் விரைப்பும் எலும்பு நொருங்குவது போன்ற ஒலியும்.

கை, கால்கள்: வாதரோகம், சிறிய எலும்பு மூட்டுகளில் பிடிப்புகள். தண்ணீரில் வேலை செய்வதனால் ஏற்பட்ட கீல்வாயு. இரவில் உள்ளங்கால்களில் எரிச்சல். கால்கள் சில்லிட்டும் காடு முரடாகவும் இருத்தல். உட்காரும்போது கால்கள் மறந்துப்போதல். கை கால்கள் வளைந்தும் குறுகியும் இருத்தல். வாதரோகத்தில் ரஸ்டாக்ஸிகோடண்ட்ரன் கொடுக்கப்பட்டு பயனில்லாவிட்டால் இவ்வௌஷதத்தை உபயோகிக்கலாம். நீள எலும்புகளில் காயம்பட்ட

உணர்ச்சி. தோள்பட்டை வாதம். குழந்தை நடக்க முடியாது, நடக்கவும் நடக்காது.

தூக்கம்: இரவில் இரண்டு அல்லது மூன்று மணிக்குப் பிறகுதான் தூக்கம் வருதல். நரம்புகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளினால் பிடிவாதமான தூக்கமின்மை. கண்களை மூடியவுடன் பலவிதமான உருவங்களையும் காட்சிகளையும் பார்ப்பது போலிருத்தல். கீழே விழுவது போன்றும், கவலை பயங்கரம் முதலியவைகளுள்ள கனவுகள். தூக்கமின்மை மாத்திரம் தனிப்பட்ட ஒரு வியாதியாயிருப்பின் இவ்வௌஷதத்தை மூன்று மணிக்கொரு முறை வீதம் நான்கு வேளைகள் கொடுக்க வியாதியஸ்தர் மறுநாள் இரவே நன்றாகத் தூங்குவார்.

சுரம்: பிற்பகலில் சுரம், மாலை ஆறுமணிக்கு அதிகரிப்பு. சிறிதளவு அசைந்தாலும், குளிர் காற்றிலுங்கூட வியர்த்தல். காலையில் வியர்வை. குளிர்ந்த தண்ணீரில் நின்றதினாலோ அல்லது ஈரமண், களிமண் இவைகளில் வேலை செய்ததினாலோ ஏற்படும் சுரங்கள்.

நரம்புகளும், கேபிகளும்: பலவந்தமாக உள்ளே அழுக்கப்பட்ட சொறி, சிரங்குகள், பயந்த கோளாறு முதலியவைகளால் உண்டாகிய காக்கை வலிப்பு. வயிற்றிற்குப் பின்பக்கத்திலிருந்து குளிர்ந்தகாற்று மேல்வருவது போன்ற உணர்ச்சி அல்லது கைக்கு மேலாக எலி ஓடுவது போன்ற உணர்ச்சி. கோளங்கள், முக்கியமாக நிணநீர்க் கோளங்கள் பெருத்தல். முள்ளந்தண்டும் காலின் பேரெலும்பும் வளைந்து விடுதல்.

சருமம்: காய்ந்தும் சுருங்கியும், சில்விட்டும் மஞ்சளாகவும் இருத்தல். சிறு காயங்களும் சீழ்ப் பிடித்தல்.

காய்ந்துபோன பொறுக்குகளுக்கிடையே மஞ்சளான சீழ். கடி எனப்படும் படர் தாமரை. தலையில் வியர்வை. உடம்பில் சில இடங்களில் மாத்திரம் வியர்த்தல்.

உறவு: பெல்லடோன்னு, சைனு, குப்ரம், நைட்ரிக் ஆஸிட், ஸல்பர் முதலியவைகளுக்குப்பின் கல்கேரியா நன்கு வேலைசெய்யும்.

முறிவு: நைட்ரிக் ஆஸிட், நக்ஸ்வாமிகா, ஸல்பர்.

ஒப்பிடுதல்: கல்கேரியா, பாஸ்பரஸ், ஸைலீஷியா, இம்மூன்றிலும் சில்லிப்பு காணப்படுகிறது. கல்கேரியாவிலுள்ள கோளங்களின் வீக்கம், தாமதமாக நடக்கவருதல், பேசுதல் ஆகிய குறிகள் பாஸ்பரஸில் இருப்பினும் பாஸ்பரஸில் மெலிந்த சரீரம், பளபளப்பான சருமம் முகக்களை, கூர்மையான புத்தி, இருமும் சுபாவம் ஆகிய குறிகள் கல்கேரியாவிற்கு நேர் விரோதம். ஸைலீஷியாவில் சில்லிப்புடன் சரீர முழுவதும் சில்லிப்பான வியர்வை காணும்.

கிறுகிறுப்பில் ஒப்பிடுதல்

கல்கேரியா, காக்குலஸ், ஸைக்ளேமன்: திறந்த வெளியில் அதிகரிப்பு.

கல்கேரியா, கோனியம், காலீப்ரோமேடம், ஸிங்கம்: மூளையில் இரத்த சோகை ஏற்பட்டதனுல் உண்டாகும் கிறுகிறுப்பு.

அபிஸ், சேலிடோனியம், லாச்சஸிஸ், தூஜா: கண்களை மூடினுல் கிறுகிப்பு அதிகரித்தல்.

குப்ரம், பெட்ரோலியம், பாஸ்பரஸ், பல்ஸடில்லா: உயரப் பார்த்தால் அதிகரிப்பு.

ஓலியாண்டர்: கீழே பார்த்தால் அதிகரிப்பு.

அர்ஜண்டம் மேடாலிகம், பேர்ரம், லாக் கானினம்: ஓடும் தண்ணீரைப் பார்த்தால் அதிகரிப்பு.

கோனியம், ஓலியாண்டர்: உற்றுப் பார்ப்பதினால் அதிகரிப்பு.

காலண்டுலா: உயர ஏறுவதினால் அதிகரிப்பு.

போரக்ஸ்: கீழே இறங்கும்போது அதிகரிப்பு.

பிரயோனியா, கல்கேரியா, கார்போ விஜீடாபிலிஸ், ஜெல்ஸிமியம்: தலையை அசைப்பதால் அதிகரிப்பு.

ஆரம், பிரயோனியா, கிராபைடிஸ், பல்ஸடில்லா: குனிந்தால் அதிகரிப்பு.

அகேரிகஸ், க்ளோனுயின், நேட்ரம் கார்ப்: சூரியனால் அதிகரிப்பு.

ஆர்னிகா, ஆரம்: இடது பக்கமாக விழுந்துவிடுதல்-கிறு கிறுப்பு வந்தவுடன்.

கல்கேரியா ப்ளோரிகா
(Calcarea Flourica)

கல்கேரியா சரீரங்களை உடையவர்களுக்கு ஏற்படும் எலும்பு உபாதிகள், சிறு எலும்புகள் அழுகுதல், பயோரியா எனப்படும் ஈறுகளில் சீழ்ப் பிடிக்கும் வியாதி. அபானம் சமீபமாக உண்டாகும் பவுத்திரச் சிரங்கு, ஆழமான குழிப் புண்கள், பச்சை நரம்புகள் புடைத்தல், கல்போன்று

கடினமாக உள்ள கோளங்கள், கழலைக் கட்டிகள், சீழ்ப் பிடிக்கும் கட்டிகள். குளிர்ந்த காற்று, குளிர்ச்சியான ஒற்றிடங்கள் முதலியவைகளால் அதிகரிப்பு. நகச் சுற்றி. முழங்கால்களின் பள்ளத்தில் கட்டி அல்லது வீக்கம்.

மனம்: மனச்சோர்வு, தான் ஏழையாகப் போய் விடுவோமென்ற பயம்.

தலை: நொறுங்கும் சப்தம். பிறந்த குழந்தைகளின் தலையில் இரத்தக் கட்டிகள், வீக்கம். மண்டையில் கடின மான கழலைக்கட்டிகள். கடினமான ஓரங்களுள்ள குழிப் புண்கள்.

கண்கள்: பூச்சி பறத்தல். வெள்ளை விழியில் புள்ளிகள். கண்ணழர்ச்சி. பூ விழுதல்.

காதுகள்: செவிடு, குடைதல், கிண்கிண்ணென்ற ஒலிப்பு, காதின் உள்ளே பல நாட்களாகச் சீழ்ப் பிடித் திருத்தல்.

மூக்கு: வரண்ட சளி. கெட்டியான பச்சை நிறம் உள்ள கம்பி போன்ற சளி வெளியாகுதல்.

முகம்: தாடை எலும்புப் பக்கமாகக் கன்னத்தில் கடினமான வீக்கம்.

வாய்: தாடையில் கடினமான வீக்கத்துடன் ஈறு களில் புண். தாடை எலும்புகள் கல்போன்று கடினமாய் யிருத்தல். நாக்கு வெடித்தும் கடினமாகவும் இருத்தல். பற்களில் ஆட்டம், உணவு பற்களில் பட்டவுடன் பல்வலி. பற்களில் சொத்தை விழுதல்.

தொண்டை: எரிச்சல், சூடான பானங்களினால் சமனம்.

வயிறு: சீரணமாகாத ஆகாரம் வாயாலெடுக்கப் படுதல். விக்கல், உப்பிசம்.

மலம்: அபானத்தில் வெடிப்பு, வலி. இரத்தம் பெருகும் மூலங்கள். அரிப்பு மலபந்தம். இடுப்பில் வலி யுடன் உள் மூலங்கள். அடி வயிறு பொருமியிருத்தல், வாத சரீரிகளின் வயிற்றுப் போக்கு.

மூத்திரம்: ஏராளமாகவும், தண்ணீர் போன்றும், காரமான நாற்றமுள்ளதாயும் இருத்தல்.

ஆண்: பீஜங்கள் பெருத்தல். விரைகள் கடின மாகுதல்.

பெண்: ஸ்தனங்களில் முடிப்புகள்.

சுவாசாசயங்கள்: கொற கொறப்பு. மஞ்சளான கோழை கட்டி கட்டியாக வெளியாகுதல். கீழே படுத்த வுடன் இரும ஆரம்பித்தல்.

கழுத்து, முதுகு: நாட்பட்ட இடுப்பு வலி, அசைய ஆரம்பித்தவுடன் அதிகரித்து சிறிது தூரம் நடந்தவுடன் சமனமடையும். கழுத்துக் கோளங்கள் கடினமாகுதல்.

கை, கால்கள்: விரல் எலும்புகளின் மூட்டுகள் வாதத்தினால் வீங்குதல்.

தூக்கம்: ஏதோ அபாயம் நேரிடப்போவது போன்று கனவுகள், கனவுகள் ஞாபகத்தில் தெளிவாக இருத்தல்.

சருமம்: உள்ளங் கையில் வெடிப்பு, அபானத்தில் வெடிப்பு, ஸ்தனங்களில் முடிப்புகள். கோளங்கள் கல் போன்று கடினமாயிருத்தல். பச்சைநரம்புகள் புடைத்தல்.

கல்கேரியா பாஸ் (Calcarea Phos)

இவ் வௌஷதத்தில் பாஸ்பரஸின் தன்மையே மேலோங்கி இருக்கிறது. ஆகவே இவ்வௌஷதத்தின் சரீரம் மெலிந்தும் ஒற்றைநாடியாகவும் இரத்தச் சோகையுடனும் இருக்கும். எலும்புகளின் கோளாறுன வளர்ச்சி. இளைத்துக்கொண்டே யிருக்கும் தன்மை, சளி பிடிக்கும் குணம். உச்சிக் குழிகள் மூடாமை.

மனம்: ஞாபகமறதி தவறுன வார்த்தைகளை உபயோகித்தல். கோப குணம். மூளை களைத்திருத்தல்; சரீரம் முழுவதுமே தளர்ச்சி.

தலை: உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும்போதும், திறந்த வெளியில் நடக்கும்போதும் கிறு கிறுப்பு. இக் கிறு கிறுப்பு குளிர்ந்த பருவங்களிலும், சரீர அல்லது மன உழைப்பினுலும் அதிகரிக்கும். பிடரித் தலையில் வலி. தலைப்பாகை முதலியவைகளினுல் ஏற்படும் தலை வலி. உச்சந்தலையில் பனிக்கட்டி வைத்திருப்பது போன்று ஊரும் உணர்ச்சி. மண்டையோடு மிருதுவாகவும் மெல்லியதாகவும் அமுக்கினுல் நொருங்குவது போன்ற ஓசையுடனும் இருக்கும்.

கண்கள்: இரணம். சிறிதளவு வெளிச்சமும் உறுத்துதல். கண் விழிகளில் வலி.

மூக்கு: பிற்பகலில் இரத்தப்பெருக்கு ஏற்படுதல், குழிப்புண்கள். வீக்கம்.

முகம்: மேலுதடுகளில், வீக்கம், வலி, கடினம், எரிச்சல். மேல் தாடை எலும்புகளில் வலப்பக்கத்தி லிருந்து இடப்பாகம் செல்லும் வலி.

வாய்: டான்ஸில்களில் வீக்கம். உள்நாக்கு வளர்ச்சி.

வயிறு: பகல் 4 மணிக்குப் பசி. உப்பிட்ட ஆகாரங் களில் பிரியம். எப்பொழுதும் தாய்ப்பாலைக் குடிக்க விரும் பும் குழந்தைகள். குளிர்ந்த தண்ணீர் உட்கொண்ட பின் னரும் சிறிதளவு ஆகாரம் உட்கொண்டால்கூட வயிற்றில் பிசையும் வலி. ஏப்பம்விட்டால் வலி சமனமடைதல். மேல்வயிற்றில் எரிச்சலுடன் காலியாயிருக்கும் உணர்ச்சி. வயிற்றில் உயிருள்ள வஸ்து நகரும் உணர்ச்சி.

அடிவயிறு: உட்சென்றும் தொளதொளவென்றும் இருக்கும் பொறுமல். சாப்பிட்டவுடன் வலி.

மலம்: குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் அதிக அபானவாயுவுடன் வயிற்றுப்போக்கு. மலம் பச்சை நிறமாகவும், ஜீரணமாகாமலும் இளகியும், குழகுழப்பாகவும் நாற்றமுள்ள அபான வாயுவுடனும் இருத்தல். வெளித் துருத்தும் மூலங்கள். அவைகளிலிருந்து சிலேஷ்மா அல்லது மஞ்சள் பதார்த்தமோ கசிதல். க்ஷயரோக சரீரமுடைய வர்களின் பவுத்திரங்கள். பவுத்திரமும் இருதயத் தொந்தி ரவுகளும் மாறி மாறி வருதல். அபானம் எரிச்சலுடனும் கொட்டும் வலிகளுடனும் இரணமாயும் இருத்தல்.

மூத்திரம்: தித்திப்புள்ள நீரழிவு. கறுப்பான மூத் திரம்.

ஆண் : நாட்பட்ட மேகவெட்டை. பீஜங்கள் வீங்குதல். அரிப்பு.

பெண் : கருப்பப்பையில் வலி அல்லது மாதவிடாய்க் காலத்தில் முதுகு வலி தோன்றுமுன் கெண்டை வாங்குதல். மாதவிடாய் மிகவும் தாமதித்தோ அல்லது அதிசீக்கிரமோ தோன்றுதல். முட்டையின் வெள்ளைக் கரு போன்ற வெள்ளைப்பாடு. தாயின் பாலில் அதிக உப்பு ருசி இருப்பதினால் குழந்தை தாய்ப்பாலை வெறுத்தல். கடுமையான சிற்றின்ப ஆசை.

தொண்டை : இரவு, பகல், எப்பொழுதும் தொண்டையில் கொற கொறப்பு, வரண்ட இருமல். பேச ஆரம்பிக்கும் முன்னால் தொண்டையைக் கனைத்து விழுங்கவேண்டி வருதல். க்ஷயரோக சம்பந்தமான தொண்டை அழர்ச்சி.

சுவாசாசயம் : அடிக்கடி சிரமத்துடன் கொஞ்சங் கொஞ்சமாக சுவாசித்தல், குளிர், உழைப்பு முதலியவைகளால் அதிகரிப்பு. தொட்டிலிலிருந்து எடுத்தவுடன் குழந்தை மூச்சுத் திணருதல். க்ஷயரோக சம்பந்தமான இருமல். இருமல் சிறிதாகவும் வரண்டும், கஷ்ட சுவாசம், இரவில் வியர்வை முதலியவைகளுடனும் இருக்கும். தொண்டையில் வலியுடன் கூடிய இருமல். இருமல் உட்கார்ந்தால் அதிகரித்தும் கீழே படுத்தால் சமனப்பட்டும் இருத்தல். இருமலுடன் மார்பில் பிடிப்புவலி. இரண வலி, களகளப்பு. இரவு 10 மணிக்குக்கஷ்ட சுவாசம், கீழே படுத்தால் சமனம்.

கழுத்து, முதுகு : கழுத்திலும் முதுகிலும் வாத வலியும் விரைப்பும், குளிர்ந்த காற்றில் அதிகரிப்பு. முதுகு வலியும் கருப்பப்பை வலியும் கூடுதல். முள்ளந்தண்டு இடது பக்கமாக வளைந்துவிடுதல்.

கை, கால்கள் : தோள்பட்டைகளில் வாத வலி, கைகளை உயரத்தூக்கமுடியாமை. அக்குளில் பவுத்திரம் போன்ற குழிப்புண். நகங்களைச் சுற்றிலும் வலி (இரவுகளில்) மூட்டுகளில் வாத வலி. இவை குளிர்ந்த பருவங்களில் அதிகரித்தல். முறிந்த எலும்புகள் ஒன்றுசேராமை. நடக்கும்போது ஆடு தசைகளில் கெண்டை வாங்குதல்.

கேபிகள் : எலும்பு வியாதிகள். குழந்தைகள் நடக்கக் கற்றுக்கொள்ளாமை. இளைப்பு.

சுரம் : நடுக்கும் குளிர். உஷ்ணம் தலையிலிருந்து கால் கட்டைவிரல்கள்வரை பரவுதல். இரவில் ஏராளமான வியர்வை; காலையில் சரீரத்தின் சில பாகங்களில் மாத்திரம் வியர்வை. காலை 6 மணிக்கு ஆரம்பித்து மாலை 6 மணிக்கு விடும் சுரம்.

விசேஷம் : காலை, மாலை, அசைவு, சாப்பிட்ட பிறகு, நீருள்ள பழங்கள், சளிப்பிடித்தல், முதலியவைகளினால் உபாதி அதிகரிப்பு; படுத்தால் சமனம்.

கல்கேரியா கார்புக்கும் கல்கேரியா பாசுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.

கல்கேரியா கார்ப் : கொழுப்புள்ள, தொள தொளவென்று இருக்கும் சரீரம். உச்சிக்குழியின் முன்பாகம் மாத்திரம் திறந்திருத்தல். பெருத்த அடிவயிறு, முட்டை சாப்பிட ஆவல். பச்சையாகவோ அல்லது தண்ணீர் போன்றோ இருக்கும் மலம். மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு, தொண்டை பச்சைப் புண்ணாகவும் வலியுடனும் இருக்கும். சருமத்தில் கொப்புளங்கள், பருக்கள்; சுலபமாக வியர்த்தல், அடிக்கடி சளிப்பிடிக்கும் தன்மை.

கல்கேரியா பாஸ்: மெலிந்த, இரத்த சோகைபிடித்த சரீரம். இளைப்பு வெகுவேகமாக ஆரம்பித்தல். உச்சிக் குழியின் இரு பாகங்களுமே திறந்திருத்தல். சுட்ட மாமிசம் அல்லது உப்பு தின்ன பிரியம். மலம் பச்சையாகவும் சூடாகவும் சப்தத்துடனும் வெளியாகுதல். அதிகப் படிப்பினுலுண்டாகும் தலைவலி.

கல்கேரியா ஸல்ப்யூரிகா
(Calcarea Sulphurica)

நிமோனியா சுரத்தின் மூன்றாவது கட்டத்தில், மார்பில் களகளப்பு, மூத்திரத்தில் சீழ் ஆகியவை காணப்படும் நிலைமைக்கு இவ்வௌஷதம் உபயோகிக்கப்படும். மேலும், சிரங்குக் கட்டிகளில் ஏராளமாக சீழ் ஏற்படுவதற்கும் இது உபயோகமாகும். இவ்விஷயத்தில் இது ஹீபார்ஸல்பரை ஒத்திருக்கிறது. சரீரத்திற்கு நல்ல ஆரோக்கியத்தை அளித்து, முட்டி மைதுனம், அமித சிற்றின்ப நுகர்ச்சி முதலியவைகளால் ஏற்பட்ட கோளாறுகளை அறவே நீக்குகிறது. ஒன்றன்பின்னென்ருக சீழ்க்கட்டிகள் தோன்றிக் கொண்டே இருப்பதற்கு மிகவும் நல்லது. கோளங்களில் மந்தமான வீக்கம், நீர் சுரந்திருக்கும் கட்டிகள். வாய் திறந்திருக்கும் குழிப்புண்கள், கண்கள், காதுகள், மூக்கு முதலியவைகளிலிருந்து மஞ்சளாகவும், கட்டியாகவும் உள்ள பதார்த்தங்கள் வெளியாகுதல். காக்கை வலிப்பிலும் உபயோகமுண்டு.

தலை: குழந்தைகளுடைய தலைச்சொறியில் மஞ்சள் நிறமான சீழும் மஞ்சள் பொறுக்குகளும் இருக்குமானல் இவ்வௌஷதம் உபயோகமுள்ளது. எப்பொழுதும் இடைவிடாமல் இருக்கும் தலைவலி, திறந்த வெளியில் சமனமாகி,

அசைவு, ஒலி, மாதவிடாய்க் காலம் முதலியவைகளினால் அதிகரிக்கும். பகல் 4 மணிக்கு தலைப்பாகை வைத்திருப்பதுபோன்ற உணர்ச்சி.

கண்கள்: கண்களின் அழர்ச்சி, கெட்டியான மஞ்சள் நிறங்கொண்ட பீளை வெளியாகுதல். பூ விழுதல், இரட்டைப் பார்வை. வெள்ளை விழிகளில் இரணம். பிறந்த குழந்தைகளின் கண்ணழர்ச்சி.

காதுகள்: காது கேளாமை. சீழ் வடிந்துகொண்டேயிருத்தல். காதுகளைச் சுற்றிலும் சிறு கொப்புளங்கள், சிரங்குகள்.

மூக்கு: மஞ்சளான சீழ்போன்ற பதார்த்தம் வெளியாகுதல். பிடிவாதமான ஜலதோஷம். வாசனையறியும் சக்தியை இழத்தல்.

முகம்: மூக்கின் எலும்புகள், அழுகுதல். முகத்தில் பருக்களும் கட்டிகளும்.

தொண்டை: மஞ்சளான பதார்த்தம் வெளியாகுதலுடன் கூடிய வலியுள்ள தொண்டை. தொண்டையில் முளை இருக்கும் உணர்ச்சி. டான்ஸில்கள் சீழ்க்கொண்டு சீழ் வருதல். தொண்டையை அடைத்தல்.

மலம்: (காலையில்) துர்நாற்றமுள்ள வயிற்றுப்போக்கு இரத்தம் கலந்திருத்தல். சாப்பிட்டவுடன் வயிற்றுப்போக்கு அதிகரிப்பு. பவுத்திர உபாதியுள்ள கேசுகளில் ஆசனவாய்ப் பக்கமாக வலியுள்ள சீழ்க்கட்டிகள். பிடிவாதமான மலபந்தம், மலம் இரத்தம் கலந்தும் காய்ந்தும் கடினமாகவும் முடிப்புகளுடனும் இருக்கும். மலப்பை வெளித்திருத்தல்.

மூத்திரம்: மூத்திரத்தில் சீழ் காணப்படுதல். மூத்திரக்காய்களில் சீழ்ப்பிடித்தல் மூத்திரம் விடும்பொழுது எரிச்சல்.

பெண்: கருப்பப் பையில் கெட்ட சதை வளர்ச்சி. கெட்டியான மஞ்சள் நிறமுள்ள இரத்தம் கலந்த வெள்ளைப் பாடு. கருப்பப்பை நழுவுதல்.

சுவாசாசயங்கள்: கெட்டியாகவும், கட்டி கட்டியாகவும் வெண்மையாகவோ அல்லது சீழ்போன்று மஞ்சளாகவோ உள்ள கபம். நாற்றமுள்ள கோழை, விடாச்சுரம் முதலியவைகளுடன் இருமல். மார்பில் வலி. இருமல் மாலையிலும் இரவிலும் அதிகரித்து, குளிர்காற்றில் சமனமாகும்.

கை, கால்கள்: உள்ளங்கால்களில் அரிப்பு, எரிச்சல் சில்லிட்ட கை கால்கள். அக்குளில் சீழ்க் கட்டிகள். மூட்டுகளில் வாதம். சப்பை மூட்டு வியாதி.

சருமம்: வெட்டுக்காயம், சிறுப்பு, முதலியவை ஆறுமல் சீழ்க் கொள்ளுதல். மஞ்சளான நாற்றமுள்ள பொருக்குகளும் சீழும் வெளிப்படுதல். மஞ்சளான பொறுக்குகளுள்ள சரும வியாதிகள். ரோமங்களின் கீழே ஒன்றுமே யில்லாத பருக்களும் அவைகளைக் கிள்ளினால் இரத்தம் வெளிப்படுதலும்.

விசேஷம்: வெகு சுலபமாக சலதோஷம் பிடிக்கும் தன்மை. வியாதியஸ்தருக்கு சில்லென்றிருப்பினும் போர்த்திக்கொள்ளாமலிருக்க விரும்புவார். உழைப்பு, நிற்பது, வேகமாக நடப்பது முதலியவைகளால் உபாதிகள் அதிகரிக்கும்.

கல்கேரியா ஹைபோபாஸ்
(Calcarea Hypophos)

உச்சந்தலையில் மந்தமான கனத்துடன் கூடிய வலி; மனத் தளர்ச்சி; இருதயத்தைச் சுற்றிலும் நிறைந்த உணர்ச்சி; தலையிலும் மார்பிலும் நிறைந்த உணர்ச்சி; கைகள், கழுத்து, தலை ஆகியவைகளிலிருக்கும் அசுத்த இரத்தக் குழாய்கள் கயிறுபோன்று பருத்திருத்தல்; கஷ்ட சுவாசம், அறையின் கதவுகளைத் திறந்துவைக்க விரும்புதல், பொழியும் வியர்வை, தசைகளில் சக்தியின்மை, கை கால்களில் அசதி. பெரிய சீழ்க் கட்டிகள் உடையாமலேயே வெகு நாள் இருந்தால் இவ்வௌஷதத்தைக் கொடுப்பின் ஆபரேஷன் செய்ய சௌகரியமாய் இருக்கும். (குறைந்த வீரியங்களில் உபயோகிக்கவேண்டும்.) வெளுத்த முகம், இளைப்பு முதலியவைகளுள்ள குழந்தைகள். கை கால்களில் சில்லிப்பு, இரவில் வியர்த்தல். இளைப்பும் பசியின்மையும். எலும்புகளில் உபாதியுடன் கூடிய சீழ்க் கட்டிகள்.

கன்வலேரியா (Convallaria)

இருதயத்திற்கு இது ஒரு நல்ல ஔஷதமாகும். இருதயத்திலிருந்து ஏற்பட்ட நீர் அதைப்பு, கஷ்ட சுவாசம் முதலியவைகளைப் போக்கும். கிட்டத்தட்ட டிஜிடாலிஸ் போன்றே குணமுள்ள தென்றாலும் இவ்வௌஷதத்தை டிஜிடாலிஸை விட பயமில்லாமல் உபயோகிக்கலாம். மூச்சுத் திணறுதல், கீழே படுத்துக்கொள்ள இயலாமை, கைகளைக் கீழே ஊன்றிக் கொண்டு உட்கார்ந்து விடுவார். அசுத்த இரத்தக் குழாய்களில் இரத்தம் தேங்குதல். இருதயத்தின் உபாதியால் நீர் அதைப்பு. நடக்கும்போதும் மாடிப்படி யேறும்போதும், கீழே படுக்கும்போதும் கஷ்ட

சுவாசம். மூத்திரக் குறைவு, அதனால் நீர் விக்கம். இருதயத்தின் தசைக் கதவுகள் பலமிழத்தல், இருதயம் துரிதமாகத் துடித்தல், மலச் சிக்கலுடன் கருப்பப்பையில் வலி. கருப்பப்பை கீழே நழுவி மலப்பையின்மேல் மோதுவது போன்ற உணர்ச்சி, அதனால் மலப்பையிலும் ஆசனவாயிலும் வெட்டும் வலி. தாய்த் திராவகத்தில் உபயோகிக்கவும்.

விசேஷம்: குளிர் காற்று, மல்லார்ந்து படுப்பது முதலியவைகளால் உபாதிகள் சமனம்; சூடான அறை, பிரயாசை முதலியவைகளால் அதிகரிப்பு.

கன்னுபிஸ் இண்டிகா (Cannabis Indica)

நேரம், அளவு முதலியவைகளைப் பற்றிய பிரமை. அதிகமான சந்தோஷமும் உற்சாகமும். பொழுது மிகவும் மெதுவாகச் செல்லுகிறதென்று நினைத்தல். அதிக ஞாபக மறதி, ஒரு வார்த்தை பேசி முடிப்பதற்குள் தான் சொல்ல விரும்பியதை மறந்துவிடுதல். ஒரு விஷயத்திலும் ஸ்திரமாக மனதைச் செலுத்த இயலாமை. வாயாடித்தனம், ஓயாமல் பேசுதல், கடகடவென்று சிரிப்பார். திடீரென்று மௌனமாயிருத்தல். தான் இரண்டு மனிதர்களாக இருக்கும் உணர்ச்சி. தூக்கக் கலக்கம்.

மனம்: தலை மிகவும் கடினமாக இருக்கும் உணர்ச்சி, அதனால் பிரக்ஞை யிழந்து கீழே விழுதல். மூளையில் அநேக விதமான விஷயங்கள் தோன்றிக்கொண்டே யிருப்பதால் முன்னால் நடந்த சம்பவங்களையோ அல்லது பேசின வார்த்தைகளையோ ஞாபகத்துக்குக் கொண்டுவர இயலாமை. சில நிமிஷங்கள் பல வருஷங்கள் போல் தோன்றுதல், பத்து கஜதூரத்தை பத்து மைல் என்று நினைத்தல். மன உற்சாகம், அதிகமாகப் பேசுதல். மயக்கத்தில் நடுக்கம்,

கோபம், வாயாலெடுப்பு, அடக்க முடியாத தாகம். வேடிக்கையும் விஷமத்தனமும் நிறைந்த குணம், அதிகமாகச் சிரித்தல், யாரோ பாடுவது போல் தோன்றுதல், கண்களை மூடிக்கொள்ளுதல். சம்பந்தமில்லாத வார்த்தைகள் பேசுதல். தனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ வென்ற பயம்.

தலை: நெற்றியில் புடைக்கும் வலி. வலது பொட்டில் மந்தமான பிடிப்பு வலிகள். மூளையினுள்ளே கடுமையான அழுர்ச்சிகள் ஏற்படுவது போன்ற தோற்றம். கிறுகிறுப்பு. தலை தானகவே ஆடுதல். தலை தானே திறந்துகொண்டும் மூடிக்கொண்டும் இருப்பது போன்ற உணர்ச்சி.

கண்கள்: படிக்கும் போது எழுத்துக்கள் ஒன்ருேடொன்று கலந்து கொள்ளுவதுபோல் இருத்தல். வெளிச்சத்தைப் பார்க்க இயலாமை. குத்திட்ட பார்வை. கண் அழுர்ச்சி.

காதுகள்: புடைக்கும் வலி, கணீரென்ற ஓசை, இரைச்சல்.

நாக்கு: உலோகங்களின் ருசி. திக்குதல்.

தொண்டை: தொண்டை காய்ந்து, அதிகமான தாகமேற்படுதல். குளிர்ந்த தண்ணீர் சாப்பிட அவா.

வாய்: காய்ந்தும் ஒட்டிக்கொண்டும் இருத்தல்.

வயிறு: அதிகமான பசி, வலி. அமுக்கினல் சமனம்.

அடி வயிறு: இரவில் குடல்களில் கடபுடா வென்ற இரைச்சல். ஏப்பம் விடுவதால் சௌகரியம். அடி வயிறு வீங்கி யிருப்பதுபோல் தோன்றுதல்.

மூத்திரம்: அடிக்கடி மூத்திரம் விடுதல், இத்துடன் மாலையில் எரிச்சலுள்ள வலி. மூத்திர கோசத்தில் மூத்திரம் விடும்போதும் அதற்கு முன்பும் பிறகும் எரிச்சல். தோலுரிதல் முதலியவை இருத்தல். வெள்ளை அல்லது மஞ்சள் நிறமான போக்குகளுள்ள மேகவெட்டை.

ஆண், பெண்: புணர்ச்சி ஆசை மிகவும் அதிகமாகுதல். மூத்திர கோசத்திலிருந்து வெண்மையான போக்கு வெளிப்படுதல். ஏராளமான மாதவிடாய், அதிக நாட்கள் நீடித்தல், மாதவிடாயின் போது சங்காதோஷம்.

சுவாசம்: ஆழ்ந்த மூச்சுவிட மிகவும் சிரமம். மாடிப்படி ஏறும்போது மார்பில் அமுக்குவது போன்றிருத்தல். மூச்சடைத்துவிடும் போலிருத்தல், விசிற வேண்டி வருதல்.

இருதயம்: தூங்கும்போதும் தூங்கி யெழுந்திருக்கும் போதும் இருதயத்துடிப்பு. இருதயத்திலிருந்து துளித்துளியாக ஏதோ விழுந்துகொண்டிருக்கும் உணர்ச்சி. மந்தமான நாடி. இருதயத்தைச் சுற்றிலும் அமுக்குவது போன்ற உணர்ச்சி.

கை கால்கள்: கால்களிலும் வலக்கையிலும் பாரிச வாயு. இளைப்பாறுவதினால் பொதுவாக அனுகூலம் ஏற்படும். கால்கள் முழுவதிலுமே பக்ஷவாயு பிடித்தல், வெகு சீக்கிரத்தில் களைப்பு உண்டாகுதல்.

தூக்கம்: பகற் காலங்களில் கீழே படுக்க விருந்த அவா. அதிகமான தூக்கக் கலக்கம். அபாயம், சவங்கள், அருவருப்பான காட்சிகள் முதலியவைகளுள்ள கனவுகள் காணுதல். ஒவ்வொரு இரவிலும் தூங்க ஆரம்பித்தவுடன்

பயந்துகொண்டு எழுந்து கொள்ளுதல். வயதானவர்களின் தூக்கமின்மை.

கழுத்து, முதுகு: நிமிர்ந்து நடக்க முடியாது. கூனிக்கொண்டு நடத்தல்.

உணர்ச்சி: சில அவயவங்கள் மாத்திரம் பெருத்தும் கடினமாகவும் இருப்பது போன்ற உணர்ச்சி.

பெண்களின் அதி காம இச்சையில் ஔஷதங்களை ஒப்பிடுதல்

கன்னுபிஸ், வெராட்ரம், கல்கேரியாபாஸ்: மாத விடாய்க்கு முன், காம இச்சை அதிகரித்தல். கந்தாரிஸ்: ஜனனேந்திரியங்களில் இரத்தத் திரட்சி, கடுமையான காம இச்சை, அந்த நிமிஷமே இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ள விரும்புதல். ஹாயஸ்யாமஸ்: தன் ஆடையைக்கழற்றி எறிந்து காமவிகாரமான பேச்சுகள் பேசுவார். காலீ பைக்ரோமிகம், டாரண்டுலா: ஜனனேந்திரியத்தில் அரிப்புடன் இச்சை. முரக்ஸ் பர்பூரியா: ஸேபியா என்னும் ஔஷதத்தை இது பெரும்பாலும் ஒத்திருக்கிறது. அக்குறிகளுடன் காம இச்சை இவ்வௌஷதத்தில் இருக்கும். ஸேபியாவில் இச்சையே இருக்காது. ஸிங்கம்: மாதவிடாயினால் இச்சை சமனமடைதல்.

கன்னுபிஸ் ஸடிவா (Cannabis Sativa)

திக்கிப் பேசுதல். கடுமையான மேகவெட்டை கெட்டியாகவும் சீழ் போன்றும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். தலையிலிருந்தோ அல்லது இருதயம் அபானம் முதலியவை

களிலிருந்தோ துளித்துளியாகத் தண்ணீர் சொட்டும் உணர்ச்சி. ஆண் குறிகளில் வலி யேற்படுவதால் கால்களை அகற்றி அகற்றி வைத்து நடப்பார்.

மனம்: சொல்லவேண்டு மென்ற விஷயத்தை விட்டு விட்டு சொல்ல வேண்டாமென்று நினைத்த விஷயத்தைச் சொல்லுவார். முற்பகலில் வருத்தமும் பிற்பகலில் சந்தோஷமும். எழுதும்போது பிழை செய்தல்.

தலை: தலைக்கு இரத்தம் வேகமாகச் சென்று அதனால் உஷ்ணமும் அனல் வீசும் உணர்ச்சியும். நெற்றியிலும் பொட்டுகளிலும் வலி. தண்ணீர் சொட்டுவது போன்ற உணர்ச்சி.

காதுகள்: கணீர்கணீரென்று ஒலித்தல்.

கண்கள்: கண்ணழர்ச்சி ஏற்பட்ட பின் கண்கள் மங்குதல்.

மூக்கு: இரத்தம் கொட்டுதல். வீக்கம். வரண்டும் சூடாகவுமிருத்தல்.

முகம்: இடது கன்னம் சிவந்தும் வலக் கன்னம் வெளுத்தும் இருத்தல்.

வாய்: வாய், தொண்டை, உதடுகள் முதலியவை காய்ந்திருத்தல்.

வயிறு: காற்று, அல்லது கசப்பான தொண்டையை இரணமாக்கும் குணமுள்ள ஏப்பங்கள்.

மூத்திரம்: மூத்திரக்காய்களும் பையும் அழர்ச்சி யுற்று வலியுடன் இருத்தல். மூத்திர அடக்கம். வலியுடன்

சொட்டு சொட்டாக மூத்திரம் பிரிதல். இரத்தம் கலந்திருத்தல். ஆண் குறியை சிறிதளவு தொட்டாலும் அல்லது அமுக்கினலும் வலி காணுதல். மூத்திரம் வெளுப்பான அல்லது சிவப்பான குழம்புபோன்று இருக்கும்.

ஆண்: ஆண் பெண், இருபாலரிடையேயும் காம இச்சை அதிகரிக்கும். நபும்சகத்துவம். ஆண் குறி விரைத்தவுடன் பிடிப்பு வலிகள். ஆண் குறியும் அதன் நுனித்தோலும் வீங்கியிருத்தல். மூத்திரம் விடும்போதும் பிறகும் ஆண்குறியில் எரிச்சல், கொட்டுதல், வலிகள். மேகவெட்டையில் போக்கு தண்ணீர் போன்றிருத்தல்.

பெண்: புணர்ச்சியில் அதிகரித்த ஆசை, முக்கியமாய் மலடான ஸ்திரீகளுக்கு.

சுவாசாசயம்: மழைக்காலங்களில் ஆஸ்துமா; உட்கார வேண்டிவருதல், தானிருக்கும் அறையின் கதவுகளையும் சன்னல்களையும் திறந்துவைத்துக்கொள்ள விரும்புதல், தலையிலோ அல்லது இருதயத்திலோ சொட்டு சொட்டாகத் தண்ணீர் விழுவதுபோன்ற உணர்ச்சி. வெளிவரும் கபம் சில்லென்றும் உப்புக்கரித்துக்கொண்டும் இருக்கும். நடு மார்பில் மேல் பக்கமாக இசிவு வலி.

இருதயம்: குனிந்தாலும் அசைந்தாலும் இருதயப் பக்கமாக கதகதப்புள்ள உணர்ச்சியுடன் இருதயத் துடிப்பு. நாடி பலவீனமாகவும் மெதுவாகவும், தெளிவில்லாமலும் இருக்கும்.

கை, கால்கள்: கால்களை நெருக்கிக்கொண்டு நடக்க இயலாமை; ஏனெனில் ஆண் குறி வலித்துக் கொண்டும் சிறிதளவு தொட்டாலும் எரிந்துகொண்டும்

இருக்கும். சில்லிப்பு, மறந்து இருத்தல், கைகளிலும் விரல் நுனிகளிலும் நடுங்குதல்.

முதுகு: சில நிமிஷங்களுக்கோர் முறை முதுகில் கடுமையான வலிகள். கீழ் முதுகிலும் வலி. கழுத்தில் இழுப்பதுபோன்ற வலி, மேலே செல்லுதல்.

தூக்கம்: இரவில் பயங்கரமான கனவுகளுடன் விழித்துக்கொள்ளுதல், தான் எங்கிருந்தோமென்பது தெரியாது.

உணர்ச்சி: அங்குமிங்கும் வேடிக்கையாகப் பிடிப்பது போன்ற வலிகள், இவை போர்வையை நீக்கினுல் சமனமடையும். தன் சரீரத்தில் சூடான தண்ணீரை ஊற்றுவது போன்ற உணர்ச்சி. தலைமேலும் அபானம், இருதயம் ஆகியவைகளிலிருந்தும் குளிர்ந்த தண்ணீர் சொட்டு சொட்டாக விழும் உணர்ச்சி.

விசேஷம்: கீழேபடுத்தாலும் மாடிப்படி ஏறினுலும் உபாதிகள் அதிகரிப்பு.

ஒப்பிடுதல்.

கன்னபிஸ் இண்டிகா, கன்னபிஸ் ஸடீவா இவ்விரு ஔஷதங்களுடைய மனக் குறிகளும் மூத்திரக் குறிகளும் ஒத்திருக்கின்றன. தலை தானுகவே திறந்துகொண்டும் மூடிக்கொண்டும் இருப்பதுபோன்ற உணர்ச்சியை இவ்விரு ஔஷதங்களும் குணப்படுத்துகின்றன. ஆனுல் கன்னபிஸ் இண்டிகாவில், நேரம் அளவு முதலியவைகளில் பிரமை இருக்கிறது. கன்னபிஸ் ஸடீவா புணர்ச்சி அவயவங்களிலும் மேக வெட்டையிலும் உபயோகமுள்ளது. மேலும் தண்ணீர் சொட்டும் குறி இவ்வௌஷதத்தில் இருக்கிறது.

மேகவெட்டையில் (அல்லது மூத்திர மேகத்தில்) ஒப்பிடுதல்.

அர்ஜண்டம் நைட்ரிகம்: இரத்தம் கலந்த மூத்திரம். ஆண் குறியில் எரிச்சலும், வலியும் வலி பின்னிருந்து முன்னுக்கு வருதல். காலாடியம்: நபும்சகத்துவம், துர்நாற்றமுள்ள மூத்திரம். கன்னபிஸ் ஸடீவா: அழர்ச்சி ஆண் குறியில் வீக்கம், கெட்டியான சீழ் கலந்த போக்கு, மூத்திரம்விட சிரமம், அடிக்கடி வருதல். கந்தாரிஸ்: ஆண் குறி அதிக வலியுடன் விரைத்தல். காப்ஸிகம்: இரண்டாவது கட்டம். பாலேடை போன்ற போக்கு, மூத்திரக் கோசத்தில் அதிக வலி, வலியுடன் ஆண் குறி விரைத்தல், குளிர்ந்த தண்ணீரினுல் சமனம். கோபைபா: சீழ் கலந்த போக்கு. அழர்ச்சிக் குறிகளையெல்லாம் வெகு சீக்கிரத்தில் குணமாக்கவல்லது. தூஜா: மேகவெட்டைக்குப் பிறகு உண்டாகும் நபும்சகத்துவம். க்ளமேடிஸ் எரேக்டா: சரிவர சிகிச்சை செய்யப்படாத மேக வெட்டை, அதனுல் விரைகளில் அழர்ச்சி. ஜேல்ஸிமியம்: மேகவெட்டையின் கடுமையான நிலைமை, கை கால்களில் வலி. ஹைட்ராஸ்டிஸ்: நாட்பட்ட மூத்திர மேகம். மனதிலும், சரீரத்திலும் சோர்வு. கெட்டியான பிசுக்கென்றிருக்கும் போக்கு. ஹைட்ரோகோடைல் ஆஸியாடிகா: பல வருஷங்களாக உள்ளமுக்கப்பட்ட மேக வெட்டை. மேர்கூறியஸ்: ஆண் குறியின் நுனித்தோல் குறுகி அதனுல் நுனிப்பாகத்தைத் திறக்கமுடியாமை. பச்சையான வலியில்லாத போக்கு. இரவில் அதிகரிப்பு. மேர்கூறியஸ் கரோஸிவஸ்: போக்கு முதலில் தண்ணீர் போன்றும் நாளடைவில் கெட்டியாகவும் பச்சை நிறமடைந்தும் இருக்கும். மூத்திரம் கழித்த பிறகு எரிச்சலும் கடுப்பும். நேட்ரம் மூர்: காரமுள்ள மாதவிடாய் அல்லது வெள்ளைப்பாடுள்ள ஸ்திரீகளிடம் சம்போகம் செய்ததினுல் ஏற்பட்ட மேக

வெட்டை. மூத்திரம் கழித்த பிறகு எரிச்சல். அர்ஜெண்டம் நைட்ரிகம் என்னும் ஔஷதத்தை இஞ்சக்ஷன் செய்து கொண்டதால் ஏற்பட்ட கெடுதலான குறிகள். நேட்ரம் ஸல்ப்: கெட்டியான பசும் மஞ்சள் நிறமுள்ள போக்கு, வலி இல்லாமை. ஈர நப்புள்ள பருவங்களில் உபாதி அதிகம். நைட்ரிக் ஆஸிட்: மஞ்சள் அல்லது இரத்தம் போன்ற போக்கு, வலியுடன் மூத்திரம் வெளியாகுதல், நீடிக்கும் குணம். நக்ஸ்வாமிகா: அடிக்கடி வெளிக்குப்போக அல்லது மூத்திரம்விட தூண்டுதலுடனும் எரிச்சலுடனும் உள்ள தண்ணீர் போன்ற போக்கு. பெட்ரோலியம்: நாட்பட்ட உபாதி, மூத்திரக் கோசத்தில் அரிப்பு. பல்ஸடில்லா: கெட்டியான மஞ்சள் அல்லது பச்சை நிறமுள்ள போக்கு. பைடோலக்கா: மூத்திர மேகம், விரை அழற்சி. ஸர்ஸபரில்லா: ஜலதோஷம், குளிர்ந்த பருவம் அல்லது பாதரஸம் முதலியவைகளால் மேக வெட்டை உள்ளமுக்கப்படுவதும் பிறகு வாதரோகம் ஏற்படுவதும். ஸைலீஷ்யா: கெட்டியான நாற்றமுள்ள போக்கு, அல்லது சீழையொத்த போக்கு. டெரபிந்தின: கடுப்பு வலி, வலியுடன் சொட்டு சொட்டாக மூத்திரம் பிரிதல். ஸல்பர்: மூத்திர மேகத்தில் மூத்திரம் விடும்போது எரிச்சல்.

காக்டஸ் க்ராண்டிப்ளோரஸ்
(Cactus Grandiflorus)

இறுக்கம், சுருக்கம், உடம்பு முழுவதும் இழுக்கும் வலிகள். மார்பைச் சுற்றிலும் கயிறுபோட்டுக் கட்டியிருக்கும் உணர்ச்சி, அதனால் மார்புக்கு சுபாவமாகவுள்ள அசைவுகள் தடைப்படுதல். தலை, மார்பு, வயிறு, யோனி, இருதயம் முதலியவைகளில் கயிற்றினால் இறுகக் கட்டிய உணர்ச்சி. இருதயத்தை ஒரு இரும்புப் பட்டையால் இறுக்கும்

உணர்ச்சி. இருதயத் துடிப்பு, அசைவினாலும், அழுக்குவதினாலும் இடது பக்கமாகப் படுப்பதினாலும் அதிகரித்தல். சாவைப்பற்றிய பயம் இருக்குமென்றாலும் அகோனைட்டில் உள்ள கவலை கிடையாது. தன்னுடைய வியாதி நிவாரணமாகாது என்று நினைத்தல். இடது கையில் மறமறப்பு, நீர்ச்சுரப்பு. இரத்த ஓட்டம் விட்டு விட்டும் ஒழுங்கற்றும் இருக்கும். இரத்தப் பெருக்கு.

மனம்: வருத்தம், கோபம், கதறுதல். பிறர் ஆறுதல் சொன்னால் குறிகள் அதிகமாகுதல். சிடுசிடுத்த குணம், பதில் சொல்லமாட்டார். சாவு பயம். தன் வியாதி குணமாகாதென்று நினைத்தல். கவலைக் குறி இல்லை.

தலை: எழுந்திருக்கும்பொழுதும் ஆழ்ந்து உள்மூச்சு வாங்கும்போதும் கிறுகிறுப்பு. இரத்தத்திரட்சி, அதனால் முகம் சிவந்தும் இரத்தம் செறிந்தும் இருக்கும். மூளையில் இரத்தத்திரட்சி, சிவந்த கண்கள், மூச்சுத் திணறுதல். வெய்யிலில் அடிபட்டதினால் ஏற்பட்ட சுரம். தலையை இறுக்கும் உணர்ச்சி. உச்சந்தலையில் கனமான வஸ்துவினால் அமுக்குவதுபோன்ற உணர்ச்சி, இந்த ஒரு குறி மாத்திரம் அமுக்குவதினால் சற்று சமனமடையும். பேசினாலும், ஒலி, ஒளி முதலியவைகளினாலும் அதிகரிக்கும். பொட்டுகளில் (வலது) புடைக்கும் வலி, மண்டை வெடித்துவிடுமென்று தோன்றுதல். தலைவலி, வலப்பக்கத்தில் அதிகம்.

கண்கள்: மங்கலான பார்வை, கண்களுக்கு முன்பாக வட்டம் வட்டமாகச் சிவப்பு வெளிச்சம் தோன்றுதல்.

முகம்: வெளுப்பு, நரம்பு சம்பந்தமான இழுப்புகள்.

மூக்கு: அதிக இரத்தத் திரட்சியினால் ஏராளமான இரத்தப் பெருக்கு, சீக்கிரம் நின்றுவிடுதல்.

தொண்டை: மூச்சுத் திணறும்படியான இறுக்கம், அடிக்கடி விழுங்குவதற்குப் பிரியப்படுதல்.

வயிறு: ஏராளமான இரத்தம் வாயாலெடுக்கப்படுதல் வயற்றிலும் குடலிலும் அழற்சி. கனத்த உணர்ச்சி, வயிற்றினுள்ளே துடித்தல், இறுக்கிய உணர்ச்சி.

மலம்: வலியுள்ள காலை வயிற்றுப்போக்கு. அபானத்தில் பளு இருக்கும் உணர்ச்சி, வெளிக்குப்போக பலமான இச்சை, ஆனால் ஒன்றும் வெளியாகாமை. இரத்தப் பெருக்குள்ள மூலங்கள். மலச்சிக்கல். இருதய உபாதியுடன் ஒழுங்கற்ற வயிற்றுப்போக்கு.

மூத்திரம்: அடிக்கடியும், ஏராளமாகவும் இரத்தம் கலந்தும் இருக்கும்.

பெண்: கருப்பையில் இறுக்கும் உணர்ச்சியுடன் கூடிய மாதவிடாய், அதனால் கதறுதல். தவணைக்கு 8 நாட்கள் முன்னதாகவே மாதவிடாய் தோன்றுதல். கறுப்பாகவும் பிசுக்கென்றும் கட்டி தட்டியுமுள்ள போக்கு, கீழே படுத்தவுடன் (இருதய உபாதிகளுடன்) நின்றுவிடுதல்.

சுவாசாசயம்: சுத்தமான காற்றை சுவாசிப்பதால் களைப்பு நீங்குதல். மாடிப்படி ஏறும்போது திக்குமுக்காடுதல். ஏராளமான கோழை அல்லது கெட்டியான மஞ்சள் நிறமுள்ள கபத்துடன் அடிக்கடி இருமல். இருமல் வரண்டும் இரவில் அதிகரித்தும் இருத்தல். சுவாசாசயங்களிலிருந்து அதிக இரத்தத் திரட்சியினால் இரத்தப் பெருக்கு ஏற்படுதல். அதிகத் துடிப்புடன் கூடிய பிராங்கைல் குழாய்களின் அழற்சி. உள்ளிருக்கும் கபத்தினால் மூச்சுத் திணறுதல். படுக்கமுடியாது, அதனால் உட்கார்ந்தே இருக்க நேருதல். மார்பின் நடுவில் இறுக்க உணர்ச்சி.

இருதயம்: காலை அல்லது இரவு 11 மணிக்குத் தோன்றும் மார்பு உபாதிகள். கஷ்ட சுவாசமும் இறுக்கும் உணர்ச்சியும். இருதயத்தைச் சுற்றிலும் இரும்புப் பட்டையைவைத்து இறுக்கும் உணர்ச்சி. அதனுல் அதன் சுபாவ வேலைகள் தடைப்படுதல். நாட்பட்ட இரத்தத் திறட்சி. உபாதி இடம் மாறும் தன்மை. அதாவது முழங்காலிலிருக்கும் வாதரோகம் இருதயத்தைப் பீடித்தல். இடது பக்கமாகப் படுக்க முடியாமை. இருதயத் தொந்திரவுகளால் ஏற்படும் இரத்தப்பெருக்கு. இடது கையில் மறமறப்புடன் இருதயத்தில் வலியும் நீர் வீக்கமும். கீழே படுக்கமுடியாமை.

கை, கால்கள்: கைகளில் கனத்த உணர்ச்சியும் ஜந்துக்கள் ஊரும் உணர்ச்சியும். மூட்டுகளில் கடுமையான அழர்ச்சியுடன் கூடிய வாதரோகம். முதன் முதலில் கைகளில் ஆரம்பித்தல், இறுக்குவது போன்ற உணர்ச்சி. கைகளிலும் (இடது) கால்களிலும் பாதங்களிலும் நீர்வீக்கம், மறமறப்பு சில்லிப்பு. வலி இடது கை வழியாகக் கீழே தெறிப்பது போன்றிருத்தல்.

நரம்புகள்: பொதுவான பலவீனம், களைப்பு, அதிக மனச்சோர்வு, தூக்கமின்மை, மயக்கம்.

சுரம்: காலை அல்லது இரவு 11 மணிக்குத் தவறாமல் குளிர் வருதல், இந்தக் குளிர் உடம்பைப் போர்த்துவதினுல் சமனமாகாமை. முதுகும் கைகளும் பனிக்கட்டி போன்று சில்லிடுதல். வெப்பினுல் அதிகரிக்கும் முறைச் சுரம், தலையில் இரத்தத் திறட்சி, முகத்தில் இரத்தச் சுரப்பு. குறைவான மூத்திரம், இருதய உபாதிகள், மூத்திரப் பையிலிருந்தோ அல்லது குடல்களிலிருந்தோ இரத்தப் பெருக்கு. கஷ்ட சுவாசத்துடன் வலிப்புகள். தலை வலி,

தாகம், நள்ளிரவு வரை பிரக்ஞை வராமலேயே இருத்தல், பிறகு அதிக தாகமும் வியர்வை பொழிதலும். குளிருக்குப் பிறகு வியர்த்தல்.

உணர்ச்சி: சரீரம் முழுவதும் கூண்டில் அடைக்கப் படுவது போலவும், அக்கூண்டின் கம்பிகளை இறுக்கிக் கொண்டே யிருப்பது போலவும் உணர்ச்சி.

முறிவு: அகோனைட், காம்போரா, சைனு.

விசேஷம்: இடது பக்கமாகப் படுத்தல், நடத்தல், மாடிப்படி யேறுதல், காலை அல்லது இரவு 11 மணி நேரம் முதலியவைகளால் உபாதிகள் அதிகரித்தும் திறந்த வெளி யில் சமனமாகியும் இருக்கும்.

காக்குலஸ் (Cocculus)

இவ்வௌஷதம் அடர்த்தியான மயிரில்லாத ஸ்திரீ களுக்கும், குழந்தைகளுக்கும், கட்குடியர்களுக்கும், எப் பொழுதும் புத்தகம் படித்த வண்ணமே இருக்கும் மனிதர் களுக்கும் உபயோகமாகும். மூளை, முள்ளந்தண்டு ஆகிய அவயவங்களில் இதற்கு முக்கியமான உபயோகம். கப்பல் பிரயாணம் செய்யும் போது ஏற்படும் உபாதிகள். உடம்பின் கீழ்ப் பாகத்தைப் பிடிக்கும் பாரிசவாயு. ஒரு பக்கத்தில் மாத்திரம் பிடிக்கும் பட்சவாயு. குமட்டல், வாயாலெடுப்பு, பலமற்ற முள்ளந்தண்டு முதலியவைகளுடன் தசை சம்பந்த மான பாரிசவாயு. எழுந்திருந்தவுடன் குமட்டலுடன் கிறு கிறுப்பு, கீழே படுத்தால் சமனமடையும். கருப்பமாயிருக் கும்போது ஏற்படும் குமட்டலும் வாயாலெடுப்பும். ஆகா ரத்தின் வாசனை அடித்தாலே குமட்டுதல். இரவில் கண் விழிப்பதால் ஏற்படும் உபாதிகள். உப்பிசத்துடன் வயிற்று

வலி. மாதவிடாய் நின்றுவிட்டதாலும் மற்றும் கோபத்தினாலும் ஏற்படும் புத்தி மாறுாட்டம். மாதவிடாய்க்குப் பதிலாகவோ அல்லது இடைக்காலத்திலோ வெள்ளைப்பாடு. கழுத்துத் தசைகளின் பலவீனத்தினால் தலையைத் தூக்க முடியாமை. குதிரை சவாரி செய்ததினால் ஏற்பட்ட உபாதிகள். படகில் அல்லது ரயிலில் செல்லும்போது குமட்டல். கால்கள் முதலிய அவயவங்களில் பலவீனமான அல்லது ஒன்றுமே இல்லாதது போன்ற உணர்ச்சி. உணர்ச்சி மந்தமாயிருத்தல். சரீரத்தைக் கிள்ளினால் ஒரு நிமிஷம் கழிந்த பிறகுதான் கத்துவார். கை கால்களில் மறமறத்தல். கை கால்கள் வலியுடன் முடங்கிக் கொள்ளுதல், அசைவினால் அதிகரிப்பு.

மனம்: விஷயங்களை மெதுவாக கிரகிக்கும் தன்மை, தன்னுடைய எண்ணத்தை வெளியிடப் பொருத்தமான வார்த்தைகள் ஞாபகத்திற்கு வராமை. வியாதியஸ்தரை இரவும் பகலும் கவனித்து வந்ததினாலும் கவலையினாலும் அதிகமாகக்களைத்து அதனாலேற்படும் உபாதிகள். நொந்து கொள்வதினாலும் தூக்கமின்மையாலும் ஏற்படும்உபாதிகள். பொழுது வெகு சீக்கிரத்தில் போய்விடுவது போன்று தோன்றுதல். துக்ககரமான விஷயங்களிலேயே மனது பதிந்திருத்தல், அதனால் மற்ற விஷயங்களைப் பொருட்படுத்தாமை. எப்படிப் பேசினாலும் பிறர் தன்னை அவமானப்படுத்துகிறார்களென்று நினைத்தல். அல்ப விஷயங்களுக்கெல்லாம் கோபம் வருதல், வெகு சுலபமாகத் திடுக்கிடுதல். வருத்தம்.

தலை: கள் போதையினால் ஏற்பட்டது போன்ற மந்தமான கிறு கிறுப்பு. படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதும் தலையைத் தூக்கும் போதும் குமட்டல், மயக்கம் முதலியவை உண்டாகுதல். அதனால் படுக்கவேண்டியதாகி

விடும். கண்கள் கிழிந்துவிட்டனவோ என்ற உணர்ச்சியுடன் குமட்டலுள்ள தலை வலி, குளிர் காற்றினால் அதிகரிக்கும். நெற்றியில் துணியினால் இறுக்கக் கட்டியது போன்று துடிக்கும் வலி, வண்டி சவாரி செய்ததினால் அதிகரிக்கும். சாப்பிடுதல், குடித்தல் தூங்குதல் முதலியவைகளால் கலக்கமேற்படும். உபாதிகள் மல்லார்ந்து படுத்தல், மாலைவேளை, யோசனை செய்தல், ஒலி, ஒளி முதலியவைகளினால் அதிகரித்தும் வீட்டிற்குள் படுத்தால் சமனப்பட்டும் இருக்கும்.

கண்கள்: மங்கலான பார்வை, கண்கள் மூடினபடியே இருந்தபோதிலும் அடிக்கடி உருண்டுகொண்டே இருக்கும். கண் இமைகளில் பாரிசவாயு.

காதுகள்: தண்ணீர் வேகமாக ஓடிவருதல். செவிடு.

முகம்: வெளுத்தும் சுரந்தும் இருக்கும். வாயைத் திறக்கும்போது இழுக்கும் வலி. முகத்தில் சூடு, கதகதப்பான அறையிலிருக்கும்போது கன்னங்கள் சிவந்திருத்தல்.

தொண்டை: பட்சவாயு, தொண்டைச் சதை வளரும் நோய்க்குப் பிறகு விழுங்க முடியாமை. வரட்சி, எரிச்சல். நாக்கின் பாரிசவாயுவினால் பேசமுடியாமை.

வயிறு: பசியின்மை, உணவை வெறுத்தல். உணவின் வாசனையோ அல்லது உணவைப் பற்றி நினைத்தாலோ குமட்டல் ஏற்படுதல். சலதோஷம் பிடித்ததினாலோ அல்லது வண்டிச் சவாரி செய்ததினாலோ ஏற்படும் குமட்டலும் வாயாலெடுப்பும். படகு ஆற்றில் போவதை தூரத்தில் இருந்து பார்த்தாலும் குமட்டல். பசியின்மையுடன் வாயில் உலோகங்களின் ருசி. குடல்களை இருகற்களுக்கு

நடுவில் வைத்து நசுக்குவது போன்று கெண்டைவாங்குதல். வயிற்றில் புழு ஊறும் உணர்ச்சி.

அடி வயிறு: நடக்கும்போது அடி வயிற்றில் கூறிய கற்களைக் கொண்டு தேய்ப்பது போன்ற உணர்ச்சி. அடி வயிறு துருத்தியிருத்தல் குடையும் சப்தம். நள்ளிரவில் பொருமலுடன் வலி, அபான வாயு பரிவதனால் யாதொரு நன்மையும் இல்லாமை, இருமுவதினால் அதிகரிக்கும். அரைப்பூட்டு சம்பந்தமுள்ள குடற்பிதுக்க வியாதி, அரைப் பூட்டில் ஏதோ அடைத்து வைத்திருக்கும் உணர்ச்சியும் அவை வெளியில் வந்துவிடுவது போலும் இருத்தல். பிடிவாத குணமுள்ள மலச்சிக்கலுடன் கூடிய தொப்பூழ் சம்பந்தமான குடற் பிதுக்கத்தில் நக்ஸ்வாமிகா கொடுக்கப் பட்டுப் பயனேற்படாவிடில் இவ்வௌஷதம் கொடுபடலாம். ஒரே பக்கமாகப் படுப்பதால் சௌகரியம். உப்பிசம், வலி, முதலியவைகளுள்ள குடற்பிதுக்கம்.

மலம்: வண்டி சவாரி, படகில் போவது முதலிய வைகளால் ஏற்படும் வயிற்றுப் போக்கு. உள் அவயவங்கள் ஒழுங்காக வேலை செய்யாததினாலேற்பட்ட மலச்சிக்கல்.

பெண்: மாதவிடாய் 15 நாட்களுக் கொரு முறை யும் ஏராளமாகவும் இருக்தல். மாதவிடாயின்போது நிற்கக்கூட முடியாத அவ்வளவு பலவீனம், வெட்டும் வலி. அடிவயிற்றில் இழுத்துப் பிடிக்கும் வலி, அசைவினாலும் சுவாசம் விடுவதினாலும் அதிகரித்தல். மாதவிடாய்க்குப் பதிலாக வெள்ளைப்பாடு தோன்றுதல்.

கருப்பம்: கீழ் முதுகில் கடுமையான இழுத்துப் பிடிக்கும் வலி. பிரசவத்திற்குப் பிறகும் வியாதியஸ்தரைப் பக்கம் மாற்றிப் படுக்க வைத்ததினாலும் ஏற்பட்ட வலிப்

புகள். சருவுற்றிருக்கும்போது ஏற்படும் குமட்டல், வாயாலெடுப்பு.

இருதயம்: கழுத்தை அசைக்கும்போது விரைப்பாகவும் வலியுடனும் இருத்தல். கீழ் முதுகில் இழுக்கும் வலி. தலையின் கனத்தைத் தாங்க கழுத்துக்குப் பலமின்மை. நடக்கும்போது தள்ளாடுதல்.

கை, கால்கள்: கைகள் ஒன்று மாற்றி ஒன்று மறத்துப் போதல், அல்லது ஒரு சமயத்தில் கைகளும் மறுசமயம் கால்களும் தூங்கிப்போகும். கைகள் சில சமயம் சில்லென்றும் சில சமயம் சூடாகவும் இருத்தல். முழங்கால்கள் தள்ளாடுதல். சலதோஷம் பிடித்த பிறகு நீர்ச்சுரப்பு ஏற்படுதல், உட்கார்ந்திருக்கும் போது உள்ளங்கால்கள் மறத்துப்போதல் சாப்பிடும்போது கைகளில் நடுக்கம். தொடைகளிலும் தோள்பட்டைகளிலும் கைகளிலும் காயம் பட்ட உணர்ச்சி.

கேபிகள்: இளைப்பு. இரத்த சோகை, வாதரோகம், மூட்டுகளில் நொருங்கும் சப்தம். பாரிசவாயு சம்பந்தமான வலிகள்.

சுரம்: பின் தலையில் வலி. உணவைக் கண்ட உடனே அல்லது வாசனை அடித்த உடனே குமட்டல். சில்லிப்பு சூட்டினால் சமனமாகாமை. வியர்வையுள்ள சில்லிப்பு.

தூக்கம்: கண் விழிப்பதால் ஏற்படும் உபாதிகள்.

நரம்புகள்: களைப்பு. நிற்கவோ அல்லது உரக்கப் பேசவோ முடியாத பலவீனம். உட்கார்ந்திருக்கும்போதே தூங்குதல். காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன்

காக்கை வலிப்பு, பிறகு சுரம். மூளை, முள்ளந்தண்டு பலவீனம்.

விசேஷம்: சாப்பிடுதல், குடித்தல், தூங்குதல், பேசுதல், வண்டி சவாரி, சுருட்டுக் குடிப்பது, களைப்பு, திறந்த வெளியில், கருப்பமாயிருக்கும் காலம், முதலியவைகளினால் உபாதி அதிகரிக்கும்.

காட்மியம் ஸல்ப் (Cadmium Sulph)

இவ்வௌஷதத்தில் கவலை, களைப்பு, வயிற்றில் தொந்திரவு, இடைவிடாத வாயாலெடுப்பு, (வாயாலெடுக்கப்படும் பதார்த்தம் சாதாரணமாகக் கறுப்பாகவே இருக்கும்) முதலியவைகளும் சரீரத்தை அசைப்பதில் வெறுப்பும் இருக்கிறது. முதல் நான்கு குறிகள், ஆர்ஸனிகம், இபிகாக்உனு, ஆண்டிமோனியம் டார்டாரிகம், நக்ஸ்வாமிகா, பாஸ்பரஸ், வேராட்ரம் முதலிய ஔஷதங்களிலும் கடைசிக்குறி பிரயோனியா, கோல்சிகம் ஆகிய ஔஷதங்களிலும் காணப்படும். தசைகளில் வலிப்புப் போன்ற உபாதிகள், அதாவது ஸிங்கம் என்னும் ஔஷதத்தைப் போன்று கைகள் தூக்கிப் போடுதல், உட்கார்ந்திருந்தாலும், சாப்பிட்டாலும் சமனம். சில நிமிஷங்களுக்கொரு முறை கெட்டியான கோழை கும்மட்டலுடன் வெளியாகுதல். சாப்பிட்ட உணவு, பித்தம், கறுப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள கோழை, முதலியவை வாயாலெடுக்கப்படுதல், வயிற்றில் பிசையும் வலி, முகத்தில் குளிர்ந்த வியர்வை வயிற்றிலும் தொப்பூழிலும் வெட்டும் வலியுடன் மலங்கழிக்கத் தூண்டுதல். ஆர்ஸனிகத்தின் குறிகளுடனுள்ள வயிற்றுக் கடுப்பு, ஆனால் ஆர்ஸனிகத்தின் அமைதியின்மை மாத்திரம் இருப்பதில்லை. கண் விழிகளின் மேல்தோலில் மங்கல்.

மெதுவாகத் தோன்றும் அழற்சி. கண்ணிமைகளில் பாரிச வாயு, இது சாதாரணமாக ஒரு கண்ணையும் முகத்தின் ஒரு பாகத்தையும் மாத்திரமே பீடிக்கும். குளிர்ந்த தண்ணீர் குடிப்பதினால் மயிர் கூச்சலெடுத்தல். எரிச்சல், களைப்பு, வாயாலெடுப்பு, முதலியவைகளுள்ள வயிற்றுப் புற்றுகள். சுரத்தில் களைப்பு, வயிற்றில் கொந்திரவு, சூடு, அமைதியின்மை ஆகியவை இருப்பினும் வியாதியஸ்தர் சற்றுக்கூட அசையமாட்டார், சாப்பிடவும் முடியாது. நெருப்பின் சமீபத்தில் உட்கார்ந்திருந்தாலும் சில்லிப்பும் குளிரும் இருத்தல். சுரத்தில் பனிக்கட்டி போன்ற சில்லிப்பு. தூங்கின பிறகும், திறந்த வெளியிலும் அதிகரிப்பு. இளைப்பாறுதல், சாப்பிடுதல் முதலியவைகளினால் சமனம்.

காப்ஸிகம் (Capsicum)

கொழுத்த உடலும் மந்த குணமும் உள்ள மனிதர்கள். எரியும் உணர்ச்சி. குழகுழப்பான பூந்தசைகளின் அழற்சி. மூத்திரம் விடும்போதும் மலங்கழிக்கும்போதும் எரிச்சல். வெளிக்காற்றில் செல்ல நடுக்கம், பயம். எப்பொழுதும் உடம்பு சில்லென்றிருத்தல். கொழுத்தும் விகாரமாகவும் அழுக்கடைந்துமுள்ள சரீரங்கள் ஒவ்வொருதடவை பலமாக இருமும்போதும் நாற்றமுள்ள ஏராளமான அபான வாயு பரிதல், எட்டியுள்ள அவயவங்களில் வலி. தோள் பட்டைகளினிடையே சில்லிப்பு. கொழுத்த சரீரங்களில் ஔஷதங்களினால் குறி மாறுதல்கள் ஏற்படாமை. வயிற்று உப்பிசத்துடன் வலி. மலம் கழிந்த பிறகு தாகம், ஒவ்வொரு தடவை தண்ணீர் குடித்த பிறகும் உடம்பு குலுக்குதல். இரத்தப்போக்குள்ள வயிற்றுக் கடுப்பு, மலம் வெளியான பிறகு முதுகு வலியும் தாகமும், சரீரத்தை அசைக்கவும் பயம். ஸ்திரீகளின் ஸ்தனம்போன்ற சீழ்க்கட்டிகள். குடிப்பழக்கத்தை நிறுத்த வல்லது.

மனம் : குழந்தைகள் அழுக்கடைந்தும் விகாரமாக வும் மாறுதல். தூக்குப்போட்டுக்கொள்ள விருப்பம். தூக்க மின்மை, சிவந்த கன்னங்கள் முதலியவைகளுடன் சொந்த ஊருக்குப் போகவேண்டுமென்ற ஏக்கத்தினுல் ஏற்படும் உபாதிகள். வெடுவெடுப்பு, கோபமேற்படும் தன்மை, எதி லும் குற்றங் கண்டுபிடிக்கும் குணம், சந்தேகம், பிடிவாதம். பயத்துடனும் கூக்குரலுடனும் விழித்துக்கொள்ளுதல். குடி மயக்கம். (குடிப் பைத்தியத்தைப் போக்க : சாப்பிடு வதற்கு முன்போ அல்லது குடிக்கவேண்டுமென்று தோன் றும்போதோ அல்லது குடிக்காததினுல் தளர்ச்சி ஏற்படும் போதோ இவ்வௌஷதத்தின் தாய்த் திராவகத்தை 10 சொட்டுகள் தண்ணீரில் விட்டுக் கலந்து கொடுக்கலாம்).

தலை : தலையை அசைக்கும்போதோ அல்லது இரு மும்போதோ நடக்கும்போதோ மண்டையோடு வெடித்து விடும்போன்ற தலைவலி. தலையைக் கைகளால் பிடித்துக் கொள்ளுதல். நெற்றியிலோ அல்லது தலையின் பக்கங் களிலோ துடிக்கும் புடைக்கும் வலி. தலைத் தோலில் அரிப்பு, எரிச்சல், சொரிந்தவுடன் சற்று சமனப்படினும் பிறகு அதிகரிக்கும்.

கண்கள் : பார்க்கும் வஸ்துக்கள் கறுப்பாகத் தோன் றுதல். காலையில் மங்கலான பார்வை, கண்களைக் கசக்கி னுல் சற்று பிரகாசம் அடைதல். கண்களில் தூசி இருப் பதுபோன்ற வலி.

காதுகள் : சீழ் வடிவதினுலேற்படும் செவிட்டுத் தன்மை. இருமும்போது வலி. காதின் உட்புறச் சவ்வில் குழி விழுதலும் அக்குழிகளில் கெட்டியான மஞ்சள் நிற முள்ள சீழ் நிறைந்து இருப்பதும். நடுக்காதில் நாட்பட்ட

சிழிருத்தல். காதுகளின் கீழேயுள்ள கோளங்களில் வலியுள்ள வீக்கம், சூடான காதுகள்.

மூக்கு: காலையில் படுக்கையில் இரத்தப் பெருக்கு. இருமும்போது இரத்தம் கலந்த சளி வெளியாகுதல்.

முகம்: கொழுத்த தொளதொளப்பான சரீரங்களில் கன்னங்கள் ஒருசமயம் சிவந்தும் மற்ெறாரு சமயம் வெளுத்தும் இருத்தல். சிவந்திருக்கும்போதும் கன்னங்களில் சூடு இல்லாமை. முகத்தில் வலி, தொட்டால் அதிகரித்தல். உதடுகளில் வீக்கம், வெடிப்பு, எரிச்சல்.

நாக்கு: நாக்கில் எரிச்சலுள்ள சிறு கொப்புளங்கள், தொட்டால் வலி உண்டாகும்.

தொண்டை: உள்நாக்கு நீண்டிருத்தல், கடினமான வஸ்துவின்மேல் அமுக்குவது போன்ற உணர்ச்சி. இடது டான்ஸிலில் அழர்ச்சி, இடது டான்ஸிலின் வலி. தொண்டை அழர்ச்சியுற்றும் கறுத்த சிவப்பாகவும் வரண்டோ அல்லது புள்ளிகள் போன்ற குழிப்புண்களுடனே இருக்கும். அதிக எரிச்சல். விழுங்குவதற்குச் சிரமம். தொண்டை, குடல்கள், மூத்திரப்பை முதலியவைகளிலிருந்து இரத்தம் கலந்த கோழையும் சீழும் சீதகமும் வெளியாகுதல். இறுக்கும் உணர்ச்சி.

வயிறு: வாயிலிருந்து நாற்றமடித்தல். சில்லிப்பு ஏற்பட்டவுடன் தாகம். தண்ணீரினல் சில்லிப்பு, பேதியாகுதல் உடம்பு குலுக்குதல், கடுப்பு. வயிற்றில் குளிர்ந்த உணர்ச்சி.

அடிவயிறு: சீதகம் அல்லது இரத்தம் தோய்ந்த மலத்துடன் தொப்பூழைச் சுற்றிலும் வலி. அடிவயிறு

வெடித்துப்போகுமென்று நினைக்கும் அளவு பருத்து விடுதல். வலி மார்புவரை பரவுதல்.

மலம்: அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாக, மலப்பை, மூத்திரப்பை முதலியவைகளில் எரிச்சலுடன் மலம் கழிதல். எரிச்சலினுல் தாகமேற்படும். அபானத்தில் எரிச்சலுடன் இரத்தம் கலந்த வயிற்றுக் கடுப்பு. மலம் கழிந்த பிறகு தாகம், தண்ணீர் குடித்தவுடன் உடம்பு நடுக்குதல், நடுக்கலுக்குப் பிறகு மலம், பிறகு முதுகு வலி. எரிச்சலும் துடிப்பும் உள்ள இரத்தம் கசியும் மூலங்கள் (முதுகு வலி இருக்கும்.)

மூத்திரம்: இருமும்போது மூத்திரப் பையின் கழுத்துப் பாகத்தில் பிடிப்பு வலிகள். எரிச்சல், கடுப்பு, வலி முதலியவைகளுடன் மூத்திரம் சொட்டு சொட்டாக வெளியேறுதல். மூத்திரம் விடும்போதும் முன்பும் பிறகும் எரிச்சல்.

ஆண்: (கொழுத்த மந்த குணமுள்ள மனிதர்கள்) பாலேடை போன்றும் இரத்தம் கலந்தும் நாற்றமும் கெட்டியான மஞ்சள் நிறமும் உள்ள போக்குடன் மேகவெட்டை. ஆண் குறி அதிக வலியுடன் விறைத்திருத்தல், பிறகு கொட்டும் வலி, குளிர்ந்த தண்ணீரினுல் சமனமடைதல். சுக்கில கோளங்களில் வலி, நபும்சகத்துவம், சில்லிப்பான பீஜம், விரைகளில் சத்து இல்லாமை.

சுவாசாசயம்: நாட்பட்ட கொற கொறப்பு. ஒவ்வொரு தடவை கடுமையான பலமான இருமல் ஏற்படும் போதும் தலையிலும் மார்பிலும் வெடித்துவிடும் போன்ற வலி. துர்நாற்றமுள்ள ஏராளமான அபானவாயு பரிதல். இருமலுடன் எட்டியிருக்கும் அவயவங்களில் பிடிப்பு வலி;

ஆனால் சுவாசத்தில் நாற்றமிருக்காது. இருமிய பிறகு தலை வலியினால் கதறுதல். மார்லையில் வரண்ட, கடினமான இருமல். இருமல் திடீரென்று விடாமல் ஏற்படுதல், சரீர முழுவதும் வலிப்பு போன்று தோன்றுதல். கஷ்ட சுவாசம். சிவந்த சில்லிட்ட முகம், கொழுத்த சரீரம், மந்த புத்தி இவைகளுடன் கூடிய நாட்பட்ட சலதோஷத்தில் முதலில் காப்ஸிகத்தையும் பிறகு ஸைலீஷியாவையோ அல்லது காலீ பைக்ரோமிகத்தையோ கொடுக்கலாம்.

கைகால்கள்: வலது சப்பை எலும்புகள் அழுகுதல், இடதுகால் இளைத்தும் வலியுடனு மிருத்தல். முழங்காலில் விண்ணென்றிருப்பதுடன் வலியும் இருத்தல். இருமல், உடம்பைப் பின்புறமாக வளைத்தல் முதலியவைகளால் அதிகரிக்கும் இடுப்புச் சந்து வாதம்.

சுரம்: ஒவ்வொரு தடவை தண்ணீர் குடித்த பிறகும் சில்லிப்பு, நடுக்குதல் முதலியவை காணுதல். சில்லிப்பு முதன் முதலில் முதுகிலோ (யூபடோரியம் பர்) அல்லது தோள்பட்டைகளின் நடுவிலோ தோன்றும். சில்லிப்பின்போது தாகம், முதுகுவலி, உடைக்கும் தலைவலி. சிலசமயம் சில்லிப்பு ஏற்படுவதற்கு முன்பும் தாகம் காணலாம். தண்ணீர் குடிப்பதினால் சில்லிப்பு அதிகரித்தும் உஷ்ணம், வெளியில் நடப்பது முதலியவைகளால் சமன மாகியும் இருக்கும். சில்லிப்பு விட்ட பிறகு வியர்வையும் தாகமும். எரிவது போன்ற சுரம் பிறகு தாகத்துடன் சில்லிப்பு. அசைவு, ஏராளமான வியர்வை முதலியவை களால் சமனம். மண்ணீரல் பெருக்கத்துடன் ஏற்படும் முறைச் சுரங்கள்.

கேபிகள்: தளர்ந்த தசைநார்கள். பருத்த சரீரம். கோளங்களில் வீக்கம், முக்கியமாக காதுப்பாக கோளங்கள்.

சருமம்: இரத்தம் சுரந்த, தொள தொளப்பான, கசகசப்பாகவும் சில்லிட்டும் இருக்கும் சருமம். அரிப்பு சொறிந்தால் அதிகரிக்கும்.

போது: பருத்த, விகாரமான சரீரம். மந்தமாயும் சிறு விஷயத்திலும் பிறர் தன்னை அவமானம் செய்கிறார்களென்று நினைக்கும் குணம்.

விசேஷம்: குளிர்காற்று, சாப்பிட்ட பிறகு, குடித்த பிறகு, காற்றடித்தல், அசைவு முதலியவைகளால் உபாதிகள் அதிகரிப்பு. கொஞ்சநேரம் விடாமல் நடந்தாலும் உஷ்ணத்தினாலும் சமனம்.

கள் குடித்து போதையிலிருப்பவர்களுக்கு இவ்வௌஷதத்தின் தாய்த் திராவகத்தை 10 முதல் 30 சொட்டுகள் கொடுக்க மயக்கம் சற்றுத் தெளிந்து வீட்டுக்குப் போய்ச் சேரமுடியும்.

இருமலினால் அவயவங்கள் பாதிக்கப்படும் குறியில் ஒப்பிடுதல்.

நக்ஸ்வாமிகா: தொப்பூழில் வலி. பேர்ரம்பாஸ்: இடது தோள்பட்டையில் வலி. ஸிங்கம்: விரைகளில் வலி. பிரயோனியா, செலிடோனியம், அமோனியம் கார்ப், நைட்ரிக் ஆஸிட்: இடுப்பு எலும்புகளில் வலி. ஸல்பர், அலூமினா, பெல்லடோன்னா, காப்ஸிகம்: கழுத்துப் பாகங்களில் வலி. அமோனியம் கார்ப், கல்கேரியா ஸல்ப், காலீ பைக்ரோமிகம், பல்ஸடில்லா: இடுப்புப் பாகங்களில் வலி. பெல்லடோன்னா, பிரயோனியா, காப்ஸிகம், கோனியம், நேட்ரம் மூர், பாஸ்பரஸ், ஸோரினம்,

ஸ்குவில்லா, ஸல்பர்: தலையில் வலி. காப்ஸிகம், காஸ்டிகம்: இடது சப்பையில் வலி.

கபியா க்ரூடா (Coffea Cruda)

தூக்கமின்மை தீட்சண்ணியமான ஞாபகசக்தி. மனமும் சரீரமும் நள்ளிரவுவரை வழக்கத்திற்கு விரோதமாக சுறுசுறுப்புடன் வேலை செய்துகொண்டால், (இதனால் தூக்கம் கெடுதல்) தாங்கமுடியாத வலிகளினால் வியாதியஸ்தர் ஏக்கம் கொள்ளுவார். ஒரு பக்கத் தலைவலி. தலையில் ஆணி அடிப்பதுபோன்றிருக்கும் தலைவலி. முகத்தில் நரம்பு சம்பந்தமான இழுப்பும், வலிகளும், குளிர்ந்த ஒற்றிடங்களினால் சமனம். திடீரென்று கேள்விப்பட்ட சந்தோஷ சமாசாரத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்கு. பல்வலி, குளிர்ந்த ஒற்றிடங்களினால் சமனமடைதல்.

மனம்: ஆவேசமுற்ற அல்லது மிகுந்த சந்தோஷமுள்ள நிலைமை. யோசனைகள் நிறைந்திருத்தல், அந்த யோசனைகளை நிறைவேற்ற அவசரப்படுதல். மனதாலும் சரீரத்தாலும் வழக்கத்திற்கு எதிரிடையாக வேலை செய்தல் அதனாலும் மனவெழுச்சியினாலும் தூக்கமின்மை. குழந்தை வெகு சுலபமாக அழுவதும் சிரிப்பதும். அழுதுகொண்டிருக்கும்போதே நடுவில் சிரித்தல். திடீரென்று ஏற்படும் சந்தோஷ சமாசாரங்களால் உண்டாகும் உபாதிகள். அமிதமான மனவெழுச்சியினால் ஏற்படும் வலிப்புகள். எல்லா உணர்ச்சி அவயவங்களிலும் அதிக உணர்ச்சி, அதாவது சிறிய நுணுக்கமான எழுத்துக்களையும் நன்கு படித்தல், சிறு சப்தங்களையும் கிரகிக்கும் தன்மை.

தலை: இரவிலும் சாப்பிட்ட பிறகும் விட்டு விட்டு வரும் வலி, வாயை மெல்லுவது, சூடான பானங்கள், சூடு

முதலியவைகளால் அதிகரித்தும், பனிக்கட்டி, திறந்த வெளி, சில்லென்ற பானங்களை வாயில் வைத்திருப்பது முதலியவைகளால் சமனம். தலையில் ஆணிவைத்து அடிப்பதுபோன்ற வலி.

வாய்: பல்வலி. சில்லென்ற தண்ணீரை வாயில் வைத்திருப்பதால் சமனமடைந்தும் சூடான பதார்த்தங்களால் அதிகரித்தும் இருத்தல்.

பெண்: ஏராளமான அதிக நாட்கள் நீடிக்கும் மாதவிடாய், போக்கு கறுப்பாகவும் கட்டிதட்டியும் இருக்கும். பெரிய கறுப்பான உருண்டைகளுள்ள அதிக போக்குள்ள மாதவிடாய், அசைந்தால் அதிகரித்தல். யோனி உதடுகளில் காமத்தைக் கிளப்பும் அரிப்பு, அவ்விடங்களில் வலி, மாதவிடாயின்போது துணிவைக்க முடியாமை. கட்டிகளுடனும் வலியுடனுமுள்ள பிரசவ வேதனையை யொத்த மாதவிடாய்.

இருதயம்: கடுமையான, ஒழுங்கீனமான துடிப்பு, கை கால்களில் நடுக்கம். சிறிய, பலவீனமான நாடி.

நரம்புகள்: மனேவெழுச்சி அல்லது உழைப்பினல் மயக்கம். குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் வலிப்புகள், பற்களைக் கடித்தல், மனவெழுச்சிக்குப் பிறகு கைகால்களில் சில்லிப்பு. வலி சப்தத்தினல் அதிகரிக்கும். முகத்தில் நரம்பு சம்பந்தமான இழுப்பு வலிகள், குளிர்ந்த ஒற்றிடங்களினல் சமனம்.

தூக்கம்: மன அல்லது சரீரக் கிளர்ச்சியினல் தூக்கமின்மை. பலவிதமான யோசனைகளினல் தூக்கம் தடைப்படுதல். (உயர்ந்த வீரியத்தில் உபயோகிக்கவும்)

சருமம்: வரண்ட, சிவந்த சருமம் (சுரத்திலில்லை).

விசேஷம்: அதிகமான சந்தோஷம், குளிர்ச்சியான திறந்த வெளி முதலியவைகளால் உபாதிகள் அதிகரிப்பு. கதகதப்பு, கீழே படுப்பது, வாயில் பனிக்கட்டி வைத்திருப்பது முதலியவைகளால் சமனம்.

காம்போரா (Camphora)

திடீரென்று மரணக்களைப்பு ஏற்படுதல். தசைகள் முறுக்கிக்கொள்ளுதல். கடுமையான வலிப்புகள். விட்டு விட்டு வரும் நரம்பிழுப்புகள். பனிக்கட்டிபோன்ற சில்லிப்பான சரீரம், பலவீனமான நாடி முதலியவைகளுடன் காயங்களாலேற்பட்ட அதிர்ச்சி. சரீரம் சில்லென்று இருப்பினும் போர்த்திக்கொள்ள விரும்பாமை. ஜலதோஷம் வரும் நிலைமை. (உடம்பில் வியர்வை கண்டவுடன் ஔஷதத்தை நிறுத்தவேண்டும்.) காலரா என்னும் விஷபேதியில் பேதியாகாமலோ அல்லது ஒருதடவை பேதியான பிறகோ ஏற்படும் மரணக்களைப்பு. சில்லிப்பும் சூடும் மாறிமாறி வருதல்.

மனம்: ஞாபகசக்தியை இழத்தல், படிப்படியாக சரீரத் தளர்ச்சி, இருதயத்துடிப்புடன் கவலை. மன வெழுச்சி அல்லது பிரக்ஞை தப்புவதும் சில்லிப்பும். சில்லிப்பு இருக்கும்போதும் போர்த்திக்கொள்ள விரும்பாமை. கவலையும் அமைதியின்மையும், இருட்டில் தனியாக இருக்கப் பயம். கடுமையான கோபம்.

தலை: கீழே குனிந்தால் கிறுகிறுப்பு. நடக்கும்போது தடுமாறுதல். அதிக இரத்தத் திரட்சி. பின் தலையில் புடைக்கும் தலைவலி, செம்மட்டியினால் அடிப்பதுபோன்றிருத்தல். சூடான தலை, சிவந்த முகம், சில்லிட்ட கால்கள்.

நின்றால் சமனம், குனிந்தால் அதிகரிப்பு. தலையில் இருக்கும் வலி விரல்களின் நுனிகளுக்குச் செல்லுதல், இத்துடன் நடுக்கமும் மனோவேதனையும், வியாதியைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தால் சமனம் (நேர் விரோதம் ஆக்ஸாலிக் ஆஸிட்).

கண்கள் : பார்க்கும் வஸ்துக்கள் அதிகமாக பிரகாசமாகவும் அவைகளில் கருப்புப்புள்ளிகள் இருப்பது போன்றும் தோன்றுதல். சூரிய வெளிச்சத்தில் கண் உபாதிகள் அதிகரிக்கும். கருமணிகள் சுருங்கியும் அசைக்க முடியாமலும் அல்லது அகன்றும் இருத்தல்.

மூக்கு : ஜலதோஷம், நீர்க்கோர்வை தும்முதல், சில்லிப்பு (ஜலதோஷத்தின் ஆரம்பத்தில்)

முகம் : சரீரத்தின் சூட்டினால் சிவப்பாயிருத்தல், அல்லது சவம்போல் வெளுத்தும் சில்லிட்டும் இருத்தல். விகாரமாகக் குத்திட்ட கண்கள். வாயாலெடுப்புடன் முகத்தில் குளிர்ந்த வியர்வை. வாய் பூட்டிவிடுதல்.

நாக்கு : சில்லிப்பாகவும் நடுங்கிக்கொண்டும் இருக்கும். பலமில்லாமலும் புரியாமலும் பேசுதல்.

வயிறு : தாகமில்லாமலே தண்ணீர் குடித்தல். எரியும் தாகம் தண்ணீரை நிறையக் குடித்தும், சமனமாகாமை. சாப்பிட்ட உணவோ அல்லது பித்தமோ வாயாலெடுத்தல், வாயாலெடுப்பு புளிப்பாயிருத்தல், வாயாலெடுத்த பிறகு சில்லிப்பு, சரீரம் பனிக்கட்டிபோல் குளிர்ச்சியடைதல். சில்லிப்பான வயிறு.

அடிவயிறு : ஜலதோஷத்தினால் அடிவயிற்றில் சில்லிப்பு. வெட்டும் வலி. சூடு, எரிச்சல்.

மலம்: ஜலதோஷம் கண்டபிறகு வெட்டும் வலியும் வயிற்றுப்போக்கும், மலம் அரிசி கழுவின நீர்போன்றிருத்தல். கோடை வயிற்றுப்போக்கு. சரீர முழுவதும் வலியுடனும் சில்லிப்புடனும் கூடிய வயிற்றுப்போக்கு. குளிர்ந்து கொண்டிருந்தபோதிலும் வியாதியஸ்தர் போர்த்திக்கொள்ளமாட்டார். நீலம் பூரித்தும், சுருங்கியும் சில்லிட்டுமுள்ள முகத்துடனுள்ள காலரா. வெளிக்குப்போவது முதலியவை நின்றுவிடுதல். மலப்பை சரிவர வேலை செய்யாததினால் மலபந்தம் (காலரா அல்லது மரணக் களைப்பில் உடம்பில் வியர்வை கண்டவுடன் இவ்வௌஷதத்தை நிறுத்தவும்.)

மூத்திரம்: கொஞ்சமாக, ஆனால் அடிக்கடி போவதில்லை. எரிச்சல், மூத்திரம் குழம்புபோலிருத்தல், நீர் அறைப்பில் சிவப்பாயிருத்தல். மூத்திர அடக்கம். மூத்திரம் வலியுடன் சொட்டு சொட்டாகப் பிரிதல்.

சுவாசாசயம்: ஆஸ்துமா, உழைப்பினால் அதிகரிப்பு. சில்லிட்ட சுவாசம், மார்பில் சில்லிப்பு உணர்ச்சி.

இருதயம்: கவலையும் துடிப்பும், சாப்பிடுவதினால் அதிகரிப்பு. பலவீனமாகவும் கைகளுக்குப் பிடிபடாமலும் உள்ள நாடி. இருதயம் நடுங்குதல்.

கை, கால்கள்: விரைப்பாகவும் நடுங்கிக்கொண்டும் இருக்கும் கைகள். கைகள் சில்லிப்பாகவும் நீலம் பூரித்தும் இருத்தல். கால்களிலும் கைகளிலும் கெண்டை இழுப்பு.

ஆண்: புணர்ச்சியில் ஆசை அதிகரித்தல் அல்லது குறைதல். நபும்சகத்துவம் (அடிக்கடி கற்பூரத்தை முகர்ந்து பார்த்ததால் ஏற்பட்ட நபும்சகத்துவம்).

பெண்: கதகதப்பான அறையில் உஷ்ணமும் வியர்த்தலும் (முக்கியமாக ஸ்திரீகளுக்கு மாதவிடாய் சுபாவத்தில் நிற்கும் காலங்களில்.)

நரம்புகள்: உள் அவயவங்களில் நடுக்கம். வாய்ப் பூட்டு, வாயில் நுரை தள்ளுதலுடன் காக்கை வலிப்பு போன்ற வலிப்புகள்.

சுரம்: சவம் போன்று வெளுத்த முகத்துடன் சரீர முழுவதும் பனிக்கட்டிபோன்று சில்லிடுதல். நாக்கில் சில்லிப்பு. சில்லிப்பு கடுமையாக இருப்பினும் போர்த்திக் கொள்ள விரும்பாமை. மயக்கமாயிருக்கும்போது கூட சரீரத்தில் சக்தி இருப்பின் தன்மேலிருக்கும் போர்வையைத் தூர எறிவார். பிரசவ சுரம், சில்லிப்பு, கசகசப்பு முதலியவைகளுடன் களைப்புண்டாக்கும் வியர்வை.

சருமம்: சின்னம்மை முதலியவை கண்டு இறங்கும் நிலைமையில் முகம் வெளுத்தும் சில்லிட்டும் இருத்தல். குழந்தை அமைதியற்று போர்வையைத் தூர எறியும்.

உறவு: ஸீகேல் கார்னூட்டத்திலும் சில்லிப்பு, கோபம், சூடு நடு நடுவே கலத்தல் முதலிய குறிகளிருப்பினும் காம்போராவில் சில்லிப்பான சருமமும் அனல்வீசும் சூடும் இருக்கும். கந்தாரிஸ் விஷத்திற்கு காம்போரா முறிவு, பொதுவாக எல்லா ஹோமியோபதி ஔஷதங்களுக்கும் காம்போரா முறிவு. ஆகவே மற்ற மருந்துகளுடன் இதை வைக்கக்கூடாது.

மரணக் களைப்பில் ஒப்பிடுதல்.

காம்போரா: அகோனைட் வியாதிகள் போன்று திடீரென்று ஏற்படும் மரணக் களைப்பு. சருமச் சில்லிப்பு,

ஸீகேல் கார்னூட்டத்தைப் போன்று உள்ளூர எரிச்சல். வியாதியஸ்தர் போர்த்திக்கொள்ள விரும்பமாட்டார். கம்பி போன்ற மெல்லிய நாடி. வேராட்ரம்: வெகு நாட்களாக நீடித்து இருக்கும் வியாதிகளினுல் கொஞ்சங் கொஞ்சமாக மரணக் களைப்பு தோன்றுதல், நெற்றியிலும் முகத்திலும் குளிர்ந்த வியர்வை, குளிர்ந்த சுவாசம், முகத்தில் சவக்களை. மூக்கு சில்லிட்டிருத்தல். கார்போ விஜி: பிராணவாயுவைக் கிரகிக்க சக்தியின்மை, மூச்சுத்திணறுதல், அதனுல் வியாதியஸ்தர், தனக்கு "விசிறு, விசிறு" என்று கதறுதல், முழங்கால்களுக்குக் கீழே சில்லிடுதல், மூக்கும் சில்லிடுதல். சீகேல் கார்னூட்டம்: மரணக்களைப்பு, உள்ளூர எரிச்சல், போர்வையைத்தூர எறிதல், காலரா, கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு முதலியவைகளில் கெண்டை இழுப்பு. ஸிட்ராண்டியா கார்ப்: ஆபரேஷன் செய்த பிறகு ஏற்படும் மரணக் களைப்பு. குப்ரம்: இவ்வௌஷதத்தில் கெண்டை இழுப்புகள் பிரதான குறிகளாகும். குப்ரம் ஆர்ஸனிகம்: கெண்டை இழுப்புகள், கடுமையான தாகம், அமைதியின்மை, சாவுபயம், வேராட்ரம் ஆல்பம்: போக்குகள் (மலம், வாயாலெடுப்பு, வியர்வை) பிரதானமாயிருக்கும்.

கார்டுஸ் மரியேனஸ்
(Cardus Marianus)

மஞ்சட் காமாலையுடன் பித்தக் கற்களினுல் வலி, கல்லீரல் உபாதிகள், பித்த சம்பந்தமுள்ள தலைவலி, கல்லீரல் வியாதிகளுடன் நீர் அதைப்பு. மலம் கருப்பாகவும் கடினமாகவும் முடிச்சுகளுடனும் இருத்தல், பிடிவாத குணமுள்ள

மலச் சிக்கல். கல்லீரல் வலிகளுடன் மார்பில் பிடிப்புகள். வலது தோள் பட்டையின் கீழ் வலி, அசைவினால் அதிகரிக்கும். குளிரில் அதியுணர்ச்சி. வெளுத்த சருமம், மஞ்சள் நிறமுள்ள மலம், ஆரஞ்சு போன்ற நிறமுள்ள மூத்திரம் முதலியவைகளுடன் சுரங்க வேலை செய்பவர்களின் ஆஸ்துமா. அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்தல்.

மனம்: வருத்தம்.

தலை: மந்தமான தலைவலி, பிறகு பித்த வாயாலெடுப்பு. இரத்தத் திறட்சியுடன் கூடிய தலைவலி.

மேல் வயிறு: மஞ்சட்காமாலை; கல்லீரல் பாகங்களில் அமுக்கினால் வலியேற்படுதல், ட்யூடனம் எனப்படும் சிறுகுடலின் ஒரு பாகம் தடிப்பதினாலும் கல்லீரலில் அதிக இரத்தம் சேருவதாலும் மேல் வயிற்றின் வலப்பாகத்தில் நிறைந்த உணர்ச்சி. இடை வேளைகளில் பித்த வாயாலெடுப்பு. கல்லீரல் சம்பந்தப்பட்ட நீர் வீக்கங்கள். இடது பக்கமாகப் படுக்கும்போது மேல் வயிற்றின் வலப்பாகத்தில் இழுக்கும் வலி. பித்தக் கற்களினால் உண்டாகும் வலி.

வயிறு: மந்தமான தலைவலியுடன் கூடிய மஞ்சட்காமாலை. வாயில் கசப்பு ருசி. வெண்மையான மாசு படிந்த நாக்கு. குமட்டல். புளிப்புள்ள பச்சை நிறங்கொண்ட நீர் வாயாலெடுக்கப் படுதல், பித்தமுள்ள மலம், மூத்திரம் பொன்போன்று மஞ்சளாயிருத்தல், பசியின்மை.

மலம்: மலத்தில் பித்தம் குறைவாயிருத்தல். மலபந்தமும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல். மலம் கருப்பாகவும் கடினமாகவும் முடிச்சுகளுடனும் களிமண்

போன்றும் பித்தமே இல்லாமலும் வெளியாகுதல். இரத்தம் கொட்டும் மூலங்கள்.

மூத்திரம்: மூத்திரத்தில் பித்தத்தின் நிறம் கலந்திருத்தல், குறைவான மூத்திரம்.

மார்பு: வலது மார்பெலும்புகளின் கீழ்ப் பாகத்திலும் முன் பக்கத்திலும் பிடிப்பு வலிகள். காசம் போன்று சுவாசம்.

கழுத்து, முதுகு: வலது தோள்பட்டையில் வலி.

சுரம்: மஞ்சட்காமாலையுடன் குளிரும், சுரமும் அஜீரணம், பித்தம் ஆகியவைகளினால் ஏற்பட்ட சுரம்.

கை கால்கள்: இழுப்பு போன்றும் அமுக்குவது போலவுமுள்ள வலிகள். இடுப்பு மூட்டில் வலி, எழுந்தாலும் குனிந்தாலும் அசைந்தாலும் அதிகரித்தல். கால்களில் நரம்பு சம்பந்தமான வலி, அசைவினால் அதிகரித்தல். பாதங்களில் நீர் வீக்கம். அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்தல், குழிப்புண்கள். வாத ரோகமும் தசைகளில் குதிப்பும். ஆடுதசையிலும் பாதங்களிலும் கெண்டை இழுப்பு. கிட்டத்தட்ட நடக்க முடியாது.

சருமம்: அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்தல், குழிப்புண்கள்.

பித்தக் கற்களினால் வலி: பெல்லடோன்னா, பெர்பெரிஸ் வல்க், கல்கேரியா, செலிடோனியம், கார்டூஸ் மரியேனஸ், டயஸ்கோரியா, ஹைட்ராஸ்டிஸ், லாச்சஸிஸ், லைகோபோடியம், நக்ஸ்வாமிகா, போடோபில்லம், முதலியவைகளில் இருக்கின்றன.

மஞ்சட் காமாலையில் ஒப்பிடுதல்

பேல்லடோன்னு : கல்லீரலில் சூடும், வலியும். கல்கேரியா : கல்லீரல் பருத்தும் வலியுடனுமிருத்தல், ஆடைகளை இறுகக்கட்ட இயலாது, அடிவயிற்றில் நீர் வீக்கம். கார்டேஸ் மரியேனஸ் : கல்லீரலில் அதிக இரத்தத்திறட்சி, சொர சொரப்பான நாக்கு, குமட்டல், வாயாலெடுப்பு, மலச்சிக்கல். செலிடோனியம் : வலது தோள்பட்டையெலும்பில் வலி, கண்களும் சருமமும் மஞ்சள் நிறமடைதல், கறுப்பு உருண்டை போன்ற மலம் அல்லது மஞ்சளான வயிற்றுப் போக்கு. சைனு : நாட்பட்ட கல்லீரல் பெருக்கம். க்ரோடாலஸ் ஹாரிடஸ் : கடுமையான உபாதி, சரீரம் முழுவதும் மஞ்சள் நிறமடைதல். டிஜிடாலிஸ் : மெதுவான, ஒழுங்கீனமான நாடி, வெண்மையான மலம். ஐயோடியம் : கல்லீரல் சுருங்குதல், அளவில் குறைதல். ஐரிஸ் வர்ஸிகோலர் : புளித்த வாயாலெடுப்பு, பித்தம். லைகோபோடியம் : கல்லீரலில் கடுமையான அழர்ச்சி. மேக்னீஷியாமூர் : கல்லீரலில் நாட்பட்ட இரத்தத்திறட்சி, மலம் பந்து போன்று உருண்டையாக இருத்தல், மலச்சிக்கல். மெற்கூறியஸ் : வலப்பக்கமாகப் படுத்தால் உபாதிகள் அதிகரிப்பு. நேட்ரம் ஸல்ப் : வலப்பக்கமாகப் படுக்கும் போது உபாதிகள் சமனம். போடோபில்லம் : நாட்பட்ட கல்லீரல் அழர்ச்சி, வலி. ஸேபியா : கல்லீரலுக்கு மேற்புறமாக வலியும் கனத்த உணர்ச்சியும், வலி வலது தோள் பட்டைக்குப் பரவுதல்.

கார்பன் ஸல்ப் (Carbon Sulph)

நரம்பு ஸ்தானங்களில் அதிக இரத்தத் திறட்சியும் பாரிசவாயுவும். மனவெழுச்சிக்குப் பிறகு உற்சாகமிழத்தல், அதியுணர்ச்சி, பாரிசவாயு, நடுக்கம் முதலியவை ஏற்படுதல்

மிதமிஞ்சி கள் குடித்ததினால் உருக்குலைந்த சரீரங்கள். புற்று கள், கழலைக்கட்டிகள் ஆகியவைகளின் வளர்ச்சியைத் தடுக்கும் சக்தியுள்ளது. மூட்டுகளில் நாட்பட்ட வாதரோகம், களைப்பு, இருதயத்தில் இறுக்க உணர்ச்சி. காக்கை வலிப்பு. மனதிலும் உருவத்திலும் சிறுத்திருத்தல். அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்துத் தொங்குவது போன்றிருத்தல், கை கால்களில் நீர்ச்சுரப்பு, பொதுவான சரீர இளைப்பு, ஆனால் நிணநீர்க் கோளங்கள்மட்டும் பருத்துக் கொண்டே இருத்தல். வெளியாகும் சளி கோழை முதலியவை ஏராளமாகவும் கெட்டியாகவும் பிசின் போன்றும் இருக்கும். சரீரத்தின் எந்தப் பாகத்தைக் கீழே வைத்துப் படுத்தாலும் அவை மறத்துப் போதல். தெறிப்பு வலிகள், குறிப்பிட்ட நேரங்களில் ஒழுங்காக நடுக்கமேற்படுதல்; மயக்கம், ஞாபக சக்தியிழத்தல். ஒரு பக்க (வலது) பாரிசவாயு. சரீரமுழுவதும் துடிப்பு இருத்தல். கை கால்களில் உணர்ச்சி குறைதல் நபும்சகத்துவம். மந்தமான நாடி. சரீரம் முழுவதும் நடுக்கம். காலையில் அதிகமான அபானவாயு வெளியான பின் உற்சாகமாயிருத்தல். குடல்களிலும் சுவாசாசயங்களிலும் கழலைக் கட்டிகள் உண்டாகும் தன்மை. அடிவயிற்றில் கழலைக்கட்டிகள் தோன்றும் வியாதிக்கு இது ஓர் உபயோகமுள்ள ஔஷதமாகும். வயிற்றில் குளிர்ந்த காற்று உணர்ச்சியுடன் ஏற்படும் கிறுகிறுப்பு. தெறிப்புவலி, கெண்டை இழுப்பு, ஊரும் உணர்ச்சி முதலியவைகளுடன் கூடிய இடுப்புச் சந்துவாதம்.

மனம்: கலக்கம், கவலை, காலையில் தூங்கியெழுந்தவுடன் சுயஞாபக மில்லாமை. மனத்தளர்ச்சியினாலும் சுயஞாபக மிழத்தல் ஏற்படலாம். இரவில் மனவெழுச்சியுடன் பலவித தோற்றங்களைக் காணுதல். பொய்த் தோற்றங்கள், ஞாபகமறதி, அழுகின்ற குணம். காலையில் அபானவாயு

கழிந்தபின் சிரித்த முகமாயிருத்தல். கடுங்கோபம், ஞாபக மிழத்தல்.

தலை: காலையில் எழுந்தவுடன் கிறுகிறுப்பு. திறந்த வெளியில் சௌகரியம். திறந்தவெளியில் நடக்கும்போது முன்புறமாகக் கீழே விழுதல். நெற்றியில் சில்லிப்பும் இறுக்கும் உணர்ச்சியும். சொறி சிரங்குகள் கசகசத்தும் பொறுக்குகளுடனும் இருத்தல். தலைமயிர் கொட்டுதல். தலைப் பாகையை இறுகக் கட்டினாற்போலிருக்கும் தலைவலி, அசைவினாலும் மாலையிலும் அதிகரிப்பு. தலையில் பலவிதமான சப்தங்கள்.

கண்கள்: சமீபதிருஷ்டி (Myopia) கண்களில் மணல் இருப்பது போன்ற உணர்ச்சி. இமைகள் கனமாகவும் கெட்டியாகவும் இரவில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டும் இருத்தல். மங்கலான பார்வை, பார்வை கெடுதல், நிறங்களின் வித்தியாசங்களை அறிய முடியாமை, இரட்டைப் பார்வை, வெளிச்சத்தைப் பார்க்க இயலாமை. அழர்ச்சிக்குப்பிறகு பார்வை நரம்புகளின் சக்தி குறைதல்.

காதுகள்: சீழ் போன்ற, இரத்தங் கலந்த நாற்றமுள்ள போக்கு. குடைதல், கணீர் கணீர் என்ற சப்தம். முதலில் சிறிய சப்தத்தையும் கிரகிக்கும் தன்மை. பிறகு அரைச் செவிடு அல்லது முழுவதும் செவிடு. மலங்கழித்த பிறகு வலக்காதில் பிடிப்பு வலிகள்.

மூக்கு: சில்லிப்புடன் கூடிய நாட்பட்ட சலதோஷம். மூக்கு நுனி சிவந்திருத்தல். காலையிலும் மாலையிலும் கறுப்பு நிறமுள்ள இரத்தம் மூக்கிலிருந்து கொட்டுதல். மூக்கடைப்பு. மூக்கில் சிறு கொப்புளங்கள் அல்லது கெட்ட சதை வளருதல். திறந்த வெளியில் சில்லிப்புடன்

சலதோஷம். கெட்டியான மஞ்சள் நிறமுள்ள சீழ், வாசனை யறியும் சக்தி அதிகரித்தல் அல்லது குறைதல். வெளியாகும் போக்கு கெட்டியாகவும் சீழ் போன்றும் காரமாகவும் இருக்கும். அடிக்கடி தும்முதல்.

முகம்: வெளுத்தும், சில்லிப்பாகவும் அதைத்தும் இருத்தல். உதடுகள் வெடிப்புடனும் எரிச்சலுடனும் இருத்தல். முகத்தில் குளிர்ந்த வியர்வை.

வாய்: உமிழ் நீர் ஏராளமாகவும் இரத்தங்கலந்தும் இருத்தல். வாயும், நாக்கும் உணர்ச்சியற்றிருத்தல், நாக்கு சில்லிப்பாகவும் விரைப்பாகவும் எரிச்சலுடனும் இருக்கும். வாயிலிருந்து துர்நாற்றமுள்ள காற்று. காலை 9 மணிக்கு பற்களில் குதிப்பது, பிடிப்பது, கிழிப்பது போன்ற வலிகள், குளிரினால் அதிகரிக்கும். பேசுவது மிகவும் சிரமமாகவும் திக்குதலுடனும் இருத்தல்.

தொண்டை: எப்பொழுதும் ஏதோ உருண்டையான வஸ்து தொண்டையில் இருக்கும் உணர்ச்சி. இருமியவுடன் எரிச்சலும், விழுங்கியவுடன் வலியும் தோன்றுதல். தொண்டைச் சதைவளர் நோய், நாற்றமுள்ள சுவாசம். தண்ணீர் குடித்தால் எதுக்களித்தல்.

வயிறு: பசி அதிகரித்தும் ஒழுங்கீனமாகவும் இருத்தல், கொழுப்பைத் தரும் பதார்த்தங்கள், மீன், மாமிசம், பால் முதலியவைகளில் வெறுப்பு. வயிற்றில் சில்லிப்பான உணர்ச்சி, சாப்பிட்ட பிறகு வயிறு வெளித்துருத்தியிருத்தல், வாயாலெடுத்த பிறகோ அல்லது ஏப்பம் விடுவதினாலோ சௌகரியம். நெஞ்சில் எரிச்சல், அழுக்கினால் அதிகரிப்பு.

அடிவயிறு: இறுக்குதல், வயிற்றுப் போக்கு ஏற்படும் போல் தோன்றும். குடைதல், அபான வாயு அதிகரித் திருப்பது போன்று அங்கு மிங்கும் சென்று கொண்டிருக் கும் வீக்கமும் வலியும். மலம் போவதற்கு முன்னால் வலி. தொப்பூழ் உள்ளிழுக்கப்படுதல். மேல் வயிற்றிலும் தொப் பூழிலும் மலம் போவதற்கு முன்பும் பிறகும் வெட்டுவது போன்ற வலி.

மலம்: மஞ்சளாகவும் நுரையுடனும் நாற்றத்துட னும் புளிப்பு வாசனையுடனும் பிசின் போன்றும் இருத்தல், இரத்தம் கலந்த சீதகத்துடன் வயிற்றுக் கடுப்பு, மூலங் களில் வலி, ஆசனவாயில் எரிச்சல், அரிப்பு.

மூத்திரம்: அளவு குறைதல், வலி, பிடிப்புகள், கெண்டை இழுப்பு, பாரிச வாயுவும் கடுப்பும். எரிச்சலுடன் மூத்திரம் சொட்டு சொட்டாக வெளியாகுதல், மூத்திரம் கழிக்க சிரமப்படுதல்.

ஆண்: புணர்ச்சியில் ஆசை முதலில் அதிகரித்தும் பிறகு குறைந்தும் இருத்தல். ஜனனேந்திரியங்களின் சக்தி குறைதல், அடிக்கடி ஏராளமான இந்திரியம் ஸ்கலித மாகுதல். மூத்திரமேகம், பீஜம் பெருத்தல்.

பெண்: சினைப்பைகளின் சக்திக் குறைவு, கருப்பை யில் புற்றுகள். கருப்பையின் அழர்ச்சி. காரமுள்ள வெள்ளைப்பாடு. குறைவான மாதவிடாய்.

தொண்டைக் குழி: அதியுணர்ச்சி. ஈரகப்புள்ள பருவங்களில் தொண்டைக் கொற கொறப்பு. மாலையிலும் இரவிலும், சாப்பிட்ட பிறகும், வேலை செய்தபிறகும் மூடின அறைகளிலும் அதிகரிக்கும் ஆஸ்துமா.

இருமல்: வரண்ட, இசிப்புடன் கூடிய இருமல். இரவு $10\frac{1}{2}$ மணிக்கு, கீழே படுத்தவுடன் அதிகம். காலையில் தளர்ந்த இருமல். வெளியாகும் கோழை, கபம் முதலியவை இரத்தம் கலந்தும் ஏராளமாகவும் பச்சை நிறமாகவும் இருத்தல், மேலும் நாற்றமுள்ள சீழ்கலந்தும் அழுகிய நாற்றத்துடனும் உப்புக் கரித்துக் கொண்டும் இருத்தல்.

மார்பு: சுவாசாசயங்களில் கீழ்க் கட்டுதல். மார்பில் சில்லென்ற உணர்ச்சி. ஸ்தனப்புற்றுகள். மார்பில் சூடும் சுவாசாசயங்களிலிருந்து இரத்தப் பெருக்கும். அரிப்பும் அமுக்கும் உணர்ச்சியும், புண்ணிருப்பதுபோல் தோன்றுதல், மார்பின் நடுப் பாகத்தில் எரிச்சல்.

இருதயம்: துடிப்பு. மந்தமான நாடி. மாடிப்படி ஏறினல் மூச்சடைப்பு. தளர்ச்சி. கவலை. அசுத்த இரத்தக் குழாய்களில் இரத்தத் தேக்கம் நன்கு தெரிதல். இருதயத்தில் இறுக்கிய உணர்ச்சி. தலைக்கு இரத்தம் அதிவேகமாகச் செல்லுதல்.

கழுத்து, முதுகு: முதுகில் சில்லிப்பு, கழுத்திலும் கடைசி முள்ளெலும்பிலும் தோள்பட்டைகளின் இடையிலும் வலி.

கை கால்கள்: நீர் வீக்கம், காயம் பட்டது போன்ற வலி. உணர்ச்சியின்மை. பாரிசவாயு, இளைப்பு. கை கால்களில் கெண்டை வாங்குதல். கெண்டை யேறுதலுடனும் விரைப்புடனும் வலி மின்னல்போல் தோன்றி மறைதல். கைகளில் மறத்த உணர்ச்சியும் நடுங்குதலும். விரல்கள் வீங்கியும் உணர்ச்சியற்றும் விரைப்பாகவும் இருத்தல் ஒழுங்கில்லாமல் தட்டுத் தடுமாறி நடத்தல், இருட்டிலும் கண்களை மூடினுலும் அதிகரித்தல். இடுப்புச் சந்து வாதம்.

மூட்டுகளில் நாட்பட்ட வாதம், துணி பட்டாலும் வலியேற் படும்.

தூக்கம் : காலையில் கவலையுடன் கூடிய அருவருப்பு ஏற்படக்கூடிய கனவுகளுடன் ஆழ்ந்த தூக்கம். சுவாசா சயக் குறிகளையும் தலைக் குறிகளையும் தவிர்த்து மற்றைய குறிகள் படுத்தால் சமனமடைதல்.

சருமம் : உணர்ச்சியின்மை, எரிச்சல், அரிப்பு, குழிப் புண்கள், சிறு காயங்களும் சீழ்ப்பிடித்தல். புற்றுநோயை வளரவிடாமல் தடுப்பதற்கு இவ்வௌஷதம் உபயோக முள்ளது. பனிக்காலத்தில் உண்டாகும் வெடிப்புகள். எறும்புகள் ஊருவதுபோன்ற உணர்ச்சி.

உணர்ச்சி : இறுக்க உணர்ச்சி, அவயவங்களைக் கட்டி யிருப்பதுபோன்றிருத்தல். கீழேவைத்துப் படுக்கும் பாகங் கள் மறமறத்தல்.

விசேஷம் : காலையில், மாலையில், இரவில் நள்ளிர விற்கு முன், மலம் கழித்த பிறகு, நின்றால், மாடிப்படி ஏறினால், ஸ்னனம் செய்தால், நடந்தால், பருவங்கள் மாறு வதால், காலை ஆகாரம் உட்கொண்ட பிறகு, ஆகியவைகளால் உபாதிகள் அதிகரிக்கும். திறந்த வெளி, கீழே படுத்தல் முதலியவைகளால் உபாதி சமனமாகும்.

கார்பாலிக் ஆஸிட் (Carbolic Acid)

மரணக் களைப்பு, குளிர்ந்த வியர்வை, அழுகிய குழிப் புண்கள், செவிகள் அழிவுபடுதல் முதலியவைகளில் கார்போ வெஜிடாபிலிஸ் கொடுக்கப்பட்டு பயனேற்படாவிடில் இவ் வௌஷதம் உபயோகப்படலாம். அசாதாரணமான வாசனை அறியும் சக்தி ஏற்படுதல். யோனி, கருப்பையின் கழுத்து,

வயிறு முதலியவைகளில் புற்றுநோய். கருப்ப ஸ்திரீகளுக்கும், கட்குடியர்களுக்கும் ஏற்படும் வாயாலெடுப்பு. அழுகிய நாற்றமுள்ள போக்குகள். தளர்ச்சி, அயர்ச்சி, மரணக் களைப்பு. சரீரம் முழுவதும் குளிர்ந்த வியர்வை. தொண்டைச் சதைவளர் வியாதி (Diphtheria)-யில் உபாதி மூக்கையும் வாயையும் பீடித்தல்; முகம் கறுத்த சிவப்பாக விருப்பினும் வாயையும் மூக்கையும் சுற்றி வெண்மையான கோடுகள் தென்படும். வாயிலிருந்து நாற்றமடித்தல், வெகு சீக்கிரமாக சீவன் ஒடுங்குதல். மூக்கிலிருந்து நாற்றமுள்ள போக்கு. விழுங்க ஆரம்பித்தால் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் எதுக்களிப்பு, தாப சுரம், கழுத்துக் கோளங்களில் வீக்கம். நெற்றியில் இறுக்க உணர்ச்சி. நாக்கு பயங்கரமாக வீங்கியும் சிவப்பாகவோ அல்லது கருத்தோ இருக்கும் வாயில் வெண்மையான குழிப்புண்கள். திரவ பதார்த்தங்களை விழுங்கியவுடன் அவை மூக்கு வழியாக வெளியே வந்துவிடுதல். தொண்டை முழுவதுமே எரிச்சல். எரிச்சலும் வலியுமுள்ள வயிற்றுப் புற்றுகளில் வாயாலெடுக்கப்படும் பதார்த்தம் கறுப்பாக இருத்தல். சமுத்திரப் பிரயாணம் செய்வதினால் ஏற்படும் உபாதிகள். வயிற்றுக் கடுப்பில் மலம் இரத்தம் கலந்த சீதகமாகவும் அழுகிய நாற்றத்துடனும் குடலிலிருந்து சுரண்டியெடுக்கப்பட்டது போன்றும் இருக்கும். இத்துடன் கருத்த பச்சை நிறமுள்ள வாயாலெடுப்பும், மரணக் களைப்பும் இருத்தல்.

அதிக நாற்றமும் காரமுமுள்ள போக்கு அல்லது இரத்தப்பெருக்குடன் கூடிய, கருப்பைக் கழுத்தின் குழிப் புண்கள் அல்லது யோனி உதடு, மூக்கு, கன்னங்கள் ஆகியவைகளில் புற்றுகள். அழுகிய குறிகளுடன் கூடிய பிரசவசுரம். க்ஷயரோகத்தில் சீழுள்ள பதார்த்தம் உமிழப்படும்போது

தற்கால சாந்தியாக இவ்வௌஷதம் உபயோகப்படுகிறது. கக்குவாய் இருமலில் இருமல் வேகத்தைத் தடுக்க மிகவும் குறைந்த வீரியங்களில் உபயோகப்படுகிறது.

கார்போ அனிமாலிஸ்
(Carbo Animalis)

அசுத்த இரத்தம் அதிகரித்த வயதான மனிதர்கள், கைகளும் கால்களும் நீல நிறமாக இருத்தல்; களைப்பு, அதிக பலவீனம், இரத்த சோகை, உருக்குலைந்த சரீரங்கள் மூடிக்கொள்ளாமலேயே இருக்கும் குழிப்புண்கள். கடினமான ஓரங்களுடன் கூடிய புற்றுகள். கொட்டுதல், எரிச்சல். கோளங்கள் (அக்குளிலும் அரையிடுக்கிலும் ஸ்தனங்களிலும் உள்ளவை) வீங்கியும் கடினமாகவும் அசுத்தம் நிறைந்தும் இருத்தல், பழுப்பு நிறமாக மாறுதல். எரிச்சலும் வலியும் கொண்ட சீழ்ப்பிடிக்காத சிரங்குக் கட்டிகள். கடினமான உருண்டைகள் போன்று ஸ்தனங்களில் கட்டிகள் கருப்பை வெகு நாட்களாகக் கடினமாயிருந்ததினால் ஏற்படும் மாதவிடாய், அடிக்கடியும் ஏராளமாகவும் பலநாட்கள் நீடித்தும் இருத்தல். குளிர் காற்றிலும் வரண்ட காற்றிலும் நிற்க வெறுப்பு. கிரந்தி நோய். முகத்திலும் சரீரத்திலும் செப்பு நிறத்தை யொத்த சினைப்புகள். நீல நிறமாகவும் ஓரங்களில் கடினமாகவும் நாற்றமுள்ள சீழ் அல்லது தண்ணீருடன் கூடிய கொப்புளங்கள். மாதவிடாய் சில நாட்களுக் கொருமுறையாகவும் ஏராளமாகவும் பல நாட்கள் இடைவிடாமலும் வெளியாகுதல். மாதவிடாய்ப் போக்கு காலையில் அதிகரிக்கும்; வியாதியஸ்தர் அதனால் பலவீனமாகி பேசவும் சக்தியற்று இருப்பார். வெள்ளைப்பாடு உடைகளை மஞ்சள் நிறமாக்குதல். பொதுவாக சரீரத்திற்கு வேண்டிய

அளவு சூடு இருப்பதில்லை. ப்ளூரஸீ வியாதிக்குப் பிறகு பிடிப்பு வலிகள் இருத்தல்.

மனம்: கலக்கம், தான் தூங்குகிறோமா அல்லது விழித்துக்கொண்டிருக்கிறோமா என்று தெரியாது. வருத்தம் மௌனமாயிருத்தல். பிறருடன் பேசுவதற்கோ அல்லது பிறர் தன்னைப்பற்றிப் பேசுவதோ பிடிக்காமை. தனியாக இருக்க அவா. பிறருடன் பேசாமல் இருக்க வழி தேடுதல்.

தலை: அதிக இரத்தத் திரட்சியும் கலக்கமும். பிடரித் தலையில் கிழிக்கும் வலி, குளிர்ந்த காற்றிலும் திறந்த வெளியிலும் அதிகரித்தல். உச்சந்தலையில் பிளப்பது போன்றிருத்தல்.

காதுகள்: எந்தப் பக்கத்திலிருந்து சப்தம் வருகிறதென்று அறிய இயலாமை. காதுக் கோளங்கள் வீங்கியும் வலியுடனும் இருக்கும் செவிடு. காதுகளிலிருந்து பட்ட இடங்களைப் புண்ணுக்கச்செய்யும் சீழ்வடிதல்.

மூக்கு: ஒவ்வொருநாட் காலையிலும் இரத்தப் பெருக்கு ஏற்படுதல். அதற்கு முன்னதாக கிறுகிறுப்பு காணுதல். மூக்கு நுனியில் கடினமான நிறமுள்ள கட்டிகள்.

முகம்: செப்பு நிறத்தையொத்த சினைப்புகள். அக்கி.

தொண்டை: கடினமாகவும் எரிச்சலுமுள்ள டான்ஸில்கள்.

வயிறு: அபரிமிதமான பசி அல்லது பசியின்மை, கொழுப்புள்ள ஆகாரங்களில் வெறுப்பு. மாமிசம் உட்கொண்ட பிறகு குமட்டல். வயிற்றில் புற்றுநோய். நெஞ்சில்

எரிச்சல். ஏப்பம். அதிக நாற்றமுள்ள உப்பிசம். குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது அடிவயிற்றில் ஒன்றுமேயில்லாததுபோன்ற உணர்ச்சி.

அடிவயிறு: துருத்தியிருத்தல். கடினமான கொப்புளங்கள். நாற்றமுள்ள பதார்த்தங்கள் வெளியேறுதல்.

மலம்: நடக்கும்போது எரிச்சலும் வலியும் அதிகமான வீக்கமுள்ள மூலங்கள். அபான வெடிப்பு. மலம் கடினமாகவும் கொஞ்சமாகவும் இருத்தல்.

ஆண்: கிரந்தி நோய்; கொப்புளங்களில் எரிச்சல். மனமும் சரீரமும் களைப்படைந்திருத்தல்.

பெண்: யோனியில் எரிச்சல். கருப்பையின் கழுத்து கடினமடைதல். நாற்றமுள்ள போக்குகளுள்ள கருப்பைப் புற்றுகள். மாதவிடாய் சில நாட்களுக்கொரு முறையாகவும் அதிக நாட்கள் நீடித்தும் இருக்கும். (ஏராளமாக இருக்காது.) காலையில் கறுப்பு நிறமுள்ள போக்குடனும் களைப்புடனுமுள்ள மாதவிடாய். மாதவிடாய் தடைப்பட்டு அதனால் ஏற்படும் மனக்குறிகள். மாதவிடாயின் போது தொடைகள் முடமானது போன்றிருத்தல், அடி முதுகிலும் அரை யிடுக்குகளிலும் தொடைகளிலும் எரிச்சல்; பிரசவ வேதனைபோன்ற வலி, மிகவும் களைப்பாக இருப்பதால் பேசவும் முடியாமை, சாவு நிச்சயமென்று எண்ணும்படி இருத்தல். வெள்ளைப்பாடு, மஞ்சளாகவும் எரிச்சலுடனும் காரமாகவும், துணிகளை மஞ்சளாக்கியும் இருப்பதுடன் நடந்தாலும் நின்றாலும் அதிகமாகும். வலது சினைப்பை பந்து போன்று கடினமாகுதல்.

கருப்பம்: தாய்ப்பால் கொடுக்கும் ஸ்திரீகளுக்கு ஸ்தனங்களில் தெறிக்கும் வலிகள், அதனால் சுவாசம்

தடைப்படுதல், நன்ருய் அழுக்கிஞல் சமனம். ஸ்தனங்கள் முடிப்புகள், கட்டிகள். ஸ்தனங்களில் கடினமான புற்றுகள் கொட்டுதலும் எரிச்சலுமுள்ள வலிகள்.

சுவாசாசயங்கள்: கொறகொறப்பு மாலேயில் அதிகரித்தல். குழிப்புண்களும் சுவாசாசய (வலது)க் கெபி அழிவும் ஏற்படும் (கடைசி நிலைமை) கபவாத சுரத்திற்கு உபயோகம். வெளியாகும் கபம் முதலியவை பச்சையாகவும் சீழ்போன்றும் நாற்றமாகவும் இருத்தல். மார்பில் சில்லென்ற உணர்ச்சி. வரண்ட இருமலினுல் அடிவயிற்றில் வலி, அதனுல் அடிவயிற்றைக் கைகளினுல் தாங்கிக் கொள்ளுதல்.

கழுத்து, முதுகு: கழுத்திலுள்ள கோளங்கள் கடினமாகவும் வீங்கியும் அழுர்ச்சியுடனும் எரிச்சல் வலிகளுடனும் இருத்தல். இடது தடையில் பலவீனம். கடைசி முள்ளெலும்பில் வலியும் எரிச்சலும். அடி முதுகு விட்டுப் போவது போன்று தோன்றுதல்.

கை, கால்கள்: அக்குளிலும் அரைப்பூட்டிலுமுள்ள கோளங்கள் கடினமாகுதல். கைகளைத் தொட்டாலும் வலியேற்படும். கொஞ்சம் கனமுள்ள சாமானைத் தூக்கிஞல் கூட மூட்டுகளில் சுளுக்கு ஏற்படுதல். நடக்கும்போது அக்குளில் பலவீனம்.

நரம்புகளும் கெபிகளும்: பலவீனம், சக்தியின்மை. களைப்பு. கோளங்கள் கடினமாகவும் வீங்கியும் அழுர்ச்சியுடனும் எரிச்சல் வலியுடனும் இருத்தல்.

சுரம்: இரவுகளில் நாற்றமுள்ள, களைப்புண்டாக்கும் வியர்வை, துணிகளை மஞ்சளாக்குதல்.

சருமம்: அக்கிபோன்ற வீக்கம், எரிச்சல் வலியுடன் செப்பு நிறத்தையொத்த சினைப்புகள். கொப்புளங்களைச் சுற்றிலும் நீல நிறமாக இருத்தல், வெகு நாட்களாக ஆறாமலேயே இருத்தல்.

விசேஷம்: குளிர்ந்த காற்று, திறந்தவெளி, பிற்பகல், சாப்பிடுதல் முதலியவைகளால் உபாதி அதிகரிக்கும்.

கார்போ வெஜிடாபிலிஸ்
(Carbo Vegetabilis)

இவ்வௌஷதத்தின் வியாதியஸ்தர் பொதுவாக மந்த குணமும் பருத்த உடலுமாய் இருப்பதுடன் எந்த வியாதி வரினும் அது பல நாட்களுக்கு நீடித்தும் இருக்கும். இரத்தக் குழாய்களில் இரத்தம் ஓடாமல் தேங்கி நிற்பதினால், சருமத்தில் நீல நிறமும், குளிரும் ஏற்படுகிறது. சரீரம் முழுவதுமே நீலம் பூரித்தும் பனிக்கட்டி போன்று சில்லிடுதலும். சரீரத்திற்கு இன்றியமையாத நீர்ப் பதார்த்தங்கள் வெளியானதினாலும் கண்ட மருந்துகளைச் சாப்பிட்டதினாலும் வியாதிகளினால் அடிபட்ட பிறகும் சரீரத்தின் ஜீவபலம் குன்றியிருக்கும் தருணம்; அசுத்த இரத்தம் அதிகரித்திருக்கும் வயதான மனிதர்கள்; காலரா, டைபாய்டு முதலிய வியாதிகளில் மரணக் களைப்பு ஏற்படுதல்; இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் இவ்வௌஷதம் உபயோகிக்கப்படுகிறது. வியாதியஸ்தருக்கு உயிர் இல்லாதது போன்றே இருப்பினும் தலை மாத்திரம் சூடாக இருக்கும்; சில்லிப்பு, சிலு சிலுவென்றிருக்கும் சுவாசம், கைக்குத் தென்படாத நாடி, சிரமத்துடனும் அடிக்கடியும் சுவாசித்தல், பலமாக விசிற வேண்டுமென்றும் 'அறையின் கதவுகளை அகலத் திறந்து வைக்க வேண்டுமென்றும் வியாதியஸ்தர் கதறுதல்;

மேற்சொன்னவை கார்போ வெஜிடாபிலிஸ் பிரதான குறிகளாகும். வியாதியஸ்தருக்கு வெகு சீக்கிரத்தில் களைப்பும் மயக்கமும் ஏற்படுதல். சுத்தமான காற்று அவசியமாகுதல். மூந்தசைப் பாகங்களிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்கு. மிகவும் களைத்திருத்தல். வியாதியிலடிபட்டு உடம்பு முழுவதும் தேளுமலேயே இருப்பவர்கள். தலை (பின் பக்கம்) கண்கள், இமைகள், வயிறு மற்றும் சரீரத்தில் இதர அவயவங்களிலும் ஏதோ சுமை இருப்பது போன்ற உணர்ச்சி; எல்லா உபாதிகளிலும் அழுகிய தன்மையும் எரிச்சல் உணர்ச்சியும் இருக்கும்.

மனம்: இருட்டைக் கண்டால் வெறுப்பு, பிசாசுகளைப் பற்றி பயம். திடீரென்று ஞாபகசக்தியை இழத்தல்.

தலை: எந்த விஷயத்தில் அமிதமாக இருப்பினும் வலிகள் ஏற்படுதல். மயிர்க்கால்களில் வலி, சுலபமாக மயிர் உதிர்ந்துவிடுதல். படுக்கையில் படுத்திருக்கும்போது அச்சூட்டினால் தலைத்தோலில் அரிப்பு. தலையில் முண்டாசு கட்டினால் பெரிய சுமை தூக்குவது போன்று கனத்தல். காதுகளில் கிண் கிண்ணென்ற ஒலியுடனும் குமட்டலுடனும் கிறுகிறுப்பு. நெற்றியிலும் முகத்திலும் பருக்கள்.

முகம்: நீலமாகவோ அல்லது வெளுத்தோ குளிர்ச்சியான வியர்வையுடன் சில்லென்றிருத்தல். சிவந்த மூக்கு.

கண்கள்: கண்களுக்கு முன்பாகக் கரும் புள்ளிகள் மிதப்பது போன்றிருத்தல். எரிச்சல், வலி.

காதுகள்: சில சரும உபாதிகளுக்குப் பிறகு காதில் சீழ் வடிய ஆரம்பித்தல். காதுகள் காய்ந்திருத்தல். காதில்

குரும்பை தாறுமாறாக ஏற்படுவதுடன் வெளிக் காதின் தோல் உரிந்துகொண்டே இருத்தல்.

மூக்கு: வெளுத்த முகத்துடன் ஒவ்வொருநாளும் இரத்தப் பெருக்கு, மூக்கு நுனியில் சிவப்பு நிறமும் பொறுக்குகளும். மூக்குத் துவாரங்களில் அரிப்பு. மூக்கில் அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்து சுருட்டிக்கொள்ளுதல். ஈரகப்புள்ள கோடைக் காலங்களில் இருமலுடன் சலதோஷம். அடிக்கடி சிந்த நேரிடுதல். ஆனல் ஒன்றும் வெளிவராமை.

வாய்: நாக்கில் வெண்மையான அல்லது சற்றுப் பழுப்பான மாசும், வெண்மையான குழிப் புண்களும். மெல்லும்போது ஈறுகளிலும் பற்களிலும் வலி, கூச்சம். ஈறுகள் பற்களுக்கு மேலாக வந்துவிடுதல். பற்களைத் தேய்க்கும்போது ஈறுகளிலிருந்து இரத்தம் கசிதல். பயோரியா எனப்படும் பல் வியாதி.

வயிறு: காப்பி, தித்திப்பான அல்லது உப்புக் கலந்த ஆகாரங்கள் முதலியவைகளில் விருப்பு. பால், மாமிசம், கொழுப்புள்ள உணவு ஆகியவைகளில் வெறுப்பு. பால் குடித்தால் புளித்த ஏப்பமும் உப்பிசமும் உண்டாகும். அடிக்கடி வெற்று ஏப்பங்கள் விடுதலும் அதனுல் உபாதிகள் சற்று சமனமாகுவதும். மாலையில் வாயாலெடுப்பு, இரத்தமோ, உணவோ, புளித்த அல்லது பித்தங்கலந்த பதார்த்தமோ வாயாலெடுக்கப்படுதல். வயிற்றில் எரிச்சல், கீழ் முதுகிற்கும் தோள்பட்டைகளுக்கும் பரவுதல்.

அடி வயிறு: பலமான இரைச்சல், அதிக நாற்றம் உள்ள அபான வாயு. வண்டி சவாரி செய்தால் வலி. குடலில் ஏற்படும் மூல சம்பந்தமான உபாதிகள். சாப்பிட்ட

பிறகு அதிகமாகப் பருத்தல், அபான வாயு வெளியாவதினால் சமனம். ஆடை உடுத்த முடியாமை.

மலம்: அபான் வாயு சூடாகவும் கசகசத்தும் நாற்றமாகவும் இருத்தல். மலப்பையில் அரிப்பும் எரிச்சலும், காரமான, பட்ட இடங்களைப் புண்ணாக்கும் கசகசப்பும். மலம் அழுகின நாற்றத்துடனும் எரிச்சலுடனும் இருத்தல். காலராவில் மரணக் களைப்பு வரும் நிலைமை.

பெண்: சில நாட்களுக்கொரு முறையும் ஏளமாகவும் உள்ள மாதவிடாய். போக்கு, வெளுத்தோ, கறுப்பாகவோ அல்லது கெட்டியாகவோ இருப்பதுடன் நாற்றமாகவும் காரமாகவும் இருத்தல். காலையில் எழுந்தவுடன் தண்ணீர் போன்றும் பிறகு கெட்டியாக மாறும் குணமும் உள்ள வெள்ளைப்பாடு. மாதவிடாயின்போது கைகளிலும் உள்ளங்கால்களிலும் அரிப்பு.

ஆண்: மலம் கழிக்கும்போது ஆண்குறியிலிருந்து கஞ்சிபோன்ற நீர் வடிதல். தொடையில் பீசத்திற்கு அருகே கசகசப்பும் அரிப்பும்.

சுவாசாசயங்கள்: தொண்டைக் குழியில் அரிப்புடன் இருமல், சிறிது நேரத்திற்கொருமுறை இடைவிடாமலும், கோழை வாயலெடுப்புடனும் இருத்தல். கக்குவாய் இருமலின் ஆரம்பத்தில் உபயோகம். சிறிதளவு உழைப்பினாலும் குரல் கம்முதல், கொற கொறப்பு, மாலையிலும் பேசுவதினாலும் அதிகரிப்பு. மார்பில் களகளப்பு, விஸ் என்ற சப்தம். மார்பில் எரிச்சலுடன் இருமல்; மாலையிலும் திறந்த வெளியிலும் சாப்பிட்ட பிறகும் பேசினாலும் அதிகரிப்பு. இடைவிடாத இருமல், நீல நிறமடையும் முகம், நாற்றமுள்ள கபம், கோழை, கவனிக்காமல் விடப்பட்ட கபவாத

சுரம். சில்லிட்ட சுவாசம்; விசிறவேண்டுதல். சுவாசாசயங்களிலிருந்து இரத்தப் பெருக்கு. வயதானவர்களுக்கு நீலநிறமான சருமத்துடன் காசவியாதி.

கை கால்கள் : கனமாகவும் விரைப்பாகவும் பாரிச வாயுவினால் பிடிக்கப்பட்டது போன்றும் தோன்றுதல். தசைகளில் வலுவின்மை, மூட்டுகளில் பலவீனம், உள்ளங்காலில் நரம்பு இழுப்பு. கைகால்களில் மரமரப்பும் வியர்வையும். முழங்கால்களுக்குக் கீழே சில்லிப்பு. கட்டை விரல்கள் சிவப்பாகவும் வீங்கியுமிருத்தல். எலும்புகளிலும் கைகால்களிலும் எரிச்சலுடன் வலி.

சுரம் : தாகத்துடன், குளிர். குளிர் முன்கையில் ஆரம்பிக்கும். பல இடங்களில் எரிச்சல், சாப்பிடும் பொழுது வியர்த்தல். விடாச் சுரமும் களைப்புண்டாகும் வியர்வைகளும்.

சருமம் : நீலம்பூரித்தல், சில்லிப்பு, அரிப்பு, மாலையிலும் படுக்கையின் சூட்டிலும் அதிகரிப்பு. கசகசப்புள்ள சருமம். சூடான வியர்வை. படுக்கையிலேயே பல நாட்கள் இருப்பதினால் உண்டாகும் புண்கள், அவைகளிலிருந்து இரத்தப் பெருக்கு. சரீரம் பலவீனமடைந்ததினால் மயிர் சுலபமாக உதிரவாரம்பித்தல். ஆறாத குழிப்புண்கள், எரிச்சலுள்ள வலி.

விசேஷம் : மாலை, இரவு, திறந்த வெளி, குளிர், புஷ்டியுள்ள ஆகாரம், வெண்ணெ, காப்பி, பால், கதகதப்பான, ஈரமப்புள்ள பருவம் சாராயம் முதலியவைகளால் உபாதி அதிகரிப்பு. ஏப்பம், விசிறுவது முதலியவைகளால் சமனம்.

முறிவு : காம்போரா, அம்ப்ரா க்ரிஸியா, ஆர்ஸனிக்.

கால்மியா (Kalmia)

இது ஒரு வாதரோக ஔஷதம். வலிகள் அதிவிரைவாக ஒரு இடத்தைவிட்டு மற்றோரிடம் தாவும். குமட்டலும் பலவீனமான நாடியும் அனேகமாக மற்ற உபாதிகளுடன் காணப்படும். இருதயத்திலும் இதற்கு நல்ல உபயோகமுண்டு. நரம்பு சம்பந்தமான வலிகள் மறமறப்புடன் கீழ் நோக்கிப் பாய்தல். உபாங்க வியாதியுடன் (Appendicitis) வெகுநாட்கள் இடைவிடாமல் அடிக்கும் சுரம். பாரிசவாயு ஏற்படுவது போன்று உணர்ச்சி. மற்ற குறிகளுடன் கால்களில் வலியும் இசிவும் கலந்து இருத்தல். முட்டையின் வெள்ளை போன்ற பதார்த்தம் மூத்திரத்தில் கலந்திருத்தல்.

தலை: கிறுகிறுப்பு, குனிந்தால் அதிகரிப்பு. மூளைக் குழப்பம், நெற்றியிலும் பொட்டுகளிலும் வலி, கழுத்திற்கும் பற்களுக்கும் பரவுதல், இருதயக் கோளாறுகளினுலேற்பட்டவை.

கண்கள்: பார்வை கெடுதல். கண்களை அசைக்கும் போது விரைப்பாகவும் இழுப்பது போலவும் உணர்ச்சி. கருவிழிகளில் வாத சம்பந்தமான அழர்ச்சி. வெள்ளைப் பாகத்தில் அழர்ச்சி, வலி அசைவினுல் அதிகம்.

முகம்: நரம்பிழுப்பு; வலப்பாகத்தில் அதிகம். நாக்கில் பிடிப்பு வலி. தாடை, முகவெலும்புகளில் பிடிப்பு வலி.

வயிறு: மேல் வயிற்றில் கத கதப்பான உணர்ச்சி. குமட்டல், வாயாலெடுப்பு. வயிற்றின் குழியில் வலி, முன் பக்கமாக உடலை வளைத்தால் அதிகரிப்பு, நேராக உட்கார்ந்தால் சமனம். தலை வலி, கிறுகிறுப்பு, குமட்டல் முதலியவைகளுள்ள பித்தம் அதிகரித்த உபாதி.

மூத்திரம் : சிறு முதுகுப் பாகத்தில் கடும் வலியுடன் மூத்திரம் அடிக்கடி பிரிதல்.

இருதயம் : பலவீனமான, மெதுவாகச் செல்லும் நாடி, கவலையுடன் இருதயத்தில் படபடப்பு. இருதயத் துடிப்பு முன்னால் உடலை வளைத்தால் அதிகரிப்பு. வாத ரோகம் மற்ற அவயவங்களிலிருந்து இருதயத்திற்குத் தாவு தல். கடுமையான வலிகளினால் மூச்சுத்திணறல். இரு தயத்திற்கு மேல் பக்கமாக மார்பு வழியே தோள்பட்டை எலும்புகளுக்குப் பாயும் வலி. இருதயத்துடிப்பு விரைவாக வும் கண்களுக்குத் தென்படும் வண்ணமும் இருத்தல்.

பெண் : அடிக்கடி வரும் அல்லது தடைப்பட்ட மாதவிடாய், கை கால்களிலும் முதுகிலும் தொடைகளின் நடுவிலும் வலி. மாதவிடாய்க்குப் பிறகு வெள்ளைப்பாடு தோன்றுதல்.

முதுகு : கழுத்திலிருந்து கைகளுக்குச் செல்லும் வலி. வலி முதுகிற்குச் சென்று அதனால் முதுகு உடை வது போன்றிருத்தல். நரம்பு சம்பந்தமான முதுகு வலி.

கை, கால்கள் : தோள் பட்டைத் தசையில் (முக்கிய மாக வலது) வாதரோகம். இடுப்பில் இறுக்கும் வலி, முழங் கால்களுக்கும் கால்களுக்கும் பரவுதல். வலி பல மூட்டு களை ஒரே சமயத்தில் பிடித்து சிக்கிரமாகப் போய் விடுதல். கை கால்களில் பலவீனம், மறமறப்பு, குளிர்ந்த உணர்ச்சி. சுண்டு விரலில் வலி. மூட்டுகள் சிவந்தும் சூடாகவும் வீங் கியுமிருத்தல்.

தூக்கம் : தூக்கமின்மை, அதிகாலையிலேயே எழுந் திருத்தல்.

விசேஷம்: முன்பக்கமாகக் குனிவது, கீழே பார்ப்பது முதலியவைகளால் உபாதி அதிகரிப்பு. அசைவு, திறந்த வெளி, முதலியவைகளால் சமனம்.

காலண்டுலா (Calendula)

உடம்பின் மேற்புறத்தில் ஏற்படும் காயங்களில் இவ் வௌஷதத்தின் திராவகத்தைத் தடவி வந்தால் காயங்களைச் சீழ்ப்பிடிக்க விடாமல் ஆற்றும் குணமுள்ளது. ஆறாத வெட்டுக் காயங்களுக்கும் சீழ் வடியும் குழிப்புண்களுக்கும் மிக்க உபயோகமாகும். அக்கி உண்டாகும் தன்மையுள்ள சரீரங்கள். ஈர நப்புள்ள பருவங்களில் சலதோஷம் பிடிக்கும் தன்மை.

காலாடியம் (Caladium)

இவ்வௌஷதம் ஜனனேந்திரியங்களுக்கும் அவ்விடங்களில் ஏற்படும் அரிப்புகளுக்கும் மிக்க கைகண்ட ஔஷதமாகும். சரீரத்தின் ஒரு சில இடங்களில் மாத்திரம் சில்லிப்பு, கீழே படுத்திருக்கப் பிரியம், இடது பக்கமாகப் படுத்தால் உபாதிகள் அதிகரிப்பு. சிறிதளவு சப்தமேற்பட்டாலும் திடுக்கிட்டு விழித்துக்கொள்ளுதல். அசைவினால் பயம். புகையிலைப் பைத்தியத்தை மட்டுப்படுத்தும். காச உபாதிகள்.

தலை: சுருட்டுக் குடிப்பவர்களின் தலைவலியும் மனோ நிலைகளும். மிகவும் அதிகமான ஞாபகமறதி. நடந்த விஷயங்களில் ஒன்றுகூட ஞாபகத்தில் இருப்பதில்லை. தோள்பட்டைகளில் வலி, கண்களிலும் நெற்றியிலும் அழுத்தும் உணர்ச்சி. இவைகளுடன் ஒழுங்கினமான தலைவலி, சப்தத்தினால் உபாதி அதிகரிப்பு, காதுகளில் துடிப்பு.

வயிறு: அன்னகோசத்தின் மேற்புறத்தில் கடிப்பது போன்ற உணர்ச்சி, அதனால் ஆழ்ந்து சுவாசிக்கத் தடையும் எப்பழும் ஏற்படுதல். வயிறு நிறைய காய்ந்த உணவு இருப்பதுபோன்ற உணர்ச்சி. காரமுள்ள வாயாலெடுப்பு, தாகமின்மை, சூடான பானங்களே வயிற்றில் தங்குதல். பெருமூச்சு உள்ள சுவாசம்.

ஆண்: ஜனனேந்திரிய அரிப்பு. ஆண் குறியின் நுனி மிகவும் சிவப்பாயிருத்தல். ஆண் குறி பெருத்தும் வீங்கியும் தளர்ந்தும் சில்லிப்பாகவும் வியர்வை கசிந்துகொண்டும் இருத்தல். ஆண் குறியின் தோல் கெட்டியாக இருத்தல். அரைத்தூக்கமாயிருக்கும்போது ஆண் குறி விரைக்க வாரம்பித்தல், நன்ருக விழித்துக்கொண்டால் சுருங்கிவிடுதல். நபும்சகத்துவம். மனக்கிளர்ச்சி யேற்படும்போது ஆண்குறி தளர்ந்துவிடுதல். ஸ்திரீகளைத் தழுவும்போது இந்திரியம் வெளியாகாமை.

பெண்: யோனி நுனியில் அரிப்பு. கருப்பமாயிருக்கும்போது யோனி அரிப்பு காமத்தைக் கிளப்பும் அளவுக்கு இருத்தல். இரவில் கருப்பையில் இழுக்கும் வலி.

சருமம்: தித்திப்புள்ள வியர்வை, அதனுல் ஈக்களும் எறும்புகளும் சரீரத்தில் மொய்த்தல். பூச்சிகடியினுல் எரிச்சலும் கடுமையான அரிப்பும். அரிப்பைத் தரும் சரும உபாதியும் காச நோயும் மாறி மாறி வருதல். எரியும் உணர்ச்சியும் அக்கிபோன்ற சரும அழர்ச்சிகளும்.

சுவாசாசயம்: தொண்டைக்குழி இறுக்கியிருக்கும் உணர்ச்சி. சுவாசம் தடைப்படுதல். ஜலதோஷத்துடன் காச வியாதி. கோழை சுலபமாக வெளிவராமை. வியாதியஸ்தர் தூங்க பயப்படுதல்.

விசேஷம் : பகற்காலத்தில் தூங்கின பிறகும் வியர்வையினாலும் சமனம். அசைவினால் அதிகரிப்பு.

காலின்ஸோனியா (Collinsonia)

மந்தமான நெற்றித் தலைவலி. நாக்கில் மஞ்சள் மாசு படிதல், கசப்பு ருசி. ஜலதோஷம். பிடிவாதமான மலச்சிக்கல், மலம் கல்போல் கடினமாக இருத்தல். வலியுள்ள மாதவிடாய், இடுப்புப் பாகங்களிலோ அல்லது கீழ்க் குடல்களிலோ ஏற்படும் அதிக இரத்தத் திரட்சியினால் மலப்பையில் குச்சி யிருப்பதுபோன்ற உணர்ச்சியும் இரத்தப் பெருக்குள்ள அல்லது உள்மூலங்கள். அடிவயிற்றின் அடிப்பாகத்தில் வலி. சினைப்பை சம்பந்தமான நரம்புவலி, வலப்பாகத்தில் அதிகம். கருப்பமா யிருக்கும்போது யோனியில் அரிப்பு. ஆசனவாயைச் சுற்றிலும் அரிப்பு. மஞ்சளான, தண்ணீர் போன்ற குடல் வலியுள்ள வயிற்றுப் போக்கு. அதிகமாகத் தொண்டையை உபயோகித்ததினால் ஏற்படும் இருமல்.

காலீ ஆர்ஸனிகம் (Kali Arsenicum)

மலேரியா சுரங்கள், டைபாய்டும் மலேரியாவும் கலந்த சுரங்கள். சரும வியாதிகள், மாதவிடாய்க் காலங்களில் அரிப்பு. நடக்கும் போதும் ஆடைகளைக் களையும் பொழுதும் உஷ்ணத்தினாலும் அரிப்பு. துள்ளுதல், முறுக்குதல், எரிச்சல், குமட்டல், மலச்சிக்கல். வயிற்றிலிருந்து உருண்டையான வஸ்து மேலே வரும் உணர்ச்சி, அதனால் மூச்சுத்திணறல். காலை மூன்று மணிக்கு அதிகரிக்கும் காசநோய். வாதரோகத்தினால் சரீரத்திலேற்படும் முடிச்சுகள்.

காலீ க்ளோரிகம் (Kali Chloricum)

வாயிலிருந்து அபானம்வரை அழுகியது போன்ற இரணங்கள். அழுகிய நாற்றத்துடன் வாயில் அழுகிய இரணங்கள். குனிந்தாலும் எழுந்திருந்தாலும், கிறுகிறுப்பு. கண்களுக்கு மேலாகத் தலைவலி. முகம் மிகவும் அதிகமாக வீங்குவதினால் பார்க்கமுடியாமை. நாக்கில் எரிச்சல். அடிவயிற்றில் உப்பிசம். மூத்திரம் அளவில் அதிகரித்தல். பயங்கரமான கனவுகள். புளிப்பான உமிழ் நீர்.

நீர்: முட்டையின் வெள்ளைக் கருபோன்ற அல்லது இரத்தம் கலந்த மூத்திரம். கீழ்த் தாடைக் கோளங்களில் வீக்கம். வயிற்றுப்போக்கு. சில சமயங்களில் இரத்தம் கலந்த மலம். கத்திகளினால் வெட்டுவது போன்ற வலி. சுத்தமான இரத்தப்போக்குள்ள வயிற்றுக்கடுப்பு. சுரத்தில் சில்லிப்பான கைகால்கள், உடம்பும் சில்லென்று இருத்தல்.

காலீ கார்பானிகம் (Kali Carbonicum)

எல்லாக் காலீ ஔஷதங்களிலும் பொதுவாக பலவீனக் குறி காணப்படுகிறது. ஆயினும் இவ்வௌஷதத்தில் மிருதுவான நாடி, சில்லிப்பு, தளர்ச்சி ஆகிய குறிகளுடன் பலவீனம் மிகவும் தெளிவாய்க் காணப்படுகிறது. வேறொரு விசேஷம் யாதெனில் எந்த உபாதியாக இருந்தாலும் அவ்வுபாதி எந்த இடத்தில் இருப்பினும் வலிகள் பிடிப்பு வலிகளாக இருக்கும். எல்லாக் காலீ ஔஷத வலிகளும் கூர்மையாகவும் வெட்டுவது போலவும் இருப்பதுடன் அசைவினால் அனுகூலமும் அடைகின்றன. சுரமிருக்கும்போது காலீ ஔஷதங்களைக் கொடுக்கக்கூடாது. பருவங்கள் மாறும் சமயங்களில் உபாதிகள் தவறாமல் வந்துகொண்டிருத்தல்.

குளிர்காலத்தைப் பொறுக்கமுடியாமை. பிரசவத்திற்குப் பிறகு உபயோகமாகும் முக்கிய ஔஷதங்களில் இதுவும் ஒன்று. குறைப் பிரசவத்தினால் தளர்ச்சியுள்ள நிலைமைகளிலும் உபயோகமுண்டு. விடியற்காலையில் உபாதிகள் அதிகரிப்பதும் இதன் விசேஷங்களில் ஒன்று. இரட்டை நாடி சரீரமுள்ள வயதானவர்கள். வியர்வை, முதுகு வலி, பலவீனம். புடைக்கும் வலிகள். நீர் அதைப்பு ஏற்படும் தன்மை. க்ஷயரோகம் ஏற்படுமுன் இருக்கும் சரீர நிலைமை. சிறு சிறு இடங்களில் வலி.

மனம்: அதைரியம். மாறிக்கொண்டே யிருக்கும் குணம். மிகவும் கோபமேற்படும் தன்மை. அதிகமான பயம். வயிற்றைப்பற்றி கவலையடைதல். படுக்கை கீழே அமுங்குவது போன்ற உணர்ச்சி. தனியாக இருக்க ஒரு பொழுதும் பிரியப்படுவதில்லை. ஒருபொழுதும் திருப்தி கிடையாது. சும்மா இருக்க முடியாத குணம். பிடிவாதம். தொடுதல், சப்தம், வலி ஆகியவைகளில் அதி உணர்ச்சி.

தலை: திரும்பினால் கிறு கிறுப்பு. சில்லென்ற காற்றில் போய் வந்ததினால் தலை வலி. கொட்டாவியுடன் தலை வலி வருதல். வண்டியில் போகும்போது குமட்டலுடன் பொட்டுகளிலும் பின் தலையிலும் வலி. தலைமயிர் மிகவும் காய்ந்து உதிர்ந்துகொண்டிருத்தல்.

கண்கள்: கண்களில் பிடிப்பு வலிகள். கண்களுக்கு முன்னால் வலைபோட்டிருப்பது போன்றிருத்தல், கருப்புப் புள்ளிகள். காலையில் கண்ணிமைகள் ஒட்டிக்கொள்ளுதல். மேலிமைகள் சிறு பைகள் போன்று வீங்குதல். பலவீனமான பார்வை. அமித சிற்றின்ப நுகர்ச்சியினால் பார்வை

குறைதல். கண்களை மூடியவுடன் மூளையில் வெளிச்சம் பரவுவது போன்று வலியுள்ள உணர்ச்சி.

காதுகள்: பிடிப்பு வலி. அரிப்பு, வெடிப்பு, குடைதல், கிண் கிண்ணென்ற ஒலிப்பு.

மூக்கு: உஷ்ணமான அறைகளில் மூக்கடைப்பு. கெட்டியான, ஆனால் தாராளமாக வழியும் மஞ்சள் நிறம் உள்ள சளி. இரணமாகவும் பொறுக்குகளுடனும் இருக்கும் நாசித் துவாரங்கள். இரத்தம் கலந்த சளி. காலையில் முகம் கழுவும்போது இரத்தப் பெருக்கு.

வாய்: பற்களும் ஈறுகளும் விலகுதல்; சீழ் கசிதல். பயோரியா நோய். வெண்மையான குழிப் புண்கள். வெளுத்த நாக்கு. வாயில் ஏராளமான உமிழ் நீர் அடிக்கடி உற்பத்தியாகுதல். துர்நாற்றம்.

தொண்டை: வரண்டும் உலர்ந்தும் சொர சொரப்பாகவும் இருத்தல். தொண்டையில் எலும்பு சிக்கியிருப்பது போன்ற வலி. விழுங்க சிரமம். ஆகாரம் மெதுவாக உட்செல்லுதல். காலையில் கோழை சேருதல்.

வயிறு: உப்பிசம். தித்திப்பில் அவா. வயிற்றில் உருண்டையான வஸ்துவின் உணர்ச்சி. குமட்டல். வயதானவர்களின் அசீரணம்; எரிச்சலும் உப்பிசமும். சில்லென்ற நீர் குடித்ததினால் ஏற்பட்ட வயிற்றுக் கோளாறுகள். புளித்த ஏப்பங்கள். குமட்டல், படுத்தால் சமனம். வயிறு நிறையத் தண்ணீர் இருப்பது போன்று அடிக்கடி ஏற்படும் உணர்ச்சி. புளித்த வாயாலெடுப்பு. வயிற்றில் புடைக்கும் வெட்டும் வலிகள். உணவில் வெறுப்பு. வயிற்றைப் பற்றிக் கவலை. மேல் வயிற்றில் மேற்புறமாக வலி. சாப்பிடும்

போது சுலபமாக மூச்சுத் திணறுதல் சம்பவித்தல். மேல் வயிற்று வலி முதுகுக்குப் பரவுதல்.

அடி வயிறு: கல்லீரல் பக்கமாகப் பிடிப்பு வலிகள். வலியுடனுள்ள நாட்பட்ட கல்லீரல் கோளாறுகள். மஞ்சட் காமாலையும் நீர் வீக்கமும். அடி வயிறு தருத்தியும் சில் லென்று மிருத்தல். எழுந்திருக்க வேண்டும்போது வலப் பக்கமாகத் திரும்பிக்கொள்ள நேருதல்.

மலப்பை: சிரமத்துடன் பருமனுன மலம், கழிப் பதற்கு ஒரு மணிக்கு முன்னதாகவே பிடிப்பு வலிகள். மூலங்கள் பெரிதாகவும் வலியுடனும் வீங்கியும் இருத்தல். அபானத்தைச் சுற்றி அரிப்பு, குழி விழுந்த சிறு சிரங்குகள். எப்பொழுதும்போல் வெளியாகும் சாதாரணமான மலத் துடன் அதிக இரத்தமும் வெளியாகுதல். இருமும்போது மூலங்களில் வலி. மலப்பையிலும் அபானத்திலும் எரிச் சல். மலப்பை சிரமமில்லாமல் வெளித் தள்ளுதல். அரிப்பு.

மூத்திரம்: இரவுகளில் அடிக்கடி மூத்திரம் கழிக்க நேரிடுதல். மூத்திரம் வருவதற்கு வெகு நேரம் முன்ன தாகவே மூத்திரப் பையில் அழுத்துதல். இருமும்போதும் தும்மும்போதும் மூத்திரம் தானுகவே வெளியாகுதல்.

ஆண்: புணர்ச்சியினு லேற்பட்ட உபாதிகள். புணர்ச் சியில் குறைவான இச்சை. அமிதமான இந்திரிய ஸ்கலிதம், அதனுல் பலவீனம்.

பெண்: அடிக்கடி ஏராளமான போக்குள்ள மாத விடாய் அல்லது அதிக நாட்கழித்து கொஞ்சமான வெளுத்த போக்குள்ள மாதவிடாய்; ஜனனேந்திரியத்தில் இரணவலி. வலிகள் மார்புக்கோ அல்லது அடிவயிற்றுக்கோ செல்லுதல்.

மார்புக் குறிகளுடனே அல்லது நீர் வீக்கத்துடனே சிறு பெண்களுக்கு ஏற்படும் தாமதித்த மாதவிடாய். முதல் மாதவிடாய் கிரமமாக ஏற்படுதல். பிரசவத்துக்குப் பின் காணப்படும் உபாதிகள். கருப்பை சம்பந்தமான இரத்தப் பெருக்கு; ஏராளமாக இரத்தம் பெருகியபின் அடிக்கடி கசிதல், கடுமையான முதுகுவலி, உட்கார்ந்தாலும் அழுத்தினாலும் சமனம்.

சுவாசாசயம்: மார்பில் வெட்டும் வலி, வலப்பக்கமாகப் படுத்தால் அதிகரிப்பு. குரல் கம்முதலும் கொரகொரப்பும். விடியற்காலை 3 மணிக்குத் தொண்டை வறட்சியுடனும் பிடிப்பு வலிகளுடனும் வரண்ட கடினமான இருமல். ப்ராங்கைடிஸ் உபாதியில் மார்பில் அதிகவலி. சளி, கோழை, கபம் முதலியவை குறைவாகவும் பிசுக்கென்றும் இருந்தாலும் காலையிலும் சாப்பிட்ட பிறகும் அதிகரித்தல். வலியுள்ள பாகத்தைக் கீழாக வைத்துப் படுத்தால் உபாதிகள் அதிகரிக்கும். மார்பின் நீர் வீக்கம். முன்பக்கமாகச் சாய்ந்தால் மார்பு உபாதிகள் சமனம். கோழையை விழுங்க வேண்டி வருதல்; வெண்ணெ வாசனை; ஏராளமாகவும் நாற்றத்துடனும் கட்டி கட்டியாகவும் இருத்தல். மார்பில் சில்லிப்பு. விஸ் என்ற சப்தம். . தளர்ந்து தொங்கும் உள் நாக்குடன் இருமல். அடிக்கடி சலதோஷம் பிடித்தல். உஷ்ணமான பருவங்களில் சரீரம் சுகமாயிருத்தல்.

இருதயம்: இருதயத்தை எடுத்துவிட்டது போன்ற உணர்ச்சி. இருதயப் பக்கத்தில் துடிப்பும் எரிச்சலும். பலவீனமான, துரிதமான நாடி. சிரணக் கோளாறுகளில் விட்டு விட்டு அடித்தல். இருதயம் நின்று விடுமோவென்று சந்தேகிக்கும்படியான நிலைமை.

முதுகு : மிகுந்த களைப்பு. வலது தோள்பட்டையிலும் மூத்திர கோச பாகங்களிலும் பிடிப்பு வலிகள். அடி முதுகு பலவீனமாயிருப்பதுபோல் தோன்றுதல். முதுகில் விரைப்பான பாரிசவாயு ஏற்பட்டிருப்பது போன்ற உணர்ச்சி. முள்ளந்தண்டில் எரிச்சல். பிரசவத்தின்போதும் கடுமையான முதுகுவலி. இடுப்பு உபாதிகள். இடுப்பெலும்பு மூட்டிலும் தொடையிலும் அபானத்திலும் வலி. தொடைகளுக்குமேலும் கீழும்பரவும் கடுமையான திடீரென்று ஏற்படும் வலிகளுள்ள வாத சம்பந்தமான இடுப்பு வலி.

கை, கால்கள் : முதுகும் கால்களும் 'விட்டுப்போகுதல்.' கால்களில் துள்ளுவதும் கனமும் கிழிக்கும் வலிகளும். வீக்கம், அமுக்கினல் வலி. மணிக்கட்டு மூட்டுகளில் கடும் வலி. வயதானவர்களின் பாரிசவாயு, நீர்வீக்கம். கை கால்கள் விரைவினில் தூங்கவாரம்பித்தல். விரல்களின் நுனியில் வலி. உள்ளங்கால்களில் வலி. வலியுடன் கட்டை விரலில் அரிப்பு.

சருமம் : கடுகை அறைத்துப் பற்றுபோட்டது போன்ற எரிச்சல்.

தூக்கம் : சாப்பிட்டபிறகு மயக்கமாயிருத்தல். இரவு 2 மணிக்கு விழிப்பு, பிறகு தூங்கமுடியாமை.

விசேஷம் : புணர்ச்சிக்குப் பிறகு, குளிர்ந்த பருவங்களில், காப்பி குடித்தால், காலையில் மூன்று மணிக்கு, இடது பக்கமாக அல்லது வலியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால், உபாதி அதிகரிப்பு. உஷ்ணமான பருவங்கள், பகலில், நடந்துகொண்டிருக்கும்போது உபாதி சமனம்.

முறிவு : காம்போரா, காபியா.

காலீ நைட்ரிகம் (Kali Nitricum)

திடீரென்று சரீர முழுவதும் ஏற்படும் நீர் அதைப்புடன் கூடிய வீக்கம். மாட்டின் மாமிசம் உட்கொண்டதினால் ஏற்பட்ட வயிற்றுப்போக்கு. கஷ்ட சுவாசமும் தாராளமாக வெளியாகும் கபத்துடனும் உள்ள காசநோய் இருதய சம்பந்தப்பட்ட காசம்; மார்பில் எரிச்சலும் பிடிப்பு வலிகளும். மூத்திர அவயவங்களில் அழர்ச்சி. இரத்தமயமான மூத்திரம். கடுப்புடன் இரத்தமான மலம். மலத்தில் குடலின் தசைகள் காணப்படுதல். மூச்சுத் திணறுவதால் தண்ணீர் குடிக்க இயலாமை. காலை 3 மணிக்கு அதிகமாகும் காசநோய்.

காலீ ப்ரோமேடம் (Kali Bromatum)

பொதுவான புத்திக் குறைவு, ஞாபகசக்தி யிழத்தல், மனக்கலக்கம். நூந்தசைகளில் உணர்ச்சியின்மை, (முக்கியமாகக் கண்கள், தொண்டை சருமம் முதலிய இடங்களில்). புணர்ச்சியில் ஆசை குறைதல், பட்சவாயு. நாட்பட்ட அழர்ச்சியுள்ள பொறுக்குத்தட்டும் குணமுள்ள சரும உபாதிகள். நாட்பட்ட கீல்வாயுவினால் சில இடங்களில் முடிச்சுகள் தோன்றுதல். காக்கை வலிப்பு.

மனம்: அதிகச் சோர்வு, மனவெழுச்சி அடிக்கடி சுறுசுறுப்பாக யிருத்தல். பயந்த சுபாவம், சந்தேகிக்கும் குணம். கருப்ப ஸ்திரீகள் இரவில் பயங்கரமான உருவங்களைக் காணுதல். குழந்தைகள் அலறிக்கொண்டு விழித்துக் கொள்ளுதல், பிரக்ஞை யின்மை. ஒருவரையும் அடையாளம் கண்டுகொள்ள முடியாமை. தன்னை யாரோ துரத்துகிறார்கள் என்றும் தனக்கு விஷம் கொடுத்து

விடுவார்களோ வென்றும் தன் குழந்தை இறந்துவிட்டதாக வும்நினைத்துக் கொள்ளுதல்.

தலை: நடுக்கத்துடன் தூக்கிட்டுக் கொள்ளும் எண்ணம். முகம் இரத்தம் சுரந்திருத்தல். தலையில் மறத்த உணர்ச்சி. தொண்டைக்குப் பரவும் சுபாவமுள்ள சலதோஷம்.

தோண்டை: உள்நாக்கு முதலியவைகளில் இரத்தத் திறட்சி. அவைகளில் உணர்ச்சியின்மை. விழுங்க முடியாமை, முக்கியமாகத் திரவ பதார்த்தங்கள்.

வயிறு: ஒவ்வொரு தடவை சாப்பிட்ட பிறகும் கடுமையான தாகத்துடன் வாயாலெடுப்பு. இடைவிடாத விக்கல்.

அடிவயிறு: குடல் வெளியே தள்ளப்படும் உணர்ச்சி. குழந்தைகளின் விஷபேதி, தசைகளில் முறுக்குதலும் குதிப்பும். கடுந்தாகம், வாயாலெடுப்பு, முதலியவைகளுடன் பச்சையான தண்ணீர் போன்ற மலம். களைப்பு. அடிவயிற்றினுள்ளே சில்லிப்பு. அதிக இரத்தப் போக்குள்ள வயிற்றுப் போக்கு. அடிவயிறு உள்ளிழுக்கப்படுதல்.

மூத்திரம்: மூத்திரகோசத்தின் உணர்ச்சிக் குறைவு. தாகத்துடன் ஏராளமான மூத்திரம். நீரழிவு வியாதி.

ஆண்: பலவீனம், நபும்சகத்துவம். அமித சிற்றின்ப போகத்தினுல் ஞாபகமறதி, கைகால்களில் உணர்ச்சியின்மை. பாதி தூக்கத்தில் சிற்றின்ப ஆசை அதிகரிப்பு.

பேண்: ஜனனேந்திரிய அரிப்பு. அதிக அமைதியின்மையுடன் நரம்பு சம்பந்தமான சினைப்பை வலி. அதிகரித்த சிற்றின்ப ஆசை.

சுவாசாசயம்: கருப்ப காலங்களில் இழுப்புள்ள இருமல். இரவுகளில் வரண்டும், குரைக்கும் சப்தமுமுள்ள, களைப்புண்டாக்கும் இருமல்.

கை கால்கள்: துரு துருவென்றிருக்கும் கைகள். விரல்களை வெகுவேகமாக பின்னிக் கொண்டேயிருத்தல். தசைகளில் முறுக்கு, குதிப்பு.

சருமம்: முகத்தில் பருக்கள், கொப்புளங்கள். அரிப்பு, முக்கியமாக மார்பிலும் தோள் பட்டைகளிலுமதிகம். உணர்ச்சியின்மை.

தூக்கம்: அமைதியற்ற தூக்கம். அதிக மயக்கம். அமித சிற்றின்ப போகம், கவலை, வருத்தம் முதலியவைகளால் தூக்கமின்மை. இரவில் பயங்கரக் கனவுகள். தூக்கத்தில் பற்களைக் கடித்தல். இரவில் தூங்கிக் கொண்டே நடத்தல்.

விசேஷம்: மனதினுலோ, சரீரத்தினுலோ வேலை செய்யும்போது உபாதிகள் சமனம்.

காலீ பாஸ்பாரிகம்
(Kali Phosphoricum)

ஒரு சிறப்பான நரம்பு ஔஷதம். முக்கியமாக சிறுவர்களுக்கு ஏற்றது. நரம்புகளின் பலவீனம், சரீரமும் மனதும் சோர்ந்திருத்தல். வியாதிகளினுல் பலவீனமேற்படும் நிலைமை, டைபாய்டு போன்ற நிலைமை. சரீரத் தசைகள் அழுகவாரம்பித்தல் முதலியவைகளில் அதிக உபயோகமுள்ளது.

மனம்: வருத்தம், சோம்பல். பிறரைப் பார்க்கப் பிரியமின்மை. மனோற்சாகம் குன்றுதல். திடுக்கிடுதல்.

சங்காதோஷம், மூளை உபாதிகள். இரவில் பயங்கரக் கனவுகள். தூங்கிக்கொண்டே நடத்தல். ஞாபகமிழத்தல். சிறு காரியமும் மலைபோன்று தோன்றுதல். சங்கோசம், பிறருடன் சம்பாஷிக்க மாட்டார்.

தலை : பின்தலையில் வலி, எழுந்த பிறகு சமனம். படுத்தால், நின்றுகொண்டிருந்தால், உட்கார்ந்தால், மேலே பார்த்தால் கிறுகிறுப்பு. மூளையில் இரத்த சோகை. பள்ளியில் படிக்கும் சிறுவர்களுக்கும் களைத்துப்போனவர்களுக்கும் ஏற்படும் தலைவலி, மெதுவாக அசைந்துகொண்டேயிருந்தால் சமனம். வயிற்றில் காலி உணர்ச்சியுடன் தலை வலி.

கண்கள் : பார்வைக் குறைவு. கிரகிக்கும் தன்மைக் குறைவு. கண்ணிமைகள் தொங்குதல்.

மூக்கு : கெட்ட நாற்றமுள்ள போக்குடன் மூக்கு உபாதிகள்.

காதுகள் : குடைதலும் பஸ்ஸ் என்ற சப்தமும்.

முகம் : கன்றியும் குழிவிழுந்தும் இடுங்கிய கண்களுடனும் இருத்தல். வலப்பாக நரம்பு வலி குளிர்ந்த ஒற்றிடங்களினால் சமனம்.

வாய் : சுவாசம் நாற்றமடித்தல். நாக்கு பழுப்பான மாசு நிறைந்திருத்தல். காலையில் அளவுக்குமீறி காய்ந்திருத்தல். சுலபமாக இரத்தக் கசிவுடன் கூடிய ஈறுகளுடன் பல்வலி.

தொண்டை : அழுகியிருக்கும் வலியுள்ள தொண்டை. குரல்வளையின் பக்ஷவாயு.

வயிறு: ஒன்றுமேயில்லாத காலி உணர்ச்சி.

அடிவயிறு: அழுகிய நாற்றமுள்ள வயிற்றுப்போக்கு பயத்தினாலோ களைப்பினாலோ உண்டானவை. சாப்பிடும் போது வயிற்றுப்போக்கு. சுத்தமான இரத்தம் வெளியாகும் வயிற்றுக்கடுப்பு, அடிவயிற்றில் வீக்கம் ஆரம்பிக்கும். வியாதியஸ்தர் மயக்கமடைவார். அரிசி கழுவின நீர்போன்ற போக்குள்ள விஷபேதி (காலரா).

பெண்: அதிக தாமதமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ உள்ள மாதவிடாய்.

ஆண்: இரவுகளில் இந்திரிய ஸ்கலிதம். ஆண் தன்மை குறைதல். புணர்ச்சிக்குப் பின் விவரிக்க இயலாத களைப்பு.

மூத்திர அவயவங்கள்: தானாகவே மூத்திரம் வெளியாகுதல். மூத்திரத்தை அடக்கிவைக்க இயலாமை. கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. அறக்கு மஞ்சள் நிறமுள்ள மூத்திரம்.

சுவாசாசயங்கள்: ஆஸ்துமா, சிறிதளவு உணவும் தொண்டையில் அடைத்தல். மாடிப்படி யேறினால் சிறு மூச்சு வாங்குதல். இருமல், மஞ்சளான கோழை.

கை, கால்கள்: முதுகிலும் கைகால்களிலும் பக்ஷவாயு போன்ற பலவீனம், உழைப்பினால் அதிகரிப்பு.

சுரம்: சரீரத்தின் உஷ்ணம் கீழே செல்லுதல்.

விசேஷம்: கவலை, சரீர மன உழைப்பு, சாப்பிடுதல் குளிர், அதிகாலை முதலியவைகளில் அதிகரிப்பு. கதகதப்பு, இளைப்பாறுதல், முதலியவைகளால் சமனம்.

காலீ பைக்ரோமிகம்
(Kali Bichromicum)

இவ்வௌஷதம் வேலை செய்யும் முக்கிய இடங்கள்: வயிறு, குடல், சுவாச மார்க்கம் முதலியவற்றிலுள்ள பூந்தசைகளிலும் எலும்புகளிலும் நார்ச் செபிகளிலும் ஆகும். மூத்திரக் குண்டிக்காய்கள், இருதயம் கல்லீரல் ஆகியவைகளும் பாதிக்கப்படுகின்றன. குண்டிக்காய்களின் அழர்ச்சி. கல்லீரல் சிறுத்தல். சுரமில்லாமலிருப்பதும் இரத்த சோகையும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவை. பாரிச வாயுவை ஒத்த பொதுவான பலவீனம். அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும் குணம் அல்லது கிரந்தி நோய் முதலிய பரம்பரை வியாதி, இவைகளுடன் கொழுப்பும் சதைப்பிடிப்பான சரீரிகளுக்கு நன்கு உபயோகமுள்ளது. குறிகள் காலையில் அதிகரிக்கும். வலி சீக்கிரமாக இடம் மாறுதல். வாதரோகமும் வயிற்றுக் கோளாறுகளும் மாறி மாறி வருதல். பலவிடங்களிலுள்ள பூந்தசைகள் பாதிக்கப்படுகின்றன. சளி, கோழை, கபம், வாயாலெடுப்பு, ஆகிய எல்லாம் இவ்வௌஷதத்தில் கெட்டியாகவும் கம்பி போன்றும் இருக்கும். இது ஒரு விசேஷக் குறியாகும்.

தலை: எழுந்திருந்தால் குமட்டலுடன் கூடிய கிறுகிறுப்பு. புருவங்களுக்கு மேலாகத் தலைவலி, வலி வருமுன் கண்பார்வை மங்குதல். மண்டைத் தோலிலும் எலும்புகளிலும் வலி.

கண்கள்: கண்குழிகளின் மேலாக நரம்பு வலி. வலப்பக்கம் கண்ணிமைகளில் வீக்கம், எரிச்சல், நீர் அதைப்பு. போக்கு மஞ்சளாகவும் கம்பிபோன்றுமிருத்தல். வெள்ளை விழிகளில் குழிப்புண்கள். வலியின்மை அல்லது வெளிச்சத்தில் கண் கூச்சம்.

காதுகள்: கிழிக்கும் வலியுடன் வீக்கம். கெட்டியான, கம்பிபோன்ற, மஞ்சள் நிறமான போக்கு. இடது காதில் கடுமையான பிடிப்பு வலி.

மூக்கு: மூக்கினல் பேசும் குழந்தைகள், முக்கியமாகக் கொழுத்து தொளதொள என்றிருக்கும் குழந்தைகள் மூக்கினடியில் வலியும் பார உணர்ச்சியும், மூக்கில் சிக்கிய உணர்ச்சி. மூக்கினுட்பாகத்தில் குழிப்புண்கள், வட்டமாயிருத்தல். அதிக நாற்றம். போக்கு கெட்டியாகவும் கம்பிபோன்றும் பசுமையான மஞ்சள் நிறமாயும் இருத்தல். பிறகு மூக்கில் இரணம், வாசனையறியும் சக்தி யிழத்தல். மூக்கினல் சுவாசிக்க முடியாமை. மூக்கடைப்புள்ள சல தோஷம். கடுமையான தும்மல். ஏராளமான, தண்ணீர் போன்ற போக்கு.

முகம்: அழகான வடிவம், சிவந்த மேனி, பருக்கள், எலும்புகளில், முக்கியமாக கண்களுக்குக் கீழுள்ளவைகளில் வலி.

வாய்: வரட்சி; பிசின்போன்ற உமிழ் நீர். வயிற்றுக் கடுப்பில் நாக்கு பளபளப்பாகவும் சிவந்தும் வழுவழுப்பாகவும் வறண்டும் இருக்கும். நாக்கில் மயிர் சிக்கிய உணர்ச்சி.

தொண்டை: உள் நாக்கு அழர்ச்சியுடன் சிவப்பாக மாறுதல். காய்ந்தும் சொர சொரப்பாகவும் இருத்தல். தளர்ந்து தண்ணீரைப்போல் வீங்கி இருத்தல். மேல் வாயிலும் டான்ஸில்களிலும் நரம்புகள் போன்ற மாசு படிதல். வெண்மையான குழிப்புண்கள். அதிகக் களைப்புடனும் மிருதுவான நாடியுடனுமுள்ள தொண்டைச் சதை வளர்

நோய். வாயிலிருந்தும் தொண்டையி லிருந்தும் வெளி யாகும் போக்கு கட்டியாகவும் கம்பிபோன்று மிருத்தல்.

வயிறு: பீர் சாப்பிட்ட பிறகு குமட்டலும் வாயா லெடுப்பும். சீரணம் ஆகாமல் ஆகாரம் வயிற்றில் அப்படியே இருப்பதுபோல் உணர்தல். வயிற்றில் பிசைதல். அசீர ணம். வயிற்றில் வட்டமான குழிப்புண்கள். கல்லீரல், மண்ணீரல் பக்கங்களில் பிடிப்புவலி, அவைகளின் வழியாக முள்ளந்தண்டிற்கும் பரவுதல். மாமிசம் சீரணமாகாமை. பீர் முதலிய போதை தரும் வஸ்துக்களில் அவா. சாப் பிட்ட பிறகு சீரண உபாதிகள் மறைந்து வாத உபாதிகள் ஆரம்பித்தல். நல்ல மஞ்சள் நிறமுள்ள தண்ணீர் வாயா லெடுப்பு.

அடிவயிறு: சாப்பிட்டவுடன் அடிவயிற்றில் வெட் டும் வலி. குடலில் நாட்பட்ட குழிப்புண்கள். மேல்வயிற் றின் வலப்பாகத்தில் இசிப்புவலி. கல்லீரலில் அசுத்த நீர்க் கட்டு ஏற்படுதல். வலியுடன் அடிவயிறு சுருங்குதல், எரிச்சல்.

மலம்: குழம்பு போன்றும் பாகுபோன்று மிருத்தல். காலையில் அதிகம். வயிற்றுப் போக்கில், கடுப்பு, பழுப் பான நுரையுள்ள மலம். ஆசனவாயில் மூளை இருக்கும் உணர்ச்சி.

மூத்திரம்: மூத்திரகோசத்தில் வலி. மூத்திரம் கழித்த பிறகு ஏதோ ஒன்றிரண்டு சொட்டுகள் பாக்கி யிருப்பதுபோல் தோன்றுதல், ஆனால், கழிக்க இயலாமை. மூத்திரத்தில் கம்பிபோன்ற கோழை, அதனால் மூத்திர கோசம் மூடப்பட்டு விடுதல். மூத்திரக் குண்டிக்காய்களில்

அதிக இரத்தத்திறட்சியினால் அழற்சியும் குறைவான, முட்டை வெளுப்புபோன்ற பதார்த்தம் கலந்த மூத்திரம்.

ஆண் : ஆண்குறியில் கொப்புளங்களுடன் வலியும் அரிப்பும். விட்டு விட்டு வரும் இயல்புள்ள பிடிப்பு வலி களுடன் குழிப்புண்கள், இரவில் அதிகரிப்பு. இரவில் விழித்துக்கொண்டவுடன் ஆண் குறியின் அடிப்பாகத்தில் இறுக்கும் உணர்ச்சி. பிசுக்கென்று வெண்ணே போன்ற பதார்த்தத்தை வெளியாக்கும் கிரந்தி சம்பந்தமான குழிப் புண்கள். விரைப்பு.

பெண் : மஞ்சளான, கம்பிபோன்று பிசுக்குள்ள வெள்ளைப்பாடு. யோனியில் அதிக எரிச்சல், கிளர்ச்சி முதலியவைகளுடன் அரிப்பு. கருப்பை இடம் பெயருதல். கோடைக் காலங்களில் அதிகரிப்பு.

சுவாசாசயம் : குரல் கம்முதல், மாலையில் அதிகரிப்பு. வெண்கல ஓசைபோன்ற இருமல் ஏராளமான மஞ்சள் நிற முள்ள கோழை, கபம், இவை கெட்டியாகவும் பிசுக்கென் றும் நீண்ட கம்பிகளாகவும் வெளிப்படுதல். நடுமார்பில் வலியுள்ள இருமல். தொண்டையில் கிசுகிசுப்பு உணர்ச்சி.

இருதயம் : துடிப்பு, இருதயத்தைச் சுற்றிலும் குளிர்ந்த உணர்ச்சி.

முதுகு : இடுப்பு வழியாக வெட்டும் வலி; நடக்க இயலாமை; வலி அரையிடுக்கிற்கும் பரவுதல்.

கை கால்கள் : வலி விரைவாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் தாவுதல். எலும்புகளினூடே சஞ்சரிக்கும் வலிகள், குளிரினால் அதிகரிப்பு. இடதுபக்க இடுப்புச்

சந்துவாதம்; அசைவினால் அனுகூலம். எலும்புகளில் இரண வலி, அடிபட்டது போலிருத்தல். அதிகக் களைப்பு. கிரந்தி சம்பந்தமுள்ள வாதரோகம். எல்லா மூட்டுகளிலும் வலி, வீக்கம், விறைப்பு, உடையும் சப்தம். நடக்கும் போது குதிகால்களில் வலி. சிறு சிறு இடங்களில் வலி.

சருமம்: பருக்கள். வட்டமான ஓரங்களுள்ள, கெட்டியான ஒட்டும் தன்மையுள்ள பதார்த்தத்தை வெளியாக்கும் குழிப்புண்கள். பெரியம்மை போன்ற, எரிச்சல் வலியுள்ள கொப்புளங்கள்.

விசேஷம்: உஷ்ணத்தினால் சௌகரியம். காலை வேளை, பீர், கோடைக்காலம் முதலியவைகளால் அசௌகரியம்.

முறிவு: ஆர்ஸனிக், லாச்சஸிஸ்:

காலீ மூரியாடிகம்
(Kali Muriaticum)

சலதோஷம், சலதோஷ சம்பந்தமான உபாதிகள், கிட்டத்தட்ட கடுமையாக இருக்கும் அழர்ச்சியுள்ள நிலைமைகள், கோளங்களில் வீக்கம், முதலியவைகளில் இவ்வௌஷதம் தலை சிறந்தது. நாக்கின் அடியில் வெள்ளை அல்லது பழுப்பு நிறமுள்ள மாசு படிவதும் வெண்மையான கெட்டியான கோழை வெளியாவதும் இதன் விசேஷ குறிகளாகக் காணப்படுகின்றன.

மனம்: தான் பட்டினியா யிருக்கவேண்டுமென்று நினைத்தல். வாயாலெடுப்புடன் தலைவலி. பாலுண்ணி. தலைப்பொடுகு.

கண்கள்: வெண்மையான புளிச்சை, சீழுள்ள சொறி.

காதுகள்: நடுக்காதில் பலகாலமாக சீழ்க்கொண்டிருத்தல். காதுகளுக்கு கீழேயுள்ள கோளங்களின் வீக்கம். காது அடைப்பும் சப்தமும்.

மூக்கு: சலதோஷம். சளி, கபம் முதலியவை வெண்மையாகவும் கெட்டியாகவுமிருத்தல். தொண்டைக் குழியைப் பிசின்போன்ற பதார்த்தம் மூடிக்கொண்டிருத்தல். மூக்கடைப்பு உள்ள சலதோஷம். இரத்தப் பெருக்கு.

முகம்: கன்னங்களில் வீக்கமும் வலியும்.

வாய்: குழிப்புண்கள். கழுத்திலும் முகவாய்க் கட்டையிலும் உள்ள கோளங்கள் வீங்குதல். நாக்கில் சற்று வெளுத்த பழுப்பு நிறமுள்ள மாசு, வறட்சி அல்லது குழ குழப்பு.

தொண்டை: டான்ஸிலிடிஸ். டான்ஸில்களில் அழர்ச்சி. டான்ஸில்கள் மிகவும் வளர்ந்து விடுவதினல் சுவாசம் விடக் கஷ்டம். தொண்டையிலும் டான்ஸில்களிலும் பழுப்பான புள்ளிகள்.

வயிறு: கொழுப்பு அல்லது சத்துள்ள ஆகாரத்தினல் அசீரணம். வெண்மையாகவும் பளபளப்பும் உள்ள கோழை வாயாலெடுப்பு. வயிற்றில் நீர் சுரத்தல். மலச்சிக்கலுடன் வயிற்றில் வலி. தண்ணீர் குடித்தால் பசி மறைதல்.

அடிவயிறு: வீக்கமும் வலியும். உப்பிசம். அபானத்தில் அரிப்பை உண்டாக்கும் நாக்குப் பூச்சிகள்.

மலம்: மலச்சிக்கல். கொழுப்பான உணவிற்குப் பிறகு வயிற்றுப்போக்கு. களிமண் போன்ற வெண்மையான அல்லது குழகுழப்பான மலம். வயிற்றுக் கடுப்பு, குழகுழப் பான மலம். கறுப்பான கெட்டியான இரத்தம் கசியும் மூலங்கள்.

பெண்: மாதவிடாய் தாமதமாகவோ அல்லது அமுக்கப்பட்டோ அல்லது வெகு சீக்கிரமாகவோ வெளி யாகுதல். ஏராளமான போக்கு, இரத்தம் கட்டிகட்டியும் தார் போன்று கறுப்பாகவும் இருக்கும். கெட்டியாகவும் காரமில்லாமலும் வெண்மையாகவும் சளி போன்றுமுள்ள வெள்ளைப்பாடு. கருப்ப ஸ்திரீகளின் மயற்கை. வெண்மை யான கபம் வாயாலெடுக்கப்படுதல்.

சுவாசாசயம்: குரல் கம்முதல். சீரணக் கோளாறு களுடன் ஆஸ்துமா. கபம் வெண்மையாகவும் இருமி வெளி யேற்ற முடியாதபடி கடினமாகவும் இருத்தல். கடுமையான இடைவிடாமல் வரும் பலத்த சப்தமுள்ள சிறிய இருமல்கள்.

முதுகு, கைகால்கள்: வாத சுரம். மூட்டுகளில் வீக்கம் அசையும்பொழுது மாத்திரம் வலி தென்படுதல் அல்லது அதிகமாகுதல். இரவில் வலியுள்ள வாதம்; படுக்கையின் சூட்டினால் அதிகரிப்பு. கீழ் முதுகிலிருந்து கால்களுக்கு மின்னல் போன்று வலி தாவுதல், அதனால் படுக்கையைவிட்டு எழுந்து உட்கார நேரிடுதல். எழுதும் போது கைகள் விறைப்படைதல்.

சருமம்: முகப் பருக்கள், கெட்டியான வெண்மை நிறமுள்ள பதார்த்தம் நிரம்பிய சிறு கொப்புளங்கள்.

விசேஷம்: அசைவு, சத்துள்ள உணவு, கொழுப்பு முதலியவைகளால் உபாதிகள் அதிகரிப்பு.

காலீ ஸல்ப்யூரிகம் (Kali Sulphuricum)

ஏராளமான தோலுறிதலுள்ள எல்லா உபாதிகளுக்கும் இது தலை சிறந்தது. அழர்ச்சிகளில் கடைசி நிலைமைகளில் உபயோகம். ஏராளமான விட்டுவிட்டுவரும் மஞ்சளான போக்குகள்.

தலை: மாலையில் ஆரம்பமாகும் வாதத் தலை வலி. வழுக்கை. பொடுகுகள் ஏற்படுதல்.

காதுகள்: யூஸ்டேகியன் குழாய் சம்பந்தமான செவிடு. மஞ்சள் பதார்த்தம் வெளியாகுதல்.

மூக்கு: மஞ்சள் நிறமும் குழகுழப்புமுள்ள சளியுடன் கூடிய சலதோஷம். மூக்கடைப்பு. வாசனை அறியும் சக்தி அழிதல். வாயால் மூச்சுவிடுதல், குறட்டை முதலியவை, தொண்டையில் ஆபரேஷன் செய்தபிறகும் பல நாட்களுக்கு இருத்தல்.

முகம்: சூடான அறையில் வலி, புற்றுகள்.

வயிறு: நாக்கு மஞ்சளான மாசுபடிந்தும் குழகுழப்பாகவும் இருத்தல். ருசியின்மை. ஈறுகளில் வலி. எரிச்சலுள்ள தாகம், குமட்டல், வாயாலெடுப்பு. கனத்த உணர்ச்சி. சூடான பானங்களை அருந்த பயம்.

அடிவயிறு: பிசையும் வலிகள். தொடுவதற்கு அடிவயிறு சில்லென்றிருத்தல். மஞ்சள் நிறமும் குழகுழப்புமுள்ள வயிற்றுப்போக்கு. மூலங்களுடன் மலச்சிக்கல்.

ஆண்: மேகவெட்டை, போக்கு குழகுழப்பாகவும் பசு மஞ்சள் நிறமாயுமிருத்தல். விரை அழர்ச்சி. தந்தி மேகம்.

பெண் : காமதமாகவும் குறைவாகவும் அடிவயிற்றில் கனத்த உணர்ச்சியுடனுமுள்ள மாதவிடாய். இடைக்காலங்களில் கருப்பை உதிரப்பெருக்கு.

சுவாசாசயம் : கொரகொரப்பான சப்தம். மார்பில் கபம் கடைதல். மஞ்சளான கோழையுடன் ப்ராங்கைல் சம்பந்தமான ஆஸ்துமா. இருமல் மாலையிலும் உஷ்ணமான இடங்களிலும் அதிகரிப்பு.

கை, கால்கள் : பிடரிக் கழுத்து, முதுகு, கை கால்கள், ஆகியவைகளில் உள்ள வலிகள் கதகதப்பான அறையில் அதிகரிக்கும். வலிகள் அடிக்கடி இடம் மாறிக் கொண்டேயிருத்தல்.

சுரம் : இரவில் சுரம் அதிகரிப்பு. மஞ்சளான குழகுழப்புள்ள நாக்குடன் முறைச் சுரம்.

சருமம் : பொறுக்குத் தட்டும் குணமுள்ள நாட்பட்ட சரும அழற்சி உபாதிகள். அக்கி, எரிச்சல், அரிப்பு, கடிநோய், படர்தாமரை.

விசேஷம் : மாலையிலும் சூடான அறைகளிலும் அதிகரிப்பு. குளிர்ந்த திறந்தவெளிகளில் சௌகரியம்.

காலீ ஐயோடேட்டம்
(Kali Iodatum)

இதையே காலீ ஹைட்ரோ ஐயோடைடு என்றும் சொல்வதுண்டு. சிபிலிஸ் வியாதியில் மர்கூரியஸ் போன்ற ஔஷதங்கள் கொடுத்த பிறகு அநேக சந்தர்ப்பங்களில் இது தேவைப்படலாம். காலீ ஔஷதங்களுக்கே பொதுவாக ஏற்பட்ட விடியற்காலை 3 மணி உபத்திரவங்கள்

இதற்கும் இருக்கலாம். காலீ என்னும் பொட்டாஷியத் துடன் ஐயோடியமும் சேர்ந்து ஏற்பட்ட ஔஷத மாகையால், இதன் குறிகளில் சில காலீ ஔஷதங்க ளுடையதாகவும் மற்றுஞ்சில ஐயோடியம் என்னும் ஔஷதத்துனுடையதாகவும் காணப்படும். இதற்கு அதிக மான எலும்பு வலிகள், வீக்கங்கள், நீர்ச்சுறப்புகள் முதலிய வைகளும், பச்சை நிறமுள்ள கெட்டியான, நாற்றமுடைய கோழை வெளிப்படுதலும், அவ்வாறு வெளியேற்றப்படும் கோழைகள் மார்பின் அடிப்பாகத்திலிருந்து வருவது போலவும் இருக்கும். தவிர இந்த ஔஷதத்திற்கு நிண நீர்க் கோளங்களிலும் நிண நீர்க் குழாய்களிலும் வேலை செய்யும் சக்தி உண்டு. இது ஒரு ஆழ்ந்து வேலைசெய்யும் ஔஷதம். ஸோரா, ஸிபிலிஸ் இவ்விரண்டு நிலைமைகளா லும் ஏற்படுத்தப்பட்ட வியாதிகளுக்கு உபயோகம்.

மனம்: கவலையும் வருத்தமும். அதிகமாகக் கோபம் வரும். பிறரை துன்புறுத்துவதில் இஷ்டம்.

தலை: நெற்றியில் செம்மட்டியால் அடிப்பது போன்ற வலி, இது அமுக்குவதினால் சமனப்படும். தவிர திறந்த வெளிக்காற்றிலும் சமனப்படும்.

கண்கள்: எரிச்சல். நாற்றமுள்ள, கெட்டியான, பச்சை நிறமுள்ள பீளை அதிகமாக வெளிப்படுதல். பார்வை மங்குதல்.

மூக்கு: பட்ட இடங்களைப் புண்ணாக்கும் நீர். அடிக் கடி சளி பிடித்துவந்துகொண்டே இருத்தல். மூக்கு சிவந் தும் வீங்கியுமிருத்தல். மூக்கின் அடிப்பாகத்தில் இறுக்கும் உணர்ச்சி. மூக்கின் எலும்புகள் அழுகிவிடுதல். வாசனை அறியும் சக்தி குறைந்துவிடுதல்.

வாய் : துர்நாற்றமடித்தல். அதிகமாக உப்புச் கரிக்கும் எச்சில் ஊறுதல். வெண்மை நிறமுள்ள இரணங்கள்.

தொண்டை : உள்நாக்குத் தளர்ந்து தொங்குதல். தொண்டையின் பக்கங்களிலுள்ள கோளங்கள் வீங்கியும் பெருத்தும் இருத்தல்.

அன்னப்பை : சில்லென்றிருக்கும் பானங்கள் ஒத்துக்கொள்ளாமை. (ஆனால் சில்லென்ற காற்று மேலே படுவது ஒத்துக்கொள்ளும்). அதிகப் பித்தநீர் உற்பத்தி ஆவதும் ஓக்காளமும். எரிச்சல். எப்பொழுதும் அதிக தாக வறட்சை இருத்தல். ஆனால் தண்ணீர் குடிப்பது ஒத்துக்கொள்ளாதிருத்தல்.

வயிறு : உப்பி அதன் பின்னர் வயிற்றுப்போக்கு ஏற்படுதல். வலி.

மலம் : சில சமயங்களில் மிகவும் குறைவாகவும், வறண்டும் கஷ்டத்துடன் வெளியேறுவதாகவும் இருக்கும். மற்றுஞ் சில சமயங்களில் இடுப்பில் வலியுடன் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

மூத்திர உறுப்புகள் : சில சமயங்களில் இரத்தம் போலிருத்தல். மற்றுஞ் சில சமயங்களில், அதுவும் முக்கியமாக இரவுகளில், அடிக்கடியும், அதிகமாகவும், தண்ணீர் போலவும் இருக்கலாம். நீர்தாரையில் எரிச்சல். மேக வெட்டை (Gonorrhoea). கெட்டியான பச்சை நிறமுள்ள அல்லது மஞ்சள் நிறமுள்ள நீர் வெளிப்படுதல்.

ஆண் : பீஜங்கள் சுருங்கி யிருத்தல்.

பெண் : மாதவிடாய் ஏற்படுவதற்கு முன்னால் அடிக்கடி சிறுநீர்விடவேண்டியிருத்தல். மாதவிடாய் தாமதித்து ஏற்படுதல். ஆனால் அதிகப் போக்கு இருத்தல்.

இருமல் : வறண்ட, கஷ்டப்படுத்தும் இருமல். அதன் பின்னர் பச்சை நிறமும், உப்புக்கரிப்பும் உள்ள ஏராளமான சளி வெளிப்படுதல். நடக்கும்பொழுது நடு மார்பிற்குப் பின்புறமாக வலி. இரவுகளில் அதிகமான வியர்வை.

மார்பு : நிமோனியாவிற்கு இது ஒரு நல்ல ஔஷதமாகும். வேறு ஔஷதங்களின் நிச்சயமான குறிகள் இல்லாவிட்டால் இது கொடுக்கப்படலாம்.

இருதயம் : நடந்தாலும், அசைந்தாலும் படபடப்பு ஏற்படுதல். சில சமயங்களில் நாடி மெதுவாகவும் சில சமயங்களில் வேகமாகவும் செல்லுதல்.

கை, கால்கள் : இடது தோள்பட்டையில் அடிபட்டது போன்ற வலி. இடது இடுப்பிலும் வலி. இடது பக்கத்து தொடை நரம்புகளில் வலி. முழங்கால்களில் நீல்வாத வீக்கம்.

சுரம் : குளிர் முதுகிலிருந்து ஆரம்பித்தல், முக்கியமாக மாலை 4 மணியிலிருந்து 7 மணிவரை சுரம். குளிர் அதிகம். போர்த்திக்கொண்டால் சமனம்.

சருமம் : சருமம் முழுவதும் எரிச்சல்.

இதன் பிறகு நன்கு வேலை செய்யும் ஔஷதங்கள் : பாஸ்பரஸ், கார்போ விஜீ.

முறிவு: கபியா, ஹீப்பர் சல்பர்.

விசேஷங்கள்: அசைவினாலும் சில்லிட்ட காற்றினாலும் சமனம். இரவுகளிலும் அசையாமலிருந்தாலும் உபாதிகள் அதிகமாதல்.

காலோட்ரோபிஸ் (Calotropis)

கிரந்தி நோய்களில் பாதரச சம்பந்தமான ஔஷதங்களை உபயோகித்த பிறகு இவ்வௌஷதம் கொடுக்கப்பட்டு நல்ல குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடுமையான வயிற்றுக் கடுப்பு, யானைக்கால், குஷ்டம், முதலியவைகளிலும் இவ்வாறே.

இவ்வௌஷதம் சருமத்தில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது. வயிற்றில் உஷ்ணமான உணர்ச்சி ஒரு விசேஷக் குறியாகும். மாமிசம் குறைந்துகொண்டிருப்பினும் சரீரம் மாத்திரம் பருத்துக்கொண்டே யிருத்தல், தசைகள் கடினமாகவும் உறுதியாகவும் ஆகுதல்.

காலோபில்லம் (Caulophyllum)

இது ஒரு ஸ்திரீகளின் ஔஷதமாகும். கருப்பையின் சக்திக் குறைவு. பிரசவ காலத்தில் வலிகள் குறைவாய் இருத்தல், களைப்பு, கோபகுணம். சிறு எலும்பு மூட்டுகளைப் பாதிக்கும் உபாதிகளைப் போக்கும் குணம் இதற்கு இருக்கிறது.

வயிறு: இருதய வலி, வயிற்றில் வலிப்பு. வலிப்புக் குறிகளுடன் கூடிய சீரணக் கோளாறுகள்.

பெண்: எலும்புகள் அசாதாரணமான விரைப்புடன் இருத்தல்.

கடுமையாகவும் வலிப்புப் போன்றும் உள்ள வலிகள் சரீரத்தின் பல பாகங்களுக்கும் பரவுதல். அடங்கிப்போன பிரசவ வலியை இவ்வௌஷதத்தினால் திரும்ப ஏற்படும்படி செய்ய முடியும். அதோடு மேற்கொண்டு பிரசவம் ஆக உதவி புரியும். பிரசவமான பிறகு ஏற்படும் வலிகள். நெற்றியில் சிறுசிறு புள்ளிகளுடன் வெள்ளைப்பாடு, கருப் பையின் சக்திக் குறைவால் வழக்கமாகக் கருச்சிதைவு ஏற் படுதல். கருப்பையின் கழுத்தில் ஊசி குத்துவது போன்ற வலி. சரீரத்தின் மற்ற பாகங்களுக்கு வலி பரவும் குறிக ளுடன் கூடிய வலியுள்ள மாதவிடாய். பிரசவத்திற்குப் பிறகு ஏற்படும் வெளியாகும் நீர் வெகு நாட்களுக்கு நீடித் திருத்தல்; மாதவிடாயும் வெள்ளைப்பாடும் அபரிமிதமாய் இருத்தல்.

சருமம்: மாதவிடாய், கருப்பை, இவை சம்பந்த மான கோளாறுகளுடன் கூடிய ஸ்திரீகளின் சருமம் சுபாவ நிறத்தை இழந்து வேறு நிறமடைதல்.

கை கால்கள்: சிறிய எலும்பு மூட்டுகள், விரல்கள், கால்கட்டை விரல்கள் அக்குள்கள் ஆகியவைகளில் கடுமை யான இழுக்கும் வலி. மணிக்கட்டுகளில் இசிப்பு. கைகளை மூடினால் வெட்டும் வலி. ஒவ்வொரு நிமிஷமும் இடம் மாறிக்கொண்டே யிருக்கும் வலிகள்.

காலோஸிந்திஸ் (Colocynthis)

இவ்வௌஷதத்தின் குறிகள் அடி வயிற்றிலும் தலையி லும் கடுமையான நரம்பு வலிகளுடன் காணப்படுகின்றன. விசேஷமாக திடீரென்று கோபமும் அதனால் ஏற்படும் உபாதிகளும் உள்ளவர்களுக்கு இவ்வௌஷதம் உபயோகப் படும். சோம்பல் குணமும் ஏராளமான மாதவிடாய்ப்

போக்கும் உள்ள ஸ்திரீகள். உடம்பு பருக்கும் சுபாவம் உள்ளவர்கள். நரம்பு சம்பந்தமான வலிகள் அமுக்கினால் கிட்டத்தட்ட சமனமடைதல். தசைகளில் கெண்டை வாங்குதல், முறுக்குதல், சுருங்குதல். இறுக்கமும் சுருக்கமும். வியர்வை மூத்திர நாற்றத்தை ஒத்திருத்தல். அடிவயிற்றில் பொறுக்கமுடியாத வலியினால் வியாதியஸ்தர் உடம்பை இரட்டையாக மடித்துக்கொள்வது ஒரு பிரதான குறியாகும்.

மனம்: மிகவும் சீக்கிரமாகக் கோபம் வருதல். கேள்விகள் கேட்டால் கோபமடைதல். மனம் நொந்து இருத்தல்.

தலை: தலையை இடப்பக்கமாகத் திருப்பினால் கிறுகிறுப்பு. வாயாலெடுப்பு, குமட்டல் முதலியவைகளுடன் ஒரு பக்கமாகத் தலைவலி. மண்டைத் தோலில் வலியும் இரணமாயிருக்கும் உணர்ச்சியும், எரிச்சலுள்ள வலி, நெற்றிப்பாகத் தலைவலி, குனிந்தாலும் கண்ணிமைகளை அசைத்தாலும் முதுகைக் கீழே வைத்துப் படுத்தாலும் அதிகரித்தல்.

கண்கள்: வலிகள் கடுமையாகவும் குடைவது போன்றும் இருத்தல், அமுக்கினால் சௌகரியம். கீழே குனியும் போது கண்கள் வெளியே விழுந்து விடும்போன்ற உணர்ச்சி. வாத சம்பந்தமான கண் உபாதிகள்.

முகம்: கடுமையான வலி, வீக்கம். இடப் பாகத்தில் அதிகவலி. அமுக்கினால் வலி சமனமடைதல். சில்லிப்புடன் நரம்பு சம்பந்தமான வலிகள். பற்கள் அதிக நீளமாயிருப்பதுபோல் தோன்றுதல். காதுகளில் எதிரொலி உண்டாகுதல்.

வயிறு: மிகவும் கசப்பான ருசி. நாக்கில் மணல் இருப்பது போன்று சொர சொரப்பாகவும் நாக்கு வெந்திருப்பது போன்ற உணர்ச்சியும் இருத்தல். பொய்ப்பசி.

அடி வயிறு: அதிகவேதனை தரும் கடுமையான வலி. வியாதியஸ்தர் உடம்பை இரண்டாக மடித்துக்கொண்டும் அடிவயிற்றை அமுக்கிக்கொண்டும் இருப்பார். அடி வயிற்றில் கற்களை சேர்த்து அறைப்பது போன்றும் வெடித்து விடுவது போன்றும் உணர்ச்சி. குடல்களில் காயம் பட்டதுபோல் வலி. அடிவயிற்றில் வெட்டும் வலி, கோபமேற்பட்ட பிறகு இக்குறி சிலருக்கு ஏற்படும். வயிற்றுக் கடுப்பு போன்ற மலம் ஒவ்வொரு தடவை ஆகாரம் அல்லது பானம் உட்கொண்ட பிறகும் வெளியாகுதல். பாகுபோன்ற மலம்.

பெண்: சினைப்பைகளில் குடையும் வலி. உடம்பை இரண்டாக மடிக்கநேரிடுதல், அதிக அமைதியின்மை. கருப்பையின் பந்தனிகளிலும் சினைப்பைகளிலும் சிறிய வட்டமான சிழ்க்கட்டிகள். அடிவயிற்றை அமுக்கிப் பிடித்துக்கொள்ள வேண்டுதல்.

மூத்திரம்: மலம் கழிக்கும்போது மூத்திர கோசத்தினுள்ளே கடுமையான எரிச்சல். முட்டையின் வெளுப்புப் போன்ற பதார்த்தம் ஆண்குறியிலிருந்து வெளியாகுதல். நுனியில் அரிப்பு. மூத்திரப்பையில் கடுப்பு வலி.

கை கால்கள்: தசைகள் சுருங்குதல். வலது தோள் பட்டைத் தசையில் வலி. வலியுள்ள பாகத்தைக் கீழே வைத்துப் படுத்தல். இடுப்பிலிருந்து முழங்கால்கள் வரை வலி. இடுப்பு மூட்டுகள் ஒரே சமயத்தில் நழுவுதல். மூட்டுகளில் விரைப்பும் தசை நார்கள் சுருங்குதலும்.

வலியுடன் மறந்த உணர்ச்சி. இடது முழங்கால் மூட்டில் வலி.

விசேஷம்: கோபம், அவமதிப்பு முதலியவைகளினால் உபாதிகள் அதிகரிப்பு. உடம்பை இரண்டாக மடிப்பது அழுக்குவது முதலியவைகளால் சமனம்.

காஸ்டிகம் (Causticum)

எரிச்சல், இரணம். மெலிந்த, ஒல்லியான, இரத்த சோகையுள்ள, உறுதியான தசை நார்களற்ற சரீரம் உள்ளவர்கள். படுக்கையிலும் சுதசுதப்பினாலும் சௌகரியம் பெற்று குளிர்ந்த வறண்ட காற்றினாலும் அசௌகரியமடையும் வாத சரீரங்கள். தனிப்பட்ட அவயங்களில் மாத்திரம் படிப்படியாக பக்ஷவாயு பீடித்தல் அல்லது குளிர்ந்த வறண்ட காற்றுபட்டதினால் மந்தமான நாடி, குறைவான சுரம் முதலியவைகளுடன் சரீரத்தின் வலப்பாகத்தில் பக்ஷவாயு. குளிர்ந்த தண்ணீரைக் குடிப்பதினால் இருமல் சமனமடைதல். காலையில் தொண்டைக் கம்மலும் கொற கொறப்பும். இருமும் போதும் மூக்கைச் சிந்தும்போதும் மூத்திரம் தானாக வெளியாகுதல். மயக்கம் வருவதுபோன்ற பலவீனம் அல்லது பலம் குறைதல் அல்லது நடுக்கம். தாடைகள் அசைக்க முடியாமல் இருத்தல். மூட்டுகளில் மடக்கென்று முறியும் சப்தம். மலச்சிக்கல், வெளிக்குப் போகத் தூண்டுதல், ஆனால் மலம் வெளியாவதில்லை. சிறு காக்கை வலிப்பு. அதாவது வியாதியஸ்தர் வலிப்பு வந்து கீழே விழுந்து மூர்ச்சையாகி உடனே இரண்டு மூன்று நிமிஷங்களுக் கெல்லாம் எப்பொழுதும்போல் இருத்தல். கண்களைக் கசக்க வேண்டுமென்ற தூண்டுதலுடன் கூடிய பூ விழும் உபாதியைத் தடுக்கவல்லது. வலியுடன் மறந்த

உணர்ச்சி. இடுப்பிலும் தொடையிலும் கடுமையான வாத வலிகள், படுக்கையிலிருந்து அங்குமிங்கும் திரும்புதல், அமைதியின்மை. டைபாய்டு போன்ற பல நாட்கள் நீடிக்கும் வியாதிகளினால் பலவீனப்படுத்தப்பட்ட அவயவங்களைப் பலப்படுத்தும். சுவாசாசய, மூத்திர சம்பந்தமான வியாதிகளில், வலப்பக்கத்திலும்; குளிர், தண்ணீரில் நனைவது, அசைவு, புயற்காற்றுள்ள காலம், முதலியவைகளினாலும் உபாதி அதிகரிக்குமானால் இவ்வௌஷதம் உபயோகமுள்ளது. உஷ்ணமோ அல்லது குளிரோ ஒத்துக் கொள்ளாது.

மனம்: குழந்தை தனியே படுக்கச்செல்ல விரும்பாமை. சிறுவிஷயத்திற்கும் கதற ஆரம்பித்தல். வருத்தம், தன்னம்பிக்கை இழத்தல். பல நாட்களாக இருக்கும் ஏக்கம், திடீரென்று ஏற்படும் மனவெழுச்சி முதலியவைகளால் ஏற்படும் உபாதிகள். உபாதிகளை, அதிலும் முக்கியமாக மூலங்களை, நினைத்தால் அவை அதிகரித்தல்.

தலை: நெற்றிக்கும் மூளைக்கும் இடைவெளியில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி. வலது நெற்றியில் வலி.

முகம்: வலப்பாகப் பாரிசவாயு. பாலுண்ணிகள், பருக்கள், முகவெலும்புகளில் வலி. ஈறுகளில் குழிப்புண். தாடைகளில் வலி, வாயைத்திறக்க சிரமப்படுதல்.

கண்கள்: மோட்டார் நரம்புக் கோளாறுகளுடன் பூவிழுதல். கண்ணிமைகளில் அழர்ச்சி, குழிப்புண்கள். கண்களுக்கு முன்பாக கறுப்புப்புள்ளிகள் தோன்றுவதும் பூச்சி பறத்தலும். பாரிசவாயுவினால் கண்களின் மேலிமைகள் தளர்ந்து தொங்குதல். பார்வைகெடுதல், கண்களின் முன்பாகத்தில் திரை இருக்கும் உணர்ச்சி.

காதுகள்: செவிடாகுதல், குடைதல்; கிண் கிண்ணென்ற ஒலிப்பு, துடித்தல். வார்த்தைகளும், நடக்கும் போது உண்டாகும் சப்தமும் எதிரொலித்தல். நடுக்காதில் நாட்பட்ட சீழ்க்கட்டுதல். காதுக்குரும்பை அதிகமாகச் சேருதல்.

மூக்கு: கொற கொறப்புடன் சலதோஷம். பொறுக்குத் தட்டுதல், புண்ணுகி இருத்தல். பாலுண்ணிகள்.

வாய்: அறைக்கும்போது வாயினுட்பாகம் கடிபடுதல். தெளிவற்ற பேச்சுடன் நாக்கு பாரிசவாயுவினுல் பிடிக்கப்படுதல். கீழ்த்தாடையில் வாதம். ஈறுகளிலிருந்து சுலபமாக இரத்தம் பிறிடுதல்.

வயிறு: தித்திப்பில் வெறுப்பு. வயிற்றில் சுண்ணும்பு வேகுவது போன்ற உணர்ச்சி. பச்சை மாமிசம் தின்றவுடன் உபாதி அதிகரிப்பு. வறுத்த மாமிசம் ஒத்துக் கொள்ளுதல். தொண்டையில் பந்து ஏறும் உணர்ச்சி.

மலம்: மிருதுவாகவும் சிறிதாகவும் இருத்தல். கடினமாகவும் சீதகம் கலந்தும் உள்ள மலம். மலம் கழிக்க மிகவும் சிரமப்படுதல். ஜனனேந்திரியங்களில் அரிப்பு. அபானத்தில் ஒரு பக்கமாகப் பட்சவாயு. அபானத்தில் வெடிப்பும் எரிச்சலும். பெரிய மூலங்கள், குழிப்புண்கள்.

மூத்திரம்: இருமும்போதும் மூக்கைச் சிந்தும் போதும் தாளுகவே மூத்திரம் வெளியாகுதல். மூத்திரம் மெதுவாக வெளியாவதும் சில சமயங்களில் உள்ளடக்கப் பட்டும் இருக்கும். இரவில் முன் சாமத் தூக்கத்திலும் சிறிதளவு குளிர்ச்சியிலுைம்கூட மூத்திரம் தாளுகவே வெளிப்படுதல். ஆயுத சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் மூத்திர

அடக்கம். இருட்டில் மூத்திரம் வெளியாவது தனக்குத் தெரியாமலிருத்தல். தொட்டுப் பார்த்துதான் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெண் : பிரசவத்தின்போது கருப்பை ஒழுங்காக அமுக்கிக் கொடுக்காமை. மாதவிடாய் இரவில் நின்று விடுதல், பகலில் மாத்திரம் வெளியாகும். அதிக பலவீனத்துடன் இரவில் வெள்ளைப்பாடு, தாமதித்த மாதவிடாய்.

சுவாசாசயம் : மார்பில் வலியுடன் கொரகொரப்பு. தொண்டைக்குழி இரணமாயிருத்தல். மார்பு பச்சைப் புண்ணாயிருக்கும் உணர்ச்சியுடன் இருமல். வெளிவரும் கோழை முதலியவை கொஞ்சமாக இருத்தல், அவைகளை விழுங்கவேண்டி வருதல். இடுப்பில் வலியுடன் இருமல், மாலையில் அதிகரிப்பு, இடப்பாகத்தில் அதிகம். உபாதி குளிர்ந்த தண்ணீர் குடிப்பதினால் சமனம். படுக்கைச் சூட்டினால் அதிகரிக்கும்.

நடுமார்பில் கபமிருத்தல், அதை வெளியேற்ற முடியாமை. இரவில் படுக்கமுடியாது. தான் பேசும் வார்த்தைகள் எதிரொலித்தல். பாடகர்களுக்கும் பிரசங்கிகளுக்கும் ஏற்படும் குரல் கோளாறுகள்.

முதுகு : தோள்பட்டைகளினிடையே விரைப்பு. பிடரிக்கழுத்தில் மந்தமான வலி.

கை, கால்கள் : மறத்த உணர்ச்சியுடன் கூடிய இடது பக்க இடுப்புச் சந்துவாதம். கைகளிலும் புஜங்களிலும் மந்தமான கிழிக்கும் வலி. கனத்த உணர்ச்சியும் பலவீனமும். மூட்டுகளில் கிழிக்கும் வலி. முன்கைகளிலிருக்கும் தசைகள் பலவீனம். கைகளில் மறத்த

உணர்ச்சி, உணர்ச்சியற்று இருத்தல். தசை நார்கள் குறுகுதல். பலவீனமான அக்குள்கள். சிரமப்படாமல் நடக்க முடியாது. கால்களில் வாதவலி, இது படுக்கைச் சூட்டினால் சமனம். மூட்டுகளில் எரிச்சல். மெதுவாக நடக்கக் கற்றுக்கொள்ளுதல். இரவில் கால்களில் அமைதியின்மை. முழங்கால் மூட்டுகளில் உடையும் சப்தமும் விரைப்பும். புறங்கால்களில் அரிப்பு.

சருமம்: மடிப்பு விழுந்திருக்கும் சதைகள், காதுகளின் பின் பக்கங்கள், தொடைகளின் இடை ஆகியவைகளில் இரண உணர்ச்சி. மூக்கின் நுனியிலும் விரல்களின் நுனியிலும் சுலபமாக இரத்தம் கசியும் பெரிய பாலுண்ணிகள். பழைய சுட்ட புண்கள் சரிவர ஆறுவதில்லை. சுட்டதினால் ஏற்பட்ட உபாதிகள். சுட்டதினாலேற்பட்ட வலிகள்.

தூக்கம்: அதிக மயக்கம், விழித்திருக்கவே முடியாது. இரவில் தூக்கமின்மை.

விசேஷம்: வறண்ட, குளிர்ந்த காற்று, தெளிவான பருவம், வண்டி சவாரி முதலியவைகளால் அசௌகரியம். ஈர நப்புள்ள பருவங்கள், சூடு, படுக்கைச் சூடு முதலியவைகளால் சமனம்.

காஸிபியம் (Gosipium)

மாதவிடாய் வெளியாகும் போலிருத்தல். ஆனால் வராமை. சினைப்பைகளில் விட்டுவிட்டு வலி. குறைப்பிரசவத்திற்குப் பிறகு சிதைந்த கரு உள்ளே தங்கி விடுதல். யோனி உதடுகளில் வீக்கம். பிரசவித்த ஒரு மாதத்திற்குப் பிறகும் நீர் ஒழுகுவது நிற்காமை.

கிராபைடிஸ் (Graphites)

ஸோராவுக்கு உபயோகமாகிற ஔஷதங்களில் இதுவும் ஒன்றாகும். தவிர பருமனும், சருமத் தொந்திரவுகளும் மலச்சிக்கலும் ஏற்படும் இயல்பு, தாமதித்த மாதவிடாய் ஆகியவைகளுள்ளவர்களுக்கு நன்கு உபயோகப்படும். சுலபமாக சலதோஷம் பிடித்தல். குறும்புக் குணமுள்ள சிறுவர்கள் கண்டித்தால் சிரித்தல். அக்கி ஏற்படும் தன்மையை அழிக்க வல்லது. முகத்தில் சிவப்புடன் இரத்த சோகை. பருக்கும் இயல்புள்ள சரீரங்கள். ஜன னேந்திரியங்களில் வீக்கம். குபுகுபு வென்று கொட்டும் வெள்ளைப்பாடு. ட்யூடனமெனப்படும் குடல் பாகத்தில் குழிப்புண்கள்.

மனம்: வெளியே புறப்பட அதிகப் பிரயத்தனம். பயந்த சுபாவம். ஒரு முடிவு செய்ய இயலாமை. வேலை செய்ய மனம் வராமை. வேலை செய்ய உட்கார்ந்திருக்கும் போது பறத்தல். சங்கீதம் கேட்டால் அழுகை வருதல்.

தலை: தலைக்கு அதிக வேகமாக இரத்தம் சென்று அதனால் முகம் சிவந்தும் சில சமயம் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கும் ஏற்படும். தூங்கி யெழுந்தவுடன் தலைவலி, அதுவும் விசேஷமாக ஒருபக்கத் தலைவலியாக இருக்கும். வாயாலெடுக்க வருதல். நெற்றியில் சிலந்தி வலை இருக்கும் உணர்ச்சி. மறத்தும் அமுக்கினால் குழி விழுந்தும் இருக்கும். தலையின் ஒரு பக்கமாக வாதவலி. இது பற்களுக்கும் கழுத்துக்கும் பரவுதல். உச்சந்தலையில் எரிச்சல், தலையில் மயிருள்ள இடங்களில் அரிப்புடனும் நாற்றத்துடனும் உள்ள கசகசப்புடன் கூடிய சிரங்குகள்.

கண்கள்: கண்ணேய்கள். சூரிய வெளிச்சம் தவிர மற்ற செயற்கையான வெளிச்சங்களைப் பார்க்க முடியாமை. கண்ணிமைகள் சிவந்தும் வீங்கியுமிருத்தல். கண்ணிமைகளின் ஓரங்களில் அழற்சி. இமைகள் காய்ந்திருத்தல். சொறி சிரங்குகள், வெடிப்புகள்.

காதுகள்: காதின் உட்புறம் காய்ந்திருத்தல். சாப்பிடும்போது காதில் மடக்கென்று ஒடியும் சப்தம். காதுகளுக்குப் பின்புறம் கசகசப்பும் சிரங்குகளும். காது கேளாமை. சந்தடி நிறைய இருக்குமிடங்களில் காது நன்ருக கேட்கும். மெல்லிய வெண்மையான பொறுக்குகள்.

மூக்கு: சிந்தியவுடன் வலி, உட்புறத்தில் அதிகமான வலி. அபரிமிதமான வாசனை அறியும் சக்தி. புஷ்பத்தின் வாசனையை சகிக்கமுடியாமை. மூக்குத் துவாரங்களில் பொறுக்குகள்.

முகம்: சிலந்தி வலை இருக்கும் உணர்ச்சி. மூக்கின் மேல் படைகள். அரிப்புள்ள பருக்கள். வாய், தாடை இவைகளைச் சுற்றிலும் கசகசப்புள்ள படைகள். எரிச்சலும் கொட்டு வலியுமுள்ள அக்கிகள்.

வாய்: வாயிலிருந்து அழுகிய வாசனை. சுவாசக் காற்று மூத்திரம் போன்று நாறுதல். நாக்கில் எரிச்சலுள்ள சிறு கொப்புளங்கள், அமிதமான உமிழ்நீர் உற்பத்தி. புளித்த ஏப்பங்கள்.

வயிறு: மாமிசத்தில் வெறுப்பு. தித்திப்பான பதார்த்தங்கள் குமட்டலை உண்டாக்கும். சூடான பானங்கள் ஒத்துக்கொள்ளாது. ஒவ்வொரு தடவை சாப்பிட்ட பிறகும் குமட்டல், வாயாலெடுப்பு. மாதவிடாயின்போது

மயற்கை. வயிற்றில் அமுக்கும் உணர்ச்சி. வயிற்றில் எரிச்சல், அதனுல் பசி உண்டாகுதல். ஏப்பம் விட சிரமம். அடிக்கடி அசீரணக் கோளாறுகளினுல் ஏற்படும் வலி. பொறுமல். வயிற்றுவலி சாப்பிடுவதினுலும் உஷ்ண பானங்களைக் (முக்கியமாக பால்) குடிப்பதினுலும் கீழே படுப்பதினுலும் சற்று சமனமடையும்.

அடிவயிறு : அடிவயிற்றில் குமட்டலுண்டாகும் உணர்ச்சி. உள்ளமுக்கப்பட்ட பொறுமலினுல் அடிவயிற்றில் நிறைந்தும் கடினமுமான உணர்ச்சி. ஆடையைத் தளர்த்திவிட நேறுதல். நாட்பட்ட வயிற்றுப்போக்கு, மலம் பழுப்பாகவும், தண்ணீராகவும் நாற்றத்துடனும் சீரணமாகாத ஆகாரத்துடனும் இருக்கும். அதிக நாற்றமுள்ள அபானவாயு.

மலம் : மலச்சிக்கல் ; பெரிய சீதகத்தினுல் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட முடிச்சுகளுடன் மிகவும் கஷ்டத்துடன் மலம் வெளியாகுதல். எரியும் மூலங்கள். மலப்பை வெளிவருதல், வயிற்றுப்போக்கு. மலம் பழுப்பு நிறமாகவும் தண்ணீராகவும், சீரணமாகாத பதார்த்தங்கள் கலந்தும் அதிக நாற்றம், புளித்த வாசனை முதலியவைகளுடனும் இருக்கும். அபானத்தில் எரிச்சல், இரணம். சீதகத்தினுல் இணைக்கப்பட்ட கட்டியான மலம். மலப்பையின் அசுத்த இரத்தக் குழாய்கள் தடித்தல். அபானத்தில் வெடிப்புகள்.

மூத்திரம் : மாசுபடியும் குணமுள்ள குழம்புபோன்ற மூத்திரம், புளித்த வாசனை.

பெண் : மலச்சிக்கலுடன் மிகத்தாமதித்து ஏற்படும் மாதவிடாய் ; போக்கு மங்கின நிறமாகவும் கொஞ்சமாகவும் மேல் வயிற்றில் கிழிக்கும் வலியுடனும் இருக்கும். போக்கு

ஆரம்பிக்குமுன் அரிப்பு. மாதவிடாயின்போது தொண்டையில் கொற கொறப்பு. நீர்க் கோர்வை, இருமல், வியர்வை, மயற்கை ஆகியவை ஏற்படுதல். முதுகில் அதிக பலவீனத்துடன் தண்ணீர்போன்ற மங்கின நிறமுள்ள அல்லது வெண்மையாக ஏராளமான வெள்ளைப்பாடு, பட்ட இடங்களைப் புண்ணுக்கும் தன்மை. ஸ்தனங்கள் கடினமாகவும் வீங்கியும் இருக்கும். சினைப்பை, கருப்பை, ஸ்தனங்கள் ஆகியவை கடினமாகுதல். ஸ்தனக்காம்புகள் இரணமாகவும் வெடித்தும் இருக்கும். புணர்ச்சியில் தீர்மானமான வெறுப்பு.

ஆண்: அதிகரித்த ஆசையுடன் ஆண்குறியின் சக்திக்குறைவு; அல்லது வெறுப்பு. இந்திரியம் சீக்கிரமாக வெளிப்படுதல் அல்லது வெளிப்படாமலேயே இருத்தல். ஆண்குறி அவயவங்களில் கல்லீரல் சம்பந்தமான சிரங்குகள்.

சுவாசாசயம்: மார்பில் இறுக்கம். ஒன்றன் பின் ஒன்றாக வலிப்புகள் போன்று வரும் ஆஸ்துமா, மூச்சுத் திணறல் ஏற்படுதல், தூக்கத்திலிருந்து எழுப்பிவிடுதல். ஏதாவது சாப்பிடவேண்டி வருதல். இருமல், இசிவுவலி முதலியவைகளுடன் நடுமார்பில் வலி. சரும உபாதிகளுடன் நீடித்த கொற கொறப்பு. குரல்வளையை தன்னிஷ்டம் போல் அடக்கியாள முடியாமை.

கை கால்கள்: பிடரிக் கழுத்து, தோள்பட்டைகள், முதுகு, கால்கள் முதலியவைகளில் வலி. முள்ளந்தண்டு முதலியவைகளில் வலிகள். தொடைகளுக்கிடையே தோல் உறிந்து புண்ணுண்டாகுதல். இடது கை மறத்தல்; கைகள் தூங்குதல். விரல் நகங்கள் கனமாகவும் கறுப்பாகவும் கரடு முரடாகவும் மாறுதல். கீழ்க்கால்களில் நீர் அதைப்பு. கட்டை விரல்கள் விரைப்பாகவும் குறுகியும் ஆகுதல்.

நகங்களில் வெடிப்பு, வலி. விரல் நுனிகளில் வெடிப்பு. கால்களில் நாற்றமுள்ள வியர்வை.

சருமம்: சொறி சிரங்குகளினால் பாதிக்கப்படாத பாகங்கள் கரடு முரடாகவும் கடினமாகவும் இடைவிடாமல் காய்ந்து கொண்டும் இருக்கும். பருக்கள், கொப்புளங்கள். சிரங்குகளிலிருந்து ஒட்டும் தன்மையுள்ள நீர் கசிதல். கை கால்களின் வளைந்த இடங்களிலும் அரை யிடுக்குகளிலும் கழுத்திலும் காதுகளுக்குப் பின்புறங்களிலும் பச்சைப் புண்ணாயிருத்தல். ஆரோக்கியம் கெட்ட சருமம்; சிறு சிறுப்புகளும் சீழ்க்கொள்ளுதல். குழிப் புண்களிலிருந்து மெல்லிய தேன்போன்று ஒட்டும் தன்மையுள்ள நீர் ஊருதல். கோளங்களில் வீக்கமும் கடினமடைவதும் காணப்படும். வாதநோய் சம்பந்தமான கட்டிகள். ஸ்தனக்காம்புகளிலும் வாயிலும் அபானத்திலும் விரல்களின் நடுவிலும் வெடிப்பு. முகத்தில் அக்கி, எரிச்சலும் கொட்டு வலியும். கால்களில் வீக்கம்.

விசேஷம்: உஷ்ணம், இரவு, மாதவிடாய்க்கு முன்பும், பிறகும் உபாதி அசௌகரியம். இருட்டு, போர்த்திக் கொள்ளுவது ஆகியவைகளால் சமனம்.

குப்ரம் ஆர்ஸனிடம்
(Cuprum Arsenitum)

காலரா என்னும் விஷபேதியில், பனிக்கட்டி போல் சரீரச் சில்லிப்பு, கெண்டை வாங்குதல். விக்கல், சவக்களையுள்ள முகம், கடுந் தாகம், குமட்டல், வாயாலெடுப்பு, எரிச்சல், அடி வயிற்றில் வலி, மூத்திரப் பையிலும் மலப் பையிலும் கடுப்பு வலி, மந்தமான, சிறிய நாடித்துடிப்பு, வியர்வை முதலிய குறிகள். காலராவில் ஆர்ஸனிகத்தின்

குறிகளாகிய கவலை, அமைதியின்மை, தாகம், மரணக் களைப்பு, பகல் அல்லது இரவு 12 மணிக்கு குறிகள் அதிகரிப்பு முதலியவைகளும் குப்ரத்தின் பிரதான குறிகளாகிய நரம்பு இழுப்பு வலிகள் முதலியவைகளும் இருக்குமானால் இவ்வௌஷதம் நன்கு வேலை செய்யும். நள்ளிரவிற்குப் பிறகு ஆடுதசைகளில் கெண்டை வாங்குதல். குளிர்ந்த வியர்வையும் உலர்ந்த சருமமும் மாறி மாறி ஏற்படுதல். குறைந்த வீரியங்களில் உபயோகிக்கவும்.

குப்ரம் மெடாலிகம்
(Cuprum Metallicum)

விட்டுவிட்டு வரும் உபாதிகள், கெண்டை வாங்குதல், வலிப்புகள், விரல்களிலிருந்தும் கால்கட்டை விரல்களிலிருந்தும் ஆரம்பித்தல், கடுமையான விட்டு விட்டுவரும் வலி ஆகியவை இவ்வௌஷதத்தின் ஒரு சில பிரதானமான குறிகளாகும். ஆகவே எல்லாவித வலிப்புகளிலும் இதற்கு உபயோகமிருக்கிறது. பயந்த கோளாறுகளினால் முகத் தசைகள் குதித்தல். இவ்வௌஷதத்தில் எல்லா ஔஷதங்களையும்விட அதிகமான குமட்டல் உண்டு. காக்கை வலிப்பில் குளிர்காற்று உணர்ச்சி முழங்கால்களில் ஆரம்பித்து அடி வயிற்றிற்கு ஏறும்; பிறகு பிரக்ஞையின்மை, நுரை தள்ளுதல், கீழே விழுதல்: உபாதிகள் இடப்பாகத்தில் ஆரம்பித்தல். நாக்குப் பூச்சிகள்.

ராமக்கண் அம்மையில் கொப்புளங்கள் சரிவர வளராமல் உள்ளமுக்கப்பட்டு அதனால் அதிக வாயாலெடுப்பு, மயக்கம், வலிப்புகள் ஏற்படுமாயின் அச்சமயத்திலும் இவ்வௌஷதம் உபயோகப்படலாம். வலிகள் அசைவதினாலும் தொடுவதினாலும் அதிகரிக்கும்.

தலை: தீர்மானமான யோசனைகள், கெட்ட எண்ணங்கள், வருத்தம், பேசவேண்டும் என்று நினைக்காத வார்த்தைகளைப் பேசுதல், பயங்கொள்ளித்தனம், காலியாயிருக்கும் உணர்ச்சி. வலிப்புகளுடன் தலை வீங்கி பழுப்பு அல்லது செந்நிறமடைதல். மூளையிலும், கண்களை அசைக்கும்போது கண்களிலும் அடிபட்டது போன்ற வலி. மூளைச் சுரம், தலையின்மேல் தண்ணீரை ஊற்றுவது போன்ற உணர்ச்சி. பலவித உபாதிகளுடன் மயக்கம், தலை முன்புறமாகச் சாய்ந்துவிடுதல்.

கண்கள்: கண்களுக்கு மேலாக வலி. குத்திட்ட பார்வை. கண்விழிகள் பளபளப்பாக இருத்தல். கண்விழிகள் கடகடவென்று உருளுதல்.

முகம்: உதடுகள் வெளுத்தும் நீல நிறமடைந்தும் இருத்தல். வாயில் நுரையுடன் தாடைகளில் இழுப்பு.

மூக்கு: மூக்குக்கு கடுமையாக இரத்தம் செல்லும் உணர்ச்சி.

வாய்: அமிதமான உமிழ்நீர் உற்பத்தியுடன் வாயில் குழகுழப்பும் உலோகங்களின் ருசியும். பாம்புபோல் நாக்கு அடிக்கடி சுருங்கிக்கொண்டும் விரிந்துகொண்டும் இருத்தல் நாக்கின் பாரிச வாயு. திக்கித்திக்கிப் பேசுதல்.

வயிறு: விக்கல், குமட்டல், வாயாலெடுப்பு குளிர்ந்த தண்ணீரைக் குடிப்பதினால் சமனமாகும். வலி, வயிற்றுப் போக்கு, தண்ணீர் சாப்பிடும்போது தொண்டையில் கொப்பளிக்கும் சப்தம் ஏற்படும். குளிர்ந்த பானங்களில் பிரியம்.

அடிவயிறு: விரைப்பாகவும் சூடாகவும் தொட்டால் வலியுடனும் இருக்கும். உட்சுருங்கி யிருத்தல். அடிவயிற்றின் பச்சை நரம்புகளில் வலி. வலி கடுமையாகவும் விட்டுவிட்டும் வரும். குடல்கள் முறுக்கிக்கொள்ளுதல்.

மலம்: கறுப்பாகவும், இரத்தம் கலந்தும், வலி, கடுப்பு, பலவீனம் முதலியவைகளுடனும் இருத்தல். காலராவில் அடிவயிற்றிலும் ஆடு தசைகளிலும் தசைகள் முறுக்குதல்.

பெண்: தாமதமாகவும் வெகுநாள் நீடிக்கும் குணமுள்ள மாதவிடாய். மாதவிடாய் அமுக்கப்படுவதற்கு முன்போ அல்லது பிறகோ அல்லது அச்சமயத்திலோ தெண்டையேறுதல் ஏற்பட்டு மார்புக்கும் பரவுதல். இரத்தம் கொதித்தல், இரத்த சோகை.

இருதயம்: இருதய உபாதிகள்; மந்தமான அல்லது கடினமான, நிறைந்த, துரிதமாகச் செல்லும் நாடி, துடிப்பு, வலி முதலியவை.

சுவாசாசயம்: இருமும்போது கொப்பளிக்கும் சப்தம், இருமல் குளிர்ந்த தண்ணீர் சாப்பிடுவதினால் சமனம். மூச்சுத் திணரும்படியாக மாலை 3 மணிக்கு இருமல். மார்பில் இறுக்கமும் நரம்பு இழுப்பும். விட்டுவிட்டு வரும் ஆஸ்துமா. விட்டுவிட்டு வரும் வாயாலெடுப்புடன் மாறிமாறி வருதல். குளிர்ந்த தண்ணீர் குடிப்பதினால் சமனப்பட்டு வாயாலெடுப்பு, நரம்பிழுப்பு, பழுப்பு முகம் முதலியவைகளுள்ள கக்குவாய் இருமல், மூச்சுத்திணரல். மாதவிடாய்க்கு முன்பாக விட்டுவிட்டு மூச்சுத்திணரல் சம்பவித்தல்.

கை கால்கள் : தசைகளில் குதிப்பும் முறுக்குதலும். கைகளில் சில்லிப்பு. உள்ளங்கால்களில் கெண்டையேறு தல். கால்களில் அதிகச் சோர்வு. உள்ளங்கால்களிலும் ஆடுதசைகளிலும் கெண்டையேறுதல். காக்கை வலிப்பில் குளிர் காற்று உணர்ச்சி முழங்கால்களில் ஆரம்பித்தல்.

சருமம் : நீலமாகவும் கடினமாகவுமிருத்தல். எலும்பு மூட்டுகளில் சருமம் சுருக்கம் விழுந்திருக்கும் இடங்களில் அரிப்பு, குழிப்புண்கள் முதலியவை.

தூக்கம் : சரீரத்தில் அதிர்ச்சியுடன் ஆழ்ந்த தூக்கம். தூங்கும்போது அடிவயிற்றில் அடிக்கடி கடபுடா சப்தம்.

விசேஷம் : மாதவிடாய்க்கு முன்பு, வாயாலெடுப்பு முதலியவைகளால் உபாதி அதிகரிப்பு. வியர்க்கும்போதும் குளிர்ந்த தண்ணீர் குடிக்கும்போதும் சமனம்.

குர்ச்சி (Kurchi)

அடிவயிறு மலப்பை இவை சம்பந்தமான உபாதிகளில் அதாவது, வயிற்றுப்போக்கு, வலி, கடுப்பு, டைபாய்டு சுரத்தில் வயிறு பெருத்தல், அசீரணக்கோளாறுகள், எல்லாவிதமான வயிற்றுக்கடுப்புகள், முக்கியமாக இரத்தக் கடுப்பு, இரத்தம் கொட்டும் மூலங்கள், கருப்பையிலிருந்து இரத்தப்பெருக்கு, இரத்தம் கக்குதல் முதலிய உபாதிகளில் இவ்வௌஷதத்தை முழுவதும் நம்பலாம். இதற்கு சுரத்தை போக்கடிக்கவும் பித்தத்தைக் குறைக்கவும் சக்தி உண்டு. தாய்த்திராவகத்தில் அடிக்கடி உபயோகிக்க வேண்டும்.

கோரால்லியம் ருப்ரம் (Corallium Rubrum)

சிறிதாகவும் அடிக்கடி இடைவிடாமலும் வரும் இருமல், இரவில் வெட்டும் சப்தத்தையொத்த இருமல். சக்குவாய் இருமல், இரவில் சில சமயங்களில் இருமல் இல்லாமை. இடைவிடாமல் வரும் இருமலினால் முகம் நீலம் பூரித்து மூக்கிலிருந்தோ வாயிலிருந்தோ இரத்தம் கொட்டுதல். இருமல் வாயாலெடுப்பில் முடிவடைதல்.

தொண்டை: இடதுபக்கத் தாடைக் கோளங்கள் வீக்கத்துடன் வலித்துக்கொண்டிருத்தல்; விழுங்கும் போதும் தலையை முன்பக்கமாகக் குனியும்போதும் அதிகரிப்பு. ஏராளமான கோழை வெளிவருதல். தொண்டையில் காற்றுப் பட்டாலும் இருமல் ஏற்படும்.

ஆண்: தட்டையான சிவப்பு நிறமுள்ள குழிப் புண்கள் ஆண்குறியின் நுனிக் கொண்டையிலும் நுனித் தோலிலும் இருத்தல். அவைகளிலிருந்து மஞ்சளான பதார்த்தம் வெளியாகுதல். கிரந்திநோய் சம்பந்தமான இரத்தம் கொட்டும் குழிப்புண்கள்.

சுவாசாசயம்: காலையில் ஆழ்ந்து உள்மூச்சு வாங்கும் போது காற்று மார்க்கத்தில் குளிர்ந்த காற்று ஏராளமாகப் பாயும் உணர்ச்சியும், இருமவேண்டி வருதலும். இழுப்பு போன்று விட்டுவிட்டு வரும் இருமல், (சக்குவாய் இருமல்) மூச்சுத்திணறலும் களைப்பும் ஏற்படுதல். இருமலினால் வியாதியஸ்தர் முகம் நிறம் மாறி பிறகு இரத்தமோ அல்லது கடினமான கயிறு போன்ற கோழையோ அல்லது மூக்கிலிருந்து இரத்தமோ வெளிவருதல். சக்குவாய் இருமலை இவ்வௌஷதம் முதலில் அதிகரிக்கச் செய்து பிறகு அது நீடிக்கும் நாட்களைக் குறைக்கும். உயர்ந்த வீரியத்தில் உபயோகிக்க வேண்டும்.

கோக்கஸ் காக்டி (Coccus Cacti)

விட்டுவிட்டு வரும் இருமல், கக்குவாய் இருமல், மூத்திரப்பையிலிருந்து சீழும் நீர்நீரும் வெளியாகுதல், பச்சை நரம்புகளில் கடுப்பு வலியுடன் மூத்திரக் காய்களில் விட்டு விட்டு வரும் வலி, பாண்டுரோகம், மகோதரம், மூத்திரக் குறைவு முதலிய வியாதிகளில் இவ்வௌஷதம் உபயோகம் உள்ளது.

மனம்: அதிகாலையில் அல்லது பிற்பகலில் வருத்தம்.

தலை: பிடரித்தலைப் பக்கமாக வலி, தூங்கின பிறகும் சரீர உழைப்பினாலும் அதிகரிக்கும். மல்லார்ந்து படுப்பதால் அதிகமாகியும் தலையை உயரமாக வைத்திருந்தால் சமனமாகும் தலை வலி. காலையில் வலது கண்ணின் மேலாக மந்தமான வலி. கண்ணின் மேலிமைக்கும் கண் விழிக்கும் நடுவில் ஏதோ தூசி இருப்பது போன்ற உணர்ச்சி.

சுவாசாசயம்: உள் நாக்கு வளர்ச்சியினால் அடிக்கடி கனைத்தல். கெட்டியான பிசுக்கென்றிருக்கும் கோழை, மிக சிரமத்துடன் வெளியாகுதல். தொண்டையில் கிசுகிசுப்பு. தொண்டைக்கு அப்பாலுள்ள இடத்தில் ஏதோ ஒரு சிறு துணுக்கு இருக்கும் உணர்ச்சி, அடிக்கடி விழுங்க நேரிடுதல். பற்களைக் குச்சி கொண்டு துலக்கினால் இருமல் ஏற்படுதல். மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் இருமல்; காலையில் தூங்கி எழுந்து நடக்க ஆரம்பித்தவுடன் கடுமையாக இருத்தல். கெட்டியான வெண்மை நிறமுள்ள கோழை தொண்டையை இறுகப் பிடித்துவிடுவதுபோல் சிரமத்துடன் வெளியேறுதல். கக்குவாய் இருமலில் இருமலுக்

குப் பிறகு வாயாலெடுப்பு ஏற்பட்டு இவ்விதமான கெட்டியான கோழை வெளிவரும். எதிர் காற்றில் நடந்தால் மூச்சுவிட முடியாமை.

இருதயம்: எல்லா அவயவங்களும் இருதயத்தின் பக்கமாக வந்து அதை நசுக்குவது போன்ற உணர்ச்சி.

மூத்திரம்: மூத்திரம் அவசரமாக வருதல்; செம்மண்போன்ற மாசு படிதல். மூத்திரக் கற்கள், இரத்தங் கலந்த மூத்திரம், மூத்திரக் காய்களிலிருந்து மூத்திரப் பைக்குப் பாய்ந்து செல்லும் வலிகள். மூத்திரம் விட சிரமம்.

பெண்: அதி சீக்கிரமாகவும், ஏராளமாகவும் கறுப்பாகவும் கெட்டியாகவும் உள்ள மாதவிடாய்; கறுப்பு நிறமுள்ள கட்டிகள், மூத்திரம் விட சிரமம். மாதவிடாய் விட்டு விட்டு வெளிப்படுதல்; மாலையிலும் இரவிலும் மாத்திரம் வெளியாகும். மூத்திரம் விடும்போது பெரிய கட்டிகள் வெளியாகும். அழர்ச்சியுள்ள யோனி உதடுகள்.

விசேஷம்: இடது பக்கம், தூங்கின பிறகு, தொடுவதால், ஆடைகளின் இறுக்கத்தால், பல் தேய்த்தால், சிறிதளவு சரீர உழைப்பாலும் உபாதிகள் அதிகரிப்பு. நடந்தால் சமனம்.

கோபைவா (Copaiva)

இருமல்; ஏராளமான, பச்சை அல்லது பழுப்பு நிறமுள்ள, நாற்றமடிக்கும் கோழை. மூத்திரப் பையில் அருவருப்பு, அழர்ச்சி, நாட்பட்ட பிராங்கைல் அழர்ச்சி. மூத்திர அவயவங்களிலிருந்து மெல்லிய பால்போன்ற

பதார்த்தம் அல்லது இரத்தம் வெளியாகுதல். மேக வெட்டை. மூத்திரகோசம் வீங்கியும் பீஜங்கள் கடினமாகவும் இருத்தல்.

மூத்திரம்: மூத்திரப் பையிலிருந்து சீழும் நீர்நீரும் வெளிவருதல். மூக்கு, மூத்திரப்பை முதலியவைகளில் எரிச்சல். அடிக்கடி வலியுடன் மூத்திரம் வருவதும் அடிக்கடி தூண்டுதலும். மூத்திரம் வரும்போது எரிச்சல். மூத்திரம் ஏராளமாகவும் இரத்தங் கலந்தும் இருக்கும். சிழைப்போல் மஞ்சள் நிறமான போக்குள்ள மேக வெட்டை. இவ்வௌஷதத்தின் தாய்த் திராவகத்தை சர்க்கரையில் 4, 5 சொட்டுவிட்டு 4 மணிக்கொருதடவை கொடுத்துவந்தால் சுமார் இரண்டு நாட்களுக்குள் போக்கைத் தடுத்துவிடும், ஆனால் விடாமல் ஒரு வாரம் உபயோகிக்கவேண்டும்.

சருமம்: மலச்சிக்கல், சுரம் முதலியவைகளுடன் சரீரம் முழுவதும் முக்கியமாக முகத்தில் சிவந்த சினப்புகள்.

கோல்சிகம் (Colchicum)

மும்முரமான நிலைமையிலிருக்கும் வாதரோகத்தை நிவர்த்திக்கும் சக்தி இவ்வௌஷதத்திற்கு இருக்கிறது. முக்கியமாக நாட்பட்ட உபாதிகளில் நன்கு பிரயோசனமேற்படும். வாதமுள்ள இடங்களில் வீக்கம், சூடு, சிவப்பு நிறம் முதலியவைகள் இருத்தல். கிழிக்கும் வலிகள்; மாலையிலும் இரவிலும் தொட்டாலும் அதிகரிக்கும். கால் கட்டைவிரல்களை சொடக்குவிட்டால் அதிக வலி உண்டாகும். எப்பொழுதும் அதிகக் களைப்பு, உள்ளூரச் சில்லிப்பு முதலியவைகள் இருத்தல். சிரமப்பட்டுப் படித்தாலும் இரவில் கண்விழிப்பதாலும் ஏற்பட்ட உபாதிகள். மின்சார விசைபோன்று உடம்பின் ஒரு பாக வழியாக அதிர்ச்

சிகள் உண்டாகுதல். வியர்வையைத் தடைப்படுத்தியதால் சம்பவிக்கும் கோளாறுகள். எலிகளைப்பற்றிய கனவுகள்.

மனம்: புத்தி மழுங்கிவிட்டபோதிலும் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களையே அளிப்பார். படிக்க முடியுமென்றாலும் படித்ததின் சாராம்சத்தை கிரகிக்க இயலாமை.

தலை: பிடரித் தலையில் குடையும் தலைவலி, காலையில் அதிகரிப்பு, குனியும்போதும், மனோ வேலையினாலும் அதிகமாகலாம். தலைமேலும் நெற்றியிலும் ஊரும் உணர்ச்சி.

கண்கள்: கண்களில் பூவிழுதல். கருமணிகள் அகன்றிருத்தல். வெளிச்சத்தில் சிறிதளவு கூச்சம். இமை அழர்ச்சியுற்று வீங்குதல்.

மூக்கு: வாசனையறியும் சக்தி அதிகரித்தல். மாமிச வாசனை குமட்டலை உண்டாக்கும். புதிதாக இருக்கும் முட்டைகளின் வாசனையினால் கிட்டத்தட்ட மயக்கமே ஏற்படலாம். வாத சரீரமுடையவர்களுக்கு மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு. சமையல் செய்யும்போது ஏற்படும் வாசனை வியாதியஸ்தர் நிலைமையை மோசமாக்குவதுடன் மயக்கமடையவும் செய்யும்.

முகம்: முகத்தில் நீரடைப்புள்ள வீக்கம்; மஞ்சளாகவும் குழிவிழுந்தும் இருக்கும்.

பற்கள்: பற்களை அறைத்தல், அப்படி அறைக்கும் போது வலியும் கூச்சமும் ஏற்படும்.

வயிறு: அதிக தாகம் ஆனால் பசியின்மை. உணவில் வெறுப்பு. உணவைப் பார்க்கவோ அல்லது அதன்

வாசனையோ சகிக்காமை. கடுமையான குமட்டலும் பிறகு ஏராளமான வாயாலெடுப்பும் ஏற்பட்டு உட்கொண்ட ஆகாரமும் பிறகு பித்தமும் வெளியாகுதல். கொஞ்சங்கூட அசையாமல் படுப்பதினால் உபாதிகள் சிறிது சௌகரியம். சமைக்கப்படும் உணவின் வாசனைகூட மயக்கத்தை ஏற்படுத்தும். வலியுடன் பனிக்கட்டிபோன்ற சில்லிப்பு, அல்லது சில்லிப்பு அதிகமாகும்போது பனிக்கட்டிபோன்ற எரிச்சல். வலி சாப்பிடுவதாலும், பொருமலை ஏற்படுத்தும் உணவுகளினால் வயிறு பெரிதாயிருக்கும்போதும் அதிகமாகும், வயிற்றை இரண்டாக மடித்தால் சமனம்.

அடிவயிறு: பொருமல், பெரிதாயிருத்தல், அமுக்கும் உணர்ச்சி, பிடிப்பு வலிகள். வலி, மேலே வயிற்றிற்குச் சொல்லப்பட்ட மாதிரியாகவே அதிகமாகியும் சமனமாகியும் இருக்கும்.

மலம்: மாலையில் துர்நாற்றமுள்ள அபானவாயு. பளபளவென்றும் பிசுக்கென்றும் இருக்கும் சீதகம். கடுப்பு வலி, இரத்தம் கலந்த சீதகம், குடலிலிருந்து துருவி எடுத்ததுபோன்று வெளியாகும். உஷ்ணமான பகல்களும் குளிரான இரவுகளும் கொண்ட பருவகாலங்களில் சம்பவிக்கும் வயிற்றுப்போக்கு.

மூத்திரம்: ஏராளமாகவும், சுத்தத்தண்ணீர் போன்றும், அடிக்கடியும் சில சமயங்களில் கறுப்பாகவும் குழம்பியும் மூத்திரப்பையில் கடுப்பு வலியுடனும் மூத்திர கோசத்தில் எரிச்சலுடனும் வெளியாகும். குறைவாகவும் சொட்டு சொட்டாகவும் வெளியாகும். வெண்மையான மாசு படிதல் சிவப்பு மைபோன்ற நிறமும் இருக்கலாம். தந்தி மேகம், மூத்திரமேகம் முதலிய வியாதிகளில் அதிக நாற்றத்துடன்

கெட்டுப்போன இரத்தம் போன்றிருத்தல். குளிர்காலத்தில் சுரப்புடன் மூத்திரம் குறைவாக இருத்தல்.

இருதயம்: கவலையுடன் கடுமையான துடிப்பு. கடுமையான வாதரோகத்திற்குப் பிறகு ஏற்படும் இருதய உபாதிகள். இருதயத் துடிப்புகள் சரிவர பிடிபடாமை. மார்பில் கனம்.

கை, கால்கள்: கைகளிலும் கால்களிலும் பாதங்களிலும் நீர்வீக்கம். ஒவ்வொரு மூட்டிலிருந்தும் முக்கியமாகத் தோள்பட்டை, சப்பை ஆகியவைகளில் வலி. பாரிச வாயு சம்பந்தமான வலி, சாமான்களைக் கையில் வைத்திருக்க இயலாமை. விரல்களின் நுனியில் ஊரும் உணர்ச்சி ஏராளமான புளிப்பு வாசனையுள்ள வியர்வை.

விசேஷம்: குளிர்ந்த, ஈர நப்புள்ள பருவங்கள், இரவு, களைப்புண்டாக்கும் காரணங்கள், மனவெழுச்சி, சிரமப்பட்டு படிப்பது, சமைக்கும் உணவின் வாசனை, அசைவு முதலியவைகளால் உபாதிகள் அதிகரிப்பு. உஷ்ணத்தினாலும் இரட்டையாக மடிப்பதாலும் சமனம்.

கோனியம் (Conium)

தள்ளாடும் நடை, நடுக்கம், நடந்துகொண்டிருக்கும் போது திடீர் என்று பலம் குறைதல், கால்களில் வலியுடன் விறைப்பு, முதலியவைகளுக்கு இவ்வௌஷதம் மிகச் சிறந்தது. மேற்கூறிய உபாதிகள் சாதாரணமாகக் கிழ வயதில் ஏற்படுகின்றனவென்பது தெரிந்த விஷயமே. ஏனெனில் அக்காலங்களில் பலவீனம், தளர்ச்சி, களைப்பு, அவயவங்கள் அவைகளுடைய வேலையை சரிவர செய்யாமை முதலிய

கோளாறுகள் ஏற்படும். நாட்கழித்து விவாகம் செய்து கொள்ளும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஏற்படும் உபாதிகள். கட்டிகள், பருக்கள் முதலியவைகளுக்கும் இது உபயோகப்படும். உடம்பு முழுவதும் அடிபட்டதுபோல் பொதுவான வலி. காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் போது அதிகக் களைப்பு. மனமும் சரீரமும் பலங்குன்றியிருத்தல், நடுக்கம். புற்று வியாதிகள் தோன்றுவதற்கு அறிகுறியான குறிகள். சுத்த இரத்தக் குழாய்கள் தடித்தல். எலும்புகள் அழுகவாரம்பித்தல். பருத்த கோளங்கள்.

மனம்: மனவெழுச்சியினால் மனம் சோர்வடைதல். பயந்த சுபாவங்கொண்டும், பிறருடன் சேர வெறுப்பும் தனியே இருக்கப் பயமும். படிப்பதற்கோ அல்லது வேலை செய்வதற்கோ பிரியமின்மை. எந்த விஷயத்திலும் சிரத்தை கொள்ளாமை. ஞாபகசக்திக் குறைவு. மனோ வேலைசெய்ய இயலாமை.

தலை: கீழே படுத்திருக்கும்போதும், படுக்கையில் திரும்பும்போதும் அல்லது கண்களைச் சுழற்றும்போதும் கிறுகிறுப்பு. தலையை ஆட்டுவதினாலும், சிறிதளவு சப்தம், பிறருடன் பேசுவது முதலியவைகளாலும் அதிகரிப்பு. விசேஷமாக இடப்பக்கமாக தலையை அசைத்தால், மண்டையினுள்ளே ஏதோ அன்னிய வஸ்து இருக்கும் உணர்ச்சியுடன், குமட்டல், கோழை வாயாலெடுப்பு முதலியவைகளுடன் மயக்கமுறச் செய்யும் தலைவலி. இரு பொட்டுகளையும் நசுக்குவதுபோன்ற வலி, சாப்பிட்டபிறகு அதிகரிக்கும். காலையில் எழுந்திருக்கும்போது பிடரித் தலையில் மந்தமான வலி.

கண்கள் : வெளிச்சத்தைப் பார்க்க இயலாமையும் அதிகமான கண்ணீர் வடிதலும். மங்கல் பார்வை. கண்களை மூடியவுடன் வியர்வை ஏற்படுதல்.

காதுகள் : காது கேளாமை, வெளிவரும் பதார்த்தங்கள் இரத்தம் போன்றிருத்தல்.

மூக்கு : சுலபமாக இரத்தம் வெளியாகுதல், அதனால் இரணம். சிறிய கட்டிகள்.

வயிறு : நாக்கினிடையில் இரணமாயிருக்கும் உணர்ச்சி, வலி, கடுமையான குமட்டல், நெஞ்செரிவு, ஏப்பங்கள், படுத்தவுடன் இவை அதிகரிப்பு, வயிற்றில் வலியுடன் பிசைதல். உபாதி சாப்பிட்டவுடன் சமனமடைந்து சில நேரத்திற்குப் பிறகு அதிகரிக்கும்.

அடிவயிறு : கல்லீரலிலும் அதன் சுற்றுப் பக்கங்களிலும் கடும் வலி, நாட்பட்ட மஞ்சட்காமாலையும் வலப் பக்கத்தில் வலியும் வீங்கியும் வெட்டும் வலிகளும் இறுகக் கட்டிய உணர்ச்சியும் வலியும்.

மலம் : அடிக்கடி போகத் தூண்டுதல். கடினமாகவும் கடுப்பு வலியுடனும் இருத்தல். ஒவ்வொரு தடவை மலம் கழித்த பிறகும் அதிகமான களைப்பு. மலம் கழிக்கும் போது மலப்பையில் சூடும் எரிச்சலும்.

மூத்திரம் : விடுவதற்கு அதிக சிரமம். கொஞ்சம் வெளிப்பட்டு உடனே நின்றுவிடும். வயதானவர்களுக்கு சொட்டு சொட்டாக வருதல்.

ஆண் : புணர்ச்சியில் அதிகரித்த ஆசை, குறைவான சக்தி, விரைப்பு கொஞ்சமாக இருத்தல். பீஜங்கள்

கடினமாகவும் பெரியதாகவும் இருக்கும். புணர்ச்சி ஆசையை அடக்கியதாலேற்பட்ட உபாதிகள்.

பெண்: தொடைகளில் அதிக பலவீனத்துடன் வலியுள்ள மாதவிடாய். ஸ்தனங்கள் தளர்ந்தும் சுருங்கியும், சில சமயம் கடினமாகவும் தொட்டால் வலியுடனுமிருத்தல். ஸ்தனக் காம்புகளில் பிடிப்பு வலி. ஸ்தனங்களை கைகளால் நன்ருக அமுக்க விரும்புதல். மாதவிடாய் தாமதித்தும் போக்கு குறைவாகவும் வெளியாகுதல். பெண் குறியில் அதிக உணர்ச்சி, மாதவிடாய்க்கு முன்னும் பின்னும் ஸ்தனங்கள் பெரிதாகி வலியுடன் இருத்தல். மாதவிடாய்க்கு முன் வேர்க்குரு போன்ற வெடிப்புகள். பெண் குறியைச் சுற்றிலும் அரிப்பு. சினைப்பைகளில் வலி. புணர்ச்சி ஆசையை அடக்குதல், தடைப்படுத்தப்பட்ட மாதவிடாய், அமித சிற்றின்பம் முதலியவைகளால் ஏற்பட்ட உபாதிகள். மூத்திரம் கழித்த பிறகு வெள்ளைப்பாடு.

சுவாசாசயம்: வரண்ட இருமல் கிட்டத்தட்ட இடைவிடாமல் வந்துகொண்டேயிருத்தல், இரவிலும் மாலையிலும் அதிகரிக்கும், தொண்டையில் வறட்சி ஏற்பட்டு அதனுல் இருமல். கீழே படுத்தாலும் பேசினுலும் சிரித்தாலும் கருப்பகாலங்களிலும் வருதல். வெகுநேரம் இருமிய பிறகு கோழை வெளியாகுதல். சிறிதளவு வேலையினுலும் மேல் மூச்சு வாங்குதல், மார்பில் இறுக்கும் வலி.

முதுகு: தோள்பட்டைகளிடையே வலி. முள்ளந்தண்டில் ஏற்பட்ட அடிகள் அல்லது அதிர்ச்சியினுலுண்டாகும் உபாதிகள். கடைசி முள்ளெலும்பில் வலி. இடுப்புப் பாகங்களிலும் வலி.

கை, கால்கள் : கனமாகவும் களைத்தும் பட்சவாயு பிடித்தும், நடுங்கிக்கொண்டுமிருத்தல். கைகள் ஸ்திரமாக இருக்க முடியாமை. விரல்களும் கால் பெருவிரல்களும் மறத்திருத்தல், கைகளில் வியர்வை, நாற்காலியில் காலைத் தூக்கிவைத்தால் வலி சமனம்.

சருமம் : அக்குள் கோளங்களில் வலியும் கீழே கைகளில் மறத்த உணர்ச்சியும். அடிபட்ட இடங்கள் கடினமாகுதல். மஞ்சளான சருமம், விரல் நகங்கள் மஞ்சள் நிறமடைதல். கோளங்கள் வழியாக பறந்துசெல்லும் பிடிப்பு வலிகள். கட்டிகள், கதறச்செய்யும் வலிகள் இரவில் அதிகரிப்பு. நாற்றமுள்ள சீழும் தண்ணீரும் வடியும். குழிப்புண்கள். தூங்க ஆரம்பித்த உடனேயோ அல்லது கண்களை மூடின உடனேயோ வியர்த்தல். சருமத்தில் எரிச்சலுடனும் துர்நாற்றத்துடனும் இரவிலும் காலையிலும் வியர்வை.

விசேஷம் : கீழே படுத்தால், படுக்கையில் திரும்பினால் அல்லது எழுந்திருந்தால், மாதவிடாய்க்கு முன்பும், பிறகும், ஜலதோஷம் பிடிக்கும் சமயங்கள், சரீர அல்லது மன உழைப்பு முதலியவைகளால் உபாதி அதிகரிக்கும். பட்டினி கிடப்பது, இருட்டில், கால்களைக் கீழே தொங்க விட்டால், அசைவு, அமுக்குவது முதலியவைகளால் உபாதி சமனம்.

சாமோமில்லா (Chamomilla)

எந்தவிதமான வியாதியாயினும் இவ்வௌஷதத்தில் பிரதானமாயுள்ள மனக்குறிகள் மனவெழுச்சிகள் முதலியவை இருக்குமாயின் இவ்வௌஷதம் கொடுக்கப்படலாம்.

விசேஷமாகச் சிறு குழந்தைகளின் வியாதிகளில், கோப குணம், அமைதியின்மை, வலி முதலிய குறிகள் இவ் வௌஷதத்தை தெரிந்தெடுக்கும்.

சாமோமில்லாவில் அதி உணர்ச்சி, கோபம் வரும் குணம், தாகம், சூடு, மற மறப்பு முதலியவைகள் இருக் கின்றன. காப்பி, இன்னும் இவைபோன்ற இதர பானங் களால் சம்பவிக்கும் அதி உணர்ச்சி, தாங்க முடியாத வலிகள், அத்துடன் மறமறப்பு, இரவில் வியர்வை.

மனம்: அமைதியின்மை. தனக்குப்பல சாமான்கள் வேண்டுமென்று குழந்தைகள் கேட்கும். அதைக் கொடுத் தால் வாங்க மறுக்கும். தனக்கு வேண்டுவது கிடைக்காத தால் பரிதாபமாக முனகுதல். குழந்தையைத் தட்டிக் கொடுத்து தூக்கிக்கொண்டால்தான் சமாதானமாக இருக் கும். பொறுமையில்லாமை, தன்னைப்பற்றிப் பிறர் பேசு வதோ அல்லது தான் பேசும்போது மற்றவர் குறுக்கிடு வதோ சகிக்காமை. எப்பொழுதும் தன் உபாதிகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டே யிருத்தல், கோப குணம், கோபத்தினாலும் தன்னை நொந்து கொண்டதாலும் ஏற் பட்ட உபாதிகள்.

தலை: மூளையின் ஒரு பக்கத்தில் புடைக்கும் தலை வலி, தலையைப் பின்புறமாகச் சாய்க்க விரும்புதல். நெற்றி யிலும் தலையிலும் சூடான கசகசவென்ற வியர்வை.

காதுகள்: குடைதல். காது வலி, புண் இருத்தல், வீக்கமும் சூடும் வியாதியஸ்தருக்கு அதிகக் கோபத்தை உண்டுபண்ணும். பிடிப்புவலி.

கண்கள்: இமைகளில் எரிச்சல், விட்டுவிட்டு மூடிக் கொள்ளுதல்.

மூக்கு: எவ்வித வாசனையையும் சீக்கிரமாக உணருதல். தூக்கமின்மையுடன் கூடிய சலதோஷம்.

முகம்: ஒரு தாடை சிவந்தும் சூடாகவும் மறுபக்கம் வெளுத்தும் சில்லிட்டும் இருக்கும். தாடையில் ஏற்படும் பிடிப்புவலி உட்காதுக்கும் பற்களுக்கும் பரவுதல். சூடான ப்பானங்களினால் பல்வலி அதிகரிப்பு. காப்பி குடிப்பதினாலும் இரவிலும் வலி இன்னும் அதிகமாகும். நாக்கிலும் முகத் தசைகளிலும் குதிப்பு. குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் ஏற்படும் உபாதிகள்.

தொண்டை: கீழ்த்தாடைக் கோளங்களும் காதுக் கோளங்களும் வீங்குதல், ஏதோ முளை இருப்பதுபோல் இறுக்க உணர்ச்சியும் வலியும்.

வாய்: சூடான பதார்த்தங்கள், காப்பி முதலியவை உட்கொண்டாலும் கருப்பமாயிருக்கும்போதும் உண்டாகும் பல்வலி. இரவில் அதிக உமிழ்நீர் உற்பத்தி.

வயிறு: நாற்றமுள்ள ஏப்பங்கள். காபி குடித்த பிறகு குமட்டல், ஆகாரம் அல்லது பானங்கள் உட்கொண்ட பிறகு வியர்த்தல். சூடான பானங்களில் வெறுப்பு. நாக்கு மஞ்சளாகவும் கசப்பு ருசியுடனும் இருக்கும். பித்த வாயாலெடுப்பு. ஆகாரம் எதுக்கழிக்கப்படுதல்.

அடிவயிறு: பெரிதாகுதல் தொப்பூழருகே பிசையும் வலி, கீழ்முதுகில் வலி. கோபம் ஏற்பட்ட பிறகு சிவப்பான கன்னங்கள், சூடான வியர்வை முதலியவைகளுடன் அடிக்கடி வலி காணுதல். பித்தவலி.

மலம்: வலியுடன், சூடான, பச்சை நிறமுள்ள, தண்ணீர் போன்ற, நாற்றமுள்ள, குழகுழப்பான மலம். துண்டு துண்டாகச் சீவி எறியப்பட்ட முட்டை போன்று சிதகம் வெளியாகுதல். அபானத்தில் இரணம். குழந்தைகளுக்குப் பல் முளைக்குங் காலத்தில் தோன்றும் வயிற்றுப் போக்கு, அதிக வலியுள்ள மூலங்கள்.

பெண்: கருப்பை சம்பந்தப்பட்ட இரத்தப் பெருக்கு. பிரசவத்தை ஒத்த வலியுடன் ஏராளமான கட்டி தட்டிய கறுப்பு இரத்தம் வெளியாகுதல். பிரசவ வலிகள் விட்டு விட்டு வருதல். மேல்புறமாக வலி செல்லுதல். வலியைத் தாங்க முடியாமை, ஸ்தனக் காம்புகள் அழர்ச்சி அடைதல்; தொட்டால் அதிகமான வலி காணும். குழந்தைகளின் வலியுள்ள மார்பு. மஞ்சள் நிறமும், காரமும் உள்ள வெள்ளைப்பாடு.

சுவாசாசயம்: கொற கொறப்பு. தொண்டைக்குழியில் இரணம். அடிக்கடி இருமல். மார்பில் மூச்சுத்திணறும்படியான இறுக்கம். பகல் காலத்தில் வெளியாகும் கோழை, கபம் ஆகியவை கசப்பாக இருத்தல். குழந்தைகளின் மார்பில் தயிர் கடையும் சப்தம்.

முதுகு: இடுப்பிலும் சப்பையிலும் தாங்க முடியாத வலி. கழுத்துத் தசைகளில் விரைப்பு.

கை கால்கள்: இரவில் கடுமையான வாத வலிகளினால் படுக்கையை விட்டு எழுந்திருக்க நேருதல். அங்குமிங்கும் நடக்கவேண்டிவரும். இரவில் உள்ளங்கால்களில் எரிச்சல். இரவில் பாதங்களில் பாரிசவாயு போன்ற பலவீனம், அதனால் நடக்க முடியாமை.

தூக்கம்: சூடு, கோபம், திறந்தவெளி, காற்று, இரவு முதலியவைகளால் உபாதி அதிகரிப்பு. அங்குமிங் கும் தூக்கிக்கொண்டு போவதால், சூடான ஈரநப்புள்ள பருவங்கள் முதலியவைகளால் சமனம்.

சிமாபிலா (Chimaphila)

மூத்திரக் குண்டிக்காய்கள், மூத்திர அவயவங்கள், நிணநீர்க் கோளங்கள், ஸ்திரீகளின் ஜனனேந்திரியங்கள் ஆகியவற்றில் இவ்வௌஷதம் விசேஷமாக வேலைசெய்கிறது. அதிக இரத்தத் திரட்சியும் சிரமப்பட்டு மூத்திரம் வெளி யாகும் குறியுடனுமுள்ள ஸ்திரீகள். பெரிய ஸ்தனங்கள் உள்ள ஸ்திரீகள், பித்தம், மூத்திரக் குண்டிக்காய் சம்பந்த மான நீர்ச்சுரப்பு. கண்களில் பூ விழ ஆரம்பிக்கும் சமயத் திலும் விருத்தியாகும் சமயத்திலும் உபயோகப்படும். மூத்திரப்பை உபாதியில் உபயோகமுள்ள ஔஷதங்களில் இதுவுமொன்று. குறைவான மூத்திரம், சீழ்ப்போலும் கப்பி போலுமுள்ள மண்டி படிந்திருத்தல்.

தலை: இடது பொட்டில் வலி, கண் இமைகளின் அரிப்பு. இடக்கண்ணிலிருந்து அதிக நீர் வெளியாவதும் குத்துவலியும்.

வாய்: பல் வலி. சரீர உழைப்பினாலும் ஆகாரம் உட்கொண்ட பிறகும் அதிகம், குளிர்ந்த தண்ணீரினால் சமனம். பற்களை மெதுவாகப் பிடுங்குவது போன்ற வலி.

மூத்திரம்: அடிக்கடி போகத் தூண்டுதல். சிறுநீர் கலங்கியும் நாற்றமாகவும் கப்பிபோன்ற பூந்தசைகளுடனும் இருக்கும். மூத்திரத்திலடியில் மாசு படிதல். நீர்த்

துவாரத்தில் அதிக எரிச்சலும் கடுப்பும். அதிகப் பிரயத்தனம் செய்து மூத்திரம் விடவேண்டி வருதல். ஆசனத்தில் ஒரு பந்து இருக்கும் உணர்ச்சி. மூத்திரத்தில் தித்திப்பு. கால்களை அகற்றி வைத்துக்கொண்டும் உடம்பை முன் பக்கமாக வளைத்தும் நின்றுகொண்டால்தான் மூத்திரம் வெளியாகுதல்.

பெண்: யோனி உதடுகள் அழற்சியுற்றும் வீங்கியும் இருத்தல். யோனித் துவாரத்தில் வலியும் சூடான உணர்ச்சியும். ஸ்தனங்களில் கழலைக் கட்டிகள். அதிகமான பால் உற்பத்தி. மிகவும் பெரிய ஸ்தனங்களையும் அவைகளில் குத்து வலியும் கழலைக் கட்டியும் உள்ள ஸ்திரீகளுக்கு இது ஒரு உபயோகமுள்ள ஔஷதமாகும்.

ஆண்: நீர்த் துவாரத்தில் எரிச்சல். தண்ணீர் போன்ற மேக வெட்டை சதாகாலமும் வெளியாகிக் கொண்டே இருத்தல். நீற்றுத் தண்ணீர் போன்ற சுக்கிலம் வெளியாகுதல்.

சருமம்: மேகநீர் சம்பந்தமான இரணங்கள், கோளங்கள் பருத்து வீங்குதல்.

கால்கள்: இடது கணுக்கால்களுக்குமேல் ஒரு நாடாவால் கட்டி இறுக்குவது போன்ற உணர்ச்சி.

விசேஷம்: ஈர நப்புள்ள பருவங்களிலும், ஈர நப்புள்ள இடங்களிலும் உட்கார்ந்ததினாலும் சரீரத்தின் இடப் பாகத்திலும் உபாதி அதிகம்.

உறவு: லேடம் பாலஸ்திரி.

குறிப்பு: மூன்று வீரியத்திற்குட்பட்டு உபயோகித்தால் நல்ல பலன் ஏற்படுகிறது.

சின்னியம் ஆர்ஸனிகம்
(Chinnium Arsenicum)

இது ஒரு பொதுவான டானிக்கைப்போல் உபயோகம் உள்ளது. மலேரியா சுரங்களினுலும் இன்னும் இது போன்ற வியாதிகளினுலும் பலம் குன்றியவர்களுக்கு மிகவும் பிரயோசனப்படும்.

தலை: பலவீனம், கனம், படபடப்பு, கவலை, அதிகக் கிறுகிறுப்பு. அண்ணார்ந்து பார்த்தால் கிறுகிறுப்பு. நெற்றியிலும் பிடரியிலும் மந்தமான தலை வலி.

கண்கள்: வெளிச்சத்தில் அதிகக் கூச்சம். அப்பொழுது சூடான கண்ணீர் வெளியாகுதல்.

வாய்: நாக்கில் வெண்மையான மாசு படிதல். சில சமயங்களில் குழகுழப்பான மஞ்சள் நிறமுள்ள மாசு படிவதுடன் கசப்பு ருசி. பசி யின்மை.

வயிறு: அதிக தாகவறட்சை, ஆனல் தண்ணீர் குடித்தால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமை. முட்டை உட்கொண்டால் உடனே வயிற்றுப் போக்கு ஏற்படுதல்.

இருதயம்: படபடப்பு. இருதயம் நின்றுவிட்டது போன்ற உணர்ச்சி. அடிக்கடி மூச்சுத்திணறல் ஏற்படுதல், அதனல் திறந்தவெளியில் செல்லவேண்டி வருதல். மாடிப்படி ஏறினல் இருதய சம்பந்தமான மூச்சுத் திணறல். கொடிய வியாதிகளுக்குப் பிறகு ஏற்படும் இரத்த ஓட்டக் கோளாறுகள், இருதயத் தசைகளின் பலவீனம்.

தூக்கம்: நரம்புக்கோளாறுகளினல் தூக்கமில்லாமை. (இதற்கு 6-வது வீரியத்தில் ஒரே வேளை கொடுக்கவும்.)

கை கால்கள்: மிகுந்த பலவீனம். கைகளும் கால்களும் சில்லென்றிருத்தல். கிழிக்கும் வலிகள்.

சுரம்: நீடித்து இருக்கும், மிகவும் மெலிந்த சரீரங்கள், அதிகப் பலவீனம்.

சின்னினம் ஸல்ப்யூரிகம்
(Chinninum Sulphuricum)

கொயினாவினால் அமுக்கப்பட்ட மலேரியா சுரத்தை வெளிக்கிளப்ப இவ்வெளஷதத்தை உயர்ந்த வீரியத்தில் கொடுக்கவும். மலேரியாவைத் தவிர முறைவிட்டு வரும் எந்த வியாதிக்கும் இது உபயோகப்படக் கூடியதே. முக்கியமாகக் கீல்வாயுவுக்கு உபயோகமுள்ளது.

தலை: நெற்றியிலும் பொட்டுகளிலும் வலி, காலைமுதல் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டு உச்சி வேளையில் கடுமையாக இருக்கும். இது மலேரியா சம்பந்தமுள்ளதாகவும் கிறுகிறுப்புடனும் நாடித் துடிப்புடனும் இருக்கும். இடது பக்கத்தில் அதிகம். வியாதியஸ்தரால் கொஞ்ச நேரம் சேர்ந்தாற்போல் நின்றுகொண்டு இருக்க முடியாது.

காதுகள்: மணியடிப்பது போலவும் என்ஜின் ஊதுவது போலவும் சமுத்திர அலைகளின் சப்தம் போன்றும் கடுமையான இரைச்சல்களுடன் கூடிய செவிட்டுத் தன்மை.

முகம்: நரம்பு வலிகள் கண்களுக்குக் கீழ்ப்பாகத்தில் ஆரம்பித்துக் கண்களைச் சுற்றிலும் பரவுதல். குறிப்பிட்ட நேரங்களில் வலி வந்துகொண்டே இருத்தல். அமுக்குவதினால் வலி சமனமாகும்.

முள்ளந்தண்டு: கழுத்துப்பாக முள்ளெலும்புகளில் வலி. அமுக்குவதினால் வலி அதிகரிக்கும். கழுத்துக்கும் தலைக்கும் வலி பரவுதல்.

இரத்தம்: சிவப்புக் கெபிகள் குறைந்திருத்தல்.

மூத்திரம்: இரத்தம் கலந்திருத்தல். கலங்கியும் குழகுழப்பாகவும் களிமண்ணின் நிறமாகவும் மாசு படியும் தன்மை உடையதாகவும் இருக்கும். மூத்திரத்தில் அல்புமின் என்னும் வஸ்து அதிகமாக இருத்தல். இவைகளுடன் சரீர உஷ்ணமும் குறைந்திருத்தல்.

வயிறு: ஆகாரத்திற்குப் பிறகு அன்னப்பையின் அடிப்பாகத்தில் கனம், வாயாலெடுக்க வருதல், ஆகாரத்தில் வெறுப்பு, பித்தம் வாயாலெடுக்கப்படுதல், கல்லீரலில் வலி, மலேரியா சுரத்திற்குப் பிறகு மண்ணீரல் பெருத்திருத்தல்.

மலம்: ஒவ்வொரு இரவிலும் வயிற்றுப்போக்கு ஏற்படுதல், சீதபேதி, மலம் குழகுழப்பாகவும் நுரையுடனும் இருக்கும்.

சுரம்: காலை 10 முதல் 11 மணிவரை குளிர் ஏற்படுதல். மாலை 3 மணிக்குத் தவறாமல் நடுக்கலுடன் கூடிய குளிர். சுரத்தில் குளிர், உஷ்ணம், வியர்வை, இம்மூன்று நிலைமைகளும் ஒன்றன்பின்னொன்றாய் ஒழுங்காக ஏற்படுதல். குளிர் முதுகு, கைகால்கள், முகம், மூக்கு இவைகளில் அதிகமாக இருத்தல். உஷ்ணம் கடுமையாகவும் தலைக்கனத்துடனும் சிவந்த முகத்துடனும் அதிக தாக வறட்சையுடனும் இருக்கும். வியர்வை பலவீனப்படுத்துமளவு அதிகமாக இருக்கும். டைபாய்டு போன்ற நீடித்த சுரம் திடீரென்று மலேரியாவைப்போல் விட்டுவிட்டுவர ஆரம்பித்தால் இவ்வௌஷதம் மிக உபயோகமுள்ளது.

உறவு: ஆர்ஸனிகம், யூபடோரியம், நேட்ரம்மூர், சைன.

முறிவு: லாச்சஸிஸ், ஆர்னிகா, பல்ஸடில்லா.

செலிடோனியம் (Chelidonium)

கல்லீரல் கோளாறுகளுக்கு இது ஒரு முக்கியமான ஔஷதமாகும். சரீரம், கண்கள், மூத்திரம், மலம் இவைகளில் மஞ்சள் நிறமும் வலது தோள் எலும்பின் கீழ்ப்பக்கத்தில் விடாத வலியும் இவ்வௌஷதத்திற்கு இன்றியமையாத குறிகளாகும். ஒவ்வொரு நாளும் மாலை 4 மணிமுதல் 8 மணிவரை உபாதிகள் அதிகரிப்பதும் உபாதிகள் வலது பக்கத்தில் இருப்பதும் இதில் கவனிக்கத் தகுந்தவை. கல்லீரல் கோளாறுகளுடன் கூடிய நிமோனியா சுரத்திலும் டைபாய்டு சுரத்திலும் இது உபயோகப்படும். கருப்ப காலத்திலேற்படும் பித்தக் கோளாறுகளுக்கு இது உபயோகமுள்ளது.

தலை: பிடரியில் சில்லிப்பும் கனமும். தூக்க மயக்கமும் சரீரத்தில் உணர்ச்சிக் குறைவும் கல்லீரல் கோளாறுகளுடன் கூடிய கிறுகிறுப்பு, வலப்பக்கத் தலைவலி.

கண்கள்: வெள்ளை விழிகள் மஞ்சளாக மாறுதல். கருமணிகள் சுருங்குதல்.

முகம்: கன்னங்களும் மூக்கும் மஞ்சள் நிறமடைதல்.

நாக்கு: கெட்டியான மஞ்சளான மாசு. அதிகக் கசப்பு ருசியுள்ள உமிழ்நீர் உற்பத்தியாகுதல்.

தொண்டை: இறுக்கும் உணர்ச்சி. விழுங்க சிரமப்படுதல்.

வயிறு: சூடான பால் சாப்பிடப் பிரியம். பொதுவாகச் சூடான பானங்கள் ஒத்துக்கொள்ளுதல். புளிப்பான பானங்களிலும் பதார்த்தங்களிலும் அவா. பித்த வயிற்று வலி. சூடான தண்ணீர் குடிப்பதினால் வாயாலெடுப்பு சமனப்படுதல். கல்லீரலில் வலி, மேல்பக்கமாகவோ அல்லது முதுகிற்கோ பாய்தல். வலி ஆகாரத்தினால் சமனம். கல்லீரலில் அழர்ச்சியும் வலியும்; கடினமாக இருத்தல், அழுக்கினால் அதிக வலி.

அடிவயிறு: தொப்பூழ்ப் பாகத்தில் வலி. வயிறு உப்பியும் வேதனையுடனும் இருக்கும். கடபுடா சப்தமும் வெட்டும் வலிகளும். வயிற்றை ஒரு கயிற்றினால் கட்டி இறுக்கும் உணர்ச்சி.

மலம்: அபானத்தில் அரிப்பு, மலம் மெல்லியதாகவும் பசை போன்று குழகுழப்பாகவும் நல்ல மஞ்சள் நிறமாகவோ அல்லது களிமண் போன்றோ இருக்கும். ஆட்டுப் புழுக்கை போன்ற மலம், மஞ்சட் காமாலையில் ஒருநாள் மலபந்தமும் மறுதினம் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல்.

மூத்திரம்: நல்ல மஞ்சள் நிறம், மூத்திரம் பட்ட இடங்கள் எல்லாம் மஞ்சள் நிறமடைதல்.

இருமல்: காலை வேளைகளில் வறண்ட, சிரமப்படுத்தும் இருமல். இரவுகளில் கள கள த்த இருமல், ஆனால் கபம் வெளியேற சிரமப்படுதல்.

பெண்: மாதவிடாய் தாமதித்தும் மிகவும் அதிகமான போக்குடனும் பல நாட்கள் நீடித்தும் இருத்தல்.

சுவாசாசயங்கள்: வலப்பக்கத்தில் பிடிப்பு. ப்ளூரா என்னும் தசை பாதிக்கப்பட்டிருத்தல். வலப் பக்கத்து சுவாசாசயத்தின் கீழ்ப்பாகத்தில் வலி. மஞ்சட் காமாலை யுடன் கூடிய வலப்பக்கத்து நிமோனியா.

கழுத்து, முதுகு: கழுத்தில் பிடிப்பு வலி. வலது தோள்பட்டை எலும்பின் கீழ்ப்பாகத்தில் வலி.

சுரம்: சரீரம் முழுவதும் சில்லென்றிருத்தலும், குளிரும். குளிர் முதுகு வழியாகக் கீழே இறங்குதல், தாக வறட்சை யில்லாத சுரம்; தூக்கத்திலும் நள்ளிரவிற்குப் பிறகும் காலை வேளைகளிலும் வியர்வை. மாலை 4 மணி முதல் 8 மணி வரை சுரம்.

சருமம்: மஞ்சள் நிறம், கால்களில் கீல்வாயு, கண்கள், முகம், கைகள், சருமம் முதலியவை மஞ்சள் நிற மாயும் அரிப்புடனும் இருக்கும்.

விசேஷம்: மாலை 4 மணிமுதல் 8 மணி வரையிலும் வலப்பக்கத்திலும், அசைதல், தொடுதல், சீதோஷ்ண மாறுதல் முதலியவைகளினாலும் உபாதிகள் அதிகரிக்கும். ஆகாரத்திற்குப் பிறகும், திறந்த வெளியிலும், அமுக்குவதி னாலும் சமனம்.

உறவு: லைகோபோடியம், பிரயோனியா

முறிவு: சாமோமில்லா:

ஒப்பிடுதல்: ஆர்ஸனிகம், பிரயோனியா, ஓபியம், போடோபில்லம், லைகோபோடியம், நக்ஸ்வாமிகா, ஸல்பர், ஸாங்வினேரியா.

செ ன போ டி ய ம்

(Chenapodium)

கிறு கிறுப்பு, செலிடோனியத்தில் வலது தோள் பட்டை யெலும்பின் கீழ் வலி இருப்பது போல இவ் வெளஷதத்தில் இடது தோள்பட்டையெலும்பின் கீழே வலி இருக்கும். இதுவே இவ்வெளஷதத்தின் முக்கிய குறியாகும்.

தலை : மூளை அங்குமிங்கும் ஊசலாடுவது போன்ற உணர்ச்சி. சலதோஷத்தில் மூக்கில் எரிச்சலும் எறும்பு கள் கடிப்பது போன்ற வலியும். காதுகளில் துப்பாக்கி வெடிப்பது போன்ற சப்தம். வலது கண்ணின் மேற்புறத் தில் வலியும் அதிலிருந்து ஏராளமான கண்ணீர் வடிவதும். பல்வலி காதுகளுக்கும் பொட்டுகளுக்கும் தாடையெலும்பு களுக்கும் பரவுதல்.

வயிறு : பசியில்லாமை. நாக்கின் நுனியில் சிறு கொப்புளங்கள். தொண்டையில் அதிகக் கோழை உற்பத்தி யாகுதல், வயிற்றில் கடபுடா சப்தமும் வலியும் அடிக்கடி வெளிக்கு வருவது போன்றிருப்பதும். ஆனால் மலம் வெளியாகாமல் இருப்பதும்.

மலம் : கெட்டியாகவும் ஆட்டுப்புழுக்கை போன்றும் இருக்கும். காலைகளில் வயிற்றில்வலியுடனும் அபானத்தில் எரிச்சலுடனும் கூடிய வயிற்றுப்போக்கு. அடிவயிற்றில் இறுக்க உணர்ச்சி.

மூத்திரம் : நீர்த்துவாரத்தில் எரிச்சல். அடிக்கடியும் அதிகமாகவும் நீர் பிரிதல்.

முதுகு: இடது தோள்பட்டை எலும்பின் கீழ்ப் பாகத்தில் தாங்க முடியாத வலி. இவ்வலி மார்புக்குப் பாய்தல்.

சுரம்: சரீரம் முழுவதும் நடுங்குதல். உள்ளங்கை களில் எரிச்சல். உஷ்ணமான வியர்வை.

சைனு (China)

(Cinchona Officinalis)

சரீரத்திலிருந்து முக்கியமான தாதுநீர்கள் அதிகமாக வெளியேறியதால் ஏற்படும் பலவீனத்திற்கு இது ஒரு நல்ல ஔஷதமாகும். வியாதி முறைவைத்து வருவது, குளிர் காற்று மேலே பட சகிக்கமுடியாமலிருப்பது முதலியவை இவ்வௌஷதத்தில் உண்டு. சாதாரணமாக இவ்வௌஷ தம் அவ்வப்போது தோன்றி மறையும் வியாதிகளின் ஆரம் பத்தில் உபயோகமாவது இல்லை. வயிற்றில் அதிக வாயுத் தொந்திரவு, எவ்வளவு வாயு வெளியேறினாலும் அவஸ்தை குறைவதில்லை.

மனம்: உணர்ச்சியின்மை, அலட்சியமான மனோ பாவம், பணிவின்மை, மௌனம் சாதித்தல், மனத்தளர்ச்சி.

அதிகமான யோசனைகளினால் தூக்கம் வராமை. பிறர் மனதைப் புண்படுத்தும் சுபாவம்.

தலை: மூளை அங்குமிங்கும் ஊசலாடி மண்டையோட் டில் முட்டுவது போன்றும் அதனால் வலி ஏற்படுவது போன் றும் உணர்ச்சி. தலையின் இரத்தக் குழாய்களில் விண் விண் ணென்ற தெரிப்பு. எக்காரணத்தினாலாவது அதிக இரத்

தம் சரீரத்திலிருந்து வெளியேறிய பிறகும் அமித சிற்றின்ப நுகர்ச்சியினுலும் தாதுநீர்கள் அதிகமாக வெளியேறிய பிறகும் முகம் சிவந்திருத்தல். தலையைச் சீவினுல் வலி. திறந்த வெளியில் பொட்டுகளின் இடைப் பாகத்தில் வலி. இவ்வலி அசைவதினுலும் தொடுவதினுலும் காற்றுப்படுவதினுலும் அதிகரிக்கும். நடக்கும்போது போதை உட்கொண்டவன் போலிருத்தல்.

கண்கள்: கண்களைச் சுற்றிலும் நீல நிறமான வளையங்கள். குழி விழுந்த மஞ்சள் நிறமுள்ள கண்கள். பார்வையில் கரும்புள்ளிகளும் பலவிதமான வர்ணங்களும் தோன்றுதல். இரத்த சோகை உள்ளவர்களுக்கு இருட்டில் கண் தெரியாமை. கண்களில் கூச்சம். கண் விழிகள் பிதுங்கி யிருத்தல். விட்டு விட்டு வரும் நரம்பு சம்பந்தமான வலிகள்.

காதுகள்: கிண் கிண்ணென்ற ஒலிப்பு. சப்தத்தில் காது கேளாமை, வெளிக்காதைத் தொட்டால் வலி.

மூக்கு: தடைப்பட்ட சலதோஷம். காலையில் மூக்கிலிருந்து இரத்தமும் தண்ணீர் போன்ற நீரும் வெளியாகுதல். அடிக்கடி மூக்கைச் சிந்த நேருவதும், ஆனுல் ஒன்றும் வெளியாகாமல் இருப்பதும். மூக்கு மாத்திரம் வியர்த்தல்.

முகம்: சோகை பிடித்த முகம், உப்பி இருத்தல்.

வாய்: பல்வலி, பற்களைக் கடிப்பதினுலும் உஷ்ணத்தினுலும் சமனம். நாக்கில் அழுக்குப்போன்ற மாசுபடிதல். நுனிநாக்கில் எரிச்சல். கசப்பு ருசி. எந்த ஆகாரமும் உப்புக்கரித்தல்.

வயிறு: அழுக்கினுல் வலி. ஜீரணமாகாத ஆகாரம் வாயாலெடுக்கப்படுதல். தாமதமான ஜீரணம். சாப்பிட்ட பிறகு கனத்த உணர்ச்சி. பசியில்லாமலேயே உணவு உட்கொள்ளப் பிரியம். பால் ஒத்துக்கொள்ளாமை, உப்பிசம். எவ்வளவு ஏப்பம் விட்டாலும் தொந்திரவு குறைவதில்லை. பழங்கள் உட்கொண்டால் உப்பிசம் அதிகமாகும். விக்கல். அசைவினுல் உப்பிசம் குறைதல்.

அடி வயிறு: அதிக வாயு உப்பிசத்தினுல் வலி, சரீரத்தை இரண்டாக மடிப்பதினுல் சமனம். வயிறு பெரிய பந்துபோல் பெருத்தல். கல்லீரலும் மண்ணீரலும் பெருத்து வீங்கி இருத்தல்.

மலம்: ஜீரணமாகாத ஆகாரத்துடனும், நுரையுடனும் மஞ்சள் நிறமாகவும் வலியில்லாமலும் வெளியாகும் மலம். இரவுகளிலும் ஆகாரத்திற்குப் பிறகும் உஷ்ணமான பருவங்களிலும், பழம், பால் முதலியவைகளை உண்பதினுலும் வயிற்றுப்போக்கு ஏற்படுதல். மலம் மிருதுவாக இருந்தாலும் வெளியேற சிரமப்படுதல்.

ஆண்: அதிகக் காம இச்சை. அடிக்கடி இந்திரிய ஸ்கலிதமும் அதனுல் அதிக பலவீனமும்.

பெண்: அதிசீக்கிரமாக மாதவிடாய் ஏற்படுதல். வலியுடன் ஏராளமான போக்கு. அடி வயிறு வெளித் தள்ளியும் கருத்த கட்டிகள் வெளியாகுதலும். இரத்தம் தோய்ந்த வெள்ளைப்பாடு. மாதவிடாய்க்குப் பதிலாக வெள்ளைப்பாடே ஏற்படுதல். அதிகரித்த புணர்ச்சி ஆசை.

சுவாசாசயங்கள்: தளர்ச்சியுடன் கூடிய இன்புளுயன்ஸா சுரம். தலையை உயரமாக வைக்காவிட்டால் மூச்சுத்

திணறுதல், அடிக்கடி நெஞ்சடைப்பு, நெஞ்சை அடைக்கும் கபம், மார்பில் களகளத்த சப்தம். ஆகாரம் உட்கொண்ட பிறகெல்லாம் கடுமையான இருமல். சுவாசாசயத்திலிருந்து இரத்தம் வெளியேறுதல். இடது சுவாசாசயத்தில் வலியும் மூச்சுத் திணரலும், மழைக் காலத்தில் அதிகரிக்கும் காசநோய்.

இருதயம்: ஒழுங்கீனமான துடிப்பு, அதாவது ஒரு சமயம் பலவீனமான துடிப்பு வேகமாக அடிப்பதும் மறு சமயம் கெட்டியான துடிப்பு மெதுவாகச் செல்லுவதும். மயக்கமும் மாரடைப்பும், இரத்த சோகையும் அதனுல் சரீரம் வீங்குவதும்.

முதுகு: இடுப்பில் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு வலி பாய்தல், இடுப்பைச் சுற்றிலும் கத்தியால் வெட்டுவது போன்ற வலி.

கை கால்கள்: மூட்டுகளிலும் கை கால்களிலும் சுளுக்கு விழுந்தது போன்ற வலிகள். வலி மெதுவாகத் தொட்டால் அதிகமாகும். நன்ருய் அழுக்குவதினுல் சமனப்படும், கை கால்களில் கயிற்றினுல் இறுக்கியிருப்பது போன்ற உணர்ச்சி, மூட்டுகள் வீங்கியும் அதிக வலியுடனும் இருக்கும். அதிக பலவீனம், நடுங்குதல், மறத்தது போனிருத்தல். அவயவங்களை அசைக்கப் பிரியமின்மை. காலையிலும் உட்கார்ந்திருக்கும் போதும் அதிகம்.

சருமம்: மெதுவாகத் தொட்டால் வலி அதிகரித்துக் கொண்டும் நன்ருக அமுக்கினுல் சமனமாகியும் இருக்கும். சருமம் அதிக வியர்வையுடன் சில்லிப்பாயிருத்தல். ஒரு கை பனிக்கட்டிபோல் சில்லிப்பாயும் மற்றென்று கதகதப்

பாகவும் இருத்தல். சரீரம் முழுவதும் இலேசாக ஊதி யிருத்தல். கோளங்கள் கரடு தட்டிப் பெறுத்திருக்கும்.

தூக்கம்: மயக்கம். எவ்வளவு தூங்கினாலும் அசதி யும் சோம்பலும் இருந்துகொண்டே யிருத்தல் அல்லது எப்பொழுதும் ஒரே மயக்கம். விடியற்காலையில் அதி சீக் கிரம் எழுந்திருத்தல். நீண்டநாள் தூக்கம் இல்லாமை. கவலையையும் பயத்தையும் உண்டாக்கும் சுவப்பனங்கள். விழித்துக்கொண்ட பிறகும் சுவப்பனத்தில் கண்டவை உண்மை போலத் தோன்றுதல், அதனால் பயம்.

சுரம்: முறைச் சுரங்கள், முறை சற்று முன்ன தாகவே வந்துவிடுதல். வாரமொரு முறை கண்டிப்பாக வருதல். நடுக்கல், உஷ்ணம், வியர்வை, இம்மூன்று நிலை மைகளும் ஒன்றன்பின் ஒன்றாக தனித் தனியே ஏற்படுதல். சாதாரணமாக நடுக்கல் கால்களிலும், மார்பிலும் ஆரம் பித்தல். நடுக்கல் ஆரம்பிப்பதற்கு முன் தாகவறட்சை. இரவுகளில் பலவீனப்படுத்தும் அளவுக்கு வியர்வை. சிறிய உழைப்பினாலும் வியர்வை உண்டாகுதல். இது முக்கிய மாக ஒவ்வொரு அவயவங்களிலும் தனித் தனியே ஏற் படுதல்.

விசேஷம்: மிருதுவாகத் தொட்டால் வலிகள் அதி கரிப்பு. காற்று மேலே படுவதினால், ஒருநாள் விட்டு ஒரு நாள், சரீரத்தின் தாது நீர்கள் ஏராளமாய் வெளியேறிய பிறகு, இரவுகளில், ஆகாரத்திற்குப் பிறகு உபாதி அதிகம். சரீரத்தை இரண்டாக வளைப்பதினாலும் நன்றாய் அமுக்கு வதினாலும் திறந்த வெளியிலும், உஷ்ணமான ஒற்றிடங் களினாலும் சௌகரியம்.

முறிவு: ஆர்னிகா, ஆர்ஸனிகம், நக்ஸ்வாமிகா, இபிகாக்.

உறவு: பேர்ரம், கல்கேரியா பாஸ்.

வயிற்று உப்பிசத்தில் ஒப்பிடுதல்

கார்போ விஜி: டாம்பீகமான ஆகாரங்களை உட்கொண்டதால் ஏற்பட்ட உப்பிசம், வாயில் கசப்பு ருசி. கொழுப்புள்ள ஆகாரங்களோ அல்லது பாலோ உட்கொள்ளப்பட்டால் மேல் வயிற்றில் அதிக உப்பிசம் ஏற்படுதல். வயிறு உடைந்துவிடுமோ என்று நினைக்கும்படியான உப்பிசம். எவ்வளவு பிரயத்தனப் பட்டாலும் ஏப்பம் வராமலும் கடைசியில் சில பெரிய ஏப்பங்கள் வந்து சௌகரியம் ஏற்படும். வியாதியஸ்தர் எப்பொழுதும் தன் வயிற்றின் வாயு உபத்திரவத்தைப் பற்றி புகார் சொல்லிக்கொண்டே இருப்பார்.

லைகோபோடியம்: கல்லீரல் கோளாறுகளுடன் சம்பந்தப்பட்ட வாயு உப்பிசம். குடலும் கீழ்ப்பாகமும் உப்புதல்.

காலீ கார்ப்: மிகவும் மெலிந்த சரீரங்களுக்கும் இரத்தப் புஷ்டி இல்லாதவர்களுக்கும், எந்த ஆகாரத்தை உட்கொண்டாலும் அது உடனே வாயுவாக மாறுதல். ஒவ்வொரு வேளை ஆகாரத்திற்குப் பிறகும் வயிறு உப்புதல்.

அர்ஜண்டம் நைட்ரிகம்: வயிற்றில் உப்பிசம், வாயு மேல் நோக்குதல், கடைசியில் மிக வேகமாக வாயு வெளியேறுதல். வாயாலெடுப்பும் வயிற்றுப் போக்கும் ஒரே சமயத்தில் ஏற்படுதல். இவைகளுடன் பலவீனம். ஏப்பம் விடுவதால் சமனம்.

டபாகம் (Tabacum)

நரம்புத் தளர்ச்சி, குமட்டல், வாயாலெடுப்பு, இருதய பலவீனம், சரீரம் இளைத்தல், இரத்த சோகை, திடீரென்று மயக்கமடைதல் ஆகியவை இவ்வௌஷதத்தின் முக்கிய குறிகளாகும்.

மனம்: ஞாபகமறதி, விஷயங்களை மெதுவாக கிரகித்தல். காக்கை வலிப்பினால் ஏற்படும் மந்த புத்தி, ஒன்று சந்தோஷமாகவோ அல்லது வருத்தத்துடன் ஏக்கம் பிடித்தோ இருப்பார். தான் அழுவது வியாதியஸ்தருக்குப் பிடித்திருக்கும். திடீரென்று கவலை, மார்பில் அமுக்க உணர்ச்சி, அதனால் வியாதியஸ்தர் அங்குமிங்கும் பாய்வார்.

தலை: வயிற்றில் குடைவது போன்ற உணர்ச்சியுடன் கிறுகிறுப்பு. இது வெளியே உலாவும்போது சமனப்பட்டும் வீட்டிற்குள்ளிருந்தால் அதிகரித்தும் இருக்கும். நரம்பு சம்பந்தமான தலைவலி. திடீரென்று சம்மட்டியால் தலையில் அடிப்பது போன்ற வலி. கண்களுக்கு மேலாக இருக்கும் எலும்பில் வலி. அதிகக் குமட்டலுடன் காலையிலிருந்து நடுப்பகல் வரை அடிக்கடி ஏற்படும் பித்தத் தலைவலி. இவ்வலி வெளிச்சத்தினாலும் சப்தத்தினாலும் அதிகரித்தல்.

கண்கள்: கண்களுக்கு முன்னால் வலை இருக்கும் தோற்றம். பார்க்கும் வஸ்துக்கள் இரண்டாகத் தெரிதல். குழி விழுந்த கண்கள், விழிகள் பிதுங்கி இருத்தல்.

மூக்கு: வாசனையறியும் நரம்புகளின் சக்திக் குறைவு.

முகம்: சவம்போன்ற வெளுப்புடனும் குளிர்ந்த வியர்வையுடனும் இருத்தல். மாலைகளில் முகவெலும்புகளிலும் வலி.

வாய்: அதிக உமிழ்நீர் உற்பத்தி. வெண்மையான பிசுக்கென்றிருக்கும் கோழையை அடிக்கடி வெளியேற்ற வேண்டி வருதல். பேச முடியாமை.

வயிறு: அதிக தாக வறட்சை, அடிக்கடி பசி. பசியாய் இருக்கும்போதும் சிறிது அசைந்தாலும் குமட்டல். காலராவில் வேராட்ரம் ஆல்பமோ அல்லது ஸீகேல் கார்னூட்டமோ கொடுக்கப்பட்டு வயிற்றுப் போக்கை நிறுத்திய பிறகு அதிகக் குமட்டல் இருந்தால் இவ்வௌஷதம் கொடுக்கலாம். கருப்ப ஸ்திரீகளுக்கும் கப்பலில் பிரயாணம் செய்பவர்களுக்கும் ஏற்படும் குமட்டல், வாயாலெடுப்பு முதலியவைகளுக்கு நல்ல ஔஷதமாகும். வயிற்றில் ஒன்றுமே இல்லாதது போன்றும் குளிர்ச்சியுமுள்ள உணர்ச்சி. சீரண சம்பந்தமான வலிகள், வயிற்றிலிருந்து இருதயத்திற்குச் செல்லுதல். இருதயத்தில் படபடப்பு.

அடி வயிறு: கடபுடா சப்தம், சிறைப்பட்ட அபான வாயு, திடீர் திடீரென்று ஏற்படும் வயிற்று வலி, எரிச்சலுடன் வியாதியஸ்தரை அலறவைக்கும் வலிகள், தொப்பூழ் உள்ளிழுக்கப்படுதல். குடல் முறுக்கிக்கொண்டு இறங்குதல், சாவை ஏற்படுத்துவது போன்ற குமட்டல், மயக்கம். சரீரம் சில்லிடுதல், சில்லிப்பான வியர்வை, வாயாலெடுப்பு.

மலம்: பசும் மஞ்சள் அல்லது பச்சையான குழ குழப்புள்ள வயிற்றுப் போக்கு திடீரென்று ஏற்படுதல், அபானத்தில் கடுப்பு, அங்குமிங்கும் உள்ளுக்குள்ளே ஓடும் அபான வாயு. காலராவுக்கு இது ஒரு நல்ல ஔஷதமாகும்.

மூத்திரம்: குண்டிக்காய் சம்பந்தமான வலிகள்.

ஆண்: ஒவ்வொரு இரவிலும் இந்திரிய ஸ்கலிதம்.

பெண்: மாதவிடாய் சுயமாய் நிற்கும் காலத்தில் இவ்வௌஷதத்தின் குறிகள் இருந்தால் கொடுக்கப்படலாம்.

கருப்பம்: கருப்ப காலத்தில் ஏற்படும் மயற்கை. அதிக உமிழ்நீர் உற்பத்தி.

சுவாசம்: திடீர் திடீரென்று ஏற்படும் மூச்சடைப்பும் கஷ்ட சுவாசமும். மார்பெலும்புக்குக் கீழே முள் இருக்கும் உணர்ச்சி. அதனால் ஆழ்ந்து சுவாசிக்க முடிவதில்லை.

இருமல்: வரண்ட, சிரமத்தை உண்டாக்கும் தன்மையும் வாயாலெடுப்பை ஏற்படுத்தும் இருமல். இருமிய பிறகு மூச்சடைக்கும் விக்கல்.

மார்பு: மேல் மார்பில் இறுக்கம்.

இருதயம்: இரவுகளில் படபடப்பு, தோள்பட்டை எலும்புகளின் இடையே வலி. இருதயம் அமுக்கப்படுதல். இருதயத்தை ஒரு கயிற்றினால் கட்டி அக்கயிற்றை ஒரு கடப்பாறையை வைத்து முறுக்கும் உணர்ச்சி. படபடப்பு, இடது பக்கமாய்ப் படுப்பதினால் அதிகமாகும், வலப்பக்கமாய்ப் படுத்தால் சமனம்.

கழுத்து, முதுகு: இடுப்பு வலி, தோள்பட்டை எலும்புகளின்வலி, தொண்டையில் இறுக்கம்.

கை கால்கள்: அதிக பலவீனம், அமைதியின்மை, தள்ளாடி நடத்தல், நடுக்கம், சில்லென்றிருத்தல்.

விசேஷம்: உட்கார்ந்திருக்கும்போதும் கண்களைத் திறந்து கொண்டிருக்கும்போதும் உபாதிகள் அதிகரித்து நடந்தால் சமனமாகும்.

முறிவு: இவ்வௌஷதம் சிகுடாவையும் ஸ்டரமோனியத்தையும் முறிக்கும். இதற்கு இபிகாக், ஆர்ஸனிகம், நக்ஸ்வாமிகா, பாஸ்பரஸ், இக்னேஷியா, க்ளமேடிஸ், ஸேபியா, லைகோபோடியம் முதலியவை முறிவுகளாகும்.

குறிப்பு: டபாகம் என்பது புகையிலை. நாம் உபயோகிக்கும் புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஹோமியோபதி வீரியங்கள். பிளாண்டாகோ தாய்த் திராவகத்தை உபயோகித்து வந்தால் புகையிலைப் பழக்கம் உடையவர்களுக்கு அதில் வெறுப்பு ஏற்படும். புகையிலைப் பழக்கத்தை நிறுத்த இது உபயோகமாகும்.

டயஸ்கோரியா (Dioscorea)

முக்கியமாக வயிற்று வலிக்கும் தவிர இன்னும் மற்ற இடங்களில் ஏற்படும் வலிகளுக்கும் அடிக்கடி சீரணக் கோளாறு உள்ளவர்களுக்கும் வயிற்றில் வாயு உபத்திரவம் உள்ளவர்களுக்கும் அதிகமாக டீ குடிப்பவர்களுக்கும் இது உபயோகமுள்ள ஔஷதமாகும். பித்தக்கற்களின் உபத்திரவம், ஞாபகமறதி.

தலை: இரு பொட்டுகளிலும் மந்தமான வலி; அமுக்குவதினால் சமனப்பட்டாலும் பிறகு அதிகமாகும். தலையில் பஸ் என்ற சப்தம்.

வயிறு: காலைகளில் வாய் உலர்ந்தும் கசப்பாகவும் நாக்கில் மாசு படிந்தும் இருத்தல். தாகம் இருப்பதில்லை.

நாற்றமுள்ள அதிகக் காற்றுடன் கூடிய ஏப்பம். அன்னப் பையில் நரம்பு சம்பந்தமான வலி. வாயில் அதிக பித்தநீர் உற்பத்தி. மார்பெலும்பில் வலி ஆரம்பித்து கைகளுக்குச் செல்லுதல். விக்கல், வயிற்றின் வலி நிமிர்ந்து நடப்பதினால் சமனம்.

அடிவயிறு: வயிற்று வலி திடீரென்று கை கால்கள் முதலிய அவயவங்களுக்குப் பாயுதல். அதிக அபான வாயு பரிவதுடன் வயிற்றில் இரைச்சல். வயிற்றில் பிசைவது போலவும் வெட்டுவது போலவும் வலி. வயிற்று வலி, முதுகு, மார்பு, கைகள் முதலிய இடங்களுக்குத் தாவுதல். முன்புறமாக வளைவதினாலும் படுத்திருந்தாலும் அதிகமாகும். கல்லீரலில் வலி ஆரம்பித்து வலது மார்புக்குப் பாய்தல். குண்டிக்காய்களிலிருந்து கால்களுக்குப் பாயும் வலி. மலம் கழிக்க அவசரமான தூண்டுதல்.

இருதயம்: கஷ்ட சுவாசம், இருதயம் பலவீனமாகச் செல்லுதல், இவைகளுடன் மார்பினூடே வலியும் இறுக்கும் உணர்ச்சியும்.

அபானம்: மூலம், ஒரு கொத்து திராக்ஷைப் பழம் போல் மலம் வெளியான பிறகு வெளித்தள்ளுதல். வயிற்றுப் போக்கு. மஞ்சள் நிறமாகவும் அதிகப் படபடப்புடனும் சூடாகவும் இருத்தல், காலைகளில் அதிகம். வயிற்றுப் போக்குக்குப் பிறகு அதிக பலவீனம்.

ஆண்: குளிர்ச்சியாகவும் சிறுத்துமுள்ள ஆண் குறி. வலி விரைகளுக்குப் பாய்தல். விரைகளிலும் அப்பாகங்களிலும் நாற்றமுள்ள வியர்வை. தூக்கத்தில் இந்திரிய ஸ்கலிதம், அதனால் முழங்கால்களில் பலவீனம்.

பெண் : கருப்பையில் வலி, பல விடங்களுக்கும் பரவுதல்.

சுவாசாசயங்கள் : மார்பில் இறுக்க உணர்ச்சி, மூச்சு இழுக்கும்போது மார்பு விரியாமல் இருப்பதுபோன்ற உணர்ச்சி.

கை கால்கள் : இடுப்புவலி குனிந்தால் அதிகரிக்கும். தொடை நரம்புகளில் வலி, வலப்பக்கத்தில் அதிகம். மூட்டு களில் பிடிப்பு வலிகள். உடையும் நகங்கள்.

விசேஷம் : மாலைகளிலும் இரவுகளிலும் படுத்திருப் பதினாலும் காற்றில் உலாவுவதினாலும் அமுக்குவதினாலும் சமனம்.

முறிவு : சாமோமில்லா, காம்போரா

ஒப்பிடுக : காலோஸிந்திஸ், நக்ஸ்வாமிகா, சாமோ மில்லா, பிரயோனியா

டல்கமாரா (Dulcamara)

பகற்காலங்கள் உஷ்ணமாகவும் இரவுகள் குளிர்ச்சி யாகவும் உள்ள பருவங்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு இது நல்ல ஔஷதமாகும். தவிர ஈர நப்புள்ள இடங்களில் நடமாடியதாலும், மழையில் நனைந்திருந்ததினாலும் ஏற் படும் வயிற்றுப்போக்கு முதலிய கோளாறுகளுக்கும் இது உபயோகமுள்ளதே. இதற்கு சருமம், கோளங்கள், சீரண உறுப்புகள், பூந்தசைகள் முதலியவைகளிலும், மூட்டுகளி லும் குறிகள் உண்டு. ஈர நப்புள்ள இடங்களிலும், தண் ணீரில் நனைந்ததாலும் ஏற்படும் கீல்வாயு உபாதிகள், நடப் பதினால் சமனப்படும். சரீரத்தின் ஒரு பக்கத்தில் ஏற்படும்

வலிப்புகள், ஒவ்வொரு அவயவத்தில் ஏற்படும் வலிப்புகள், ஒவ்வொரு அவயவத்தில் ஏற்படும் பக்ஷ வாயு, வலிகள் முதலியவைகளுக்கும் இது நல்ல ஔஷதமே.

தலை: மனக்குழப்பம், பிடரியில் வலி. பிறருடன் பேசிக்கொண்டே இருந்தால் தலைவலி சமனப்படுதல். மண்டைத்தோலில் படைகள். தலையில் 'பஸ்' என்ற ஒலி.

நாசி: வரண்ட சலதோஷம். நாசி அடைத்துப் போய்விடுதல், அல்லது கெட்டியான மஞ்சள் நிறமுள்ள, இரத்தப்பொறுக்குகள் கலந்த நீர் வெளியாகுதல். குளிர் காற்று நாசியில் பட்டால் மூக்கடைப்பு, அதனால் மூக்கை உஷ்ணமாகவே வைத்துக்கொள்ள வேண்டிவருதல்.

கண்கள்: ஒவ்வொரு தடவை சளி பிடிக்கும்போதும் அது கண்களையும் பாதித்தல். கண்களிலிருந்து கெட்டியான மஞ்சள் நீர் வெளிப்படுதல். இமைகளில் இரணம்.

காதுகள்: வலி. நடுக்காதில் இரணம். காதுகளின் அடியிலுள்ள கோளங்கள் வீங்குதல்.

முகம்: தாடைகளில் வலி கண்களுக்கும், காதுகளுக்கும் நடுவில் தாவுதல். வலி வருவதற்கு முன்னால் அப்பாகங்கள் சில்லிடுவதும், அடிக்கடி பசி ஏற்படுவதும்.

வாய்: சோப்புப் போன்ற குழகுழப்புள்ள உமிழ்நீர், வரண்ட இருமல், தொண்டை வறட்சி, குளிர் காலங்களில் உதடுகளில் வெடிப்புகள். சிறிதளவு குளிர் காற்று முகத்தில் பட்டாலும் உடனே வலி ஏற்படுதல்.

வயிறு: குழகுழப்பான வெள்ளை நிறமுள்ள பதார்த்தம் வாயாலெடுத்தல். ஆகாரத்தில் வெறுப்பு. குளிர்ந்த

பானங்களை உட்கொள்ள அதிக அவா. நெஞ்செறிவு. ஆகாரம் உட்கொள்ள நினைத்தாலே வாயாலெடுக்க வருதல். வாயாலெடுத்தால் சரீரம் சில்லிடுதல்.

அடி வயிறு: குளிரினால் ஏற்படும் வயிற்று வலி. தொப்பூழைச் சுற்றிலும் வலி. தொடை இடுக்குகளில் இருக்கும் கோளங்களில் வீக்கம்.

மலம்: பச்சையாகவும், தண்ணீர் போன்றும், குழ குழப்பாகவும், இரத்தமும், சீழும் கலந்த மலம். இது கோடையில் திடீரென்று குளிர் ஏற்பட்டால், அல்லது சரும வியாதிகள் உள்ளே அமுக்கப்பட்டால் ஏற்படும்.

மூத்திரம்: சரீரத்தில் குளிர் ஏற்பட்டால் உடனே மூத்திரம் விடவேண்டி வருதல். அதிக வலியுடன் சொட்டு சொட்டாகப் போகும் மூத்திரம். சிறு நீரில் கெட்டியான குழகுழப்புள்ள வெண்மையான பதார்த்தம் அடியில் தங்குதல்.

பெண்: திடீரென்று ஏற்பட்ட குளிரினாலோ அல்லது அதிகமாக தண்ணீரில் நனைந்ததினாலோ, அல்லது ஈரகப்புள்ள இடங்களில் அதிகமாக இருந்ததினாலோ மாதவிடாய் அடக்கப்படுதல். மாதவிடாய்க்குப் பதிலாக சரீரத்தில் கொப்புளங்களோ படையோ ஏற்படுதல். அல்லது அதிகக் காம இச்சை ஏற்படுதல். வலியுடன் கூடிய மாதவிடாய். ஸ்தனங்கள் பெருத்தும், வலியுடனும் இருத்தல்.

சுவாசம்: குளிர் காலங்களிலும், மழைக் காலங்களிலும் தொண்டையில் குறுகுறுப்புடனும் தாராளமாக வெளியேறும் கபத்துடனும் கூடிய இருமல். இருமல் இழுப்புட

னும் தொண்டைக் கம்மலுடனும் இருத்தல். அதிகக் கபத்துடன் கூடிய கக்குவாய் இருமல். குளிர் நாட்களில் ஏற்படும் இருமல். மூச்சுத் திணரலுடன் காச நோய். களகளத்த சப்தத்துடன் இருமல், குளிர் காலங்களில் அதிகம். அதிக நேரம் இருமிக் கபத்தை வெளியே கொண்டு வருதல். சரீர உழைப்பிற்குப் பிறகு இருமல்.

முதுகு: கழுத்து விரைப்பாய் இருத்தல். இடுப்பில் வலி. ஈரத்தில் நடந்தாலும், தண்ணீரில் நனைந்தாலும் கழுத்திலும் தோள்பட்டையிலும் பிடிப்பு வலிகள்.

கை கால்கள்: பாரிசவாயு. கால்கள் பனிக்கட்டிபோல் சில்லென்றிருத்தல். கீல் வாயு வலிகளும், வயிற்றுப்போக்கும் மாறி மாறி வருதல். சரும வியாதிகள் அமுக்கப்பட்டதினால் ஏற்படும் கீல் வாதம்.

சருமம்: குளிர் காலத்திலும் மாரிக்காலத்திலும் வரும் சரும உபாதிகள். குளிரினால் கோளங்கள் வீங்குதல் கொப்புளங்கள், சினைப்புகள், படைகள், சிறிய சிரங்குகள். முகம், கைகள், மர்மஸ்தானங்கள் முதலியவைகளில் மழுங்கிய கொப்புளங்கள். சொரிந்தால் இரத்தம் பீறிடுதல்.

சுரம்: சரீரம் முழுவதும் எரிச்சலுடன் சூடு. மாலைகளில் சில்லிப்பு, இது முக்கியமாய் முதுகுப்பாகத்தில் மாத்திரம். பனிக்கட்டி போன்ற சில்லிப்பும் வலிகளும், உலர்ந்த உஷ்ணமும் எரிச்சலும், குளிர் இருக்கும்பொழுது தாக வறட்சை.

விசேஷம்: இரவுகளில், பொதுவாகக் குளிரினால், ஈரநப்புள்ள பருவங்களிலும், ஈரநப்புள்ள இடங்களில்

இருப்பதினாலும், மாரிக்காலங்களிலும் உபாதி அதிகம். நடந்துகொண்டிருப்பதினாலும், வெளி உஷ்ணத்தினாலும் சமனம்.

முறிவு: காம்போரா, குப்ரம்

உறவு: பாரிடா கார்ப்

பகை: பேல்லடோன்னா, லாச்சஸிஸ்

ஒப்பிடுக: ரஸ்டாக்ஸ், அக்டியா, சுல்கேரியா, பல்ஸடில்லா, பிரயோனியா, நேட்ரம் ஸல்ப்.

டாரண்டுலா குபன்ஸிஸ்
(Tarantula Cubensis)

டாரண்டுலா என்பது ஒருவித சிலந்திப்பூச்சி. இச் சிலந்தியின் விஷமே ஔஷதமாக உபயோகிக்கப்படுகிறது. இவ்வௌஷதம் மிகவும் கடுமையான அழர்ச்சியும் வலியும் உள்ள சிரங்குக் கட்டிகளுடன் வியாதி ஆரம்பத்திலேயே வியாதியஸ்தர் அதிக பலவீனமுற்றிருப்பார். மிகவும் கடுமையான சீழுள்ள வியாதிகளில் சீழ் இரத்த ஓட்டத்தில் கலந்து அதனால் ஏற்படும் சன்னிக்கு இது நல்ல ஔஷதம் ஆகும். இவ்வௌஷதத்தைப் பிரயோகிப்பதற்கு வியாதியஸ்தரின் வலிகள் மரணத்தை உண்டாக்குவதுபோன்று அவ்வளவு அதிகமாக இருக்கும். தவிர மரணகாலத்தில் ஏற்படும் "மரணவலி"களுக்கு இவ்வௌஷதம் கொடுக்கப்படின், வியாதியஸ்தருக்கு மரணம் ஏற்படுவது நிச்சயமெனினும் அவ் வலிக்குச் சற்று சமனம் ஏற்படும். அடிக்கடி குளிர் ஏற்படுதல். ப்ளேக் வியாதிக்கு இது முக்கியமான ஔஷதம் ஆகும். இக்கொடிய நோய் பரவிவரும் காலத்தில் அதைத் தடுப்பதற்கும் சொஸ்தம் செய்வதற்கும் இதைவிட நல்ல ஔஷதம் கிடையாது.

தலை: உஷ்ணத்துடனும் உஷ்ணவியர்வையுடனும் இருப்பதுடன் மயக்கம். உச்சந்தலையில் மந்தமானவலி. இடது கண்ணிலிருந்து நெற்றிக்குப் பாயும்வலி.

வயிறு: அன்னப்பையில் வலி, கெட்டியாக இருத்தல். காலை வேளைகளில் தவிர மற்ற வேளைகளில் பசி இல்லாமை.

கை கால்கள்: கைகள் நடுங்குதல். இரத்தம் சுரந்திருத்தல்.

மூத்திரம்: மூத்திரப் பிடிப்பு. இருமும்பொழுது மூத்திரம் வெளியேறுதல்.

சருமம்: சிவந்தபருக்கள். சரீரம் முழுவதும் உப்பி இருத்தல். இராஜபிளவைகள், அதிக எரிச்சலும் குத்து வலியும். சிவந்த வர்ணம். அழர்ச்சியும் வலியும் அதிகமாக உள்ள சிழ்க்கட்டிகள். இரணங்கள் அழுகி விடுதல். ஸ்தனங்களில் கரடுதட்டிய கட்டிகள். கிழவயதில் ஏற்படும் இரணங்கள்.

தூக்கம்: மயக்கம். வறண்ட இருமலினால் தூக்கம் கெடுதல். அலட்டலுடன் தூக்கம்.

விசேஷம்: இரவுகளில் அதிகம். சுருட்டுக் குடிப்பதால் சௌகரியம்.

ஒப்பிடுக: ஆர்ஸனிகம், பைரோஜன், க்ரோடாலஸ் எக்கினீஷியா, பேல்லடோன்னு, அபிஸ்.

டாரண்டுலா ஹிஸ்பானியா
(Tarantula Hispania)

நரம்பு சம்பந்தமுள்ள பலவித கோளாறுகள், இரத்த சோகையுடன் சங்காதோஷம், வலிப்புகள், வலியுடன் மாதவிடாய், முள்ளந்தண்டுக் கோளாறுகள், மூத்திரப்பையில் கடுப்பு, இறுக்குவதுபோன்ற உணர்ச்சி, பூச்சிகள் ஊறுவதுபோன்றிருத்தல், அமைதியற்றிருத்தல். நடப்பதினால் அசௌகரியம் ஏற்பட்டாலும் எப்பொழுதும் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கப் பிரியம். சங்காதோஷத்தினால் ஏற்படும் காக்கை வலிப்பு. அதிகமான சிற்றின்பக் கிளர்ச்சி.

மனம்: திடீரென்று மாறும் குணம். பிறருக்குத் தீங்குசெய்யும் குணம். நல்லொழுக்கத்தைக் கைவிடுதல். எப்பொழுதும் ஏதாவது செய்துகொண்டோ அல்லது நடந்துகொண்டோ இருக்கவேண்டும். சங்கீதம் கேட்க சகிக்காமை. பிறர் தன்னுடன் இருப்பது சகிக்காமை. பிறர்செய்த நன்றியை மறத்தல். ஒன்றிலும் திருப்தி இல்லாமை. தன்மனதிற்குத் தோன்றியபடி யெல்லாம் செய்தல்.

தலை: மூளையில் ஆயிரம் ஊசிகளைக் கொண்டு குத்துவதுபோன்ற வலி. கிறுகிறுப்பு. தலையை எப்பொழுதும் தேய்த்துக்கொண்டிருக்கப் பிரியம்.

ஆண்: அதிகச் சிற்றின்பக் கிளர்ச்சி. பைத்தியமோ என்று நினைக்கும்படி அவ்வளவு சிற்றின்ப விஷயங்களைப் பேசுதல். இந்திரியஸ்கலிதம்.

பெண் : யோனி காய்ந்தும் உஷ்ணமாயும் அரிப்புடனும் இருத்தல். அதிக மாதவிடாய். யோனியில் அரிப்பு. அதிகச் சிற்றின்ப இச்சை. சினைப்பையில் வலி. வலியுடன் மாதவிடாய்.

இருதயம் : படபடப்பு. இருதயத்தை முறுக்குவது போலவும் திருப்புவது போலவும் உணர்ச்சி.

கை கால்கள் : கால்களில் பலவீனம், தானகவே ஆடுதல், துடிப்பு, இழுப்பு. எப்பொழுதும் கால்களை அசைத்துக் கொண்டே இருக்க வேண்டி வருதல். பல விதமான அசைவுகளும் இழுப்புகளும்.

விசேஷம் : அசைவினுலும், சப்தத்தாலும், தொடுவதாலும் உபாதி அதிகம். திறந்தவெளியிலும், வியாதியுற்ற பாகங்களைத் தேய்ப்பதாலும் சௌகரியம்.

ஒப்பிடுக : அகேரிகஸ், ஆர்ஸனிகம், குப்ரம், மேக்னீஷியா பாஸ்.

முறிவு : லாச்சஸிஸ்

டியூபர்குலீனம் (Tuberculinum)

டியூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகயில் ஏற்படும் வியாதியின் சத்திலிருந்து வீரியப்படுத்தப்பட்டு இவ் வௌஷதம் தயார் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே 200-க்கு மேற்பட்ட உயர்ந்த வீரியங்களிலும் பல நாட்களுக்கு ஒருமுறையுமே கொடுக்கப்பட வேண்டும். முக்கியமாக நீடித்த குண்டிக்காய் கோளாறுகளுக்கு உபயோகிக்கலாம். ஆனல் சருமமும் குடல்களும் சரிவர வேலைசெய்யாத சரீரங்களில் இது கெடுதலை உண்டு

பண்ணும். டியூபர்குலாஸில் என்னும் க்ஷயரோகத்தில் அவஸ்தைப்படுபவர்களுக்கும், வமிச பரம்பரையாக க்ஷயரோகம் உள்ளவர்களுக்கும் ஏற்படும் பற்பல கோளாறு களுக்கு இது உபயோகப்படும். இவர்கள் குறுகிய மார்பு உடையவர்களாகவும், ஒவ்வொரு சீதோஷ்ண மாறுதலும் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாதவர்களாகவும், அதிக பல வீனமுள்ளவர்களாகவும் அதிசீக்கிரத்தில் களைப்பு அடை பவர்களாகவும் இருப்பார்கள். இவர்களால் அதிக உழைப் புள்ள வேலைகள் ஒன்றும்செய்யமுடியாது. ஒரு இடம் விட்டு ஒரு இடம் மாறிக்கொண்டே இருப்பார்கள். அவர் களுடைய குறிகளும் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். க்ஷயரோகம் ஏற்படுவதற்கு முன் தோன்றும் குறிகள், களைப்பு, நடுக்கல்கள். பயங்கொள்ளித்தனம், பலவீனம், காக்கைவலிப்பு, எல்லா உபாதிகளும் முறைவைத்து வருதல்.

மனம்: சிடுமூஞ்சித்தனம், மூர்க்க குணம், இது முக்கியமாக தூங்கிஎழுந்தவுடன் நாய்களிடத்தும் மற்றப் பிராணிகளிடத்தும் பயம். அடிக்கடி கோபமூண்டு கத்து தல். நம்பிக்கை இழத்தல். சுரத்தில் இடைவிடாமல் பேசிக்கொண்டே இருத்தல். அடிக்கடி பிரயாணம்செய்யப் பிரியம்.

தலை: தலையைச்சுற்றிலும் இரும்புப்பட்டை இருப் பது போன்றவலி. மேனிஞ்சிடிஸ் என்னும் மூளை அழற்சிச் சுரம். இரவுகளில் பலவிதத் தோற்றங்கள் தோன்றுதல். அதனால் பயந்து எழுந்திருத்தல். நீடித்த அடிக்கடிவரும் தலைவலிகள். மூக்கில் அடிக்கடி சிறிய கொப்புளங்களுடன் சிரங்குகள் வந்துகொண்டே இருத்தல். நரம்புத்தலைவலி. வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது பதினைந்து நாள்

களுக்கு ஒருமுறையோ தலைவலி. இது மழைக்காலங்களில் அதிகம். மனவெழுச்சியினலும், உழைப்பினலும், சிறிது அசீரணம் ஏற்பட்டாலும் தலைவலி.

காதுகள்: இடைவிடாத நாற்றமுள்ள சீழ் வெளி வருதல். காதின் சவ்வு கிழிந்துவிடுதல்.

முகம்: குளிரிலும், சுரத்திலும் சிவந்திருத்தல்.

வயிறு: ஆகாரமோ, மாமிசமோ உட்கொள்ள வெறுப்பு. வயிற்றில் ஒன்றுமே இல்லாதது போல பசி உணர்ச்சி. குளிர்ந்த பால் உட்கொள்ளப் பிரியம்.

அடி வயிறு: அரையிடுக்கின் கோளங்கள் பெருத்தல். வயிறு பெருத்தல். காலைகளில் திடீரென்று வயிற்றுப் போக்கு ஏற்படுதல். மலம் கரும் பழுப்பு நிறமாகவும், நாற்றமுடனும் இருக்கும்.

மலம்: பெரியதாகவும் கெட்டியாகவும் இருத்தல். ஒரு நாள் மலபந்தமும், மறுநாள் வயிற்றுப் போக்கும் மாறி மாறி வருதல். அபானத்தில் அறிப்பு. காலைகளில் படுக்கையை விட்டு எழுப்பி ஓடவைக்கும் வயிற்றுப் போக்கு.

ஆண்: ஆண்குறி தளர்ந்திருத்தல்.

பேண்: மாதவிடாய் அடிக்கடி, அதிகம், நீண்ட நாள் நீடித்தல். எவ்வளவுக் கெவ்வளவு போக்கு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு வலியும் அதிகமாதல். மாத விடாய் காலத்தில் யோனி வெளித்தள்ளுதல்.

சுவாசம்: சூடான அறைகளில் சுவாசம் தடைப் படுதல். தூக்கத்தில் கடுமையான வறண்ட இருமல். குளிர்

ஏற்படுவதற்கு முன் வறண்ட அலைக்கழிக்கும் இருமல். கெட்டியான மஞ்சள் அல்லது மஞ்சள் கலந்த பச்சையான கோழை அதிக சிரமமின்றி வெளியேறுதல். மூச்சுத் திணறுதல். குளிர்ந்த காற்றுக்கு அவா. ஆகையால் சன்னல்களையும் கதவுகளையும் திறந்து வைத்தல்.

சுவாசாசயங்கள்: இடதுபக்கத்து சுவாசாசயத்தின் முனையில் க்ஷயம் ஆரம்பித்தல்.

இருதயம்: மாலைகளில் நாடி துரிதமாகச் செல்லுதல். இரவு ஆகாரத்திற்குப்பின் மார்பில் படபடப்பு.

கழுத்து, முதுகு: கழுத்திலும், முள்ளந்தண்டிலும் விறைத்த உணர்ச்சி. தோள்பட்டைகளுக்கு நடுவிலும் நடுமுதுகிலும் குளிர்ச்சியான உணர்ச்சி.

சருமம்: இரவுகளில் அதிகமாக அறிக்கும் படைகள். நல்ல சிவப்பு நிறம். பூச்சிகள் ஊறுவதுபோன்ற உணர்ச்சி.

தூக்கம்: தூங்க ஆரம்பித்தவுடன் தசைகள் துடித்தல். தூக்கத்தில் அலறுதல், பற்களைக் கடித்தல், பேசுதல்.

சுரம்: விடாச் சுரங்களில் திடீரென்று சுரம் இரங்கி, சரீரம் பூராவும் வியர்வை ஏற்பட்டு சில்லிட்டு இருக்கும் பொழுது, இரண்டுமணி நேரத்திற்கு ஒருமுறை கொடுக்கலாம். அடிக்கடி திரும்பத் திரும்ப வந்துகொண்டிருக்கும் முறைச்சுரம். குளிர் மாலை 5 மணி முதல் 7 மணி வரையில், இரவு 11 மணிக்கு. குளிருக்கு முன்பும், குளிரின் பொழுதும் இருமல். சுரம் ஏற்பட்டவுடன் வாயாலெடுப்பு, அதிகம் பேசிக்கொண்டே இருத்தல். குளிரின்பொழுதும் சுரத்தின்பொழுதும் அதிக தாகம்.

தசைகள்: மூக்கில் சதையடைப்பு. தொண்டையில் இருக்கும் கோளங்கள் பெருத்தல். அடிக்கடி வந்து கொண்டிருந்த தலைவலி திடீரென்று நின்று, அதன் பின்னர் சரீரம் இளைக்க ஆரம்பித்தல்.

நரம்புகள்: வலியும், அடித்துப்போட்டது போன்ற உணர்ச்சியும், கண் விழிகளிலும் எலும்புகளிலும் வலி. மாலைகளில் பலவீனம். அடிக்கடி மயக்கம். சிறிது நடந்த பிறகு பலவீனம்.

கை கால்கள்: கை, கால்களிலும் மூட்டுகளிலும் இடம்விட்டு இடம் மாறும் வலிகள். பிடிப்புகள், அசைக்க முடியாமை. வலிகள் உஷ்ணத்தினால் சமனம், அசைவினால் அதிகம். பிடிப்பு வலிகள்.

விசேஷம்: அசைவதினாலும், சங்கீதத்தினாலும், குளிர் அல்லது மாரிக்காலத்திலும், நிற்பதினாலும், ஈரமுள்ள இடங்களில் இருப்பதினாலும், அதிகாலையிலும் உபாதி அதிகம். திறந்த வெளிகளில் சமனம்.

டிரில்லியம் (Trillium)

சரீரத்தின் எந்த பாகத்திலிருந்தும் ஏற்படும் இரத்தப் பெருக்கு. நல்ல சிவப்புநிறமுள்ள இரத்தம்.

நாசி: ஓயாமல் இரத்தம் பெருகிக்கொண்டே இருத்தல்.

வாய்: பல் எடுக்கப்பட்ட பிறகு ஈறுகளிலிருந்து இரத்தம் பெருகுதல்.

வயிறு: இரத்தம் வாயாலெடுக்கப்படுதல். வயிற்றில் உஷ்ணமும் எரிச்சலும்.

மலம் : இரத்தத்துடன் கலந்த வயிற்றுக்கடுப்பு. இரத்தம் கலந்த தண்ணீர்போன்ற மலத்துடன் கூடிய வலியில்லாத வயிற்றுப்போக்கு.

பெண் : அசைவினால் அதிகமாகும் இரத்தப்பெருக்கு. இடுப்பும் முதுகும் துண்டு துண்டாக விழுந்துவிடுவது போன்ற வலி. இது இறுக்கிக்கட்டுவதால் சமனம். மாத விடாய் தானாக நிற்குங்காலத்தில் ஏற்படும் அதிகமான மாத விடாய் போக்கு. போக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை ஆரம்பிப்பதும், ஒருமுறை ஆரம்பித்து ஒரு வாரத்திற்கு மேல் இருப்பதும். அதிக பலவீனத்தை உண்டாக்கும் வெள்ளைப்பாடு. பிரசவத்திற்குப்பின் அதிகமான நீர் வெளிப்படுதல்.

சுவாசம் : இரத்தம் தோய்ந்த கபத்துடன் கூடிய இருமல். இருமினால் இரத்தம் வெளிவருதல்.

டிரோஸிரா (Drosera)

சுவாச சம்பந்தமான உறுப்புகளின் கோளாறுகளுக்கு ஒரு முக்கிய ஔஷதம். கக்குவாய் இருமலுக்கு ஏற்பட்ட ஔஷதங்களில் முதன்மை ஸ்தானம் பெற்றது என்று டாக்டர் ஹானிமென் அவர்களாலேயே ஏற்பட்டிருக்கின்றது. சிற்சில க்ஷயரோகத்திலும் உபயோகமுள்ளதே. இருமுவதால் உட்கொண்ட ஆகாரம் வாயாலெடுக்கப்படுதல். அதிகமான கபம் வெளியேறுதல். இடுப்பு மூட்டுகளில் வலி. க்ஷய சம்பந்தமான கோளவீக்கங்கள்.

தலை : திறந்த வெளிகளில் நடக்கும்பொழுது கிறு கிறுப்பு, இடது பக்கமாக விழுந்துவிடுவதுபோலிருத்தல். முகத்தின் இடது பாரிசத்தில் குளிர்ச்சியான உணர்ச்சியும், வலது பாரிசத்தில் உஷ்ண உணர்ச்சியும் கொட்டும் வலியும்.

வயிறு: ஒக்காளம், புளிப்புள்ள ஆகாரங்களில் வெறுப்பு. அவைகளை உட்கொண்டால் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாமை.

சுவாச உறுப்புகள்: இழுப்புடன் கூடிய, வறட்டு இருமல். ஒரு முறை இரும ஆரம்பித்தால் சேர்ந்தாற்போல் பல நிமிஷங்கள் இருமுதல். அடிக்கடி இம்மாதிரியாக இருமுதல். கக்குவாய் இருமல், ஒரு பலகையை ரம்பத்தால் அறுக்கும்பொழுது ஏற்படும் சப்தத்தைப்போல் சப்தம் உண்டாகும் இருமல். நடுநிசிக்குப்பிறகு இருமல் அதிகம் ஆதல். தொண்டை கம்மி அடியிலிருந்து சிரமப்பட்டுப் பேசுதல். தொண்டையில் சில கூழாங்கற்களோ அல்லது இறகோ இருப்பதுபோன்ற உணர்ச்சி. குழந்தைகளிடையே வறண்ட அலைக்கழிக்கும் இருமல்—இது பகலில் இருப்பதில்லை ஆனால் தலையைக் கீழே வைத்துப்படுக்க ஆரம்பித்தவுடன் இருமலும் ஆரம்பித்தல். தொண்டையை அதிகமாக உபயோகிக்கும் பாடகர்கள், பிரசங்கிகள், வக்கீல்கள், பேசுபவர்கள் முதலியவர்களுக்கு ஏற்படும் தொண்டை கரகரப்பு. அதனால் தொண்டை கம்முதல்.

கை கால்கள்: கால்களின் மூட்டுகளில் பிடிப்பு, கை கால்கள் வலி.

சுரம்: சரீரத்தில் உள்ளூரக் குளிர் உணர்ச்சி. முகம் உஷ்ணமாயும், கைகள் சில்லென்றும் இருப்பதுடன் நடுக்கலும் இருத்தல். எவ்வளவு போர்த்திக்கொண்டாலும் சில்லென்றிருத்தல்.

விசேஷம்: நடுநிசிக்குப் பிறகும், படுப்பதினாலும், தண்ணீர் குடிப்பதினாலும், பேசுவதாலும், சிரிப்பதாலும் உபாதிகள் அதிகம்.

முறிவு: காம்போரா.

ஒப்பிடுக: செலிடோனியம், கோராலியம், குப்ரம், அர்ஜண்டம்.

டிஜிடாலிஸ் (Digitalis)

எந்தெந்த வியாதிகளில் நாடித்துடிப்பு மிகவும் குறைந்து இருக்கிறதோ அந்த வியாதிகளுக் கெல்லாம் டிஜிடாலிஸ் வேண்டிவரும். சுக சரீரத்தில் நிமிஷம் ஒன்றுக்கு சாதாரண நாடித்துடிப்பு சுமார் 72 ஆகும். டிஜிடாலிஸ் கொடுபடவேண்டிய கேஸ்களுக்கு இது சிற் சில சமயங்களில் 50க்கும் குறைவாகவே இருக்கும். தன் இருதயம் நின்று விடுமென்று வியாதியஸ்தர் நினைப்பார். சோகைப்பாண்டுவில் மூத்திரம் கொஞ்சம்கூட உற்பத்தி யாகாது. இதற்கு டிஜிடாலிஸ் மிகவும் குறைந்தவீரியத் தில் (2x, 3x) கொடுபடவேண்டும். சுவாசம் சரிவர இல்லாமை, கஷ்டத்துடன் இருத்தல், மெதுவாக இருத்தல், அடிக்கடி பெருமூச்சு வாங்குதல். இருதய உபாதிகளில், இருதயம் பெருத்தல், மெதுவாகவும் தாறுமாறுகவும் செல்லும் நாடி, அடிக்கடி பெருமூச்சு விடவேண்டிவருதல், சரீரம் பூரித்தல். வயிற்றில் ஒன்றுமே இல்லாததுபோன்ற உணர்ச்சி. கை, கால்கள் சில்லிடுதல். மஞ்சட்காமாலே. கல்லீரல் பெருத்தல்.

மனம்: அதிகக் கவலே. பிற்காலத்தைப் பற்றி பயம். இருதய உபாதியில் மாலே 6 மணிக்கு உபாதிகள் அதிகம்.

தலே: படுத்திருந்தோ, உட்கார்ந்திருந்தோ எழுந் திருக்கும்பொழுது கிறுகிறுப்பு. தலேயைத் தலேயணேயில்

வைத்து அழுக்கிக்கொள்வதும், தலைமயிரைப் பிய்த்துக் கொள்வதும் வீறிட்டு அலறுதலும். இலகுவாக வாயா லெடுத்தல். மூத்திரம் குறைதல். முகம் நீலம் பூரித்தல்.

கண்கள் : கருமணிகள் அகன்று உணர்ச்சியற்றிருத் தல். பார்க்கும் வஸ்துக்கள் பச்சையாகவும், மஞ்சளாக வும் தோன்றுதல்.

காதுகள் : கொதிக்கும் தண்ணீரிலிருந்து உண்டா கும் சப்தம்போல் மளமளவென்ற ஓசை.

முகம் : நீலம் பூரித்தல், சிவத்தல், அல்லது வெளுத்தல், பிணக்களை.

வயிறு : பசியில்லாமை. நாக்கு சுத்தமாயிருத்தல். வயிறு காலியாயிருத்தல். ஆனால் அதிக தாகம். வயிற்றி லிருந்து தொண்டைவரையிலுள்ள அன்னக் குழாயில் எரிச்சல். வயிற்றில் ஒன்றுமில்லாத காலி உணர்ச்சி, அதனால் இறந்துவிடுவது போலிருத்தல். அன்னப்பையின் அடிப்பாகம் வலியுடனும் வீங்கியும் இருத்தல்.

அடிவயிறு : மஞ்சட்காமாலை. சிரமமின்றி வாயா லெடுத்தல், மிகவும் மெதுவாகச் செல்லும் நாடி. கல்லீரல் கெட்டியாகவும் வலியுடனும் இருத்தல். வயிற்றில் வெட்டும் வலிகள்.

மலம் : சாம்பல் வர்ணம், பச்சைபோலவும் சாக் கட்டி போலவும் உள்ள மலம். மஞ்சட்காமாலையில் அதிகமான வயிற்றுப்போக்கு. மிகவும் மெதுவாகச் செல்லும் நாடியுடன் வெண்மையான மலம்.

மூத்திரம் : குறைவாகவும் கெட்டியாகவும் கருப்பாகவும் உள்ள சிறுநீர். அடிக்கடி நீர்விடத்தூண்டுதல். சில துளிகள் வெளிவந்தவுடன் கடுப்பினுல் வியாதியஸ்தர் அங்கும் இங்கும் அலேதல். செங்கல் தூள்போன்ற மாசு அடியில் படிதல். சிறுநீர்ப்பையின் கழுத்தில் ஒரு வைக்கோல் துரும்பைவைத்து அங்குமிங்கும் அசைப்பது போன்ற உணர்ச்சியுடன் துடித்தல்.

ஆண் : பிரதி இரவுகளிலும் இந்திரியஸ்கலிதம், விரை வீக்கம், சுக்கிலகோளங்கள் பெருத்தல், அதனுல் மூத்திரம் குறைவாகப் போதல், மயக்கம், படபடப்பு.

சுவாசம் : சுவாசம் தாறுமாருக இருத்தல். கஷ்டத்துடனும் மெதுவாகவும், காசவியாதியஸ்தரைப் போன்றிருத்தல். இவைகாலேயிலும் கொஞ்சம் நடந்தபிறகும் அதிகம். வறட்சையான இழுப்புடன் கூடிய இருமல். இது காலேகளில் சளியில்லாமலும், மாலேகளில் கொஞ்சமான மஞ்சள் நிறமுள்ள பாகுபோன்ற கோழையுடனும் இருக்கும். நடு நிசியிலும், காலேயிலும் சரீரம் சற்று உஷ்ணமாஞலும் இருமல். தண்ணீர் குடிப்பதிஞலும் சாப்பிட்டபிறகும் நடப்பதாலும் பேசுவதாலும் இருமல். அடிக்கடி ஆழ்ந்து சுவாசித்தல். மல்லார்ந்து படுத்திருக்கப் பிரியம். வெளியேறும் கோழை கெட்டியாகவும், இரத்தம் தோய்ந்தும், தித்திப்பு ருசியுடனும் இருத்தல். மார்பில் பலவீனம், பேசமுடியாமை. ந்யுமோனியா எனப்படும் காபவாத சுரத்தில் நாடித்துடிப்பு 50-க்குக் குறைந்திருந்தால் கொடுக்கப்படலாம்.

இருதயமும், நாடியும் : பலமாக அடிக்கும் இருதயத் துடிப்பு, ஆஞல் மெதுவாகச்செல்லும். மார்பில் இருதய

பாகத்தில் குத்துவலி. இருதயத்தை மூடியிருக்கும் தசைப் பையில் நீர் சுரத்தல். இருதய மூடிகளின் கோளாறுகள். இருதயத்துடிப்பு, பலவீனமாகவும், விட்டுவிட்டும், செல்லுதல். சற்று அசைந்தாலும் வேகமாகச் செல்லுதல் 3, 5, அல்லது 7 துடிப்புக்கு ஒரு தடவை துடிப்பு நின்று விடுதல். தான் அசைந்தால் உடனே இருதயம் நின்று விடுமென்ற பயம். ஸ்டெதாஸ்கோப்பினுல் கவனித்தால் இருதயத்தின் முதல் துடிப்பு சப்தத்துடன் ஊதுவது போன்ற சப்தம் உண்டாதல்.

கை கால்கள் : பாதங்களில் நீர்ச் சுரப்பு. கைகளும் கால்களும் சில்லிட்டிருத்தல். விரல்கள் மறத்துப்போதல். சரீரம் பூராவும் நீர்ச் சுரப்பு.

தூக்கம் : தூங்க ஆரம்பிக்கும்பொழுது சுவாசம் நின்று விடுதல். ஆகையால் உடனே திடீரென்று விழித்து எழுந்திருத்தல். ஆகாயத்திலிருந்து பூமியில் விழுவது போன்ற உணர்ச்சியுடன் எழுந்திருந்து திணறுதல்.

நரம்புகளும் தசைகளும் : பலவீனம். மூட்டுகளில் குத்துவலி.

சுரம் : சரீரம், கைகால்கள் முதலியவை சில்லென்றிருத்தல். குளிர்ந்த வியர்வை.

விசேஷம் : ஆகாரத்திற்குப் பின்னும், நிமிர்ந்து உட்காருவதாலும் உபாதி அதிகம். வெளிக் காற்றிலும், வயிறு காலியாக இருப்பதாலும் சமனம்.

முறிவு : நக்ஸ்வாமிகா, ஓபியம்.

டூக்ரியம் (Teucrium)

நாசியிலும் அபானத்திலும் அரிப்பும், அவ்விடங்களில் பூச்சிகள் ஊறுவதுபோன்ற உணர்ச்சியும். ஆகவே அவ்விடங்களை எப்பொழுதும் நோண்டிக்கொண்டே இருத்தல். சோம்பேறித்தனம். மனதினுலும் சரீரத்தினுலும் ஒரு வேலையும் செய்ய இஷ்டப்படாமை.

மனம்: எப்பொழுதும் ஏதாவது பாடிக்கொண்டே இருத்தல்.

நாசி: சதை அடைப்பு, நீடித்த சளி, அடிக்கடி பெரிய கட்டிகள் வெளிவருதல். நாற்றமுள்ள சுவாசம். மூக்கினுள் ஏதோ ஊறுவதுபோன்ற உணர்ச்சி. கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் நீர் வடிவதும் தும்மலும், வலது மூக்கு அடைப்பு. எவ்வளவு சிந்தினுலும் சரிப்படுவதில்லை. வாசனை அறியும் சக்தியை இழத்தல்.

மலம்: குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்கு. இத்துடன் குழந்தை இளைத்தல். அதிகமாக அழுதல்.

மலப்பை: மாலைகளிலும், இரவிலும் படுக்கையிலும் அபானத்திலும் இடைவிடாத அரிப்பும் உபத்திரவமும். நாக்குப் பூச்சிகள், இரவுகளில் அமைதியின்மை. மலம் வெளியேறிய பிறகு மலப்பையில் ஊறுவதுபோன்ற உணர்ச்சி.

தூக்கம்: அமைதியற்ற தூக்கம். திடீரென்று மார்பு அடைத்து விழித்துக்கொள்ளுதல். குடலில் நாக்குப் பூச்சிகளின் உபத்திரவத்தினுல் தூக்கம் தடைப்படுதல்.

இருமல்: வறட்டு இருமல். தொண்டையில் ஏதோ இருப்பதுபோன்ற உணர்ச்சி.

கை கால்கள்: நகச் சுற்றுகள். கால்கட்டை விரல்களின் நகங்கள் சரிவர வளராமை, இரணங்கள், எலும்புகளில் வலி, நடப்பதால் சமனம். திடீரென்று வலது மணிக்கட்டுக்குச் சற்று மேலே உள்ள தசைகளில் வெட்டுவது போன்ற வலி.

டெல்லூரியம் (Tellurium)

மனம்: அதிக ஞாபக மறதி, அதனால் தான் செய்ய வேண்டிய காரியங்களைச் சரிவர செய்வதில்லை.

காது: காதுகளுக்குப் பின்புறத்தில் படைகள். நடுக் காதில் இரணம், அதிலிருந்து தண்ணீர்போன்ற காரமான நாற்றமுள்ள நீர் வெளிவருதல். அரிப்பு, வீக்கம், துடிப்பு, காது கேளாமை. காதின் சவ்வு கிழிந்துவிடுதல். திடீரென்று ஏதோ காதை உடைத்துவிட்டது போன்ற உணர்ச்சி.

கண்: இமைகள் தடித்தல். நீர்வடிதல்.

நாசி: அதிகமான சலதோஷம். தொண்டை கம்முதல். உப்புக்கரிப்புள்ள கோழை அடிக்கடி உமிழப்படுதல்.

அபானம்: மலம் வெளியேறிய பிறகு அரிப்பு.

முதுகு: நடு முதுகிலுள்ள முள்ளெலும்புகளில் வலி. தொடுவதால் வலி அதிகமாகுதல். வலதுபக்கத் தொடை நரம்பில் வலி. முழங்கால் மடங்குமிடத்திலுள்ள நரம்புகள் இழுத்துக்கொள்ளுதல்.

சருமம்: கொப்புளங்களும், படைகளும், சரீரம் முழுவதும் படைகள். இவைகள் இடுப்புக்குக் கீழே அதிகம். இரவுகளில் அதிக அரிப்பு. நாற்றமுள்ள நீர் வெளியாகுதல். பரியாரிப் படைகள்.

விசேஷம்: சும்மா இருப்பதாலும், இரவுகளிலும் குளிர் காலங்களிலும், உராய்வதினாலும், இருமுவதினாலும், சிரிப்பதினாலும், வலியுள்ள பாகத்தைக் கீழே வைத்துப் படுப்பதாலும், தொடுவதாலும் உபாதி அதிகம்.

தராக்ஸகம் (Taraxacum)

அஜீரணத்தினால் உண்டாகும் பித்தத் தலைவலிகளுக்கும், பித்த உபரியினால் நாக்கில் மாசு படிதல், மஞ்சள் நிறமுள்ள சருமம் முதலியவைகளுக்கும் நல்ல ஔஷதம். நீர்ப்பையின் புற்று (Cancer) வயிற்று உப்பிசம். சங்காதோஷத்தில் வயிறு பந்துபோல் உப்பிக்கொள்ளுதல்.

தலை: உச்சந்தலையில் அதிக உஷ்ண உணர்ச்சி.

வாய்: நாக்கில் மாசுபடிதல். வெண்மையான மெல்லிய ஏடைபோன்ற மாசு. இரணம். மாசு பிய்ந்து கீழே சிவந்த இரணங்களை உண்டாக்குதல். பசி மந்தம். கசப்பு ருசியும் ஏப்பமும். அதிக உமிழ்நீர் உற்பத்தி.

அடிவயிறு: கல்லீரல் பெருத்து கறடுதட்டி இருத்தல் இடது பக்கத்தில் பிடிப்புவலி. குடலில் நீர்க்கொப்புளங்கள் உடைவதுபோன்ற உணர்ச்சி. வயிற்று உப்பிசம். மலம் சிரமத்துடன் வெளியேறுதல்.

கை கால்கள் : அமைதியின்மை. முழங்கால்களில் நரம்பு சம்பந்தமான வலிகள், அழுக்குவதினல் சமனம். கைகால்களைத் தொடுவதால் வலி.

சுரம் : ஆகாரம் உட்கொண்டபிறகு குளிர் நடுக்குதல். விரல்களின் நுனி சில்லென்றிருத்தல். முகத்தில் அதிக உஷ்ணம், ஆனல் தாகவறட்சை இல்லாமை. தூங்க ஆரம்பித்தவுடன் சரீரம் வியர்த்தல்.

சருமம் : இரவுகளில் அதிக வியர்வை உற்பத்தி.

விசேஷம் : உட்கார்ந்திருப்பதாலும், படுத்திருப்பதாலும் அமைதியாக இருப்பதாலும் உபாதிகள் அதிகம். தொட்டு அழுக்குவதால் வலிகள் சமனம்.

உபயோகம் : தாய்த் திராவகமும், அல்லது 3-க்குக் குறைந்த வீரியங்களிலுமே உபயோகப்படும்.

தலப்ஸீ புர்ஸா பெஸ்டோரிஸ்
(Thalapsi Bursa Pestoris)

நீடித்தும் விடாமலும் இருந்துகொண்டே இருக்கும் இரத்தப் பெருக்கு. இரத்தம் கருப்பாகவும் கட்டிகட்டியும் இருக்கும். மூக்கிலிருந்தும், நீர் துவாரத்திலிருந்தும், யோனியிலிருந்தும் ஏற்படும் இரத்தப் பெருக்கு. மாதவிடாய் நீடித்தும், நாற்றமுள்ளதாகவும், கருப்பாகவும், கட்டிதட்டியும், வெள்ளைப்பாடுடன் சம்பந்தப்பட்டும் இருக்கும். அல்லது மாதவிடாய் இல்லாத நாட்களில் வெள்ளைப்பாடு இருந்துகொண்டே இருத்தல். குண்டிக்காய்களில் வலியும், மூத்திரத்தில் கற்களும் குண்டிக்காய்களிலிருந்து இரத்தப் பெருக்கும்.

தாலியம் (Thallium)

நரம்புகளின் பலவீனத்தால் நடக்கும்பொழுது தள்ளாடுதல். ஒரு பக்கமாக விழுந்துவிடுவோமென்ற பயம். கால்களின் பாரிசவாயு. நடுக்கல்கள், மின்சாரவிசை அடிப்பதுபோன்ற வலிகள். ஈட்டிகளால் குத்துவதுபோன்ற வலிகள். வயிற்றிலும் குடலிலும் வலி. தொடை நரம்புகளில் வலி, மலபந்தம். அடிக்கடி மூத்திரம் பிரிதல்.

தூஜா (Thuja Occidentalis)

சருமம், இரத்தம், அன்னப்பை, குடல், குண்டிக்காய்கள், மூளை முதலிய பாகங்களில் இவ்வௌஷதம் வேலைசெய்கின்றது. புற்றுகள் போன்ற சதை வளர்ச்சிகள், கட்டிகள், பாலுண்ணிகள், பஞ்சுபோன்ற மிருதுவான கட்டிகள் முதலியவைகள் இதனுல் நீக்கப்படும்.

தூஜாவின் முக்கிய உபயோகம் சருமத்தின்மேல் ஏற்படும் உபாதிகளிலும், (ஆண், பெண்) குறிகள் சம்பந்தப்பட்ட உபாதிகளிலுமாகும். டாக்டர் ஹானிமென் அவர்களால் சைகோஸிஸ் (Sycccis) என்று சொல்லப்பட்ட சரீரவாகு உடையவர்களுக்கே இது முக்கியமாக உபயோகப்படக்கூடிய ஔஷதம் ஆகும். கொனேரியா எனப்படும் வெட்டை நோயிலும், அம்மை குத்துவதால் ஏற்படும் கோளாறுகளிலும் நேரிடையாய் வேலைசெய்து சொஸ்தம்செய்ய வல்லமை உண்டு. சைகோஸிஸ் சம்பந்தமான வலிகள்—அதாவது தசைகளிலும், மூட்டுகளிலும் தாங்கமுடியாதவலி, இவ்வலிகள் அசையாமலிருக்கும்பொழுது அதிகமாகவும், உஷ்ணக் காலங்களில் சயனப்பட்டும் குளிர் காலங்களிலும், ஈரநப்புள்ள பருவங்களிலும்

அதிகப்பட்டும் இருக்கும். சிலேத்தும சரீரங்கள். இவர்களுக்கு மாரிக்காலங்களும், ஈரமுள்ள பருவங்களும் ஒத்துக்கொள்ளாது. சந்திரக்கிரணங்கள் சரீரத்தில் பட்டால் அது ஒத்துக்கொள்ளாமை. அதிசீக்கிரத்தில் களைப்படைதலும், சரீரம் இளைத்தலும். பெரியம்மையில் கொடுக்க அதிகக் கஷ்டமில்லாமலும், இரண்டாவது முறை சுரம் வராமலும் தடுக்கும்.

மனம்: தன் பக்கத்தில் ஒரு புதிய மனிதர் இருப்பது போன்ற உணர்ச்சி. தன்னுடைய சரீரமும் ஆத்மாவும் தனித்தனியாகப் பிரிந்து இருப்பது போன்ற பிரமை. தன் வயிற்றினுள் ஏதோ உயிருள்ள வஸ்து இருப்பது போன்ற பிரமை. சங்கீதம்கேட்டால் உடனே சரீரம் நடுங்குதலும், அழுவதும்.

தலை: ஒரு ஆணியை வைத்து அடிப்பது போன்ற வலி. டீ குடித்தால் உடனே தலைவலி. இடது பக்கத்துத் தலைவலி. வெண்மையான செதில்கள் போன்ற படைகள். மயிர் உதிர்தல். முகம் எண்ணை தடவியது போலிருத்தல்.

கண்கள்: நரம்பு சம்பந்தமான வலிகள். இரவுகளில் இமைகள் ஒட்டிக்கொள்ளுதல். கிறுக்கட்டிகள், வெள்ளை விழிகளில் இரணம், அவை சிவந்திருத்தல், நீடித்த கண் இரணங்கள்.

காதுகள்: நீடித்து சீழ் வருதல். ஏராளமான சீழ் வெளியேறுதல். விழுங்கும்போது வெடிக்கும் சப்தம் கேட்டல்.

நாசி: நீடித்த மண்டைச்சளி, கெட்டியான பச்சை நிறமுள்ள சளியும், சீழும் இரத்தமும் வெளியேறுதல். நாசியைச் சிந்தினால் பற்களில் வலி. நாசியின் உட்புறங்களில் இரணம். உலர்ந்திருத்தல். நாசியின் அடிப்பாகத்தில் வலி.

வாய்: நாக்கின் நுனியில் வலி. நாக்கின்பக்கங்களில் முக்கியமாக அடிப்பாகத்தில் சிறிய கொப்புளங்கள், இவைகளில் வலி. ஈறுகளின் சமீபத்திலுள்ள பற்களின் பாகங்களில் சொத்தை ஏற்படுதல். பானங்கள் அருந்துவது திடீரென்று அன்னப்பையில் விழுதல். பயோரியா என்னும் ஈறுகளில் சீழ்ப் பிடிக்கும் வியாதி.

வயிறு: சுத்தமாகப் பசியில்லாமை. புதிய மாமிசத்திலும் உருளைக்கிழங்கிலும் வெறுப்பு. சிறிது சத்துள்ள ஆகாரத்தை உட்கொண்டாலும் ஏப்பம் வந்துகொண்டே இருத்தல். வயிற்றில் வெட்டும் வலி. வெங்காயம் ஒத்துக் கொள்ளாமை. வயிற்று உப்பிசம். ஆகாரத்திற்குப் பின் வலி. அதிக டீ குடித்ததினால் ஏற்பட்ட பித்த வாயு உபாதி.

அடிவயிறு: வாயு உப்பிசம். அங்குமிங்கும் கழலைக் கட்டிகள் இருப்பதுபோன்ற உப்பிசம். நீண்ட நாளாக இருக்கும் வயிற்றுப் போக்கு. இது காலை ஆகாரத்திற்குப் பின் அதிகப்படுதல். மலப்பையில் கடபுடா சப்தமும் வலியும். மலபந்தம், மலப்பையில் வலி. மூலங்கள் வீங்கியிருத்தல், அபானத்தில் எரிச்சலுடன் கூடிய பிடிப்பு வலிகள், வயிற்றினுள் ஏதோ உயிருள்ள வஸ்து இருப்பது போன்ற உணர்ச்சி.

மூத்திரம் : நீர்த்துவாரம் இரணப்பட்டு வீங்கி இருத்தல். மூத்திரம் மிகவும் மெல்லியதாக வெளியேற்றப்படுதல். நீர் வெளியேறிய பிறகு குத்துதல். வலியுடன் அடிக்கடி சிறுநீர் பிரிதல். திடீரென்றும் உடனேயும் நீர் பிரிதல். இதை அடக்கச் சக்தியில்லாமை.

ஆண் : ஆண் குறியின் முன்பாகத்திலும் தோலிலும் இரணம், மூத்திர மேகம், வெட்டை நோயினுல் ஏற்படும் கில்வாதம்.

பெண் : யோனியில் வலி. யோனித் துவாரத்தின் பக்கங்களில் பாலுண்ணிகள் போன்ற சினப்புகள். கெட்டியாகவும் பச்சை நிறமாயுமுள்ள அதிகமான வெள்ளைப் போக்கு. இடப்பக்கத்து சினைப்பையிலும், இடது அரையிடுக்கிலும் வலி. மாதவிடாய் தாமதப்பட்டும் குறைவாகவும் இருத்தல். யோனியில் சதை வளருதல். ஒவ்வொரு மாதவிடாய்க் காலத்திலும் இடது சினைப்பை அழுர்ச்சியுறுதல். மாதவிடாய் ஆரம்பிப்பதற்கு முன் ஏராளமான வியர்வை காணுதல்.

சுவாசம் : மாலை நேரங்களில் வறண்ட அலைக்கழிக்கும் இருமல். இருமும் பொழுது வயிற்றின் அடிப்பாகத்தில் வலி. மார்பில் பிடிப்புகள். குழந்தைகளுக்கு ஏற்படும் காசநோய்.

கை கால்கள் : தனது கால்கள் மரத்தினுலோ கண்ணுடியினுலோ செய்யப்பட்டது போலும் நடக்கும்போது உடைந்து விடுமென்றும் தோன்றுதல். விரல்களின் நுனி வீங்கியும், சிவந்தும், ஸ்மரணையற்றும் இருத்தல். தசைகளில் துடிப்புகள், பலவீனம், நடுக்கல்கள். நொறுங்கும் நகங்கள்.

சருமம்: சதை வளர்ச்சிகள், சினைப்புகள், பாலுண்ணிகள், இரணங்கள், கொப்புளங்கள், பிளவைகள். இவைகள் முக்கியமாக அபானத்தின் பக்கங்களிலும் ஆண், பெண் குறிகளின் பக்கங்களிலும் அதிகமாக இருக்கும். சரீரத்தில் உண்டாகும் வியர்வை அதிக நாற்றமுள்ளதாகவும் தித்திப்பு உள்ளதாகவும் இருத்தல். கோளங்களில் கிழிக்கும் வலிகள். சரீரத்தில் மூடியிருக்கும் பாகங்களில் படைகள் உற்பத்தி. இவைகள் சொறிவதினால் அதிகமாதல். தொட்டால் வலியுண்டாகும். கைகளிலும் புஜங்களிலும் பழுப்பு நிறமுள்ள படர்தாமரைகள்.

தூக்கம்: நீடித்துத் தூக்கமில்லாமை.

சுரம்: குளிர் நடுக்கல் தொடைகளில் ஆரம்பித்தல். சரீரத்தில் துணியில்லாமல் திறந்திருக்கும் பாகங்களில் மாத்திரம் வியர்த்தல், அல்லது தூங்கும்பொழுது தலை தவிர மற்ற பாகங்கள் வியர்த்தல். வியர்வை அதிகமாகவும், தேன் போன்று தடித்தும், புளிப்பு வாசனையுடனும் இருத்தல். மாலை நேரங்களில் இரத்தத் திறட்சியும் இரத்தக் குழாய்களில் வெடிப்புகளும்.

விசேஷம்: இரவுகளில் படுக்கைச் சூட்டினால் அதிகம். விடியற்காலை 3 மணிக்கும் மாலை 3 மணிக்கும், குளிர்ந்த ஈரமான காற்றினாலும், காலை ஆகாரத்திற்குப் பிறகும், கொழுப்புள்ள பதார்த்தங்கள், காப்பி முதலியவைகளை உட்கொள்ளுவதாலும், அம்மை குத்துவதாலும் உபாதிகள் அதிகம். எல்லா உபாதிகளும் இடது பக்கத்திலும் கால்களை மேலே இழுப்பதாலும் சமனம்.

முறிவு மர்குறி, காம்போரா, ஸபீனா.

அனுசரிப்பவை: ஸபீனு, ஆர்ஸனிகம், நேட்ரம் ஸல்ப், ஸிலிகா.

வெளி உபயோகம்: பாலுண்ணி போன்ற சரும உபாதிகளில் இவ்வௌஷதத்தின் தாய் திராவகத்தையோ, களிம்பையோ மேல் பூச்சாக உபயோகிக்கலாம்.

தெரிடியன் (Theridian)

நரம்புகளில் அதி உணர்ச்சி. க்ஷய சம்பந்த சரீரங்களில் நல்ல வேலை செய்ய வல்லது. கிறு கிறுப்பு, அடிக்கடி வரும் தலைவலி, இருதயத்தைச் சுற்றிலும் வலி, முதலியவைகள் இவ்வௌஷதத்தால் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. சப்தம் சகிக்க முடியாமை. அது நேரே சரீரம் முழுவதும் முக்கியமாகப் பற்களிலும் ஊடுருவிப் பாய்வது போலிருத்தல். இடது பக்கத்து சுவாசகோசத்தின் மேல் பாகத்தில் க்ஷய அழற்சிகள். சரியாக நிர்ணயிக்கப்பட்ட ஔஷதங்கள் வேலை செய்யாத சரீரங்களில் கொடுக்கலாம்.

மனம்: அமைதி யின்மை. உலகத்தில் யாதொன்றுமே மனச்சாந்தியை உண்டு பண்ணுமை. காலம் அதி சீக்கிரம் செல்லுதல்.

தலை: வேறு யாராயினும் பக்கத்தில் நடந்து கொண்டிருந்தாலும், தன் வலிகள் அதிகமாவது. சற்று அசைந்தாலும், ஓக்காளமும், வாயாலெடுப்பும், கிறுகிறுப்பும் வருதல். இது முக்கியமாகக் கண்களை மூடிக்கொண்டால்.

கண்கள்: கண்ணுக்கு முன்னுல் பளிச்சு பளிச்சென்று மின்னுதல். வெளிச்சத்தில் கண்கள் கூசுதல். விழிகளின் பின்புறம் இறுக்கம். இடது கண்ணுக்கு மேலே துடிப்பு.

நாசி: கெட்டியான மஞ்சள் நிறமும் நாற்றமும் உள்ள நீர் வெளியேறுதல்.

வயிறு: கப்பல் பிரயாணத்தில் ஏற்படும் கோளாறுகள். கண்களை மூடினாலும் நடந்தாலும் ஒக்காளமும் வாயாலெடுப்பும். இடது பக்கத்தில், மண்ணீரலுக்கு வெளிப்புறத்தில் கொட்டும் வலி. கல்லீரல் பாகத்தில் எரிச்சல்.

சுவாசாசயம்: இடது சுவாசாசயத்தின் மேல் புறத்தில் வலி. இருதயத்தில் உபத்திரவமும் வலியும்.

முதுகு: முள்ளந்தண்டில் தொட்டால் வலி.

விசேஷம்: தொடுவதாலும், அமுக்குவதாலும், கப்பல் பிரயாணத்தினாலும், வண்டிகளில் பிரயாணம் செய்வதினாலும், கண்களை மூடிக் கொண்டாலும், சப்தத்தாலும், புணர்ச்சியினாலும், இடது பக்கத்திலும் உபாதி அதிகம்.

டெரிபிந்த் (Terebinth)

பலவீனம், வலிப்புகள், மயக்கம். குண்டிக்காய்களின் அழர்ச்சி. சிறுநீருடன் இரத்தம் கலந்திருத்தல். வயிறு ஏராளமாகப் பெருத்து வீங்கி இருத்தல். கால்களை நிமிர்த்தி நீட்டினாலும் அல்லது விரல்களால் அமுக்கினாலும் வலி ஏற்படுதல். கை, கால்களில் சில்லிப்புடன் கூடிய வியர்வை. அதிவேகமாகச் செல்லும் நாடி. மெல்லியதாகவும் நாற்றத்துடனும் இரத்தம் கலந்தும் உள்ள மலம். இரத்தம் கலந்த சிறு நீர். அடிவயிறு முழுவதும் உஷ்ணமாகவும், வீங்கியும் வலியுடனும் இருத்தல் நீர்த்துவாரத்தில் எரிச்சல். சிவந்

தும் கண்ணுடி போன்ற பளபளப்பும் உள்ள நாக்கு. சிறு நீரில் அல்புமென் என்ற வஸ்துவும் இரத்தக் கெபிகளும் இருத்தல். பலவீனம், நடக்கமுடியாமை. எல்லாப் பூந் தசைகளும் இரத்தம் கசிந்து கொண்டிருத்தல்.

தலை: கிறுகிறுப்பு, வலி, அமுக்க உணர்ச்சி, கனம்.

கண்கள்: மூத்திர உபாதிகளுடன் கண்களில் இரணம்.

நாசி: இரத்தம் கொட்டுதல்.

காதுகள்: மணி அடிப்பதுபோன்ற ஒலி கேட்டல்.

முகம்: சுருங்கியும் வெளுத்தும் இருத்தல்.

நாக்கு: வழுவழுப்பாகவும், கண்ணுடி போன்று பள பளப்பாகவும், சிவப்பாகவும் இருத்தல். (டைபாய்டு சுரத்தில்)

வயிறு: பெருத்திருத்தல். வலி. டைபாய்டு சுரத் தில் வயிறு உப்புதல். பிரசவத்திற்குப்பின் ஏற்படும் சுரம். வலியும் மல பந்தமும். மஹோதரம்.

மூத்திரம்: குண்டிக்காய்களில் எரிச்சலும் வலியும். சிறுநீர் விட சிரமம். நீர்த்துவாரத்தில் இரணம். வலி யுடன் கூடிய விறைப்பு. சிறுநீர் குறைவாகவும் இரத்தம் கலந்தும் இருத்தல். ஈர நப்புள்ள இடங்களில் இருப்பதி ஞல் ஏற்படும் குண்டிக்காய்க் கோளாறுகள். மூத்திரம் கருப்பாகவும், கலங்கலாகவும், அல்புமென் கொண்டதாக வும், இரத்தமும், தித்திப்பும் கலந்ததாகவும் இருத்தல்.

சுவாசாசயம் : கோழையில் இரத்தம் கலந்திருத்தல். சுவாசக்குழாய்கள் வறண்டு இருத்தல். சுவாசம் தடைப்படுதல். சிறுசிறு மூச்சுகளாகவும், அவசரமாகவும் கவலையுடனும் இருத்தல். காசம்.

இருதயம் : துரிதமாகவும், பலவீனமாகவும் கம்பி போன்றும் செல்லும் நாடி.

சுரம் : முதலில் குளிர், அதன் பின்னர் சூடு, தலைவலி, சிவந்தமுகம். அதிக வியர்வை.

தசைகள் : குண்டிக்காய் கோளாறுகளுடன் கூடிய பாண்டு வீக்கம். சரீர இளைப்பு. சுவாச உறுப்புகளின் நூந்தசைகள் காய்ந்திருத்தல்.

ஒப்பிடுக : காந்தாரிஸ், கோபைவா.

முறிவு : பாஸ்பரஸ்.

முதற்பாகம் முற்றிற்று

ஒப்பிடுதல்களுக்குக் குறிப்பு

பாகம் I

விஷயம்	பக்கம்
அக்டியா ரஸிமோஸாவும், காலோபில்லமும்	6
முள்ளெலும்பு உபாதிகள்	7
மார்பில் பிடிப்பு வலிகள்	7
சினைப்பை, கருப்பை வலிகள்	7
நபும்சகத்துவம்	14
அகோனைட், பிரயோனியா, பெல்லடோன்ன	26
அகோனைட், ரஸ்டாக்ஸ், ஆர்சனிகம்	27
சரீர இளைப்பு	43
முட்டைக்குறி	49
காக்கை வலிப்பு	60
நீர்க்கோர்வை	103
நீரழிவு, மதுமேகம்	124
சங்காதோஷத்தில், வயிற்றில் பந்து உண்டாவது	127
கபவாத சுரம்	146
அரிக்கும் சொறி	163

முறைச் சுரம்	194
குழந்தைகளின் வயிற்றுக்கட்டிகள்	204
கிருகிருப்பு	255
பெண்களின் அதிகாம இச்சை	270
மேகவெட்டை	274
இருமலினால் அவயவங்கள் பாதிக்கப்படுதல்	290
மரணக்களைப்பு	296
பித்தக்கற்களினால் வலி	299
மஞ்சட்காமாலை	300
வயிற்று உப்பிசம்	391

BIBLIOGRAPHY

1. Dr. Hahnemann's Materia Medica Pura
2. Dr. Allen's Encyclopaedia of Materia Medica
3. Dr. Herring's Materia Medica
4. Dr. Kent's Materia Medica
5. Dr. Farrington's Clinical Materia Medica
6. Dr. Cowperthwaite's Materia Medica
7. Dr. Boericke's Materia Medica
8. Dr. Blackwood's Materia Medica
9. Dr. Allen's Primer of Materia Medica
10. Dr. Ghosal's Practical Materia Medica
11. Dr Nash's Leaders in Therapeutics
12. Dr. Allen's Key Notes
13. Dr. Kent's Homoeopathic Philosophy
14. Dr. Lilienthal's Therapeutics
15. Dr. Boger's Synoptic Key.

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம். 15—7—'48

23A
10 79

SIMILIA SIMILIBUS CURANTUR